வெளியீடு 8-11-1983] [Issued 8-11-1983

10 ஜன 1984
2692

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை மார்ச் 15, 1983– தொகுதி XLV எண் 1

Tuesday 15th March 1983—Volume XLV No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3 50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

V2:1L.31 N83
N83.45.1
135997
சென்னை 600 008.

15—3—1983.

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. | i |
| (ii) Personnel of the Government of Tamil Nadu. | iv |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | vi |
| (iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகரவரிசையில்) .. | ix |
| 1. வினாக்கள்—விடைகள்: | 1—34 |
| நட்சத்திரக்குறியிட்ட வினாக்கள். | |
| 2. தகவல் கோரல்: | |
| (அ) வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது .. | 34—37 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. | 37 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்: | |
| வேளாண்மைப் பல்கலைக் கழக இணை ஆராய்ச்சியாளர்கள் போராட்டம் .. | 38—42 |
| 4. அறிக்கை அளித்தல்: | |
| விதி 106-ன்கீழ் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை .. | 42—43 |
| 5. அறிவிப்புகள்: | |
| (அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு, 1983, | 43 |
| (ஆ) 1983-84க்-கான மானியக் கோரிக்கைகளை மொழிய ஆளுநரின் பரிந்துரை .. | 47 |
| 6. கவன ஈர்ப்பு: | |
| 'விம்கோ' தீப்பெட்டித் தொழிற்சாலையில் தற்காலிக வேலைநிறுத்தம் .. | 43—47 |

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு— சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், ஃ.ப்,

14. மாண்புமிகு திரு சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதி சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

ii


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 7. | வரவு-செலவுத் திட்டம் 1983-84—வாக்கெடுப்பு கோரிக்கை எண். 17—கல்வி. | 48 |
| | மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் | 48,54,201—228 |
| | திரு. பெ. சு. திருவேங்கடம் | 48 |
| | திரு. இல. பலராமன் | 48 |
| | திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் | 48 |
| | திரு. தி. கா. நல்லைப்பன் | 48 |
| | திரு. ஜே. எஸ். இராசு | 49—57 |
| | டாக்டர் கே. சமரசம் ... | 57—65 |
| | திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் | 65—69 |
| | திரு. இரா. சண்முகம் | 70—75 |
| | திரு. மு. அப்பாதுரை | 75—81 |
| | திரு. ஆர். டி. கோபாலன் | 81—84 |
| | திரு. ப. நெடுமாறன் | 84—95 |
| | திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் | 95—102 |
| | திரு. கு. பா. பழனியப்பன் | 102—108 |
| | திருமதி. தா. இராசாம்பாள் | 109—116 |
| | திரு. ஜி. மூர்த்தி | 116—122 |
| | திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் | 122—126 |
| | திரு. எஸ். என். இராமசாமி | 126—128 |
| | திரு. பூ. மு. நரசிம்மன் | 128—131 |
| | திருமதி டி யசோதா | 131—139 |
| | திரு. சி. கணேசன் | 139—145 |
| | திரு. எஸ். ஆண்டித்தேவர் | 145—153 |
| | திரு. எம். ஆறுமுகம் | 153—156 |
| | திரு. ஏ. சாகுல் ஹமீது | 156—158 |
| | திரு. சேலம் மு. ஆறுமுகம் | 158—164 |
| | திரு. என். சங்கரய்யா | 164—182 |
| | திரு. க. அன்பழகன் | 182—201 |
| 8. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 228 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர்லால் குரானா

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்:**

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம் சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## Governor of Tamil Nadu

Thiru S. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1, Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN(Minister for finance),—Finance, Legislature, Election, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries)— Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6 Hon. Thiru R M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Torism Development Corporation, Cinematograp Act, Hindu Relgious and Charitable Endowments, Forest and Cinchona and grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agriculture Refinance, Agricultural Engineering wing and Agro Engeneering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Localt Administration), Municipal Administration Panchayats and Panchya Unions,Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJEDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### **மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி கா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ. பி. எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்)
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி.ஏ.,பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல் (சார்புச்செயலாளர்.)
திரு. வீப. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல். (எஜ்டேட் அலுவலர்.
திரு. பி. கோதண்டராமன், பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. சீ. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்.)

### (விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ , எல்.எல்.பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்,

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாசாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எ. | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. செ. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்டல் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்–2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | அனூப் ஜெகதீசன், திரு. பு. கே. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பாளையங்கோட்டை? பாளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இ. பொ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 27 | இராசாராம், திரு. க. | பனயரத்துப்பட்டி |
| 28 | இரா ாராமன். திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ், | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன். திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. ந. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 64 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65 | காளிமுத்து, டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஓட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப்பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | அமிர்தராஜ், திரு (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவகவுண்டர் திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. பி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம் | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு பி. | திருச்சி—1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வாணூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடபட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. ஓ. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ. வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ. வ.) |
| 96 | சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 104 | சிவப்பெருமாள், திரு மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜு, திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர்: திரு. கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 139 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எம். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன, திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது உண்மை அல்ல. ஏன் என்றால் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு அப்படி ஒன்றும் இல்லை. தகுதி உள்ள குடும்பங்கள் 764. இருப்பினும் குடும்ப பென்ஷன் பெறுகின்ற குடும்பங்கள் 20. ஆகவே தகுதியுள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் தருவதற்கு விரைவுபடுத்த மின்வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக செங்கற்பட்டு மின்திட்டம், தர்மபுரி மின் திட்டம், திருநெல்வேலி ஜெனரேஷன், பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸ், பெரியார் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் திட்டம், திருவண்ணாமலை மின் திட்டம் ஆகியவைகள்தான் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய திட்டங்களாகும்.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்வாரியத் தொழிலாளர்களுக்கு குடும்ப பென்ஷன் பல வருஷங்களாக அவர்களுககு கிடைக்கவேண்டியது கிடைக்காமல் இருக்கிறது என்று பொதுவான அவர்களுடைய குறையாக தொடர்ந்து எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றது. சங்கங்களின் சார்பாகவும் ரிபோர்டுகளை அவர்கள் அதைப் பற்றி அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொல்கின்ற எண்ணிக்கை. மிக மிக குறைவான எண்ணிக்கை. அப்படியானால் இன்னும் பல திட்டங்களில் இந்தக் குடும்ப பென்ஷன் திட்டம் அமுலாக்காமல், லாயக்கு உள்ள தொழிலாளர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது. அப்படியானால் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் சொன்ன மின் திட்டங்களைப் பொறுத்தவரையில் அந்த கணக்கை இன்னும் ரீஜினல் பிராவிடென்ட் கமிஷனர் கொடுக்காமல் இருப்பதால் காலதாமதம் ஏற்படுகின்ற மின் திட்டங்கள். 764 குடும்பங்கள் என்று நான் குறிப்பிட்டது தமிழகம் முழுவதற்கும்தான். ஆகவே பல்லாயிரக்கணக்காளவர்கள் என்பது சரியல்ல. இருந்தாலும் ஓய்வு பெற்ற உடனே இந்த குடும்ப பென்ஷன் திட்டம் அமுலாக்கப்படவேண்டும் என்பதில் அரசுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. மின் வாரியத்தைக் கேட்டால் ரீஜனல் பிராவிடென்ட் கமிஷனர் என்று சொல்வதும் ரீஜினல் பிராவிடென்ட் கமிஷனரைக் கேட்டால் மின்வாரியத்திலிருந்து கணக்குகள் வரவில்லை என்று சொல்வதும் ஆக இருக்கிறது. இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆகவே இன்னும் குறைந்தது 3 மாதத்திற்குள் ஏற்பாடுகள் செய்து—பிராவிடென்ட் கமிஷனர், மின் வாரியம் இவர்கள் எல்லாம் சேர்ந்து இதை முடிவு செய்ய வேண்டும் என்று நிச்சயமாக அரசு ஆணையிடும்.



விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் மின்சார பம்புசெட்டுகள்

*வினா எண் 419—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் மின்சார பம்பு செட்டுகளின் வடிவமைப்பை மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மின்சாரத்தை சேமிக்கும் நோக்கத்துடன் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் விசையேற்றங்களின் மூல வடிவமைப்பை மாற்றாமல், சில மாற்றங்களை சரிசெய்யும் செயற்குறிப்பு மின்வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாற்றங்களின் விவரம்:

1. திருத்தியமைக்கப்பட்ட ஒரு வழி அமைப்புகளை பொருத்துதல்.

2. வழக்கத்திலிருக்கும் துத்தநாக பூச்சிட்ட இரும்பு குழாய்களுக்குப் பதிலாக, உறுதியான பி.வி.சி. (P.V.C) குழாய்களை, உள்ளிழுப்பு மற்றும் வெளியேற்றக் குழாய்களாகப் பொருத்துதல்.

3. குழாய்களில் தேவையற்ற குறுகிய வளைவுகளை குறைத்தல், மற்றும் உள்ளிழுப்பு மட்டத்தை ஐந்து மீட்டருக்கு குறைவாக அமைத்தல்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்சார பம்புசெட்டுகளின் வடிவமைப்பு சரியாக இல்லாத காரணத்தாலும், மோட்டார்கள் தரமானவையாக இல்லாத காரணத்தாலும் தேவையான மின்சாரத்திற்கு மேல் கூடுதலாக 40 சதவீதத்திற்கும் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. கோவை வேளாண்மை ஆராய்ச்சித் துறை மாணவர்களும், கர்நாடக மாநில ஆராய்ச்சியாளர்களும், ஐ.எஸ்.ஐ முத்திரையிடுகின்ற டைரக்டரும் இத்தகைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் மின்சாரத்தை மிச்சப்படுத்துகின்ற வகையில் சில மாற்றங்கள் செய்து, எந்த வகையில் திருந்தி அமைக்கலாம் என்பதை பரிசீலனை செய்து, கண்டறிந்து தேவையான விவரங்களை அரசு சேகரித்து இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மற்ற நிறுவனங்கள் எல்லாம் என்ன செய்தன என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் மின்சார நீரேற்றிகள் மூலம் மின்சாரம் வீணாக்கப்படுகிறது என்ற கருத்தை கண்டறிந்து

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 212 ராம்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கொ. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 வீரண்ணம்பலம், திரு. க. வெ. | பேரூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ம. | காஞ்சிபுரம் |
| 225 வெங்கடரெட்டி, திரு. ப. | ஓசூர் |
| 226 வெங்கடேசன், திரு. பி. ஏ. | பொன்னமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. | கண்டாசாம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 ஹாஜா ஷெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க் கிழமை, 1983 மார்ச் 15.

பங்குனி 1, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு—2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்ற யவை''

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் எல்லாம் அத்தகைய சிறப்புடைய செல்வம் ஆகா.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கான குடும்பப் பென்ஷன் திட்டம்

*வினா எண் 418—திரு. கு ரமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு குடும்பப் பென்ஷன் திட்டம் 1973ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்து அதற்காக அவர்களுடைய பிராவிடண்ட் நிதியிலிருந்து பணம் பிடிக்கப்பட்டு வருவதன்பேரில் பிப்ரவரி 1982 வரையில் எத்தனை குடும்பங்கள் இதற்கு தகுதி பெற்றுள்ளன?

(ஆ) தகுதி பெற்றுள்ள குடும்பங்களில் எத்தனை குடும்பங்களுக்கு பென்ஷன் வழங்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) 31,849 குடும்பங்கள்.

(ஆ) தகுதி பெற்றுள்ள குடும்பங்களில் 28-2-82 வரை 20 குடும்பங்கள் தற்போது குடும்ப ஓய்வுதியம் பெற்று வருகின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கும்படியான மின்சார ஊழியர்கள், பேசின் பிரிட்ஜ் உற்பத்தி நிலையத்திலேயும், அதேபோன்று எண்ணூர் போன்ற இடங்களிலே எல்லாம் உட்பட்ட பகுதியிலே உள்ள பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் யாரும் அப்படிப்பட்ட குடும்ப பென்ஷன் பெறவில்லை என்ற செய்தி எனக்கு வந்துள்ளது. அது உண்மையா? அப்படியானால் அதற்கு என்ன காரணம்?

வெளியிட்டிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் எஞ்சினியரிங் செல் செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுகுறித்து ஒரு சோதனையை மேற்கொண்டது, அவர்கள் '00 பம்பு செட்டுகளை எடுத்து, சில மாற்றங்களை செய்து பார்த்தார்கள். அதிலே கணிசமான அளவு மின்சக்தியை சேமிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. சான்றாக. 12 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரையில் மின்சக்தியை சேமிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது வேறு பல மாநிலங்களிலே இல்லாத அளவுக்கு தமிழ் நாட்டில் பம்புசெட்டுகளை ஏராளமாகப் பயன்படுத்துவதால் நாம் இதிலே ஒரு பத்து சதவீதத்தை மிச்சப்படுத்தினால் கூட அது ஒரு கோதையாறு நீர் மின்திட்டத்திற்கு சமமானதாக இருக்கும்.

திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர் களே, ஐ.எஸ்.ஐ. டைரக்டர் அவர்கள் இதைப்பற்றி கருத்துகள் சொல்லும்போது த ப்பட்டவர்கள் தயாரிக்கிற விவசாய பம்புசெட்டுகள் தரம் குறைந்ததாக இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாட்டில்தான் எறத்தாழ 10 இலட்சத்திற்கு மேற்பட்ட பம்புசெட்டுகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தில் சுமார் 25 சதவீதத்தை அவர்கள் செலவிடுகிறார்கள். மின்சார வாரியம் அந்த அளவுக்கு மின்சாரத்தை அவர்களுக்கு வழங்கிவருவதால், விவசாயிகள் பயன்படுத்தும் மோட்டார்கள் தரமானவையாக இருக்கின்றனவா, இன்னமாதிரியான தரமான மோட்டார்களைத் தான் பொருத்தலாம் என்று சொல்லி அந்த அளவுக்கு தரம் இருக்கிறதா என்று பரிசீலிக்கும் பொறுப்பை மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டு, அவர்கள் சொல்லும் மோட்டார்களைத் தான் பொருத்த வேண்டும், அப்படியானால்தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற நிலையை மின்சார வாரியமோ அல்லது அரசோ எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தரமான மோட்டார்களைத்தான் பொருத்த வேண்டுமென்று மின்சார வாரியம் வற்புறுத்துவதற்கு வழி இருக்கிறதா என்று தெரிய வில்லை. ஏனென்றால் பம்புசெட்டுகளை வாங்கவேண்டியது விவசாயிகள். ஆனால் மீன்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில் இதை இரு கோணங்களில் அணுகலாம் என்று கருதுகிறோம். விவசாயிகளுக்குத் தக்க தொழில் நுட்ப அறிவை மின்சார வாரியம் தர வேண்டும். ஒவ்வொரு கிணற்றுக்கும் இத்தகைய பம்புசெட்டை அமைக்க வேண்டும; இத்தகைய மோட்டாரை வாங்க வேண்டும், இன்ன மாதிரியான ஃபுட் வால்வ்' பொருத்த வேண்டும் என்று சொன்னால் அதன்படிச் செய்து, விவசாயிகள் கணிசமான மின்சாரத்தை மிச்சப்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவதாக; மாநில அரசு மின்சாரத்திற்காக செலவிடுகிற



காரியங்களுக்கு நிதி உதவி செய்கிறபோது அதில் ஒரு பகுதியை மத்திய அரசு உதவியாக தரும் என்ற கருத்து அண்மையில் தரப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே ஏற்கனவே அமைத்து விட்ட பம்புசெட்டுகளை நாம் ஓரளவுக்கு மாற்றியமைக்க வேண்டுமென்றால், சராசரியாக ரூ. 700 செலவாகும். அந்தச் செலவை சரிகட்ட மத்திய அரசினுடைய உதவியைப் பயன்படுத்தி அதற்கு ஒரு திட்டத்தை வகுக்கலாமா என்பதில் மின்சார வாரியமும் அரசும் கலந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, மின்சார பம்பு செட்டுகளை நவீன வடிவமைப்பு செய்தால் எறத்தாழ 12 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரையில் மின்சாரம் மிச்சப்படும் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே இருக்கிற பம்புசெட்டுகள் அனைத்தும் பழைய மாதிரியான பம்புசெட்டுகளாக இருப்பதால் அதிகமான மின்சாரம் தேவைப் படுகின்றன. ஆகவே, மின்சார வாரியத்தில் இந்த நவீன வடிவமைப்பை உருவாக்கும் நடவடிக்கை இருக்கிறதா? இல்லை என்றால் தனியாரிடம் அதை செய்வதற்கோ? அல்லது வேறு நிறுவனங்கள் மூலம் செய்வதற்கோ அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் சொல்வது நவீன வடிவம் அல்ல. இருக்கிற பம்புசெட்டுகளுக்கு புட்வால்வை மாற்றுவது, ஜி.ஐ. பைப்புக்குப் பதிலாக பி.வி.சி. பைப் பொருத்துவது ஏகப்பட்ட பெண்டுகள் இருப்பதை சீர் செய்வது தண்ணீர் மட்டத்திற்குத் தகுந்தாற்போல் பைப் நீளத்தை அதிகப்படுத்துவது போன்றவற்றைச் செய்வதற்கு ஏறத்தாழ 600 அல்லது 700 ரூபாய் செலவாகும். அந்தச் செலவை ஏற்பதற்கு விவசாயிகள் தயார் என்றால், இதிலே பிரச்சனை இல்லை என்றால். 'எனர்ஜி கன்சர்வேஷன்'க்கு மத்திய அரசு 'காபிடல் சப்சிடி' கொடுக்கும் திட்டம் இருக்கிறது. எனத் தெரிவதால் அதை பயன்படுத்தி நம்முடைய விவசாயி களுக்கு இந்த உதவித் தொகையை வழங்கி, இந்த மாற்றத்தை மேற்கொண்டால் கணிசமான அளவு மின்சாரத்தை மிச்சம் பிடிக்கலாம்.

(முற்பகல் 9-10)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே. இப்போது சூரிய ஒளியைக்கொண்டு இயந்திரங்களை இயக்குவது எல்லாம் கண்டுபிடித்து வருகிறார்கள். ஆகவே, நம்முடைய நாட்டில் தாராளமாகக் கிடைக்கும் சூரிய ஒளியைக்கொண்டு பம்ப்செட்டுகளை எப்படி இயக்கலாம் என்று கண்டுபிடித்து, அத்தகைய பம்ப்செட்டுகளை விவசாயிகளுக்கு அரசு வினி யோகிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விளியோகிக்காது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இப்போது விவசாயத்திற்கென்று இயங்குகின்ற பம்ப்செட்டில் பொருத்தப் பட்டுள்ள கலாய் பைப்புகள்—ஜி.ஐ. பைப்புகளாக மாற்றப் படுவதன் மூலம் எப்படி மின்சாரம் மிச்சப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருந்தால், அதைப்பற்றி விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அறிந்ததால் தான் நான் அதை விளக்க முற்பட்டேன். அதைப் பற்றி ரொம்பவும் விளக்கமாக அறிய வேண்டுமானால் அதற்காக படம் இருக்கிறது. அதைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளங்கிக்கொள்ளலாம், அதிகமான பெண்டுகள் இல்லாமல் எந்தெந்த அளவிற்கு நாம் அதை அமைத்து, மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தலாம் என்பதைப் பற்றி நாம் அந்தப் படத்திலே தெளிவாகக் காட்டி இருக்கிறோம். விவ சாயிகள் அதனை ஏற்றுக் கொள்வதில்தான் பிரச்னை இருக்கிறது. அவர்கள் முன்வந்தால், நிச்சயமாக அரசாங்கம் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல மின்சாரப் பம்ப் செட்டுகளின் பைப்பின் வடிவமைப்பை மாற்றுவதன் மூலம், மின்சார மோட்டார் காயில்கள் தீய்ந்துவிடும் பிரச்னை போக்க முடியுமா? தற்போது விவசாயிகள் இதனால் மிகவும் பாதிப்புள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது மின் அழுத்தத்தால் ஏற்படும் பிரச்னை. நாம் இப்போது சொல்லிக் கொண்டிருப்பது இருக்கின்ற பம்ப்செட்டுகள் இயங்குகிறபோது இப்போது ஆகும் மின்சாரச் செலவில் குறைந்த பட்சம் 15% முதல் 20% வரையில் மின்சாரத்தை குறைக்க வாய்ப்பு இருக்கிறது. ரூ. 700 முதல் 800 ரூ. செலவில் அதைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்துறை ஆராய்ச்சிப் பிரிவிற்கு ஆண்டுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது? நாட்டின் நலன் கருதி அதை பல மடங்கு உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்ற விவரம் தற்போது என்னி டத்தில் இல்லை. நிச்சயமாக நாட்டின் நலன் கருதி அதனை உயர்த்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் மின் வாரியத்தின் நலன் கருதி நிதியை எப்படி சேர்ப்பது என்பது தான் புரியவில்லை.





திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவசாயிகள் எந் தெந்த வகைகளில் சிக்கனப்படுத்தி, குறைந்த அளவில் மின் சாரத்தைச் செலவழிக்க முடியும் என்று சொன்னார்கள். ஒரே காலத்தில் கரண்ட் கொடுக்கின்ற நேரத்தில் ஒரு ஏரியாவில் கரண்ட்குறைவாக வருவதால், அந்தப் பகுதியில் உள்ள மின்சார மோட்டார் காயில்கள் எல்லாம் தீய்ந்து போய்விடுகிறது. குறைவான மின் அழுத்தம் வருவதுதான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, குறைந்த அளவு மின்சாரம் வருகின்றபோதே பம்ப்செட்டுகள் ஸ்டார்ட் ஆகும் முறையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக குறைந்த அழுத்தம் இருக்குமானால் அதைச் சரி செய்வதற்கு என்று நாம் தொழில் நுட்ப ரீதியாக கம்பித் தொடர்களை வலுப்படுத்த வேண்டும். விட்டுவிட்டு மின்சாரம் வருவதால் காயில்கள் தீய்ந்து போகின்றன என்ற குறை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு இருக்கும் ஒரே வழி கரண்ட் வராத நேரத்திலும் அந்த பம்ப்செட் ஸ்டார்ட்டர்களை ஆன் செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அதை ஆப் செய்து வைக்கவேண்டும். அப்படி செய்தால் காயில்கள் தீய்ந்து போகாது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நட்சத்திர ஓட்டல்கள் கட்டும் திட்டம்.

*வினா எண். 420— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கோவை, புதுக்கோட்டை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நட்சத்திர ஓட்டல்கள் கட்டும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கோவையில் மூன்று நட்சத்திர தரமுள்ள விடுதி ஒன்று 28—5—1982 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நட்சத்திர ஓட்டல்கள் கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. ஆனால், கிருஷ்ணகிரியில் பெருவழி விடுதி ஒன்று கட்டப்பட்டு அது செயல்படும் நிலையில் உள்ளது.

[1983 மார்ச் 15

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பல சுற்றுலா ஸ்தலங்கள் இருக்கின்றன. குறிப்பாக மிகவும் முக்கியமான இடங்களில் மட்டும் நட்சத்திர ஒட்டல்கள் கட்டப்படுகின்றன. மேற்கு இராமநாதபுரத்தில் உள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் பிளவக்கல் டாம் இருக்கிறது. அங்கு பலர் சுற்றுலா வருகிறார்கள். வெளிநாட்டுப் பயணிகள் அதிகமான அளவில் அங்கே சுற்றுலா வருகின்றனர். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களிலும் நட்சத்திர ஓட்டல் கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா சுற்றுலாத் தலங்களிலும் நட்சத்திர ஓட்டல் கட்டுவது என்பது இயலாதது. அது நடைமுறைக்கு சாத்திய மானதும் அல்ல. காரணம் சுற்றுலாப் பயணிகளாக வருகிறவர்கள், அதிகக் கட்டணம் கொடுத்து தங்குவதற்கான வசதிகள் எங்கெங்கே அவசியமோ, அங்கங்கே அவைகளை கட்ட வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் பெரிய ஓட்டல்களில் கேசினோ என்று சொல்லப்படும் பொழுதுபோக்கு விடுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. பல நாடுகளிலிருந்தும் அங்கே போகிறவர்கள், தங்களுடைய நேரத்தை அங்கே செலவிட்டு மிக நல்ல முறையில் கழிக்கிறார்கள். இதனால் அந்நியச் செலாவணியும் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆகையினால் நம்முடைய நட்சத்திர ஓட்டல்களில் கேசினோ போன்ற அத்தகைய இணைப்புகளை சேர்த்து அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவம்பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், நாம் அந்த அளவுக்கு இன்னும் முன்னேறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே புதிய பஸ் ஸ்டாண்ட் திறக்கும்போது அதற்கு எதிர்த்தாற்போல் ஒரு நட்சத்திர ஒட்டல் கட்டவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு புதுக்கோட்டையிலே சித்தன்னவாசல், மூவர் கோவில் போன்ற சுற்றுலாத் தலங்கள் இருக்கிற காரணத்தாலே, இவைகளையெல்லாம் மனத்திலே வைத்து, இங்கே ஒரு 3 நட்சத்திர ஓட்டல் கட்டுவதற்கு அரசு மறுபடியும் பரிசீலனை செய்து கட்ட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 15]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் 3 நட்சத்திர தரமுள்ள ஒட்டல் இல்லை என்றாலும், நடுத்தர பயணிகள் தங்குவதற்கு வசதியாக அடிப்படை வசதிகள் சிறந்ததாக உள்ள விடுதி ஒன்று கட்டுவதற்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயற்குறிப்பு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதன்மீது கருத்து தெரிவிக்கிறபோது, முதலிலே நமது னைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ற வன விடுதிகள் கட்டுவதற்கு முன் உரிமை தந்து, அவைகள் நிறைவேறியதற்குப் பிறகு, நகரங்களிலே விடுதிகள் கட்டுவது பற்றி பிறகு பரிசீலிக்கலாம் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி தற்காலிகமாக புதுக்கோட்டையிலே அந்த விடுதிகள் கட்டுகிற திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவத் தலைநகரான காஞ்சிபுரத்தில் சுற்றுலா வாரியத்திற்கு என்று ஒரு இடம் ஒதுக்கப்பட்டு, அந்த இடத்திலே விடுதிகள் கட்டுகிற கோரிக்கை நெடுநாட்களாக நிறைவேறாமல இருக்கிறது. ஆகவே, காஞ்சிபுரத்திலே அந்தப்பகுதியிலே விடுதி கட்ட, அரசு மீண்டும் முயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே விடுதி கட்டுகிற திட்டத்தை சுற்றுலா வளர்ச்சி கழகம் அங்கீகரித்து இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தினை ஒட்டி, இப்போது அதுவும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தேவைப்படுகிற நேரத்தில் அது பரிசீலிக்கப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகர கடற்கரை ஓரப்பகுதிகளில், தற்போது தனியார்கள் அமைத்து உள்ள கோல்டன் பீச் போன்ற எல்லா வசதிகளையும் ஒருங்கிணைக்கப் பெற்ற ஓட்டல் வளாகம் ஒன்று தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் சார்பாக அமைக்கப் பெற்றால் அது மிகவும் நலம் பயக்கும். அதற்கென ஒரு ஆயிரம் அல்லது 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தைச் சுற்றி, அதனை ஏற்படுத்தி அமைத்தால், திரைப்படம் தயாரிப்பாளர்கள் பலர் ஆயிரக்கணக்கில் அந்த தனியார்களிடம் கொடுத்து, அவர்கள் அதிகம் சம்பாதிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதை, மாற்றி அதை அரசு பெறும்வகையில் சூழ்நிலையை உருவாக்க அரசு பரிசீலிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாமல்லபுரத்திலே நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மிகச் சிறந்த உணவு மற்றும் தங்கும் விடுதி கொண்ட வளாகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ...ம்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அப்படிப்பட்ட

தனியார்கள் நடத்துகிற விடுதிகளைப் போன்ற மிகப் பெரிய விடுதி வளாகத்தை உருவாக்கி நடத்துவது என்பது, அரசுக்கு பல்வேறு நடைமுறை சிக்கல்களையும், நிர்வாக சிக்கல்களையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே அது முடியாமல் இருக்கிறது. அந்த முயற்சிகளில் எல்லாம் தனியார்கள் ஈடுபடுவதுதான் மிகச் சிறந்ததாக இருக்கும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரையையும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும், சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய பல்வேறு விதமான அம்சங்கள் எல்லாம் இருந்தாலும் கூட, மதுரையில் இப்போது 3 நட்சத்திர ஹோட்டல்தான் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு 5 நட்சத்திர ஹோட்டலை ஏற்படுத்தி வெளிநாட்டு பயணிகளும் அங்கே வந்து தங்குகிற வகையிலே வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை நகரத்தில் 3 நட்சத்திர தரம் உள்ள ஹோட்டல் ஒன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. அது தரத்திலே 3 நட்சத்திர ஹோட்டல் என்றாலும் 5 நட்சத்திர ஹோட்டலிலே எவ்வளவு வசதிகள் உள்ளதோ அவ்வளவு வசதிகள் இருக்கின்றன. இப்போது நான் ஒரு உண்மையைத் தெரிவித்து விடுகிறேன். அந்த ஹோட்டல் போதுமான வருவாயை இன்னும் பெறவில்லை. அதற்கே போராடிக்கொண்டு இருக்கிறது. அதைப் போலவே அங்கே இன்னொரு ஹோட்டல் பேருந்து நிலையத்திற்கு முன்பே அமைந்திருக்கின்றது. அங்கே கொஞ்சம் குறைந்த கட்டணத்திலே அனுமதிக்கப்படுகின்ற காரணத்தால் அதற்கு மிகப்பெரிய கிராக்கி இருக்கின்றது. ஆகவே 5 நட்சத்திர ஹோட்டல் என்பது மதுரையைப் பொறுத்தவரையில் இப்போது தேவையில்லை. பெயரளவிலேதான் 5 நட்சத்திரம், உள்ளே போனால் 5 நட்சத்திரமும், மூன்று நட்சத்திரமும் ஒன்றுதான் எனவே அனாவசியமாக பணத்தை நட்சத்திர பெயரைச் சொல்லி வாங்குவது பயனில்லை.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டிணம் தாலுக்காவில் அன்னை வேளாங்கண்ணி கோயில் இருக்கின்றது. இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும் மற்ற வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் தொடர்ச்சியாக அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் மூலமாக நட்சத்திர ஹோட்டல் கட்டிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, நட்சத்திர ஹோட்டல் கட்டுகின்ற திட்டத்தை கொஞ்சகாலம் நிறுத்தி வைக்கலாமா என்பதைப் பற்றி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றது.

**திரு. கே. கல்லன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலைப் பகுதியில் அன்னியர்கள் பலர் வருவதால் அங்கே தங்கும் வசதி மிகவும் குறைவாக இருக்கின்றது. அந்தக் குறையைப் போக்க அரசு ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது என்றாலும் தகவல்கள் எனக்குத் தெரிந்திருக்கின்ற காரணத்தால் சொல்கிறேன். முதுமலையிலே ஒரு விடுதி கட்டவேண்டும் என்று திட்டமிட்டு மூன்று ஆண்டுகளாக முயற்சிக்கப்பட்டு அங்கே வனத்துறையிடத்திலிருந்து இடம் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்களின் காரணமாக ஒத்திப்போடப்பட்டு வந்தது. இப்போது இடம் எல்லாம் ஒதுக்கப்பட்டுவிட்டது. அங்கே நட்சத்திர ஹோட்டல் அல்ல, வருகின்ற பயணிகள் இரவு நேரத்தில் தங்கிவிட்டு போவதற்காக அங்கே ஒரு தங்கும் விடுதி கட்டுகின்ற திட்டத்தைப் பற்றி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அரங்கநாதன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி பகுதி சிறந்த கோடைவாசஸ்தலமாக இருப்பதால் வெளிநாட்டுப் பயணிகள் மிக அதிக அளவில் அங்கே வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாத காரணத்தால் கோத்தகிரியிலே ஒரு சுற்றுலா வாரிய விடுதி அமைத்துத்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரிக்கு ஒரு மாஸ்டர் ப்ளான், அதாவது ஒரு பெரும் திட்டத்தை அரசு வகுத்து இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விருப்பத்தின்படி, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் கோத்தகிரியினுடைய கோரிக்கையும் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உடையார்குடி அருள்மிகு அனந்தீஸ்வரர் கோயில் திருப்பணி

*வினா எண். 421— திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், உடையார்குடி அருள்மிகு அனந்தீஸ்வரர் கோயில் திருப்பணி நிறுத்தப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் காரணம் யாது?

[1983 மார்ச் 15

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) ரூ. 36,528.34 செலவில் இதுவரை மூன்று நிலைகளின் வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன. திருக்கோயிலின் நிதிவசதி திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் மீதமுள்ள இரண்டு நிலைகளின் வேலைகள் செய்யப்படவில்லை. மீண்டும் இவ்வேலைகளை முடிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருப்பணி வேலைகள் நடக்கின்றபோது அங்கே வேலை செய்த சூப்பர்வைஸர்கள், இன்ஜினியர் மற்றும் அரசாங்க உத்யோகஸ்தர்கள் உட்பட அந்த கமிட்டியாரிடம் தவறான கணக்கைக் கொடுத்து சாங்ஷன் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டு அதற்கு முடியாது என்று அவர்கள் சொன்னதற்காக அந்த வேலையையே ரத்து பண்ணிவிடுவேன் என்று பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள். வேலையைத் தடுப்பதற்கு அவர்கள்தான் காரணம் என்று அரசாங்கத்திற்கும் கமிஷனருக்கும் அந்தத் திருப்பணி கமிட்டியாளர்கள் தெரிவித்து இருப்பது உண்மைதானா? அப்படிப்பட்ட வஞ்சகமான எண்ணத் துடன் செய்த அதிகாரிகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தப் புகார் இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அறிவிப்பின் மீது உடனடியாக அது உண்மையாக இருந்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆனால் இங்கிருக்கிற விவரங்கள்படி அங்கு பொது மக்களிடத் திலிருந்து நன்கொடை சுமார் ரூ 8,376, அரசு மானியமாக ரூ. 5000, ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூ. 10,000, வேறு சில வரவுகள் எல்லாம் சேர்ந்து சுமார் ரூ. 36,000க்குத் தான் வேலைகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இப்போது கடந்த நான்கைந்து மாதங்களுக்கு முன்னால் ரூ. 60,000க்கு திட்டங்கள் கொண்டுவரப்பட்டு அதற்கு நிர்வாக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதில் பொது மக்கள் நன்கொடை ரூ. 20,000 பெறவேண்டும் என்றும் அரசு மானியம் ரூ. 20,000 என்றும் ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூ. 20,000 என்றும் இப்போது புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற தகவல் இங்கு என்னிடம் இல்லை. ஆனால் அதற்கு ஆதாரம் இருக்குமானால், அந்த ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் தந்தால் சம்பந்தப்பட்ட அந்த அலுவலர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.



1983 மார்ச் 15]

திரு. எல். இளையபெருமாள் : அந்தப் பகுதியில் அந்தக் கோவில் ராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இன்றைய நிலையில் அங்கிருக்கிற பொதுமக்கள் ரூ. 20,000 கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இது ஒரு சரித்திர சம்பந்தமான இடமாக இருப்பதால் நம் அரசாங்கமே இதை ஒரு ஸ்பெஷல் ஸ்கீம் என்ற முறையில் எடுத்து ........ அங்கே முக்கியமான கல்வெட்டுகள் போன்ற பல ஆதாரங்கள் இருக்கின்றன ...... அந்த வேலை முடிவு பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த ஆலயம் ஒரு தொன்மையான ஆலயம். அல்லது வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாக இருக்குமேயானால் அதற்கான முழுத் தொகையை, அல்லது எந்தளவு தேவையோ அந்தளவுத் தொகையை அற நிலையத் துறை தன்னுடைய மற்ற நிதிகளிலிருந்து எப்படியாவது ஒதுக்கீடு செய்து அந்தத் திருப்பணிகள் நிறைவுறச் செய்யும்.

சென்னையிலுள்ள அருள்மிகு மயிலை கபாலீஸ்வரர்
ஆலயத் திருப்பணி,

*வினா எண் 422— திரு. பெ. சு. திருவேங்கடம் ; திரு. பாபு ஜனார்த்தனன் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அருள்மிகு மயிலை கபாலீஸ் வரர் ஆலய திருப்பணி தற்பொழுது நடைபெறுகின்றதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அரசு அளிக்கும் உதவித்தொகை எவ்வளவு?

(ஈ) திருப்பணி எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் 49 திருப் பணி வேலைகள் உபயதாரர்கள் மூலம் முடிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணி வேலைகள் ரூ. 10,61,023.75 செலவில் நடை பெற்றுள்ளன. மேலும் 5 திருப்பணி வேலைகள் ரூ. 2,23,000 மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. திருக்குட நன்னீராட்டு விழா 8-7-1982 அன்று நடைபெற்றது.

(இ) இத்திருப்பணிகளுக்கு அரசு உதவித்தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

(ஈ) மீதமுள்ள 5 திருப்பணிகளையும் விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1983 மார்ச் 15

திரு. பெ. சு. திருவேங்கடம் : பத்து திருப்பணி வேலைகள் நடைபெற்றதாகவும் ஐந்து திருப்பணி வேலைகள் பாக்கியுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அந்த ஐந்து திருப்பணி வேலைகள் முடிவுறுவதற்குண்டான அல்லது அதற்கான உபயதாரர்கள் இருக்கிறார்களா? அப்படி இல்லை என்றால் அரசு நிதியிலிருந்து அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பத்து திருப்பணி வேலைகள் அல்ல, 49 திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்போது ஐந்து திருப்பணி வேலைகளுக்கு நிதி வசூல் செய்து அதிலிருந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை அவர்கள் அரசாங்கத்தினிடம் எதையும் உதவியாகக் கேட்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஜூலை மாதத்தில் அந்தத் திருப்பணி விழா நடைபெற்றதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஐந்து திருப்பணிகள் பாக்கியிருக்கிறபோது ஏன் அவற்றை முடிக்காமல் அந்த விழாவை நடத்துவது என்பது எப்படி முறையாகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருப்பணி என்கிற நேரத்தில் பல வேலைகள் அதில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. முக்கியமான திருப்பணி என்பது, குடமுழுக்கு விழா நடை பெறுவதற்கான திருப்பணி என்பதெல்லாம் அந்தக் கர்ப்பக் கிரகத்திற்கு மேலே உள்ள விமானங்கள் அல்லது சன்னிதிகள், ராஜகோபுரம் என இப்படிப்பட்ட முக்கியமான வேலைகள், திருப்பணிகள் முடிக்கப்பட்டுவிட்டால் இப்படிப்பட்ட திருக்குட முழுக்கு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அதற்குப் பிறகு ஆங்காங்கு உள்ளே இருக்கிற மற்ற வேலைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருவது என்பது நடைமுறையில் கையாளப் படுகிற வழக்கம்தான்.

திரு. பயு ஜனார்த்தனன் : மயிலை கபாலீஸ்வரர் கோயில் எந்த அரசரால் கட்டப்பட்டது? இப்போது நடைபெறுகிற திருப்பணிக்கு முன்பு எப்போது குடமுழுக்கு நடைபெற்றது என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 15]

(முற்பகல் 9-30)

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள அருள்மிகு மயிலை கபாலீஸ்வரர் ஆலயத்தில் 49-க்கும் அதிகமான திருப்பணிகள் நடைபெற திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிலே பல திட்டங்கள் முடிக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, மயிலையினுடைய குளம் தூர் வாரப்பட்டு, அதனுடைய ஆரம்ப விழாவில் அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்ப பணியைச் செய்கின்ற நேரத்தில், ஒரு வாரத்திற்குப் பின் பெருமழை பெய்தது என்பது அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, நமமுடைய அமைச்சர் அவர்கள் இன்றையதினம் மழை இல்லாததால், தண்ணீர் கிடைக்காததினால், அத்தகைய நிலையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை, மயிலை குளத்தை திருப்பணி செய்வதன் மூலம் ஆரம்பிப்பதற்காக நம் முதலமைச்சர் அவர்கள் அதிலே கலந்து கொண்டால் நிச்சயமாக மழை பெய்யக்கூடும் என்ற அடிப் படையில். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம், சுருக்கமாகக் கூறுங்கள். அப்படிச் செய்தால், மழை பெய்யும் என்று உறுதி யாக நம்புகிறீர்களா? அந்த நம்பிக்கை உங்களுக்கு எப்போது வந்தது?

திரு. சு. பாலன் : மயிலையினுடைய குளத்தை தூர் வாரி னால், அதிலே முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டால், மழை பெய்யும். அந்தக் குளத்தை தூர் வாரும் திருப்பணியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்பு மழை பெய்த்திருந்த நேரத்தில், மயிலை கபாலீஸ்வரர் திருக்குளத்தை தூர்வார, முன்னாள் முதல்வர் கலந்துகொண்டதால், உடனே மழை பெய்தது என்று மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இப்போது நாம் மழைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது அங்கே தூர் வாருகின்ற நிலைமை இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு, நம்முடைய முன்னாள் முதல்வர் அவர்களை அழைத்துக் கொண்டு வந்தால், நானும் வருகிறேன். அவர்களுக்கு தூர் வார ஆரம்பிப்பதினாலே, ஒருவேளை மழை நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையிருந்தால், உடனடியாக அதற்கான முயற்சி களைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று தமிழ் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழகத்தில் நடமாடும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 333.—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் நடமாடும் நீதிமன்றங்கள் இயங்கும்? செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயங்கும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரை, வட சென்னை, தென் சென்னை, ஆக இரு பகுதிகளாக பிரித்து, இரு பகுதிகளுக்கும் இரண்டு நடமாடும் நீதிமன்றங்களை அமைப்பதற்கான ஆணையை அரசு ஆணை (நிலை) எண் 2063, உள்துறை, நாள் 7-8-1982ல் பிறப்பித்தது. சென்னை மாநகரில் நடமாடும் நீதிமன்றமாக பயன்படுத்தப்பட மூன்று பேருந்துகளை வாங்குவதற்கான ஆணையை அரசு ஆணை (நிலை) எண் 1072, உள்துறை, நாள் 19-4-1973ல் பிறப்பித்தது. அரசாணை (நிலை) எண் 2593, உள்துறை, நாள் 26-9-1977ல் நடமாடும் நீதிமன்றத்தின் செயல்பாடு நிறுத்தி வைக்கப்பட்டபோது இரண்டு பேருந்துகளை நடமாடும் மோட்டார் வண்டிகளாக (Mobile Vans) மாற்றி போக்குவரத்து விதிகளை பின்பற்றுவதின் அவசியம் பற்றி மக்களிடையே தீவிரமான பிரச்சாரம் செய்ய பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் தற்போது அந்த இரண்டு மோட்டார் வண்டிகளை (Vans) மீண்டும் பேருந்தாக மாற்றி அமைத்து நடமாடும் நீதிமன்றமாக பயன்படுத்தப்பட பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையில் விடப்பட்டிருக்கிறது.

எனவே, இரு மோட்டார் வண்டிகளை (Vans) பேருந்தாக மாற்றி சென்னை நகர காவல்துறை ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டபின் நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படத் துவங்கும்.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை போக்குவரத்து விதிகள், சட்டங்கள் மீறப்படுவதால், பல உயிர்கள் விபத்துக்களால் மாளுகின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு மாத்திரம், இப்படி விபத்துக்கள் நடைபெற்றதால், அந்த விபத்துக்களின் வாயிலாக எவ்வளவு உயிர்கள் பறிபோய் இருக்கின்றன இந்த எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியும் என்ற அளவிலேதான், இந்த நடமாடும் நீதிமன்றம் செயல்படும் என்பது உண்மையா? அப்படிப்பட்ட சூழ்நிலை எதிர்பார்க்கப்படுகின்றதா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு போக்குவரத்து விதிகளை மீறுகின்ற குற்றங்களைக் களைவதற்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் சாலை விபத்துக்களினால் அருமையான உயிர்கள் இழக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும் இந்த நீதிமன்றம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் கிட்டத்தட்ட 350 பேர்கள் சாலை விபத்துக்களினால், சென்னை நகரில் மட்டும் மாண்டிருக்கிறார்கள். நடமாடும் நீதிமன்றங்கள் நடைமுறைக்கு வந்த பிறகு, சாலை விபத்துக்கள், இதுபோன்ற குற்றங்கள் எல்லாம் குறையும் என்று அரசு நம்புகிறது.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மாத்திரம் நடமாடும் நீதிமன்றம் இயங்கயிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். கோவை, மதுரை, சேலம், திருச்சி போன்ற பல்வேறு இடங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், இப்படிப்பட்ட நடமாடும் நீதிமன்றங்களை விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? இந்த நடமாடும் நீதிமன்றங்கள் சென்னையிலே அமைக்க இருப்பதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அல்லது எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு போட்டிருக்கின்ற உத்தரவு நடமாடும் நீதிமன்றங்கள் சாலை விபத்துக்கள், சாலை விதிகளை மீறுகின்ற குற்றங்களை களைவதற்கு சென்னையில் மட்டும் தற்போது வரும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பிறகு தேவையிருப்பின் மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி போன்ற பகுதிகளுக்கும் நீட்டிக்கலாமா என்பதை பற்றி பின்னர் ஆராயும். அது மட்டும் அல்லாமல் இந்த சென்னையில் இந்த நடமாடும் நீதிமன்றங்களை நடைமுறைப்படுத்துவதால் அதற்கான நீதிபதிகள் ஸ்பெஷல் மேஜிஸ்டிரேட் என்ற முறையில் கிரிமினல் புரசிஜர் கோடு 18-வது பிரிவில் நியமிக்கப்படுவார்களானால் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 1 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அல்லது ரெகுலர் மேஜிஸ்டிரேட் கிரிமினல் புரசிஜரல் கோடு 16-வது பிரிவில் நியமிக்கப்படுவார்களானால் கிட்டத்தட்ட 3 லட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பு சம்பந்தப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு உதாரணமாக திருச்சியில் டவுனில் ஒரு நீதிமன்றம் உள்ளது. அதைச் சுற்றி சுமார் 80 மைல் தூரம் வரையில் திருச்சி

மாவட்டம் விஸ்தரிப்பு உள்ளது. ஆகவே தீண்டாமை ஒழிப்பு சம்பந்தப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு நடமாடும் நீதிமன்றம் அங்கே அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பு சம்பந்தப்பட்ட கேஸ்களை விசாரிப்பதற்கு தனியாக சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அரசு ஏற்கனவே அமைத்திருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடமாடும் நீதிமன்றம் கொண்டு வருவதற்கு அடிப்படை காரணம் என்ன? தனியாக அதற்கு நீதிபதிகளை நியமிப்பார்களா அல்லது செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளே அதை கவனிக்கும்படி சொல்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் நீதிமன்றங்களில் கிரிமினல் புரசிஜரல் கோடு 16-ம் பிரிவின் கீழ் ரெகுலர் மாஜிஸ்ட்ரேட் டிஸ்ட்ரிக்ட் முனிசிப் அளவிலும் அல்லது ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட் அண்டர் செக்ஷன் 18 ஆப் தி கிரிமினல் புரசிஜரல் கோடு அடிப்படையில் நியமிக்கலாம் என அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த நடமாடும் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு காரணங்கள் பல உள்ளன. உதாரணமாக சாதாரண பொதுமக்கள் சாலை விதிகளை குறிப்பாக Motor Vehicles Act and the rules framed thereunder. அவற்றை எல்லாம் மீறுகின்ற காரணத்தால் ஏற்படுகின்ற இன்னல்களை தவிர்ப்பதற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. டாக்சி மற்றும் ஆட்டோ இவைகளை மீட்டருக்கு அதிகப்படியான கட்டணத்தை வசூலிப்பதை தவிர்ப்பதற்கும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரமாட்டேன் என்று சொல்வதையும் ஓவர் ஸ்பீடு மேற்கொள்வதையும், அதைப்போலவே சில வாகனங்களில் விபத்து ஏற்படுத்தக்கூடிய பொருள்களை அதிகமாக ஏற்றிச்செல்வதால், உதாரணமாக ஒரு ஆட்டோ இருக்கலாம், டாக்சி இருக்கலாம். இவைகள் நீளமான கம்பிகளை ஏற்றிச்செல்வதால் விபத்துகள் ஏற்படலாம். இதை தடுப்பதற்கும், சாலைகளை கடந்து செல்வதற்கு சப்—வே அமைக்கப்பட்டும் அதை பயன்படுத்தாமல் சாலையின் குறுக்கே செல்கின்ற காரணத்தால் விபத்துக்கள் ஏற்பட்டு உயிர் இழக்கக்கூடிய நிலைமைகளை தவிர்ப்பதற்கும், ஓவர்லோடு என்ற முறையில் மிக அதிகமான பொருள்களை ஏற்றி சென்னை போன்ற நகரங்களில் ஏற்படும் மிக அதிகமான விபத்துக்களை தடுப்பதற்கும், பேருந்துகளில் ஃபுட் போர்டு டிராவல் செய்வதை தடுப்பதற்கும், இதுபோன்ற குற்றங்களை களைவதற்கு இந்த நடமாடும் நீதிமன்றம் தற்போது கொண்டுவரப்படுகிறது.





## நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட செஷன்ஸ் கோர்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 423—திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட செஷன்ஸ் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(இ) நீலகிரி மாவட்டம் குன்னூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற்குறிப்பு உண்டா?

(ஈ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) உதகமண்டலத்தில் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் ஒன்று அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) மற்றும் (ஈ) நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாவட்ட முன்சீப் மற்றும் முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றியமைப்பதற்கான ஆணையை அரசு ஆணை நிலை எண் 951, உள்துறை, நாள் 20–4–82-ல் பிறப்பிக்கப்பட்டது. அந்த நீதிமன்றம் 24–4–82-லிருந்து செயல்பட்டு வருகிறது.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தி சுமார் 1 ஆண்டு ஆகியும் இதுவரைக்கும் அங்கு ஊழியர்கள் நியமிக்கப்படாததால் அங்கே ஆயிரக்கணக்கான வழக்குகள் ஏராளமாக தேங்கியிருக்கின்றன. அதனால் அங்கு உடனடியாக ஊழியர்களை அமர்த்த ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணக்குப்படி எத்தனை ஊழியர்கள் தேவையோ அவர்களை ஏற்கனவே 24–4–82-ல் பணியில் அமர்த்தப்பட்டு அது செயல்பட்டு வருகிறது. ஆனாலும் வழக்குகளின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கிற காரணத்தால் கூடுதல் ஊழியர்கள் வேண்டும் என்று கோரிக்கை வந்து அதை அரசு பரிசீலித்து வருகிறது. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, நீலகிரியிலே அமைக்கப்போகும் மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டை விரைவாக அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இதுகாறும் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்திற்கு — மலைப் பகுதியிலிருந்து கோவைக்கு வருவது பல மக்களுக்கு இன்னல்களை, இடுக்கண்களை தருகிற காரணத்தினால் — விரைவிலே அமைக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தில்தான் அரசு அந்த முடிவை எடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்கள். அதன் பிரகாரம் அதற்கு நியமிக்கப்பட வேண்டிய ஊழியர்கள் பூராவும் நியமிக்கப்பட்டு செயல்படுகிறது என்று கூறினார்கள். ஆனால் அங்கே போதுமான ஊழியர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. அங்கே தேவையான ஊழியர்கள் முழுவதற்கும் இப்போது கொடுக்கப்பட்டுள்ளதா ? மாவட்ட செஷன்ஸ் கோர்ட் அங்கே கேம்ப் கோர்ட்டாகத் தான் நடந்துகொண்டிருக்கிறது. அதை நிரந்தர கோர்ட்டாக ஆக்க துரிதமாக ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, குன்னூரைப் பொறுத்தவரைக்கும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட், பர்ஸ்ட் கிளாஸ் கோர்ட்டிற்கு போதுமான ஊழியர்கள் இல்லையென்றும், இன்னும் ஊழியர்கள் தேவை என்றும் குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. ஏற்கெனவே ஆரம்பத்திலே அமைத்த போது இருந்த கணக்கின்படி ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கூடுதல் ஊழியர்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது தேவையென்றே அரசு கருதுகிறது. அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும். செஷன்ஸ் கோர்ட் கேம்ப் கோர்ட்டாக இருப்பதற்குக் காரணம் நீலகிரி மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட நீதிமன்றம் இல்லை என்பது தான். விரைவாக மாவட்ட நீதிமன்றம் அமைத்ததற்குப் பிறகு இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது குன்னூரிலே மாவட்ட முன்சீப் கோர்ட் அமைப்பதாகச் சொன்னார்கள். அதைப் பார்க்கும்போது மலைவாழ் மக்களுக்கு வசதி செய்வதாக நான் கருதுகிறேன். அதேபோன்று கொடைக்கானலில் நிரந்தரமான கோர்ட் இல்லாமல் வாரத்திற்கு ஒரு



முறை நீதிபதிகள் வந்து விசாரித்துவிட்டுப் போகிறார்கள். சுற்றியுள்ள கிராமங்களிலே உள்ள மக்கள் 20, 30 மைல் தூரத்திலிருந்து வந்துபோக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுவும் ஒரு வாரத்திற்கு ஒரு முறை வந்துபோகவேண்டிய நிலை உள்ளது. ஆகவே அங்கே ஒரு நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கொடைக்கானலைச் சுற்றியுள்ள பகுதிகள் மலைவாழ் மக்கள் வாழுகின்ற பகுதியாக இருப்பதால் அங்கே உள்ள மக்களின் நலனைக் கருதி அங்கே ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்,

ஒரத்தநாடு மருத்துவமனை.

*வினா எண். 424—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு மருத்துவமனையில் இட நெருக்கடி இருப்பதால் அருகில் இருக்கும் கால்நடைப் பண்ணை அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, ஒரத்தநாடு மருத்துவமனை மிக நெருக்கடியாக இருப்பதால் கால்நடைப் பண்ணை அலுவலகத்தை மாற்ற உடனடியாக செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இது அனிமல் ஹஸ்பன்டரி துறையின் கைவசம் உள்ளது. அவர்கள் கீழத்தோட்டம் என்ற அந்த இடத்தில் கால்நடை மருத்துவமனையை அமைக்கலாமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக செலவு கூடுதலாகிறது. நல்வாழ்வுத் துறை அந்தச் செலவை சரிக்கட்டக்கூடிய அளவுக்கு இருக்குமானால் அதை ஏற்றுக்கொள்ளமுடியும். அதை நாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, புக் அட்ஜஸ்ட்மெண்ட் என்று சொல்கிறார்கள். நல்வாழ்வுத் துறையும் கால்நடை இலாகாவும் உடனடியாக புக் அட்ஜஸ்ட்மெண்ட்தானே அதைச் செய்துகொண்டு உடனடியாகச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

## தூத்துக்குடி அரசு தலைமை மருத்துவமனை.

*வினா எண். 425—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அரசு தலைமையிட மருத்துவமனையில் படுக்கைகள் கொண்ட புதிய வார்டு கட்டுவதற்காக அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எத்தனை படுக்கைகள் இருக்கும்?

(ஈ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(உ) எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ)—(ஈ) அரசு ஆணை நிலை எண் 1564, சுகாதாரம், நாள் 20–9–1980 தூத்துக்குடி அரசுத் தலைமையிட பொது மருத்துவமனையில் 260 படுக்கைகள் கொண்டப் பகுதி ரூ. 42 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(உ) தற்போது கட்டிடப்பணி துவங்கப்பட்டு விட்டது. பணி முற்றுப்பெற்றவுடன் செயல்பட துவங்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய வேலைகள் தாமதமாக நடப்பதாக அரசிற்கு புகார்கள் வந்திருக்கிறதா? அப்படியென்றால் துரிதப்படுத்தி வேலைகளை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, 42 இலட்சம் ரூபாயில் கட்டப்படுகிற இந்த கூடுதல் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் மூன்று ஸ்டேஜ்களாக அதனுடைய வேலைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதல் ஸ்டேஜ்— கிரவுண்ட் ப்ளோர் விதி 104 படுக்கைகள். அதற்கு ரூ. 11·70 லட்சம் 1980–81-ல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டேஜ் செகண்டில் பர்ஸ்ட் ப்ளோர் விதி 104 படுக்கைகள். அதற்கு ரூ. 10·90 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஸ்டேஜில் செகண்ட் ப்ளோர் விதி 52 படுக்கைகள். அதற்காக ரூ. 19·40 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆகவே மொத்தமாக 260 படுக்கைகளுக்கு 42 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. துரிதமாக வேலைகள் நடந்து வருகின்றன.



## ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டுள்ள மாவட்ட மருத்துவமனைகள்.

*வினா எண். 426—திரு. இரெ. இராசமாணிக்கம், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. நா. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை மாவட்ட மருத்துவமனைகளில் மின் உற்பத்தி செய்ய ஜெனரேட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) வட்ட மருத்துவமனைகளிலும் அமைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஜெனரேட்டர் பொருத்தப்பட்ட மாவட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 4 ஆகும். ஜெனரேட்டர் பொருத்த அனுமதியளிக்கப்பட்ட மாவட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 9 ஆகும். 1983–84 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தில் மேலும் 2 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் பொருத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அரசாணை வெளியிடப்படும்.

(ஆ) முதல் கட்டமாக, மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் அமைக்கும் திட்டம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவு பெற்றவுடன், இரண்டாவது கட்டமாக வட்ட மருத்துவமனைகளில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜெனரேட்டர் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்னும் எத்தனை மாவட்ட மருத்துவ மனைகளில் மின்சார ஜெனரேட்டர் அமைக்க வேண்டியது பாக்கி இருக்கிறது? ஜெனரேட்டர் அமைக்கவேண்டும் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒரு காரியமாக இருப்பதால் உடனடியாக எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் ஜெனரேட்டர் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, திருப்பூரில் கோவை மாவட்ட தலைமை மருத்துவ மனையில், காஞ்சீபுரம், செங்கல்பட்டு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் 1983–84 ஆம் ஆண்டு பார்ட்—2 ஸ்கீமில் நாம் அதை போடுவதற்கு திட்டமிட்டு இருக்கிறோம். இவை இரண்டு தான் இன்னும் ஆணையிட வேண்டியது. மற்ற ஈரோடு, புதுக்கோட்டை, தர்மபுரி, உதகை, திண்டுக்கல், தூத்துக்குடி, இராமநாதபுரம், கடலூர் ஆகியவற்றிற்கெல்லாம் ஏற்கெனவே ஆணையிட்டு இருக்கிறோம். மற்ற இடங்களிலே ஏற்கெனவே பொருத்தப்பட்டிருக்கிறது.

[1983 மார்ச் 15

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்தில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடிய அறுவைக்கூடங்களுக்கு மின்சாரம் மிக அத்தியாவசியத் தேவையாகும். ஆகவே எல்லா வட்ட மருத்துவமனைகளுக்கும், குறிப்பாக மயிலாடுதுறையில் இருக்கிற வட்ட மருத்துவமனையில் ஜெனரேட்டர் உடனடியாக பொருத்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதிநிலைமையைப் பொறுத்து தான் நாம் முடிவை எடுக்கவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே இதில் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் ஜெனரேட்டர் பொருத்திய பிறகு வட்ட மருத்துவமனைகள், தாலுக்கா ஹெட்குவார்ட்டர்சை பற்றி முடிவு செய்யலாம்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனரேட்டர் பொருத்துவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த பட்டியலிலே திண்டுக்கல்லும் இருக்கிறது. ஜெனரேட்டர் வந்து ஒரு வருட காலமாகி விட்டது. ஆனால் அதற்கு கூடு அமைக்கப்படாமல், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாமல் இருக்கிறது. அதை விரைவில் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கான டெண்டர் கால் பார் பண்ணியிருக்கிறார்கள். வெகுவிரைவில் திண்டுக்கல்லில் அந்த வேலை முடிக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆஸ்பத்திரிகளில் ஜெனரேட்டர் அமைப்பதிலே நாம் முறைப்பாக இருந்து, அந்த வேலைக்கு முன்னுரிமை கொடுத்து காரியங்களை செய்ய வேண்டும். ஆபரேஷன் தியேட்டர்களில் ஆபரேஷன் நடக்கிறபோது மின்சார தடை ஏற்பட்டால் நோயாளி கீழே விழுந்து நினைவிழந்து விடுவார் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த வேலைக்கு முன்னுரிமை கொடுத்து ஆஸ்பத்திரிகளில் ஜெனரேட்டர் வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 15]

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றாக அறிகிறேன். ஆகவேதான் வெகு வேகமாக ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும்கூட, நிதி நிலைமையிலே எவ்வளவு பிரச்னை இருந்தாலுங்கூட, அதிலும் கூடுதல் வரி போட எதிர்ப்பு இருந்தாலுங்கூட, நாங்கள் அதைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே சில மாவட்ட மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்கள் இருந்தும் கூட, அவைகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகின்ற பொழுது, உடனடியாக அவைகளை நிவர்த்தி செய்து, பயன்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு வரதராஜன் கேட்டதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன், ஜெனரேட்டர்கள் எல்லாம் நன்றாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்கள் பொருத்துவது என்பது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற பிரச்னை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு 'ரோட்டரி கிளப், லையன்ஸ் கிளப்' போன்ற பொது சேவை செய்கின்றவர்களிடம் நன்கொடைகள் வாங்க முன்வருவார்களா அப்படி நன்கொடைகள் அளிப்பவர்களுக்கு அரசு விதிவிலக்கு அளிக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை.

## மருத்துவக் கல்லூரியில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விதிகள்

*வினா எண். 427—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப்பள்ளியில் +2-ல் Nursing Vocational Group எடுத்த மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப் படாதது ஏன்?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) பல்கலைக் கழக விதிகளின்படி மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி அளவிலேயே பௌதீகம், இரசாயனம் மற்றும் உயிரியல் பாடங்கள் உள்ள தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். மேல்நிலைப் பள்ளியில் செவிலியப் பணியை வாழ்க்கைத் தொழில் கல்விப் பாடமாக எடுப்பவர்கள் மேற்சொன்ன பாடங்களைப் படிப்பது இல்லை. ஆகவே மருத்துவக் கல்லூரியில் சேர அவர்களுக்குத் தகுதியில்லை.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வொக்கேஷனல் எடுத்துப் படிக்கக்கூடிய மாணவர்கள் மருத்துவப் பட்டப் படிப்புகள் படிப்பதற்காக, அவர்களுக்கு பௌதீகம் இரசாயனம் போன்ற பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு, அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் கல்வித்துறைக்கு சிபாரிசு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை சிபாரிசு செய்வது பொருத்தமாக, சரியாக இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. ஏன் என்றால், வொக்கேஷனல் ஸ்டடீஸ் என்றால் செப்பரேட் சப்ஜெக்ட். பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பையாலஜி என்ற மூன்றை எடுக்க முடியாமல், அந்த சப்ஜெக்ட்ஸ்ஸுக்குப் பதிலாக, வொக்கேஷனல் சப்ஜெக்ட்ஸ் கேட்கிறார்கள். அதுதான் வொக்கேஷனல் சப்ஜெக்ட்ஸ் இன் நர்சிங். வொக்கேஷனல் சப்ஜெக்ட்ஸ் இன் நர்சிங் பயிற்சி பெற்றவர்கள், நர்சிங் கோர்சுக்கு அப்ளை செய்கிறார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது, மேல்நிலைப் பள்ளியிலே வொக்கேஷனல் சப்ஜெக்ட் நர்சிங் கோர்சுக்குப் படித்த மாணவர்கள் என்றால், மருத்துவக் கல்லூரியிலே நடத்தப்படுகிற நர்சிங் டிரெயினிங் கோர்சுக்கு அப்ளை செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொன்னார்கள். மேல்நிலைப் பள்ளியிலே செவிலியர் படிப்பு இரண்டு ஆண்டுகள் படித்த பிறகுங்கூட, செவிலியர் பயிற்சிப் பள்ளியில் எந்தவிதமான முன்னுரிமையும் அந்த மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா, அப்படிக் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்படுமா? இராணுவத்தில் இல்லாத, காவல் துறையில் இல்லாத, தொலைபேசி இலாக்காவில் இல்லாத அளவுக்கு, மாணவர்களுடைய உயரத்தைக் கணக்கிட்டு அனுமதி மறுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் இப்படிச் சொல்லாமல், பயிற்சிக்கு வருகின்றபொழுது, 2 அங்குலம் உயரம் குறைவு என்று சொல்லி, தமிழ்நாட்டிலேயே முதலாவதாக வந்த என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மாணவிக்குக்



கூட அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வொக்கேஷனல் கோர்சில் நர்சிங் பயிற்சி படிப்பு படித்த மாணவியருக்கு மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு முன்னுரிமைத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொற்பொழிவு மாதிரி கேள்வியைக் கேட்கக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு கேள்விகளை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டு இருக்கிறார்கள். முதலில் 152.4 சென்டி மீட்டர் என்பதைப் பொறுத்தவரையில் அது தமிழக அரசு நியமித்த விதி அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

All India Nursing Council

என்று இருக்கிறது, உலகத்திலே இருப்பதை விட இந்தியாவிலே இரண்டு சென்டி மீட்டர் குறைவாகத்தான் இருக்கிறது.

All India Nursing Council

விதித்துள்ள விதிமுறை. அதைத் தளர்த்துவதற்கான அதிகாரம் நமக்குக் கிடையாது. இதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

All India Medical Council

என்பதைப்போல

All India Nursing Council

இருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்யமுடியும்?

I share your views

குறைத்தால் நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தும் கூட. இருந்தாலும்,

Indian Nursing Council

ஒத்துக்கொள்ளவில்லை என்றால் நம்மால் செய்யமுடியாது.

இரண்டாவதாக, நர்சிங் வொக்கேஷன் குரூப் எடுத்த மாணவர்களுக்கு வாய்ப்பே இதிலே இல்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டை வைப்பார்கள் என்று தெரிந்துதான் நான் அதற்கான புள்ளி விவரங்களை வைத்திருக்கிறேன். ஜனவரி 1981-இல் 92 பேர் மனுச் செய்தார்கள். நர்சிங் வொக்கேஷன் குரூப் எடுத்துக் கொண்டவர்களுக்கு 29 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் நர்சிங் கோர்ஸ் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். மார்க் அதிகமாக வாங்கவில்லை என்றால் இன்னொரு சப்ஜெக்டிலே மார்க் அதிகமாக வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 428 மற்றும் 429 ஆகியவை மாண்புமிகு தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் சலுகைகள்.

*வினா எண். 240—திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களுக்கும் மலை சாதியினருக்கும் மற்றும் இதர நலிந்த பிரிவினருக்கும் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் சலுகைகள் யாவை?

(ஆ) 1981—1982-ம் நிதி ஆண்டில் இவர்களுக்காக நடைமுறைப்படுத்த இருக்கும் புதிய திட்டங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அவை முன் ஓர் விவர அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது;

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களில் எத்தனை சதவீதம் இந்தக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களையும், மேலும் அதிகமாக அவர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கு இந்தத் துறை என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்ற விவரங்களையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் எத்தனை சதவீதம் பேர் என்ற விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. அதற்கு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய வகுப்பினரைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கடன் வசதி பெற வாய்ப்பளிக்கும் வகையில் நபர் ஒன்றுக்கு 100 ரூபாய் பங்குத்தொகை செலுத்த அரசு நிதியுதவி அளிக்கத் திட்டமிட்டு, நடப்பாண்டில் 40,000 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களாக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. இதற்காக 1981-82-ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாயை அரசு நிதி உதவியாக வழங்கியிருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்த்துக்கொண்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**229—233ம்பக்கங்களில் இணைப்பு Iஆக அச்சிடப்பெற்றுள்ளது.



திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, ஆதிவாசிகள், பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களுக்குப் பல மாவட்டங்களில் அவர்களுக்குக் கூட்டுறவுத் துறையில் வேலை வாய்ப்பு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலேயும் இப்படிப்பட்ட கூட்டுறவுத் துறையை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவார்களா இதிலே இன்னொரு இடர்பாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது சில பகுதிகளில் ஏற்கெனவே அரசாங்கத்தினுடைய வனத்துறை நிலம் இருந்தால் இந்தக கூட்டுறவு அமைப்புக்கான வாய்ப்பு ஏற்பாடாமல், அரசாங்கத்தின் சலுகைகள் கிடைக்காமல், பல மாவட்டங்கள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளாகப் பார்த்து தற்போது அதிகமான வழ்வகைகளைச் செய்து, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் இடத்தில் அரசு அமைந்திருக்கிறது. உறுப்பினரவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் அமைப்பதைவிட பழங்குடியினர் அதிகமாக இருக்கின்ற இடங்களில் அமைப்பது சிறந்தது என்று இந்த அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. வனத் துறையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பிரச்னை எழாத வகையில் அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஆதிதிராவிடர்களுக்குச் சலுகைக் கொடுக்கும் வகையில் அவர்களுக்குக் கடன் தரப்படுகிறது; ஆனால் அப்படி வாங்குவதற்கு அவர்கள் டெபாசிட் தொகை கட்ட வேண்டியிருக்கிறது. அந்த டெபாசிட் தொகை இல்லாமல் கடன் பெறுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம்நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை இந்த அரசு பரிசீலனை செய்துதான் தெரிவிக்கமுடியும்.

திரு.எஸ்.இளையபெருமாள்: மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது 1981-82 ஆம் ஆண்டு இவர்களுக்கு இலட்சக் கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அது எந்தெந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட் டிருக்கிறது. அந்த ஒதுக்கீட்டினால் எத்தனை பேர் பலன் பெறு கிறார்கள்? எத்தனை ஆதிதிராவிடர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலே, ஆதிதிராவிடர் உறுப்பினர்களாக சேர்வதற்கு அவர்களுக்குத் தேவைப்படுகின்ற இந்த 100 ரூபாயை பங்குத் தொகையாக, அரசு மான்யமாக அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். அதற்காக அரசு 40 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 40 ஆயிரம் பேர்கள் இதனால் பயன் பெற்றிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். உறுப்பினர வர்கள் மாவட்டந்தோறும், எந்தெந்தப் பகுதிகளில் பயன் பெற் றார்கள் என்று கேட்கிறார்கள், அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனியாக கேள்விகள் கேட்டால், விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. ஜி. மூர்த்தி: இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் சேராதவர் களும், அல்லது இருக்கின்ற கூட்டுறவு மையத்தில் உறுப்பினராக இல்லாமல் இருப்பவர்களுக்கும், நேரடியாக வங்கியுடன் தொடர்பு கொண்டு, அதுபோன்ற மான்யக் கடன்களை பெறுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்களுக்கு, அவர்களுடைய வறுமை நிலையைக் கவனத்திற்கொண்டு, அரசு ஏற்கனவே இதிலே அதிக கவனம் கொண்டு, செயலாற்றி வரு கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஹரிஜன மக்கள் கடன் வாங்குவதற்கு பல சலுகைகள் செய்திருந்தாலும் கூட கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும், நிலவள வங்கிகளிட மிருந்தும் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கும் ஹரிஜன மக்கள் வாங்கிய கடன்களை, மற்றவர்களுக்கெல்லாம் தள்ளுபடி செய் யப்பட்டாலும்கூட- இவர்கள் பலமுறை முயற்சிகள் செய்தாலும் கூட அந்தக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருக்கின்றது. அமைச்சரவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆம் என்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக சிறிய விவசாயிகள் என்ற முறை யில் 1981-82—ஆம் ஆண்டில், குறுகிய கால, மத்திய கால கடன் தவணைகலளயும், எடுத்த எடுப்பில் திரும்பச் செலுத்துகின்ற சிறிய விவசாயிகளுக்கு, அவர்கள் எந்த வகுப்பினைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும், அவர்கள் செலுத்திய வட்டியிலே 2 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என்கிற வகையிலே அரசு நட வடிக்கை எடுத்திருக்கிறது. இதற்காக அரசு 32 லட்சம் ரூபாயை நிதி உதவியாக அளித்து பொதுவாக அனைத்து தரப்பினருக்கும் குறிப்பாக ஏழ்மை நிலையில் இருக்கக்கூடிய அனைவருக்கும் பயன் பெறக்கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு.கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிடர் மக்களுக்கு, சலுகைகள் என்ற அடிப்படையிலே பார்க்கும்போது எந்தவிதமான சொத்தும் இல்லாத ஏழை விவசாயக் கூலிகளுக்கு, எந்தச் சங்கத்திலும், எந்தச் சலுகையும் கிடைத்ததாகத் தெரியவில்லையே, அங்கே போனால், அவர்கள் சொத்து கேட்கிறார்கள், பட்டா கேட்கிறார்கள், சட்டம் கேட் கிறார்கள். அவர்களிடத்தில், இவைகள் இல்லையே, இதனால் அவர்கள் சலுகைகளை அடைய முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? இதை நீக்கி சிறு கூலி விவசாயிகள், குத்தகைதார விவசாயிகள், இவர்களுக்கெல்லாம், சலுகைள் உடனடியாகத் தடங்கல் இல்லாமல் கிடைப்பதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அரசு அதைப் பரிசீலனை செய்து, அதிக அக்கறையோடு கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிட மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே பல்வேறு காரியங்களுககுக் கடன் பட்டவர்களுக்கு அரசு தரவேண்டிய மான்யத் தொகை ஆண்டுக்கணக்கில் அளிக்கப் படாமல் இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதைப் போக்க உடனடி நடவடிக்கை எடுப்பார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அதுகுறித்த விவரங்கள் தற் போது இல்லை, உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தின்படி அத்தகைய பிரச்சினைகள் இருக்குமேயானால், அரசு அதை ஆராய்ந்து ஆவன செய்யும்.

## ஆதிதிராவிடர் நலம் குறித்த மாநில மற்றும் மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண்.344—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட நல மாநில மற்றும் மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எம் விஜயசாரதி; (அ) ஆம்.

(ஆ) மாநில, மாவட்ட ஆதிதிராவிடர் நல குழுக்களைத் திருத்தியமைப்பதற்குரிய விவரங்களை சேகரித்து அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோரப்பட்டுள்ளனர். அவ் விவரங்கள் பெறப்பட்டவுடன் இக்குழுக்கள் விரைவில் திருத்தி அமைக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மாநில மாவட்டக குழுக்கள், ஆதிதிராவிட மக்களுடைய பிரச்சினைகளை முறையிடுவதற்கும் விவாதிப்பதற்குமாக தொடர்ச்சியாக இருந்து வரக்கூடிய குழுக்கள். சமீபகாலமாக 3 ஆண்டுகளாக இந்த அரசு ஆரம்பித்த பிறகுகூட, இதுவரை மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து ரிப்போர்ட் வரவில்லையா அல்லது வந்தும் ஏற்பாடு செய்யப்படவில்லையா, தங்களுடைய நோக்கமென்ன? அல்லது ஆதிதிராவிட மக்களுக்குப் பிரச்சினையே இல்லை என்று இந்த அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஆதிதிராவிடர் களுக்குப் பிரச்சினை இல்லை எளறு கருதுகிறாரா என்று உறுப் பினர் கேட்டார். பிரச்னை இருக்கிறது. இது இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் குழுக்களை அமைப்பதன் மூலமாக அரசுக்கு பல விதங்களில் இந்தக் குழு மாநில அளவிலே பணியாற்றுகின்ற இந்தக்குழுவில் உறுப்பினர்கள் தெரிவிக்கக்கூடிய யோசனைகள் அரசுக்கு மட்டுமின்றி தமிழகத்திலே உள்ள ஆதி திராவிட மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில் இந்தக் குழுவினுடைய பணிகள் இருக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தை இந்த அரசு கொண்டிருப்பதன் காரணமாக தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பிற்பட்டவர்களின் நன்மைக் காகவும், பழங்குடியினர்கள் நல களுக்காகவும், மாநில அளவிலே அரசு ஏற்கனவே குழுக்களை அமைத்து இருக்கிறது. இந்தக் குழுக்களை அமைத்து அந்த மக்களுக்கு நன்மைகளைச் செய் கின்ற விதத்திலே அந்த மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை அறியவேண்டும் என்ற உணர்வோடு இந்த அரசு இந்தக்குழுக்களை



திருத்தி இருக்கிறது. அந்தக் குழுக்களிலே இருக்கக்கூடிய நபர் களுடைய கல்வித் தகுதி மற்றும் சமூக நலப் பணிகள், அரசியல் தொடர்பு போன்ற விவரங்களோடு மாவட்ட ஆட்சித் தலை வர்கள் அனுப்பவேண்டுமென்று கேட்டிருந்தோம். அவர்களிட மிருந்து அரசுக்குத் தகவல்கள் வந்துள்ளன. அந்தப் பட்டியல் களிலே உள்ள நபர்கள் மட்டுமின்றி தகுதியுள்ள வேறு சில நபர் களையும் இணைத்து முழு விவரங்களைக் கொண்டு குறிப்பினை அனுப்பவேண்டுமென்று தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் களை அரசு உத்தரவு மூலமாகக் கேட்டுள்ளது. அவர்களுடைய பதில் விரைவில் எதிர்ப்பாக்கப்படுகிறது. அரசு அதன் மீது அதிக அக்கறை கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைவாக அனுப்பவேண்டுமென்று நானே தனிப்பட்ட முறை யிலே இதன் மீது நடவடிக்கை எடுத்து விரைவாக அந்தக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கக்கூடிய நவீன வசதிகளைக் கொண்டு, வயர் லெஸ் போன்ற சாதனங்கள் மூலமாக, தகுதி பெற்றவர் களுடைய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து ஒரு நிமிடத்தில் கேட்டுப்பெற முடியும். அந்த அளவுக்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்றன ஆனால் 3 வருடங்களாக கால தாமதம் ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம் என்ன அந்த பைல் முதல் அமைச்சர் அவர்களிடம் இருப்பதாகச் சொல்லப் படுகிறதே, அதுதான் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோப்பு முதல் அமைச்சர் இடத் திலே இருப்பதாக உறுப்பினர் தெரிவிக்கிறார்கள். அது சரியான கருத்தல்ல. அந்தக் கோப்பிலே இருக்கக்கூடிய குறிப்பினைத் தான் சற்று முன்னால் நான் படித்தேன். அந்தக் குறிப்பிலே கண்டிருக்கிற விவரங்களின் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதிலே அதிகமான அக்கறை எடுத்து, தனியாக மாவட்ட ஆட்சித் தலை வர்களோடு நேரடியாக தொடர்பு கொண்டு, அதற்கு தேவைப் படுகின்ற அனைத்து விவரங்களையும் உடனடியாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குழுவை எவ்வளவு விரைவாக அமைக்க முடியுமோ, அந்த அளவுக்கு பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட அளவிலே, மாநில அளவிலே அமைக்கப்படும் அரிஜன நலக் குழுவிற்கு அரிஜனங்கள் அல்லாதவர்களையும் ஏற்கனவே நியமித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இப்போது நிய மிப்பதற்காக அரசு ஏதாவது ஆலோசனைகள் வழங்கியிருக் கிறதா? எந்த எந்த அடிப்படையிலே தகுதியானவர்களை குழு

உறுப்பினர்களாக சேர்க்கலாம் என்று ஆலோசனை அரசிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையிலே தேர்வு செய்வார்கள் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவைப் பொறுத்தவரையிலும் சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டிருக்கக்கூடிய மற்றவர்களையும், சமுதாயப் பணியாற்றுகின்ற மற்றவர்களையும், அவர்களுடைய கல்வித் தகுதி, அரசியல் தகுதி போன்ற பல தகுதிகளின் அடிப்படையிலே அவர்கள் தேர்வு செய்யப்படவேண்டும் என்ற உணர்வோடு நான் இந்த அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

(அ) வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கடந்த 12 ஆம் தேதி அன்று இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசலாம் என்று அவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதன்படி அலுவல் ஆய்வுக்குழு எப்போது கூட்டப்படும் என்பதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன் நான் அதற்கான ஆதாரங்களோடு தயாராக வந்திருக்கிறேன். எனவே தாங்கள் அருள் கூர்ந்து எப்போது அலுவல் ஆய்வுக் குழு கூட்டப்படும் என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாத் தரப்பிலேயிருந்து கலந்துவிட்டு நான் சொல்கிறேன். அவை ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி வரை நடக்கிறது.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் தேர்தல் பணியாற்றுவதற்காக தங்கியிருந்த அந்தத் தோட்டம் எனக்கு உரியது என்று சொல்லப்பட்ட அந்தப் பிரச்சினை பற்றிதான் அலுவல் ஆய்வுக் குழுவில் பேச வேண்டுமென்று அன்றைக்கு [illegible] அறிவிக்கப்பட்டிருக்கிறது.



(முற்பகல் 10-10)

நான் அது யாருக்கு சொந்தம் என்பதற்கான ஆதாரப் பத்திரங்களையும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து இன்று வாங்கிக் கொண்டு வந்து இருக்கிறேன். அது அவசரமாக அவர்களுக்குத் திருப்பியும் தேவைப்படுகிறது. அவர்கள் அதை வைத்துக்கொண்டு எங்கோ வங்கியில் வைத்துக் கடன் வாங்க வேண்டுமாம். ஆகவே அதை விரைவாக அவர்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். இரண்டு நாட்களுக்குள் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டினால் வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆம் தேதி இங்கே விவாதம் நடைபெற்றது. விவாதம் நடைபெற்ற நேரத்தில் என் மீதும் ஒருசில குற்றச்சாட்டுகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதுபோல் வெளியே பேசிய பேச்சுக்களை பொதுக் கூட்டங்களில் பேசிய பேச்சுக்களை எல்லாம் இந்த மாமன்றத்திலே கொண்டு வந்து, அதை அவைக் குறிப்பிலே ஏற்றி, அது குறித்து அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு எடுக்க வேண்டுமென்று தாங்கள் முடிவு எடுப்பதாக இருந்தால் அதற்கு நான் தடையாக இருக்க போவது இல்லை. ஒவ்வொரு நாளும் இப்படிப்பட்ட முறையிலே வெளியே பேசியவற்றையெல்லாம் அவைக்குறிப்பிலே ஏற்றி, அதுபற்றி இந்த மாமன்றத்திலே விவாதித்து, அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்க வேண்டுமென்ற நிலை வரும். அதற்கு நீங்கள் தயார் என்றால் நானும் தயார்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தாங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அன்றைக்குப் பிரச்னை எழுப்பியது திரு. ரகுமான்கான், திரு. துரைமுருகன் ஆகிய மாமன்ற உறுப்பினர்கள், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் நண்பர் குழந்தைவேலு அவர்கள்தான், நான் அமைதியாக இருந்த நேரத்தில், என்னை அழைத்து, எதிர்க்கட்சித் தலைவர் வாயை மூடிக்கொண்டு இருக்கிறார், அதைப் பற்றி அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டபிறகு, மாண்புமிகு குழந்தைவேலு சொன்ன கூற்று தவறானது என்று நானும் இங்கே எடுத்துச்சொன்னேன். ஆனால், அவர் அதை நான் நிரூபிக்கத் தயார் என்றும், அதற்காகப் பதவியைக் கூட ராஜினாமா செய்யத் தயார் என்றும் அறைகூவல் விட்டு இருக்கிறார். அதனால்தான் கேட்கிறேன்.

அவர் மீது நான் எந்தக் குற்றச்சாட்டையும் எப்போதும். சொல்லவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அவர்மீது எந்தக் குற்றச்சாட்டையும் அந்தக் காலக்கட்டத்தில் 12-ஆம் தேதியன்று சொல்லவில்லை. அவர் வேண்டுமென்றே கூறுகிறார்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### வேளாண்மைப் பல்கலைக் கழக இணை ஆராய்ச்சியாளர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை, சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், ஆகியோர் ''தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக இணை ஆராய்ச்சியாளர்கள் தங்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்படாததால் 7-3-1983 ஆம் தேதி முதல் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம், கோவையில் மறியல் போராட்டம் நடத்தி அதனால் கைது செய்யப்படுவதால், ஆராய்ச்சியாளர்கள் மத்தியிலும் விவசாயிகள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கோரி அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக இணை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 7-ந்தேதி முதல் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம், கோவையில் மறியல் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட வேண்டுமென்று சொல்லி அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக இணை ஆராய்ச்சியாளர்கள் சுமார் 220 பேர்கள் பணியாற்றுகிறார்கள். ஆராய்ச்சி எம். எஸ்ஸி (அக்ரி) முதுகலைப் பட்டம் பெற்று, ஆராய்ச்சியாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளின் நலன்களுக்காக பல்வேறு புதிய ரக பயிர் வகைகளையும் கருவிகளையும் கண்டு பிடித்து வெளியிடுகின்ற இளம் விஞ்ஞானிகள். அவர்களுடைய ஆராய்ச்சிகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் சென்ற ஆண்டு பல்கலைக்கழகம் வெளியிட்ட எம்.டி.யு. 10 பருத்தி, கோவை. எச் 1 மக்காச்சோளம், கோ. 4 உளுந்து போன்ற புதிய ரகங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்கள். இவ்வளவு சிறப்பாகப் பணியாற்றுகிற அவர்களுக்கு நிரந்தர பணிப் பாதுகாப்பு இல்லை. ..டியாக மாதம் 750 ரூபாய் கொடுத்துவருகிறார்கள்.

கலைக்கல்லூரியில் பட்டப்படிப்பு படித்தவர்கள் நேரடியாக உதவிப் பேராசிரியர்களாக நியமனம் செய்யப்படுகின்றார்கள். ஆனால் 6 ஆண்டு படித்து, முதுகலைப் பட்டம் பெற்ற இவர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அதனால் இவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே தங்களுடைய கோரிக்கை



களை அமைச்சர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி, எங்களை நிரந்தரம் செய்ய வேண்டும், பணியில் சேர்ந்த காலத்திலிருந்து உதவிப் பேராசிரியர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்று கோரி, போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மற்ற கலைக்கல்லூரிகளில் படிக்கக்கூடிய வர்கள் 5 ஆண்டுகள் படித்து பட்டம் பெற்றால், அவர்களை உதவிப் பேராசிரியர்களாக நியமனம் செய்யக்கூடிய இந்த அரசு 6 ஆண்டுகள் படித்து, எம். எஸ்ஸி. (அக்ரி) பட்டம் பெற்று, ஆராய்ச்சியாளர்களாக இருக்கக்கூடிய இவர்கள் உதவிப் பேராசிரியர்கள் என்று வரைமுறை செய்யப்படாமல் இருப்பது இவர்கள் மத்தியிலே பெரிய பாதிப்பட்ட நிலையை உருவாக்கியிருக்கிறது.

அது மட்டுமல்ல, அரசுத் துறையிலும், வேளாண்மை தோட்டக்கலையிலும், வேளாண்மை பொறியியல் துறையிலும், கால்நடை பராமரிப்பு போன்ற துறைகளிலும் பணியாற்றும் இளநிலைப் பட்டதாரிகளுக்கு குறைந்தபட்சம் மாதம் 965 ரூபாய் தரப்படுகின்றன. அவர்கள் 965 ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரையில் சம்பளம் பெறுவதற்கு தகுதி இருக்கிறது. ஆனால்

(முற்பகல் 10-20)

அவர்களுக்கு ரூ. 750 என்று சொல்வது சரியானது அல்ல. எனவே அந்த நிலைமையிலேதான், கடந்த 3 ஆண்டுக்காலமாக, அமைச்சரிடத்திலேயும் அதிகாரிகளிடத்திலேயும் அவர்களுடைய குறைகளை தொடர்ச்சியாக எடுத்துச் சொல்லி, எங்களின் நியாயமான பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும், பெர்மெனென்ட் செய்யப்பட வேண்டும், அடிப்படை சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும், மற்றதுபோல உதவி பேராசிரியர்களாக எங்களை நியமனம் செய்யவேண்டும் என்று சொல்லி, தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இப்பிரச்னை தீர்க்கப் படவேண்டும் என்று சென்னையிலே உண்ணாவிரதப் போராட்டமும், கோவையிலே மறியல் போராட்டமும் நடத்தியிருக் கிறார்கள், அவர்களுடையப் பிரச்னையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் அங்கே வேலை செய்யக்கூடிய வர்களுக்கு, பணி பாதுகாப்பும், போதுமான சம்பளமும் இல்லை என்று சொல்லி, அதிலே பணியாற்றிய பல்வேறு இளம் விஞ்ஞானிகள், அந்தப் பணியிலிருந்து விலகி, பாங்க் போன்ற வேலைகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அந்த இளம் விஞ்ஞானி களுக்கும் அவர்களுடைய பணிகளுக்கும் தக்க பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும். அவர்களை இப்படி பணியிலிருந்து போக விட்டால் புதிய ரக நெல் மற்றும் இதர பயிர் விதைகளை கண்டு

நான் குறிப்பிடுவது எல்லாம், முத்துதேவன் பட்டியில் தேர்தல் பணி செய்த நேரத்தில் நான் தங்கியிருந்த தோட்டமும், வீடும் எனக்கும், என்னுடைய மகன் மு.க. அழகிரிக்கும் சொந்தமானது என்று திட்டவட்டமாக அவர் அறிவித்து, நான் அதை மறுத்து, அவர் அதை நிரூபிக்கத் தயார் என்று இந்த அவையிலே குறிப்பிட்ட அந்தக் கருத்து, இந்த அவையினுடைய பொருளாக ஆக்கப் பட்டது. எனவே அதைப் பற்றி விவாதிக்கத் தான் ஆதாரங்கள் வேண்டும், தரவேண்டும் என்று கேட்கத்தான் அலுவல் ஆய்வுக் குழு கூட்டப்படும் என்று துணைத் தலைவரவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதனால் நான் நான் இப்போது அதைப் பற்றிக் கேட்கிறேன். இது எல்லா எதிர்க்கட்சித் தலைவர் களுக்கும் நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆம் தேதி நடந்த விவாதத்தின்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ''வாயை மூடிக்கொண்டு இருக் கிறார்கள்'' என்ற வார்த்தைகளை நான் சொல்லவில்லை. இப்போது வேண்டுமானாலும் அவைக் குறிப்பைப் பார்க்கலாம். தயவுசெய்து அநாகரிகமான முறையில் சொல்லவேண்டாம். இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அல்லது எண்ணங்கள் அல்லது வார்த்தைகள் நாகரீகமான முறையில் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு தான் எங்களைப் போன்றவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோமே தவிர, எதிர்க்கட்சித் தலைவர் ''வாயை மூடிக்கொண்டு இருக் கிறார்கள்'' என்று நான் சொல்லவில்லை. அப்படி குறிப்பேடு களிலும் இல்லை. உங்களுடைய 'முரசொலி' பத்திரிகையையும் நான் கொண்டு வந்து இருக்கிறேன். அதையும் வேண்டுமானால் காட்டுகிறேன். அதிலும்கூட அவ்வாறு இல்லை. ஆகவே தயவு செய்து புதிய வார்த்தைகளைச் சொல்லி, இந்த மாமன்றத்தை அவமானப்படுத்துவதைப்போல் ஒரு நிலையை உருவாக்க வேண்டாம் என்று நான் எதிர்க்கட்சி தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே அன்றைக்கு என்னைப் பற்றியும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். பினாமி நிலங்கள் என்று நான் சொன்னவுடனேயே அவர்கள் சொன்னார்கள்— ''பினாமி என்று சொன்னால் உடுமலைப் பேட்டைக்குச் செல்ல வேண்டும், பொள்ளாச்சிக்குச் செல்லவேண்டும், திருவண்ணா மலைக்குச் செல்லவேண்டும்'' என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகள் இந்த மாமன்றத்தின் அவைக்குறிப்பில் இருக் கின்றன. நான் உங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வெளியே பொதுக்கூட்டங்களில் பேசுபவைகளை எல்லாம் இந்த மாமன்றத்தில் எடுத்துக்கூறி, அவற்றை அவையின் நடவடிக்கைக் குறிப்புகளாக மாற்ற முயற்சித்தால், நானும் என்னிடத்தில் பல்வேறு ஆதாரங்களை வைத்துக்கொண்டு இருக்கிறேன், யார்





யார் பொதுக்கூட்டங்களில்—எதிர்க்கட்சித் தலைவர் உள்பட— எத்தனைபேர் பேசியிருக்கிறார்களோ அவற்றையெல்லாம் கூட இங்கே நான் குறிப்பிட்டுக்கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவற்றையெல்லாம் நீங்கள் விசாரிப்பதாக இருந்தால் நானும் தயார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்று நடந்த விவாதத்தின் போது, அவை முன்னவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் இதைப் பற்றி முடிவு செய்ய அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழு தான் அதைப் பற்றி முடிவு செய்யமுடியும். அதைப்பற்றி தீர்ப்பு சொல்ல முடியாது. அது பற்றி எப்படி முடிவு செய்வது என்பது பின்னாலேதான் முடிவு எடுக்க வேண்டும். இந்தக் கருத்தை அவை முன்னவர் அவர்களும், துணைத்தலைவர் அவர்களும் தெரிவிக்கின்ற நேரத்தில் நான் என் அறையில் இருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். ஆகவே, அலுவல் ஆய்வுக் குழு கூட்டுவதைப் பற்றி விரைவில் ஏதாவது ஒரு முடிவு காண்பதற்கு நான் முயற்சிக்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: தலைவர் அவர்களே, நான் காயல் பட்டினம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கான பதில் வந்தபின்னர் தான் அதை எடுத்துக் கொள்ளமுடியும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: நாளைக்கு எடுத்துக்கொள்ளபபடுமா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு 'காரன்ட்டி' தர முடியாது. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்பெறும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, ஐ. ஜி. மோகன் தாஸ் அவர்கள்மீது நான் ஒரு உரிமைப் பிரச்சனை கொடுத்து நீண்ட நாள் ஆகிறது. நீங்கள் அதை எடுத்துக்கொள்ளும் அடையாளமே தெரியவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உரிமைப் பிரச்சனை கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு அவை முன்னவர் அவர்கள் மேலவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளிக்க வேண்டியிருப்பதால் அங்கே இருக்கிறார்கள். உரிமை பிரச்னைப் பற்றி விவாதிக்கும்போது அரசு தரப்பிலே அதற்கு பதில் சொல்ல வேண்டும். அதன் பிறகு நான் தீர்ப்பு சொல்ல வேண்டும். அதுதான் மரபு. ஆகவே, உங்கள் உரிமைப் பிரச் சனையை இன்னொரு நாள் எடுத்துக்கொள்கிறேன்.

பட்டம் பெற்றவர்களுக்கு ரூ.600 என்றும் நிர்ணயித்தது. இணை ஆராய்ச்சியாளர் பணியில் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் இரண்டாண்டுக் காலத்திற்கும், மற்ற முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் அல்லது வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்றவர்கள் மூன்றாண்டு காலத்திற்கும் அமர்த்தப்படுவார்கள். எல்லா இணை ஆராய்ச்சியாளர்களையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் உதவிப் பேராசிரியராக நியமிக்கவேண்டும் என்று பல்கலைக்கழக இணை ஆராய்ச்சியாளர் சங்கம் எழுப்பிய கோரிக்கையைப் பல்கலைக் கழகம் அரசின் ஆய்வுக்குச் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பாக அந்த ஆராய்ச்சியாளர்கள் சங்கம் மேற்கொண்ட போராட்டத்தை என்னுடைய வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் நிறுத்தி இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குத் துணைவேந்தர் அவர்களோடும் அந்தச் சங்கத்தினுடைய பிரதிநிதிகளோடும் வேளாண்மைத் துறைச் செயலாளரோடும் நானும் அமர்ந்து அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க இருக்கிறோம். அதற்குப் பிறகு நிதித்துறையுடன் பேசி அந்த ஆராய்ச்சியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மன நிறைவு அடையத்தக்க வகையில் முடிவு மேற்கொள்ள முடியும் என்று கருதுகிற இந்தச் சூழ்நிலையில் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து அது குறித்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைப் பேரவைத் தலைவராகிய தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 1. அறிக்கை அளித்தல்.

விதி 106-ன்கீழ் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-3-1983 ஆம் தேதி அன்று நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் பெரும்பான்மையான கட்சிகள் எடுத்துச் சொன்ன மேலான கருத்துக்களின் அடிப்படையில் ஏப்ரல் மாதத்திலிருந்து 4 மாத காலத்தில் நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை ஜூலை, ஆகஸ்ட் மாத வாக்கில் நடத்தலாம் என தெரிவிக்கிறேன். அதேநேரத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்களில் கடைபிடித்த ஒதுக்கீடுகளை, அதாவது ஆதி திராவிடர், மலைவாழ் மக்கள் மற்றும் பெண்களுக்கு உள்ள ஒதுக்கீடுகளை இந்தத் தேர்தல்களில் கொண்டுவர வேண்டும் என்று அரசு விரும்புகிறது. இதனை இங்குள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இதிலே இரண்டுபட்ட



கருத்துக்களுக்கு கலப்பாக இடம் இருக்க முடியாது எனவும் கருதுகிறேன். ஆகவே அரசியல் கட்சிகளின் சார்பில் வழக்கு மன்றங்களில் எந்தத் தடையும் பெறாது தேர்தல்களைச் சுமூகமாக நடைமுறைப்படுத்த எல்லா கட்சிகளும் ஒத்துழைப்பு தர வேண்டுகிறோம். நகராட்சி, மாநகராட்சி தேர்தல்கள் நடக்க வேண்டிய குறிப்பிட்ட தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 5. அறிவிப்புகள்.

(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1983.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலவைத் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

''தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1983) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரை ஏதும் இன்றி திருப்பி அனுப்பப்பெறுகிறது.''

## 6. கவன ஈர்ப்பு,

விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் தற்காலிக வேலை நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ப. வெங்கடசுப்பிரமணியம், இரா. தாமரைக்கனி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, மு. அப்பாதுரை, கே. ஆர். சுந்தரம், சு. பாலன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை திருவொற்றியூரிலுள்ள விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் தற்காலிக வேலை நிறுத்தம் (Lay-off) அறிவிக்கப்பெற்றுள்ளதால் தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை திருவொற்றியூரில் உள்ள விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 280 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

2. 'லே-ஆப்' குறித்து நிர்வாகம் கொடுத்துள்ள அறிவிப்பில், இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகள் மீது மத்திய அரசு விதித்துள்ள கணிசமான ஆயத்தீர்வை உயர்வினால் இயந்திரங்கள் மூலமும், இல்லாத முறையிலும் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகள் மீதான ஆயத்தீர்வை வேறுபாடு 1979-க்குப் பிறகு 0.30 பைசாவிலிருந்து ரூ. 2.70 ஆக 9 மடங்கு உயர்ந்துள்ளது என்றும், மூலப்பொருட்கள் மீதான வரி உயர்வு, விற்பனை முதலிய பற்பல சிக்கல்களால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் தொழிலாளர்களை 'லே-ஆப்' செய்ய வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். இவ்வறிவிப்பின்படி 7-3-83லிருந்து 370 தொழிலாளர்களை சுழல் முறையில் 'லே-ஆப்' செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாகமும் தொழிற் சங்கமும் கலந்து பேசி, தொழிலாளர்களை 'லே-ஆப்' செய்வதை ஒழுங்குபடுத்தி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி, 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டம் மற்றும் விதிகளின்படி தரப்பட வேண்டிய அறிவிப்பினை நிர்வாகம் கொடுத்துள்ளது. 'லே-ஆப்' குறித்து தொழிற்சங்கத்திடமிருந்து தொழிலாளர் நலத்துறைக்குப் புகார் எதுவும் கிடைக்கப்பெற வில்லை. அவ்விடத்தில் கிளர்ச்சி எதுவும் நடைபெறவும் இல்லை.

3. இதற்கிடையில், நிர்வாகம் மாநில அரசுக்கு ஒரு மனுவினைக் கொடுத்துள்ளது. அதில் கீழ்க்காணும் கோரிக்கைகள் அடங்கியுள்ளன :-

(1) தீப்பெட்டிகளுக்கான ஆயத்தீர்வை விகிதங்களை மாற்றி அமைத்தல் வேண்டும் ;

(2) காகித அட்டைப் பெட்டிகளுக்கான மைய அரசு உதவித் தொகையை குறைந்தது ரூ. 1.56-ஆக உயர்த்துதல் வேண்டும்.

(3) இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்படும் தீப் பெட்டிகள், இயந்திரமின்றித் தயாரிக்கப்படும் தீப்பெட்டி ஆகியவைகள் மீதான தமிழ்நாடு அரசு விற்பனை வரிவீதங்களில் வேறுபாட்டை நீக்க வேண்டும்.

நிர்வாகத்தின் முதல் இரண்டு கோரிக்கைகள் மைய அரசால் பரிசீலிக்கப்பட வேண்டியவை. இது குறித்து மைய அரசிற்கு மாநில அரசு பரிந்துரை ஏதேனும் செய்ய வேண்டுமா என்பதை இந்த அரசு பரிசீலிக்கும்.



4. மூன்றாவது கோரிக்கையைப் பொறுத்தவரையில், இயந்திரங்களின் உதவியுடன் தீப்பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக் காட்டிலும் அதிகத்தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் இயந்திரங்கள் உதவியின்றி இயங்கும் சிறு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வரிவீத வேறுபாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

5. முடிவாக, விம்கோவில் உற்பத்திச் செலவு உயர்வு, சரக்குகள் தேக்கம் எனக்கூறி, அங்கே இப்போது 'லே-ஆப்' செய்யப்பட்டுள்ளது. நிலைமையைத் தொழிலாளர் நலத்துறை கவனித்து வருகிறது.

(முற்பகல் 10-30)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒரு கிராமத் தொழிற்சாலையாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டதனால் இந்த தீப்பெட்டி தொழிற்சாலை உற்பத்தியைப் பெருக்கமுடியாத சூழ்நிலை காரணமாக பலர் வேலைவாய்ப்பு இழக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக அறிகிறேன். அதுபோன்ற சூழ்நிலை இருக்குமானால் அதை நீக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகம் எழுப்பியிருக்கக்கூடிய 3 பிரச்சினைகளில் இரண்டு மத்திய அரசு கவனிக்கவேண்டியது. 3-வது பிரச்சனை அதாவது, இந்த 3-வது கோரிக்கை பொறுத்த வரையில் இயந்திரங்களின் உதவியுடன் தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக்காட்டிலும் அதிக தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் முறையில் இயந்திரங்கள் உதவியின்றி இயங்கும் சிறு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு வரி வீதவேறுபாடு கொண்டுவரப்பட்டுள்ளது எனவே தொழிலாளர்நல இலாக்காவைப் பொறுத்தவரையில் இதிலே என்ன நடக்கிறது என்பதைக் கூர்மையாக கவனித்து வருகிறது.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 280 தொழிலாளர்கள் பணிபுரிவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பார்த்தால் ஒரு 6,7 மாதங்களுக்கு முன்னால் சுமார் ஆயிரத்து தொள்ளாயிரத்து சொச்சம் தொழிலாளர்கள் வேலைபார்த்து வந்திருக்கிறார்கள் படிப்படியாக பிரிவு பிரிவாக அவர்கள் கூடுதல் என்ற பெயராலே வேலையிலிருந்து நீக்கப்பட்டு இன்று சுமார் முந்நூற்று சொச்சம் தொழிலாளர்கள் வேலைப்பார்க்கிறார்கள். மீதி பேர்களுக்கு

பிடிப்பதிலே பெரிய தேக்கம் ஏற்படும். இதனால் விவசாயிகளுக்கும், புதிய ரக பயிர்கள் கிடைக்க முடியாமல் போகும், நாட்டின் பொருளாதாரத்திலும் நிலைமை மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எதிர்காலத்தில் நாட்டின் வேளாண்மையும் பாதிக்கப்படும் என்று சொல்லி, இவைகளைத் தவிர்க்கத்தான் அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை சொல்வார்கள் என்று எதிர்பார்த்து, இது பற்றிய இன்னும் பல்வேறு விஷயங்களை விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பல்கலைக் கழக விதை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 7 ஆம் தேதி முதற்கொண்டு, அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றுவதற்காக வேண்டி, போராட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கை எல்லாம் தங்களை துணை பேராசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்பதுதான். அப்படி துணை பேராசிரியர்களாக நியமிப்பதற்கு என்ன கல்வித் தகுதி தேவையோ, அதை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல் மியூச்சுவல் டிரான்ஸ்பரில் போடுகிறோம் என்று கூட பல்கலைக் கழக பதிவாளர் அவர்கள் கடந்த 8.1.83 ஆம் தேதி கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, கல்வித் தகுதியும் ஒன்றாக இருக்கிறது. பணி முறைகளும் ஒன்றாக இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் 80 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றவர்களைத்தான், இத்தகைய பணிகளுக்கு எடுத்துக் கொள்கிறோம். எவ்வளவோ முக்கிய அவசியப் பணிகளுக்கெல்லாம் 50 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றவர்களை எடுக்கும்போது, இந்த 80 சதவீத மதிப்பெண்கள் பெற்றவர்களை நியமிப்பதில் என்ன சங்கடங்களோ என்பது புரிந்துக் கொள்ள முடியவில்லை.

அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லி, ஒரு கமிட்டி கூட அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி கூட, இப்படியெல்லாம் செய்யலாம் என்கிற வகையில் பரிந்துரைகளை கொடுத்திருக்கிறது. அப்படி கொடுத்ததற்குப் பின்னாலும் கூட, இன்னமும் அவர்களுக்கு அந்தப் பதவி அளிக்கப்படாமலேயே இருக்கிறது. அவர்கள் செய்கிற பணிகளைப் பற்றி எல்லாம் கூட, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எச்.1 மக்காச்சோளம், எம். டி. யு. 10 பருத்தி ரகம், கோ—5 பாசிப்பயிறு, கோ—4 உளுந்து போன்ற பல்வேறு புதிய ரகங்களை அவர்கள் கண்டுபிடித்து நாட்டிற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.



அது மட்டுமல்லாமல், சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் அமைப்புகளைக் கண்டுபிடித்து அதனை அமைத்திருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளும், விஞ்ஞானக் கருவிகளும், தமிழ்நாட்டின் வேளாண்மைத் துறைக்கு மிகவும் அவசியமாகும். ஆனால் அப்படிப்பட்ட விஞ்ஞானிகளின் கோரிக்கைகள் கவனிக்கப்படாத காரணத்தால், அந்த இளம் விஞ்ஞானிகள் வங்கிகளில் வேலை தேடிச் செல்லக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களின் அடிப்படையிலே பார்த்தால், புதிய பயிர் ரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சித் துறையில் 117 பேர்கள் ஆராய்ச்சியாளர்கள் இருக்க வேண்டிய இடத்திலே 8 பேர்கள் தான் இருக்கிறார்கள். பயிர் நோய் தடுப்பு பிரிவிலே 40 பேர்கள் இருக்கவேண்டிய பகுதியிலே 2 பேர்கள் தான் வேலை செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சித் துறையின் ஆட்கள் குறைந்து கொண்டே போவது நம்முடைய வேளாண்மைத் துறையை அதிகமாகப் பாதிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தும்.

ஆகவே, வேளாண்மைத் துறையை இன்னும் நவீனப்படுத்தி முன்னேற்றம் அடையச் செய்வதற்கும், இப்படிப்பட்ட விஞ்ஞானிகளை ஊக்குவிப்பதற்கும், அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, ஆவன செய்ய வேண்டும் என்று அரசைச் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்படிப்பட்ட பதவி உயர்வுகள் அளிப்பதன் மூலமாகத் தமிழக அரசுக்கு அதிகச்செலவு ஏற்படுவதாகவும் தெரியவில்லை. மத்திய அரசு இதற்கென்று வேளாண்மை துறைக்குக்கொடுக்கின்ற மானியத்திலேயிருந்துதான் அந்தத் தொகை அவர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிற முறையிலே, தமிழகத்தினுடைய வேளாண்மைத் துறைக்கு மேலும் அபிவிருத்தி செய்கிற முறையிலே, அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்கிற முறையிலே, மேலும் விவாதிப்பதற்காக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் எல்லா இணை ஆராய்ச்சியாளர்களையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் ரூபாய் 700-40-1100 50-1600 என்ற சம்பள விகிதத்தில் உதவிப் பேராசிரியர்களாக நியமித்து அவர்களது பணிக்காலத்தை ஊதிய ஆதாயத்துடன் முறைப்படுத்தவேண்டும் என்பதே இணை ஆராய்ச்சியாளர் சங்கத்தின் கோரிக்கை. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1978 ஆம் ஆண்டிலும் 1979 ஆம் ஆண்டிலும் கல்வித் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த சம்பளத்தில் இணை ஆராய்ச்சியாளர் பதவிகளை ஏற்படுத்தியது. பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 800 என்றும், முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 700 என்றும் பொறியியல் பட்டம்பெற்றவர்களுக்கு ரூ600என்றும் பி.வி.எஸ்.ஸி

வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி திடீரென்று அவர்களுக்கு லே-ஆப் கொடுக்கப்பட்டது சரியான முறை தானா? அவர்களுக்கு முழு சம்பளம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் தொழிலாளர் நலத் துறைக்கு எதுவும் வரவில்லை. இந்தக் கேள்விக்குப் பதில் திரட்டி நாங்கள் தந்திருக்கிறோம். லே-ஆப் செய்யவேண்டியது 370 பேர் சுழல் முறையில் லே-ஆப் செய்வது என்ற ஏற்பாடு எல்லாம் அங்கேயுள்ள தொழிற்சங்கங்களுக்கும், தொழில் அதிபர்களுக்குள்ளாகவும் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு ஆகும். இத் துறைக்கு இதுவரையில் எந்தவிதமான முறையீடோ புகாரோ வரவில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விம்கோ தீப்பெட்டித்தொழிற்சாலையில் 780 தொழிலாளர்கள் வேலையில் இருப்பதாக இந்த விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அங்கே 370 தொழிலாளர்களுக்கு லே-ஆப் கொடுக்கப்பட்டுள்ளதாக எங்களுக்கு வந்த தகவலைப் பார்க்கிறோம். இந்த 370 தொழிலாளர்களுக்கு லே-ஆப் கொடுத்ததன் காரணமாக அந்த தொழிலாளர்களுடைய குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 370 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்பது அல்ல. 370 தொழிலாளர்களுக்கு சுழல் முறையில் லே-ஆப் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்த 370 பேர்களுக்கு எத்தனை நாளைக்கு அடுத்த 370 தொழிலாளர்களுக்கு எத்தனை நாளைக்கு லே-ஆப் என்று சுழல் முறையில் இண்டர்னல் அரேன்ஜ்மெண்டு முறையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள்ளாகவே செய்யப்பட்டிருக்கும் ஒரு ஏற்பாடு இது. இதை இந்தத் துறை கவனித்துக் கொண்டு வருகிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய, மாநில அரசுகளின் வரிவிதிப்புக் கொள்கையால்தான் இந்தத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்த விம்கோ தொழிற்சாலையைப் பொறுத்து வரையில் தீப்பெட்டித் தொழிலிலே மிகவும் டாமினேட் பண்ணக்கூடிய ஒரு பெரிய தொழிற்சாலையாகும். அதற்கு ஒரு நிரந்தர



மார்க்கெட் நம் நாட்டில் இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் இந்தச் சுழல் முறையில் லே-ஆப் அமுலில் இருந்தாலும் கூட அந்த தொழிலாளர்களுக்கு முழு சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை உண்டாக்கக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விம்கோவில் உற்பத்திச் செலவு உயர்வு, சரக்கு தேக்கம் என்ற இரண்டு காரணங்களைக்கூறி லே-ஆப் செய்திருக்கிறார்கள். அங்கேயே ஒரு ஏற்பாடாகி இப்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. ஏதாவது புகார் என்ற முறையிலோ அல்லது முறையீடு என்ற முறையிலோ அரசுக்கு வருமானால் பிறகு அரசு அதைப்பற்றி விசாரித்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. க. மாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலையிலே இன்றைய தினம் அரசு ஆயத்தீர்வை 9 மடங்கும் விற்பனைவரி அதிகமாகவும் போட்டிருப்பதன் காரணமாக வேலை இழப்பு ஏற்படுவதற்குத் தொழிலாளர்கள் பொறுப்பல்ல, ஆகவே தொழிலாளர்களுக்கு முழு ஊதியம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுமானால் அந்தத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா அல்லது மத்திய அரசுக்கு நம்முடைய அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் முன்பே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சொன்ன பதிலைப்போல அவர்களுக்குள்ளாகவே ஒரு ஏற்பாட்டைச் செய்து யார் யாருக்கு எப்போது லே-ஆப் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்கிறார்கள். நாங்கள் இந்த விஷயத்தைக் கவனித்துக்கொண்டு வருகிறோம். குறிப்பாக அரசுக்கு முறையீடு வருமானால் இருசாராரையும் அழைத்து அப்போது பேசப்படும்.

## 5. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (ஆ) 1983-84க்கான மானியக்கோரிக்கைகளை மொழிய ஆளுநரின் பரிந்துரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

In pursuance of Article 203 clause (3) of the constitution of India I, Sunder Lal Khurana, Governor of Tamil Nadu hereby give my recommandation to the moving in the Legislative Assembly, of the Demand for Grants for the year 1983-84.

(1983 மார்ச் 15

7. வரவு—செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு.
கோரிக்கை எண். 17—கல்வி

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,55,76,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு துவக்கப் பாடசாலைக் கட்டிடங்களைப் பழுதுபார்க்க போதிய நிதி ஊராட்சி ஒன்றியங்களில் இல்லையென பழுதுபார்க்கப் படாமல் இருந்துவரும் நிலையைப் போக்கவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,55,76,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் பிற இந்திய மொழிகளைக் கற்கவேண்டுமென்ற ஆர்வம் இருந்தும், கற்கும் வாய்ப்பைத் த அரசு இயலாத நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி பிறமொழிகளைக் கற்க வாய்ப்பளிக்க வேண்டியதைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,55,76,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியராக அறிவிக்கவேண்டிய தன் அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,55,76,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. செல்லப்பன் : தலைவர் அவர்களே, அனைத்துத் தனியார் கல்வி நிலையங்களையும் அரசுடைமை ஆக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,55,76,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



1983 மார்ச் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி என்ற விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் படித்ததாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கல்வித் துறையில் காணப்படுகிற குறைகளை எடுத்துச் சொல்வதோடு நின்றுவிடாமல் கல்வித்துறையை முன்னேற்றுவதற்கான சீரிய நல்ல யோசனைகளையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—40)

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற கல்வி, அறிவியல், தொழில் நுட்பவியல் ஆகியவைகள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து இந்த மானியக் கோரிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒருகாலத்தில் கல்வி தமிழகத்தில் ஓங்கியிருந்தாலும், பிற் காலத்தில் அப்படிப்பட்ட நிலையில்லாமல் கல்வி அறிவு குறைந்த ஒரு நிலை ஏற்பட்டது. மீண்டும் கல்வி அறிவை அனைவருக்கும் கொடுக்கவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு, எல்லோரும் கற்க வேண்டும், ஒன்றாகக் கற்க வேண்டும், அப்படி ஒன்றாக கற்பதும் நன்றாக கற்கவேண்டும் என்ற முழக்கம் தமிழ் நாட்டிலே எழுந்து ஆண்டுதோறும் கல்விப்பணி சிறப்பாக வளர்க்கப்பட்டு வந்தது. அதனுடைய தொடர்ச்சியாக இந்த ஆண்டும் இந்த அறிக்கையின் மீது நாம் விவாதத்தைத் தொடங்க இருக்கிறோம். பொதுவாக மிகவும் கீழ்ப்பட்ட, அதேநேரத்தில் வளர்ந்து வருகிற இந்தியா அல்லது தமிழகம் ஆகிய இந்தப் பகுதிகளில் கல்வி வளர்ச்சி மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நிச்சயமாக யாரும் மறுப்பதற்கில்லை. அப்படி தரப்படுகிற கல்வி, தொடக்கக் கல்வியிலிருந்து, பட்டப்படிப்பு வரையில் அறிவியலை அடிப்படையாகக் கொண்டு, பகுத்தறிவை வளர்க்கிற தன்மையிலே, அதன்மூலமாக தன்னம்பிக்கையை, நாட்டுப்பற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும் என்பதில்

* 235—312 ம் பக்கங்களில் இணைப்பு II—ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 மார்ச் 15

உயர்நிலைப் பள்ளிகளில் 'லேப்'—அறிவியல் விஞ்ஞானக் கூடங்களை மாணவர்களுடைய எண்ணிக்கைக்கேற்றவாறு நாம் இப்பொழுது அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். குறைந்த மாணவர்கள் படித்தால் இல்லையென்றும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் மாணவர்கள் உள்ள பள்ளிக்கூடத்திற்குத்தான் 'லேப்' வசதி உண்டு என்றும் சொல்கிறோம். அந்தத் தத்துவத்தை, கொள்கையை மாற்றி, எல்லாப் பள்ளிக்கூடங்களுக்குமே 'லேப்' இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொடைக்கானலிலே மகளிர் பல்கலைக் கழகம், அதைப்போல காரைக்குடி பல்கலைக் கழகம் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் போன ஆண்டு, அதற்கு முந்திய ஆண்டெல்லாம் பேசப்பட்டது. இந்த ஆண்டு நிபுணர் குழுவினுடைய அறிக்கை வந்திருக்கிறது, எதிர்காலத்திலே நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலம் என்பது நீடித்துக் கொண்டு போகாமல், அடுத்த ஆண்டே இரண்டு பல்கலைக் கழகங்களையும் துவக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்னை—மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது—மாலை நேர சட்டக் கல்லூரியைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி துவங்கியது. என்ன காரணத்தாலோ, நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது நீக்கப்பட்டிருக்கிறது. அது இருப்பதில் என்ன குறை என்று எனக்குத் தெரியவில்லை. வேலை பார்த்துக் கொண்டே, தாங்கள் விரும்பும் படிப்பை, குறிப்பாக, சட்டப் படிப்பைப் பலர் பெறுவதற்கான வாய்ப்பு அதிலே இருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் வழக்குரைஞர்களாகப் பட்டம் பெற்றார்கள். போன ஆண்டு கூட விவாதத்திலே பேசும்பொழுது, இந்திய பார் கவுன்சிலைக் கேட்டிருக்கிறோம், அனுமதி தரவேண்டும், எதிர்பார்க்கிறோம், துவக்கப்படலாம், என்ற அளவுக்கு நீங்கள் பேசியிருக்கிறீர்கள். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், அந்த வழக்குரைஞர்கள் சங்கத்தை, அல்லது மன்றத்தைக் கேட்காமலே கூட பிற மாநிலங்களிலே மாலை நேரக் கல்லூரிகள் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது நாமும் துவங்கலாம் என்ற அளவுக்குக் கூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இந்த ஆண்டு அதைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை. மாலைநேரக் கல்லூரி வராது என்று நாங்கள் கருத வேண்டிய அளவுக்கு இந்த அறிக்கையிலே அதுபற்றி எதுவும் குறிப்பிடப்படாமல் இருக்கிறது. இதிலே என்ன சங்கடம் இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புவதால், அதுபற்றி விளக்கமாகக் கூற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 15] [திரு. ஜே. எஸ். இராசு]

பொதுவாகவே, அரசியல் உணர்வும், சமுதாய விழிப்புணர்ச்சியும், சுதந்திர உணர்வும் பெறுவதற்குச் சட்டப் படிப்பு வழி வகுக்கும். அதை யார் வேண்டுமானாலும் படிக்கலாம். படித்தவர்கள் அரசாங்கத்திடம் வேலை கேட்கப் போவதில்லை. அப்படியே வேலை கொடுத்தாலுங்கூட மிகப்பெரிய, உச்ச நீதி மன்றத்திற்குக் கூட அவர்கள் தலைமை நீதிபதியாக வரலாம். அப்படிப்பட்ட வாய்ப்பு கான்ஸ்டிடியூஷனிலே தரப்பட்டிருக்கிறது. தரப்பட்டிருக்கிறது என்றால், கல்வி முறையாக எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும்; எல்லோருக்கும் எல்லா கல்வியும் வழங்கப்பட வேண்டுமென்ற அரசியல் சட்டத்திற்கு எதிராக இது இருக்கிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். மாலை நேரக் கல்லூரிகளைத் துவக்குவதற்கு நீங்கள் முற்பட வேண்டும். மாலை நேரக் கல்லூரியை ஒரு பக்கம் ஒழித்துவிட்டு, சட்டக் கல்லூரி படிப்பை 5 ஆண்டுகளாக உயர்த்தியிருக்கிறீர்கள். அப்படி 5 ஆண்டுகளாக உயர்த்துவதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கூட பழைய முறையிலே 2 ஆண்டு பி. எல். படித்திருப்பார். அல்லது, 3 ஆண்டு வழக்குரைஞராகப் படித்து பட்டம் பெற்றிருப்பார். அதிலே என்ன குறை என்று தெரியவில்லை. மாலை நேரக் கல்லூரிகளை நீங்கள் ஒழித்துவிட்டு, புதிதாக 5 ஆண்டுகளுக்குச் சட்டக் கல்வி படிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறீர்கள்.

1956-ஆம் ஆண்டு சட்டக்கல்லூரிப் படிப்பை 6 ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற ஒரு பிரச்னை எழுந்தபொழுது, மிகச் சிறந்த கல்வியாளரும், சட்ட நிபுணருமான டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார்.

No educationalist would be justified, in my opinion, in devising a scheme of education in such a manner as to impose upon the parents the burden of maintaing their children for six years assuming that there are no failures.

(முற்பகல் 10–50)

ஆறாண்டுக் காலம் சட்டப் படிப்பை உருவாக்குவதற்கு அம்பேத்கார் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்து, ஆறாண்டுக் காலம் மாணவர் ஃபெயில் ஆகாமல் இருக்க வேண்டுமென்றால், ஆறாண்டுக் காலமும் ஒரு ஏழைக் குடிமகன் தன்னுடைய பையனை எப்படிப் படிக்க வைக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மற்ற உறுப்பினர்களும் இதே கருத்தைப் பேச முற்பட்டு விடுவார்கள் என்பதால் ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஐந்தாண்டுக் காலம் என்றா

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 மார்ச் 15

இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் யாருக்கும் இருப்பதற்கில்லை. அப்படிப்பட்ட கல்வி மாணவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டு மென்று இங்கர்சால் போன்ற அறிஞர்களும், பெரியார் போன்ற பகுத்தறிவாளர்களும், அண்ணா போன்ற மேதைகளும் பல நேரங்களில் குறிப்பிட்டிருப்பதை மன்றத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன். அத்தகைய சிறப்பு வாய்ந்த கல்விக்காக இந்த ஆண்டு தமிழக அரசு ஒதுக்கியிருக்கிற தொகை கடந்த ஆண்டு களை விட மிகக் குறைவாக இருக்கிறது என்பதை வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1980-81—ல் 23 விழுக் காடாக இருந்து, 1981-82-ல் 22 விழுக்காடாகச் சற்றுக் குறைந்து, 1982-83-ல் 23.3 விழுக்காடாய் சற்று உயர்ந்து இந்த 1983-84 இல் 21.5 விழுக்காடாகக் குறைந்திருப்பதற்கு நான் உள்ளபடியே மிக வருத்தப்படுகிறேன். கடந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற நிதியை விட 1.8 விழுக்காடு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த ஆண்டு வருவாய்க் கணக்கிலே ஒதுக்கப்பட்டிருக்கிற 356 கோடி ரூபாய் நிதியிலே சத்துணவுத் திட்டத்திலே அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறவர்களுக்குச் சம்பளமாக கொடுக்க வேண்டி யிருப்பது 24 கோடி ரூபாய். ஆகவே ஒதுக்கப்பட்டிருக்கிற 356 கோடியில் 332 கோடி தான் நேரடியாக கல்விக்காகச் சென்று சேர்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அவசியப்பட்டால் மேலும் பல கோடி ரூபாய்களை இந்தக் கல்வித்துறைக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பெறவிருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொண்டாலும், அந்த மாணவர்களுக்குச் சொல்லித் தருவதற்கு, அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர்களின் எண்ணிக்கையை அவ்வப்போது உயர்த்தவேண்டுமென்ற அக்கறையுடன் செயல்பட வேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது 1,730 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்கள் என்ற கருத்தினை கல்வி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள், உடற்பயிற்சிக் கல்வியில் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றபோது, சத்துணவுத் திட்டத்தினால் மிக அதிகமான அளவிற்கு மாணவர்கள் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள் என்று பெருமை பேசுகின்றபோது, குறைந்தபட்சம் இடைநிலை ஆசிரியர்களையாவது அதிகமாக நியமிப்பதற்கான முயற்சி இருக்கவேண்டும். அந்த முயற்சியிலே பயங்கரமாக பின்னடைந்து 1,730 ஆசிரியர்கள்தான் அனைத்து துறைகளிலும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி உள்ளபடியே கல்வியை வளர்க்காது, தரமான கல்வியைத்தரமுடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இண்டிவிஜுவல் அட்டென்ஷன் என்று சொல்லப் படுகிற, மாணவர்கள் மீது ஆசிரியர்கள் தனியான கவனம் செலுத்துகிற அளவிற்கு இன்றைக்கு ஆசிரியர்கள் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. கல்வி தரமாக அளிக்கவேண்டு



1983 மார்ச் 15] [திரு. ஜே. எஸ். இராசு]

மென்றால், மாணவர்களுக்கு நியாயமான கல்வி தரப்பட வேண்டுமென்றால் குறைந்தது ஆண்டிற்காண்டு ஐந்தாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயம். தன்னிறைவு திட்டத்தின் மூலமாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே நிறைய துணைக் கட்டிடங்கள் கட்டி இருக்கிறோம் என்று அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. அது உண்மை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விழைகிறேன்; இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்தோ அல்லது அவர்கள் விரும்புகிற நாட்களிலோ தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கட்டப்பட்ட பள்ளிக் கூடங்களைத் தயவுசெய்து போய்ப் பார்வையிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டிடங்கள் எண்ணிக்கையிலே அதிகமாக இருக்கின்றன; நான் மறுக்கவில்லை. ஆனால் கட்டிடங்களுடைய தரம், அதாவது அதனுடைய 'குவாலிட்டி'— திடமாக இருக்கிறதா, உறுதியான கட்டிடமாக இருக்கிறதா என்பதையெல்லாம் பரிசீலித்துப் பார்த்தால், பெரும்பாலான கட்டிடங்கள் நல்ல முறையிலே கட்டப்பட வில்லை. சிமெண்ட் போதுமான அளவுக்குக் கலக்கப்படவில்லை யென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சான்று வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலே இருக்கிற பாளையத்திற்கு வாருங்கள். பொம்மலாப்பாடிக்கு வாருங்கள். கட்டி ஓர் ஆண்டுக் கூட ஆகவில்லை. ஆனால், இடிகிற நிலைமையில் இருக்கிறது. அதே நேரத்தில், தரை யெல்லாம் மண்ணாகிப் பாழாகிக் கொண்டிருக்கிற நிலைமையில் இருப்பதை நான் நேரடியாக அமைச்சருக்குக் காண்பிக்க முடியும். ஆகவே, செலவழிக்கிறீர்கள் கோடிக்கணக்காக. ஆனால், செல வழிப்பதற்கேற்றவாறு தரமான கட்டிடங்கள் உருவாக்கப்படு கின்றதா என்றால் நிச்சயமாக இல்லை. எதிர்காலத்திலாவது அத்தகைய குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தது, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பராமரிப்பிலே இருந்த பள்ளிகளையெல்லாம் அரசுப் பள்ளிகளாக மாற்றியிருக் கிறோம். அதைப் போல, மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வருகிற, 1983—84 ஆம் ஆண்டில் 30 உயர்நிலைப் பள்ளிகளைத்தான் புதிதாகத் துவக்குவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைய தேவைக்கு அது நிச்சய மாகக் குறைவான எண்ணிக்கை. மேலும் அதிகமான உயர் நிலைப் பள்ளிகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மூன்றாண்டுக் காலம் இருக்கின்ற ஒரு கல்வியை ஐந்தாண்டுகளாக நாம் ஆக்குவதைப் போல இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அது சரி அல்ல. ஐந்தாண்டுக் கல்வி என்றால் இப்பொழுதும் ஐந்தாண்டுகள்தான் படிக்கிறார்கள். இப்பொழுது மூன்றாண்டு என்று பட்டப் படிப்பிலே படித்துவிட்டு, பிறகு இரண்டாண்டுக் காலம் சட்டக் கல்லூரியில் படிக்கிறார்கள். 3 பிளஸ் 2 ஆக மொத்தம் ஐந்தாண்டுகள் படிக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பி.ஜி.எல்.க்குத்தான் இரண்டு ஆண்டுகள்; பி.எல்.-க்கு மூன்றாண்டுகள் படிக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆறாண்டுகள் என்று இருக்கும்பொழுது, இப்பொழுது நாம் ஐந்தாண்டுகள் என்று ஆக்கும் பொழுது ஓராண்டு குறைகிறது. 12 ஆண்டுகள் படித்தவர்கள் ஐந்தாண்டுகள் படிக்க வேண்டும் என்று சொல்கிறோமே தவிர, பட்டம் படித்தவர்கள் பல்வேறு துறைகளுக்குச் சென்று வேலை கிடைக்காமல், வாய்ப்பு கிடைக்காமல் அவர்கள் சட்டப் படிப்பு படிப்பதால் நல்லபடியாக இல்லை என்று கருதி, இன்ஜினியரிங் கல்லூரியைப் போல, மருத்துவக் கல்லூரியைப் போல, அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டியைப் போல சட்டக் கல்வியையும் கீழ்நிலையிலேயிருந்தே தர வேண்டும்; வேறு பாடங்களைப் படித்து அவர்களின் நேரத்தை அவர்கள் வீண் செய்யக் கூடாது என்பதால்தான் இந்த நிலைமைகள் வந்திருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் தமிழக அரசுதான் இதைக் கொண்டு வந்தது என்பது கூட அல்ல. அகில இந்திய அடிப்படையில் ஆராய்ந்து பார்த்து, வழக்குரைஞர்கள் சங்கமே யோசனை சொல்லி கொண்டு வந்திருப்பதுதான் இது. மதிப்பிற்குரிய அம்பேத்கார் அவர்கள் எந்த அடிப்படையில் சொன்னார்கள் என்பது என் முன்னால் இல்லாத காரணத்தால் அதைப்பற்றி நான் ஒன்றும் கூறவில்லை.

**திரு. ஜெ. எஸ். இராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஐந்தாண்டுச் சட்டக் கல்லூரி படிப்பு என்பது இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை. இதை வழக்குரைஞர் மன்றம் பரிந்துரைத்தது என்ற வாதத்தை அமைச்சரவர்கள் வைக்கிறார்கள். வழக்குரைஞர் மன்றம் என்பது ஒரு பிரஃபஷனல் பாடி, ஐந்தாண்டுச் சட்டக் கல்லூரி படிப்பு இருக்க வேண்டுமென்று யூனிவர்சிட்டி கருத்துரை வழங்கலாம்: கல்வியாளர்கள் கருத்துரை வழங்கலாம்; அரசாங்கம் வேண்டுமானால் அதன்மீது முடிவெடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபற்றித் தெரிந்த காரணத்தினால் சொல்ல விரும்புகிறேன். போர்டு ஆஃப் ஸ்டடீஸிலே சேர்மன் பார் கவுன்சில் எல்லா யூனிவர்சிட்டிகளிலேயும் இருக்கிறார்.



**திரு. ஜே. எஸ். இராசு:** தலைவர் அவர்களே, நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் நான் இதில் அதிகமாக மேற்கொண்டு சொல்லவில்லை.

அரசியல் சட்டத்திற்கு எதிராகக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், சட்டப் படிப்பின் பாடத்திட்டத்தை உருவாக்குவதற்குப் பல்கலைக் கழகம் இருக்கிறது; கல்வியாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்ற நீதிபதிகளாலே சிலபஸ் போடுகின்ற காரியங்கள் நடக்கின்றன என்றால், It is against constitu ion என்னென்ன பாடங்களைச் சொல்லித் தர வேண்டும் என்று நிர்ணயிக்கின்ற உரிமை நீதிபதிகளுக்கு இல்லை. ஆனால் 27–11–82 ஆம் நாளன்று ஐந்து நீதிபதிகள் திருச்சிக்குச் சென்று இந்தப் பாடத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறார்கள் என்றால் இதில் செப்பரேஷன் ஆப் பவர்ஸ் என்ற கருத்துக்கூட அடிபட்டுப் போகிறது. இதில் நீண்ட விவாதங்களுக்கு நான் போக விரும்பவில்லை. ஐந்தாண்டுப் பட்டப் படிப்பு என்பது தேவையில்லாதது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்,

அடுத்து, சட்டக் கல்லூரி நிர்வாகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். குறிப்பாக, சட்டக் கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலுகின்ற மாணவர்களுக்கு 1982–83 ஆம் ஆண்டுக்கான ஸ்காலர்ஷிப் சேங்க்ஷன் ஆகி, கிட்டத்தட்ட 1,71,250 ரூபாய் கடந்த ஆண்டு இறுதி வரையில் மாணவர்களுக்குத் தரப்படவில்லை. ஏனென்று கேட்டால் 90 பர்செண்ட் அட்டென்டென்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். முழு ஆண்டு முடிவடைவதற்குள் 90 பர்செண்ட் அட்டென்டென்ஸ் எப்படிக் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்லாமல், விடுதி மூடப்பட்டு இருப்பதால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தொடர்ந்து கல்லூரியிலே சிரமங்கள் இருக்கின்றன. எனவே, சீக்கிரமாக ஸ்காலர்ஷிப் தந்து, மாணவர்கள் படிப்பதற்கான ஊக்கத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாலிடெக்னிக்குகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 60 பாலிடெக்னிக்குகள் தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளில் போதுமான அளவிற்கு ஆசிரியர்கள் இல்லை. 100 ஆசிரியர்கள் தேவை என்றால் 50 ஆசிரியர்களுக்குக் கீழே, அதற்கும் குறைவாகக் கூட, 50 பர்சென்ட்டுக்குக் குறைவாகத்தான் பாலிடெக்னிக்குகளில் இருக்கிறார்கள். ஆனால் பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்கள் இல்லாவிட்டால், ஐ.ஐ.டி., பாலிடெக்னிக், கல்லூரி எதுவாக இருக்கட்டும், எப்படி ஒரு தரமான கல்வியை மாணவர்களுக்குத் தரமுடியும்? 20 ஸ்டுடன்ஸ் 15 ஸ்டூடன்ஸ் ஐ ஒரு ஆசிரியர் 'லாப்'க்கு அழைத்துக்கொண்டு

அடித்துச் செல்லாது, நெருப்பிலே வேகாது, திருடினாலும் களவு போகாமல், கொடுத்தாலும் குறையாமல் இருக்கக்கூடிய, தொட்டணைத்தூறும் மணற்கேணி என்று சொல்வார்கள். அதிலே கூட பருவக் காலங்கள் தவறினால் மண்ணிலே தோண்டும்போது தண்ணீர் இல்லாமல் போய்விடக்கூடும். ஆனால் கற்றறிந்த அறிவு இருந்தால் எந்தக் காலத்திலேயும், எந்த வகையிலேயும், குறையாத அளவிற்கு இருக்கின்ற ஒரு மாணிக்கக் கோபிக்கையில் கலந்து கொள்கிறபோது உண்மையிலே நான் பெருமைப்படுகிறேன்.

இன்றையதினம் பள்ளி சாராக் கல்வி என்ற வகையிலே தமிழ்நாடு யுனெஸ்கோ விருது பெற்றிருக்கிறது. 1982 ஆம் ஆண்டு வயது வந்தோர் மற்றும் பள்ளி சாராத் துறைக்கு இது கிடைத்துள்ளது. தமிழகத்திலே மொத்தம் 1038 மையங்கள் இருக்கின்றன. இன்னும் 100 மையங்களை இந்த ஆண்டிலே துவக்குவதாக இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் கல்வி அறிவைவிட இந்த நாட்டிலே கேள்வி அறிவு மிக அதிகம் என்பதை எண்ணிப் பார்த்து, ஒலி, ஒளி சாதனங்களுடன் இருக்கக்கூடிய வலம் வரும் திரைப்படங்கள் உந்து வண்டியைத் தந்திருக்கிறார்கள். இது இந்தக் கல்வித்துறையினை மேலும் வளர்ப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். இதை மதுரை மாவட்டம் என்று இல்லாமல் கூடுமான வரையிலே எல்லா மாவட்டங்களுக்கும் விரைவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நாம் நூலகங்கள் என்று சொன்னால், மிகப் பெரும்பான்மையான 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ள புத்தகங்கள் எல்லாம் இங்கேயிருக்கின்றன. மாவட்ட அளவிலே இருக்கின்ற மையங்களுக்கு அவைகள் போய்ச் சேருகின்றனவா என்று பார்க்க வேண்டும். மாவட்ட மைய அளவிலே இருக்கின்ற நூலகங்களுக்கு இன்றைய தினம் அகில உலகில் பெயர் பெற்ற சஞ்சிகைகள் எல்லாம் மாவட்ட மையங்களுக்குச் செல்லக்கூடிய அளவிற்கு ஒரு நிலையை நாம் உருவாக்கினால் பரவலாக நாடு முழுவதும் இந்தக் கல்வி அறிவை, விஞ்ஞான அறிவை, புவி இயல் அறிவை, பெறக்கூடிய அளவிற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும். அந்த அளவிற்கு அது விரிவுபடுத்தப்பட வேண்டும். விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் லெண்டிங் லைப்ரரி. இது தீவிரப் படுத்தப்பட வேண்டும், இதே பள்ளிச் சாராக் கல்வி, முதியோர் க. வி என்ற பிரச்சனைக்குக்கூட இது வெகுவாக ஒத்துழைப்புத் தரும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். அந்த அடிப்படையிலே இவைகள் எல்லாம் வாய்ப்பு தரும், வீடு சென்று கல்வியைக் கற்கக்கூடிய வகையில், அறிவைப் பெறக்கூடிய



வகையில், இல்லாமையைப் போக்கக்கூடிய வகையில், பகுத்தறிவை வளர்க்கக்கூடிய வகையில் இது அமையும் என்று நம்புகிறேன். அந்த அடிப்படையில் துரித நடவடிக்கை மேற் கொள்வது நல்லது என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக விளையாட்டு. விளையாட்டு என்று சொன்னால் பள்ளிகளிலே கல்லூரிகளிலே இவைகளை எல்லாம் நாம் வைத்திருக்கிறோம். தேவையான உபகரணங்களை நாம் ஓரளவிற்கு இப்போது கொடுத்திருக்கிறோம். இந்திய துணைக் கண்டத்திலே, தமிழகத்திலே உள்ள வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அரசுதான் இதற்காக தனியாக ஒரு இயக்குநரகத்தை ஏற்பாடு செய்து, இப்போது வெகு வேகமாக அதற்கு வேண்டிய வசதிகளை உருவாக்கித் தந்திருக்கிறது. மனம் கெட்டால் உடல் கெடுகிறது. உடல் கெட்டால் மனம் கெடுகிறது. இதுதான் தத்துவம். ஒரு மனிதனுடைய உடல் அமைப்பை வைத்து, சாமுத்திரிகா லட்சணத்தை வைத்து, அவனைப் பற்றித் தெளிவாகச் சொல்லிவிட முடிகிறது. ஜப்பானியரைப் பார்த்தால், அவன் உழைப்பைப் பற்றி, திறமையைப் பற்றி, மூளையைப் பற்றி, பலத்தைப் பற்றி எடை போடுகிறார்கள். ஒரு மனிதனுடைய உருவமே அவனுடைய அறிவுக்குச் சான்று என்று சொல்லத் தக்க வகையிலே இருக்கின்ற காரணத்தால் விளையாட்டு மிகத் தேவையாக இருக்கிறது. விளையாட்டு என்று சொன்னால், இன்றைய தினம் நாட்டிலே ஏதோ பட்டப்படிப்பு படித்தவர்கள் மட்டுமே வாழ முடியும் என்று நிலை இல்லாமல், ஆடத் தெரிந்தால் ஆடிச் சம்பாதிக்கலாம், பாடத் தெரிந்தால் பாடிச் சம்பாதிக்கலாம், பேசத் தெரிந்தால் பேசிச் சம்பாதிக்கலாம். எழுதத் தெரிந்தால், எழுதிச் சம்பாதிக்கலாம், இப்படி விளையாடத் தெரிந்தால் விளையாடியும் சம்பாதிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக, எத்தனையோ பேர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். மிக அருமையாக விளையாடுபவர்களுக்கு நாம் லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் வாழ்வதற்கு வீட்டு வசதி இன்னும் பலவிதமான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்த விளையாட்டு என்பது மிகமிக முக்கியமான துறையாக, தேவையான துறையாக இருக்கிறது. இன்றைய தினம் ஆசியா விளையாட்டுப் போட்டி நடந்தது என்று சொன்னால், அந்த விளையாட்டுப் போட்டிகளிலே பங்கு பெற்று விளையாடியவர்களைப் பார்த்து நாம் மெய் மறந்து போயிருக்கிறோம். அந்தச் சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டும் கூட, இந்தியத் துணைக் கண்டத்திலே பல்கலைக் கழகத்தினுடைய, யுனிவர்சிட்டியிலே படிக்கின்ற மாணவர்கள் அதிலே கலந்து கொண்டார்களா என்று பார்த்தால், அங்கே தான் கொஞ்சம் வேதனை.

இந்தியத், துணைக் கண்டத்திலேயே, தமிழ் நாட்டிலே மட்டும்தான் என்று சொல்லவில்லை, பயிற்சி பெற்றவர்கள், பலன் பெற்றவர்கள் என்ற வகையிலே முன்னணியில் இருக்கக் கூடியவர்கள் கலந்து கொண்டு வெற்றிபெற முடியவில்லை,

Government of Tamil Nadu, Department of Backward Classes,

Ten candidates belonging to Backward Classes of Tamil Nadu with Parent Annual income of not exceeding *Rs.* 12,000/- *(Rupees* twelve thousand only) who come out successful in the Union Public Service Commission, Civil Services Main Examination, 1982, are to be selected and sent for Special Coaching Viva Voce in Dr. Rau's I.A.S., study circle in New Delhi' for 10 days from 23,3.83 to 1.4.83. The entire expenditure towards tuition fees, boarding and lodging charges, to and fro charges from Madras to New Delhi, all incidental and out of pocket expenses will be met by the Government. The candidates will also be accommodated in the "Tamil Nadu House". New Delhi. என்ற இந்தக் கருத்து மிக மிக பாராட்டுதலுக்குரியது; வரவேற்கத்தக்கது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள் முன்னுக்கு வரமுடியாமல் தவித்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு முன்னுக்கு வரக்கூடிய அளவுக்கும் அவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே முதல் நிலை அதிகாரிகளாக வரக்கூடிய வகையிலும் இது அமைந்திருக்கிறது. கப்பலுக்கு வழிகாட்டியாக விளங்குகின்ற கலங்கரை விளக்காக இருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து ஒரு பிரச்சனை. இங்கே சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்தியாவிலேயே ஒரு மாநிலம் ஒரு சட்டத்தைப் போட்டு, ஒரே நாளில் ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்த திட்டம் இந்த சத்துணவுத் திட்டம். அதிலும் குறிப்பாக பெண்கள், பெண்கள் என்றாலும் விதவைகள், ஏழைகள், கைவிடப்பட்டவர்கள் வேலை வாய்ப்பு பெற்றார்கள். "ஓடினாள், ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்". அந்த ஓட்டத்தை நிறுத்தினார்களா? வாட்டத்தைப் போக்கினார்களா சட்டத்தை நீட்டுவோர்; என்று சொன்னவர்களே தீர்க்காத பிரச்சனையை அந்த ஓட்டத்தைத் தடுத்து, அவர்கள் வாட்டத்தைப் போக்குவதுதான் இந்த சத்துணவுத் திட்டம்.

அதே நேரத்தில் இந்த சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பலர் பலவிதமாகச் சொன்னார்கள். அதைப்பற்றி 9-ந்தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அதிலே பார்த்தால் அது எப்படி இருக்கிறது என்று மிகத் தெளிவாகத் தெரியும்.

Call it a timely political stunt. Call it pulling wool over the electrorate's eyes. Call it a jumbo spending spree. Call it what you may, the noon meal scheme is nevertheless a boon to the down trodden, a fulfilment of long felt needs.

Retractors notwithstanding, the scheme is laudatory from all angles, Many diehard critics have pointed to the huge recurring burden on the exchequer. Let's not be unreasonadle. Is it not the bounden



duty of a government to provide for its people. Is it not the very tenet of a welfare State? At a time when 1600 crores are spent on spots promotion, 100 crores is a pittance for a good cause.

Then there are those who say that the children's education suffers as a result of teachers overseeing the implementation of the scheme. Nothing could be more absurd than the allegation. To them my salve is: Is education possible where hunger exists?

A visit to any noon meal centre would convince even the worst detractors of its merits. The toothpaste grins, with content write large on them, speak volumes by themselves. Bundles of boundless energy, the kids make the place seem akin to an amusement park."

இப்படி இதைப்பற்றி மிகத் தெளிவாக யார் எதைப்பற்றி எப்படிச் சொன்னாலும் சரி, சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பலர் பலவிதமாகப் பேசினாலும் சரி, இந்தத் திட்டம் இன்றைக்கு எப்படிப்பட்ட நிகழ்ச்சியாக இருக்கிறது, எப்படிப்பட்ட கருத்தாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

சந்தர்ப்பவசமாகச் செயல்படும் சூசக அரசியல் யுக்தி என்றாலும் சரி, வாக்காளர் கண்களை மூடிமறைக்க ஆடும் சாகச நாடகம் என்றாலும் சரி, வேறு வகையில் அவரவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்பச் சொன்னாலும் சரி, சமுதாயத்தில் நீண்டநாளாக நிறைவேற்றி வைக்கப்படாத, குறிப்பாக நலிவடைந்த பிரிவினரின் அடிப்படைத் தேவைகளை இந்தத் திட்டம் பூர்த்தி செய்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இத்திட்டத்தின் மைய நோக்கியை பயன்பாட்டை உணராத சிலர் இதை பல கோணங்களில் விமர்சிக்கின்றனர். இத்திட்டத்திற்கு ஆகக்கூடிய செலவு மென்மேலும் அதிகப்படுமே தவிர அதனால் எதிர்பார்க்கும் நன்மை கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியது என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. மனச்சாட்சிப்படி பேசினாலும்கூட, நாட்டு மக்களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பதை ஒரு அரசாங்கத்தின் அனாவசியமான தேவையற்ற வேலை எனச் சொல்லிட முடியுமா? வளரும் நாட்டிற்கு அவை அவசியமானது அல்ல என ஒதுக்கித் தள்ளிட முடியுமா'

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக சாதாரணமாக 1600 கோடி ரூபாய் செலவிட முன்வரும்போது 100 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக செலவிடப்படுகிறது என்றால், இதைக் குறைகூறுவது எப்படி நியாயமாகும்? கல்வி கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களே, இத்திட்டத்தினை செயலாக்

இந்தியத் துணைக் கண்டத்திலே சிலர் கலந்து கொண்டார்கள் என்று சொன்னால், தனியார், அல்லது வேறு ஏதோ கம்பெனி யில் இருக்கக்கூடியவர்கள், பதவியில் இருக்கக்கூடியவர்கள், உத்யோகத்தில் இருக்கக்கூடியவர்கள் இன்னும் சொல்லப் போனால் சிலர் பயிற்சி தரக்கூடியவர்கள் என்ற வகையிலே தான் இருந்ததே தவிர மாணவர்கள் பங்கு ஏற்று பலன் பெற்றார்கள் என்ற நிலை இல்லை என்பதை உணர்ந்து விளை யாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக வெகுவாகப் பணத்தை ஒதுக்கியிருக்கும் இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அந்த வகையிலே அடுத்து வருகின்ற ஆண்டுகளில் இதை மேலும் விஸ்தரிக்கும் வகையில் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 250 பேர்களுக்கு ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் என்ற முறையிலும், கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 250 பேர்களுக்கு ஒரு இயக்குநர் என்ற முறையிலும் கொண்டு வரவேண்டும். கொள்கை அளவிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று, நடைமுறையில் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளஸ் 2 படித்த பிறகு பி·இட், நேரடியாகச் சேர்ந்து 4 ஆண்டுகள் படிக்கவேண்டும் என்று கொண்டு வந்தால் வேகமான முறையில் நல்ல ஆசிரியர்களை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அதற்கு இந்தத் திட்டம் உறுதுணை யாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்திய நாட்டிற்குத் தனிச் சிறப்பை வாங்கிக்கொடுத்து இருக்கிற மிகபெரிய விளையாட்டு கோகோ விளையாட்டாகும். அதற்கும், கபடி ஆகிய இரண்டு விளையாட்டுகளுக்கும் நல்ல வகையில் ஆதரவு தரவேண்டும். இது ஒரு செலவு இல்லாத விளையாட்டு. கையையும், காலையும் வைத்துக் கொண்டு கலை பயில்கிற விளையாட்டு இது. உடலைக் கச்சிதமாக வைத்துக் கொள்ள உதவுகிற விளையாட்டு இது. இவைகளுக்கு ஊக்கம் தரக்கூடிய விதத்தில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன்மையாக வருகின்ற வகையில் இதற்கு ஊக்கமும், உதவியும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மாநிலத்திற்கு ஒரு கோச் இருக்கிறார். அதை மாவட்டம் தோறும் என்று போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வகையில் அதை விரிவுபடுத்துவதன் மூலம் மேலும் சிறப்பான முறையில் விளையாட்டுத்துறை வேகமாக வளரும் என்று நம்புகிறேன்.

நீச்சல் குளத்தைப் பொறுத்தவரையில், ஒரு நீச்சல் குளத்திற்கு இரண்டு லட்ச ரூபாய் என்ற அடிப்படையில் பல மாவட்டங்களில் நீச்சல் குளம் கட்ட பணம் ஒதுக்கப்பட்டு இருக் கிறது. ஆனால் எந்த ஒரு மாவட்டத்திலும் அது கட்டிமுடிக்கப் படவில்லை. காரணம், ஒரு நீச்சல் குளத்திற்கு 7 அல்லது 8 லட்சம், அல்லது 9 லட்சம் என்று செலவு ஆகும். ஆகவே, அந்த நிலையைப் போக்க 1 அல்லது 2 எடுத்துக் கொண்டு, மற்றவற்றை அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாகச் செய்யலாம் என்று கொண்டுவந்தால் அது சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.





சென்னையில் அண்ணா நீச்சல் குளம் இருக்கிறது. அங்கே 'ஜிம்னாசியம்' என்ற உடல் விளையாட்டுக்கூடம் கட்டவேண்டும். அங்கே பொதுமக்கள் வந்து அதைப் பயன்படுத்தும் நேரத்தை மாற்றவேண்டும். பயிற்சியாளர்களும், பொதுமக்களும் ஒரே நேரத்தில் வருவதால், பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுவது தடை படுகிறது. ஆகவே, பொதுமக்களின் நேரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள் இருக்கின்றன. தனியார் பள்ளிகளுக்கு அடிப்படைக் கட்டிடம் இருக்கிறதா, அங்கே பல்வேறு பேக்வார்ட், பார்வார்ட், ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப் என்ற முறையிலே ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்களா? 3% அல்லது 4% பராமரிப்புச் செலவு என்று கொடுக்கிறோமே அதற்கு வேண்டிய கட்டிடம் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் சுவர் இல்லாமலேயே சித்திரம் எழுதும் நிலைக்கு விடக்கூடாது. கட்டிடம் இல்லாம லேயே பணம் வாங்குகிறீர்களா என்று அருள்கூர்ந்து மறு பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு கல்வித் துறை பொதுப் பட்டியலில் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அது முன்பு தனிப்பட்டியலில் இருந்தது. அது பொதுப் பட்டியலுக்கு வந்து இருக்கிறது. அதை மீண்டும் தனிப்பட்டியலில் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு மாநிலத்தினுடைய 'கல்ச்சர்' கெடாமல் பார்த்துக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் மாநிலத்தின் தனித்தன்மை கெட்டுப்போகும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்ற பல தனியார் பள்ளிக்கூடங்கள் இன்றைக்கு வியாபார நிறுவனமாக மாறி விட்டன என்பதை அரசு உணர்ந்து தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கல்வித் துறையிலே வளர்ச்சி அடைவதற்கு எத்தனையோ பணிகளை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். பேக்வார்ட் கிளாஸ் சேர்ந்தவர்கள் வாழவேண்டும், வளர வேண்டும் என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட நேற்றைய தினம் பேசுகிறபோது இங்கே எத்தனை நீதிபதிகள் இருக் கிறார்கள், உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள், எத்தனை சதவிகிதம் பார்வார்ட், பேக்வார்ட் என்றெல்லாம் சொன்னார் கள். அப்படிப்பட்ட நிலை மாறத்தக்க வகையில் இந்த மாநில அரசு சில நடவடிக்கைகளை எடுத்து இருப்பதை உண்மையிலேயே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கவும் பயன்படுத்தப்படுவதால், குழந்தைகளின் கல்வித்தரம், வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் சிலர் கருதுகின்றனர். இதை விட அவதூறாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்பினால் நிச்சயமாக அது சாத்தியப்படாது என்றுதான் சொல்லவேண்டும். அப்படிப்பட்ட கருத்துக்களை உடைய நபர்களுக்கு என்னுடைய ஒரே கேள்வி—'பசி இருக்கும்போது படிப்பு ஏறுமா?' என்பது தான். இப்படிப்பட்ட எத்தனையோ பிரச்னைகளைப் பற்றி அதே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கூட செய்திகள் வந்திருக்கின்றன. என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கல்வி, தனிப் பட்டியலிலேயிருந்து பொதுப்பட்டியலுக்குப் போயிருக்கிறது என்று சொன்னால், அதை மறுபடியும் தனிப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டும். அப்படிப்பட்ட அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள், அல்லது தன்னாட்சி தேவை என்று சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள், நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறோம். எங்களோடு சேர்ந்து நீங்களும் இதில் போராட வேண்டும் என்று சொன்னார்கள் இப்படிப் பட்ட சூழ்நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸை எதிர்க்கக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது. அதை நாங்கள் பாராட்டுகிறோம் என்றும் சொன்னார்கள்.

அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசோடு மாநில அரசின் உறவு எப்படியிருக்கிறது என்றால், அவர்கள் ஆண் என்ற பதத்தைச் சொன்னால், அதற்கு எதிர்ப் பதமாக பதிலுக்கு பெண் என்று சொல்லக்கூடிய வகையில் நான் இருக்கிறதே தவிர, அவர்கள் ஓநாய் என்று சொன்னால், நாங்கள் ஆடு என்று சொல்கிற வகையில் இல்லை, அந்த வகையில் அவர்களைப் பொறுத்தமட்டில் எதிர்க்கட்சிக்காரர்களாகத்தான் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நாங்களும் மாநில சுய ஆட்சித் தேவை, மாநிலங்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் வேண்டும். ஆகவே தன்னாட்சித் தேவை என்று தான் கேட்கிறோம். இது எப்படி இருக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது).

இன்னும் ஒரு நிமிடம், இந்த சப்ஜெக்ட்டைப் பற்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். இதில் எப்படி நாங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்றால், எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார் ஷேக் முஜிபுர் ரெஹ்மான் அவர்கள் பலாப்பழம் கேட்டால், பலாமரத்தையே சொந்தமாக்கிக் கொண்டார்; இருந்தால் முதலமைச்சர்—கீழே இறக்கப்பட்டால்



தமிழகத்தின் பிரதமர் என்றார். அந்த மாநில சுயாட்சிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் சப்ஜெக்ட்டுகளின் பட்டியல் என்னென்ன, மாநிலங்களுக்குத் தேவையான சப்ஜெக்ட்டுகளின் பட்டியல்கள் என்னென்ன என்பதை வரையறுத்துக் கொண்டு, அதிக அதிகாரங்களையும் பெற்று, கட்டுண்டு வாழ்வோம் பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம் என்ற அண்ணாயிசத்தின் தத்துவத்தின் படிதான் நாங்கள் இருக்கிறோம் என்பதைக் கூறி, இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டைமான்: மாண்புமிகு தலைவர் அவர்களே. இந்திய தேசிய காங்கிரஸ் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களை இந்த கல்வி மானியத்திலே சொல்ல விரும்புகிறேன். முதலிலே இந்த கல்வி இலாகாவை, மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள், செவ்வனே நடத்தி வருகிறார்கள் என்று நான் எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடிய வகையிலேயே சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், நான் அவரிடம் பலமுறை போய் பல விஷயங்களைப் பற்றி கேட்டபோது—நான் மட்டும் அல்ல, எந்தக் கட்சிகள் போய் சொன்னாலும்—அதை மனதிலே நன்றாக வாங்கிக் கொண்டு, நீதியோடு, நேர்மையோடு செயல்பட்டு, வைகளைச் செய்து வந்திருக்கிறார் என்று இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதனால் ஒரு முழு நம்பிக்கையோடு, அவர் நான் சொல்லக்கூடிய, நாட்டிலே இருக்கக்கூடிய காரியங்களைச் செய்வார் என்ற நம்பிக்கையோடு நான் இந்த மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

நாம் மேடைகளிலே பேசுகிறபோது, இந்த சமுதாயத்தை மாற்ற வேண்டும், ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் பேசுகிறோம். ஆனால் மநிலத்திலும் சரி, மத்திய அரசாங்கத்திலும் சரி, அல்லது எல்லா மாநிலங்களிலும் சரி, நாம் பார்க்கும்போது, இந்த 30, 35 வருஷ காலமாக, நம்முடைய எஜுகேஷனல் சிஸ்டம் ஒரே மாதிரியான சிஸ்டமாகத்தான் இருக்கிறது. அதைத்தான் நாம் இத்தனை வருஷ காலமாக பின்பற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த கல்வித் துறையிலே ஏதாவது புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டுவந்தால் தான் இந்த சமுதாயத்தை நாம் மாற்ற முடியும். ஆனால், இப்போது இருக்கக்கூடிய பழைய மாதிரியான சிஸ்டத்தையே நாம் வைத்துக் கொண்டு இருந்தோம் என்றால், நிச்சயமாக நாம் பேசி வருகிற இந்தப் புதிய சமுதாயத்தை, இந்த நாட்டிலே அமைக்க முடியாது.

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்] [1983 மார்ச் 15

கல்லூரியிலிருந்து படித்து பாஸாகி வெளியே வரக்கூடிய ஸ்டுடண்டுகளுடைய தரத்தையும் நாம் பார்க்க வேண்டும். அப்படி பாஸ் செய்து வெளிவரக்கூடிய அவர்களுக்கு ஃபுல் கான்பிடன்ஸ் வாழ்க்கையில் இருக்க வேண்டும். ஆனால் வெளியிலே வருகிறபோது அவர்களுக்கு ஏதோ பி.ஏ. பட்டம் பெற்று, அந்தப் பட்டத்தை கையிலே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற நினைவுதான் இருக்கிறதே தவிர, உலக விஷயங்களோ அல்லது இயக்கத்தில் நடக்கக்கூடிய விஷயங்களோ எதுவும் தெரிகிறதா என்று பார்த்தால் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிவதில்லை. அதற்குக் காரணம் இப்போது இருக்கக்கூடிய எஜுகேஷனல் சிஸ்டம் தான். அதை மாற்றி அமைத்தால்தான் முடியும். சில சமயங்களில் சொல்கிறார்கள்.

(முற்பகல் 11–20)

'Whether they got the degree or whether they bought the degree' என்று சொல்கிறார்கள். அந்த மாதிரியான ஒரு சந்தேகத்திற்கு இடம் இருக்கின்றது. ஒவ்வொரு ஸ்டூடண்டும வெளியே வரும் போது அந்த மாதிரி ஒரு ஸ்பெஸிமென்—தான் பார்க்கிறோம். இதைத்தான் மாற்றியமைக்க வேண்டும். எனவே அடிப்படையிலேயே, அதாவது 8—வது ஸ்டாண்டர்ட் படிக்கின்றபோதே சைன்டிஃபிக் நாலெஜ் கொடுக்கவேண்டும். அப்போதே கற்பித்துக் கொடுத்தால்தான் அவர்களுக்கு உலக அனுபவம் நன்றாகத் தெரியும். அதல்லாமல் ஆர்ட்ஸ் மட்டும் படித்து விட்டு வந்தால் போதும் என்ற நிலைமை இருந்தால் சரியாக இருக்காது எனவே உலகிலே எப்படி எப்படி டெக்னாலஜீ வளர்ந்திருக்கின்றதோ அதற்குத் தகுந்த வகையிலே வளரக்கூடிய இளைஞர்களைத் தயார்படுத்தவேண்டும். அப்படி இல்லாமல் இன்னும் பழைய முறையிலேயே நடந்துகொண்டிருந்தால் இன்னும் 100 வருஷங்கள் ஆனாலும் நம்முடைய சமுதாயத்தை மாற்ற முடியாது. ஒரு ரியலிஸ்டிக் அப்ரோச், அதாவது ஒரு மெட்டீரியலிஸ்டிக் அப்ரோச் நமக்கு இருக்கவேண்டும்.

இன்றைக்கு ப்ரைவேட் ஸ்கூல்ஸ் ஒரு கன்ட்ரோல் இல்லாமல் இருக்கின்றது. சில ஸ்கூல்ஸ் தங்கம் போன்று நடக்கின்றது. ஆனால் பல ஸ்கூல்கள் கன்ட்ரோல் இல்லாமல் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். எனவே நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் சொல்கிறார்கள். அவர்கள் இஷ்டத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்கிறார்கள். அப்படி என்னவெல்லாம் செய்கிறார்களோ தெரியாது. எப்படி எப்படி ஆசிரியர்களை மாற்றுகிறார்கள், என்னென்ன விதிகளின்படி நடத்துகிறார்கள் என்றெல்லாம் நீங்கள் போய் கேட்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற வரைக்கும் நம்முடைய ஸ்டாண்டர்ட் இப்படித்தான் இருக்கும். எனவே யுனிவர்



1983 மார்ச் 15] [திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

சிட்டியோ அல்லது கல்வி இலாக்காவோ அதிலே ஒரு ஸ்ட்ராங் கன்ட்ரோல் வைத்தால்தான் அந்த எஜுகேஷனல் சிஸ்டத்தை நல்லமுறையில் கொண்டு வரமுடியும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் மேல்படிப்புக்குப் போகும்போது எல்லாவிதமான தரத்திலே இருக்கக்கூடியவர்களுக்கும் ஈக்குவல் ஆப்பர்சூனிட்டி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களிலே ஏழைகளுக்கு வாய்ப்பு கொடுக்க முடியவில்லை. பணவசதி இல்லாததால் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. எனவே மூளை உள்ளவர்களுக்கும், பணம் உள்ளவர்களுக்கும் ஈக்குவல் ஆப்பர்சூனிட்டி கொடுக்க வேண்டும். பண வசதி உள்ளவர்களுக்கு ஒரு மதிப்பும், மற்றவர்களுக்கு ஒரு மதிப்பும் கொடுக்கப்படக்கூடாது. இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமையைப் பொறுத்த வரையில் மற்ற காலேஜஸ் பற்றித்தான் சொல்கிறேன். கவர்மென்ட் காலேஜைப் பொறுத்தவரையில் நீங்கள் சில கமிட்டி எல்லாம் வைத்து இருக்கிறீர்கள், எனவே நியாயமான முறையில் எடுக்கிறீர்கள் என்று தான் நான் நினைக்கிறேன். ஆனால் ப்ரைவேட் காலேஜஸ்—ஐப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. எனவே அதற்கான சட்ட திட்டங்களைக் கொண்டுவந்தால்தான் நம்முடைய மாணவர்கள் நல்ல உலக அனுபவம் வாய்ந்தவர்களாக பிற்காலத்தில் திகழ முடியும். இந்த நாட்டின் முக்கிய பொறுப்புகளை ஏற்கக்கூடியவர்களாக அவர்களை அப்போதுதான் ஆக்க முடியும். இல்லை என்றால் பழைய மாதிரிதான் நாட்டு மக்கள் ஒவ்வொரு வருஷமும் க்ளார்க் வேலைக்கு க்யூவிலே நிற்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும்.

இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சமரசம் அவர்கள் மிட் டே மீல்ஸ் ஸ்கீமை நாங்கள் கேலி செய்கிறோம் என்று சொன்னார்கள். நிச்சயமாக நாங்கள் கேலி செய்யவில்லை. மிட் டே ஸ்கீமை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அதே நேரத்தில் அதிலே இருக்கின்ற சில குறைபாடுகளை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது கிராமங்களிலே இந்த ஆசிரியர்கள் தங்களுடைய கல்வி வேலைகளை விட்டுவிட்டு அந்த மிட் டே மீல்ஸ் ஸ்கீமிலே கவனத்தைச் செலுத்தும்போது அந்த எஜுகேஷனல் ஸ்டாண்டர்ட் கீழே போய்விடுகின்றது. ஹரிஜன் பகுதிகளிலேதான் இந்த மாதிரிக் காரியங்களை முக்கியமாகச் செய்கிறார்கள். இந்த சமயத்தில் தான் அவர்களுடைய எஜுகேஷனல் ஸ்டாண்டர்டு கீழே வந்திருக்கிறது. அதைத்தான் அரசாங்கம் நிறுத் வேண்டும். அதற்கு வேறு ஆட்களை தனியாகப் போட வேண்டும். இந்த மிட்—டே மீல்ஸை தயாரிப்பதற்கு தனியாக வேறு ஆட்களைப் போடவேண்டும். பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு தனியாக ஆட்களைப் போடவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டைமான்] [1983 மார்ச் 15

அடுத்து ஸ்காலர்ஷிப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். ஸ்கூல்ஸ் அண்டு காலேஜில் பணத்திற்கு பதிலாக புத்தகங்களைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நானும் அந்த கமிட்டியில் இருக்கிறேன். அந்த ஸ்காலர்ஷிப்பில் சாங்ஷன் செய்திருக்கும் புத்தகங்கள் வந்து சேரவில்லை. அதற்குப் பதிலாக மாணவர்களுக்கு பணம் கொடுத்தால் நல்லது என்று நினைக்கிறேன். ஏழை மாணவர்கள், அரிசன மாணவர்கள், பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் இவர்களுக்குத் தான் நாம் கொடுக்கிறோம். அவர்களுக்கு புத்தகம் கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள். பரீட்சை முடியப்போகிறது. இன்னும் அவர்களுக்கு புத்தகம் போய் சேரவில்லை. இந்த முறையில் புத்தகத்திற்குப் பதிலாக அவர்கள் கையில் பணத்தைக் கொடுத்தால் அவர்கள் அந்த புத்தகத்தை வாங்கிக்கொள்வார்கள். இது அவர்களுக்கு ரொம்ப உதவியாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசும்போது நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜூ அவர்கள் சொன்னார்கள், வெளியே உட்கார்ந்து படிக்கிறார்கள் என்று. அது உண்மை தான். இடமே இல்லை. அதுவும் இப்போது வெயில் காலம். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சுற்றிப் பார்க்கக்கூடிய இடத்தில் பார்த்தால் மரமே இல்லை. பாதி பேர் வெளியே உட்கார்ந்து படிக்கிறார்கள். உள்ளே உட்கார்ந்து படிக்கிறார்கள். பாதி பேர் கவனித்து இதற்கு அதிகமான கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலத்தில் கஷ்டமாகப் போய்விடும். இப்போது ஏதோ இங்கே உட்கார்ந்து [illegible] மாதிரி இப்போது படிக்கலாம். ஆனால் மழைக் காலம் வந்தால் ரொம்ப கஷ்டமாகப் போய்விடும். அதற்கு இன்னும் அதிக கட்டிடங்களைக் கட்டித்தரவேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[illegible] ஆயிரம் மாணவர்களை எண்ரோல் செய்திருக்கிறீர்கள். அதற்குத் தகுந்த ஆசிரியர்கள் இல்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். ரேஷ்யோ பிரகாரம் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அக்கார்டிங் டு ரேஷ்யோ படி நியமிக்க வேண்டும். 40 மாணவர்களுக்கு ஒரு வாத்தியார் என்று ரேஷ்யோ வைத்து வாத்தியார்களை நியமித்தால் தான் அவர்கள் தரத்தோடு படிக்க முடியும். 300 மாணவர்களுக்கு ஒரு வாத்தியார் என்று வைக்க முடியாது. இதை அரசாங்கம் கவனித்து அதற்கு தகுந்த மாதிரி வாத்தியார்களை நியமிக்க வேண்டும். நீங்கள், வேலைவாய்ப்பு நிறைய பேருக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. நிறைய பேருக்கு வேலை கொடுக்க நல்ல வாய்ப்பாக இருக்கக் [illegible] ரேஷ்யோ பிரகாரம் இன்னும் ஆயிரம், இரண்டு ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க முடியும்.



1983 மார்ச் 15] ]திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டைமான்]

என்னுடைய தொகுதியிலே பார்த்தால், புதுக்கோட்டையில் அரசு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு இரண்டு எம்.ஏ கோர்ஸ் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு ரொம்ப நன்றி. அது கொடுக்கப்பட்டாலும் உட்கார்ந்து படிப்பதற்கு அங்கே இடம் இல்லை. நாம் சென்டினரி செலிபரேஷன் கொண்டாடி விட்டோம். உட்கார்ந்து படிக்க இடம் இல்லை. ஷிப்ட் சிஸ்டம் வைக்க வேண்டியிருக்கிறது. அதாவது காலையில், மாலையில். மேலும் அதனால் இன்னும் 3 பில்டிங் வேண்டியிருக்கிறது. இன்னும் 3 பில்டிங் கட்டிக் கட்டுவதற்கு இடம் இருக்கிறது. இன்னும் 3 பில்டிங் கட்டிக் கொடுத்தால் ஒரே நேரத்தில் இந்த கிளாஸ்களை நடத்த முடியும். அதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உமன்ஸ் காலேஜ் இருக்கிறது. அந்த உமன்ஸ் காலேஜில் 150 ஆஸ்டல் மாணவிகளுக்கு கட்டிடம் கட்ட பிளான் போடப்பட்டிருக்கிறது. அந்த பிளான் இதோ இருக்கிறது

(முற்பகல் 11-30)

அந்த பிளான் போட்டு ரொம்ப நாளாகிறது. இன்னும் கட்ட ஆரம்பிக்கப்படாத நிலை இருக்கிறது. சீக்கிரம் கட்டி முடிக்க வேண்டும். அங்கே ஸ்டுடண்ட்ஸ் தங்குவதற்கு இடம் இல்லை. ஒவ்வொரு ரூமிலும் 6, 7 பெண்கள் தங்கியிருக்கிறார்கள். அரசாங்கம் அதை சீக்கிரம் பரிசீலனை செய்து கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு கெமிஸ்ட்ரி கிளாஸ் அங்கே தேவைப்படுகிறது. அதற்கு தனியாக ஒரு ஹாலும், அந்த கேர்ல்ஸ் காலேஜுக்கு ஒரு ஆடிட்டோரியமும் தேவைப்படுகிறது. அதையும் அரசாங்கம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ராணி ஸ்கூல் ஒன்று இருக்கிறது. அங்கே 2 ஆயிரம் பேர்கள் படிக்கிறார்கள். அந்த ஸ்கூலுக்குள்ளே இடம் இல்லை. நானும் அதைப் பற்றி அமைச்சரிடத்திலே சொன்னேன். கல்வி இலாகாவிற்கும் அனுப்பி யிருக்கிறேன். டி. இ. ஓ. ஆபீஸ் பிராஞ்ச் காலேஜில் ஒரு மூலையிலே வைத்திருக்கிறார்கள்—மற்ற இடம் சும்மா இருக்கிறது அந்த டி.இ.ஓ. ஆபீசை எங்கே வேண்டுமானாலும் மாற்றலாம் வேறு இடத்திற்கு அதை மாற்றிவிட்டு அதையும் ராணி ஸ்கூலுக்குக் கொடுத்து விட்டால் 2 ஆயிரம் ஸ்டுடன்ட்ஸ் படிப்பதற்கு சுலபமாக இருக்கும். அதையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பக்கத்திலே விளையாட்டுக்கு-ஒரு இடம் தூர்ந்து போய் கிடக்கிறது— கொடுக்கிற முறையிலே அதையும் அக்வயர் பண்ணி அந்த ராணி ஸ்கூலுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகிறேன். இவ்வாண்டு வருவாய் கணக்கில் மொத்த செலவினமான 1654 கோடி ரூபாயில் ரூபாய் 356 கோடி ரூபாயை கல்விக்காக ஒதுக்கியிருப்பதை இந்த நேரத்திலே நினைவு கூறி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே கல்வித் துறையை மேற் கொண்டிருக்கின்ற மாண்புமிகு கல்வித் துறை யமைச்சர் அவர்கள் இத்துறைக்கு ஆற்றியிருக்கிற நல்ல பல காரியங்களையும் அரிய திட்டங்களையும் நினைவுக் கூறிபல சிக்கலான பிரச்சினைகளைக் கூட மிகச் சுலபமாக தீர்க்கக்கூடிய அனுபவத்தையும் சுபாவத்தையும் பெற்று தீர்த்து வைக்கும் பெருமை அவரையே சாரும் என்று சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் தொழில் கல்விக்கு தமிழகம் முதலிடம் கொடுத்து இருப்பதை அனைத்து மாநிலங்களும் பாராட்டு கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மேல்நிலைக் கல்வியால் எல்லாக் கிராமப் பகுதிகளிலேயும் கல்வி கற்போரின் எண்ணிக்கை அதிகமாக ஆகி யிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப் பட்டு இருப்பதை பார்க்கிற போது கிராமப் பகுதிகளிலே கல்லூரிகள் இருப்பதைப் போன்று காட்சியளிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உயர்நிலைப்பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகள் இவைகளுக்கு கட்டிடங்கள் கட்டப்படவேண்டு மென்று சொல்வது என் கடமை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஆரம்பப் பாட சாலைகளுக்கு ஒவ்வொரு கிராமத்திலேயும் சுமார் 80 லட்சம் பெறுமான அளவில் எல்லா கிராமங்களுக்கும் பள்ளிக்கூடங்கள் நிரந்தரமாக ஆக்கப்பட்டதற்குப் பின்னாலே அங்கே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இதுவரை ரயில் கட்டடங்களே இல்லாமல் முதலிலே துவங்கப்பட்ட நேரத்திலே உள்ள கட்டத்திற்குள்ளேயே அந்தப்பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல திருத்தணி தொகுதியில், திருவள்ளூர் வட்டத்திருக்கும் மணவாள நகர் உயர்நிலைப்பள்ளி, திருத்தணி வட்டத்திலிருக்கும் ஆற்காடு குப்பம் உயர்நிலைப் பள்ளி, இவைகள் இரண்டு ஏறத்தாழ 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு துவங்கிய போது ஆரம்பித்த கட்டிடங்களிலேயே இப்போதும் நடைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு துணைக் கட்டிடம் கட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



அது மட்டுமல்ல; உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி இவைகள் இரண்டும் ஒன்றாக இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால் அங்கேயிருக்கிற தலைமை ஆசிரியர்கள் இரண்டையும் நிர்வகிப்பது நிர்வாகத்திற்கு இடர்பாடாக இருக் கிறது அங்கு உதவி தலைமை ஆசிரியர்கள் போடப்பட்டிருந்தும் அவர்களுக்கு என்னென்ன பொறுப்புகள் என்று வரையறுக்கப் படாத காரணத்தால் அவர்கள் ஏதோ உதவி தலைமை யாசிரியர்கள் என்றப் பொறுப்பிலே இருக்கிறார்களே தவிர, எதை நாம் செய்ய வேண்டுமென்று கூட தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே அரசே உதவி தலைமையாசிரியர்களுக்கு என்னென்ன பொறுப்புகள் என்பது குறித்து உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி இவைகளுக்கு அவசியமாக காப்புச் சுவர்கள் இருக்க வேண்டும். இப்பொழுது பொதுத் தேர்வுகளை நடத்துவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் பள்ளிகளுக்கு காப்புச் சுவர்கள் இருக்குமேயானால் அங்கு ஏற்படக்கூடிய தவறுகளை தடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே பள்ளிக் கட்டிடங்களுக்கு காப்புச் சுவர்களை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல ஒவ்வொரு பள்ளியிலும், உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி, படிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை ஆயிரத்திற்கு மேற்பட்டு போனால் அந்த பள்ளியிலே இருக்கக் கூடிய ஒழுக்கமும், கட்டுபாடும் கூட குறைந்துப் போய்விடுகிறது. ஆகவே ஒவ்வொரு பள்ளியிலும் ஆயிரம் பேர்கள் வரைப்படிக்கிற வாய்ப்பு தந்தால் போதும் என்ற நிலையில் இருக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இப்போது முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரையில் தேர்வே இல்லாமல் அவர்கள் தேர்வுப் பெற்ற நிலையை உருவாக்கி வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அவசியம் ஐந்தாவது வகுப்பிலும், எட்டாவது வகுப்பிலும் பொதுத் தேர்வு வைக்க வேண்டும். அதை அங்கே இருக்கிற டெபுட்டி இன்ஸ்பெக்டர் மூலமாக அந்தந்த சரகங்களில் ஏற்படுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்தால் கல்வி யினுடைய தரம் மேலும் உயர்த்துவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமில்லாமல் டெபுட்டி இன்ஸ்பெக்டர் போடுகிற நேரத்தில் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிகளில் அவர்கள் ஆய்வு நடத்த வேண்டியிருக்கிற நிலைமை இருப்பதால் எல்லா பள்ளிகளுக்கும் ஒரு முறை தான் செல்கிற வாய்ப்பை அவர் பெற்றிருக்கிறார். அப்படி ஆய்வு செய்கிற நேரத்தில் குறிப்பேட்டில் அவர் எழுதுகிற குறிப்புகளை குறித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார் களா என்று பார்த்தால், அது போன்ற நிலை இல்லை[illegible]

செயலமைப்படுத்துவதற்காக, ஒழுங்குப்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அதை நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமெனறு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், வயது வந்தோர் கல்வி, அண்மை ஆண்டுகளில், மாநில அரசின் சீரிய முயற்சியால், அனைத்துலக மாநாட்டிலே பாராட்டப்பட்டுள்ளது என்பதை இங்கே எடுத்துக் கூறி, எழுத்தறிவுப் பணிக்காக, யுனெஸ்கோ நிறுவனம் தரும் பெருமைக்குரிய விருதான Nadezca Krupas kaya Li eracy Award என்ற விருதை இந்த மாநிலம் பெற்றிருப்பதை இந்நேரத்திலே எடுத்து சொல்லி அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன.

வயது வந்தோர் கல்வி, மற்றும் முறை சாராக் கல்விக்காக பணியாற்றுகின்ற பி.ஏ., பி.எட்., பி.எஸ்ஸி.,பி.டி. ஆசிரியர்கள் 5 ஆண்டுகள், 4 ஆண்டுகள் பணியாற்றியதற்குப் பின்னாலே, அந்தப் பணியைச் செய்ததற்குப் பின்னாலே, அவர்கள் பள்ளிக் கூடங்களில் பணியாற்றுவதற்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வந்திருக்குமானால் அந்தத் தேர்வில் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து, தேர்வு செய்து, நிரந்தரமான பணியை அளிக்க முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேல் நிலைப் பள்ளியில் பணியாற்றுகின்ற இன்டெக்ஸ் டீச்சர்களாக இருப்பவர்கள், 5 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன நிலை என்ற முடிவெடுக்கப்படாமல் இருக்கிறது. ஏறக்குறைய 3,000-க்கு மேற்பட்ட ஆசிரியப் பெருமக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு ஏதாவது ஒரு இடைக்காலப் பயிற்சியைக் கொடுத்து, ஒரு டிப்ளமோ என்ற அளவிலே அவர்களுக்குக் கொடுத்து நிரந்தரமாக மேல்நிலைப் பள்ளியிலே பணியாற்று கின்ற வாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு இது ஒரு நல்ல காலமாக, அவகாசமாக இருக்கிறது. பள்ளிகளுக்கு இரண்டு, மூன்று மாதங்கள் விடுமுறையிருப்பதன் காரணமாக; இதைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் தத்தனைப் பெருக்கும் ஒரு பயிற்சியைக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அவர்கள் எந்நிலையை அடைய வேண்டுமென்று, ஏக்கத்தில் பெரு மூச்சோடு அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் குறுகிய காலப்பயிற்சி கொடுத்து டிப்ளமோ வழங்கி ஆசிரியர் பணியை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இளமையிலேயே பி.எட். படித்து பிசிக்கல் இன்ஸ்ட்ரக்டர்களை நடுநிலைப் பள்ளிகளில் போட வேண்டுமென்று போட்டிருக் கிறார்கள். ஆனால், நடுநிலைப் பள்ளிகளில் போட்டிருக்கின்ற உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஏற்றாற் போல் உடற்பயிற்சிக்கு



அந்தப் பள்ளிகளில் இடவசதி இருக்கிறதா என்று பார்த்து அவைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக், கொள்கிறேன். அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகள் உடல் பயிற்சி பெறுவதற்கேற்ற வகையில் அவர்களுக்கு வாய்ப்பு நல்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பை நல்கிய அவைத் தலைரவர்களுக்கு நன்றிக் கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. மு. அப்பாதுரை; மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த கல்வி மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். தமிழ்நாடு அரசாங்கம் இன்றைக்கு ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினைக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்; இன்றைக்குக் குறிப்பாகத் தமிழ்நாட்டில் அதிகப்படியான விளம்பரத்தோடு சொல்லப்படுகின்ற சத்துணவுத் திட்டத்தின் காரணமாக பல இலட்சக்கணக்கான புதிய இளம் உள்ளங்கள் பள்ளிகளிலே சேர்ந்திருக்கிறார்கள் என்ற குறிப்பைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு, இந்த நாட்டின் வருங்காலச் சமுதாயம் நல்ல முறையில் உருவாக வேண்டும் என்ற நல்லெண்ணத்தை நான் பராட்டுகிறேன். இன்றைக்குப் புதிதாக எத்தனை மாணவர்கள் சேர்ந்திருக் கிறார்கள் என்ற புள்ளி விவரம் கொடுக்கப் படுகிறது. ஆனால் அந்த அடிப்படையில் ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருவகின்றார்களா என்றால் இல்லை. இங்கே கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆரம்பப்பள்ளியில் உள்ள விகிதாச்சாரத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது 41 மாணவர்களுக்கு ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் என்று நியமனம் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு பள்ளிகளைப் பார்வையிட்டு இருக்கிறேன். அங்கே போதுமான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல மாட்டேன். ஆனால் இருக்கின்ற காலியிடங்கள் காலா காலத்தில் நியமனம் செய்யப்படவில்லை என்பதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சரவர்களின கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பல்வேறு கட்டிடங்களைக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள் என்ற உண்மையை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருந்தாலும், அப்படிக் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்குத் திறப்பு விழா நடப்பதற்கு முன்னாலேயே இடிந்து விழுகின்ற காட்சிகளையும் நான் எடுத்து கூற கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், கட்டப்படும் புதிய பள்ளிக் கட்டிடங்களில் கரும்பலகை வைப்பதும் இல்லை. ஒரே கட்டிடத்தில் மூன்று நான்கு வகுப்புகளுக்கும் சேர்ந்தாற் போல் கட்டப்பட்டிருப்பதால் இடையில் அவைகளைக்

தான் என்னால் சொல்ல முடிகிறது. அங்கே எழுதப்பட்ட
குறிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கிற போது தான் அந்த
இன்பெக்ஸ்ஷனுக்கே மரியாதை இருக்கும் என்று சொல்லிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்பகுதிகளில் இருக்கிறவர்கள் இரண்டு முதல்
ஐந்து வயது வரையில் உள்ள தங்கள் குழந்தைகளை நர்சரி
பள்ளிகளிலே படிக்க வைக்க வேண்டுமென்ற பேராவல்
பெற்றிருக்கிற காரணத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் கொண்டு வந்திருக்கிற சத்துணவுத் திட்ட மையங்களில்
இவைகளை இணைத்து அந்த குழந்தைகளுக்கு நல்ல கல்வியை
ஆங்கிலத்தோடு, தமிழ் கல்வியை போதிக்கிற வழக்கத்தை
ஏற்படுத்த வேண்டும். அந்த ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்சியையும்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடங்கள் என்பது தனியார்களுக்கு
ஒரு காமதேனுவாக அமைந்து கொண்டிருக்கிறது. ஆகவே
அரசே மெட்ரிக்குலேஷன் படிப்பை ஏற்படுத்தி அதிலே தமிழைச்
சேர்த்து கற்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது
மட்டுமல்லாமல், ஆசிரியர்களுக்கு, அவர்கள் எங்கெங்கு
பணியாற்றுகிறார்களோ அதே இடத்தில் வீடுகளை கட்டித்தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
மாவட்டந்தோறும் ஆசிரியர் இல்லங்களை கட்டிக் கொடுக்க
வேண்டுமென்று என்னுடைய எண்ணத்தை வெளியிட கடமைப்
பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–40)

அது மட்டுமல்லாமல் ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்விச்
சலுகைகளும், கல்வித்துறையில், வேலை வாய்ப்புத் தருவதில்
முன்னுரிமையும் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே
நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதுமட்டு
மல்லாமல், ஆசிரியர் மாணவர் விகிதங்கள் 1 : 30 என்று
இருந்தால்தான் அந்த ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற
45 நிமிடத்தில் அந்தக் குழந்தைகளுக்கு நேரடி கவனத்தைச்
செலுத்தி, தாங்கள் அவர்களுக்குக் கற்றுத் தரவேண்டிய
கல்வியை சிறந்த முறையிலே கற்றுத் தருவதற்கான வாய்ப்பைப்
பெற முடியும் என்பதையும் சுட்டிக் காட்டி, அந்த விதத்தில்
ஒரு ஆசிரியருக்கு 30-க்கு மேற்படாமல் மாணவர்கள் இருக்கின்ற
நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்
கிறேன்.





அது மட்டுமல்லாமல், 1 முதல் 3 வகுப்பு வரை ஆசிரியர் மாணவர் விகிதம் அவசியம் 30 ஆகத்தான் இருக்க வேண்டும். அதற்கு மேலாக இருக்கிற வகுப்புகளுக்கு ஐந்தோ, பத்தோ கூட இருந்தால் கூடப் பரவாயில்லை. சிறிய பிள்ளைகளை ஒழுங்குப் படுத்துவதும், அவர்களுக்கு கற்றுத் தருவதும் ஆசிரியர்களுக்குச் சிரமான காரியமாக இருக்குமென்ற காரணத்தால், 1 முதல் 3 வரை 30 மாணவர்களுக்கு ஒருவர் என்பதை, வகுப்பு 25 மாணவர்களுக்கு ஒருவர் என்று குறைத்து வைத்தால் கூட, அந்தக் கல்வியைச் சரியான முறையிலே அவர்களுக்குப் பயிற்றுவிக்கச் சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இங்கே ஒவ்வொரு பள்ளியிலும் தமிழ்—ஆங்கிலம் இரண்டும் போதிப்பு மொழியாக இருந்தாலும் திருத்தணி தொகுதி 'பை-லிங்குவல் ஏரியாவாக, இருக்கிற காரணத்தால், தெலுங்கைக் கூட அங்கே பயிற்சி மொழியாக வைத்துக் கொண்டு, அந்தப்பள்ளிக் கூடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் 2, 3 மாணவர்களை வைத்துக் கொண்டு, அந்த மாணவர்களுக்கு தனியாக, தமிழ் ஆசிரியர்களையும், அநதந்தப் பாடங்களுக்கு ஏற்றாற் போல், அந்தந்த ஆசிரியர்களையும் மற்றும் தெலுங்கு மொழி பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களையும் போட்டு, வகுப்புகள் நடக்கின்றன. தெலுங்கு வகுப்பிலே, 5 பேருக்கு ஒருவர், 2 பேருக்கு ஒருவர் என்ற முறையிலே கூட ஆசிரியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். தெலுங்கு படிக்கின்ற மாணவர்கள் மற்ற பாடங்களில் தேர்வு எழுதும் போது எடுக்கின்ற மதிப்பெண்கள் ஏறக்குறைய 15–20 என்று இருக்கும் போது, அவர்கள் தெலுங்கிலே எழுதுகின்ற தேர்வுக்கு மதிப்பெண்கள் 60, 80 என்று போடப் பட்டிருப்பதைத் தலைமையாசிரியர் உற்று கவனித்து, அதற்குப் பின்னாலே, அந்த விடைத்தாள்களைக் கொண்டு வரச் செய்து தெலுங்கு எழுதப் படிக்கத் தெரியாதவர்களை அழைத்து, தெலுங்கிலே எழுதப்பட்டிருப்பது என்ன என்று படித்துக் காண்பிக்க வேண்டுமென்று அந்தத் தலைமை ஆசிரியர் கேட்ட பொழுது, அந்தக் கேள்வியையே, இரண்டு இரண்டு தடவைகள் எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குத்தான் ஆசிரியர்கள் மார்க் தந்திருக்கிறார்கள் என்ற கூற்றை அவர்கள் எடுத்துச் சொன்னதற்குப் பின்னாலே, உண்மை நிலை தெரிய வந்தது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஒரு பாடத்தில் சிறந்த மாணவனாக இருப்பவன், மற்ற பாடங்களிலும் சிறப் புடையவனாக இருப்பான். அந்தக் கூற்றுக்கிணங்க மற்ற பாடங்களிலே 10—ம்-20—ம் எடுத்துக் கொண்டிருக்கும் போது தெலுங்கில் எப்படி 60, 70 எடுக்கிறான் என்ற சந்தேகம் வந்ததற்குப் பிறகு அதை ஆராய்ந்த போது இது தெரியவந்தது. ஆக, 2 மாணவர்கள், 3 மாணவர்களுக்கு ஒரு தெலுங்கு ஆசிரியர் இருந்தும் கூட, அந்தத் தெலுங்கு ஆசிரியர்கள் சுய நலத்திற்காக தங்களுடைய ஆசிரியர் பணியைக் காப்பாற்றிக் கொள்ள மட்டும், அவர்கள் அந்தப் பணியைச் செய்து கொண் டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அதைச்

குறைப்பதற்கான ஒழுங்குமுறைகள் பல கட்டிடங்களில் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த குறைகளை நீக்கி, ஆரம்பக் கல்வியில் இளமையில் படிக்கும் இந்தக் குழந்தைகள் சிறப்பான முறையில், சீரிய முறையில் படிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். சத்துணவுத் திட்டத்தின் காரணமாக இன்றைக்குக் குழந்தைகள் பள்ளிகளுக்கு வந்தாலும் அந்த இளம் உள்ளங்கள் நல்ல முறையில் பயில்வதற்குப் போதுமான ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். எங்களுடைய கட்சியின் சார்பாக நான் சொல்கிறேன். முப்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமிப்பதன் மூலமாக அந்தக் குறைகளைப் போக்கலாம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் பொறுத்த வரையில் இங்கே, கொடுக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு வெட்டுத் தீர்மானங்களையும் படிக்கின்ற பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள் என்று கருதுகின்றேன். பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப்பள்ளிகளுக்கும் அரசாங்கம் உத்தரவு வழங்க வேண்டுமென்று சொல்லி, இடம் வழங்கப்பட்டிருந்தாலும் பணம் வழங்கப் பட்டிருந்தாலும், ஐந்தாண்டுக் காலம், பத்தாண்டுக்காலம் என்று ஆகியும் இன்றைக்கும் அங்கே உயர் நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் வழங்கப்படவில்லை. என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நான் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியில் உள்ள புதியம்புத்தூர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளி யாக உயர்த்துவது சம்பந்தமாகவும், திருத்துறைப்பூண்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவது சம்பந்தமாகவும், காட்பாடி தொகுதில் உள்ள நிலைமை சம்பந்தமாகவும் இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இவைகளை யெல்லாம் போக்கும் விதத்தில் செய்ய வேண்டும். நிலங்களும் பணமும் கொடுக்கப் பட்டிருக்கின்ற அந்த கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் இந்த கல்வியாண்டிலேயாவது அவைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

இன்றைக்குக் கல்லூரிப் படிப்பைப் பொறுத்தவரையில் பல்வேறு கல்லூரிகளிலேயும் ஒழுங்கீனங்களும், மாணவர்கள் பிரச்சினைகளும் எழுந்திருக்கின்றன என்றால் அதற்கு காரணம் என்ன? இந்தக் கல்வியின் நோக்கம் என்ன? நாம் எதற்காகப் படிக்கிறோம், என்ற எண்ணமும், சிந்தனையும் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற விதத்தில் நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். தரத்தைப் பற்றி மட்டுமல்லாமல், எப்படிப்பட்ட கருத்துக்களை இந்த மாணவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதே சந்தேகமாக இருக்கிறது. பி.ஏ. பி.எஸ்.சி. படித்து முடிக்கின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. படித்து முடித்து விட்டு, அந்த மாணவர்கள் படுகின்ற அவதி நிலையை பார்த்துக்



கொண்டிருக்கிறோம். ஆக வேலை வாய்ப்பை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். கல்லூரியில் படிப்பை முடித்தவர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னால், இந்தக் கல்வித் திட்டத்திலே, பட்டப்படிப்புத் திட்டத்திலே, மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். 'ஸ்பெஷலைஸ்டு கோர்ஸ்' என்று சொல்லக்கூடிய பிரிவிற்குக் கல்வித்திட்டங்கள், அவைகளை மாற்றி, படிப்படியாக, மாற்றக் கூடிய ஒரு நல்ல வாய்ப்பினை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கல்விச் திட்டங்கள் பற்றி தமிழகத்தில் இருக்கக் கூடிய, கல்வித் திட்டங்கள், பாடத்திட்டங்கள், மாணவர்கள் பிரச்சினை ஆகியவற்றைப் பரிசீலிப்பதற்காக, குழந்தைசாமி என்ற ஒரு கமிஷன் நியமனம் செய்யப்பட்டது. அந்தக் கமிஷன் அறிக்கை இந்த மாமன்றத்தில் இது வரை வைக்கப்படவில்லை என்று கருதுகிறேன். ஆகவே அந்தக் கமிஷன் அறிக்கையை வைத்து, அதன் மீது இந்த மன்றத்தின் கருத்துக்களையும் இணைத்து, அதனுடைய சிபாரிசுகளை ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, பொது நூலகங்கள், ஒரு வருட காலமாக தமிழகத்திலே இயங்கக் கூடிய நூலகங்களுக்கு, புதிய நூல்கள் வாங்கப்படவில்லை என்ற ஒருக் கருத்தை என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இதுவரை ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவிற்கு இந்த நூலகங்களில், முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒரு வருடகாலமாக, சமூகஇயல், விஞ்ஞானஇயல் அணுஇயல், இப்படிப்பட்ட நூல்கள், புதிய கருத்துக்களை கொண்டுள்ள நூல்கள், இந்த நூலகங்களுக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னால், மாணவர்களும், பொது மக்களும் எப்படி இந்தக் கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும்? ஆகவே, இதைப் படிப்பதற்கு, இந்த நிலையில், எத்தனைப் பேருக்கு வாய்ப்பு கிடைக்க முடியும். ஆகவே, வரக்கூடிய காலத்திலாவது இந்த நூலகங்களுக்கு இம்மாதிரியான புத்தகங்களை வாங்கிக் கொடுத்து, இந்தக் குறைகளைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, ஆராய்ச்சித்துறை, நம்முடைய அமைச்சரவர்கள், இங்கே இருக்கக் கூடிய ஆராய்ச்சித்துறையைப் பற்றி, பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்லிக் கொள்வேன். இன்றைக்கு ஆராய்ச்சித் துறை என்று சொன்னால், மக்களுக்கும் அந்த ஆராய்ச்சித்துறைக்கும், ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று சொன்னால், இல்லை பாபர்

ஆண்டார், அக்பர் ஆண்டார் என்ற பாடங்களைப் பற்றி ஏதாவது கடந்தகால வரலாற்று பாடங்களைப் பற்றிச் சொல்லி சென்று விடுகிறார்கள். ஆனால் நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த ஆராய்ச்சித்துறை 'ரிசர்ச் கம்பாரடிவ் ஸ்டடி' அதாவது, இந்த ஆராய்ச்சித்துறை, மக்களோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும், நிலச்சீர்திருத்தம், இன்றைய கல்வி முறை, சமூக இயற்முறை, இப்படிப்பட்ட துறைகளில் ஆராய்ச்சி செய்து, நல்ல பல கருத்துக்களை இந்த சமுதாயத்திற்கு பயன் பெறக் கூடிய வகையில், இந்த ஆராய்ச்சித்துறை மாற்றப்பட வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே, இன்றைக்கு 7 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அதிலே இருக்கக் கூடிய, ஆராய்ச்சித்துறைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத நிலை இருக்கிறது. இந்தக் குறையை நீக்கி, இந்த 7 பல்கலை கழகங்களில் இருக்கக் கூடிய, இந்த ஆராய்ச்சித்துறைகளில், ஒன்றோடொன்று இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு, இப்படிப்பட்ட ஆக்கப்பூர்வமான கருத்துக்களை சொல்ல வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

நமமுடைய அமைச்சரவர்கள், இங்கே கவர்னருடைய உறையிலே, தமிழகத்திலே பெண்கள் பல்கலைக்கழகம் ஒன்றை தொடங்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த பல்கலைக்கழகத்தை கொடைக்கானலில் தொடங்க இருக்கிறோம் என்று இங்கே சொன்னார்கள். நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, இம்மாமன்றத்தில், சொல்லிக் கொள்வேன்—கொடைக்கானலில் அந்த பெண்கள் பல்கலைக்கழகத்தைத் திறக்க வேண்டாமென்று கேட்டுக் கொளகிறேன் அங்கே தொடங்க முற்பட்டால், அங்கே இருக்கின்ற லட்சக்கணக்கான மரங்கள் அழிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும். ஆகவே அந்த நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் கொடைக்கானலில் அந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்தை துவங்க வேண்டாமென்று நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இயல், இசை, நாடகம் என்ற துறையின் கீழ் நம்முடைய தமிழகத்தில் ஏராளமான கலையரங்குகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, மக்களுடைய உணர்வுகளையும், கடந்த கால வாழ்க்கை முறைகளையும், இன்றைக்கு ஏழை எளிய மக்கள், எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், எடுத்துச் சொல்லும் அந்த வில்லுப்பாட்டு அந்தக் கலையிலே இணைத்துக் கொள்ளவேண்டும். அது விடுப்பட்டிருக்கிறது என்று சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக, இன்றைக்கு நம்முடைய அமைச்சரவர்கள், தமிழகத்தினுடைய கல்வித்துறை மிகக் கொந்தளிப்பான நிலையில் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைகழக்கத்தைப் பற்றி, இதே மாமன்றத்தில் பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன.





ஆனால் சென்ற முறைகூட இங்கே வாக்குறுதி கொடுத்
தார்கள். நாங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை ஒழுங்கு
படுத்துவதற்காக ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வருகிறோம்
என்று சொன்னார்கள். உங்களுடைய வாக்குறுதி என்ன ஆயிற்று
என்பதை நான் கேட்கவிரும்புகிறேன். இன்றைக்கு நாம் அங்கே
யிருக்கக்கூடிய பட்டப் படிப்புகள் எல்லாம் மூடிவிட்ட
காரணத்தால், அஞ்சல் வழிக்கல்வி மூலமாக இன்றைக்கு லட்சக்
கணக்கான பணத்தை, மக்களுடைய பணத்தை கொள்ளை
அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான்
சொல்லவிரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நேற்றைய தினம் அங்கேயிருக்கக்கூடிய
ஆசிரியர்கள் சங்கம் தங்களுடைய குறைகளை, அரசாங்கத்தோடு
செய்துகொண்ட ஒப்பந்தப்படி, நிர்வாகத்தோடு செய்துகொண்ட
ஒப்பந்தப்படி அவர்கள் செய்யாமல் அதை மீறுகிறார்கள் என்ற
குற்றச்சாட்டை மேதகு ஆளுநர் அவர்கள் இடத்திலே அவர்கள்
மெமோரண்டமாக கொடுத்தார்கள் என்ற காரணத்திற்காக
அங்கேயிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு இன்றைக்கு அவர்கள்
ஷோகாஸ் நோட்டிஸ் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான்
வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே
நம்முடைய அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மீறக்
கூடிய நிர்வாகமாகத்தான் இன்றைக்கு அண்ணாமலைப்
பல்கலைக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த
அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழி மூலமாக
இன்றைக்கு ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே
இருப்பதைப் போல மாணவர்களுக்கு டுட்டோரியல் மூலமாக
சொல்லிக் கொடுக்கிறோம் என்று இங்கே எனக்கு குறிப்புகள்
சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கு மதுரைப் பல்கலைக்கழகத்தில்
அஞ்சல் வழிப் பாடத்திட்டம் தொடங்கப்படுகின்ற நேரத்தில்
அன்றைய துணை வேந்தர் தெ. பொ. மீ, அவர்கள் அன்றைக்கு
அரசாங்கத்தின் இடத்திலே ஒரு உறுதி மொழியை பெற்றிருக்
கிறார்கள். மற்ற எந்த ஒரு பல்கலைக்கழகமும் அஞ்சல் வழிக்
கல்வியைத் துவக்கக்கூடாது என்று அப்படிப்பட்ட ஒரு உறுதி
மொழியை எனக்கு நீங்கள் கொடுத்தால்தான் நான்
தொடங்குவேன் என்று சொல்லி, அன்றைக்கு மதுரைப்பல்கலைக்
கழகத்திற்கு மட்டும்தான் அஞ்சல் வழிக் கல்வி தொடங்கு
வதற்கான அந்த ஆணையை அரசாங்கம் கொடுத்திருக்கிறது.
ஆனால் இன்றைக்கு அது வியாபாரமாக்கப்பட்டு எல்லாப்
பல்கலைக் கழகங்களும் அப்படி ஒரு அஞ்சல் வழிக்கல்வியை
உருவாக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, குறிப்பாக நம்முடைய
அரசு நடவடிக்கை எடுக்கக்கூடிய அண்ணாமலைப் பல்கலைக்
கழகம் இன்றைக்குத் தொடங்கியிருக்கிறது என்பதை நான்
வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பச்சையப்பன் கல்லூரி. இன்றைக்கு இந்தப் பச்சையப்பன் கல்லூரியை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பல சட்டங்களை நாம் இங்கே கொண்டுவந்திருக்கிறோம். இங்கே பச்சையப்பன் கல்லூரியிலே பட்டப்படிப்புகளை மூடிவிடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே இன்றைக்கு மாலை நேர வகுப்புகள் மட்டும் நடத்துவதற்கு அந்த நிர்வாகம் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. அப்படி எடுத்து நடத்திக்கொண்டு வருகிறார்கள். காரணம் அந்த மாலை நேரக் கல்வி மூலமாக அதிகமாக பணம் கிடைக்கின்ற காரணத்தால் அதை நடத்துகிறார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அங்கே பணிபுரியக்கூடிய நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் வேலை இழக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே பட்டப்படிப்பை தொடங்கி நடத்தவேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சென்னையில் இருக்கக்கூடிய தியாகராய கல்லூரி. அந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கு இடையே இருக்கக்கூடிய தகராறு காரணமாக இன்றைக்கு அங்கே மிகப் பெரிய நிர்வாகச் சீர்கேடு உள்ளது. அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடைக்காமல் இன்றைக்கு ஒரு பெரிய தகராறு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்தத் தனியார் கல்லூரியிலே நடைபெறக்கூடிய தவறுகளைக் களைவதற்கு. எப்படி பச்சையப்பன் கல்லூரியை நாம் கையகப்படுத்தினோமோ, அதேபோன்று தியாகராயர் கல்லூரியையும் நாம் கையகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தனியார் பள்ளிகளிலே மிகப் பெரிய சீர்கேடுகள் நடக்கின்றன. அவைகளைக் களைவதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று சொல்லி, கொள்கைக் குறிப்பிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை நடவடிக்கைகளை நாம் எடுத்தாலும், தனியார் பள்ளிகளிலே மிகப் பெரிய தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கக் கூடிய கோட்டையூர், சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல் நிலைப்பள்ளியிலே பணிபுரியக்கூடிய திருமதி பிலோமினா கலைச் செல்வி என்ற ஆசிரியை தனக்கு பேறுகால விடுப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்ட நேரத்திலே உங்களுக்கு தருகிறோம் என்று ஒத்துக்கொண்ட பிறகு கடந்த ஒரு வருட காலமாக அந்த ஆசிரியையை பள்ளிக்குச் சென்று பணி செய்யவிடாமல் தடுத்துவிட்டு, இன்றைக்கு அவர்கள் வரவில்லை என்று குற்றச்சாட்டு சொல்லி, அந்த ஆசிரியையை இன்றைக்கு பணி நீக்கம் செய்கின்ற அளவிற்கு சென்றிருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல் இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலேயும் குறிப்பாக பல்கலைக்கழகங்களை அமைத்திருக்கின்ற இந்த அரசாங்கம் திருநெல்வேலி மாவட்டம் கல்வியிலே முதன்மையான மாவட்டம். அங்கே இருக்கக்கூடிய பாளையங்கோட்டை தமிழகத்தினுடைய மிகப்பெரிய கல்வி கேந்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட மதுரைப் பல்கலைக் கழகத்திலே ஏறத்தாழ 77 கல்லூரிகள் இருக்கிறது என்று அரசாங்கம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

(நண்பகல் 12–00)

ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்தையும், கன்னியாகுமரி மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய அடிப்படையில் அங்கே ஒரு புதிய பல்கலைக்கழகம் தொடங்கப்படவேண்டும். அதற்கு செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் பெயரில் அது தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

இன்றைக்கு கோவில்பட்டி ஜி.வி.என். கல்லூரியில் போலீஸ் புகுந்து வெறித்தனமான தாக்குதலை நடத்தி 40 மாணவர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறது, அந்தக் கல்லூரி கோவையில் இருக்கும் பெரிய மில் முதலாளிக்குச் சொந்தமானது. அங்கே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்ற நிர்வாகச் சீர் கேடுகளை எதிர்த்து மாணவர்கள் போராடுகிற போதும், தங்கும் விடுதிகளில் போதுமான வசதிகள் இல்லை என்று மாணவர்கள் கேட்கின்ற போதும் மிருகத்தனமாக அந்த மாணவர்களை போலீஸ் தாக்கி வருகிறது. இந்த நிலை தவிர்க்கப்படவேண்டும். அதற்குத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன்: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவ அவர்களே, இந்த கல்வி மானிய கோரிக்கை மீது பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை துவக்குகிறேன். 1983-84 ஆம் ஆண்டு கல்விச் செலவுக்காக தமிழக அரசு 356 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் மனதார இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழக அரசு செய்கிற சீரிய பணியாலும், மாண்புமிகு கல்வி அமைச்சரின் சிறப்பான செயல்பாட்டாலும் ஏராளமான பொருட் செலவிலே இன்று கல்வித் துறையிலே புதியதோர் மறுமலர்ச்சியைத் தமிழகம் கண்டுள்ளது.

மேல்நிலைக் கல்வி மூலம் கிராமப் பகுதிகளில் இன்று கல்வி வளர்ச்சியையும், தொழிற்கல்வி வளர்ச்சியையும் இந்த அரசு பெருக்கியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வித் திறமை மிக்க ஏழை மாணவர்கள் இன்று மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் தங்களுடைய திறமையின் அடிப்படையில் சேர்ந்து கல்வி பெறும் சூழ்நிலை தமிழகத்தி நிலவி வருகிறது. இந்த நிலையை மேலும் உயர்த்திட, [illegible]

மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் பெரும் துணையாக இருக்கும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. மேலும் இன்றைய கல்வி வளர்ச்சியில் அதிகம் பங்கு வகிப்பது கல்வி நூலகமாகும். தமிழக மக்கள் ஒவ்வொரு ஆண்டும் நூலக வளர்ச்சிக்கு பல லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. மேலும் மாணவர்களின் கல்வி அறிவு சிறப்பு பெற நூலகம் மிக மிக முக்கியமான ஒன்றாகும். அந்த நூலகத்தில் பல பள்ளிகளில் தனியாக முழு நேர நூலகர் நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அந்த முழு நேர நூலகர் நியமனம் செய்யும் பட்சத்தில் மாணவர்களின் கல்வித் தரம் மேலும் மேலும் உயர ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே அருமை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு முழு நேர நூலகரை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவியல் பொறுத்தவரையில், நம்முடைய தமிழக அரசு ஒவ்வொரு பள்ளிக்கும் ஏகப்பட்ட செலவுகள், லட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்துக்கொண்டு, மாணவர்கள் அறிவியல் கல்வி பெற பெரிதும் உதவிக்கொண்டு இருக்கிறது. ரஷ்ய விஞ்ஞானி ஒருவரிடம் ரஷ்யாவின் முன்னேற்றம் பற்றிக் கேட்ட போது, திறமையான மாணவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு வழி வகுத்துக் கொடுங்கள், அவர்கள் உங்கள் நாட்டை முன்னேற்றிவிடுவார்கள் என்று சொன்னார். மாணவர்களுக்கு அறிவியலில் உள்ள திறமையைச் சிறப்பாக வளர்க்கவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு கல்வி நிலையங்களில் ஆய்வுக் கூடங்கள் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வுக் கூடங்கள் எல்லா வசதிகளையும் பெற்று இருக்கும் விதத்தில், எல்லா மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் தங்களுடைய செய்முறை வளர்ச்சியை செய்து, அறிவு பெற்று. திறமையை வளர்த்துக் கொள்ள அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

மேல்நிலை அறிவியல் ஆசிரியர்கள் ஆய்வுக் கூடங்களுக்கு பொறுப்பாளர்களாக இருப்பதால் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு செய்முறை வளர்ச்சியைச் செய்து காட்டுவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன; பள்ளிகளில் உள்ள ஒவ்வொரு துறை ஆய்வுக் கூடத்திற்கும் ஆய்வக உதவியாளர்கள் அட்டெண்டர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தொழில் கல்வி பிரிவுகள் அந்தந்தப் பகுதியில் உள்ள தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடங்களை மாற்றி அமைக்க அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதிருஷ்டத்தை தேடி ஓடாதே. அது உன்னுடைய காலடியில் கிடக்கிறது என்று சொல்வார்கள். அதனை உணர்ந்ததால்தான் பாலைவனங்களை டணம் கொழிக்கும் பெட்ரோலிய கிடங்குகளாக கண்டுபிடிர்க முடிந்தது. எனவே நாமும் நம்முடைய மாணவர்களுக்கு புவியியல் தன்மையை நன்கு உணர்த்தவேண்டும்,

புவியியலை நன்கு போதிக்க வேண்டும். புவியியலை தனிப் பாடமாக வைத்து போதிக்க, புவியியலை சிறப்புப்பாடமாக எடுத்து, அதிலே தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் தரம் உயர அடிப்படையாக இருப்பது ஆரம்பக்கல்வியாகும். எனவே, ஆரம்பப்பள்ளிகளிலே கல்வியின் தரம் உயர தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் நமது தமிழக அரசு இந்த ஆண்டு 165 இலட்சம் ரூபாய் இதற்கு ஒதுக்கி இருப்பதை நான் மனம் திறந்து பாராட்டுகிறேன்.

மேலும் உடல் கல்வியை பாடதிட்டத்தில் சேர்த்திருந்தாலும் அதை தேர்வில் சேர்க்காமல் இருப்பது மாணவர்கள் உடல் கல்வியில் செலுத்துகின்ற நாட்டம் குறைந்து, அதற்கு தடங்கல் ஏற்படும். எனவே இறுதித் தேர்வில் விளையாட்டுக் கல்வியையும் சேர்த்து, மாணவர்கள் ஊக்கம் பெற, சிறப்பாக உடல் கல்வியில் பயிற்சி பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உடல் கல்வி மாநாட்டுக்கு ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒரு உடல் பயிற்சி ஆசிரியர் செல்வது உண்டு. அதற்கு ஆகும் செலவுக்கு 'கேம்ஸ் ஃபண்டில்' இருந்து பணம் எடுத்துச் செல்வார்கள். ஆனால் 11-8-1982 லிருந்து இந்த அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த அனுமதியை மீண்டும் வழங்கி, உடல் கல்வி மாநாட்டுக்கு ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் முன்போலவே உடல் பயிற்சி ஆசிரியர்கள் சென்று கலந்து கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய் மாவட்ட அளவில் (ரெவின்யூ டிஸ்டிரிக்ட்) உடல் கல்வி ஆசிரியர்களுக்கு 'லேடெஸ்ட் டெக்னிக் இன் கோச்சிங்' சொல்லிக் கொடுத்து, அவர்கள் சிறந்த முறையில் மாணவர்களுக்கு உடல் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு டிஸ்டிரிக்ட் ஸ்போர்ட்ஸ் கவுன்சிலிலிருந்து பணம் செலவு செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிக் கல்வியை வைத்துக் கொண்டு, தமிழையும் பயிற்சி மொழியாக வைத்தீர்களேயானால், பொதுவாகவே ஆங்கிலப் பயிற்சி மொழிக்குத்தான் அதிக அளவில் மாணவர்கள் போகக் கூடிய நிலைமை ஏற்படும். Please take a bold s ep.

ஆகவே அரசாங்கம் துணிந்து இதிலே ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டும். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எத்தனையோ துணிகரமான நடவடிக்கைகளை எடுத்தவர், அவருக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். Please take abold s ep. தைரியமாக துணிந்து ஒரு நடவடிக்கை எடுங்கள். ஆரம்பப் பள்ளிக் கட்டத்தில் இருந்து, பல்கலைக் கழகப் படிப்பு வரை, தமிழே பயிற்சி மொழி ஆகும் என்று துணிந்து அவர்கள் அறிவிப்பார்களேயானால், தமிழ் அறியணை ஏறும் என்பதிலே சந்தேகம் இல்லை.

இந்தியா சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆன பின்னாலும் கூட, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முதலில் தமிழ் பயிற்சி மொழி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலும் அது தொடரப்பட்டு, இன்றைக்கு உங்களுடைய ஆட்சி நடந்துகொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்திலும் கூட, இன்னமும் 8லே ஒரு பகுதி மாணவர்கள் தான், தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிப்பதற்கு முன் வருகிறார்கள் என்று சொல்வது, நம் அனைவருக்கும் அவமானகரமான காரியம் ஆகும். Pease take a bold step. ஆகவே, தைரியமாக தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்குங்கள், அதை உடனடியாக அறிவியுங்கள் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தன்னாட்சிக் கல்லூரிகளைப் பற்றி சில விவரங்களை நான் இங்கே எடுத்துச் சொல்லவிரும்புகிறேன். அட்டானமஸ் படி என்ற பெயரிலே நம்முடைய தமிழகத்திலே 13 கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அது எந்த நோக்கத்தோடு செய்யப்பட்டதோ அந்த நோக்கம் நல்ல நோக்கம் அதிலே ஒன்றும் தவறு இல்லை. அதைப்பற்றி—அந்த அட்டானமஸ் ஸ்டேட்டஸ் என்கிற வகையில் எதற்காக பல கல்லூரிகளுக்கு அளிக்கப்படுகிறது என்பதைப்பற்றி, யூனிவர்சிட்டி கிரேண்ட்ஸ் கமிஷன் பின்வருமாறு சொல்கிறது. "Autonnomy accords to an edu ational insi ution acope for gen rnting and maintaining a wholesome academic atmosche e of which he vital cha acte isti cis freedom to forge ahead in scholarsh p Autonomy mean the freedom to teach and its compliments, he fr edom to learn and evaluate, the freedom to update knowledge cons antly, by sett ng up in the process continuous education of the teachers and the learners."



இந்த உன்னதமான நோக்கத்துடன் 13 கல்லூரிகள் தன்னாட்சி கல்லூரிகளாக நம்முடைய தமிழகத்திலே அமைக்கப் பட்டன. அதிலே வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் இந்த 13 கல்லூரிகளும் தனியார் கல்லூரிகளாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசாங்கக் கல்லூரி ஒன்றுக்குக் கூட அந்தத் தகுதி இல்லையா? அல்லது அரசாங்கம் தனக்குக் கீழே இருக்கக் கூடிய கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை வழங்கவேண்டும் என்று விரும்பவில்லையா? இப்படி 13 கல்லூரிகளும் தனியார் கல்லூரிகளே தன்னாட்சிக் கல்லூரிகளாக அறிவிக்கப்பட்டன, ஏற்கனவே உங்களுக்குத் தெரியும், இந்தத் தனியார் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய ஊழல்களையும், நிர்வாகச் சீர்குலைவுகளையும், அங்கே இருக்கக்கூடிய எதேச்சாதிகாரமான போக்குகளையும் பற்றி இந்த அவையிலே உள்ள எல்லா கட்சி உறுப்பினர்களும் பல்வேறு கட்டங்களில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்காகத்தான் தனியார் கல்லூரியிலே முறைகேடுகள் நடந்தால் அந்த அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கான சட்டத்தையே இங்கே கல்வி அமைச்சர் கொண்டு வந்து எலலோரும் சேர்ந்து நிறைவேற்றி இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கும்போது இந்தத் தன்னாட்சிக் கல்லூரி என்ற தன்மையினை முழுமையாக தனியார் வசமே ஒப்படைப்பது சரியல்ல. அதன் விளைவாக பல கஷ்டங்கள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டிருப்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தத் தன்னாட்சிக் கல்லூரிகள் தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தாமே தேர்வுகளை நடத்தவும் உரிமை பெற்றவை. இதற்காக யுனிவர்சிட்டி க்ராண்ட் கமிஷனிலே இருந்து, இந்த அரசு கொடுக்கின்ற மானியங்கள் போக தனியாக தன்னாட்சி கல்லூரிகளுக்கு ஆண்டுதோறும் 2 இலட்சம் ரூபாய் வழங்கப் படுகின்றது. 5 ஆண்டுகளுக்கு அதைப்போல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அரசு அந்த 2 இலட்சம் ரூபாயினை ஆண்டுதோறும் வழங்கும். ஆகவே இவ்வளவு நிதி கொடுத்து, இவ்வளவு உரிமை கொடுத்த பின்னர் இந்த கல்லூரிகள் எப்படி இயங்குகின்றன என்று பார்த்தால் அது மிக வருந்தத்தக்க ஒன்றாக இருக்கின்றது. இந்தத் தன்னாட்சிக் கல்லூரிகளுக்கு இந்த உரிமை எந்த அடிப் படையில் வழங்கப்பட்டது? அல்லது இந்தத் தன்னாட்சிக் கல்லூரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு what is the criteria? என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன். தன்னாட்சிக் கல்லூரிகளைப் பற்றி யு.ஜி.சி. வகுத்துள்ள நியதி என்னவென்றால்

The U.G.C. criteria guidelines sugge t that "the College should enjoy autonomy in framing the course of studies devising its me hods of evaluation and the p inciples for admisiou of the students. என்ற அந்த வகையில் இருக்கின்றது. அதன்படி இன்றைக்கு பல தன்னாட்சிக் கல்லூரிகளில் நிலைமை இல்லை. மிக மோசமாக

[திரு. ஆர். டி. கோபாலன்] [1983 மார்ச் 15

மேலும் என்னுடைய கம்பம் தொகுதியில் தொழில் நுட்பக் கல்வியை போதிக்க ஒரு 'பாலிடெக்னிக்' பள்ளியை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெண்கள் கல்லூரி இல்லை. அங்கே கம்பம் தொகுதியில் ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்பம் தொகுதியிலுள்ள அரசினர் ஆம்பூர் ராவுத்தர் பெண்கள் பள்ளியிலே கட்டிட வசதிகள் இல்லை; கழிப்பிட வசதி இல்லை. வெகுகாலமாக இந்தக் குறை அங்கே இருந்து வருகிறது. இந்தக் குறையைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் 4,5 ஆண்டுகளாக நிரந்தர தலைமை ஆசிரியை இல்லாமல் இருக்கிறது. யாரைப் போட்டாலும் அவர்கள் விடுமுறை எடுத்து இடையிலே போய் விடுகிறார்கள். அதனால் அந்த மாணவிகள் கல்வி பாதிக்கப் படுகிறது. எனவே அங்கே உடனடியாக நிரந்தரமாக இருக்கக் கூடிய ஒரு தலைமை ஆசிரியையை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கேரள மாநிலத்திலுள்ள வண்டிப்பெரியார், பீர்மேடு, ஏலப்பாறை, மூனார் ஆகிய இடங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் அங்கே பத்தாவது படித்து முடித்துவிட்டு, அதற்குமேல் அங்கே படிக்க முடியாத காரணத்தால் நம்முடைய தமிழ்நாட்டின் எல்லைக்குள் வந்து, இங்கு இருக்கிற ஒன்றிரண்டு பள்ளிகளில் பிளஸ் 2 படிக்க சேர்ந்தார்கள். சில நாட்கள் கழிந்ததும், இடையிலே உங்கள் மார்க் சரியாக வரவில்லை. எனவே உங்களை இங்கே சேர்க்க அனுமதி இல்லை என்று சொல்லி டி.சி. கொடுத்துவிட்டார்கள். அதனால் அவர்கள் படிக்க முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே அவர்களை பிளஸ் 2ல் தமிழ்நாட்டில் சேர்த்து, கல்வி அறிவு பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.



1983 மார்ச் 15] [திரு. ப நெடுமாறன்]

முதலாவதாக, தமிழ் பயிற்சி மொழியைப் பற்றி நான் சி வார்த்தைகளை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்கிற நிலையை இந்த அரசானாலும் சரி, வேறு எந்த அரசானாலும் சரி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய அத்தனை கட்சிகளானாலும் சரி, அனைவராலும் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு திட்டமாகும். ஆனால் எந்த அளவுக்கு, தமிழ் பயிற்சி மொழி திட்டம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, வருத்தமாக இருக்கிறது.

தமிழிலே பட்டப்படிப்பு எடுத்து படிக்கின்ற மாணவர்களுக்கு அரசாங்கம் ஆண்டுதோறும் 180 ரூபாய் உதவிப் பணம் அளிக்கிறது அதற்காக இந்த ஆண்டு ஏறத்தாழ 35 லட்சம் ரூபாய் தொகையை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஏறக்குறைய 900க்கும் அதிகமான பாட புத்தகங்களை தமிழிலே அச்சடித்து அரசு வெளியிட்டிருக் கிறது. இவ்வளவு செய்தும் கூட, இந்த ஆண்டு—அதாவது 82—83 லே தமிழிலே பட்டப் படிப்பு படித்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் 22,840 என்று இருக்கிறது. இது மிக மிக குறைவானது. ஏனென்றால் 82—83ல் தமிழ்நாட்டிலே பி.எஸ்.ஸி., பி. ., பி.காம் போன்ற பட்டப்படிப்பு படிக்கக் கூடிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்து 69 ஆயிரத்து 488. ஆகவே, இதிலே எட்டிலே ஒரு பங்கு தான் ஏறத்தாழ தமிழிலே பயிற்சி மொழியாகப் பயின்று வருகிறார்கள்.

ஆக அரசாங்கம் உதவி பணம் கொடுக்கிறது. அதற்குத் தேவையான புத்தகங்களையும் வெளியிட்டிருக்கிறது? ஆனாலும் கூட, ஏன் மாணவர்களிலே மிகப் பெரும்பாலோர் தமிழை பயிற்சி மொழியாக எடுத்து படிப்பதற்கு முன் வரவில்லை என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்குக் காரணம் ஆங்கில மொழி மீது நமக்கு இருக்கக்கூடிய மோகம் என்று ஒரே வார்த்தையில் சொன்னால், அது முற்றிலும் சரியாக இருக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழிலே பட்டப்படிப்பு படித்து வருகிறவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு அச்சம் மக்கள் மத்தியிலே நிலவுகிறது. ஆகவே' பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளை ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்புகிறார்கள்.

அந்த தவறான எண்ணத்தைப் போக்கும் வகையிலே, இனி அரசு வேலைகள் தமிழிலே பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும். அல்லது குறைந்தபட்சம் அவர்களுக்கு முன் உரிமைகள் கொடுக்கப்படும் என்று ஒரு திட்டத்தை அரசாங்கம் வகுக்குமேயானால் அது தமிழிலே பட்டப்படிப்பு படிக்கக்கூடிய வர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் நீங்கள் ஆங்கிலத்திலே [illegible]

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 15

இருக்கின்றது. அங்கே கல்லூரி என்பது பாடம் நடத்தக்கூடிய ஆசிரியர்களையும், படிக்கின்ற மாணவர்களையும் குறிக்கின்றதா அல்லது அங்கே உள்ள கட்டிடங்களையும் நிருவாகத்தையும் குறிக்கின்றதா என்பது தெரியவில்லை. ஏனென்றால் தன்னாட்சிக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும், மாணவர்களும் துச்சமாக மதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் பல காரியங்கள் அங்கே செய்யப்படுகின்றன. நிர்வாகம் எதேச்சாதிகாரமாக அங்கே நடக்கின்றது. தன்னாட்சிக் கல்லூரிகளில் தனியாக Academic Concil, Board of Studies, Board of Examiners என்றெல்லாம் அமைக்கப்படவேண்டும். ஆனால் பல தன்னாட்சிக் கல்லூரிகளில் இவை எல்லாம் அமைக்கப்படாமலேயே அங்கே உள்ள நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் தங்கள் இஷ்டம்போல் பாடத்திட்டங்களை வகுக்கிறார்கள். ஆசிரியர்களை மாற்றுகிறார்கள், அக்காடெமிக் கவுன்சில் அமைப்பதே இல்லை, அப்படி அமைத்தாலும் அதிலே இருக்கக் கூடிய ஆசிரியர்கள் சொல்கின்ற ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வது இல்லை. இஷ்டம் போல் அவர்கள் விருப்பம்போல் எதேச்சாதிகாரமான முறையில் நடந்து கொள்வதற்கு இந்தத் தன்னாட்சி உரிமை அவர்களுக்கு பயன்படுகின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குழுக்களுக்கு நியமனம் செய்வதில்லை, குழுக்களுக்கு தேர்தல் நடத்தவும் விடுவதில்லை, இப்படிப்பட்ட நிலைமைகள் பல தன்னாட்சிக் கல்லூரிகளில் இருக்கின்றன.

(பிற்பகல் 12-20)

தன்னாட்சி கொடுக்கப்பட்டாலும் கூட இந்த கல்லூரிகள் அத்தனையும் பல்கலைக்கழக சட்டவிதி மரபுகளுக்கு உட்பட்டுத் தான் இயங்கவேண்டும். ஆனால் அதற்கு நேர்மாறான வகையில் இந்த கல்லூரிகள் பல இந்த காலத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றன. பல்கலைக் கழகத்தினுடைய சட்ட திட்டங்களை அவர்கள் கொஞ்சமும் மதிப்பது இல்லை. உதாரணமாக கல்வி அமைச்சருடைய சொந்த ஊரான கோயம்பத்தூரில் இருக்கக் கூடிய அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் அங்கே என்ன நடக்கிறது என்றால், அவர்கள் இஷ்டத்திற்கு செய்கிறார்கள்.



1983 மார்ச் 15] [திரு ப. நெடுமாறன்]

நிர்வாகம். இதனால் பல மாணவர்களின் எதிர்காலம் அழிந்து போயிருக்கிறது. இதுபோன்ற யதேச்சதிகார முறையில் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் நிர்வாகம் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. இது அமைச்சருக்கும் பலதடவை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழுக்கு மட்டும் அல்ல மலையாளம், ஆங்கிலம், இந்தி, பிரஞ்சு ஆகிய துறைகளிலும் அவர்கள் ஆசிரியர்களைக் குறைத்து அவர்கள் இஷ்டம் போல் அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல. ட்ருபிள் மேஜர் சிஸ்டம் என்ற புதிதாக ஒன்றை புகுத்தி அங்கேயிருக்கக்கூடிய மாணவர்களுக்கு தேவையில்லாத சுமையை ஏற்படுத்தி அதன் விளைவாக அந்த ட்ருபிள் மேஜர் சிஸ்டத்தை எடுத்து படித்தால் எதிர் காலம் என்ன ஆகுமோ என்ற அச்சத்தில் மாணவர்களும், ஆசிரியர்களும் போராடுகிறார்கள். தன்னாட்சிக் கல்லூரியில் இது போன்ற நிலைமைகள் இருக்கின்றன, இதைப் போலத்தான் திருச்சியிலும், மதுரையிலும் இருக்கக்கூடிய பல்வேறு தன்னாட்சி கல்லூரிகளிலும் நிர்வாகம் யதேச்சதிகாரமாக இயங்கும் வகையில் இந்த உரிமைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே இதைப் பற்றி அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு நிலைக்கு வரவேண்டும் என்றுதான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பி.எச்.டி , எம். பில் ஆசிரியர்கள் படித்து அவர்களை மேம்படுத்து வதற்கு யூ.ஜி.ஸி. கிராண்டு கொடுக்கிறது. அந்த கிராண்டை பயன்படுத்தி தங்கள் கல்லூரியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை அனுப்புவதற்கு இந்த தன்னாட்சி கல்லூரியில் இருக்கக்கூடிய நிர்வாகம் திட்டவட்டமாக மறுக்கின்றது. இந்த நிலைமைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் தடுத்து அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

நம்முடைய உலக புகழ் பெற்ற சென்னைப் பல்கலைக்கழகம் பற்றி ஏராளமான புகார்கள் சென்ற ஆண்டும் சொல்லப்பட்டன. இந்த ஆண்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி நிலைமைகள் முற்றிக்கொண்டு போகிறது. இதனால் வினாத் தாட்கள் உருவாக்குவதிலே, விடைத்தாட்களை திருத்துவதிலே எல்லாவற்றிலும் ஊழல், காலதாமதம் போன்ற நிலைமைகள் அங்கே அதிகமாகிக் கொண்டே போகிறது. நன்றாகப் படிக்கின்ற மாணவர்கள் அவர்கள் மதிப்பீடுகள குறைகின்ற காரணத்தினால் அவர்கள் 100 ரூபாய் கட்டணம் செலுத்தி ரீ வேல்யூவேஷன் கேட்கிறார்கள். ஒருவர், இருவர், 10 பேர், 20 பேர் என்று சொன்னால் பரவாயில்லை. இந்த ஆண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ரீ-வேல்யூவேஷன் கேட்டு விண்ணப்பிக்கக் கூடிய ஒரு அசாதாரணமான நிலைமை அங்கேயிருக்கிறது. இதி அமைச்சர் அவர்கள் முக்கியமாக தலையிட்டு அதைப்பற்றி விசாரிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 15

கிறேன். பல்கலைக் கழகத்தின் தேர்வுகளின் முடிவுகள் என்பது
சர்வ சாதாரணமாக ரெம்பவும் தாமதமாக அறிவிக்கப்படுகிறது.
இதன் விளைவாக சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல
மாணவர்கள் இந்திய தொழில் நுட்பக் கழகம், இந்திய அறிவியல்
கழகம், டாட்டா அடிப்படை ஆய்வு அறிவியல் கழகம் போன்ற
நிலையங்களில் உயர் கல்விகளை எடுத்துப்படிக்க விண்ணப்பிக்க
முடியாமல் போய் அவர்கள் எதிர்காலம் எல்லாம் நாசமாயிருக்
கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் இங்கே சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். 1976–77 ஆம் ஆண்டு செமஸ்டர் முறை இந்தப்
பல்கலைக்கழகத்திலே புகுத்தப்பட்டது. ஆனால் திடீரென்று
1982 ஆம் ஆண்டு டிசம்பரிலே அது ரத்து செய்யப்படுவதாக
இந்தப் பல்கலைக் கழகம் அறிவித்து இருக்கிறது. அதன் மூலம்
ஆசிரியர்களின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. அது
எதனாலே ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய
விளக்கம் இல்லை. தமிழகத்தின் மற்றப் பல்கலைக் கழகங்களிலே
செமஸ்டர் முறை இருக்கிறது. இங்கே மட்டும் அது ரத்து
செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகத்தின் கீழே
உள்ள தன்னாட்சிக் கல்லூரிகளிலே செமஸ்டர் முறை உண்டு.
ஆனால் பல்கலைக் கழகத்திலே மட்டும் ரத்து செய்யப்பட்டிருக்
கிறது. இந்தக் குழப்பம் எதனால் வந்தது என்பதைப்பற்றி
பல்கலைக் கழகத்திலிருந்து எந்த விளக்கமும் வரவில்லை.
சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக் கழகங்களின் 125 வது
ஆண்டு விழா சென்ற ஆண்டே கொண்டாடப்பட்டிருக்க வேண்டும்.
பம்பாய், கல்கத்தா ஆகிய பல்கலைக் கழகங்கள் அந்த விழாவைக்
கொண்டாடியிருக்கின்றன. ஆனால் ஒரு வருட காலமாகியும்
சென்னைப் பல்கலைக் கழகம் அதற்கான ஏற்பாடுகள் எதையும்
செய்யவில்லை. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்வு எழுதிய
மாணவர்களுக்கு இன்னமும் பட்டமளிப்பு விழா நடத்தப்பட
வில்லை. இப்படிப்பட்ட பல்வேறு தவறுகள் சென்னைப் பல்கலைக்
கழகத்திலே நடக்கின்றன. அமைச்சர் அவர்கள் உடனடியாக
விசாரிப்பதற்கு உத்திரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் இந்தியா பூராவும் பாராட்டுகிற வகையில்
சிறப்பான முறையில் ஒரு இயக்கம் இருக்கிறது என்று சொன்னால்
அது நூலக இயக்கம். அது சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது
என்பதிலே சந்தேகம் இல்லை. 16 மாவட்ட மைய நூலகங்கள்,
1477 கிளை நூலகங்கள் இவற்றில் 91 லட்சம் புத்தகங்கள்
இருக்கின்றன. ஆனால் வளர்ந்து வருகிற தமிழக நூலக இயக்கத்
திற்கு பேரிடி போன்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. புதிய புத்தகங்கள்
வாங்குவதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அது
ஏன் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். அதை
எதிர்த்து எழுத்தாளர்கள் உண்ணாவிரதப் போராட்டம் எல்லாம்
தொடங்கயிருக்கிறார்கள். அதைப்பற்றித் தவறான அபிப்பிரா
யங்கள் வெளியே உலவுகின்றன. அமைச்சர் அவர்கள் அதற்கு
விளக்கம் தரவேண்டும். நூலகத்திற்கு ஒதுக்கிய பணம் சத்துணவுத்



1983 மார்ச் 15] [திரு. ப. நெடுமாறன்]

திட்டத்திற்கு திருப்பிவிடப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டுச்
சொல்லப்படுகிறது அல்லது நூலகங்களிலே நூலகர்கள் அல்லாத
பணியாளர்களையும் அரசுப் பணியாளர்களாக ஏற்றுக் கொண்டு
விட்ட காரணத்தினாலே அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குப்
போதுமான பணம் இல்லாத காரணத்தினாலே அதற்கு ஒதுக்கப்
பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். நகரசபைகள், மாநக
ராட்சிகள் ஆகியவற்றிலிருந்து நூலக செஸ் வரி வசூலிக்கப்
பட்டது இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. அதுவே
பல கோடி ரூபாய் இருக்கிறது, ஆகவே இந்த நிலை ஏற்பட்டிருக்
கிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஏன் புதிய புத்தகங்கள்
வாங்குவதை நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள்
விளக்கவேண்டும், தமிழக நூலகத்தின் வளர்ச்சியை இது எந்த
அளவுக்குப் பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்த்து இதை
விளக்கியாக வேண்டும். இலங்கையிலே சிங்களர் வாழுகின்ற
பகுதிகளாக இருந்தாலும்சரி, தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளாக
இருந்தாலும்சரி "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
என்ற பழமொழிக்கு ஏற்ப சிறிய கிராமமாக இருந்தாலும்கூட
அங்கே இருக்கிற இந்து ஆலயமானாலும் கிறித்துவ ஆலய
மானாலும் சிறிய கோயிலாக இருந்தாலும் அங்கே ஊர்
மக்களே கூடி நூலகத்தை ஏற்படுத்துவதைப்போல ஊராட்சி
மன்றத்தின் நிதியிலிருந்தோ அல்லது ஊர் மக்கள் கொடுத்த
நன்கொடையிலிருந்தோ ஊருக்கு ஒரு நூலகத்தை அவர்கள்
எழுப்பியிருப்பதைப்போல—அங்கே வெறும் நூலகங்கள் மட்டு
மல்லாமல் இலக்கியக் கூட்டங்களையும் நடத்துவதற்காக உதவும்
வகையிலே மிகப் பெரிதாக அமைத்திருக்கிறார்கள்—அதைப்போல
எல்லா ஊர்களிலும் தமிழகத்திலே நூலகங்களை நீங்கள் மக்கள்
உதவியோடு அல்லது வசதி படைத்தவர்களின் துணைகொண்டு
அமைப்பதற்கு தமிழகத்திலே நூலக இயக்கத்தை வலுவாக்கு
வதற்கு முன்வரவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து இசைக்கல்லூரிகளைப் பற்றி சில கருத்துக்களை
எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில்
அரசாங்கத்தின் சார்பிலே அரசு இசைக்கல்லூரிகள் இரண்டு தான்
இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப்
பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் இவைகளில்
ஒவ்வொன்று இருக்கின்றன. ஆக ஐந்து இசைக்கல்லூரிகள்
இருக்கின்றன. தமிழ் இசை இயக்கம் என்பது எவ்வளவு காலமாக
தமிழகத்திலே இயங்கி வருகிறது; அதை அரசியல் கட்சிகளுக்கு
எல்லாம் அப்பாற்பட்டு எவ்வளவோ தமிழ் அறிஞர்கள், பெரிய
வர்கள் உறுதுணையாக இருந்து வளர்த்திருக்கிறார்கள். இந்த
இசைக்கல்லூரிகளில் தமிழ் இசை அந்த அளவிற்கு வளர்க்கப்
பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்தால் வருத்தமாக இருக்கிறது.
இசைக்கல்லூரிகளிலே பழைய பாடத்திட்டத்தை முற்றிலுமாக

களிலே, தனியார் இல்லங்களிலே, ஏராளமான தமிழ் ஓலைச் சுவடிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 2,000 க்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகள் இருப்பதாக எனக்குத் தெரிகிறது. அந்த ஓலைச் சுவடிகளிலே என்ன, என்ன அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்பதை நாம் ஆராய வேண்டும். ஏனென்றால் அந்நியர்கள் இந்த நாட்டை ஆள்வதற்காக வந்த நேரத்திலே, அவர்கள் பிரெஞ்சுக்காரர்களானாலும் பிரிட்டிஷ்காரர்களானாலும், வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களானாலும் இந்த ஓலைச் சுவடியை அபூர்வமான பொருள்—ஓலையிலே எழுதியிருக்கிறார்கள் என்று நினைத்து எடுத்துக் கொண்டு போனார்கள். எடுத்துக் கொண்டு போனவர்கள், அங்கங்கே, மியூசியம்களிலே, நூலகங்களிலே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதற்காக நம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். ஆனால், அவர்களுக்கு இதிலே உள்ள விஷயம் என்ன என்பது தெரியாது. 'ஆன்டிக் வால்யூ' மட்டும்தான் அவர்களுக்குத் தெரியுமே தவிர, பழமையானது என்ற நிலையில் அவர்கள் அவற்றை அங்கே வைத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக, ஓலைச் சுவடியின் காலம் 600 ஆண்டுகள் தான். அவர்கள் எடுத்துக் கொண்டு போய் 300 ஆண்டுக்காலம் ஆகிறது. அதற்கு முன்னாலே, அவைகள் தமிழ்நாட்டிலே எத்தனை ஆண்டுக்காலம் இருந்தன என்பதும் தெரியாது. ஆகவே உடனடியாக, நம்முடைய அரசாங்கம் இதிலே தலையிட்டு, இந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் பிரதி எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றை பிரதி எடுப்பதற்கு இன்றைக்கு நவீன சாதனங்கள் நிறைய வந்திருக்கின்றன. 'மைக்ரோபிலிம்' எடுக்க முடியும். எந்த ஒரு தனி மனிதனும் இதைச் செய்ய முடியாது. அரசாங்கம் தான் இதைசெய்யவேண்டும். ஐரோப்பிய நாடுகளுக்கு அறிஞர்கள் குழுவை அனுப்பி, இந்த ஓலைச் சுவடிகள் இருக்கும் இடம் எல்லாம் சென்று, ஆராய்ந்து, அவற்றைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து தருகிற ஒரு மகத்தான பணியை, அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும். அதுதான் இராஜராஜ சோழனுக்கு நாம் விழா கொண்டாடுவதற்கு அர்த்தம் உள்ளதாக இருக்கும் என்பதையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு யுனெஸ்கோ உதவியும் நாம் பெறமுடியும். ஏனென்றால், இது போன்ற பழமையான பணிகளுக்கு யுனெஸ்கோ உதவி செய்கிறது. யுனெஸ்கோவின் உதவியையும் பெற்று, இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

இறுதியாக ஒன்று மட்டும் சொல்லி நான் என்னுடைய உரையை முடிக்கிறேன். தமிழ்நாடு, இயல், இசை நாடக மன்றத்தின் சார்பிலே சிறந்த கலைஞர்களுக்கு, கலைமாமணி விருதினை ஆண்டுதோறும் நீங்கள் வழங்குகிறீர்கள். தமிழ் நாட்டின் கலைஞர்களை நீங்கள் பாராட்டுவதற்காக உங்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அளிக்கிற பத்திரத்தினாலோ, அல்லது பட்டத்தினாலோ அவர்களுக்கு மனநிறைவு வந்து விடாது.





ஆனால், அதை நீங்கள் எப்படி அளிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் அது இருக்கிறது. இந்த ஆண்டு பல பேருக்கு அளித்தீர்கள். இந்த விழா அழைப்பிதழிலே நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும், மதிப்பிற்குரிய நிதிஅமைச்சர் அவர்களும், அறநிலைய அமைச்சர் அவர்கள், கல்வியமைச்சர் அவர்கள்

(பிற்பகல் 2-40)

ஆகிய அத்தனைபேரும் கலந்து கொள்கிறார்கள். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், மறைந்த கலைஞர்களின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து, விருது பெறும் கலைஞர்களுக்குப் பட்டமளித்து வாழ்த்துரை வழங்குவார்கள் என்று சொல்லப் பட்டிருந்தது. சென்ற ஜனவரி மாதம் 26 ஆம் தேதி குடியரசு நாள் அன்றைக்கு, கலைமாமணி பட்டம் பெற்றவர்களெல்லாம் அங்கே வீற்றிருந்தார்கள். அதைப் பார்த்து மகிழ்வதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தார்கள். ஆனால் விருது வழங்க வேண்டிய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அங்கே வரவில்லை ; அதன் காரணமாக அந்தக் கலைஞர்கள் அடைந்த மனத் துயரம் என்னஎன்பது சொல்ல முடியாதது. மற்ற அமைச்சர்களும் வரவில்லை. என்ன காரணம் ? அமைச்சர்களும் முதலமைச்சரும் அரசாங்கம் ஏற்பாடு செய்த விழாவுக்கு ஏன் வரவில்லை ? சென்ற ஆண்டும் இதே போல முதலமைச்சர் வரவில்லை என்ற குற்றச்சாட்டு, வருத்தம் கலைஞர்கள் மத்தியிலே இருக்கிறது. பாராட்டுவதற்காக அவர்களை நீங்கள் அழைத்து விட்டு, யார் பாராட்ட வேண்டுமோ அவரே அங்கே வரவில்லை என்று சொன்னால் பாராட்டுவதில் அர்த்தம் இல்லை. ஆகவே, கலைஞர்களுக்கு நீங்கள் கலைமாமணி பட்டம் அளித்தால் மட்டும் பயன் இல்லை ; உண்மையிலேயே நீங்கள் அவர்களை மதிக்க வேண்டும். இனிமேல் இதுபோன்ற குறைகள் இல்லாமல் அந்த விழாவை நடத்த வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் ; மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, கல்வி வளர்ச்சி சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்காக 1983-84 ஆம் ஆண்டுக்கு 35[illegible] கோடி ஒதுக்கப்பட்டிருப்பதும் ஆண்டின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 1,65[illegible] கோடியில் 21.5 விழுக்காடு என்பதை அறிகின்றபொழுது கல்வி வளர்ச்சியில் புரட்சித் தலைவரவர்கள் கொண்டுள்ள அக்கறையை இது மெய்ப்பித்துக் காட்டுகின்றது.

சங்கம் அமைத்து தமிழை வளர்த்த மதுரைத் திருநகரில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைப்பதற்காக ஏறத்தாழ 105 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றியாக வேண்டும். தமிழ் இசைக்கு சிறப்பிடம் தருகிற வகையில் இந்த பாடத்திட்டத்தை மாற்றியாக வேண்டும். இன்றைக்கு ராகங்களைச் சொல்லிக் கொடுக்கிறபோது தெலுங்கு கீர்த்தனைகளைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இசையிலே மொழி வேறுபாட்டை நான் ஆதரிக்கவில்லை. அது வேறு. ஆனால் ராகங்களுக்கேற்ற தமிழ் கீர்த்தனைகள் இருக்கிறபோது பிற மொழி கீர்த்தனைகளை சொல்லிக் கொடுக்கிற போது தமிழ் இசை எப்படி வளரும் என்பதைத் தான் உங்களை கேட்க விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மதுரை பல்கலைக் கழகத்திலே நீண்ட நெடுநாட்களாக ஆராய்ச்சி செய்து இசை அறிஞர்கள் எல்லாம் ஒன்று கூடி பல இசைச் சொற்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றை இசைக்கல்லூரிகளிலே உபயோகப் படுத்துவதாகத் தெரியவில்லை. அந்த தமிழ் இசைச் சொற்களை அவர்கள் பயன்படுத்துவதே இல்லை. இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். அதேபோல ஈழநாட்டிலே நான் பார்த்த இன்னொன்று; அங்கே இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளானாலும் உயர்நிலைப் பள்ளியானாலும் ஒரு வாரத்திற்கு இரண்டு தடவை இசை வகுப்புகள் கட்டாயமாக இருக்கிறது. சின்னஞ்சிறு குழந்தைகள் கூட ஒன்று வாய்ப்பாட்டு அல்லது வாத்திய இசை, இவைகளில் ஏதாவது ஒன்றை கட்டாயமாக பயின்றாக வேண்டுமென்றுச் சொல்லி, அங்கே இசையிலே குழந்தைகளின் உள்ளங்களைத திருப்பி சிறப்பான முறையிலே தமிழ் இசை கற்பிக்கப் படுவதை பார்த்தேன். அதைப்போலவே எல்லா உயர்நிலைப் பள்ளி மட்டத்திலாவது இசை வகுப்புகளை ஒரு வாரத்திற்கு ஒரு தடவையாவது கட்டாயமாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறி, நம்முடைய மாணவர்கள் இசைத்திறம் பெற்றவர்களாக மாறுவதற்கு மாணவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் உள்ளபடியே எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டுமென்று விரும்புகிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அதற்காக அமைக்கப்பட்ட தமிழ் எழுத்து சீர் திருத்தக் குழு என்பது ஒரு தடவை கூட இன்னும் கூடவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் இதிலே உங்களுக்கு அக்கறை இல்லையா? ஏன் அந்த குழுவை உடனே கூட்டி அடுத்த நடவடிக்கை எடுப்பதைப் பற்றி நீங்கள் ஆராயவில்லை? என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் எழுத்து சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அது தமிழ்நாட்டிலே வாழ்கிற தமிழர்களுக்கு மட்டுமான எழுத்துச் சீர்திருத்தம் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளாமல், உலகம் முழுவதும் வாழ்கிற தமிழர்களுக்கு. இலங்கையிலே வாழ்ந்தாலும், மலேசியாவிலே வாழ்ந்தாலும், இன்னும் வேறு எந்தெந்தப் பகுதிகளிலே வாழ்ந்தாலும், அத்தனை தமிழர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், தமிழ் கூறும்



நல்லுலகம் என்று சொல்லப்படுகிற அவ்வளவு பேரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு அந்த எழுத்துச் சீர்திருத்தம் அமைய வேண்டும். ஏதோ தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழர்கள் மட்டும் ஒன்று கூடி எழுத்துச் சீர்திருத்தம் செய்து, அந்த சீர்திருத்தத்தின் அடிப்படையிலே புத்தகங்களை வெளியிடுகிறார்கள் என்ற மனக்குறை, ஆற்றாமை இலங்கையிலே இருக்கிற தமிழர்களுக்கும் மலேசியாவிலே இருக்கிற தமிழர்களுக்கும், மற்ற நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் வந்து விட்டிருக்கிறது. அவர்களை ஒன்று சேர்த்து, எல்லா நாட்டு தமிழர்களின் அபிப்பிராயத்தைப் பெற்று, அவர்களும் உள்ளடங்கிய எழுத்துச் சீர்திருத்தக் குழுவை அமைத்து, ஒட்டு மொத்தமாக தமிழகம் ஆனாலும், மலேசியா ஆனாலும், இலங்கையானாலும் அல்லது உலகத்திலே வேறு எந்த நாட்டிலேயும் தமிழ் புத்தகம் வெளியிடப்படுமேயானால் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தான் அந்த புத்தகம் வெளியிடப்படுகிறது என்ற நிலைமை வருவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, தமிழ் வளர்ச்சித் துறையைப் பற்றியும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநரை நியமிக்கும் போது, இப்பொழுது இருக்கக் கூடிய இயக்குநர் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதிலே சந்தேகம் இல்லை. அவருடைய பணிக்காலம் முடிவடைகிறது என்று சொல்கிறார்கள். நீங்கள், 'ரொட்டீனாக' வழக்கம் போல, கல்வித் துறை இயக்குநர்களின் கருத்தைக் கேட்டு, இது போன்ற முக்கியமான பணிக்கு நியமிக்காமல், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களையும் மற்ற தமிழ் அறிஞர் களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, நேரடியாக, நியமனம் செய்ய வேண்டுமென்பதையும் நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

இறுதியாக, இராஜராஜ சோழனுக்கு ஆயிரம் ஆண்டு விழா நடத்துவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இது ஒரு சிறப்பான முயற்சி. இராஜராஜ சோழன் அரியணை ஏறி ஆயிரம் ஆண்டுகள் ஆன பின்னாலே, இந்தத் தமிழ்ச் சமுதாயம் அவனுக்கு நன்றி செலுத்து கிறது என்ற வகையிலே நீங்கள் விழா எடுப்பதற்கு என்னுடைய பாராட்டு. அதே நேரத்திலே, இராஜராஜ சோழன் சிதம்பரம் ஆலயத்திலே இருட்டறையிலே அடைபட்டுக் கிடந்த தேவாரங்களடங்கிய ஓலைச் சுவடிகளை வெளியே கொண்டுவந்து உலகுக்கு அளித்தான். அந்தப் பெருமை அவனுக்கு உண்டு. அந்தப் பெருமையை நம்முடைய அமைச்சரும் அடைய வேண்டும். ஏனென்று கேட்டால், "பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் தமிழ் ஆராய்ச்சியை நாங்கள் ஊக்குவிப்போம்" என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஐரோப்பாவிலே பல்வேறு நாடுகளிலே, பல்வேறு நகரங்களிலே, இருக்கக்கூடிய மியூசியம்

(திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்) [1983 மார்ச் 15

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம
இதுவரை 152 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்ட
தற்கும், மறைந்த திரு. தேவநேயப்பாவாணர் அவர்கள்
தொகுத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின்
முதல் படலத்தில் முதற் தொகுதியைத் தமிழ்நாட்டுப் பாட
நூல் நிறுவனத்தின் மூலம் அச்சிடுவதற்கு ஏற்பாடு செய்யப்
பட்டு, 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அச்சிட்டு
முடிக்கப்படும் என்ற தேனான செய்தியை அறிவித்ததற்கும்
புரட்சித் தலைவரவர்களின் அரசுக்கு என்னுடைய இதய
பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்
கொள்கிறேன் இதற்காகத் தமிழ்ச் சமுதாயம் என்றென்றைக்கும்
புரட்சித் தலைவர் அரசுக்குப் பாராட்டு தெரிவிக்கும் என்
பதையும் அன்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபொழுது
பள்ளிகளில் கல்வித் தரம் இதனால் குறையும் என்று சொன்
னார்கள். சில அரசியல் கட்சித் தலைவர்கள் கூட இதனால்
கல்வித் தரம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்சத்தை அப்
பொழுது தெரிவித்தார்கள். ஆனால், கிராமத்தில் உள்ள
பலருக்கு காமராஜ் காலத்தில் 10 பைசா அளவில் பகல்
உணவு 200 நாட்களுக்கு அளிக்கப்பட்டது. அப்பொழுது 8
பைசாக்களை அரசாங்கமும், ஒன்றியமும் கொடுத்து, 2
பைசாக்களை கிராமங்களிலுள்ள பொது மக்களிடத்திலேயிருந்து
வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லி, அப்படிப்பட்ட வசூ
லையும் ஆசிரியர்களே செய்ய வேண்டுமென்ற நிலைமை
இருந்தது. அப்படி அந்த ஆசிரியர்கள் வசூலும் செய்து
அன்றைக்கு சமைத்துப் போட்டபொழுது கூட கல்வித் தரம்
சிறந்ததாக இருந்தது என்று சுட்டிக்காட்டினாலும், கல்வித்
தரம் எந்தக் காரணத்திலும் குறைந்து போகக் கூடாது,
கல்வியின் தரம் தாழக் கூடாது என்ற அடிப்படையில், கல்வி
அளிக்கும் திட்டம் நல்லதொரு சிறப்பான முறையில் செயல்
பட வேண்டுமென்ற எண்ணத்தில் மாண்புமிகு கல்வியமைச்
சரவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களும் சிந்தித்து
35,000 குறள் அமுது ஆசிரியர்களை நியமித்து கல்வியின்
தரத்தில் இந்த அரசு அக்கறை கொண்டு உள்ளது என்பதை
நிச்சயப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உண்மையிலேயே
பாராட்டுவதற்கு இந்தச் சபை கடமைப்பட்டிருக்கிறது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொழி ஞாயிறு பாவாணரின் அகர முதலியின் பிற
தொகுதிகளையும் அவசியம் தொகுத்து அச்சிடும் பணியைச்
செய்து முடிக்க அன்புடன் இந்த நேரத்திலே விரும்பி வேண்டி
கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 15] (திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்)

தமிழ் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தவும், வேகப்படுத்தவும்,
மாநில அரசின் அனைத்துத் துறைகளிலேயும் தமிழை முழு
மையாகச் செம்மையாகப் பயன்படுத்தச் செய்வதற்கான ஒரு
நல்ல திட்டத்தை, மூன்றாண்டு முனைப்புத் திட்டம் என்ற
பெயரால் ஏற்படுத்தி, இரண்டு ஆண்டுக் காலம் முடிவடைந்து
இருக்கிறது. ஆனாலும்கூட நம்முடைய இயக்குநர் அவர்கள்
திரு. மா. நன்னன் அவர்களால், சிறப்பாக 2 ஆண்டு
காலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
ஆனால் இதிலே முழு பலன் கிடைத்ததா என்றால், முழுமை
யான பலன் கிடைக்கப்படவில்லை. தமிழ் வளர்ச்சி இயக்கம்
எவ்வளவு முயற்சி செய்தாலும்கூட, நடைமுறைப்படுத்த
வேண்டிய துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலை
வர்கள், போன்றவர்கள் உரிய அக்கறை செலுத்தாத கார
ணத்தால், அரசினுடைய சிறப்பு மிக்கத் திட்டம் செயல்
படுத்தப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்
கொள்கிறேன். அதே நேரத்தில், தலைமைச் செயலகத்தில்,
இன்னும் அந்தத் திட்டம் அமலாக்கப்படவில்லை என்பதையும்
குறிப்பிட விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலேயும்,
நகராட்சிகளிலேயும், கல்வி நிறுவனங்களிலேயும், இயக்குநர்
சென்று, அங்கே தமிழ் சிறப்பாக விளங்கவேண்டுமென்பதற்
காக போதிய முயற்சிகள் எடுத்தாலும் கூட, மேல் மட்டத்
திலே இருக்கின்ற அரசு அதிகாரிகள், போதிய நல்ல கருத்
தோடு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஊக்கத்தோடு
அவர்கள் செயல்படுத்தாத காரணத்தால் இந்தத் திட்டம்
இன்னும் அரை குறையாக இருந்து கொண்டிருக்கிறது என்
பதை நாம் உற்று நோக்கவேண்டும். ஒரு நல்ல குடிநீர்த்
திட்டத்தை தயாரிக்க வேண்டுமென்று சொன்னால், மக்களு
க்கு குடிநீர் தருகின்றபோது, அந்த நீர்த்தேக்கத்திற்குப்
பக்கத்திலே உள்ள குடிநீர் தரப்பிலே என்னென்ன மருந்தை
கலக்க வேண்டுமோ குளோரினைக் கலக்க வேண்டுமென்று
சொன்னால், அந்த நீர்த்தேக்கத்தின் பக்கத்திலே இருக்கின்ற
தரத்திலேயே அதைக் கலந்து மக்களுக்கு, அந்த நல்ல தண்
ணீரை சுகாதாரமான தண்ணீரைக் கொடுக்கிறார்கள். ஆனால்
அதை விட்டுவிட்டு, ஒவ்வொரு வீட்டிலேயும் உள்ள குழாயிலே
தண்ணீர் வந்த பிறகு பக்கெட்டிலே வந்து குளோரினைக்
கலக்குகிறோம் என்று சொன்னால் எப்படி அது நடைமுறைக்கு
ஒத்துவராதோ, அதேபோல மேல் மட்டத்திலே இருக்கின்ற
அதிகாரிகளைக் கொண்டு இந்தத் திட்டத்தைச் செயல்
படுத்தவேண்டுமேயொழிய, கீழ் மட்டத்திலே இருக்கின்ற
அதிகாரிகளாலே இது நிச்சயமாக செயல்படுத்தப்பட முடியாது
அரைகுறையாகத்தான் இருக்குமென்பதை. இந்த நேரத்திலே
பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாவட்டத்தலைவர்கள், அரசுச் செய
லாளர்கள், அரசுத் துறைத் தலைவர்கள், நீதிபதிகள் ஆகிய
அனைவரும் தமிழ் புரிந்தவர்களாக, பேச, எழுத, படிக்க,

அதற்கான ஏற்பாடுகளை நாம் இதுவரையில் செய்யவில்லை. இதற்கு போதிய நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் அதிலும் குறிப்பாக, பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில், இன்றைக்கும் கூட 20 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக சிறிய கட்டிடங்களிலே ஒப்படைத்து, மீதம் உள்ள பகுதிகள் ஓலைக் கொட்டகைகளிலே நடத்தப்பட்டு வந்ததோ அதேபோல்தான் 20 ஆண்டுகள் கழித்தும் கூட, பல உயர் நிலைப் பள்ளிகள் இன்றைக்கும் ஓலைக் கொட்டகையிலே நடந்து கொண்டு வருகிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். எனவே பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டு உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்குகின்ற நிதியிலிருந்து ஒரு தொகை யை இதற்கு செலவிட்டு இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் திருக்கழுகுன்றத்திலேயுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மகாபலிபுரத்திலேயும் சதுரங்கப்பட்டிணத்திலேயும் உள்ள பள்ளிகள் கடந்த 25 ஆண்டுகளாக ஓலைக் கொட்டகைகளில் தான் நடந்துகொண்டிருக்கின்றன. இவைகளை மாற்றுவதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பிளஸ் 2 கல்வி முறை மூலமாக, மேல்நிலைக் கல்வி தொடங்கப்பட்டதன் மூலமாக நல்ல பகுத்தறிவு ஏற் பட்டிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதோடு கூட ஆராய்ச்சி மனப்பக்குவம் மாணவர்களும் மாணவியர்களும் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான கல்வி மாற்றத்தை இந்த நாடு ஏற்றுக்கொண் டிருக்கிறது. அதே நேரத்தில் ஏறத்தாழ சில பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு விண்ணப்பங்கள் வந்தும் கூட அவைகளை மேல்நிலைப்பள்ளி களாக ஆக்குவதற்கு முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே இந்த ஆண்டிலாவது ஒருசில பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சில பள்ளிகளிலே வேண்டுமானால் போதிய மாணவர்கள் இல்லாமல் இருக்கலாம் போதிய வசதிகள் இல்லாமல் இருக்கலாம், அப்படிப்பட்ட பள்ளிகளையெல்லாம் மறுபரிசீலனை செய்து எவை எவை தகுதியானவையாக இருக்கிறதோ திறமையானவையாக இருக் கிறதோ அது தனியார் பள்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அப்படிப்பட்ட உயர்நிலைப் பள்ளி களை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் செங்கற்பட்டில் உள்ள திருமதி ராஜேஸ்வரி வேதாசலம் என்ற அந்தக் கலைக் கல்லூரியில் இப்போது பி.காம்., பி.ஏ. (ஹிஸ்டரி) போன்ற பட்டப்படிப்புகள்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரிக்குப் போதிய இட வசதியில்லை, கட்டிட வசதியில்லை. அந்த அம்மையார் கொடுத்த காலத்திலேயிருந்து அந்தக் கட்டிடத்திலேதான் இப்போதும் நடந்து வருகிறது. எனவே அதை மாற்றி அமைத்து போதிய கட்டிடங்களைக் கட்டித் தருகின்ற பணிகளை அர சாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். சுற்றுச்சுவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கல்லூரியிலே எம்.காம். வகுப்பும், எம்.ஏ. (ஹிஸ்டரி) வகுப்பும் தோற்றுவித்து நடத்து கின்ற பணியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விளையாட்டுத் துறைகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக ஒரு தனி இயக்குநரை அமைத்திருக்கிறார்கள். அவர் சுற்றிச் சுற்றி வந்து தன்னுடைய பணியை சிறப்பாக ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் கூட இவ்வளவு உரிய கவனம் செலுத்தியும்கூட சில இடங்களிலே மாவட்ட ரீதியாக விளையாட்டு மையங்களிலே சிறப்பாக இந்தப் பயிற்சி செய்ய வில்லை என்ற குறை நீண்டகாலமாக இருக்கிறது. மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் அக்கறையுடன் செயல்படுத்து வதாகத் தெரியவில்லை. மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் பதவிக்கு தற்போது 50 சதவீதம் மண்டல உடல் ஆய்வாளர் ஆர்.ஐ.டி.இ. என்பவர் இன்டர்வியூ கூடப் போடாமல் நியமிக் கப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு பூர்ணமான ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று சொன்னால், பாட்டியாலாவிலே 10 மாத கால பயிற்சி பெற்று, தனிச் சிறப்பு பெற்ற ஒவ்வொரு விளை யாட்டிலேயும் தனியாக பயிற்சி பெற்று இருக்கின்ற மாவட்ட பயிற்றுனர்களையே இந்தப் பதவியிலும் நியமிக்க வேண்டும். அப்போது தான் மாவட்ட விளையாட்டு மையங்கள் ஒழுங்காக செயல்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு விளையாட்டுத் துறையில் எந்த அளவுக்கு முன் னேற்பாடுகள் செயல்பட்டிருந்தாலும் கூட செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த ஆண்டு விளையாட்டு சாதனங்கள் வாங்க 7,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் ஒரு காசு கூட செங்கற்பட்டு மாவட்டத்தில் விளையாட்டு சாதனங்கள் வாங்கித்தரப்படவில்லை. இந்த குறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்) [1983 மார்ச் 15

தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென்பதை, இந்த அரசு உறுதியான முடிவை ஏற்று, தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று, இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வட மாநிலங்களிலேயிருந்து நம்முடைய பகுதிக்கு வருகின்ற லாரி பேருந்துகளுக்கு எல்லாம் இந்தி எழுத்தாலே நெம்பர் பிளேட்டுகளைப் போட்டு வருகிறார்கள், குஜராத் மொழியிலே போட்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் நாம் மொழி உணர்வில் குறைந்தவர்கள் அல்ல. அந்த நிலையைப் பார்க்கும்பொழுது இன்று தமிழகத்தில் பதிவு செய்யப்படுகின்ற லாரி, கார் பஸ், போன்றவைகளுக்கு தமிழ் வரிவடிவத்தால், தமிழ் எண்களால் பெயர் பிளேட் போடுவதற்காக அரசு உத்தரவு இடக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் அரசின் கவனத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல அரசு அலுவலகங்களிலேயும், அரசுத் துறை நிறுவனங்களிலேயும், தனியார் நிறுவனங்களிலேயும், பெயர்ப்பலகைகளை, இன்றைக்கும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வருகிறது. ஒரு எழுத்துகூட தமிழிலே எழுதப்படவில்லை பல பெயர்ப்பலகைகளை, சென்னை போன்ற பெரு நகர்களிலே, கிராமப்புறங்களிலே கூட பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்ற வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக அரசு உத்தரவு போடவேண்டும். அதில் எப்படிப் பட்ட சிக்கல்கள் இருந்தாலும், தமிழ் வளரவேண்டுமென்ற எண்ணத்தோடு அப்படிப்பட்ட உத்தரவை தமிழிலே பெயர்ப் பலகைகளைப் போடவேண்டும். வேண்டுமென்றால், ஆங்கிலத்திலே, கீழே சேர்த்துக்கொள்ளலாம் என்ற உத்தரவை இட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக, கடைகளில், ஹோட்டல்களில் கூட வியாபாரம் செய்பவன், வழங்குபவன் தமிழன் அங்கே கூட தமிழில் எழுதுவதற்குக் கூச்சப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு உடனடியாக கவனத்தில் கொள்ளவேண்டுமென்று தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் தமிழ் வளர வேண்டுமென்று பாடுபடுகிறோம். தமிழ் ஆட்சி மொழியாக வர வேண்டுமென்று போராடினோம். ஆனால் கூட, தமிழிலே சிலர் இன்றைக்குக் கூட தமிழிலே கையெழுத்துப் போடுவதை மிகக் கேவலமாகக் கருதி ஆங்கிலத்திலே தான் கையெழுத்துப் போடுகிறார்கள்.

(பேரவைத் தலைவர் தலைமை.)

3-வது, 4-வது வகுப்பு மட்டுமே படித்த நிலையில், கையெழுத்துப் போடுகிறவர்கள்கூட, தமது எழுத்து, தன்னுடைய தகப்பனார் பெயரை, ஏ. பி. என்றுதான் போடுவார்களே ஒழிய தமிழில் போடுவதற்குக் கூச்சப்படுகிறார்கள். இதை மாற்றுவதற்கான முயற்சியை தமிழிலே போடவேண்டுமென்ற முயற்சியைச் செய்யவேண்டுமென்பதைப் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 15] (திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்)

சட்டமன்றத்திலே வைக்கப்படுகிற ஏடுகள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் இருக்கிறது. தமிழில் இருக்கவேண்டுமென்று பலமுறை சட்டமன்றத்திலே குரல் எழுப்பப்பட்டது. ஆனால் சில ஏடுகள் இன்னும் ஆங்கிலத்திலே வைக்கப்படுகின்றன அதை மாற்றி அமைக்கின்ற முயற்சியை, முனைப்பாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக் கொள் கிறேன்.

அதுமட்டுமல்லாமல், செங்கற்பட்டுக்கு அடுத்துள்ள பொன்விளைந்த களத்தூரில் நள வெண்பாவை இயற்றிய பெரும் புலவர், புகழேந்தி பிறந்தார். இந்த ஊரியிலேயிருக்கின்ற உயர்நிலைப் பள்ளிக்கு அவருடைய பெயரால் புகழேந்தி அரசு உயர்நிலைப் பள்ளி என்று பெயரிடவேண்டுமென்று பல காலமாக அந்த ஊர் மக்கள் கேட்டு வருகிறார்கள். ஆனால் இது வரையிலேயும் அப்படிப்பட்ட பெயர் மாற்றத்தை செய்ய வில்லை. எனவே அப்படிப்பட்ட பெயர் மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து இந்தியத் துணைக் கண்டத்திலே முதன் முதலாக தொழிற்சங்கம் இங்கே தமிழகத்தில்தான் நிறுவப்பட்டது. அந்த தொழிற்சங்கத்தை உருவாக்கி, தமிழ்க்கடல் திரு. வி.க. அவர்கள் தான் தலைமை தாங்கினார்கள். அதைத் தோற்றுவித்தார்கள். அதற்கு உறுதுணையாக இருந்தார்கள். அப்படிப்பட்ட தமிழ்க்கடல் திரு வி.க. அவர்கள் சாகின்றபோது தமிழ்க்கடல் என்று பெயர் எடுத்தும்கூட, வறுமையிலே வாடினார்கள். இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்வதற்காக தன்னைத்தானே அழித்துக்கொண்டார்கள். அப்படிப் பட்ட திரு வி.க. அவர்களுடைய பெயராலே சென்னைக்குப் பக்கத்திலே உள்ள கிண்டி தொழிற்பேட்டைக்கு திரு.வி.க. தொழிற்பேட்டை என்று பெயர் மாற்றம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-50)

இன்றைக்கு தொடக்கப் பள்ளிகளுக்கு நல்ல தரமான கட்டிடங்கள் தன்னிறைவு திட்டத்தின் மூலமாக, தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாடு பூராவும் கட்டிடங்கள் கட்டி முடித்துவிட்டார்கள். நிரந்தரச் சொத்துக் களைச் சேர்த்துக்கொண்டு வருகிறோம். சிறிய பள்ளிகளைக் கட்டுவதற்கு போதிய வசதிகளைச்செய்து கொடுத்து வருகிறோம் ஆனால் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளி களுக்கும் போதிய கட்டிடங்கள் இருக்கிறதா என்றால் இல்லை.

அதைப்போலவே செங்கற்பட்டு, காட்டான்கொளத்தூர், அம்பத்தூர் போன்ற இடங்களிலும் ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்படாமல் இருக்கிறது. ஊரக வளர்ச்சி மைதானங்கள் மேம்பாடு செய்யப்படவில்லை. குழந்தைகள் விளையாட்டு மைதானத்திற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கிய 6,000 ரூபாயில் ஒரு சல்லி காசு கூட செலவிடப்படவில்லை. மாநில விளையாட்டு மையம் மற்றும் மாவட்ட விளையாட்டு மையங்கள் ஆகியவற்றில் ஏறத்தாழ 86 பேர்கள் பணிபுரிகின்றார்கள். பல்வேறு பயிற்சியாளர்கள் என்ற வகையில், அவர்களுக்கெல்லாம் அரசு ஊழியர்களுக்கு தரப்படுவதைப்போல் ஓய்வூதியம் கிராசுட்டி தரப்படுவதில்லை. அரசு இதிலே அக்கறை செலுத்தி அப்படிப்பட்ட நண்பர்களுக்கும் ஓய்வூதியம், கிராசுட்டி தருவதற்கு அறிவிக்கை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடல் கல்வியில் நல்ல மதிப்பெண் பெற்ற மாணவர்கள், மாணவியர்கள் கூட சிறப்பாகப் படிக்கின்ற மாணவர் மாணவியர் கூட அவர்கள் பள்ளிக்கூடத்தில் நுழைகிறபோது ஏதோ பறிகொடுத்ததைப்போல வேதனையோடு நுழைகிறார்கள். ஆனால் வெளியில் வருகிறபோது ஒரு சிறைக்குள்ளேயிருந்து வெளியே வருவதுபோல் மகிழ்ச்சியோடு வருகிறார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் பலநேரங்களில் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு மாற்றம் ஏன் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் கல்வி திட்டத்தை மாற்ற வேண்டுமென்று கல்வி அமைச்சர் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட மாற்றத்தைச் செய்து தர வேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கு. பா. பழனியப்பன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது நான் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக பள்ளிக் கல்வியிலே இருந்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி வரையிலே தமிழகத்திலே இன்று ஏராள மான மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்திருக்கிறார்கள் என்ற கருத்தை அமைச்சரின் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது மாணவர்கள் அதிக எண் ணிக்கையில் வருவது ஒருபுறம் இருந்தாலும் குறிப்பாக சத் துணவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட பிறகு இலட்சக்கணக் கான மாணவர்கள் புதிதாக சேர்ந்திருக்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஏராளமாக வந் திருக்கிறார்கள். என்று அமைச்சரவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.





அரசாங்கம் ஒன்றை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வியின் தரம் முக்கியமாக கண்காணிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதிக எண் ணிக்கையில் மாணவர்கள் சேர்ந்த பின்பும் கல்வியில் தரத்தை கண்காணிக்க அரசாங்கம் நல்ல நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆதாரமாக ஒருசில விவரங்களை நான் தெரிவிக்க விரும்பு கிறேன். குறிப்பாக முதல் வகுப்பிலிருந்து 3-ம் வகுப்புவரை மதிப்பெண் இத்தனை பெற வேண்டும் தேர்வு பெறுவதற்கு என்ற நிலை இல்லை. அவர்கள் பள்ளிக்கூடம் வந்தால் போதும், அடுத்த வகுப்புகளுக்குத் போய்விடலாம். 4, 5-வது வகுப்புவரை அவர்களுக்கு தேர்வு உண்டு. ஆனால் தேர்வில் எவ்வளவு மதிப்பெண் பெறவேண்டுமென்ற நிலை இல்லை. பின்னர் 6, 7, 8 வது வகுப்புகளில் மாணவர்கள் பள்ளிக் கூடத்திற்கு வந்து படித்தால் சரி, அவர்கள் அடுத்த வகுப்பிற்கு மாற்றப்படுகிறபோது குறைந்தபட்சம் 15 சதவீத மார்க்குகள் தேர்வில் பெற்றால் போதும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-00)

அதற்கு மேலே 9-வது வகுப்பிலே தேர்வுக்கு 20 சதவீதம் மதிப்பெண் என்று இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் 9-வது வகுப்பிற்குப் பிறகு 10-வது வகுப்புக்கு வருகிறபோது அரசாங்கத் தேர்வு வருகிறது. இதுவரையில் 15% 20% மார்க் வாங்கிய மாணவர்கள் 10-வது வகுப்பிலே முதன் முறையாக அரசாங் கத் தேர்வை சந்திக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத் தேர்வை சந்திக்கும்போது அதிலே மொழிப் பாடத்திலே 40 மதிப் பெண்ணும் அதைத்தவிர மற்ற பாடங்களில் 35 மதிப்பெண் களும் பெற்றால்தான் அதற்கு மேல் இருக்கிற வகுப்புகளுக்குச் செல்ல தகுதி பெற முடிகிறது. இப்போது இருக்கிற இந்த நிலையை மாற்றி, ஏற்கெனவே ஒவ்வொரு வகுப்பிலும் ஓரளவுக்கு அந்த தரத்தை உயர்த்திக்கொண்டே வந்து, 10 20, 25, 30 சதவீதம் என்று இப்படி உயர்த்திக்கொண்டே வந்து இருந்தால் 10-வது வகுப்பிலே வந்தவுடன் திடீரென்று 40 மார்க் வாங்கவேண்டுமென்ற கடுமையான நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படமாட்டார்கள். மாணவர்களுடைய கல்வித் தரமும் அந்த வகையிலே உயர்ந்துகொண்டே வரும். ஆகவே அர சாங்கம் என்னுடைய இந்தக் கருத்தை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மேல்நிலைப் பள்ளியில் தொழில் பாடம் இருக்கிறது. இந்த தொழில் பாடம் படிக்க அங்கே எத்தனை பேர் வருகிறார்கள், எத்தனை பேர்களுக்கு வசதி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். போதுமான அளவுக்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் களா என்ற விவரத்தையும் பார்க்க வேண்டும். அந்த விவரங்

கள் எல்லாம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே 1978-க்கு முன்னால் இருந்த பாடத்திட்டத்தில் 'பைபர்கேட்டட் கோர்ஸ்' என்று இருந்தது. இப்போது எஞ்சினியரிங் கோர்ஸ், கமர்ஷியல் கோர்ஸ் எல்லாம் இருக்கின்றன. முன்னாலே என்ன உபகரணங்கள் இருந்தனவோ அவைதான் இப்போதும் இருக்கின்றனவே தவிர, அதற்கு மேலே ஒன்றும் இல்லை. இப்போது எத்தனை மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்படுகிறார்களோ அந்த அளவுக்கு உபகரணங்கள் அங்கே இல்லை: ஆசிரியர்களும் இல்லை. 'இன் அடிக்குவசி ஆஃப் ஸ்டாஃப், இன் அடிக்குவசி ஆஃப் இக்விப் மெண்ட்ஸ்' என்ற நிலைமையில் பிரச்சனைகள் இருக்கின்றன. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கம் அதிலே உரிய கவனம் செலுத்தி தேவையான அளவுக்கு உபகரணங்களையும் வாங்கிக் கொடுத்து' ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் படிப்பைப் பொறுத்த மட்டில், குழந்தைசாமி கமிட்டி அறிக்கையை அமைச்சரிடம் தந்து பல மாதங்கள் ஆகியும் அது இன்றைக்கும் இந்த மன்றத்திலே வைக்கப்பட வில்லை என்ற குறை இருக்கிறது. அவர்களுடைய அறிவுரை கள் நிச்சயமாக நல்ல பயன் அளிக்கக்கூடியவையாகத்தான் இருக்கும். அந்த அறிக்கையை இந்த மன்றத்தின் முன் வைத்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் தெரிந்து, செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு மையம் வந்தபிறகு ஏற்கெனவே கேர் நிறுவனத் தில் ஏறத்தாழ 100 உணவு மையங்கள் அல்லது சமையல் கூடங்கள் இருந்தன. அந்த சமையல் கூடங்களுக்கு சமையல் வசதிகளும் இருந்தன. தேவையான வேலையாட்களும் வாகன இருந்தார்கள். இன்றைக்கு இந்த சத்துணவு அங்கே ஏற்பட்ட பிறகு கேர் நிறுவன சமையல் மையங்கள் மூடிக்கிடப்பதாகவும் அங்கே இருந்தவர்கள் கூடங்கள் எல்லாம் யற்றிருப்பதாகவும் நான் அறிகிறேன். அது இன்றைக்கு வேலை றால் அரசு அதிலே கவனம் செலுத்தி, உண்மை என் கூடங்களையும் ஆட்களையும் ஏன் அந்த சமையல் கூடாது, அதிலே என்ன தவறு பயன்படுத்திக்கொள்ளக் சரவர்கள் தன்னுடைய பதில் உரையில் இருக்கிறது என்பதை அமைச் நான் நம்புகிறேன். விளக்குவார்கள் என்று

கல்லூரிக் கல்வியைப் பொறுத்த மட்டில் மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களின் சென்னை, சீர்திருத்தம் செய்யப் போகிறோம், நிர்வாகத்தை போகிறோம் என்று ஆளுநர் உரையில் சட்டத்தைத் திருத்தப் உரையிலே தெளிவாகக் 1980 ஆம் ஆண்டு கவனத்திற்குக் கொண்டு வர குறிப்பிட்டிருந்ததை அமைச்சரின் விரும்புகிறேன். ஆளுநர் உரை



யிலே குறிப்பிட்டபடி நல்ல சீர்திருத்தம் வரும், ஜனநாயக அடிப்படையிலே மாறுதல் ஏற்படும். பல்கலைக் கழகங்கள் நல்லமுறையிலே செயல்படும், இன்னும் பல்வேறு பாடத் திட்டங்களை வகுத்து, அது மாணவர்களுக்கு நல்லமுறை யிலே பயன்படும் என்று நான் ஆவலோடு எண்ணிக்கொண் டிருந்தேன். ஆனால் 1980 ஆம் ஆண்டு சொல்லப்பட்டது இன்றுவரையில் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அன்றையதினம் சொல்லும்போது கூட மாண்புமிகு கல்வி அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ சொன்னதாக எனக்கு ஞாபகம். 'இந்த அமைச்சரவை எந்த அரசருக்கும் கட்டுப்பட்ட தில்லை என்று சூசகமாகச் சொன்னார்கள். உண்மையிலேயே நீங்கள் எந்த அரசருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்றால் அன்று சொன்னதை உடனடியாக நிறைவேற்றுங்கள்.

அதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அரசாங்கம் சீர்திருத்தம் கொண்டுவருவோம் என்று அறிவித்தது. அங்கே பணியாற்றுகின்றவர்கள், குறிப்பாக ஆசிரியர்கள் அந்த அறிவிப்பை வரவேற்றார்கள் என்ற காரணத்திற்காக அந்தப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் இன்றைக்கு பழிவாங்கப்படுகிறார் கள் என்று நான் அறிகிறேன். ஆளுநர் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கெல்லாம் வேந்தர் என்ற பொறுப்பிலேஇருக்கிறார்கள் அப்படி அவர்கள் வேந்தர் என்கிற பொறுப்பிலே இருக்கிற காரணத்தால், கல்லூரிகளிலே பணியாற்றுகிறவர்கள் அவரைச் சென்று சந்தித்து இருக்கின்றனர். ஆனால் நிர்வாகம் அதற்கு என்ன சொல்கிறது என்றால், எப்படி அவர்களை சந்திக்கலாம் விடுமுறைப்போட்டு விட்டு என்று கேட்டு மெமோ கொடுத் திருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியப் பெருமக்களுடைய சங்கத்தின் தலைவராக இருக்கும் திருவாளர் கள் ஏ.எல். சிதம்பரம் அவர்களுக்கும், ஏ. ஷண்முகம் அவர் களுக்கும், ஆளுநரைப் போய் ஏன் சந்தித்தீர்கள் என்று அதையே ஒரு குற்றமாகக் கருதி மெமோ கொடுத்திருக்கிறார்கள்.

ஆளுநரை சந்திக்கக்கூடாதா? ஆளுநர் அவர்கள்தாம், பல் கலைக் கழகத்தின் வேந்தராக இருக்கிறார்கள். அவரைச் சந்தித்தது குற்றம் என்று கூறி ஒரு மெமோ கொடுத்தது எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது. அது நியாயம் தானா? அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்? இவை எல்லாம் பழி வாங்கக் கூடிய முறையில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளே. குறிப்பாக அரசாங்கத்தின் அறிவிப்பை ஏற்றுக் கொண்டதற்காக, பழி வாங்கப்படுகிறார்கள். இந்த நேரத்திலே அரசாங்கம் அவர் களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய திட்டத்தை வரவேற்றார்கள் என்ற குற்றத்திற்காக அவர்கள் பழிவாங்கப்பட விட்டு விடக் கூடாது என்று நான் அறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரசாங்கத்திலே, பல அரசு கல்லூரிகளிலே இன்னும் தற்காலிகமாக 10 (ஏ) (1) என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஏறத்தாழ 20 ஆசிரியர்கள் பல ஆண்டுகாலமாக பணியாற்றி வருவதாக எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கிறது. அவர்களையெல்லாம் நிரந்தரமாக்குவதற் காக பணிகளிலே அரசாங்கம் நிச்சயமாக ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேறொரு செய்தி உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஏறத்தாழ 70 ஆயிரம் பேர்களுக்கு, யேர்ன்ட் லீவு என்று சொல்லக்கூடிய அந்த விடுப்புகளிலே ஒரு மாறுதல் ஏற் படுத்தியிருப்பதாக நான் அறிகிறேன். இங்கே என்.ஜி.ஓக்கள் 280 நாட்கள் வேலை பார்த்தால், 33 நாட்கள் யேர்ன்ட் லீவு என்று இருக்கிறது. என்.ஜி.ஓக்களுக்கு இந்த முறை பொருந்து கிறது. ஆனால், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியப் பெருமக்களுக்கு 220 நாட்கள் வேலை நாட் களாக வைத்து, 10 நாட்கள்தான் யேர்ன்ட் லீவு என்பதாக வைத்திருக்கிறார்கள். இந்தப் போக்கு தவிர்க்கப் படவேண்டும். அவர்களுக்கும் கூட நிலைமையை மாற்றி. ஏற்கெனவே இருந்த படி 200 வேலை நாட்கள் என்று வைத்து, இந்த விகிதாசாரப் படி, 23 நாட்கள் யேர்ன்ட் லீவு என்பதாக போடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிச்சயமாக அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள்-மாணவர்கள்விகிதங்கள் அதிகப்படுத்தப்படுவதன் காரணமாகத்தான், நல்ல முறையில் மாணவர்களுக்கு ஆசிரியர் கள் கல்வி போதிக்கிற ஒரு வாய்ப்பை ஆசிரியர்கள் முழுமை யாக நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. அதிக பட்சம் 30 மாணவர்கள் ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தை வலியுறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஒரு வகுப்பிலே 50, 60 மாணவர்கள் என்று இருந்தால், அவர்கள் மாணவர்களை அடக்கி அவர்களைப் பார்வையிலே வைத்துக் கொள்வதே மிகப் பெரிய பிரச்னையாக ஆகிவிடுகிறது. பிறகு அவர்களுக்கு பாடங்களைப் போதிப்பது எப்படி என்கிற நிலைமை எல்லாம் வருகிறது. ஆகவே, அந்த வகையிலே இந்த மாணவர் கள் ஆசிரியர்களின் விகிதாசாரத்தை அரசாங்கம் கருத்திலே கொண்டு, அந்த அடிப்படையிலே ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு தற்போது கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையிலே புதியதாக வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்று சொல்லு கிறார்கள், இப்படிஏற்கெனவே இருக்கிற பணிகளிலே போதுமான ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமாக, இந்த திட்டத்தையும் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்லிக்கொள்ள விரும்புவது தமிழ்நாட்டிலே மிக நல்ல பேர் எடுத்து இருக்கக் கூடி பெரிய நூல் நிலையமான கன்னிமாரா நூல் நிலையம்



இன்று சென்னையிலே இருக்கிறது. அந்த நூல் நிலையத்தை நூலை வெளியிலே எடுத்துப்போவதற்கான நூல் நிலையமாக இருப்பதை மாற்றி அமைத்து ஒரு ரெஃபெரன்ஸ் லைப்ரரி என்ற வகையில், தமிழ்நாட்டிலே எல்லாப் புத்தகங்களும் கிடைக்கக்கூடிய எல்லாவகையான விவரங்களையும் ஒரே இடத் தில் பார்த்து தெரிந்துக் கொள்ளலாம் என்ற நிலையை ஏற் படுத்துகிற அளவுக்கு, பெரிய ரெஃபெரன்ஸ் லைப்ரரியாக மாற்ற வேண்டும். இது தமிழகத்தனுடைய தலைமையாய நூல் நிலையம் மட்டும் அல்ல, நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள், அடிக்கடி அந்த நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகங்களை படித்திருக்கிறார் என்ற செய்திகளை நாம் அறி வோம். அந்த வகையிலே அந்த நூல் நிலையத்தை பார்வை நூலகமாக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு செய்தி, தமிழ்நாட்டிலுள்ள எழுத்தாளர்கள் எல்லாம் ஒரு போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். வருகிற ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி அன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளிலே இந்த மாதம் 9 ஆம் தேதி அன்றைக்கு ஒரு செய்தி வந்ததை நான் பார்த்தேன். அவர்கள என்ன சொல்கிறார்கள். தமிழ் நாட்டி லுள்ள நூல் நிலையங்களில் புத்தகங்களே வாங்கப்படுவது இல்லை. அந்தப் புத்தகங்கள் வாங்கும் பணி நிறுத்தப்பட்டிருக் கிறது. அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டும். மறுபடியும் நூல் நிலையங்களில் புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் என்ன பதில் சொல்லப்போகிறது என்று நான் தெரிந்துக்கொள்ள விரும்பு கிறேன். அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை அரசாங்கம் தவிர்க்க வேண்டும். அதற்கு நூல் நிலையங்களுக்கு தேவையான புத்தகங்கள் அனைத்தையும் மறுபடியும் வாங்க அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு குறைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விழுப்புரம் நகரம் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு முக்கிய மான இடம். அதிலே மற்ற கல்லூரிகளுக்கு இருப்பதைவிட அதிகமான எண்ணிக்கையிலே மாணவர்கள் தங்களுக்கு இடம் வேண்டும் என்ற கோரிக்கையை ஆண்டுக்கு ஆண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நானும் அந்தக் கோரிக்கையை அமைச்சர் மூலமாக அந்தத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். அங்கே மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் தொடங்குவது குறிப் பாக பி.காம்., பி.ஏ., போன்ற வகுப்புகளை மாலை நேர வகுப்புகளாக தொடங்குவதன் மூலம் அங்கே ஏற்படக்கூடிய ஏராளமான நெரிசலை சமாளிக்க முடியும். மாலை நேர வகுப்பு கள் நடத்த அங்கே போதுமான இட வசதி இருக்கிறது.

திரு. கு. பா. பழனியப்பன் [1983 மார்ச் 15

ஊரிலேயே மையப் பகுதியில் அந்தக் கல்லூரி அமைந்திருப்
பதனாலே, இரவு நேரங்களிலும் கூட சொல்லிக் கொடுக்க
எளிதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோல எம்.ஏ., எம்.எஸ்.ஸி வகுப்புக்களைக்கூட
தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.
அதிலே எல்லாம் கூட நான் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்
திருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் அரசாங்கத்தின்
சார்பாக பாலிடெக்னிக்குகளே கிடையாது. ஒவ்வொரு
மாவட்டத்திலும்ஒவ்வொரு அரசாங்க பாலிடெக்னிக் இருக்கிறது.
ஆனால் தென்னாற்காடு மாவட்டத்திலே இல்லை என்ற காரணத்
திற்காக ஒரு பாலிடெக்னிக்கை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

ஏறக்குறைய ஐந்தாறு சர்க்கரை ஆலைகள் அந்தப் பகுதியில்
இருப்பதால் சர்க்கரைத் தொழில் சம்பந்தமான தொழில்
நுணுக்கப்பள்ளி அங்கே அமைக்க வேண்டும். பெண்களுக்கு என்று
ஒரு பாலிடெக்னிக் அமைக்க வேண்டும் என்று அது சம்பந்தமாக
நான் ஒரு வெட்டுத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறேன். எனவே
அதை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து வளவனூரில் பெண்களுக்கு என்று ஒரு மேல்நிலைப்
பள்ளி வேண்டும் என்ற கோரிக்கையினை நான் ஏற்கெனவே
கொடுத்திருக்கிறேன். அதையும் செய்து தர வேண்டும்.

அடுத்து பல்வேறிடங்களில் பள்ளிக் கட்டிடங்கள் சீரமைக்கப்
படாமல் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து
கல்வியை அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு அந்தக்
கல்விக் கூடங்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமா அல்லது
பஞ்சாயத்து யூனியன் பாதுகாக்க வேண்டுமா என்ற நிலைமை
ஏற்பட்டு தற்போது கல்விக்கூடங்கள் பஞ்சாயத்து யூனியன்
பொறுப்பிலே இருந்தாலும் அந்தப் பொறுப்பினை அவர்கள்
தட்டிக் கழிக்கின்ற நிலையில் எனக்குத் தெரியாது என்று
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக விழுப்புரம் தொகுதி
யில் ஆனங்கூர் என்ற கிராமத்திலே உள்ள பள்ளிக் கட்டிடம்
இடிந்து விழும் நிலையில் மாணவர்களுக்கு ஆபத்தான நிலை இருக்
கின்றது அதை உடனடியாக சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

அடுத்து விழுப்புரம் நகரத்தில் உள்ள கீழ்ப்பெரும்பாக்கம் என்ற
இடத்திலேயும் இன்னும் பல இடங்களிலும் பள்ளிக்கூட கட்டிடங்
களே இல்லாத கேவலமான நிலைமை இருக்கின்றது. அவற்றுக்
கெல்லாம் முறையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.



1983 மார்ச் 15]

திருமதி. தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்
பாக எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றி
கூறிக்கொண்டு எங்களுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்
பட்டுள்ள அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் ஆதரித்து
கல்வியின் சார்பிலே நான் பேச முனைகிறேன்.

இன்றைக்கு இந்த மன்றத்திலே பேசிய அனைத்து சட்ட
மன்ற உறுப்பினர்களும் அதிகமாகப் பேசியது பள்ளிக்கட்டிடங்
கள் பற்றித்தான். ஆக பள்ளிக்குக் கட்டிங்கள் தேவை என்ற
முறையில் தன்னிறைவுத் திட்டம் என்ற அமைப்போடு மிக
விரைவாக் குறிப்பாக இந்த ஆண்டே முடியுமானால் கூட
சேர்த்துக்கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். தன்
னிறைவுத் திட்டம் என்ற முறையில் புதிய கட்டிடங்களைக்கட்ட
வேண்டும். அதோடு நாட்டாண்மைக் கழகத்தால் ஏற்படுத்தப்
பட்ட அந்த பள்ளிக் கட்டடங்கள் இதுவரை சீர்படுத்தப்படாமல்
இடிந்து விழும் நிலையில் அங்கே பயிலும் மாணவர்களின்
உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றன.
முதலிலே அவற்றைச் சீர் செய்வதற்கு ஒரு விரைவுத் திட்டத்தைக்
கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிக்கு நம்முடைய ரெவின்யூ
அமைச்சர் அவர்கள் வந்தபோது அவர்களிடம் அனைத்துப்
பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர் அவசியம் தேவை என்று குறிப்பிட்
பட்டது. குறிப்பாக கிராமங்களிலிருக்கின்ற பள்ளிகளில் மிருகங்
களும் அனாவசியமான மனிதர்களும் வந்து மாணவர்களுடைய
படிப்புக்கு இடையூறாக இருக்கின்ற நிலைமை இருக்கின்றது.
அது மாணவியர்களுடைய ஒழுக்கத்திற்கும் கேடாக அமைகின்றது
என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றிற்கு சுற்றுச் சுவர் தேவை
என்று அமைச்சரிடம் கேட்டபோது அதற்கான தொகை ஒதுக்கப்
படவில்லை, இருந்தபோதிலும் சிபாரிசு செய்கிறேன் என்று
சொன்னார்கள். ஆரகலூருக்கு அவசியம் இப்படி தேவை என்று
கேட்டபோது அவசியம் செய்து தருகிறேன் என்று கூறினார்கள்.
ஆக அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர் அவசியம் தேவை
என்பது ஒரு புறம் இருக்க குறிப்பாக மாணவியர் பயிலும் உயர்
நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளுக்கு அவசியம் சுற்றுச் சுவர்
எழுப்பிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்ற ஆண்டு நான் பேசும்போது 6-ஆம்
வகுப்புக்கு மேல் இருக்கும் அனைத்து பள்ளிகளுக்கும் கழிப்பிட
வசதி அவசியம் தேவை ஏனென்றால் அங்கே பயிலும் மாணவியர்
கள் கழிப்பிட வசதி இல்லாமல் அவதியுறுகிறார்கள் என்று நான்
குறிப்பிட்டேன், எனவே அந்தச் செய்து தர வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

சென்டேட்டிவ்களை வைத்து ஒரு குழு அமைத்து, இந்த ஆண்டு மே மாதம் முதல் அப்படிப்பட்ட ஒரு குழுவை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் அதை வற்புறுத்திக் கூறுகிறேன் என்றால் 1980 81ல் என்னுடைய தொகுதியில் தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்பட்ட பெரிய ஒரு சலசலப்பான செய்திக்கு அப்பீல் மூலம் கொடுத்தும் கூட அதற்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படவில்லை. என்போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை, குறிப்பாக பொதுப்படையாக எடுத்து வைத்த காரணத்தால் உடனே அமைச்சரவை யார் என்று நான் கூற விரும்பவில்லை என்றாலும் கூட, இதோ இந்த சட்ட மன்ற உறுப்பினர்தான் இந்த குற்றசாட்டை வைத்தார்கள் என்று அங்குள்ள அதிகாரிகளுக்கோ, போலீஸ்காரர்களுக்கோ. மற்றவர்களுக்கோ எடுத்து கூறுவதன் காரணமாக நாங்கள் எல்லாம் அங்கே நல்ல முறையில் பணியாற்றவோ குற்றங்குறைகளை நல்ல முறையில் இங்கே எடுத்து சொல்லவோ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

இப்போது நாம் ஹையர் செகண்டரி முறையை கொண்டு வந்து நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம். முன்பு 10வது எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களுக்கு கொடுத்த அதே உதவித் தொகைதான் இப்போது ஹையர் செகண்டரி படிக்கின்ற மாணவர்களுக்கும் கொடுக்கிறோம். அதையும் உரிய காலத்தில் கொடுக்கவில்லை என்று பல புகார்கள் வருகின்றன. குறிப்பாக அரசு கலைக்கல்லூரியில் ஒருபையன் தேர்வு எழுதும்போது காப்பி அடித்து விட்டான் என்ற குற்றத்திற்காக அவனுடைய ஸ்காலர்ஷிப் நிறுத்தப்பட்டு அவனுடைய சான்றிதழ்களும் கொடுக்கப்படாமல் இருந்த காரணத்தால் அவன் 3 ஆண்டுக்கு பின்புதான் தேர்வு எழுதி பாஸ் செய்த பின்பு, இதுவரையில் அவனுடைய சான்றிதழ்கள் அவனுக்கு கொடுக்கப்படாமல் உள்ளது.

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-20)

ஏற்கனவே இந்த சட்டமன்றத்திலே நான் கூறியிருக்கிறேன். அவனுடைய வாழ்க்கை பாழடிக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் கல்விக்காக நாம் அதிகமாகச் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இது மிகச் சிறு அளவுதான் என்று சொல்லிக் கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மொழிப்பிரச்சினையைப்பற்றி அனைவரும் எடுத்துக் கூறினார்கள். அதைப்பற்றி நான் அதிகம் பேசாவிட்டாலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்களோ அதைப்போல் பிற மொழிகளிலும் ஆர்வம் காட்டவேண்டும், திணிக்கவில்லை என்று அவர்கள் சொன்னாலும் அந்த மொழியைக் கற்றுக்கொள்கிறோம் என்று மாணவர்கள் முன்வந்தால் அவர்கள் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்குவது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது இந்த அரசாங்கத்தினுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



முன்பெல்லாம் 1,2,3 ஆம் வகுப்புகள் கண்டிப்பாக படித்துத்தான் தீர வேண்டும், தேர்வு எழுதி பாஸ் செய்துதான் தீரவேண்டுமென்ற முறை இருந்தது. நான் அதை வரவேற்கிறேன். இன்றைய முறை அவ்வளவு சரியான காரியமாக தெரியவில்லை. இளம் மனத்திலே தேர்வு பயம் கூடாது என்ற முறையில் இருந்தாலும்கூட அந்தச் சூழ்நிலையில் கல்வியின் தரம் ஓரளவுக்கு குறைந்துக்கொண்டு வருகிறது என்பதை நாங்கள் கிராமங்களிலே கண்கூடாகக் கண்டுகொண்டு இருக்கிறோம். வட்டார ரீதியாக ஒரு பள்ளியை ஏற்படுத்த வேண்டும். அதிலே அந்த வட்டாரத்திலே நன்றாகப் படிக்கக்கூடிய பிள்ளைகளை எடுத்து, அவர்களை நன்றாக படிக்கவைக்க முடியும் என்ற நோக்கத்தோடு, அங்கேயுள்ள தலைமையாசிரியர் மூலமாக ஒரு பள்ளிக்கு ஒரு மாணவனையாவது தேர்ந்தெடுத்து வட்டார அளவில் ஒரு பள்ளியை ஏற்படுத்தி, எப்படி கோயம்புத்தூரில் அமராவதி நகரில் சைனிக் ஸ்கூல் இருக்கிறதோ அதைப்போல அனைத்துத் துறைகளிலும் வல்லுநர்களாக அரசாங்கமே அவர்களைக் கொண்டுவர முடியும். அப்படிச் சூழ்நிலை ஏற்பட்டால் மற்ற மாணவர்களும் தாங்களும் அதுபோல் வரவேண்டும், முதல் மாணவனாக வரவேண்டும், நன்றாகப் படிக்கவேண்டும் என்ற கருத்தைக் கொள்வார்கள். அதோடு தாங்கள் எல்லாத் துறைகளிலும் வல்லுநர்களாக ஆவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பாகவும் இருக்கவேண்டும்.

இப்போது சத்துணவுத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதை நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய எம்.எல்.ஏ சத்துணவுத் திட்டத்தை வரவேற்றார் என்ற கருத்தைக் கூற நான் தயாராக இல்லை. அதில் சில பல குறைபாடுகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வது எல்லாம் சத்துணவு போடுகிறோம் என்று குழந்தைகளுக்கு சத்துணவு போடுகிறபோது, அதே சந்தர்ப்பத்திலே விடுதியிலே தங்கும் மாணவர்கள் நமக்கு என்ன தீங்கு செய்தார்கள், அவர்களுக்கு கொடுக்கக்கூடிய உதவித் தொகையை நீங்கள் அதிகப்படுத்தவே இல்லை. இன்றைக்கு அவர்கள் ஒட்டிய வயிறோடு கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும், மேல்நிலைப்பள்ளிகளுக்கும் சென்றுகொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறது. உரிய காலத்தில் பாடப்புத்தகங்கள் கொடுக்கவில்லை, உதவுத்தொகை கொடுக்கவில்லை, அவர்களுக்கு நல்ல கட்டட வசதி கிடையாது, சுகாதாரம் கிடையாது, லைட் வசதி கிடையாது. இப்படி கீழே உள்ள பயிரை வளர்க்கிறோம் என்று சொல்லி வளர்ந்துவிட்ட பயிரைக் கருக்குவது ஏன்? இந்த அரசுக்கு ஏன் இரட்டை நிலை என்ற கேள்வியை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மேனேஜ்மெண்ட் பள்ளிகளைப் பொறுத்தவரையில் நகரங்களிலே மற்றவர்களின் பார்வையில் அல்லது தாய் தந்தையரின் கண்காணிப்பில் அந்தப் பள்ளிகள் நடந்தேறலாம். ஆனால் மேனேஜ்மெண்ட் பள்ளிகளில் பயிலும் அந்த மாணவர்களின்

[திருமதி தா. இராசாம்பாள்]

அடுத்து இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஆரம்பக் கல்வியினை அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு இரண்டு விதமான சங்கடங்கள் இருக்கின்றன. ஆரம்பக் கல்வியை அரசாங்கம் எடுத்துக்கொண்டாலும் கட்டிடங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம்தான் இருக்கின்றன. மேலும் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம்தான் இருக்கின்றது. எனவே ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தங்களுக்குத் தேவையான தொகையைப் பெற்று தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அந்த வருங்கால வைப்பு நிதியை உடனடியாக ஏ.ஈ.ஓவிடம் ஒப்படைத்து ஆசிரியர்கள் நன்மை பெற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏ.ஈ.ஓ.வுக்கு அலுவலகம் இல்லை. ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் ஏதோ பிச்சை கேட்பது போன்று எனக்கு கொஞ்சம் இடம் கொடுங்கள், எனக்கு மெஷின் கொடுங்கள் நான் கொஞ்சம் அடித்துக்கொள்கிறேன், கொஞ்சம் காகிதம் கொடுங்கள் என்றெல்லாம் கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. கல்விக்காக எவ்வளவோ தொகை செலவிடுகின்ற நாம் நிர்வாக சம்பந்தப்பட்ட வகையிலே வேண்டிய வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒன்று ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள பள்ளிகளைப் பார்வையிட ஆணையாளரும் செல்வதில்லை' ஏ.ஈ.ஓவும் செல்வதில்லை. ஏனென்றால் ஏ.ஈ.ஓவுக்கு நிர்வாக வேலைகள் அதிகம். மிஞ்சிக் கேட்டால் எனக்கு வாகன வசதி இல்லை, ஜீப்பை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார், நான் எத்தனை ஊர்களுக்கு சைக்கிளில் செல்ல முடியும் என்று சொல்கிறார். எனவே கல்வி மேற்பார்வை சரியான சூழ்நிலையில் இல்லை என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த பட்சம் அவர்களுக்கு கடன் உதவி செய்து மோட்டார் பைக் வாங்கிக் கொள்வதற்கு ஒரு வசதி செய்து தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆத்தூரில் அரசினர் கலைக்கல்லூரி இருக்கிறது அது மிகவும் பொட்டல் காடாக உள்ள இடத்திலே மாணவர்கள் ஒதுங்குவதற்கு கூட இடம் இல்லாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதற்கு மாடிக்கட்டிடம் ஒன்று வேண்டும் என்று சென்ற ஆண்டு கேட்டேன். ஆனால் அது கிடைக்கப்பெறவில்லை. இனி வருங்காலத்தில் கட்டும் கட்டிடங்கள் அனைத்தும் இட வசதியை கருத்தில் கொண்டு கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி நகரத்தைப் போன்று மாடிக் கட்டிடங்களைக் கட்டி மாணவர்களுக்கு நல்ல இடவசதியை பெருக்கி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். அங்கே விடுதி கேட்டிருந்தேன். விடுதியும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால்



ஆத்தூரிலுள்ள கலைக்கல்லூரி மாணவர்கள் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்த கல்லூரிக்குள் பஸ் செல்வதற்கு வசதியில்லை. அவர்கள் ரோடில் இறங்கி 2, 3 பர்லாங்கு தூரம் சைக்கிளிலோ, நடந்தோ செல்லும்போது பல இடையூறுகள் ஏற்படுகின்றன. அங்கு படிக்கும் பெண்களுக்கு வழியில் பல் இடையூறுகள் மாலை நேரங்களில் காலங்கடந்து வந்தால் பல இன்னல்கள் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறபடியால் அங்கே விடுதி வசதியையும், கட்டிட வசதியையும்—குறிப்பாக பஸ் வசதியையும் செய்து கொடுத்தால் நன்மையாக இருக்கும் என்ற கருத்தை வெளியிட ஆசைப்படுகிறேன்

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காமராஜ் அவர்களுக்கு விழா எடுப்பதாக கூறினார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம் காமராஜிக்கு விழா எடுப்பதைவிட முக்கியமான அவர்களுடைய சொள்கை வரலாற்றை ஒரு துணைப்பாடமாக வைத்து மேல்நிலை, உயர்நிலைப்பள்ளிகளில் அதை ஒரு துணைப்பாடமாக வைப்பதோடு ஆரம்பப் பள்ளிகளில், சிறு பிள்ளைகளுக்கு கல்வி முக்கியம் என்ற நோக்கத்தை கற்பித்த அந்த பெரியவர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை சிறு புத்தகமாக வெளியிட்டு, அவர்கள் பாடத்தோடு இணைத்து அங்கே சொல்லிக்கொடுக்கவேண்டும். அப்படி இல்லை என்றால் பாட்டு வடிவில் அவர்கள் மிக சுலபமாக கற்றுக்கொண்டு எங்கு சென்றாலும் அதை பாடி மகிழும் வண்ணம் செய்யவேண்டும் என்ற கருத்தை வெளியிட ஆசைப்படுகிறேன்.

ஏற்கனவே ஆசிரியர்கள் மாறுதல் குறிப்பாக ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மாறுதல் என்று சொன்னால் அங்குள்ள சேர்மேன், அங்குள்ள ஆணையாளர், டீ. டீ. ஓ. ஆகியோர் கொண்ட, அவர்கள் கமிட்டியில் முடிவு எடுத்து, ஏப்ரல் மாதத்தில் சுற்றறிக்கை வைத்து மே மாதத்தில் அந்த மாறுதலைப் போட்டு ஜூன் மாதத்தில் ஆசிரியர்கள் அவரவர்களுக்குரிய இடத்திற்கு சென்று சேர்ந்து நல்ல முறையில் பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருந்தது. ஆனால் இன்று அதிகாரிகள் மாவட்ட அளவிலுள்ள கல்வி அதிகாரி அவர்களும், ஏ.ஈ.ஓ. அவர்களும் கூடி இந்த லிஸ்டை தயார் செய்து போடுவதால் "தடி எடுத்தவன் தண்டக்காரன், கோல் எடுத்தவன் கொள்ளக்காரன்" என்பது போல் அவர்கள் நினைத்தபோது வருடம் பூராவும் 365 நாட்களுக்கும், ஒரு நாளைக்கு ஒரு மாறுதல் என்ற முறையில் போட்டுக்கொண்டிருப்பதால், ஆசிரியர்களுடைய நிலைமை மிகவும் மோசமான சூழ்நிலையில், அவர்கள் பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு படிக்கின்ற மாணவர்களை, குறிப்பாக உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு டீ.சி. வாங்கிச்சென்று, மற்ற இடங்களில் சேர்க்கமுடியாத சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே மீண்டும் முன்புபோல் சேர்மேனுக்கு பதிலாக சட்டமன்ற உறுப்பினர்களையும், ஆசிரியர் டீ.ஈ.ஓ. ஏ.ஈ.ஓ. அவர்களைக் கலந்து, ஆசிரியர்களுடைய பிரதிநிதி

செனட்டேட்டிக்களை வைத்து ஒரு குழு அமைத்து, இந்த ஆண்டு மே மாதம் முதல் அப்படிப்பட்ட ஒரு குழுவை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் அதை வற்புறுத்திக் கூறுகிறேன் என்றால் 1980-81ல் என்னுடைய தொகுதியில் தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்பட்ட பெரிய ஒரு சலசலப்பான செய்திக்கு அப்பீல் மூலம் கொடுத்தும் கூட அதற்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படவில்லை. என்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை, குறிப்பாக பொதுப்படையாக எடுத்து வைத்த காரணத்தால் உடனே அமைச்சரவை யார் என்று நான் கூற விரும்பவில்லை என்றாலும் கூட, இதோ இந்த சட்ட மன்ற உறுப்பினர்தான் இந்த குற்றசாட்டை வைத்தார்கள் என்று அங்குள்ள அதிகாரிகளுக்கோ, போலீஸ்காரர்களுக்கோ, மற்றவர்களுக்கோ எடுத்து கூறுவதன் காரணமாக நாங்கள் எல்லாம் அங்கே நல்ல முறையில் பணியாற்றவோ குற்றங்குறைகளை நல்ல முறையில் எடுத்து சொல்லவோ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

இப்போது நாம் ஹையர் செகண்டரி முறையை கொண்டு வந்து நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம். முன்பு 10வது எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களுக்கு கொடுத்த அதே உதவித் தொகைதான் இப்போது ஹையர் சகண்டரி படிக்கின்ற மாணவர்களுக்கும் கொடுக்கிறோம். அதையும் உரிய காலத்தில் கொடுக்கவில்லை என்று பல புகார்கள் வருகின்றன. குறிப்பாக அரசு கலைக்கல்லூரியில் ஒருபையன் தேர்வு எழுதும்போது காப்பி அடித்து விட்டான் என்ற குற்றத்திற்காக அவனுடைய ஸ்காலர்ஷிப் நிறுத்தப்பட்டு அவனுடைய சான்றிதழ்களும் கொடுக்கப்படாமல் இருந்த காரணத்தால் அவன் 3 ஆண்டுக்கு பின்புதான் தேர்வு எழுதி பாஸ் செய்த பின்பு. இதுவரையில் அவனுடைய சான்றிதழ்கள் அவனுக்கு கொடுக்கப்படாமல் உள்ளது.

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-20)

ஏற்கனவே இந்த சட்டமன்றத்திலே நான் கூறியிருக்கிறேன். அவனுடைய வாழ்க்கை பாழடிக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் கல்விக்காக நாம் அதிகமாகச் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இது மிகச் சிறு அளவுதான் என்று சொல்லிக் கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மொழிப்பிரச்சினையைப்பற்றி அனைவரும் எடுத்துக் கூறினார்கள். அதைப்பற்றி நான் அதிகம் பேசாவிட்டாலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்களோ அதைப்போல் பிற மொழிகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும், திணிக்கவில்லை என்று அவர்கள் சொன்னாலும் அந்த மொழியைக் கற்றுக்கொள்கிறோம் என்று மாணவர்கள் முன்வந்தால் அவர்கள் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்குவது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது இந்த அரசாங்கத்தி[illegible] கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



முன்பெல்லாம் 1,2,3 ஆம் வகுப்புகள் கண்டிப்பாக படித்துத்தான் தீர வேண்டும், தேர்வு எழுதி பாஸ் செய்துதான் தீரவேண்டுமென்ற முறை இருந்தது. நான் அதை வரவேற்கிறேன். இன்றைய முறை அவ்வளவு சரியான காரியமாக தெரியவில்லை. இளம் மனத்திலே தேர்வு பயம் கூடாது என்ற முறையில் இருந்தாலும்கூட அந்தச் சூழ்நிலையில் கல்வியின் தரம் ஓரளவுக்கு குறைந்துக்கொண்டு வருகிறது என்பதை நாங்கள் கிராமங்களிலே கண்கூடாகக் கண்டுகொண்டு இருக்கிறோம். வட்டார ரீதியாக ஒரு பள்ளியை ஏற்படுத்த வேண்டும். அதிலே அந்த வட்டாரத்திலே நன்றாகப் படிக்கக்கூடிய பிள்ளைகளை எடுத்து, அவர்களை நன்றாக படிக்கவைக்க முடியும் என்ற நோக்கத்தோடு, அங்கேயுள்ள தலைமையாசிரியர் மூலமாக ஒரு பள்ளிக்கு ஒரு மாணவனையாவது தேர்ந்தெடுத்து வட்டார அளவில் ஒரு பள்ளியை ஏற்படுத்தி, எப்படி கோயம்புத்தூரில் அமராவதி நகரில் சைனிக் ஸ்கூல் இருக்கிறதோ அதைப்போல அனைத்துத் துறைகளிலும் வல்லுநர்களாக அரசாங்கமே அவர்களைக் கொண்டுவர முடியும். அப்படிச் சூழ்நிலை ஏற்பட்டால் மற்ற மாணவர்களும் தாங்களும் அதுபோல் வரவேண்டும், முதல் மாணவனாக வரவேண்டும், நன்றாகப் படிக்கவேண்டும் என்ற கருத்தைக் கொள்வார்கள். அதோடு தாங்கள் எல்லாத் துறைகளிலும் வல்லுநர்களாக ஆவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பாகவும் இருக்கவேண்டும்.

இப்போது சத்துணவுத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதை நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய எம்.எல்.ஏ சத்துணவுத் திட்டத்தை வரவேற்றார் என்ற கருத்தைக் கூற நான் தயாராக இல்லை. அதில் சில பல குறைபாடுகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வது எல்லாம் சத்துணவு போடுகிறோம் என்று குழந்தைகளுக்கு சத்துணவு போடுகிற போது, அதே சந்தர்ப்பத்திலே விடுதியிலே தங்கும் மாணவர்கள் நமக்கு என்ன தீங்கு செய்தார்கள், அவர்களுக்கு கொடுக்கக்கூடிய உதவித் தொகையை நீங்கள் அதிகப்படுத்தவே இல்லை. இன்றைக்கு அவர்கள் ஒட்டிய வயிறோடு கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும், மேல்நிலைப்பள்ளிகளுக்கும் சென்றுகொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. உரிய காலத்தில் பாடப்புத்தகங்கள் கொடுக்கவில்லை, உதவுத்தொகை கொடுக்கவில்லை, அவர்களுக்கு நல்ல கட்டட வசதி கிடையாது, சுகாதாரம் கிடையாது, லைட் வசதி கிடையாது. இப்படி கீழே உள்ள பயிரை வளர்க்கிறோம் என்று சொல்லி வளர்ந்துவிட்ட பயிரைக் கருக்குவது ஏன்? இந்த அரசுக்கு ஏன் இரட்டை நிலை என்ற கேள்வியை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மேனேஜ்மெண்ட் பள்ளிகளைப் பொறுத்தவரையில் நகரங்களிலே மற்றவர்களின் பார்வையில் அல்லது தாய் தந்தையரின் கண்காணிப்பில் அந்தப் பள்ளிகள் நடந்தேறலாம். ஆனால் மேனேஜ்மெண்ட் பள்ளிகளில் பயிலும் அந்த மாணவர்களி[illegible]

நிலை சரியாக இல்லை. அதே சந்தர்ப்பத்தில் அந்த ஆசிரியர்களும் கொடுமைக்கு ஆளாகிறார்கள். 25 ஆண்டுகளாக ஒரு மேனேஜ்மெண்ட் பள்ளியை நடத்துகிறார்கள் என்றால் அவரின் மகனோ, மகளோ, மருமகனோ அவர் குடும்பத்திற்குச் சொந்தமான பள்ளிகளுக்கு அடிமைகளாக்கப்படுகிறார்கள் ஆசிரியர்கள். உதாரணமாக என்னுடைய தொகுதியில் தம்மம்பட்டியில் ஒரு பள்ளி இருக்கிறது. அங்கே பெரிய சிரமத்திற்கு உள்ளான ஆசிரியர்கள் விண்ணப்ப புகார்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து உடனடியாக அந்தப் பள்ளிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே சத்துணவு போட்டவுடன் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 2 லட்சத்திற்கு மேல் அதிகமாயிருக்கிறது என்று சொன்னார்கள். தனிப்பட்ட முறையில், சட்ட மன்ற உறுப்பினர் என்ற நிலையில் இல்லாமல், கல்வி நிறுவனத்தில் பணியாற்றியவள் என்ற முறையிலே சொல்கிறேன். ஏனென்றால் ஏற்கெனவே மன்த்லி ரிட்டர்னை ஆசிரியர்கள் கொடுக்கிறபோது பள்ளி வயதில் இருக்கிற மாணவ-மாணவிகள் யாரும் விடுபடவில்லை. அனைவரையும் சேர்த்தாகி விட்டது. ஆகவே 'நில் ரிப்போர்ட்' என்று நம்முடைய மன்த்லி ரிட்டன்ஸ் இருக்கின்றன. இப்போது சத்துணவுத் திட்டம் போட்ட பிறகு இவ்வளவு பேர்கள் எங்கேயிருந்து சேர்ந்தார்கள்? அவர்களைச் சேர்க்காத ஆசிரியர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம்? பள்ளிக்குச் செல்லக்கூடிய வயதிலுள்ள பிள்ளைகள் பள்ளிக்கு வராமல் இருந்தால் ஆசிரியர்களுக்கு தண்டனை அளிக்கவேண்டுமென்ற சட்டம் கூட இருந்தது. அப்படியிருந்தும் கூட இவ்வளவு பேர்கள் எப்படி விடுபட்டு பிறகு சேர்ந்துள்ளார்கள்? எந்தெந்த பள்ளிக்கூடத்தில் எவ்வளவு பேர்கள் என்றில்லாவிட்டாலும் அட்லீஸ்ட் மாவட்ட வாரியாகவாவது எங்களுக்கு ஒரு லிஸ்டை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சத்துணவுத் திட்டத்திலே ஏற்கெனவே எட்டாவது வரையில் மிடில் ஸ்கூல் இருக்கிறது என்று சொன்னால் மிடில் ஸ்கூலில் படிக்கிற மாணவர்களுக்குக்கூட சத்துணவு கிடைக்கும். ஆனால் இன்று மிடில் ஸ்கூலில் ஐந்தாவது வகுப்பில் தம்பி படிக்கிறான் என்றால் அவனுக்கு சத்துணவு உள்ளது. ஆனால் அதே குடும்பத்தில் 6வது வகுப்பில் படிக்கிற மாணவனுக்கு சத்துணவு கிடைக்காது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கெனவே சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த மாணவன் என்ன தவறு செய்தான்? அவனுக்கு, சத்துணவு கிடைப்பதை நிறுத்திவிட்டீர்கள். கோடிக்கணக்காக செலவாகிறபோது ஆறிலிருந்து எட்டாவது வரையில் அதே ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கூட சத்துணவை வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு டெக்னிகல் எஜிகேஷன் மேனேஜ்மெண்ட் ஸ்கூல், எம்.பி.பி.எஸ். எந்த நிறுவனமாக இருந்தாலும், அரசு அல்லது தனியார் எதுவானாலும், 18% பிள்ளைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும். அரசுப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்கிறோம். ஓப்பன் காம்பெடிஷனிலே, டெக்னிகல் எஜிகேஷன், எம்.பி.பி.எஸ் இல் எல்லாம் சேர்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாம்,



நான் கேட்பதெல்லாம் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படுகிறதா? இந்த கேள்விக்கு அமைச்சர் அவர்கள் முன்பு பதில் கூறும்போது எங்களுக்கு சரியான தகவலை கொடுக்கவில்லை. மாவட்ட ஆட்சியாளர்களிடத்திலிருந்து பதில் சரியாக வரவில்லை; ஏதோ ஒருசில மாவட்டங்களிலிருந்துதான் பதில் வந்தது. தனியார் பள்ளிகளில் 2%; அரசு பள்ளிகளில் 5% என்று பதிலை இங்கே கொடுத்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த கேள்வியை கேட்டும்கூட இதுநாள் வரையில் அதற்கு பதில் கொடுக்கப்படவில்லை. அரசு ஊழியர்களோ, அல்லது பள்ளிகளில் சேரும் பிள்ளைகளோ அவர்களைப் பற்றி இந்த பெர்செண்டேஜ் குறிப்பாக தமிழகத்திலே எவ்வளவு என்பதை கேட்க விரும்புகிறேன். மற்ற மாநிலங்களை அதற்கு உதாரணமாக காட்டுவதை விட இங்கே என்ன என்பதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் ஒருமுறை மாவட்ட அளவில் பள்ளி கமிட்டி அமைப்பதாக பத்திரிகையிலே விடுத்த அறிக்கையை கண்டு நான் மிக மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் ஏறத்தாழ 1½ ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் அந்த கமிட்டியை போடவில்லை. ஆசிரியர்கள் தங்களுடைய குறைகளை யாரிடமும் கூறிக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை. அதிகாரிகளின் அடக்குமுறைகளுக்கு அவர்கள் பயந்துகொண்டு, அவர்களுடைய குறைகளை சொல்லிக்கொள்ள முடியாது இருக்கிறார்கள். அடிக்கடி விருப்பு போட்டு, விடுப்பும் அனுமதிக்கப்படாமல், அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, சஸ்பெண்ட் செய்து, கோர்ட்டிற்கு செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும். ஆகவே இவைகளை எல்லாம் களையவேண்டுமென்றால் மாவட்ட அளவிலான அந்த கமிட்டியை உடனடியாக போடவேண்டுமென்ற கருத்தை வெளியிட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு சத்துணவைப் போட நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கே அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற விலை உயர்ந்த பொருள்களை அதிகப்படியான அளவில் அவர்களிடம் கொடுக்கிறோம். அதை பாதுகாக்க சரியான இடமோ அல்லது வாட்ச்மேனோ இல்லை. குறிப்பாக ஆரம்பப்பள்ளிகளில் இந்த வசதிகள் இல்லை. ஊராட்சி ஒன்றியத்தில் 10, 12 வாட்ச்மேன்கள் தான் இருக்கிறார்கள். அனைத்து ஆரம்பப்பள்ளிகளுக்கும் இரவு நேர காவலர்களை அமர்த்த வேண்டும். அதோடு இன்றைக்கு அங்கு உதவியாக அமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு 60 ரூபாய், 30 ரூபாய் என்று கொடுக்கிறோம். அவர்களுக்கு குறைந்தது 100 ரூபாயாவது கொடுக்க வேண்டும். நாம் சட்டக்கூலி பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் கண்டிப்பாக அது போதாது. அது அவர்களை மற்ற வழியில் திசை திருப்பும் காரியமாக அமையும். மற்ற பொருள்களை அங்கேயிருந்து எடுத்துச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கும். அவர்

களை தட்டிக்கேட்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகும். நான் சென்ற இடத்திலே எல்லாம் கூட 30 ரூபாய் சம்பளத்திலே எப்படி அம்மா வாழ்க்கை நடத்த முடியும் என்று கேட்கிறார்கள். நாமும் மனிதாபிமானத்தோடு அதை கேட்க வேண்டி இருக்கிறது. அவர்கள் தவறுகளை தட்டிக் கேட்க முடியாத நிலை உருவாகிறது, என்பதை கூறிக்கொண்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4-0)

மாலை 4.00 மணியளவில் பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி. கோரிக்கை எண் 17 கல்வி.

**திரு ஜி மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழக அரசு கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து நாட்டிலே நடைபெறுகிற முன்னேற்றங்களுக்கு கல்விதான் மிக முக்கியமான காரணம் என்பதை நன்கு உணர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்காக அறிவுப் புரட்சியை மாநிலம் முழுவதும் சிறப்பாக பரப்புகின்ற வகையில் நல்லதொரு திட்டத்தை இன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கை மூலம் தந்திருக்கிறார்கள். கல்விக்காக இந்த அரசும் நம் முதல் அமைச்சர் அவர்களும் கொடுத்திருக்கிற முக்கியத்துவத்தையும் அதன் மூலமாக கல்விக்காக மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை ஒதுக்கியிருப்பதைக் காணும்போது இந்த அரசு கல்விக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதை நாடு நன்றாக உணருகிறது.

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு மிகச் சிறந்த ஆயுதமாக விளங்குவது கல்வியே. அப்படிப்பட்ட கல்விக்கு முக்கியத்துவம் தருகிற விதத்தில் வருமானத்தில் மூன்றில் ஒரு பாகத்தை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன்,



இந்த மானியக் கோரிக்கையில் பள்ளிக்கூட மாணவர்களுக்காக கொடுக்கப்படுகிற இலவச பாடப்புத்தகங்கள், சிலேட்கள் ஆகியவற்றை சிறப்பான முறையில் பலயிடங்களில் கொடுத்துக் கொண்டிருந்தாலும் அவைகள் கால ஓட்டத்திலே குறித்த காலத்தில் அந்த மாணவர்களுக்குப் போய்ச் சேர முடியாத நிலை இருக்கிறது என்று பரவலாக பலயிடங்களிலிருந்து புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் அக்கறை காட்டி பள்ளி பிள்ளைகளுக்குத் தருகின்ற பாடப்புத்தங்கள், சிலேட்கள் ஆகியவை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக கொடுத்தாக வேண்டுமென்ற கடுமையாக உத்தரவினை இந்த நேரத்தில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. இந்த முதியோர் கல்வியை இந்த அரசு சிறப்பான முறையில் நடத்தி வருகிறது. பள்ளிக்கூடங்களைப் பாராதவர்கள், அந்தக் காலத்தில் பள்ளிகளுக்குச் சென்றறியாதவர்கள் காலம் கடந்த பின்னரும் கூட, 45, 50 வயதுக்கப்புறம் கூட, எப்படியாவது படிக்கவேண்டும் என்ற அவா காரணமாக படிக்க விரும்புகிற நிலையில் முதியோர் கல்வித் திட்டத்தை நாம் விஸ்தரித்திருக்கிறோம். ஆனால் இந்த முதியோர் கல்வி மலைப்பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு எட்டவில்லை, அவர்களுக்குப் போய் சேரவில்லை என்பதை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

பரவலாக மலைப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் இந்த முதியோர் கல்வியைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இந்தக் கல்வியைக் கற்க வேண்டுமென்ற அளவில் இருக்கிறார்கள் குறிப்பாக என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியைப் பொறுத்தவரையில், மலைப் பகுதிகள் அதிகமாக நிறைந்த பகுதியாக இருக்கின்றது. சுட்டகுண்டா என்ற ஊர் ஆந்திர மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. அரவட்லா என்ற ஊர் கர்நாடக மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. அதே போன்று வெல்திகிமானி பெண்டா என்ற ஊர் ஆந்திர எல்லையில், ஆந்திராவிற்கும், தமிழகத்திற்கும் எல்லையை நிர்ணயிக்கின்ற ஊராக இருக்கின்றது. இப்படிப்பட்ட மலைப்பகுதிகளிலும், சாரங்கல் என்ற மலைப்பகுதி இடத்தில் எல்லாம் மக்கள் வாழ்கின்றார்கள். ஏறத்தாழ 2,000, 3,000 என்ற கணக்கில் அங்கே அவர்கள், மலைஜாதியினரைப்போல், மலைவாழ் மக்களைப் போல் ஆங்காங்குள்ள மலைகளிலே வாழுகின்றார்கள். அவர்கள் மற்ற ஜாதியினரைப்போல், இன்றையதினம் இந்த கல்வியைக் கற்க வேண்டுமென்ற ஆசையில் இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட மலைப்பகுதிகளிலே வாழ்கின்ற அந்த மலைப்பகுதி மக்களுக்கு இந்த முதியோர் கல்வி சிறந்த முறையில் சென்றடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வளர்ந்து வருகின்ற இந்த விஞ்ஞான உலகத்தில், வேலை வாய்ப்பையளிக்கின்ற கல்வியை இந்த அரசு வலியுறுத்தி: தமிழகத்திலே அதை நடைமுறை படுத்திக் கொண்டு வருவதை இந்த நாடு வரவேற்கின்றது. படித்து விட்டால் மாத்திரம் போதாது. அவர்கள் அதற்கு பின்னால் வேலைக்குப் போக வேண்டும். எனவே. வேலையைத் தேடித் தருகின்ற கல்வியை வகைப்படுத்தி, முறைப்படுத்தி, தனித்தனியே இணைக்க வேண்டு மென்ற காரணத்தினால், தமிழக சர்க்கார் படித்த பின்னர் வேலைக்குச் செல்ல வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், வேலை வாய்ப் பத் தருகின்ற கல்வியை இன்றைச்கு நாட்டிலே முறைப்படுத்திக் கொண்டு வருகிறது. இருந்தாலும் தொழில் நுட்பக் கல்வியிலே மேலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக பேரணாம் பட்டு டேனரி நிறைந்த பகுதியாக இருக்கிறது. அதேபோல். ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், குடியாத்தம் பகுதிகளிலும் டானரிகள் அதிகமாக இருக்கின்றது. இந்தப் பகுதிகளில் தொழில் நுட்பக் கல்விக்காக எந்த விதமான கல்லூரியும், எந்தவிதமான இன்ஸ்டிடியூஷனும் அங்கே கிடையாது. ஆகவே, பேரணாம்பட்டு வட்டாரத்தில் லெதர் டெக்னாலஜி ஒன்றை ஏற்படுத்தி, அதற்கான பயிற்சிப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரணாம்பட்டில் ஆரம்பிக்க வேண்டும், அதற்கான சாத்தியக் கூறுகள் எங்கள் தொகுதியில் இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. கல்லூரியைத் துவக்கினாலும், பெற்றோர் கள் தங்கள் பிள்ளைகளை கல்லூரிகளிலே சேர்த்து விட்டு நிம்மதி யாக வீட்டிற்குப் போய் தங்களுடைய பிள்ளைகள் ஒழுங்காக கல்லூரியில் படிக்கின்றார்கள் என்ற நிம்மதி பெற்றோர்களில் 90% பேர்களுக்கு இல்லை. காரணம், 3, 4 மாதங்களில் கல்லூரியில் இருந்து விடுபடுகின்ற சூழ்நிலையை கண்கூடாகப் பார்க்கிறோம். காரணம், போராட்டங்கள் வெடித்து அதனால் பல பேர்கள் மரணமடையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்பேர்ப் பட்ட நாகரிகம் இல்லாத செயல் இங்கே நடை பெறுகிறது. ராகிங் முறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையிலாவது கட்டாயம் ஒழிப்பதற்கு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. பிளஸ் 2-விலே இன்றைக்கு பல பள்ளி களில் விருப்பப் பாடங்களாக பலவற்றை வைத்திருக்கிறார்கள். ஆனால் அதே போன்று இன்னறக்கு சட்டக் கல்வியை பிளஸ் 2-விலிருந்து அறிமுகப்படுத்துகின்ற ஒரு நல்லெண்ணத்தை அமைச்சர் அவர்கள் இந்த மானிய கோரிக்கைக்கு பதில் அளிக் கின்றபோது உறுதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். பிளஸ் 2 மாணவர்களிலிருந்து பி.ஏ. பட்டப்படிப்பை



படிக்கின்ற மாணவர்கள்வரை, சட்டப் பாடத்தை ஒரு துணைப் பாடமாக அல்லது சட்டாய பாடமாக இணைத்துப் படிக்கின்ற அளவுக்கு ஒரு நல்ல திட்டத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், விஞ்ஞானத்தை ஒரு சிறப்புப் பாடமாக எடுத்துக்கொண்டு படிக்கின்றார்கள். அது ஒரு சிறப்புப் பாடமாக இருக்கலாம். பொருளாதாரத்தைப் படிக்கின்றவர்கள் அந்தப் பாடத்தைப படித்துவிட்டு, அதோடு நின்று விடுகிறார்கள். எனவே, விஞ்ஞானப் பாடத்தைப் படிக் கின்றவர்கள் மற்றவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசிய மில்லை. ஆனால், ஒரு மனிதன் வாழ்க்கையில் உள்ள நடை முறைகளை அறிந்து கொள்ள வேண்டுமானால், அதற்கான சட்ட திட்டங்களை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அது ஒரு பொதுவான பிரச்னை. ஆகவே, எல்லா மாணவர்களும் சயின்ஸ் படிக்கின்ற மாணவர்களானாலும் சரி, பொருளாதாரம் படிக்கின்ற மாணவர்களானாலும் சரி அல்லது பி.காம். படிக்கின்ற மாணவர்களானாலும் சரி, சட்டம் என்பது ஒரு பொதுவான சப்ஜெக்ட் என்பதால் அந்தச் சட்டக் கல்வியை அனைத்துத் துறையிலும் அவர்களுக்கு ஒரு பாடமாக வைக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 4–10)

மேலும் எத்தனையோ பள்ளிகளுக்கு, இன்றைக்கு அரசாங்கத் தினுடைய மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும், பொதுமக்கள் குறிப் பிட்ட தொகை வசூலிக்கப்பட்டும், அரசின் மான்யத்தோடும், இன்று அங்குள்ள பள்ளிக் கூரையோடு கூடிய நிலையில் காட்சி யளிக்கின்றது. 4, 5 ஆண்டுகாலமாக அந்தப் பள்ளி இந்த நிலை யிலேயே இருக்கிறது. பள்ளிக் கட்டுவதற்கு நிலம் இல்லாமல் இருக்கிறது. பள்ளி ஒரு உருப்படியான நிலைக்கு வரவில்லை இன்னும். இடிந்த நிலையிலேயே இருந்துகொண்டிருப்பதால், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மரத்தடியில் பாடங்களைச் சொல்லிக் கொண்டுவருகிறார்கள். இந்த மாதிரி பயில்வதினால், அவர்கள் எப்படி, உயர்நிலைப்பள்ளிக்கு சேர்க்கப்படுவது? ஆகவே அந்த ஊரிலே இருக்கின்றவர்கள். ஒரு 3, 4 ஆண்டுகளாகவே முனைப்பாகப் பெரியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து எப்படி யாவது இந்த உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் அமைக்கவேண்டு மென்று முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்களின் திறமை யற்ற காரணத்தால் என்று சொன்னால் பரவாயில்லை—நேர்மை யற்ற காரணத்தால்—அந்த முயற்சி தோல்வியடைந்து விட்டது. அதற்கு சாபக்கேடாக அந்தப் பள்ளிக் கூடம் இன்னும் முழுமை யான கட்டடமாக உருவாக்கப்படவில்லை. அதையெல்லாம் பொருட்படுத்தாமல். அந்த மக்களின் கல்வியின் தரத்தை, அந்த மக்களுடைய எதிர்காலத்தைக் கணக்கில் கொண்டு, குறைந்த பட்சம் ஒரு தனிச் சலுகையாவது அந்தப் பள்ளிக்கூடத்திற்கு

காட்டி, மேல்பட்டியிலே இருக்கின்ற அந்த உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு நிரந்தரமான கட்டிடத்தை அமைச்சரவர்கள், அந்த மக்களுடைய நல் வாழ்க்கையைப் பொறுத்து, ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்களை, இந்த அரசு வந்த பின்னாலே, பல பகுதிகளில் ஏற்படுத்தி இருக்கிறோம். — பெண்களுக்கென்று பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். பாரதிதாசன் பல்கலைக் கழகம் பெயரில் ஏற்படுத்தியிருக்கிறோம். தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையிலே நாம் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆக இப்படி பல்கலைக்கழகங்களை சிறப்பான முறையிலே, கல்வியின் முக்கியத்துவத்தை அதனுடைய சிறப்புக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே அரசு ந்து பல்கலைக்கழகங்களை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. பல இந்த நேரத்திலே அமைச்சரவர்களுக்கு தாழ்மையாக சொல்லிக் கொள்கிறேன்—குறைந்தபட்சம் ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்திலே ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை அமைக்க வேண்டும். இந்த ஆராய்ச்சிக் கூடம் டாக்டர் அம்பேத்கார் பெயரில் இருக்க வேண்டும் கல்வி என்று பார்க்கிற பொழுது உலகத்திலே பொருத்த மான பெயரை உடைய ஒரே தலைவர் டாக்டர் அம்பேத்கார் இன்றைக்கு என்பதை உலகம் ஒத்துக்கொண்டிருக்கிறது. கல்விக்குப் பெருமை சேர்க்கிற இந்த அரசு அந்த கல்விக் கூடலாக விளங்கிய டாக்டர் அம்பேத்காருக்குப் பெருமை சேர்க்கிற வகையிலே அந்தத் தலைவரின் பெயரிலே, ஒரு அரங்குக்கூடத்தை ஒரு ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவவேண்டுமென்பதை இந்த நேரத்திலே தாழ்மையான வேண்டுகோளாக கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, நீலகிரி மாவட்டத்திலே பெண்களுக்கான ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த பெருமையை டாக்டர் அம்பேத்காருக்கு சேர்க்கிற வகையிலே, அந்தப் பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் அம்பேத்கார் பல்கலைக்கழகம் என்று வைக்கவேண்டும்.

ஆசிரியர்கள், இன்றைக்கு இந்த மாற்றுதல் விவகாரத்திலே பல சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள். கணவன்-மனைவி அவர்களை ஒரே பள்ளியில் போடுவதில் எந்த விதமான பாதகமும் கிடையாது. அப்படிப் போடுவதற்கு அரசாங்கத்தில் விதிமுறைகள் கூட இருக்கின்றன. அந்த வேலை மாற்றல் உத்தரவு வரும் பொழுது அங்கே இருக்கிற மாவட்ட அலுவலர்கள், மாவட்டக் கல்வித் துறை அதிகாரிகள்' கட்டாயம், இதை கருத்தில் கொள்ள வேண்டும் என்ற ஒரு ஆணையினை' ஏற்கனவே இருந்தாலும், கூட்டத்திலே வலியுறுத்தி அமைச்சரவர்கள் ஒரு சுற்றறிக்கை அனுப்பவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அறவட்லா என்கிற ஒரு பகுதியிலே எந்த ஆசிரியரும் வேலை செய்வதற்குப் போவதில்லை. அது ஒரு மலைப் பகுதியிலே இருக்கிறது. அங்கே ஆசிரியர்களுக்கு வீடும் கிடையாது. அதே நேரத்தில் ஒரே ஆசிரியர் அந்தப்



பள்ளியிலே வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். மனைவி பேரணாம்பட்டிலே இருக்கிறார்கள். இவர் 8, 9 கிலோமீட்டர் மலை ஏறி, பள்ளிகூடத்திற்கு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தரவேண்டும். மனைவியைப் பார்ப்பதற்கு அவர் பேரணாம் பட்டிற்கு வரவேண்டும். இப்படி அவர் காலை முதல் மாலை வரை, 3 முறை அந்த 8 கிலோமீட்டர் தொலைவிற்கும் சைக்கிளிலே, ஏறி, இறங்குகிறார். அதனால் அந்த அறவட்லா பள்ளிக்கு எந்த ஆசிரியரும், போட்டால், சேருவது கிடையாது. ஆகையால், கணவன்-மனைவியாக வேலை செய்கிறவர்களை அங்கே போடவேண்டும். அதுமட்டுமல்லாமல். அவர்களுக்கு அங்கே வீடு கட்டித்தரவேண்டும். இல்லையென்றால், அவர்கள் பேரணாம்பட்டிற்குக் குடி வந்துவிடுவார்கள். பிள்ளைகளுடைய கதி அதோ கதிதான். இது பல ஆண்டுகளாக இருக்கிற பிரச்சினை. மாவட்டக் கல்வித் துறை அதிகாரிகளுக்கும் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அங்கே இருக்கிற டி.ஈ.ஓ க்கும் சொல்லி யிருக்கிறோம். பரிதாபப்படுகிறார்களே தவிர, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த ஆசிரியர் அவர்களும் போதிய தைரியம் இல்லாமலும், துணிவு இல்லாமலும் இருக் கிறார்கள். அங்கே போட்டால் கணவன்-மனைவியாக இருக்கிற ஆசிரியர்களைப் போடுங்கள். அப்படிப்போட்டாலும், வீடு கிடைக்கிற அளவிலே, அரசாங்கமே வீடு கட்டித்தந்தால், அங்கே இருக்கிற மலைவாழ் மக்கள் -- 3000 பேர்கள் இருக்கிறார்கள்— குழந்தைகள் 300, 400 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்காலத்தை எண்ணி, இப்படிப்பட்ட ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல தனியார் பள்ளிகள் இன்று தமிழகத்திலே இருக்கின்றன. நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு பல சீர்திருத்தக் கருத்துக்களை கல்வியின் மூலம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகள் ஜாதியின் பெயரால்—செட்டியார் பள்ளி, நாயுடு பள்ளி, நாயக்கர் பள்ளி— பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். அதன் உள்ளே படிக்கும் மாணவர்கள் மட்டும் எந்த வகையில் ஜாதி மத பேதமற்ற ஒரு சமுதாயக் கருத்தை உள்ளடக்கியவர்களாக உருவாக முடியும்? ஆகவே, அந்த ஜாதியின் பெயரால் உள்ள உயர்நிலைப் பள்ளிகளையும், கல்லூரிகளையும், அந்த ஜாதியின் பெயரை நீக்கிவிட்டு ஒரு பொதுப்படையான பெயர்ப் பலகையை வைத்து நடத்தவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து ஆசிரியர்களுக்கும், ஊதிய உயர்வு தர ஊதியக் கமிஷனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலத்தில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் உள்ள ஆசிரியர்கள் பெறுகின்ற ஊதியத்தின் அளவிற்குக் குறை யாத அளவில் தமிழகத்திலுள்ள எல்லா ஆசிரியர்களும் சம்பளம் பெறுகின்ற ஒரு நிலையையும் இந்த அரசு உருவாக்கி அந்த நற்பெயரையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெறவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும் இயக்குநர் அந்த ஆணைக்கு முரணாக தனியாக ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார். அதிலே பி.ஏ.யிலும் எம்.ஏ.யிலும் ஒரே பாடத்தை எடுத்துப் படித்தவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதனால் திறமைமிக்க பலருக்கு வாய்ப்பு கிடைக்காமல் போயிருக்கிறது, பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இயக்குநரின் சுற்றறிக்கையை ரத்து செய்ய வேண்டும் அல்லது அதிலே திருத்தம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அதைப்போன்று ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும் ஆசிரியர்களையும் அரசு ஏற்றுக்கொண்ட பிறகு ஒவ்வொரு ஒன்றியத்திலும் அந்த பள்ளிகள், ஆசிரியர்கள்மீது செலுத்தப்படும் கவனம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. கடந்த காலத்தில் அந்தப் பள்ளிகளும் ஆசிரியர்களும் ஒன்றியத்தில் இருந்தபோது கண்காணிக்க அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் அந்த பள்ளிகளுக்குச் சென்று வர வாகன வசதிகள் இருந்தன. ஆனால் இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிற உதவிக் கல்வி அலுவலருக்கு வாகன வசதி அளிக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற அத்தனை பள்ளிகளையும் சென்று பார்வையிட வேண்டுமென்றால், கண்காணிக்க வேண்டுமென்றால் அந்த உதவி கல்வி அதிகாரிகளுக்கு கண்டிப்பாக வாகன வசதி செய்து கொடுத்தால்தான் முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட பிறகு விடுப்பு ஸ்தானத்தில் (லீவ் போஸ்ட்) பதில் ஆள் நியமிப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. புதிய முறைப்படி புதிதாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றால் மாவட்ட கல்வி அலுவலர்தான் நியமிக்க வேண்டும். சாதாரணமாக ஒரு ஆரம்பப் பள்ளியில் ஒரு ஆசிரியர் ஒரு மாதம் விடுப்பில் சென்றால் அங்கே இருக்கிற உதவி கல்வி அலுவலர் மாவட்ட கல்வி அலுவலருக்கு எழுதவேண்டும். அதற்கு 10 நாள் ஆகிவிடும். மாவட்ட கல்வி அலுவலர் கடிதப் போக்குவரத்து நடத்தி, ஒரு ஆசிரியரை தேர்வுசெய்து அனுப்புவதற்கு 10, 15 நாள் ஆகிவிடுகிறது. ஆக 25 நாட்கள் கடந்துவிட்ட பின்னால்தான் அவர் வந்து சேரும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதற்குள் லீவில் சென்றவர் வந்துவிடுவார். ஆக, ஒருமாதம் ஆசிரியர் இல்லாமலேயே பள்ளியை நடத்தவேண்டியிருக்கிறது. இந்த குறையைப் போக்க மாவட்ட கல்வி அலுவலர் அந்த மாவட்ட அளவில் சில ஆசிரியர்களை தேர்வு செய்துவைத்துக் கொண்டு, யாராவது விடுப்பில் சென்றால் அந்த இடத்தில் ஏற்கனவே தேர்வு செய்து வைக்கப்பட்டிருக்கிறவர்களிலிருந்து ஒருவரை நியமித்துக்கொள்ளலாம் என்று தெரிவித்து விடலாம். யாராவது லீவ் போட்டால் உதவி கல்வி அலுவலர் அதிலிருந்து ஒருவரை நியமிக்க ஏற்பாடு இருந்தால் இந்த சிக்கல் தீர்ந்துவிடும். அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களுக்கு என்று பல இலட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது, அந்தச் சங்கங்கள் ஒவ்வொரு பள்ளியிலும் சிறப்பாக நடைபெற கல்வித் துறை அதிகாரிகள் சிறப்பாகச்செயல்பட வேண்டும். பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தில் என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அதன்படி நடைமுறைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் மீது குறை என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வேறு குறைகள் இருந்தால் அந்தச் சங்கத்தின் கருத்துப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சில இடங்களில் இந்த பெற்றோர்-ஆசிரியர் சங்கம் சரியாக நடக்கவில்லை. அப்படிப்பட்ட இடங்களில் ஆரம்பக் கட்டத்தில் 2 அல்லது 3 மாதங்களுக்கு கல்வித் துறை அலுவலர்களே அந்த ஆசிரியர்—பெற்றோர் சங்கத்தை நடத்த வேண்டும். அதன்பிறகு அவர்களே நடத்த ஏற்பாடு செய்து உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். சங்கத்தின் முடிவுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர் குழந்தைகளுக்கு சில சலுகைகள் அளிக்க வேண்டும். குறிப்பாக மற்றவர்களுக்கு சலுகை இருப்பதைப்போல ஆசிரியர் குழந்தைகள் அரசாங்கத்தில் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கு வருமான வரம்பு தடையாக இருக்கிறது.

ஆகவே, குறைந்தபட்சம் ஆசிரியர்களுக்காவது, ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்காவது இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு, வருமான அடிப்படையிலே இருந்து மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். திண்டுக்கல்லிலே ஒரே ஒரு அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி இருக்கிறது. என்னுடைய தொகுதியில் உள்ள திண்டுக்கல், வேடசந்தூர், நிலக்கோட்டை, நத்தம் போன்ற 4 தாலுக்காக்களிலும் உள்ள பெண்கள் இங்கே வந்துதான் கல்லூரியிலே சேர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. திண்டுக்கல்லிலேயே குறைந்த பட்சம் 4, 5 பெண்களுக்கான தனி உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. திண்டுக்கல் நகரைச் சுற்றி, 9, 10 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், பெண்கள் போய்ச் சேருவதற்கு ஒரே ஒரு கல்லூரிதான் திண்டுக்கல்லிலே இருக்கிறது. ஆனால் அங்கேயும் இதுவரையில் வணிக இயல் என்று சொல்லப்படுகிற பி. காம். பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்படாத நிலையில்தான் இருக்கிறது. ஆகவே அதையும் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டம் ஆகும் நிலையிலே இருக்கிற திண்டுக்கல்லிலே அனைத்து துறைகளுக்கும் மாவட்ட அளவில் அலுவலங்கள் வந்திருக்கின்றன. ஆகவே திண்டுக்கல் நகரத்திலே இருக்கும் நூலகத்தையும், மாவட்ட அளவிலே செயலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இறுதியாக நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற குன்னூர் பகுதியிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள், அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவதற்கு முன்பு, அவர்களுக்கு குளிர்கால படி தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்ட பிறகு, அரசு பள்ளிகளாக மாற்றப்பட்டபிறகு, அதற்கான உத்தரவு மேலேயிருந்து வர வில்லை என்ற காரணத்தைச் சொல்லி, அந்தக் குளிர்கால படி 2 ஆண்டு காலமாகவே கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதையும் அமைச்சர் அவர்கள் பரிவுடன் பரிசீலித்து, அந்த நீலகிரி மாவட்டம், குன்னூர் பகுதியிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு, அந்த குளிர்கால படியைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று அந்தக் கருத்தினை வைத்து அமர் கிறேன்.

*திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது, நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸின் சார்பிலே சில கருத்துக் களைச் சொல்வதற்கு விழைகிறேன். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், மேனேஜ்மெண்ட் பள்ளிகள் என்று கிராமங்களிலே பல பள்ளிகள், 5 ஆம் கிளாஸ் வரையில் இருந்தாலும் அந்தப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் சரியான முறையிலே அந்தப் பள்ளி மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்காமல், அங்குள்ள குழந்தைகளுக்கு சரியான முறையிலே கல்வி கற்க இயலாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

மேலும் அங்குள்ள ஆசிரியப் பெருமக்கள், லீவு போடுவார் களேயானால், அந்த லீவுக்கு பதில் ஆசிரியர் போட முடிவ தில்லை. அடுத்து அந்தப் பள்ளிகளுக்கு வேறு ஆசிரியர்களைப் போட, அந்த டி. ஈ. ஓ. அதிகாரிகள் எந்த விதமான ஏற்பாடும் செய்யாமல், அவ்வப்போது அங்கே பணிபுரியும் ஆசிரியர்களே, எல்லா வகுப்புகளையும் சேர்த்து பார்த்துக் கொண்டு பணி புரிய வேண்டிய நிலை அங்கே இருந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, கல்வி கற்பதற்காக, குழந்தைகள் 5-வது வயதில் முதல் வகுப்பில் சேர்ந்து 10-வது படித்து முடிக்கிறார்கள். 10-வது வகுப்பு படிக்கும் மாணவர்கள் அதைப் படித்து முடித்து விட்டு, வேலை தேடும் நிலையில் உள்ளார்கள். அது பற்றி இந்த அறிக்கையிலேயே கூறப்பட்டுள்ளது. ஆனால் 5 ஆம் வகுப்பு படித்துவிட்டு, 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை செல்லக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், புற்றீசல் போல தனியார் கல்லூரிகளும், நடுத்தர பள்ளிகளும்



ஜாதியின் பெயராலே, மதத்தின் பெயராலே நடைபெற்று வருகிறது. ஆகவே, அரசு மானியம் கொடுத்து நடத்தப்படும் பள்ளிகளை யும், கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

படுகின்ற காரணத்தால் அது போன்ற பள்ளிகள்

தனியார் கல்லூரிகளில் பி. யூ. சி., பி. காம். பட்டப்படிப்பு களுக்கு இன்று ஆயிரம் இரண்டாயிரம் கொடுத்து, சீட்டு வாங்கும் நிலையில் உள்ளது. பாலிடெக்னிக்குகளுக்கும் அதே நிலை ஏற்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

விளையாட்டு ஆசிரியர்களை நியமனம் செய்து, விளையாட்டு வகுப்புகளை நடுத்தர வகுப்புகளிலிருந்து ஆரம்பித்து மாணவர் களுக்கு கற்பிக்கப்பட வேண்டும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்து, இந்த அறிக்கையில் 42 மாணவர் களுக்கு ஒரு ஆசிரியர் என்று விகிதாச்சார கணக்கு கூறப்பட்டி ருக்கிறது. அதை 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், 10 ஆம் வகுப்பிலும், 12 ஆம் வகுப்பிலும் அதிக எண்ணிக்கையில், அதிக மதிப்பெண்களில் தேறுகிறார்கள் ஆனால் அரசு மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கும் மாணவர்கள், ஒரு சில வகுப்புகளைத் தவிர, மற்றவர்கள் தேர்வு நிலை மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறையிலே உள்ள குறைபாடுதான் காரணம். அரசு ஒழுங்கான முறையில் அவர்களை கண்காணிக்கா மல் இருக்கிறது. அதுதான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கூற விரும்புகிறேன். அரசு தற்போது பட்டப் படிப்புகளை குறைத்துக் கொண்டு வருகிறது. ஆனால் அப்படி பட்டப் படிப்பினை குறைப்பதன் காரணமாக வேலை இழப்பு ஏற்படும் ஆசிரியர்களுக்கு, மாற்று இடங்களில் வேலை கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இலவச கல்வி என்று நாம் சொல்கிறோம். ஆனால் 11 ஆம் வகுப்புக்கும், 12 ஆம் வகுப்புக்கும் இங்கே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டணம் வசூலிக்கப்படும் முறையும் நிறுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அனைத்துக் கல்லூரிகளையும் அரசுடைமை ஆக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்காக இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் எதுவும் தனியாகக் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. தாலுக்காவில் இருக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்குக்கூட அரசாங்கம் வீடுகட்டித் தருகிறபோது இந்தச் சமுதாயத்தை புத்துலகமாக சமைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான வீட்டு வசதியையும் செய்து தரவில்லை. ஆகவே, அவர்களுக்கென தனியாகக் குடியிருப்புகளை அமைக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கல்வித்துறையிலே புரட்சித் தலைவர் அரசு எடுத்துக் கொண்ட சிறப்பான முயற்சிகளின் காரணமாக மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் — மற்ற மாநிலங்கள் எப்படி அந்தக் குறியீட்டை எட்டப் போகிறோம் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில்—நம்முடைய கல்வித்துறை சிறப்பாக பணியாற்றி இருப்பதற்கு நான் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள சத்துணவுத் திட்டத்தின் காரணமாக அந்தக் குறியீட்டை இந்த ஆண்டின் இறுதி முடிவதற்குள்ளாகவே நாம் முந்தியிருக்கின்ற வகையில் நிலைமைகள் அமைந்துள்ளன. நாம் செயல்படுத்திய சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வாயிலாக பத்தாண்டுக் காலம் இருபதாண்டுக் காலம் பல்லாயிரக்கணக்கான பள்ளிகள் மரத்து நிழல்களில் பள்ளிகளை நடத்திக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, இரண்டு ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து சிறப்பு மிக்க வகையில் கல்விப் பணி செய்திருக்கிற இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல், சட்டக் கல்வியையும் ஒரு தொழிற் கல்விபோல் எடுத்து ஐந்தாண்டு காலம் பிளஸ் 2 கல்விக்குப் பிறகு படிப்பது என்கிற வகையில் மாற்றியமைத்ததற்காக நான் இந்த அரசுக்குப் பாராட்டு தெரிவித்து அதை வரவேற்கிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு நான் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். ஆசிரியர்கள், தனியாகப் படித்து எத்தனை எம். ஏ. பட்டங்கள் வேண்டுமானாலும் பெறலாம் என்ற நிலை இருக்கிறது. அதைப் போலவே சட்டக் கல்வியைப் பொறுப்பேற்று இருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நான் வைக்க இருக்கிற வேண்டுகோள் சட்டத் துறையிலே ஈடுபட்டிருக்கிற வழக்கறிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் சட்டத்துறையில் எம். எல். போன்ற முதுகலை பட்டம் பெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மாநிலங்களில் பெரிய நூலகமாக இருக்கும் கன்னிமாரா நூலகத்தை அரசு ஸ்டேட் ரெஃபரன்ஸ் லைப்ரரி என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது அது லெண்டிங் லைப்ரரியாக இருக்கிறது. அதை ரெஃபரன்ஸ் லைப்ரரியாக மாற்றுவதன் மூலம் பல்வேறு துறையில் இருக்கும் ஆராய்ச்சி மாணவர்கள், அதிகாரிகள் நல்லவகையில் பயன்பெற முடியும். அதற்கு மாற்றாக அந்தக் கன்னிமாரா லைப்ரரிக்கு அருகாமையிலே ஒரு புதிய நூலகம் கட்டியோ அல்லது அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் நூல்நிலையத்தை விஸ்தரிப்பதன் மூலமோ லெண்டிங் லைப்ரரி வசதிகளை மக்களுக்கு அளிக்கலாம். ஆகவே இதைச் செய்ய அரசு முன்வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டு தோறும் ஆரம்பப் பள்ளிகளில் நூலகம் அமைக்கும் முயற்சிக்காக 2 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு சமுதாய நலத் திட்டங்களுக்காக அரசு பணம் ஒதுக்கிக் கொண்டு வருகின்ற காரணத்தால் கூடுதலாக இதற்கு நிதி ஒதுக்குவது என்பது அரசுக்கு இயலாத காரியமாக இருக்கும். ஆனால், ஆரம்பப் பள்ளிகளில் நூலகம் அமைக்கும் பணி முக்கியமான ஒரு பணியாக இருப்பதால் இதற்குக் கூடுதலான ஊக்கம் தரக்கூடிய வகையில்—தமிழ் நாட்டில் 30,000 ஆரம்பப் பள்ளிகள் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் அவற்றில் எந்தெந்தப் பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாக நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று பொறுக்கியெடுத்து அப்படி வருகிற ஒரு நூறு இருநூறு பள்ளிகளுக்கு இந்த இரண்டு லட்ச ரூபாயோடு கூடுதலாக ஒரு ஐம்பதாயிரம் அல்லது ஒரு லட்சம் நிதி ஒதுக்கிக் கொடுத்து அந்த ஆரம்பப் பள்ளிகளில் நூலக வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4–20)

அதைப்போன்று இன்னொரு விஷயத்தையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசினுடைய மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது சம்பந்தமாக அரசு கல்வித் துறையிலிருந்து 1981 ஆம் ஆண்டு 720-வது ஆணையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த ஆணைக்கு முரணாக இன்றைக்கு கல்வித் துறை இயக்குநர் ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார். அதனால் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பி.ஏ., எம். ஏ.யில் ஒரே பாடத்தை எடுத்தவர்களையும், பி.ஏ. யில் ஒரு பாடத்தையும் எம்.ஏ-யில் வேறொரு பாடத்தையும் எடுத்தவர்களையும் மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்கலாம். பி.ஏ.யில் ஒரு பாடம் எம்.ஏ.யில் ஒரு பாடம் எடுத்துப் படித்தவர்களும் இரண்டிலும் ஒரே பாடம் எடுத்துப் படித்தவர்களும் சரிசமமாக இருக்கும்போது ஒரே பாடம் எடுத்துப் படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையில் தெளி

(திரு. பூ. மூ. நரசிம்மன்) [1982 மார்ச் 15

மேலும் மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்கள்
கற்பிக்கப்படுகின்றன. சில பள்ளிகளில் இன்றைக்கு அப்படிப்
பட்ட தொழில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இதனால்
வேலைவாய்ப்புகள் அதிக அளவில் கிடைக்கும். ஆகவே
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசை நான்
இந்தநேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் என் தொகுதியில் அம்மையார்குப்பம் என்ற கிராமம்
இருக்கிறது. அங்கே ஒரு மேல்நிலைப் பள்ளிக்கூடம் இருக்கிறது.
அந்தப் பள்ளியிலிருந்து தேர்வுகள் எழுதவேண்டும் என்றால் 10
கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்லவேண்டும். இதனால்
மாணவர்கள் தேர்வுகளில் சரியான விடைகளை எழுதுவதற்கு
ஒரு வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே அப்படிப்பட்ட
அம்மையார் குப்பத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் இந்த
ஆண்டு தேர்வுகள் எழுதுவதற்கு ஒரு நிலையான வாய்ப்பினை
உருவாக்கித்தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும் இன்றையதினம் உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்
நிலைப் பள்ளிகளிலும் என். சி. சி. போன்ற பயிற்சிகளை
கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு கூடுதலாக சம்பளம் வழங்கப்
படுகிறது என அறிகிறேன். ஆனால் சாரண பயிற்சி கற்பிக்
கின்ற ஆசிரியர்களுக்கு அப்படிப்பட்ட கூடுதல் சம்பளத்தை
அவர்களுக்கு வழங்குவது இல்லை என அறிகிறேன். எனவே
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சாரண பயிற்சி
கற்றுக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும்அதாவது
என். சி. சி. பயிற்சி கற்றுக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு எப்படி
கூடுதலான சம்பளத்தை கொடுக்கிறார்களோ அதுபோன்ற
சலுகையை இவர்களுக்கும் வழங்கவேண்டும் என்று இந்த
நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வயது வந்தவர்கள் கல்வி மூலம் வகுப்புகள் நடத்த
மொத்தம் 6 லட்சத்து 14 ஆயிரம் பேர் எழுத்து அறிவு
பெற்றிருக்கிறார்கள். இதனால் அந்த துறைக்கு யூனெஸ்கோ
விருது வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட
துறையை இந்த நேரத்தில் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்
கிறேன்.

மேலும் இந்த ஆண்டில் மதுரையில் உலகத் தமிழ் சங்கம்
அமைப்பதற்கு ரூபாய் 105 இலட்சம் ஒதுக்கியுள்ளதை இந்த
நேரத்தில் நான் மனதார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.
மேலும் என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதி ஆந்திரா மாநிலத்
திலிருந்து பிரிந்து வந்தது. அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள்
கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்றால் ஏறத்தாழ 100
கிலோமீட்டர் தூரத்திற்கு சென்று படிக்கவேண்டிய ஒரு சூழ்நிலை
என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை



1982 மார்ச் 13] (திரு. பூ. மூ. நரசிம்மன்)

போக்கவேண்டுமானால் பள்ளிப்பட்டு நகரத்தில் ஒரு கலைக்
கல்லூரியை நம்முடைய அரசு நிறுவவேண்டும் என்று நான்
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி
யின் மத்திய பகுதியான ஆர். கே. பேட்டை பகுதியில் ஒரு
தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவவேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக்கோரிக்கையை
மனதார வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திருமதி. டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கல்வி
வளர்ச்சி மானியக்கோரிக்கை எண் 17—ன் கீழ் பேசுகின்ற
வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.
உண்மையிலே தற்போது கல்வியின் தரம் சிறப்பாக இருப்பதாக
யாராலும் சொல்லமுடியாது. இன்றைக்கு 3—வது வகுப்புகள்
வரையில் தேர்வு இன்றி அவர்கள் தேர்ச்சி பெற்றதாக
அறிவித்து இருப்பதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று
நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். உயிர் எழுத்துத்
தெரியாமல் மாணவர்கள் 3—வது வகுப்பை எட்டிவிடுகிறார்கள்.
ஆனால் மேற்படிப்பு படிப்பதற்கு அவர்கள் சிரமப்படுகிறார்கள்.
வசதியற்ற, எழுத்தறிவில்லாத பெற்றோர்களின் குழந்தைகள்
தான் இதிலும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்கின்ற
உண்மையை உணரவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்
கொள்ளவிரும்புகிறேன்.

(மாலை 4—40.)

கட்டாயக்கல்வியை தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு
வந்தார்கள். அது தற்போதும் இருக்கிறது. ஆனால் சத்துணவு
தந்ததால் ஆறிலிருந்து பதினொன்று வயது வரை உள்ள 2.63
இலட்சம் மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்தார்கள் என்று விளம்
பரப்படுத்திக் கொள்கிறீர்கள். ஏன் அந்த மாணவர்கள் கட்டாயக்
கல்வி மூலமாகச் சேரவில்லையா? சேர்ந்தார்கள். சேர்ந்தார்கள்
என்று சொன்னால் தலைவர் காமராஜுக்கு புகழ் வந்துவிடும்)
சத்துணவுக்குப் பெயர் வராது என்ற காரணத்தினாலே இப்படிப்
பட்ட வாசகங்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

குடிநீர்த் தட்டுப்பாடு வரும் என்று இந்த அரசுக்கு
முன்னாலேயே தெரியும். பத்திரிகைகளிலே நவம்பர், டிசம்பர்
மாதங்களில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன, குடிநீர்த் தட்டுப்
பாடு கடுமையாக இருக்குமென்று. அப்படி முன்னாலேயே
தெரிந்தும்கூட மார்ச் 31 ஆம் தேதிக்குள்ளாக தேர்வுகளை
யெல்லாம் நடத்தி முடிவிடவேண்டுமென்ற நிலையில்
இன்றைக்கு கல்வியின் நிலை இருக்கிறது. இன்றைக்கு அவசரம்
அவசரமாக பாடங்களை முடிக்கவேண்டுமென்ற நிலை வருகிற
போது ஒரு நாளைக்கு ஒரு பாடம் என்ற நிலை மாறி சிலவகை
முடிக்கவேண்டுமென்ற முறையிலே அதிகப்படிய பாடங்களை

(மாலை 4–30)

இந்தக் கட்டணம் வாங்குவதைத் தள்ளிவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியான சாத்தான்குளம் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருப்பதால், அது ஒரு வறண்ட பகுதியாக இருப்பதால் அங்கே உள்ள மக்கள்நலம் பெருகும் வகையில் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளியினை ஆரம்பிக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாசரேத்தில் ஒரு இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் நடக்கின்றது. அந்த ஸ்கூலுக்கு மாணவர்கள் ஒதுக்கீடு மிகவும் குறைவு. எனவே அங்கே கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கும் நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேதிகநல்லூர் பகுதியில் விவசாயிகள் அதிகமாக இருப்பதன் காரணத்தால் அங்கே வசித்து வரும் கிராம மக்கள் முன்னேறு கின்ற வகையில் அந்தப் பகுதியில் ஒரு காலேஜ் அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளைப் பொறுத்த வரையில் நான் சில கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்ட போது அங்கே 5 ஆசிரியர்கள் பணிபுரியவேண்டிய இடங்களில் 3 ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். அதுகுறித்து தூத்துக்குடி டி. ஈ. ஓ. அவர்களிடத்திலே சென்று கேட்டால் அங்கே ஆசிரியர்கள் போடக்கூடிய நிலைமை இல்லை என்று கூறுகிறார்கள். மேலிடத்திலே சொல்லி ஆசிரியர்களை அங்கே போடு வதற்கு ஏற்பாடு செய்யும்படி அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்அவர்கள் இங்கே இருப்பதன் காரணத் தால் இதுபோன்ற பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதை நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்:

1983–84 ஆம் ஆண்டில் கல்விக்காக ஒதுக்கியுள்ளது 356 கோடி ரூபாயாகும். இவ்வாண்டு மொத்தச் செலவில் கல்விக்காக ஒதுக்கியிருப்பது 21.5 விழுக்காடாகும். அதிலே இருந்து புரட்சித் தலைவர் அவர்கள் கல்விக்காக எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க் கின்றபோது உள்ளபடியே மனதாரப் பாராட்டக் கடமைப்



பட்டிருக்கிறேன். மேலும் தற்போது ஆரம்பப் பள்ளிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை கூடி இருக்கின்றது. இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கை கூடி இருக்கின்றது என்பதைப் பார்க் கின்றபோது புரட்சித் தலைவர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையிலேதான், அதனுடைய பயனாகத்தான் இன்றையதினம் ஆரம்பப்பள்ளிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக ஆகி இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து புள்ளிவிவரத்தின்படி பார்த்தால் 5–வது வரையில் படிக்காமல் இடையிலே பள்ளிக்கு வராமல் நின்றுவிடுகின்ற மாணவர்களுடைய விழுக்காடு எண்ணிக்கை 1977–78 ஆம் ஆண்டில் 40 ஆக இருந்தது. 1981-82-லே அது 30 விழுக்காடாக ஆகி இருக்கின்றது. இன்றையதினம் சத்துணவுத் திட்டத்தின் பயனாக மாணவர்களின் வருகை அதிகரித்திருப்பதைப் பார்க் கின்றபோது கிராமங்களிலே இருக்கின்ற ஏழை எளியவர்கள் எல்லாம் இந்த நல்ல திட்டத்தைப் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து ஆரம்பப் பள்ளிக்கூடங்களின், கட்டடங்களைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தோமே யானால் மரத்தடியிலே வைத்து குழந்தைகளின் வகுப்பறைகள் நடந்ததை நாம் மறந்துவிடவில்லை. ஆனால் இன்றையதினம் சத்துணவுத் திட்டத்தின் பயனாக கிராமங்களிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் நிரந்தரக் கட்டிடங்கள் இன்றையதினம் நிறுவி இருப்பதை எண்ணுகின்றபோது உள்ள படியே ஏழை எளியவர்கள் சார்பாக கிராமங்களிலே உள்ள மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் 1983–84 ஆம் ஆண்டிலே நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டு 30 உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டித் தருவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கின்றது.

அதைப் பார்க்கின்றபோது என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டு தொகுதியில் வீரமங்கலம் என்ற கிராமத்திற்கு சென்ற ஆண்டே ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் தேவை என்றும் அந்த கிராமத்தில் இருக்கின்ற ஏழை எளிய மாணவர்கள் 9-வது வகுப்பு படிக்க வேண்டும் என்றால் ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று படிக்கவேண்டிய ஒரு நிலை அந்த கிராமத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட வீரமங்கலம் கிராமத் திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளிக்கூடம் வேண்டும் என்று அதற்கான பணத்தையும் சென்ற ஆண்டு கட்டியிருந்தார்கள். ஆனால் சென்ற ஆண்டு அப்படிப்பட்ட ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் அந்த கிராமத்திற்கு வரவில்லை. எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலாவது அந்த வீரமங்கலம் கிராமத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளிக்கூடத்தை நிறுவிக்கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நடத்திக்கொண்டிருக்கிறார்கள், ஆசிரியர்கள் பக்கம் பக்கமாகப்
புரட்டிக்கொண்டிருக்கிறார்களே தவிர மாணவர்களில் எத்தனை
பேர்கள் புரிந்து கொண்டார்கள் என்பதைப் பார்க்கவில்லை,
அதிகமான சுமையை மாணவர்களுக்கு ஏற்றிக்கொண்டிருக்
கிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு கல்வியின் தரம் உயர்ந்திருக்
கிறதா என்றால் உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா
என்ற அளவுக்குத்தான் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை
நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிதித் துறையின் மூலமாக கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு
செய்யப்படுகிறபோது ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஆசிரியர்
களைப் புதிதாக நியமனம் செய்வதற்கு இயக்குநர் அவர்கள்
ஆணை பிறப்பிக்கிறார்கள். அது மாவட்டக் கல்வி முதல்வரி
டத்திலே போகிறது, பிறகு அது மாவட்டக்கல்வி அதிகாரியினிடத்
திலே போகிறது. மாவட்டக் கல்வி அதிகாரி அரசாங்கத்தின்
மூலமாக நடைபெறுகின்ற பள்ளிகளுக்கு, ஆசிரியர்களுக்கு குறை
இருக்கிறது, தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்னால் அதனைப்
போக்குவதற்குப் பதிலாக தனியார் பள்ளிகளுக்குத் தருவதிலே
தாராளமாக நடந்துகொள்கிறார். அப்படி நடந்துக்கொள்வதன்
காரணமாக ஆசிரியர்களைச் சேர்க்கிறபோது தனியார் பள்ளி
களுக்கு இடங்களை விற்கின்ற நிலை ஏற்படுகிறது. இவற்றை
யெல்லாம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். கல்விக்கு ரஷ்யாவிலே பெண்களை அதிகமாகப் பயன்
படுத்துகின்ற நிலை இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற இந்த
அரசாங்கம், தாய்குலத்தின்மீது தணியாத பற்றுக்கொண்டிருக்
கின்ற இந்த அரசாங்கம் கல்வித்துறையிலே அதிகமாக தாய்க்
குலத்தை பயன்படுத்தவேண்டுமென்று நான் குறிப்பிடாமல்
இருக்கமுடியாது.

அடுத்தாற்போல் எனக்கு இருக்கிற சில சந்தேகங்களை
உங்களிடத்திலே கேட்டு தெளிவுபெறலாம் என்று நினைக்கிறேன்.
நம்முடைய தலைமைச் செயலாளர் உடல்நலம் இல்லாமல்
இருக்கிறார்கள். ஒரு நாள் பேரவையில் அவருடைய உடல்நலம்
பற்றி செய்தி வந்தவுடனே நம்முடைய முதலமைச்சர் ஓடோடிப்
போய் பார்த்துவிட்டு வந்தார்கள். இதுவரையில் அவர் எப்படி
இருக்கிறார் என்று தெரியாமல் இருந்தாலும்கூட சென்ற நிதி
நிலை அறிக்கை கல்வி மானிய விவாதத்தின்போதுகூட
உறுப்பினர்களால் இதே பிரச்சினை கிளப்பப்பட்டது. அவர் ஒரு
புத்தகத்தை எழுதினார். தமிழ் வளர்த்த தேசியம் என்ற
புத்தகம் பாடநூலாக திணிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஒரு
பெரிய பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரி ஒரு நூலை எழுதி
யிருக்கிறார். தன்னுடைய அதிகாரத்தை வைத்து பாடநூலாக
அவர் ஏற்படுத்தி இருப்பதைப்போல் பல அதிகாரிகளும் அதைச்
செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும், அது குறித்து
தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை





விடுத்தார்கள். அது இன்றைய தினம் எந்த நிலையில் இருக்கிறது
அந்தப் பாடப்புத்தகம் திரும்பப்பெறப்பட்டதா? அதனுடைய முழு
விவரமும் இன்றைய தினம் வரையிலும் தெரியாத காரணத்தி
னாலே அதைப்பற்றி தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர்
அவர்களே, அதிலே உங்களுடைய கருத்து என்ன? அந்தப் பாடப்
புத்தகம் இருக்கலாமா இருக்கக்கூடாதா அதைச் சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** அமைச்சர் என்னுடைய விருப்பத்தைக்
கேட்கிறபோது சென்ற மாமன்றக் கூட்டத்திலே நடந்த
விவாதத்தின்போது ஒரு பெரிய பொறுப்பிலே இருக்கிற அதிகாரி
ஒரு நூலை எழுதி அதைத் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்
படுத்தி பாடநூலாகக் கொண்டுவந்திருக்கிற இப்படிப்பட்ட நிலை
ஒப்புக் கொள்ளப்படுமேயானால் மற்ற அதிகாரிகளும் இதுபோன்ற
நூல்களை எழுதி அதையும் அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப்
பயன்படுத்தி பாடநூலாக ஆக்கப்படும் என்ற நிலையைப்பற்றி
சென்ற முறை விமர்சனம் செய்தார்கள்.

அதற்குரிய நடவடிக்கை தாங்கள் என்ன எடுத்திருக்கிறீர்கள்
என்பதைத் தெரிந்துகொள்ள முயன்றேனே தவிர, என்னுடைய
கருத்தைப்பற்றி தனிப்பட்ட முறையிலே கேட்டாலும் நான்
என்ன கருதுகிறேன் என்றால் உள்ளபடியே தலைமைச்
செயலாளர் எழுதிய அந்த புத்தகம், ஒரு அதிகாரியாக மிகப்
பெரிய பொறுப்பிலே இருக்கிற அவர்கள் இதுபோன்ற புத்தகங்
களை எழுதுகிறபோது அது மற்ற அதிகாரிகளுக்கும் ஒரு
தவறான வழிமுறையை தோற்றுவிக்காதா என்றுதான் கேட்க
விரும்புகிறேன். அவருக்கு கொடுக்கிற சலுகையை மற்ற
எல்லா அதிகாரிகளுக்கும் கொடுப்பதற்கு நீங்கள் தயாராக
இருக்கிறீர்களா என்றும் கேட்க ஆசைப்படுகிறேன்?

அடுத்து 20 அம்சத்திட்டத்தின் மூலமாக நோட்டுப் புத்தகங்
கள் மலிவு விலையில் கொடுக்கவேண்டுமென்று உங்களுக்குச்
சொல்லப்பட்டிருக்கிறது. நீங்களும் மலிவு விலையில் நோட்டுப்
புத்தகங்களை கொடுக்கவேண்டுமென்று பேப்பர் மில்களை
நடத்துகிறவர்களிடத்திலே அவ்வாறு கொடுக்கவேண்டுமென
சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அவர்களோ கொடுக்க இயலாது
என்று கூறி கோர்ட்டிற்கு போய் தடை வாங்கியிருக்கிறார்கள்.
அந்த தடையை தகர்த்தெறிவதற்கு அரசாங்கம் நடவடிக்கை
ஏதாவது எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து 1983–84-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசி
அதற்கு கருத்துத் தெரிவிக்கின்ற நிலையில் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியா வரலாற்று
நூல் என்ற ஆறாவது வகுப்பு புத்தகத்தை எடுத்துக்காட்டி,
இராஜாஜி அவர்கள் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது

தமிழகத்திலுடைய அரசாங்கம் முடிவுற்றது போலவும், மீண்டும் 1980-லே அன்னை இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்ததற்கு பிறகு இங்கே ஒன்பது மாநிலங்கள் கலைக்கப்பட்டு, மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று தமிழகத்தினுடைய முதல்வர் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்தார் என்று சுட்டிக்காட்டியிருப்பதாகச் சொல்லி அதே நேரத்தில் அதற்கு முன்னாலேயிருந்த அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியைப் பற்றியும், நீங்கள் தெய்வம் என்று போற்றுகின்ற அண்ணா அவர்கள் ஆட்சியைப் பற்றியும், அதற்கு பின்னாலே வந்த கலைஞர் அவர்கள் ஆட்சியைப் பற்றியும், எங்கள் அருமைத் தலைவர் பக்தவத்சலனார் அவர்கள் ஆட்சியைப் பற்றியும் அந்த வரலாற்று நூலிலே இடம் பெறவில்லை என்று அந்த புத்தகத்தை வைத்துக் கொண்டே எடுத்துச் சொன்னார்கள். இதுபோன்ற வரலாற்றுப் புத்தகங்களை கொண்டு வருகிறபோது நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் அல்லவா? காமராஜருடைய அக்காவிற்கு பணம் கொடுத்தேன்; காமராஜருடைய பிறந்த நாளை கொண்டாடுகிறேன்; காமராஜருக்கு சிலை எடுக்கிறேன் என்றெல்லாம் சொல்கிறீர்கள், ஒரு வரலாற்று நூலிலே அந்தத் தலைவருடைய பொற்கால ஆட்சியைப் பற்றி சொல்லாமல் இருட்டடிப்பு செய்வது தான் அந்தத் தலைவர் மீது நீங்கள் காட்டுகிற பாசமா, பரிவா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். வரலாற்று நூல் திருத்தியமைக்கப்பட வேண்டும். அந்த அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் ஆண்ட பொற்காலம் நிச்சயமாக அந்த வரலாற்று நூலில் இடம் பெறவேண்டும். அப்படி இடம் பெறவில்லை என்றால் அதைக் கண்டிக்கிற நிலையில் நிச்சயமாக நாங்கள் மிகப்பெரிய போராட்டத்திலே ஈடுபட வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்கிற பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது என்பதை குறிப்பாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல இங்கே எயிடெட் ஸ்கூல்ஸ் என்று இருக்கின்றன. அங்கே பணிபுரிகின்ற ஆசிரியர்கள் முன்பெல்லாம் யூனியனிலே சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது மாவட்ட கல்வி அதிகாரிகள் ....

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நேற்று இரவு நாங்கள் மகாத்மா காந்தி பற்றி ஒரு படம் பார்த்தோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் எழுப்புகிற பிரச்னை பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனில் வராது. உறுப்பினர் அவர்கள் பேசுவதை ஒட்டித்தான் நீங்கள் கேட்கவேண்டும்.



(மாலை 4-50.)

திரு. கோவைத்தம்பி : துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் குறிப்பிடுவதற்கு காரணம்......

திருமதி டி. யசோதா : அவர் பேசும் போது இதையெல்லாம் சொல்லட்டும். இப்பொழுது நான் பேசிவிடுகிறேன்.

திரு. கோவைத்தம்பி : காந்தி படத்திலே தேசத்தலைவர்கள், தமிழகத் தலைவர்கள் ஒருவரும் இல்லை. அதை நாங்கள் குறை சொல்கிறோமா?

திரு. ஜி. மூர்த்தி : காந்தி படத்திலே காமராஜரே இல்லை.

திருமதி. டி. யசோதா : எய்டட் ஸ்கூலிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு முன்பெல்லாம் சம்பளங்கள் நேரடியாக, பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் மூலமாக கொடுக்கப்பட்டது. தற்போது நிலைமை என்னவென்றால், மாவட்டக் கல்வி அதிகாரிகளே, அவர்களுக்குச் சேரவேண்டிய அந்தச் சம்பளத்தைப் பெற்றுத் தருவது என்கின்ற காரணத்தாலே.....

திரு. கோவைத்தம்பி : நான் மகாத்மா காந்தியைப் பற்றி இந்திய அரசு தயாரித்த பல படங்களைப் பார்த்திருக்கிறேன். அதிலே அமரர் காமராஜர், மகாத்மா காந்தி அவர்களோடு வருகின்ற காட்சி இருக்கிறது. நான் பார்த்திருக்கிறேன். ஆனால், மத்திய அரசு கூட்டோடு தயாரிக்கப்பட்ட உலகப் பட நிறுவனம் தயாரித்த இந்த காந்திஜி படத்தில் அமரர் காமராஜ் பற்றியோ, புகழ்மிக்க காங்கிரஸ் தலைவர்கள் பற்றியோ இல்லை. இதற்காக மத்திய அரசைப் பற்றி குறை கூறுகின்ற நிலை ஏற்படுமானால், அந்த நிலைதான் இந்தப் பாடப் புத்தகத்திற்கும் வரும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைதினம் நாம் ரசித்த தேசப்பிதா காந்தியடிகளுடைய திரைப்படம் வெளி நாட்டுக்காரர் ஒருவர் எடுத்த திரைப்படம் என்பதை நாம் நன்றாக அறிவோம். மத்திய அரசாங்கம் அதற்குப் பணம் கொடுத்தது என்பதை நாம் அறிவோம். ஒரு வரலாற்றிலே எவ்வளவுச் செய்திகளைச் சொல்லமுடியுமோ, அதை எடுத்திருக்கிறார்கள். அதிலே, நம்முடைய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைப் பற்றியும் [illegible] பொறுத்த அளவிலே இராஜாஜி அவர்களைப் பற்றியும், காமராஜ் அவர்களைப் பற்றியும், ஏன், அம்பேத்கார் பற்றியும் இடம் இல்லை என்பதை நாம் அறிவோம். சேர்த்து இருந்திருந்தால் [illegible] இருந்திருக்கலாம்.

திரு. எல். [illegible] : நேற்றைய தினம் காண்பிக்கப்பட்ட அந்த காந்தி சினிமா படத்திலே, நண்பர் [illegible] போல உலகப் பெரும் தலைவர்களிலே ஒருவரான நேதாஜி [illegible] பேசப்படவில்லை, காட்டப்பட[illegible]

சொன்னால் மத்திய அரசு எந்த அளவிற்கு ஒரு தலைவருடைய சரித்திரத்தை மறைத்திருக்கிறது பெரும் எதிர்த்துப் போராட வேண்டி வரும் என்பதை என்பதனை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : குற்றச்சாட்டு சொல்வதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், இதிலே வேண்டுமென்றே நாம் ஒன்றும் செய்யவில்லையே. வெளி நாட்டுக்காரர் எடுத்திருக்கிறார். இந்த அளவிற்கு, உலகத்திலே தேசப்பிதா பெருமையை நிலைநாட்டுவதற்கு ஒரு வெளிநாட்டுக் காரர் முன் வந்திருக்கிறார் என்று நாம் பாராட்டலாம். சேர்த்து எடுத்திருக்கலாம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தியைப் பற்றியது படம். அது படம். எடுத்தவன் வெளி நாட்டுக்காரன். இது வரலாற்று நூல். வரலாற்று நூலுக்கும் சினிமா படத்திற்குமே வித்தியாசம் தெரியாமல் என்னுடைய டைமை எல்லாம் எடுத்துக் கொள் கிறார்கள், ஆகவே, எனக்கு கூடுதல் நேரம் தரவேண்டுமென்று கேட்கிறேன்.

எய்டட் ஸ்கூலிலே இருக்கிற டீச்சர்களுக்கு இப்பொழுது சம்பளம் குறித்த காலத்திலே கிடைப்பது சற்று சிரமமாக இருக்கிறது. ஆகவேதான் நான் சொல்கிறேன்..........
(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கிளப்பிய பிரச்னைகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால் அட்டன் பரோவைத்தான் இங்கு கூப்பிட வேண்டும். ஆகவே, அந்தப் பிரச்சனையை விட்டு விட்டு மற்றப் பிரச்னைகளைப் பேசுவது நல்லது. வீணாக வேறு பல பிரச்னைகளுக்குப் போவது இந்த மன்றத்தினுடைய தன்மைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எய்டட் ஸ்கூலிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு, மாவட்டக் கல்வி அதிகாரிகளே எல்லா வேலை களையும் செய்து, சம்பளம் பெற்றுக் கொடுக்க வேண்டியதாலே, அவர்களுக்கு வேலை பளு மட்டுமல்ல, தாமதமும் ஏற்படுகிறது. ஆகவே, மாவட்டக் கல்வி அதிகாரிகளுடைய சிபாரிசின் பேரிலே அந்த, அந்த ஏ. இ. ஓ.க்களே, சம்பளம் பட்டுவாடா செய்யக்கூடிய நிலையினை நீங்கள் தோற்றுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டெபுட்டி இன்ஸ்பெக்டர்கள் சத்துணவுப் பணியினையும் ஏற்றுச் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஏற்கனவே வேலை அதிகம். இப்பொழுதோ உணவுப் பொருட் களுக்குப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்; அந்தக் குறளமுது ஆசிரியர்களின் சம்பளத்தைப், பற்றியும் பார்க்க வேண்டும்.



விடுப்பு வழங்குவது போன்ற அத்தனை பணிகளோடு ஏற்கனவே இருந்த பணியையும் சேர்த்து செய்யும்பொழுது மிகவும் அதிகமான சிரமத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கருணையோடு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கூர்ந்து கவனித்து அவர் களுக்கு உதவியாக டைபிஸ்டோடு கூடிய உதவியாளர்களை நியமித்தால் வெகு சிறப்பாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறளமுது ஆசிரியர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுக்கப் படுவதைப் பார்த்தால், இந்த விலைவாசி இருக்கின்ற காலத்தில் அது சரியாக இருக்குமா என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றிக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ரொம்பவும் பின் தங்கிய தொகுதி, தொழிற்சாலை இல்லாத தொகுதி, விவசாயம் சிறப்பாக இல்லாத நிலையில் காய்ந்து போன தொகுதி, அந்தத் தொகுதியிலே நிச்சயமாக நிறைய இடம் இருக்கிறது. உங்களுக்குத் தேவையான இடம் இருக்கிறது. நீங்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு எங்கள் தொகுதிக்கு இப்பொழுது இருக்கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் காலத்திலேயே ஒரு கல்லூரியைத் தோற்றுவித்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், அங்கே பள்ளிக்கூடங்கள் கட்ட வேண்டுமானால் எங்களுக்கு அனுமதி கிடையாது. சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கும், நூற்பு மில்கள் கட்டுவதற்கும்தான் அனுமதி இருக்கிறதே தவிர, பள்ளிக்கூடம் கட்டுவதற்கான அனுமதி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குன்னம் என்ற பகுதியிலே அதிகமான குழந்தைகள் இருக்கிறார்கள் அவர்கள் நல்ல முறையில் படிப்பதற்கான இடம் பள்ளிகளில் இல்லை. எனவே, அவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கள்ளமரத்தூர் என்ற இடத்திலும், வெங்காடு என்ற இடத்திலும் கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதால் பள்ளிக்கூட உபாத்தியாயர் கோவில் வாசலிலே நின்று கொண்டிருக்கிறார்; மரத்திற்குக் கீழே குழந்தைகள் இருக்கிறார்கள். வெய்யில் வந்தவுடன் குழந்தைகள் பள்ளிக்கூடத்தை விட்டுப் போய் விடுகிறார்கள். இதுபோன்ற நிலைமைகள் பள்ளிக் கூடங்கள் அங்கே இல்லாத காரணத்தால் இருக்கின்றன. எனவே அங்கே பள்ளிகளை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு பண்பாட்டை, மாரல் இன்ஸ்ட்ராக்ஷனை சொல்லித் தர வேண்டும். அதில் முனைப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இப்பொழுது சொல்லப் போவது கொஞ்சம் வேகத்தைக் கொடுத்தாலும், சொல்ல வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதிலே உங்களுக்கு வருத்தமும் வேதனையும் இருக்கும். ஆனால் யாராவது படிக்கிறேன் என்று வரும்பொழுது, அவ்வாறு ஏழைப் பிள்ளைகள் சொன்னால் அவர்களுக்கு வசதிசெய்து கொடுப்பதில் நீங்கள் ஏன் பின்வாங்க வேண்டுமென்று கேட்கிறேன். படிக்கிறேன் என்று சொல்லுகின்ற ஏழைப் பிள்ளைகளுக்குப் படிக்க வசதி இல்லை. வசதியான குழந்தைகள் கான்வென்டிலே படிக்கிறார்கள். ஆனால் வசதியற்ற ஏழைக் குழந்தைகள் இந்தி படிப்பதற்கு நீங்கள் அரசுப் பள்ளிகளிலே ஏற்பாடு செய்து கொடுக்கும்படி இந்த நேரத்தில் மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பெல்ட் ஏரியா நான்-பெல்ட் ஏரியா என்று உபாத்தியாயர்களைப் பிரிப்பதால் எல்லோரும் பெல்ட் ஏரியாவுக்குத்தான் வர விரும்புகிறார்கள். ஆகவே பள்ளிகளிலே பாடங்கள் ஒழுங்காக நடத்தாமல் அவரவர்கள் மாறுதலை எப்படிப் பெறுவது என்பதிலே தான் அக்கறைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சேவா மனப்பான்மையோடு வருபவர்கள். ஆகவே, அவர்களை இந்தக் கட்டுக் கோப்பிற்குள் கொண்டு வராமல் எல்லோரையும் ஒட்டு மொத்தமாக ட்ரீட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு வேண்டியவர் திரு. ........ அவர்கள் சொன்னார்கள். அதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், கவனிக்க வேண்டும் என்றும் நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினரவர்கள் பேச ஆரம்பித்து 19 நிமிடங்கள் ஆகிவிட்டன. விரைவில் முடிக்க வேண்டும்.

திருமதி டி. யசோதா: ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன், அலந்தூரிலே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. உபகார சாசுவத நிதியால் நடத்தப்படும் தனியார் பள்ளிக்கூடம். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வருமானம் அதிகம். அரசாங்கமும் முழுமையாக மானியம் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தப்பள்ளிக் கூடத்திலே 6-ஆம் வகுப்பு தமிழ் மீடியத்திற்கு 200 ரூபாய் டொனேஷன்; இங்கிலீஷ் மீடியத்திற்கு 500 ரூபாய் டொனேஷன்; அதுமல்லாமல், வருஷத்திற்கு இரண்டு நாடகங்கள் போடுகிறார்கள். ஒரு நாடகத்தின் பெயர் ரூபாய்க்கு மூன்று பழம்; அடுத்த நாடகம், காதுலே பூ. இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்துபவர்கள் மிகப் பெரியத் தொகையைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



புலவர் பட்டம் பெற்று பணி புரியும் கடைநிலை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்திட வேண்டும்.

தமிழ் மொழியிலே பட்டம் பெற்று பணி புரிபவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வை, தமிழக அரசு கொடுத்த உறுதிமொழிப்படி சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். 4 ஆண்டுகளில், பி.எட். பட்டம் பெற்றவர்களுக்கு அது கொடுக்கும்பொழுது, 4 வருஷ காலம் தமிழ் ஆசிரியர் பட்டம்பெற்றவர்களுக்கும் அது கொடுக்கப்பட வேண்டுமென்பதை நான் உங்களிடம் கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(மாலை 5.00)

திரு. கி. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1983–84 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின் மீது, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல என்னை அனுமதித்திருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேச ஆரம்பிக்கிறேன். சென்ற ஆண்டு இந்தக் கல்வி மானியமாக 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அறிகிறோம். இந்த ஆண்டு 356 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. தமிழகத்திலே வானம் பொய்த்துப் போனாலும், வறுமைகள் தாண்டவம் ஆடினாலும், எப்படிப்பட்ட போராட்டங்கள் எதிர்த்து நடத்தினாலும், விலைவாசிகள் எப்படி உயர்ந்தாலும், கல்விக் கண்ணை மூடக்கூடாது என்று சொன்ன அரிய கருத்தோடு, புரட்சித் தலைவர் ஆட்சி எவ்வளவு பணத்தை ஒதுக்கியிருக்கிறது என்பதை எண்ணும்பொழுது, உள்ளபடியே இந்த நாட்டு குடிமகன் எவனும் சந்தோஷப்படாமல் இருக்கமுடியாது. யாராவது இதைப்பார்த்துப் பாராட்டாமல் இருக்கமுடியாது என்ற எண்ணத்தை உங்களிடத்தின் மத்தியிலே நான் வைக்க ஆசைப்படுகிறேன். 30–9–82, அக்டோபர் 82–ல் நமக்குக் கொடுத்திருக்கிற கணக்குப்படி, முதல்நிலைப் பள்ளிகளுக்கும்; நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலை; மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மொத்தமாக 37,531 பள்ளிகள் சென்ற ஆண்டு இயங்கியிருக்கின்றன. அதிலே 97 இலட்சத்திற்கும் மேலே குழந்தைகள் பள்ளிப் படிப்பை முடித்திருக்கிறார்கள். அதில் பணியாற்றிய ஆசிரியர்கள் 2.76 லட்சம் பேர்கள். 1983-84-ல் ஆசிரியர்களை அதிகப்படுத்தப் போகிறோம் என்ற இந்த மான்யத்திலே அறிக்கை வந்திருப்பது உள்ளபடியே ஆசிரியர் குலத்திற்கு—ஆசிரியர் வேலை செய்கின்ற அத்தனைபேருக்கும் ஒரு பெரிய மகிழ்ச்சிக் தரக்கூடிய ஒன்றாகும். இடைநிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய, செகண்டரி ஆசிரியர்களை, 1,250 பேருக்கு வேலை வாய்ப்பு புதியதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நடுநிலைப்பள்ளிகளுக்கும், உயர்நிலைப்பள்ளிகளுக்கும், உடற் பயிற்சி ஆசிரியர்கள், 100 பேர்களுக்கு மேலே, இந்த ஆண்டு இந்த மான்யத்திலே கூட்டிக்கொடுத்திருக்கிறோம் என்ற நல்ல எண்ணத்தை, நல்லதொரு திட்டத்தை நம்மாலே பார்க்க முடிகிறது. நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் இவற்றை

யெல்லாம் சேர்த்து, தமிழ் ஆசிரியர் பதவிகள் 150-ஐ அள்ளிக் கொடுக்கிறார்கள் என்பதை நாம் அறியும் பொழுது எல்லோரும் சந்தோஷப்படாமல் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல இந்த ஆண்டு 30 உயர்நிலைப்பள்ளி தொடங்க இருக்கிறார்கள். 30 உயர்நிலைப் பள்ளிகள் தொடக்கத்தோடு, எத்தனை பேர்கள் ஆதாரத்திற்கு வருகிறார்கள்? எவ்வளவு பேர்கள் அவ்வேலை நியமிக்க வேண்டி யிருக்கிறது. 30 தலைமை ஆசிரியர்களை நாம் நியமிக்க வேண்டி யிருக்கிறோம். இதெல்லாம் ஒரு நல்ல அறிகுறியாக இந்த மான்யத்தில் நமக்கு தென்படுகிறது. உயர்நிலைப்பள்ளிகளுக்கு, பி. எட். ஆசிரியர்களை, 2 0 பேர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பளிக்க இருக்கிறது. ஆண்டாண்டு காலமாக படித்து முடித்துவிட்டு, வேலை இல்லாமல் ஏங்கிக் கொண்டிருக்கிற, பி. எட். ஆசிரியர்கள் 200 பேர்களுடைய நெஞ்சங்களிலே பால் வார்த்தமாதிரி இது இல்லையா என்று எண்ணும்பொழுது உள்ளபடியே, இந்த மான்யம் நமக்கு ஒரு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. நடுநிலைப்பள்ளிகளில், பகுதிநேர கைத்தொழில் ஆசிரியர் பதவியை முழு நேரமாக 100 பேர்களாக உயர்த்தி யிருப்பது, அவர்களுடைய நெஞ்சங்களிலே பால் வார்த்தமாதிரி இருக்கிறது. 1981–82-ல் 1 விருந்து 5 வகுப்புகள் வரை, 6-லிருந்து 11 வயது வரையுள்ள மாணவர்கள், 96 விழுக்காடு களுக்கு மேலே பள்ளியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள குழந்தைகளில், 6 வயதிலிருந்து 11 வயதாக இருக்கிற அத்தனை பிள்ளைகளிலேயும் 96 விழுக்காட்டிற்குக் குழந்தைகள் பள்ளியிலே சேர்க்கப்பட்டு, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு அறிவு தந்து, முடிக்கப்பட்டிருக்கிறது என்பதனை நாம் மறந்து விடமுடியாது. 6-லிருந்து, 11 வது வகுப்பு வரையில், 11 வயதிலிருந்து 14 ஆவது வயது வரை, தமிழகத்திலே இருக்கக்கூடிய மொத்த குழந்தைகளிலே 66 விழுக்காட்டிற்கு மேலே பாதுகாப்பு கொடுத்து, பள்ளிப் படிப்பும் கொடுத்து, உணவும் கொடுத்து, அவர்களுக்கு ஒரு ஆண்டை முடித்திருக்கிறது என்று சொன்னால் அதனுடைய விளம்பரத்தைப் பார்க்கும்பொழுது, நம்மாலே ஆனந்தப்படாமல் இருக்கமுடியாது. பள்ளிக்கூடத்திலே சேர்க்கப்பட்டவர்களுக்கு நான் ஒன்று குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசினுடைய முக்கியமாக, ஜீவாதாரமாகக் கருதப்படுகின்ற ‘ 20–பாயின்ட்ஸ் புரோகிராம் ’’ அந்த ஆட்சியினுடைய அடிப்படையை வலிமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய ஆசையை வெளிப்படுத்தியிருக் கிறார்கள், இந்த 20 அம்சத் திட்டத்தின் மூலமாக.

1984–85க்குள் தமிழகத்திலே 1–வதிலிருந்து 5-வது வகுப்பு வரையில், அதாவது 6 வயதிலிருந்து 11 வயதுள்ள குழந்தைகள் எல்லாம் 95 விழுக்காட்டிற்கு குறையாமல் படித்தாக வேண்டும், சேர்த்தாக வேண்டும். பள்ளிப் பிள்ளைகள் என்ற பட்டத்தை கொடுத்தாக வேண்டும் என்ற ஆசை 20 அம்சத்திட்டத்திலே மிதந்து கொண்டிருக்கிறது. 20 அம்ச திட்டத்தில் எவ்வளவு பெரிய ஆசையை நாம் பார்க்கிறோம். அதே நேரத்தில் 6-வது



8-வது வகுப்புகளில் 11-வயது, 14–வயது வரையில் 99 சதவிகிதமாவது. பள்ளிப் பிள்ளைகள் என்ற பட்டத்தை கொடுத்தாக வேண்டும் என்ற ஆசையை 20 அம்சத் திட்டத்திலே நாம் பார்க்கிறோம் ஆனால் ஒரு உண்மை இங்கே கொடுத் திருக்கின்ற கணக்கிலிருந்து தெரியவருகிறது, 20 அம்சத் திட்டம், 6லிருந்து 8-வது வரை படிக்கக்கூடிய பிள்ளைகள் 1985ல் 50 சதவிகிதமாக ஏறியிருக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறது. ஆனால் தமிழக அரசு 66 ஆக உயர்த்தி இரண்டு வருடத் திற்கு முன்னாலேயே காட்டுகிறது என்று சொன்னால் கண்மூடித் தனமாக யாரும் இதை குறை கூறமுடியாது என்று நான் சொல்கிறேன். அது மட்டும் அல்ல. 1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரையில் 96 சதவிகிதம் அதிகமாக இங்கு நாம் கேட்டிருக்கிறோம். இதுவும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே முடிக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால் மத்திய அரசு 20 அம்சம் மூலமாக திட்டத்தை கொண்டு வந்து செயலாற்றப் போகின்றோம் என்று எண்ணுகின்ற எண்ணம் தமிழக அரசு திட்டத்தோடு போட்டி போட்டுக் கொண்டு வரமுடியவில்லை, மெதுவாக வருகிறது தமிழக திட்டத்தோடு ஈடுகொடுக்க முடியவில்லை என்று வேண்டு மானாலும் சொல்லலாம். தமிழக திட்டம் அதைவிட முந்திப் போய்க்கொண்டிருக்கிறது ஆனால் பிந்தி வந்துகொண்டிருக்கிற வகையிலே இந்த கல்வித் துறையிலே அதோடு நாம் பிந்தி இருக்கத் தயாரா, இல்லை, முந்திச்சென்று இந்த உலகத்திற்கே வழிகாட்டியாக இருப்போமே என்ற எண்ணத்திலேதான், இந்த நிலைகள் நமக்குத் தெரிகிறது. இதிலிருந்து ஒரு உண்மை புலப்படுகிறது. தமிழகத்திலே கல்வியினுடைய நிர்வாகம் எந்த அளவுக்கு, இன்ச்—இன்ச்-ஆக என்று சொல்வது மாதிரி படிப்படியாக யாரும் குறை கூற முடியாத அளவுக்கு ஸ்டேட்டிஸ்டிகல் கணக்குப்படி இவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள் அந்த மாதிரி இந்த பள்ளி விவரங்களை நமக்கு தந்து கொண்டிருக்கிறது. உள்ளபடியே இவ்வளவு பெரிய காரியங்கள் எல்லாம் நாம் செய்து கொண்டு வருகிறோம் என்று எண்ணுகின்றபோது தமிழக அரசு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மிகவும் சந்தோஷப்படுகிறது. 1982–83ல் 6லிருந்து 6 வயது உள்ளவர், 1–லிருந்து 8-ஆம் வகுப்புக்குள்ளே 2 63 இலட்சம் அதிகமாக சேர்ந்திருக்கிறார்கள். காலையிலே கூட இந்த மன்றத்திலே பேசியவர்கள் எப்படி அதிகமாக உயரும், இதற்கு முன்னாலே எங்கிருந்தார்கள். அதற்கு அதிகமாக, குறைவாக இருப்பதற்கு யார் காரணம் என்றெல்லாம் வினாக்களை எழுப்பியதை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். மானியத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள் 1977-78ல் 6லிருந்து 11 வயதானவர்கள் 5-வது வகுப்பு வரை தொடர்ந்து படிக்க முடியவில்லை. அது நிச்சயம். 2-வது வரை படிக்கிறவன் 3—வது வரை வர முடியாமல் 4—வது படிக்கிறவன் 5—வது வரை வரமுடிய போகிறான்.

அதுமட்டுமல்லாமல் அப்படிப்பட்ட பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் எளிமையான குடும்பத்திலே பிறந்த காரணத்தாலே வாழ்வுக்கு வகை செய்து கொள்ள அவர்களால முடியவில்லை என்ற போது, தங்களுடைய குழந்தைகளுக்கு, படிக்கப்போகின்ற குழந்தைகளுக்கு எப்படி அவர்கள் வகை செய்யமுடியும். தமிழ்நாடு அரசில் பள்ளிக்கூடங்களிலே சிலேட்டுக்களைக் கொடுக்கிறார்கள். புத்தகங்கள் கொடுக்கிறார்கள். ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கட்டிடங்கள் இருக்கின்றன. ஆனால் எல்லாம் கொடுத்து சோறு இல்லை என்று சொன்னால், ஏழையாகிய நான் என் குழந்தைகளை வைத்து என்ன செய்வது என்று ஏங்குகின்ற அந்த ஏழை உள்ளங்களுடைய பிரதிபலிப்பாகத் தான் இருக்கிறது இந்தத் திட்டம். இந்தத் திட்டத்தாலே 2 லட்சத்திற்கு மேலே அதிகமாக குழந்தைகள் வருகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை, சத்துணவைச் சாப்பிடுகின்ற, கிட்டத்தட்ட தமிழக திலே 65 லட்சம் குழந்தைகளில் 42 லட்சம் குழந்தைகள் வகுப்பிலே உட்கார்ந்துகொண்டு ஆசிரியர்கள் முகத்தைப் பார்த்து பரிட்சை எழுதக்கூடிய குழந்தைகள். 42 லட்சம் பேர்களுடைய வயிறை குளிர வைத்து அவர்களுடைய மனத்தை நல்ல நிலையிலே கொண்டு வந்து வைத்து ஆசிரியர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பாடத்தை அவர்கள் கேட்க வைத்து தேர்விலே வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகள் இதிலே இருக்கிறது. ஆகவே எல்லோருக்கும் மையமாக சத்துணவு இருக்கிறது என்பதை நான் சொல்லவிரும்புகிறேன். இந்த 42 லட்சம் பேர்களும், 33.831 பள்ளி மையங்களிலிருந்து அவர்கள் உணவு கொள்கிறார்கள். 33,831 பள்ளிகளின் இருந்து இந்த சத்துணவு கொடுக்கிறார்கள் என்று இந்த மானியத்திலே அறிமுகப்படுத்தியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு மையத்திலேயும் 150 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற ஒரு ஆசிரியர், ஒரு சமையல்காரர் என்று இப்படி இருக்கிறார்கள் ஆக இப்படி அதையும் மூன்றாக பெருக்கினால், எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு இதனால் கிடைக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு அமெரிக்க கேர் நிறுவனம் இலவசமாக நமக்கு 11,6?0 மெட்ரிக் டன் கோதுமையும், 1,450 மெட்ரிக் டன் எண்ணெயும், 30 நாளைக்கு மாகவும், 54 நாளுக்கு எண்ணெயாகவும் கொடுத்தது தானிய படுத்தப்பட்டுள்ளது. மீண்டும் இந்த ஆண்டு பயன் நிறுவனம் நமக்கு 9800 டன் அரிசியும், 200 டன் எண்ணெயையும் அந்த கேர் நமக்கு கொடுக்க முன்வந்துள்ளதாக நமக்குக் கொடுத்துள்ள இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தின் சார்பாக அந்த நல்ல எண்ணம் கொண்ட இந்த இயக்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன். எவ்வளவு தான் வறுமை தாண்டவம் ஆடினாலும் விலைவாசிகள் ஏறினாலும் யாரும் அரிசி கொடுக்கமாட்டோம்



என்று சண்டித்தனம் செய்தாலும் நாங்கள் தருகிறோம் என்ற அந்த நிறுவனம் தருகிறதே அதற்காக இந்த மன்றத்திலே நான் அந்த நிறுவனத்திற்கு என்னுடைய முழு மனதோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். புதிய உயர்நிலைப் பள்ளிகளைச் சென்ற ஆண்டு 50 திறந்து இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 30–க்கும் மேலே உயர்நிலைப் பள்ளி களைத் திறக்கப் போகிறோம் என்று சொல்கிறபோது உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கிறது. இந்த தமிழக ஆட்சியில் தான், புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் வள்ளுவர் சொன்னதைப்போல—‘‘இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன் கண்விடல்’’-என்ற வகையில், நமக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் கிடைத்து இருக்கிறார்கள். தமிழகத்தில் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கத்தான் அவர்கள் பிறந்தார்க ளோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அவர்கள் செயல்படுகின்ற காரணத்தால் தான்’ இன்றைக்குக் கோவையில் பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், சென்னை அண்ணா பல்கலைக் கழகம், பெயர் மாற்றி வைத்ததன் அடிப்படையில் பெரும் தலைவர் காமராஜர் பல்கலைக்கழகம் என்று பல்வேறு பல்கலைக் கழகங்களை இன்றைக்கு நாம் பெற்று, இந்த புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தினை நாம் பொற்காலமாகக் கொண்டாடி வருகிறோம். (மணியடிக்கப்பட்டது.) உடற்பயிற்சி ஆசிரியர்களையும் ஆசிரியர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கிளை நூலகங்கள் பெரும்பாலும் வாடகைக்கட்டிடங்களில் தான் இருக்கின்றன. புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பின்னாலே தான் அழகான கட்டிடங்களை கிராமப்புறங்களில் காண முடிந்தது. பயிற்சிபெறாத நூலகர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. இது நிரந்தரமற்றது. அவர்கள் பயிற்சி பெறுவதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும். கலைக்கல்லூரி முதல்வர்களுக்குக் கொடுக்கப்படும் சிறப் பூதியத்தை சம்பளத்தோடு சேர்த்துக்கொடுத்தால் அவர்கள் ஓய்வூதியம் பெறும்போது உதவிகரமாக இருக்கும்.

அரசு கலைக்கல்லூரிகளில் துறைத் தலைவர்களாக இருக்கும் பேராசிரியர்களுக்கும், அன்டர்-கிராஜுவேட் கல்லூரிகளில் உள்ள துறைத்தலைவர்களாக இருக்கும் போராசியர்களுக்கும் இடையே எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறி முடிக்கிறேன்.

*திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று அவைமுன் விவாதத்தில் உள்ள கல்விமானியக் கோரிக்கைமீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கல்விக்காக இந்த அரசு 356 கோடி ஒதுக்கியிருக்கிறது. தமிழக அரசின் மொத்த மானியக் கோரிக்கையில் இது 21.5 சதவீதம் ஆகும்.

வில்லை. ஆகவே 1லிருந்து 5-வது வரை ஒழுங்காக படிக்காமல் இருப்பது, 1977-78ல் கிட்டத்தட்ட 40 விழுக்காடு குறைந்திருக்கிறது. இந்த 40 விழுக்காடு குறைந்திருந்தும் இந்த உணவு கிடைக்கின்ற காரணத்தினாலே, சத்துணவு கிடைக்கின்ற காரணத்தினாலே 1980-81 கணக்குப்படி அந்த 40 விழுக்காடு 30 விழுக்காடாக குறைந்திருக்கிறது என்று சொன்னால் அந்த 10 விழுக்காடு ஏறியிருப்பது யாருடைய கண்ணையும் மறைத்துவிடவில்லை. இது சத்தியத்திற்கு சத்தியமான உண்மையான கணக்கு. ஆகவே அங்கே குறைகிறது என்று சொன்னால், இங்கே ஏறுகிறது இங்கே ஏறுகிறது என்று சொன்னால் அங்கே குறைகிறது. அதற்கு யார் பொறுப்பு என்று சொன்னால் இங்கே பொறுப்பெல்லாம் சத்துணவு தான் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அதற்கு காரணம் குழந்தைகள் காப்பகங்களில் ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த மானியத்திலே நாம் பார்க்கிறோம். குழந்தைகள் காப்பகங்கள் 4,343ல் ஒவ்வொன்றிலும் ஒரு இளம் சிறார் பள்ளி வகுப்பை தொடங்கி, நர்சரி கிளாஸ்களாக படிப்பு சொல்லிக் கொடுக்கிற பாங்கு இங்கே இருக்கின்றதை பார்க்கும்போது, நான் உள்ளபடியே மிகவும் சந்தோஷத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(மாலை 5-10)

காரணம் நர்சரி பள்ளிக்கூடத்திலே நாம் எல்லாம் உண்மையாகப் பார்க்கிறோம். யார் போய் நர்சரி பள்ளிக்கூடத்திலே படிக்கிறார்கள். மாதம் பொறந்தால் சம்பளம் கிடையாது. அடுத்த நாளைக்கு சாப்பாடு கிடையாது. அடுத்த வேளை சாப்பாடு ஊர்ஜிதம் கிடையாது. அப்படிப்பட்ட ஏழைக் குழந்தைகள் எல்லாம் நர்சரி பள்ளிக்குப் போய் படிக்கவேண்டுமென்று சொன்னால் உள்ளபடியே இந்த தமிழகம் செய்த தவம்தான் அல்லவா. இதை யாரும் மறந்துவிட முடியுமா? நர்சரி பள்ளிக்கூடத்திற்கு தன்னுடைய குழந்தையை அனுப்புகிறான் என்று சொன்னால் அவன் பட்டதாரியாக இருப்பான். அல்லது வேறு வழியிலே அதிகமாக பணம் சம்பாதிப்பவனாக இருப்பான். பிள்ளைக்கு டை கட்டி, பேன்ட் போட்டு பெரிய ஆங்கிலேயர்கள் சொல்லிக்கொடுக்கக்கூடிய அந்த நர்சரிப் பள்ளிக்குக் கொண்டு போய் தன்னுடைய குழந்தைகளை விடுவான். இதுதான் நாம் தமிழகத்திலே காண்கிற உண்மை. ஆனால் இன்றைக்கு எல்லோரும் செல்லக்கூடிய ஒரு சந்தோஷமான செய்தியை இந்த மானியம் நமக்குத் தருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 4,343 பள்ளிகளில் ஒரு வகுப்பிலே 40 பிள்ளைகள் என்று சொன்னால்கூட கணக்குப் போட்டுப் பாருங்கள், எத்தனை ஏழைத் தந்தைகள், தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளை நர்சரிப் பள்ளிக்கூடத்திலே படிக்க



வைக்கிறார்கள். தாசில்தார் பையன் படிப்பான். அல்லது அந்தப் பகுதியிலே உள்ள கலெக்டர் பையன் படிப்பான். அவாள் வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்கூடத்திலே படிப்பார்கள். இன்றைக்கு மூட்டைத் தூக்குகின்ற கஞ்சிக்கு வழியில்லாதவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே படிக்கிறது என்று சொன்னால் அதைவிட ஒரு நல்ல செயல் இந்த மானியத்திலே வேறு என்ன காணமுடியும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்

அதுமட்டுமல்ல. சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும். இந்த உண்மையை யாரும் மறந்துவிட முடியாது. அதேநேரத்திலே என்னதான் ஒரு மாணவன் திறமையாக இருந்தாலும், என்னதான் ஒரு மாணவன் மிகவும் அதிகமான மார்க்குள் பெறக்கூடியவனாக இருந்தாலும் அவன் உடலிலே, அவன்வலிவாலே அவன் எண்ணத்தாலே மிகவும் தாழ்ந்து போய் இருப்பானானால், நிச்சயமாக அவனுடைய உள்ளம் வளராது. நிச்சயமாக அவனுடைய எதிர்காலம் பாழ்பட்டுப் போகும். நிச்சயமாக அவனுடைய எதிர்காலம் இருண்ட காலமாகிவிடும். அதனால்தான் இந்தக் குழந்தைகளுக்கு வயிறார சோறு உண்ண வேண்டும். அந்தச் சோறு சாப்பிடக்கூடிய அந்தக் குழந்தைகளுடைய உடல் ஆகிய அந்தச் சுவர் நன்றாக இருக்கவேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் சத்துணவு கொடுக்கிறார்கள். நமக்கு எல்லாம் தெரியும். தெருவிலே நடந்துபோகிற போது தாய்மார்களைப் பார்க்கிறோம் எலும்பும் தோலுமாக. அதுவும் இல்லாமல், வத்தலும் தொத்தலுமாக இருக்கின்ற நேரத்திலே ஒரு குழந்தையை எடுத்து பால் கொடுக்கிறாள் ஒரு தாய் பால் குடிக்க குழந்தை தாவுகிறது. தாய் ஆசையோடு அதை எடுத்து பால் கொடுக்க அணைக்கிறார்கள். ஆனால் பாலை அப்பி அப்பி பார்த்த அந்தக் குழந்தை, பால் வரவில்லை என்ற காரணத்திற்காக தன்னுடைய தாயின் முகத்தைப் பார்க்கிறது. குழந்தையினுடைய முகத்தை தாய் பார்க்கிறாள். ஆகவே இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்து அழுகின்ற போது உண்மையிலே இதைவிட கொடுமையான ஒரு நிகழ்ச்சி இருக்க வேண்டுமா என்று நான் கேட்கவிரும்புகிறேன். இரண்டு பேர்களுடைய கண்ணீர் தான் புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணத்திலே எதிரொலித்து, இப்போது சத்துணவுத் திட்டமாக இந்த மன்றத்திலே இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதனாலேதான் தாயும் குழந்தையும் அழுகின்ற அந்தக் கண்ணீரைத் துடைப்பதற்காக, வருங்காலத்தில் ஒரு ஜனாதிபதியை இந்தச் சத்துணவு சாப்பாற்றுகிறது, வருங்காலத்தில் ஒரு கவர்னரை இந்தச் சத்துணவு ஏற்படுத்திக் கொடுக்கிறது, வருங்காலத்திலே ஒரு விஞ்ஞானியை இழந்து விடாமல் இருப்பதற்கு இந்தச் சத்துணவு வகை செய்கிறது என்ற அந்த நிலையை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கொடுக்கப்படுகின்றன. அதனால் அந்த புத்தங்கள் மாணவர்களுக்கு பயனற்றுப் போய்விடுகின்றன. காலாகாலத்தில் புத்தகங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாணவர்களுக்கு சிலேட் வழங்குவதற்கு என்று 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எப்படியும் நாம் கொடுக்கப் போகிறோம். அதை மே மாதத்திற்குள்ளாக வாங்கி வைத்து, பள்ளிக்கூடங்கள் ஆரம்பமான உடனே, ஜுன் மாதத்தில் பள்ளிகள் திறக்கப்பட்டவுடனே கொடுத்தால் என்ன? அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் 90 இலட்சம் ரூபாய் புத்தகத்திற்கு வழங்கியும் பயனில்லை; 7 இலட்சம் ரூபாய் சிலேட்டுக்கு வழங்கியும் பயனில்லை. அரசு இவ்வளவு செலவு செய்தும் மாணவர்களுக்கு பயனில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று பல்வேறு இடங்களில் தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலும் ஏறத்தாழ 2.10 கோடி ரூபாய் செலவிட்டு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அந்த பள்ளிக்கட்டிடங்கள் கட்டப்பட்டன. அதே நேரத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பிற்பட்ட நலத் துறையில் இருக்கிற பள்ளிகளுக்கு இந்த மானியம் கொடுக்கப்படவில்லை. அது என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கே பிற்பட்ட நலத்துறையில் ஒரு பள்ளி நடந்துக் கொண்டிருந்தது. அதற்கு இந்த மானியத்திலே நிதி ஒதுக்கீடு இல்லை என்று கூறி அதை நிறுத்திவிட்டார்கள். அதற்கு, தனியாக பிற்பட்ட நலத்துறையில் இந்த அரசு இந்த மானியத்திலேயும் ஒதுக்க வில்லை. ஆகவே, அதற்கு தனியாக மானியம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவு திட்டத்தில் இந்தப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட ஒரு படம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் ஒரே டைப் டிசைன் என்று சொல்லி ஒரே மாதிரியான கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. மேலே ரூப் போடுவதற்கு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் என்று போடப்பட்டிருக்கிறது. கம்பிகள் ஒரே மாதிரியானவை. 4 சுற்றுச் சுவர்களுக்கு மேலே ஜன்னல்கள் வைத்திருக்கிறார்கள். இப்படி கிழக்கு மேற்காகப் பள்ளிகள் அமையுமேயானால், மாணவர்கள் காலையிலே 11 மணி வரையில் வெய்யிலிலே இருக்க வேண்டும். மாலையிலே 3 மணி வரையில் அவர்கள் மீது வெய்யில் படும். மழை, காற்று அடித்தால் குழந்தைகள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள். இப்படி 75,80 ஆயிரம் ரூபாய் செய்து, இந்த நிலைமையில் ஒரு டைப் டிசைன் போடுவதற்கு எந்த என்ஜினியருக்கு யோசனை வந்து, அமைத்துக் கொடுத்தாரோ தெரியவில்லை. இந்தச் செலவில் மேற்கூரை ஆர். சியே போட்டு நல்ல கட்டிடம் கட்டலாம். 2 கோடியே ரூபாய்க்கு செலவிடப்பட்டும், ஆனால், அதற்கேற்ற முறையிலே முறையாக இக்கட்டிடங்கள் கட்டப்பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அடுத்தாற்போல பாட புத்தக நிறுவனம் 3 வது வகுப்புக்கு என்று வருகிற வரலாறு பாடபுத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். அதை மிக வேதனையோடு இந்த நேரத்திலே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பற்றி 3 வது வகுப்பு வரலாறு புத்தகத்திலே எழுதப்பட்டிருப்பது என்னவென்றால், 'வங்காளத்திலே அவர் 'கடக்' என்கிற ஊரில் பிறந்தார். கட்டாக் என்கிற பெயரை அவர்கள் கடக் என்று போட்டிருப்பதால், பிள்ளைகளும் அப்படியே படித்து அதனையே ஏற்றுக் கொள்வார்கள். தொடர்ந்து அங்கே, 'கடக் நகரிலே பிறந்த, சுபாஷ் சந்திர போஸ் நம் நாட்டின் வீர மகன் எழுதி விட்டு], அதன் பின்பு அவருடைய தந்தையார் இங்கிலாந்து சென்று ஐ.சி.எஸ். படிக்கச் சொன்னார். ஐ.சி.எஸ். படித்தால் தான் ஆங்கிலேய அரசாங்கத்திடம் உயர் பதவியை வகிக்க முடியும். அப்படி வேலை பார்க்க சுபாஸிற்கு பிரியம் இல்லை. ஆகவே, இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டியிலே எம். ஏ. படித்துவிட்டு வந்தார் என்று ஒரு தவறான தகவலை அந்தப் புத்தகத்திலே போட்டிருக்கிறார்கள்.

ஐ.சி.எஸ். படிப்பிலே இங்கிலாந்திலேயே 4வதாக வெற்றி பெற்றவர் சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள். அது சரித்திரம் ஆனால் இந்த சரித்திரத்தை யார் எழுதினார்கள் என்று தெரிய வில்லை. அவர் ஐ.சி.எஸ். படிக்கவில்லை, எம்.ஏ. படித்து திரும்பிவிட்டார் என்று போட்டிருக்கிறார்கள். அவர் ஐ.சி.எஸ். தேர்வில் 4-வது மாணவராக வெற்றி பெற்றும் கூட, சுதந்திர உணர்வு நாட்டுப்பற்று என்கிற அந்த நிலையில் ஐ.சி.எஸ். என்று சொன்னால், இந்தியன் சிவில் சர்வெண்ட்—அந்நியர்களிடம் நான் ஒரு சர்வெண்ட்டாக இருக்க மாட்டேன் என்று அந்தப் பட்டத்தை பெறுவதினாலே அன்னியர்களுக்கு அடிமை யான வேலைக்காரனாக பதவி ஏற்கும் நிலையை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று இந்தப் பட்டத்தை வாங்காமல் திரும்பி வந்தார் என்பதுதான் வரலாறு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டாவது — பெரிய தேசியத்தலைவர்களைப் பற்றிய உண்மைகளை மாற்றாமல், இப்படி எம்.ஏ. மட்டும் படித்துவிட்டு திரும்பினார் என்று தவறான தகவல்கள் தருகிற புத்தகத்தை எடுத்து விட்டு வேறு விதமான பதிப்பிலே தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 7 ஆம் வகுப்பு பாடப்புத்தகத்திலே நேதாஜி அவர்கள் ஆகஸ்ட் 18 ஆம் தேதி தைவான் விமான நிலையத்தில் விமான விபத்திலே இறந்து விட்டார் என்று ஆங்கிலத்திலே எழுதியிருக்கிறார்கள். அது பெரிய சர்ச்சையில் இருக்கிறது. அவர் தைவான் விமான நிலையத்திலே விபத்திலே இறந்தாரா இல்லையா என்பது பற்றி, பல்வேறு விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டது. கோஷ்லா கமிஷன், சானவாங்கான்

இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டபின்னாலே, கல்வித் துறையிலே பல்வேறு சட்ட திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்து, கல்லூரிக் கல்வி, உயர்நிலைப் பள்ளி, மற்றும் மற்ற நிலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு இருக்கும் துயரைத் துடைப்பதற்காக பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறது. அதே நேரத்தில் இன்னும் தனியார்த் துறையில் இருக்கின்ற ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு இடையே தான் இருக்கின்றனர். அங்கேயுள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு அரசு ஒதுக்கின்ற அந்த நியமனங்களில் வியாபாரம் நடைபெற்று வருகிறது. அதைத் தவிர்க்கும் வகையில் தனியார் பள்ளிகள் அரசுடைமையாக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று மைனாரிட்டி என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் வைத்து இருக்கின்ற பள்ளிகளிலே எல்லாம் நியமனங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நிலைமைகள் போக்கப்படவேண்டும். இப்போது இங்கே பேசிய அத்தனை நண்பர்களும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் எந்த அளவிற்குக் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு ஆதாரமாக இருந்தது என்பதை எடுத்துச்சொல்லி, பல இலட்சம் மாணவர்கள் அதனால் சேர்ந்துள்ளனர் என்று சொன்னார்கள்.

(மாலை 5-20)

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி அத்தனை அங்கத்தினர்களும் பேசியிருக்கிறோம். இந்த சத்துணவுத் திட்டம் ஆசிரியர்களால் செயல்படுத்தப்படும்போது மாணவர்களின் கல்வியின் தரம் குறைந்துவிடும் என்ற காரணத்தால்தான் அவர்களை அந்தப் பொறுப்பிலிருந்து விடுவித்திருக்கிறோம். ஆனால் பிற்பட்டோர் நலத்துறையில் இருக்கிற பள்ளிகளில் இன்னும் அந்த ஆசிரியர்கள்தான் அந்தப் பணியைச் செய்துவருகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். இன்னும் அந்தப் பள்ளி தலைமை ஆசிரியர்தான் கணக்குகளை எழுத வேண்டுமென்று சொல்கிறார்களாம். அப்படி இருந்தால் கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்று முதல் மூன்று வகுப்பு மாணவர்களுக்கு பரிட்சை இல்லை என்ற நிலை இப்போது நம்முடைய தமிழகத்தில் இருக்கிறது. இளம் உள்ளத்திலே மூன்று ஆண்டுகள் பரிட்சை இல்லை என்ற நிலையை ஏற்படுத்திவிட்டு பின்னால் பரீட்சை எழுத வேண்டுமென்று சொல்லும்போது அவர்களுடைய இளம் உள்ளத்தில் ஆர்வத்தைக் குறைத்துவிடாதா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் பரீட்சை இல்லை என்று சொன்னதால் அவர்களுக்கு கட்டுப்பாடும் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இளம் உள்ளத்திலே கட்டுப்பாடும் ஆர்வமும் இருக்க வேண்டும். மாணவர்களுக்கு



மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் பொறுப்பு இல்லாமல் போய் விடுகிறது. அவர்களைக் கேட்கவும் வாய்ப்பு இல்லை. சென்ற ஆண்டு ஒன்றாவது வகுப்பில் எத்தனை விழுக்காடு தேறினார்கள் என்று கேட்க முடியாது. ஆகவே 1-3 வகுப்புகளைப் பொறுத்த வரையில் ஆசிரியர்களும் தங்கள் பணிகளைச் செய்யமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதிலே தகுந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6 முதல் 11 வயது தொகுதி மாணவர்கள் 1981-82 ஆம் ஆண்டில் 30 விழுக்காடு படிக்காமல் இடையில் நின்று விட்டார்கள் என்ற புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் கழிந்த பிறகும், கல்விக்காக 356 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும் 30 விழுக்காடு அதாவது 1/3 பகுதி மாணவர்கள் 5-வது வகுப்பு வரையில் கூட படிக்க முடியவில்லை என்று சொன்னால் அது உண்மையிலே வருந்தத் தக்கது. இப்போது சத்துணவு வழங்கப்படுவதால் அதிகமாக வருகிறார்கள் என்று சொல்கிறார்கள்; பாராட்டுகிறோம். ஆனால் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. 41 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று சொன்னாலும் அந்த அளவுக்கு கூட இல்லை. அதிலும் கிராமப் புறங்களை எடுத்துக்கொண்டால் ஒரு ஆசிரியர்தான் ஒரு பள்ளியை நடத்துகிறார். இதை மாற்றி, வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று நியமிக்க வேண்டும்.

இந்த ஆண்டு சத்துணவுத் திட்டத்தின் பயனாக 2.5 இலட்சம் மாணவர்கள் கூடுதலாக சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவில்லை. போதுமான அளவுக்கு ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். மாணவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும். 5-வது வகுப்பு வரையிலாவது 100 விழுக்காடு என்று சொல்லக்கூடிய அளவுக்கு அனைவரும் படிக்க வேண்டும். அந்த அளவுக்கு அரசு செயல்பட்டு, கண்காணிக்க வேண்டும். 6-11 வயது வரை கட்டாயமாக எல்லோரும் படிக்க வேண்டுமென்று சொல்லி, அந்த நிலையை உருவாக்க இன்னும் அதிகமான மானியத்தை வேண்டுமானாலும் கொடுத்து, ஊக்குவிக்க வேண்டும். அனைவரும் கல்வி அறிவு பெற்றால் தான் இந்த நாடு முன்னேற்றமடையும். ஆகவே, நிதிநிலை அறிக்கையில் இன்னும் அதிக தொகையை ஒதுக்கியாவது இடையிலே நின்றுவிடுகிற மாணவர்கள் 30 விழுக்காடு என்ற அளவைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இலவச புத்தங்களை நமது தமிழக அரசு பாடநூல் நிறுவனம் கொடுக்கிறது. அதற்காக 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன நடக்கிறது. ஆண்டுதோறும் நாம் பார்க்கிறோம். ஜூன் 2-ந்தேதி பள்ளிகள் திறக்கப்படுகின்றன. ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் தான் புத்தகங்கள்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1983 மார்ச் 15

கமிஷன்கள் போட்டு, அதிலே எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியாமல் பாராளுமன்றத்திலே, அப்போது பிரதம அமைச்சராக இருந்தவர் அதை விவாதத்திற்கு உரியதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லப்பட்ட பிறகு, அப்படியே விடப்பட்டிருக்கிறது. ஆகவே, அது முடிவு செய்யப் பட முடியாத நிலை. உண்மை அப்படி இருக்க, நேதாஜி அவர்கள் ஆகஸ்ட் 1945 ஆம் ஆண்டு தைவான் விமான நிலையத்தில் இறந்துவிட்டார் என்று எழுதியிருப்பது தவறு. ஆகவே, இப்படிப்பட்ட சரித்திரங்களை எல்லாம் எழுதும் போது, அதைப்பற்றி தெரிந்தவர்களிடம், சரியான வரலாறு களைக் கேட்டு அதன்படி வெளியிட வேண்டும் என்று எனது கோரிக்கையை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது, 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் டு கேண்டிடேட்ஸ் என்ற பகுதியிலே குற்ற மரபினர் பட்டியலேயிலிருந்து நீக்கப்பட்டோர் என்பவர்களுக்கு எஸ் டி. என்று வைத்து, உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்று அவர்களே போட்டிருக்கிறார்கள். குற்ற பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோர் வகையைச் சேர்ந்தவர்கள் டிநோட்டிபைடு டிரைப்ஸ் என்று அவர்கள் இருந்தும் அவர்களுக்கு பிற்படுத்தப் பட்ட பட்டியலில்தான் சேர்ப்போம் என்று தொடர்ந்து 3 ஆண்டு களுக்கும் கல்வி சலுகை அளிக்கப்படாமல் மறுக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிற ஆண்டிலாவது இந்த டிநோட்டிபைடு டிரைபைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு அந்தச் சலுகையை எஸ்.டி. என்று வைத்து, அந்த மாணவர்களுக்கு எம்.பி.பி.எஸ்., பொறியியல் கல்லூரிகளிலே இடம் ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஹையர் செகண்டரியிலே இப்போது கொடுத் திருக்கிற புள்ளி விவரப்படி, 631 பள்ளிகள் இருக்கின்றன. அவைகளுக்கான ஆய்வு கூடங்கள் 425 கட்டி முடித்துவிட்டதாக சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுகிறேன். பாக்கி இடங்களுக்கு உடனடியாக ஆய்வு கூடங்கள் தேவை. காரணம் அவர்கள் கல்லூரி களிலே படிக்க வேண்டியவர்கள். நாம் ஹையர் செகண்டரி என்று பள்ளிகளிலே வைத்துவிட்டதால் பள்ளிகளிலே சேர்ந்து படிக்கிறார்கள் எல்லா கல்லூரிகளிலும் ஆய்வுக் கூடங்கள் இருப்பதால் அவர்கள் கல்லூரிகளிலே சேர்ந்திருந்தால் அந்த வாய்ப்பு கிடைத்திருக்கும். ஏற்கெனவே அதைப்பெறுகிற வாய்ப்பை அவர்கள் இழந்திருக்கிறார்கள். அப்படியென்றால் அவர்களுடைய தரம் குறைந்திருக்கக் கூடும். ஆகவே அவைகளை கட்டுவதிலே முனைப்புக் காட்டி, பாக்கியுள்ள ஆய்வு கூடங்களையும் கட்டி முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 15] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

(மாலை 5-30)

கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே நமது தமிழகத்திலே 188 கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே தனியார் கல்லூரிகள் 135 ஆக இருக்கின்றன. தனியார் கல்லூரிகளில் இருக்கின்ற நிலைமை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தனியார் கல்லூரிகளை வியாபாரமாக நடத்து கிறார்கள். பி. காம் சீட்டு வேண்டும் என்று பல்கலைக் கழகத்தை வலியுறுத்திக் கேட்கிறார்கள். அப்படிக் கேட்டு வாங்கியதற்குப் பிறகு ஒரு சீட்டுக்கு ஆயிரம் ரூபாய் என்று வாங்குகிறார்கள் (குறுக்கீடு) ஆளும் கட்சித் தரப்பிலே இருந்து சொல்கிறார்கள் 5 ஆயிரம் ரூபாய் ஒரு சீட்டுக்கு வாங்குவதாக. ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் 1000 ரூபாய் ஒரு சீட்டுக்கு வாங்குவதாகத் தான். இப்படிப்பட்ட பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன. அதைத்தடுக்க வேண்டும் என்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சென்ற மாதம் ஒரு அறிவிப்பு கொடுத்திருந்தார்கள், அதாவது 'Cafi ationfec' என்ற பெயரில் நன்கொடை வாங்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று. ஆனால் அவ்வாறு பணம் கொடுப்பது என்பது தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக் கின்றது. பணிகளிலே அமர்த்துவதற்கு 30 ஆயிரம் ரூபாய் வாங்கி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீர்கேடுகள் இருக்கின்றன. இப்போது இங்கே 1 5 தனியார் கல்லூரிகளும் 53 அரசுக் கல்லூரிகளும் இருக்கின்றன. இவற்றிலே 13 கல்லூரிகள் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக நாம் அனுமதித்து இருக்கிறோம். ஆண்டுதோறும் 2 இலட்சம் ரூபாய் ஐந்து ஆண்டுகளுக்கு அவர் களுக்கு வழங்கவேண்டும் என்று இருந்தது, ஆனால் இப்போது தொடர்ந்து கொடுப்போம் என்று வலியுறுத்தி சொல்லி இருக் கிறீர்கள். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள்? தனக்கு வேண்டியவர்களுக்கு அதிகமான மார்க் போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். பல்கலைக் கழகம் வந்து பட்டம் வழங்கவேண்டும், அவ்வளவு தான் பல்கலைக் கழகத்தின் வேலை. அதுமட்டுமல்ல, பல்வேறு ஊழல்கள் நடக்கின்றன. அதனால் பல தகுதியுள்ள மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்கும், பொறியியல் கல்லூரிக்கும் போக முடியாத நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட கல்லூரிகளில் படிப்பவர்கள் மட்டும் எப்படி 95 சதம் மார்க்கு வாங்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னாட்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் நினைத்தவர்களுக்கு எல்லாம் மார்க் போட்டுக்கொள்ளலாம். இதற்காகத்தான் 2 இலட்சம் ரூபாய் மானியம் கொடுத்து வருகிறோமா? எனவே அவர்களுக்கு அப்படிப்பட்ட அதிகாரத்தை வழங்கக் கூடாது.

சென்ற ஆண்டு நடந்த ஒரு சம்பவம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். மதுரைப் பல்கலைக் கழகத்திலே ஒரு ஆசிரியர் 32-ஐ 83 என்று திருத்தி அந்த மாணவர் மருத்துவக் கல்லூரியிலும் சேர்ந்துவிட்டார், அந்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுத்தால் மற்ற ஆசிரியர்கள் அவருக்கு வேலை கொடு என்று

போராடுகிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது. மேலும் கல்லூரிகளிலே நடக்கும் மாஸ் காப்பியிங் சிஸ்டத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவும் மாணவர்களின் டிசிப்ளின் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவும் சர்வ கட்சித் தலைவர்களும் கூடி பேசினோம். இருந்தாலும் விளம்பரங்கள் செய்யப்பட்டு தேர்தல்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. பல கல்லூரி முதல்வர்களும் அதை அனுமதித்துக்கொண்டுதான் இருக்கி றார்கள். தியாகராயர் பொறியியல் கல்லூரியிலே நடந்தது போன்ற நிகழ்ச்சிகள் தொடராவண்ணம் மாணவர்கள் தேர்தல்களிலே போட்டியிடுவதைப் பொறுத்தவரையில் சர்வ கட்சியினர் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழைப் பொறுத்தவரையிலே எதிலும் தமிழ் என்று தமிழைப் பரப்புவதிலே எங்கும் தமிழ், படிப்பதை நான் பாராட்டுகிறேன். தமிழ் அக்கறை கொண் உலகத்தமிழ்ச் சங்கம், உலகத் தமிழ் பல்கலைக் கழகம், போன்ற பல்வேறு வகையிலே தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இது என்பதைப் பாராட்டினாலும் தமிழைக் கொண்டுவர வேண்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அதிலே ஒரு நிலைமை இருப்பதைச் கின்றவர்களுக்கு 180 ரூபாய் உதவி தமிழ் மூலம் பட்டம் பெறு கிறோம். ஆனால் வேலை வாய்ப்பு கொடுத்து ஊக்கப்படுத்து சொல்வது மட்டுமல்ல. மத்திய அவர்களுக்கு இல்லை என்று யூ. பி. எஸ். ஸி. எக்ஸாமிலே அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற எழுத முடியாத நிலைமை இருக்கின்றது. தமிழ் படித்தவர்கள் தமிழிலே மற்றும் ஐ. பி எஸ். அதிகாரிகளாக வருபவர்கள்தான் ஐ ஏ.எஸ். 30, 40 ஆண்டுக்காலம் நடத்துகின்ற நிலைமை ஆட்சியை ஏனென்றால் அரசியல் வாதிகள் சில இருக்கின்றது. விடுகிறார்கள், அதிகாரிகள்தான் நீண்ட ஆண்டுகளிலே போய் கிறார்கள் அப்படிப்பட்ட ஐ.ஏ.எஸ்., காலம் ஆட்சி நடத்து தமிழிலே எழுத முடியவில்லை. எனவே ஐ. பி. எஸ். தேர்வுகளிலே தமிழிலே பட்டம் பெறுகிறார்கள் இப்படிப்பட்ட நிலைமையில் ஆண்டுகளுக்கு இருந்தால், எல்லா என்ற நிலைமை ஒரு பத்து வகையில் கல்லூரிகளிலும் மட்டத்திலும் தமிழ் என்ற நினைத்தால், தமிழிலே கொண்டுவர வேண்டும் என்று வரையில் வேறு பரிட்சை எழுதலாம் என்ற நிலை வரும் நான் இந்த மாநிலத்திலே உள்ளவர்களின் ஆட்சியின் கீழே நாட்டு மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆகி விடுவோம் என்ற ஆபத்தான நிலைமையைப் பற்றிச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்துவேறுபாடு இல்லை.

ஆனால் மத்தியில் 14 மொழிகளை ஆட்சி மொழி ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். தமிழில் பரிட்சையை என்று வதற்கு மத்தியில் ஏற்றுக்கொள்வதற்கும், பட்டப்படிப்புகள் எழுது அத்தனையையும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றி செய்யலாம், அந்த ஆபத்திலிருந்து விடுபடுவதற்கு நீங்கள் உயரி முயற்சிகளை எடுக்கவேண்டும் என்றுநான் இந்த அரசு கேட்டுக் கொள்



கிறேன். அந்த 150 ரூபாய் ஊதியம் கொடுத்து படிப்பதற்கு கூட மாணவர்கள் அதிகமாக வராததற்கு பல்வேறு காரணங்கள் இருக் கின்றன. அந்த ஊதியங்கள் பல கல்லூரிகளிலே மாணவர்களுக்கு போய்ச் சேருவது இல்லை. தனியார் கல்லூரிகளில் அவர்கள் எடுத்து விடுவதாக தகவல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை களை எல்லாம் போக்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பாற்றுத் தலைவர் அவர் களே தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி சம்பந்தமான மானியக் கோரிக்கை எண் 17-ன் கீழ் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒரு சிலக் கருத்துக்களை சொல்லலாம் என கருதுகிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகைகள், இவைகளில் தொழில்நுட்பக் கல்விக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை 13 கோடியே 70 லட்சம் ரூபாய், ஆனால் அமைச்சர் அவர்கள் அறிவிக்கிற நேரத்தில் எதிர்காலத்தில் தொழில்நுட்பக் கல்வியை அதிகரிக்க வேண்டும், அதை பலப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி சொல்கிற நேரத்தில் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகக் குறைவாக இருக் கிறது. என்னைப் பொறுத்த வரையில் எதிர் காலத்தில் ஆர்ட்ஸ் கல்வியை படிப்பதைவிட தொழில்நுட்பக் கல்வியை அதிகமாகப் படித்து அவர்கள் பட்டம் பெற்றதற்கு பின்னால் தான் வேலை வாய்ப்பினை பெறமுடியும் என்று நிலைக்கு இன்றைக்கு தமிழகம் தள்ளப்பட்டிருக்கிறது. தொழில்நுட்பக் கல்வி பெறாமல் வேலை வாய்ப்பு கிடைப்பது என்பது இயலாத காரியம். எனவே அப்படிப் பட்ட சூழ்நிலையின் காரணமாகதொழில் நுட்பக் கல்விக்கு அதிக மான தொகையினை அதிகரிக்கவேண்டும். தொழில்நுட்பக் கல்வியை அதிகரிக்கக்கூடிய முறையில் பலயிடங்களில் தொழில் நுட்ப பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் அமைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய சட்டக் கல்லூரி கட்டிடம் சம்பந்தமாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி குறிப் பிட்டிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் கேள்விக்கு பதில் அளிக்கும் போது சொன்னார்கள், சட்டக் கல்லூரிக் கட்டடத்திற்கு இடம் கிடைப்பது இல்லைஎன்று. அப்படி கிடைத்தாலும் கூட அதிகமான தொகையினை சொல்லுகின்ற காரணத்தினால் கட்டிடம் கட்ட முடியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய அவினாசி தொகுதியில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்காக இருக்கின்ற பள்ளி கட்டத்திட்ட 5 ஏக்கர் பரப்புக்கு மேல் இருக்கும். அதிலே இப்போது ஆசிரியர் பயிற்சி பெறாமல் சும்மா இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த சட்டக்கல்லூரியை அங்கே கட்டிடம் இருக்கின்ற காரணத் தால் அங்கே நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [1983 மார்ச் 15

அதேபோல் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கடந்த ஆண்டிலே அறிவிக்கப்பட்டது, கோயம்புத்தூரிலே பாரதியார் பல்கலைக்கழகம் அமைப்பதாகச் சொல்லப்பட்டு இப்போது அது செயல்பட்டு வருகிறது. பாரதியார் பல்கலைக்கழகத்திலே பல தவறான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அங்கே பணிபுரிகின்றவர்களை பழி வாங்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. ஜாதி அடிப்படையில் பழிவாங்கக்கூடிய நடவடிக்கை கடுமையாக்கப்பட்டு அங்கே பல ஆசிரியர்களை வெளியே அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தனியார்கள் நடத்தக்கூடிய எல். கே. ஜி.. யூ. கே. ஜி. போன்ற படிப்புகளால் ஏற்படக்கூடிய செலவுகள் அரசாங்க கல்லூரிகளில் படிப்பதால் ஏற்படக்கூடிய செலவுகளை காட்டிலும் அதிகமாக ஏற்படுகிறது. நன்கொடை என்ற பெயராலே வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். எல். கே. ஜி. யூ. கே. ஜி. யில் சிறு குழந்தைகளை சேர்க்கவேண்டுமானால் கல்லூரியில் சேர்ப்பதற்கு ஏற்படக்கூடிய செலவுகளைக் காட்டிலும் அதிகமான அளவில் செலவு ஏற்படுகிறது, என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள். எனவே ஊர் ஊர்க்கு, கிராமம் கிராமத்திற்கு தெரு தெருவிற்கு இந்த எல். கே. ஜி. யூ. கே. ஜி. பள்ளிகளை ஏற்படுத்தி பிள்ளைகளிடம் அதிகப்படியான பணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு அரசாங்கம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு எல். கே. ஜி. யூ. கே. ஜி. படிப்பவர்களுக்கு அரசாங்கமே ஒரு தொகையினை நிர்ணயம் செய்தாலும் தவறு இல்லை என நான் கருதுகிறேன். அவர்கள் இஷ்டப்படி வசூலிக்கக்கூடிய கட்டணத்தை குறைப்பதற்கும், தான் அடித்த முப்பாக செயல்படக்கூடிய நிலைமைகளைப் போக்குவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இப்போது மதத்தின் பெயராலே பல்வேறு கல்லூரிகள் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய சலுகையை பயன்படுத்திக்கொண்டு இந்த மதத்தின் பெயராலே நடத்தக்கூடிய கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை பழி வாங்கக்கூடிய நடவடிக்கைகள் அல்லது அதிகப்படியான கட்டணங்கள் வசூலிக்கக்கூடிய நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட்டு அதை சரிபடுத்தவேண்டும் என்று நினைத்தாலும் கூட இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியமைப்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய சலுகையை பயன்படுத்திக் கொண்டு மதத்தின் பெயராலே இருக்கக்கூடிய கொள்கையை தடுத்து நிறுத்த இந்த அரசாங்கம் ஏற்படவேண்டும்.



1983 மார்ச் 15] [திரு. எம். ஆறுமுகம்]

(மாலை 5-40)

பல்வேறு கல்லூரிகளில் கட்டணங்களை அதிகமாக வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். சில கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் கட்டணத்தைக் கட்டமுடியாமல் இடையிலே நின்று விடக்கூடிய அவலநிலை இருக்கிறது. ஆந்திர மாநிலத்திலே இருக்கக்கூடிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனே அங்கே இருக்கக்கூடிய கல்லூரிகளைஅரசாங்கமே ஏற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு உத்திரவைப் போட்டு அங்கே இருக்கின்ற கல்லூரிகளை அரசாங்கமே எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே உள்ள அத்தனை தனியார் கல்லூரிகளையும் பள்ளிகளையும் அரசே எடுத்துநடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளிலே வசூலிக்கக்கூடிய கட்டணம்பற்றி பல முறைகள் பல்வேறு கட்டங்களிலே இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் நடத்துகின்ற கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பணிபாதுகாப்பு இல்லை. எந்த நேரத்திலும் அவர்களைப் பணியிலிருந்து நிறுத்திவிடலாம் என்ற நிலைதான் இருக்கிறது. காரணம் சொல்லத் தேவையில்லை என்ற நிலை இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் அரசாங்கம் நிர்ணயித்து இருக்கின்ற சம்பளத்தைக் காட்டிலும் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து கையெழுத்து வாங்கும்போது அரசு நிர்ணயித்து இருக்கின்ற சம்பளத்தொகைக்கு கையெழுத்து பெற்றுக் கொண்டு குறைவாகக் கொடுக்கிறார்கள். இதைத் தட்டி கேட்கிற ஆசிரியர்களை கல்லூரியிலிருந்து வெளியேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கோவையிலே உள்ள அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலே உள்ள நிலைமை குறித்து இதே மன்றத்திலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பெற்று, விவாதிக்கப்பட்டு, பேசப்பட்டு இருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு அரசாங்கம் தன்னாட்சி அதிகாரம் வழங்கியிருப்பதால் அவர்கள் மாணவர்களிடம் பெறுகின்றவைகளுக்கு கணக்குகள் இல்லை, ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்திற்கு சரியான விவரங்கள் இல்லை.

அவர்களுக்குச் சம்பளம் முறையாகக் கொடுப்பது இல்லை, அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, எந்நேரத்திலேயும் வெளியே அனுப்பப்படலாம் என்ற நிலை இருக்கிறது.

எனவே இந்த நேரத்திலே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், கோவையிலே உள்ள அவினாசி லிங்கம் மனையியல் கல்லூரியில் நடக்கக்கூடிய சம்பவங்கள் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அந்தக் கல்லூரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தன்னாட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்களையும் மாணவர்களையும் தவறாக நடத்தக்கூடிய முறையில் பழிவாங்கும் நிலைமைகள் இருக்கின்றன, எனவே, அந்தக் கல்லூரியை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [1983 மார்ச் 15

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று கொள்கை விளக்கச் குறிப்பிலே தொடர்ந்து சொல்லிவந்தாலும்கூட, கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலே எம். ஏ. தமிழ் வகுப்பை எடுத்துவிட்டார்கள். இதுபற்றி 2 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. எம். ஏ. தமிழ் வகுப்பை அவர்கள் எடுத்துவிட்ட காரணத்தினால் மாணவர்கள் அந்த கல்லூரியில் சேரக்கூடிய வழியில்லை, அதோடு மட்டுமல்ல, அதனால் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பும் இல்லை. கோவை அவினாசி லிங்கம் மனையியல் கல்லூரியிலே எம். ஏ. தமிழ் வகுப்பை எடுத்து விட்டார்கள் என்றால் அவர்களுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்ற நிலையில் எப்படி அந்த வகுப்பை எடுத்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அரசாங்கமே அந்தக் கல்லூரியை எடுத்து நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு பள்ளிகளில் பி. யு. சி. யை எடுத்துவிட்டு பிளஸ் 2 என்று மாற்றப்பட்ட காரணத்தினால் பி. யு. சி. வகுப்பிற்கு சொல்லிக் கொடுப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பல பேர்கள் நீக்கப்பட்டு பணியில் மீண்டும் சேர்க்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க, அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், கோவையிலே பாரத் மேல்நிலைப் பள்ளியிலே உள்ள நிலை பற்றி ஏற்கெனவே இந்த அவையிலே பேசப்பட்டது, அமைச்சர் அவர் களுக்கும் நான் சொல்லியிருக்கிறேன். அங்கே 17 ஆசிரியர் களுக்கு வேலை இல்லை, அவர்கள் பள்ளியைக்கூட மூடிவிட்ட தாகச் சொல்கிறார்கள். பிறகு பாரத் மேல்நிலைப் பள்ளி என்ற பெயரை மாற்றிவிட்டு பாரதி மெட்ரிகுலேஷன் பள்ளி என்ற பெயரை வைத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு அரசு அங்கீகாரம் கேட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது, அரசு அங்கீகாரம்பெற்று பாரத் மேல்நிலைப்பள்ளி என்ற பெயரை மாற்றி பாரதி மெட்ரிகுலேஷன் என்ற பெயரைவைத்து நடத்து கின்ற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள், எனவே அந்தப்பள்ளியை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. ஏ. சாகுல்ஹமீது: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர் களே, இந்த கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இப்போது இங்கு பேசுவதற்கு அதிகமான நேரம் இல்லாத காரணத்தால், அதிக அளவிற்கு பிரச்சனைக்குச் செல் லாமல் முக்கியமானவற்றை மட்டும் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 15] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

குறிப்பாக நெல்லை மாவட்டத்தில், செங்கோட்டை சரகத்தில் 38 ஆசிரியர்கள் முன்னால் கோச்சியில் ஓராண்டு பயிற்சி பெற்றவர்கள். அரசு ஆணை 970, நாள் 7-5-63-ன்படி இவர்கள் இரண்டு ஆண்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இணையாக, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகி றார்கள். செகண்டரிகிரேடில் தேர்வு நிலை, சிறப்பு நிலையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு செகண்டரி கிரேடு பயிற்சிக்கான ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை. அதை அளிக்க வேண்டுமென்று அந்த ஆசிரியர்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே காலையிலிருந்து இதுவரையில் பேசியவர்கள் எல்லாம் கல்வி மானியத்தைப் பொறுத்தவரையில் தனியார்கள் நிறுவனத் தைப்பற்றியும், மைனாரிட்டி நிறுவனங்களைப் பற்றியும் குறிப் பிட்டு அவைகள் ஒட்டு மொத்தமாக ஊழல் செய்கின்றன; குற்றம் செய்கின்றன; அவைகளில் குறைகள் இருக்கின்றன என்று பேசியதைத் தான் நான் பார்க்கிறேன். இப்போது தனியார் பள்ளிகள் என்பது அரசு அனுமதித்து, தனியார் பள்ளிகளின் சட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றன. அதே நேரத்தில் அரசியல் சாசனத்தின் உரிமைகளின் பெயரால் மைனாரிட்டி ஸ்கூல்கள் இயங்கி வருகின்றன. மைனாரிட்டி சமுதாயத்தினருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்த சமுதாயத்தினரின் குழந்தைகள் கல்வி பெற வேண்டும் என்பதற்காகத்தான் அரசியல் சாசனம் அந்தக்கன்று உரிமையை அளித்திருக்கிறது. அந்த உரிமையைப் பறிக்கிற அளவிலே இன்றைக்கு தனியார் சட்டங்களை, மைனாரிட்டி ஸ்கூல்களை மாற்ற வேண்டுமென்று கூறுகிறார்கள். நான் கேட்கிறேன், தனியார் பள்ளிக்கூடங்கள், மைனாரிட்டி ஸ்கூல்கள் தான் குற்றம் செய்கின்றனவா? ஊழல் செய்கின்றனவா? இந்த ஆட்சியில் ஊழல் இல்லையா? கல்வி இலாக்காவில் ஊழல் இல்லையா? அரசு நடத்துகிற பள்ளிக்கூடங் களில் ஊழல் இல்லையா? மருத்துவக் கல்லூரிகளுக்குச் சென்று பாருங்கள்; பொறியியல் கல்லூரிக்குச் சென்று இடம் கேட்டுப் பாருங்கள்; விவசாயக் கல்லூரிக்குச் சென்று இடம் கேட்டுப் பாருங்கள்; எதிலே ஊழல் இல்லை? தனியார் பள்ளிகளில் தான் ஊழல் என்று சொல்கிறீர்களே? மைனாரிட்டி ஸ்கூல்களில் தான் ஊழல் என்று சொல்கிறீர்களே? அப்படி குற்றம், குறைகள் இருந் தால் திருத்திக் கொள்ள வேண்டியது கடமை என்பதைத் தெரி வித்துக்கொள்கிற அதே நேரத்தில், இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் மைனாரிட்டி சமுதாயத்தினரின் சார்பாக இந்த இரண்டு, மூன்று மாதங்களில் ஏறக்குறைய 46 பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளித்திருப்பதாக நான் உணர்கிறேன். அப்படி 46 பள்ளிகளுக்கு அனுமதி அளித்துவிட்டு, இரண்டு பள்ளிகளுக்கு மட்டும் மானியத்தோடு அங்கீகாரம் அளித்திருக்கிறீர்கள். மற்ற 44 பள்ளிகளுக்கு மானியம் தரப்படவில்லை என்றால் அது என்ன நியாயம்? சிறுபான்மையினர் நடத்துகிற பள்ளிகளுக்கு மட்டும் மானியம் கொடுக்காமல் இருப்பது, அது அரசியல் சாசனத்தை

புறக்கணிப்பது அல்லவா? இன்றைக்கு அரசியல் சாசனம் அளித்திருக்கிற உரிமைகளின் பெயரில் தானே, மைனாரிட்டி சமுதாயத்தினருடைய குழந்தைகள் கல்வி கற்கவேண்டுமென்று தானே அதிலே அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த பாதுகாப்பை கொடுக்காமல் இருப்பது அரசியல் சாசனத்திற்கு முரணானது அல்லவா என்பதை மட்டும் இந்தநேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நாங்குனேரி தாலூகாவில், உவரி என்ற பகுதியிலும், திருச்செந்தூர் பகுதியில் புன்னக்காய் என்ற பகுதியிலும் மீனவ மக்களுடைய உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்த பள்ளிகளுக்கும், மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த பள்ளிகளுக்கும் அங்கீகாரம் கொடுத்துவிட்டு மானியம் கொடுக்காமல் இருப்பது அந்த சமுதாயத்தினுடைய மக்களுக்கு அரசு செய்கிற நல்ல காரியம் அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே மைனாரிட்டி சமுதாயத்தினருடைய உரிமைகளை நீங்கள் பறிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு சட்டமன்றத்தில் வீற்றிருக்கிற நாமெல்லாம் ஏறக்குறைய 34 உறுப்பினர்கள், அமைச்சர் உள்பட மைனாரிட்டி சமுதாயத்தினருடைய வாக்குகளைப் பெற்றுத் தான் வந்திருக்கிறோம். மைனாரிட்டி சமுதாயத்தினரின் உரிமைகளை பறிக்கிற அரசிற்கு பேசுவது என்ன நியாயம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த அரசை கேட்டுக்கொள்வதெல்லாம் மைனாரிட்டி மக்களுடைய உரிமைகளை பறிக்காதீர்கள். அரசியல் சாசனம் வழங்கிய உரிமைகளை பறிக்காதீர்கள். இன்றைக்கு மைனாரிட்டி சமுதாயத்தினர் ஆரம்பித்திருக்கிற, தனியார் வைத்திருக்கிற பள்ளிகளுக்கு மானியத்தைக் கொடுத்து உதவுங்கள்; என்று கேட்டு என்னுடைய கருத்தினை நிறைவு செய்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 1983-84 ஆம் ஆண்டில் நிதி நிலை அறிக்கை 1,654 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு, அதில கல்விக்காக 356 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, மொத்த ஒதுக்கீட்டில் 21.5 விழுக்காடு. இது நாடு சுதந்திரம் அடைந்து, 1947-ம் ஆண்டு முதல் இன்றுவரையில் 36 ஆண்டுகளாக எந்த ஒரு அரசும் இந்த அளவிற்கு நிதியை ஒதுக்காத ஒரு சாதனை. புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் பொறுப்பேற்றதற்கு பிறகு தான் இத்தகைய மாபெரும் சாதனையை புரிய முடிந்தது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ளமுடியும்.



(மாலை 5—50)

இங்கே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் சாகுல் ஹமீது அவர்கள், மைனாரிட்டி சமூகத்தினருடைய உரிமைகள் நசுக்கப்படுவதாக, அரசியல் சட்டத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு மறுக்கப்படுவதாக, இங்கே கூறினார்கள். ஆனால், இன்றையதினம் நம்முடைய சட்டமன்றத்தில் அது கேள்வி நேரமானாலும், விவாதமானாலும் எழக்கூடிய கேள்வியே, இன்றைக்குத் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வியை எப்படி ஒரு கமர்ஷியலாக, வியாபாரப் பொருளாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். அப்படி நடத்துபவர்கள் யார் என்றால் மைனாரிட்டிகள். மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் சட்டத்தில் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற பாதுகாப்பு, உரிமை என்ற போர்வையை, கவசத்தை அணிந்து கொண்டு எத்தகைய ஊழல் வேண்டுமானாலும் செய்யலாம் என்று திரைமறைவில் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நாடகத்திற்குத்தான் அவர்கள் இங்கே மீண்டும் ஒரு அங்கீகாரத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் தமிழகத்தில் ஏழை மக்கள் எட்டிக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு, தனியார் பள்ளிகள் எந்த அளவுக்குப் பணக்காரர்களுடைய இரும்புக் கரங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாடு அறியும். எதற்கெடுத்தாலும் அவர்கள் மைனாரிட்டி, மைனாரிட்டி மக்கள் என்றால், யார் இந்த மைனாரிட்டிகளை நசுக்குகிறார்கள்? இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் மைனாரிட்டிகள் பாதுகாப்பாக வாழ்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயுள்ள 22 மாநிலங்களில் தமிழகத்தில்தான் மைனாரிட்டி மக்கள் தங்களுடைய தாய் மொழியில் கல்வி கற்க அனைத்து வாய்ப்புகளும், வசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 22 மாநிலங்களில் பிற மாநிலங்களில், குடியேறிய தமிழ் மக்கள் தங்களுடைய தாய்மொழியில் படிப்பதற்கு அண்டை மாநிலங்களில் வாய்ப்பிருக்கிறதா, வசதியிருக்கிறதா என்பதை நெஞ்சைத் தொட்டுக் கேட்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பிற மாநிலங்களில் தமிழக மக்கள் தமிழைப் படிக்க முடியாமல் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள் அங்கே வீதியிலே நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்குப் பிறமொழியைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை என்று சொல்லிக் கொண்டு, கல்வியை ஒரு வியாபாரப் பொருளாக, வணிகப் பொருளாக ஆக்கிக்கொண்டு கொள்ளை இலாபம் அடிக்கலாம் என்று நினைக்கிறார்கள். அதற்காக அரசியல் சட்டத்திலே இருக்கிற ஓட்டை உடைசல்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக, சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்ட உரிமை என்று சொல்கிறார்கள். உரிமையைத்தான் கேட்கிறார்களே ழிய, கடமையை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். கடமையை

அவர்கள் மறப்பது மட்டுமல்ல மடமையை உடைமையாக்கி, கடமையை மறந்தவர்தான், இந்தச் சிறுபான்மை. சிறுபான்மை என்று சொல்லிக்கொண்டு இன்றைக்கு அரசியல் சட்டத்திலே தங்களுக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மைனாரிட்டி மக்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுத்தேன். ஆனால் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மைனாரிட்டி சமூகத்தினரைத் தாக்கிப் பேசுகின்ற நிலையை இந்த அவை பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மைனாரிட்டியினர் உரிமைக்காக வாதாடுகின்ற....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. சி. கோபால்) : மைனாரிட்டியினருக்கு மற்ற மாநிலங்களில் பாதுகாப்பு கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். மைனாரிட்டிகளை இழிவுபடுத்தி அவர் பேசவில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மைனாரிட்டி மக்கள் இந்த அரசில் மிகப் பாதுகாப்பான நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்த நாடு நன்றாக அறியும். அவர் சொல்லி, தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் யாரும் இல்லை என்பதை அவர் உணர்ந்தால் போதும்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சகோதரி மாண்புமிகு யசோதா அம்மையார், பெருந்தலைவர் காமராஜர் காலத்தில்தான் இந்தக் கட்டாயக் கல்வித் திட்டம் நாட்டில் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். அவர்கள் 1954-ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்கள். 1965 வரை அவர்கள் ஆட்சியிலிருந்தார்கள். அதற்குப் பிறகு 1967 வரை காங்கிரஸ் ஆட்சி இருந்தது. 1976 ஜனவரி 31 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த நாட்டில் இருந்தது. 14,12 ஆண்டுகள் தமிழகத்தில் கட்டாயக் கல்வி அமுலில் இருந்தும், பள்ளிக்கு வரக்கூடிய மாணவர்கள், பள்ளி வயது வந்த மாணவர்கள், கல்வி கற்கவேண்டிய மாணவர்கள், ஏன் பள்ளிக்கு வரவில்லையென்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு நாட்டிலே அரசியல்வாதி என்பவன் அடுத்த தேர்தலைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருப்பான். அடுத்த தேர்தலில் எப்படி அதிகமான இடங்களைப் பெறுவது, எப்படி ஆட்சியைக் கைப்பற்றுவது, எப்படி மக்களிடம் உள்ள வாக்குகளைப் பெறுவது என்பதையே, தன்னுடைய திட்டமாக வைத்துக் கொண்டு, திட்டம் தீட்டிக் கொண்டிருப்பான். ஆனால், ஒரு மக்கள் தலைவன்தான் அடுத்த தலைமுறையைச் சிந்தித்துக் கொண்டிருப்பான். அந்த முறையில், புரட்சித் தலைவர் அவர்கள் தான் இந்த நாட்டின் அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்தித்தார்கள்





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு இந்த நாட்டிலே வாழக்கூடிய எத்தனையோ ஏழை மக்கள் ஒருவேளை உணவிற்குக்கூட வழியில்லாமல், பள்ளியை எட்டிப் பார்க்க முடியாமல், மழைக்குக்கூட பள்ளியினுடைய மதிற்சுவருக்கு அருகிலே செல்ல முடியாமல் இருக்கிற நிலையைப் பார்த்துத்தான் இந்த நாட்டிலே இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், சத்துணவுத் திட்டத்தைப் பார்த்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில நண்பர்கள் இருக்கிறார்கள்—பலர் பெருவாரியாக வரவேற்கிறார்கள். இந்த சத்துணவு என்பது 2 வயது முதல் 5 வயது உள்ள குழந்தைகளுக்கும், 5 முதல் 12 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கும் பயன்படக்கூடிய திட்டம்.

இந்தச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் சாப்பிடக் கூடிய குழந்தைகள்தானா உடனடியாக புரட்சித் தலைவரவர்களுக்கு ஓட்டுப் போட்டு விடப் போகிறார்கள். அவர்களா ஓட்டுப்போட ஓடி வந்து விடப் போகிறார்கள்? இந்தத் திட்டத்தினால் பயன் பெறுகின்றவர்கள் குழந்தைகள் அல்லவா? இந்த நாட்டிலே உள்ள ஏழைக் குழந்தைகளின் உடலைப் பாருங்கள். அவர்களின் உடலில் வலுவில்லை; உள்ளத்தில் தெளிவு இல்லை. எப்படி அவனிடத்திலே கல்வி மலர முடியும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும. சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத முடியும்? தொட்டனைத்து ஊறும் மணற்கேணி அல்லவா? இந்த நிலையில் மாணவன் இருந்தால் எப்படி அவனுடைய உள்ளத்திலே ஊற்று எடுக்கும்? அங்கேதான் வறண்டு இருக்கிறதே; எப்படி அந்த வறண்ட நிலத்திலே வளமான விளைச்சலை எதிர்பார்க்க முடியும்? ஆகவே, இலட்சோப லட்சம் ஏழைக் குடும்பங்களிலேயிருந்து வருகின்ற ஏழைக் குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே கொண்டு வந்தாலும் குறிப்பிட்ட மாணவர்களுக்கு குறிப்பிட்ட அளவிலே கொடுக்கப்பட்டது மத்திய உணவு என்ற நிலையில்தான் இருந்ததே தவிர, பூரண சத்துணவுத் திட்டம் என்பது அல்ல. எனவே, இதை எதிர்த்துப் போராட முடியாது.

சகோதரியார் அவர்கள் போராட்டம், போராட்டம் என்று சொல்லுகிறார்கள். போராட்டத்தைக் கண்டு இங்கே அஞ்சுபவர்கள் கிடையாது. போராட்டம் நடத்த வேண்டுமென்றால் திருச்செந்தூர் தேரோட்டம் வேண்டுமானால் நடத்திப் பார்க்கலாம். போராட்டத்தைக் கண்டு யாரும் பயந்து கொண்டு ஓடக் கூடியவர்கள் அல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போராட்டம் என்பது ஜனநாயக அமைப்பிலே ஒரு ஆயுதம். அதை வைத்துக் கொண்டு ஆளுங்கட்சியை மிரட்டுவதாக அவர் நினைத்தார் என்றால் அது அங்கே வறண்டு இருக்கின்ற விவகாரம் என்றே நான் நினைக்கிறேன்.

[1983 மார்ச் 15

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயக அமைப்பில் போராட்டம் என்பது அனைவருக்கும் சொந்தமான ஒன்று. மைய அரசை தங்கள் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்காக மாநில அரசை மிரட்டலாம் என்று அவர்கள் மனப்பால் குடிக்க வேண்டாம்.

1947-48 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் இருபாலர் 36 சதவீதம் என்றால், 1967-68-இல் இந்த மாநிலத்தில் பள்ளிக்குச் செல்கின்ற இருபாலர் 40 சதவீதம் ஆகும். ஆனால் இன்றைக்கு 43 சதவீதம் பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. இந்த அளவிற்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலே படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

அதுபோன்றே, 1947-48-இல் இருந்த மொத்த ஆசிரியர்கள் 1,43,204 என்றால், அதில் மகளிர் 31,043 இருந்தார்கள். அதேபோன்று 1976-77-இல் 2,51,717 ஆசிரியர்கள் மொத்தத்தில் இருந்தார்கள் என்றால், அவர்களில் 96,419 பேர் மகளிர். அதாவது 32 விழுக்காடு மகளிர் இருந் தார்கள் என்றால், புரட்சித் தலைவர் ஆட்சியில், 1982-83 ஆம் ஆண்டில் இருபால் ஆசிரியர்கள் 2,76,370 பேர்கள் என்றால் அதில் 1,11,485 பேர் மகளிர். அதாவது 40 விழுக்காடு ஆகும்.

ஆகவே, இன்றைக்குத் தாய்க் குலத்திற்கு, மகளிர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அளவிற்கு எந்தவொரு ஆட்சியிலும் அதிக முக்கியத்துவம், வாய்ப்புகள், வேலைவாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை என்பதை மட்டும் சகோதரியார் அவர்கள் தங்கள் மனத்தில் பதிய வைத்துக் கொண்டால் போதும்.

1976-77 ஆம் ஆண்டில் மொத்த மாணவர்களின் வருகை 81.04 இலட்சமாக இருந்தது; இதில் தாழ்த்தப்பட்டவர்கள், மலைசாதி மக்கள் 14.17 இலட்சம் ஆகும். தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களின் சதவீதம் மொத்தத்தில் 16.9 ஆக இருந்தது; ஆனால் 1982-83-இல் பள்ளிக்கு வரும் மாணவர்களின் வருகை 93.75 இலட்சம் ஆகும். தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் 18.39 இலட்சம் ஆகும். இன்றைக்கு 20 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மக்கள் தொகையில் 18 சதவீதமாக இருக்கும் இந்த தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் கல்வித் துறையிலே மட்டும் 20 சதவீதம் படிக்கும் அளவிற்கு இந்த ஆட்சியில்தான் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1983 மார்ச் 15] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

1978-79 ஆம் ஆண்டு, இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில் மட்டும்தான் புதிய பிளஸ் 2 வகுப்பை ஆரம்பித்தார்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று சொல்வதைப்போல, ஏட்டுக் கல்வி நாட்டுக்கு உதாவது என்பதைப் புரட்சித் தலைவரவர்கள் கருத்திற்கொண்டுதான், தொழிற்கல்வி நாடு முழுவதும் பரவ வேண்டும், பள்ளிப் படிப்பை முடித்தவுடன் வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் பிளஸ் 2 என்ற புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். 1978-79 ஆம் ஆண்டில் 909 மேல்நிலைப் பள்ளிகளின் மூலமாக 1,11,657 மாணவ மாணவிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

(இரவு 6-00)

1980-81-ல் 1,407 உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டு, 2,90,430 மாணவர்கள் பயன் பெறுகிறார்கள். அதுமட்டுமல்ல, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மகளிருக் காக தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட பள்ளிகளில் மகளிரை மட்டும் ஆசிரியராகப் போடாமல் அங்கே ஆண்களும் ஆசிரியராகப் பணியாற்று வதால், பலவித விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடல்லாமல் மேல்நிலை-உயர்நிலை மகளிர்ப் பள்ளிகளில் மகளிரை ஆசிரியர்களாகப் போடவேண்டுமென்று அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல (குறுக்கீடு)....

இந்தியாவில் நூலகத்திற்காக ஒரு தனிச் சட்டமே இயற்றி, முதன் முதல் பெருமைபெற்ற மாநிலம் தமிழகம். இன்றைக்கு நூலகம் இல்லையென்றால் பொது அறிவு வளர்ச்சி அடையாது என்று அறிவீர்கள். பேரறிஞர் அண்ணா கூட ஒரு முறை கூறி யிருக்கிறார்கள், 'நூலகம் இல்லாத ஊரில் குடியிருக்க வேண் டாம்' என்று. நூலகம் இல்லாத ஊர் என்பது, ஜன்னல் இல்லாத ஒரு கட்டிடம்; நீர் இல்லாத ஓர் ஆறு என்று கூட அவர் கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நூலகத்தினுடைய தன்மையை இன்றைக்கு இந்த நாட்டிலே அறிஞர்கள் நன்கு அறிவார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தலைசிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் மக்களுடைய தலைவ ராகவும் வருவதற்குக் காரணம், சென்னையிலே உள்ள கன்னிமரா லைப்ரரி என்றால், அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்தியாவிலே, உலகத்திலே மிக உயர்ந்த நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் கல்லூரியிலே கால் எடுத்து வைக்காதவர்கள், எப்படி அப்படிப் பட்ட உயர்ந்த பரிசு பெற முடிந்தது? அவர்கள் மேற்கு

வங்கத்தில், கல்கத்தாவில், அந்த இந்திய தேசிய லைப்ரரியைப்
பயன்படுத்தி, அதன்மூலம் அறிவைப் பெருக்கிக் கொண்டார்கள்.
அப்படிப்பட்ட லைப்ரரியை, கிராமங்கள்தோறும் பரப்ப
வேண்டும். கிராமங்களிலே நூலக இயக்கம் என்ற ஒன்று
ஆரம்பித்து, கிராமங்கள்தோறும் லைப்ரரியைப் பெருக்குவதன்
மூலம், போதிய பள்ளிகளைத் திறப்பதைவிட, நூலகங்களைத்
திறப்பதன் மூலம் மக்களுடைய பொது அறிவைப் பெருக்க
முடியும் என்று அறிஞர்கள் நன்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.
இன்றைய தினம், நம்முடைய தமிழக அரசு 356 கோடி
ரூபாயை 5 கோடி மக்களுக்கு கல்விக்கு ஒதுக்கி இருக்கிறது....
(குறுக்கீடு,) குறைந்தது 10 கோடி ரூபாயாவது நூலகங்களுக்காக
ஒதுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி
மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி
சார்பாக என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். இந்த மானியக் கோரிக்கை அடங்கியிருக்கக் கூடிய
கோரிக்கைக் குறிப்பைப்பற்றி பேசுவதற்கு முன்னால், ஏற்கனவே
இங்கே எழுப்பப்பட்ட எங்களுடைய, தரப்பிலே எழுப்பப்பட்ட
பிரச்சினை ஒன்றுக்கு இன்னமும் அரசாங்கத்திலிருந்து பதில்
கிடைக்காத காரணத்தால், அதைப்பற்றி முதலிலே குறிப்பிட்டு
விட்டு, நான் என்னுடைய கருத்துக்களைக் கூறலாம் என்றிருக்
கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய பதிவாளருக்கு
எதிராக, அரசாங்க உத்தரவு எம்.எஸ். நம்பர் 851, 20-5-1980
ஆம் தேதியிட்ட கவர்ன்மெண்ட் உத்தரவின் மூலமாக, 3
நபர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. பதிவாளருக்கு
எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு—
3 மாத காலத்திற்குள்ளாக தன்னுடைய அறிக்கையை
அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. 2 ஆண்டுகள்
கடந்த பிறகு கூட, அதனுடைய முடிவுகள் என்ன?
அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அரசாங்கம்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 16-2-82 என்பதைத்
கல்வியமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே அன்று மாண்புமிகு
பதிவாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைப் பேசும்போது, இந்தப்
காணிப்புத் துறைக்கு அனுப்பப்படும்என்று இங்கே பற்றி கண்
அவ்வாறு அவர்கள் சொல்லி கூறினார்கள்.
ஆகவே அரசாங்கம் அதை அவ்வாறு ஓராண்டுக்கு மேலாகிவிட்டது.
அனுப்பியிருக்கிறதா? அதன் கண்காணிப்புத் துறைக்கு
அமைச்சரவர்கள் பதில் நிலைமை பற்றி மாண்புமிகு
தலமாக இருக்கும் என்று கூறும்போது சொன்னால், மிகவும்
தெரிவித்துக்கொள்கிறேன்.





இன்று இந்த கல்வி மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரை
ஒருயதார்த்த கண்ணோட்டு நீண்ட பல ஆண்டுகளாக
தொடர்ந்து வரக் கூடிய ஒரு கல்விக் கொள்கை நடவடிக்கையின்
அடிப்படையில் இன்றைக்கு நாம் இந்த நிலைக்கு வந்திருக்
கிறோம் என்பதைக் கணக்கில்கொண்டு, யதார்த்த அடிப்படை
யிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

21.5 விழுக்காடு தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய செலவில்
இன்று கல்விக்காக நாம் செலவழிக்கிறது மட்டுமல்லாமல்,
வேறு பல துறைகளிலும் இதற்காகப் பணம் செலவழிக்கிறோம்
என்பதை நாம் நன்கு அறிவோம். அப்படிப் பார்க்கக்கூடிய
நேரத்திலே, இன்று இந்தப் பள்ளிக் கல்வி என்பது மிகவும்
முக்கியமானது. அதைப்பற்றி பல பக்கங்கள் இந்தக் குறிப்பிலே
கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கும்போது, நான்
முதலிலே கூற விரும்புகிறேன்—சிறார்கள் ஆங்கிலப்
பள்ளிகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். கடந்த சில
ஆண்டுகளாக, இந்தப் பிரச்னையைப் பற்றி கிளப்பி வருகிறோம்.
அப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். தமிழில் இம்மாதிரியான சிறார்கள் பள்ளிகள்
ஒழுங்காக அமைத்து நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு
செய்யும் என்று கூறியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள
விரும்புவது என்னவென்றால், ஆங்கிலத்திலே இந்தப் பள்ளிகள்
நடக்கின்றன என்று குற்றச்சாட்டாகச் சொல்லிக் கொண்டிருந்
தால் அந்தக் குறையை அது தீர்க்காது. அதற்கு ஆக்கபூர்வ
மான பதில் வேண்டும். அதை மாற்றியமைக்க வேண்டும்.
ஆங்கிலப் பள்ளிகளிலே அவர்கள் சொல்லிக்கொடுக்கக்கூடிய
அதே பாடங்களை தமிழ்மொழியில் இன்றைக்கு நாம் இந்தக்
குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால்
தான் நல்லது. அதை நாம் பரவலாகச் செய்ய வேண்டும்.
தனியார் பள்ளிகளில் எவ்வாறு முறையாக செய்ய முடிகிறதோ,
அவ்வாறு செய்ய அரசாங்கமும் முன்வரவேண்டும். அரசாங்கம்
தன் ஆதாரங்களை வைத்துக்கொண்டு, அதைச் செய்ய
முடியாதா? அதனால்தான் கூறுகிறேன், இப்படிப்பட்ட ஒரு
காரியத்தைச் செய்தால்தான் தமிழகக் குழந்தைகளில் ஒரு
பகுதியினர் ஆரம்ப வயதிலிருந்து வேறொரு அந்நிய மொழியில்
இன்றைக்கு அந்தப் பாடங்களைக் கற்பதற்குப் பதில், தமிழ்
நாட்டின் கலாச்சாரத்தை தெரிந்துகொண்டு, அந்நிய பாணியை
கடைப்பிடிக்காத ஒரு நிலை ஏற்படும். கணிதம், அறிவியல்
ஆகிய பாடங்கள் எல்லாம் முக்கியமானவை. அவைகளைத்
தமிழில் போதிக்கக்கூடிய சிறார் பள்ளிகளை ஏற்படுத்துவதன்
மூலம் இதைச் செய்யமுடியும். எனவே, இந்த மாற்று
ஏற்பாட்டை நாம் செய்ய வேண்டும். அதுதான் பரிகாரம்.
இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1983 மார்ச் 15

அடுத்தபடியாக, இந்த பள்ளிச் சீரமைப்பு மாநாடு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே 7 லட்சம் ரூபாய் மக்களிடமிருந்து நன்கொடை பெற்றிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப் பற்றி ஏற்கனவே சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த பள்ளிச் சீரமைப்புமாநாடு, ஆசிரியர்கள் பெற்றோர் சங்கங்கள் எல்லாம், எல்லா இடங்களிலும் முறையாக நடக்கின்றனவா? தனிப்பட்ட சில நபர்கள் உள்ளே புகுந்துகொண்டு அதிலே அவர்கள் ஆதிக்கம் நடத்துவதன் மூலம், பல ஊழல்கள் ஏற்படுவதற்கு அது வழி வகுக்கும் என்று புகார்கள் வருகிறது. இந்த பள்ளிச் சீரமைப்பு மாநாடு, ஆசிரியர்கள் பெற்றோர்கள் சங்கங்கள் ஆகியவற்றிற்குப் பெறும் பணத்திற்கு, ரசீது கொடுக்கப்படுகின்றதா? அதிலே செலவழிக்கும் பணத்திற்கு ஆடிட் செய்யப்படுகின்றதா? அவைகள் எல்லாம் முறையாக இருக்கின்றனவா? என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி இல்லாமல் போனால், அங்குள்ளவர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஊழல்கள் செய்வதற்கு வழிவகுக்கும். எனவே, அதற்கான ஒரு கைட்-லைன்ஸ், வழிமுறைகளை இதற்காக உருவாக்க வேண்டும். எனவே, பொதுப்படையான அடிப்படையிலே வசூலிக்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதற்கும், முறையாக செலவழிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா அனைத்திலும், தமிழ்நாட்டில்தான் வகுப்புகள் 1—5க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 96.2 விழுக்காட்டினரும், வகுப்புகள் 6—8க்குரிய 11—14 வயதுத் தொகுதி சிறுவர்களில் 66 03 விழுக்காட்டினரும் இதுவரையில் அதாவது 1982—83ல் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், 96.2 விழுக்காடு என்று சொல்லக்கூடிய நேரத்திலே, பின்னால் வரும்போது, இதிலே பாதிபேர் இந்தப் பள்ளிகளைவிட்டு நீங்குகிறார்கள் என்று நாம் கூறுகிறோம். இன்றைக்குபலஉறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல், தொடக்கப் பள்ளிகளுக்கு பல இடங்களில் கட்டிடங்கள் இல்லை, வசதி இல்லை என்று இப்படி கூறுகின்றபோது, நாம் தாற்காலிகமான ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஏதோ பள்ளிகள் நடக்கின்றன; ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவிலே இன்றைக்கு தொடக்கப் பள்ளிகள் பல இடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நாம் நம்முடைய வருமானத்திலே அதிசயப்படியான பணத்தை இந்தத் துறைக்குச் செலவழிக்கிறோம். 21 சதவீதம் இந்த துறைக்காகச் செலவழிக்கிறோம்.



1983 மார்ச் 15] [திரு. என். சங்கரய்யா]

(மாலை 6-10)

ஆனால் இந்தத் துவக்கப்பள்ளிகள் இன்றைக்கு அதனுடைய தகுதியிலே அதனுடைய திறமையிலே அதனுடைய பயனிலே அபிவிருத்தி ஏற்பட்டால்தான் அடுத்து வரக்கூடிய வகுப்புகளுக்கு வரக்கூடிய மாணவர்களுடைய அறிவுத்திறன் உயரும். நாம் கொடுக்கக்கூடிய கல்வியினுடைய பயன் ஏற்படும். ஆகவே அதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு ஆசிரியருக்கு 41 மாணவர்கள் என்ற விகிதாசாரம் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்தத் தொடக்கப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய மாணவர்கள், மாணவியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வளர்ச்சி அங்கே போதுமான அளவிற்கு இல்லை. எனவே நாம் உஷாராக இருந்து அதைச் சீராக செய்ய வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் அதுதான் அவர்களுடைய அஸ்திவாரம்.

அடுத்தபடியாகப் பார்த்தால் இந்த மதிய உணவுத் திட்டத்தை பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதனால் மொத்தத்திலே 1982—83 ஆம் ஆண்டிலே இன்றைக்கு தொடக்கப் பள்ளிகளிலே 2.26 லட்சம் பேர்களும் மொத்தத்திலே 3.11 லட்சம் பேர்களும் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. மதிய உணவு திட்டத்தைப் பற்றி ஏற்கனவே எங்களுடைய கருத்தைக் கூறியிருக்கிறோம். அந்தக் குழந்தைகளுக்கு அந்த உணவு கிடைப்பது என்பது மிகவும் முக்கியம். அவைகள் சீராகக் கொடுக்கப்படுகிறதா என்பதை பார்ப்பதற்கும், அதிலே எந்தவிதமான தவறுகளும் ஏற்படாமல் கண்காணிப்பதற்கும், அதிலே சாப்பிடுகின்ற குழந்தைகளுடைய எண்ணிக்கையிலேதான் அதற்கான செலவினங்கள் இருக்கிறதா என்பதையும் பார்ப்பதற்கு நாம் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்காகத்தான் சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களை கண்காணிப்புக் குழுவாகப் போட்டு அது முறையாகச் செயல்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம், ஆகவே அந்த அடிப்படையிலே இந்த உணவு கிடைக்கிறது என்ற காரணத்தால் சில லட்சங்கள் அந்தப் பள்ளிகளிலே அதிகரித்து இருக்கிறது என்பதைப் பயன்படுத்திக் கொண்டு அந்தத் தொடக்கப்பள்ளிகளுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நாம் முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே அடுத்தபடியாகப் பார்க்கும்போது அந்த வியர்த்து விழுக்காடு, வேஸ்ட்புல் எக்ஸ்பென்டிச்சர், அதாவது தொடக்கப் பள்ளிகளிலே படித்துவிட்டு 1977-78-லே 40 சதவிகிதம் மாணவர்கள், மாணவியர்கள் விட்டுவிட்டு இருக்கிறார்கள்

என்றும், 1981 82-லே இது 30 சதவீதமாக குறைந்துவிட்டது என்றும் கூறியிருக்கிறார்கள். எனக்கு இதை நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. 3 ஆண்டுக்காலத்திலே, 77–78–லே பள்ளிக்கூடத்திலே கடைசிவரையில் படிக்காமல் விட்டுவிட்டுப் போனவர்கள் 40 சதவீதமாக இருந்தவர்கள், 3 ஆண்டுக்காலத்திலே, அது 10 சதவீதமாக 30 சதவீதமாக குறைந்தது என்றால் இது ரொம்பவும் ஆச்சரியப்படக்கூடிய அபிவிருத்தி என்றும் சொல்லத் தோன்றுகிறது. ஆகவே வெறும் புள்ளிவிவரங்களாக மட்டும் நாம் காண்பிக்க முயற்சிக் காமல் நாம் களத்திலே சென்று எடுத்து, இந்த வியர்த்த விழுக்காடு இந்த 3 ஆண்டுக்காலத்திற்குள்ளே 10 சதவீதமாக உண்மையிலே குறைந்திருக்கிறதா என்பதை நாம் கண்காணிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது நாமே நம்மை ஏமாற்றிக் கொள்வதாக அமையும். இந்த 3 ஆண்டுக்காலத்திற்குள்ளே இந்த 10 சதவீதம் குறைந்திருப்பது என்பது சாத்தியமான ஒன்று அல்ல என்று நான் கருதுகிறேன், எனினும் அமைச்சர் அவர்கள் அவருடைய இலாக்காவிலேயிருந்து கிடைக்கக்கூடிய அனுபவத்திலிருந்து அவர்கள் பதில் சொல்வார்களானால் நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும் அரசாங்கத்தை உஷார்படுத்துவது அவசியம் என்ற காரணத் தாலே அதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் இந்த வாசகத்திலே சொல்லப்போனால், இந்த 24 கோடி ரூபாய்தான் சத்துணவுத் திட்டத்திற்காக அந்த மையங்களிலே இருக்கக்கூடிய ஆய்வாளர்களுடைய சம்பளம் போன்றவைகளுக்கு என்று மானியத்திலேபோடப்பட்டிருக்கிறது. பாக்கி அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கக்கூடியது எல்லாம் நுகர் பொருள் வழங்கும் மானியத்திலே கொண்டு போய் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதையும் சேர்த்தால் கல்விக்காக இந்த இளம் சிறார்களுக்கு உண்மையிலே செலவழிக்கக் கூடிய தொகை இன்னும் அதிகமாக இருக்கும். ஆகவேதான் இவ்வளவு செலவுகளை இன்று பார்க்கக்கூடிய இந்தத் துறையிலே நாம் எவ்வளவு செலவழித்தாலும் பல லட்சக்கணக்கான இந்த ஆரம்பப்பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள், மாணவியர் களுடைய கல்வி வளர்ச்சியை அதிகப்படுத்திக் கொள்வதற்காக மேலும் என்ன தேவைப்படுகிறதோ, ஆசிரியர்களுடைய திறமையை அதிகப்படுத்துவதற்காக ஊக்கங்களை கொடுப்பது, அரசாங்கத்திலே கொடுப்பது கிராமப் பள்ளிகளிலே பணி புரியக் கூடிய ஆசிரியர்களுக்கு அந்தமாதிரி ஊக்கங்களை கொடுப் ...ற்கு நாம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.



பாடநூல் நிறுவனம் ஒரு வெகுநேர்த்தியான பணியை ஆற்றிவருகிறது என்று நான் கருதுகிறேன். ஆனால் அந்தப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் புத்தகங்களை இங்கே வெளி யிடும் அறிக்கைகள் மூலம் தான் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது. சாதாரணமாக பதிப்பாளர்கள் தங்கள் தங்கள் பதிப்புகளைப் பற்றி வெகுவாக விளம்பரப்படுத்திக் கொள் கிறார்கள். ஆனால் இந்தப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் புத்தகங்களைப் பற்றி நாம் சரியாக அறிய முடியவில்லை. தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் பல்வேறு இலக்கிய சரித்திர மற்றும் அறிவியல் பாடப்புத்தகங்களை வெளியிடுகிறது. அதன் மூலம் பள்ளி மாணவர்கள் மட்டுமல்ல, பொதுமக்கள் கூட நல்ல கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும். ஒரு தனி நபர் எழுதுவதை விட ஒரு குழு அந்தப் பாடநூல்களை எழுதி வெளியிடப்படுவதால் அது மக்களுக்குப் பயன் உள்ள வகையில் இருக்கும். ஆகவே, பெரும் அளவிலே இந்த பாடநூல் நிறுவனத் தால் தயாரிக்கப்படும் புத்தகங்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இந்த நிலைமைகள் மக்களிடையே பொது அறிவை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று கருதுகிறேன்.

புத்தக வங்கிகள் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதை இன்னும் நன்றாகச் செய்வது அவசியம். அது சாத்தியமானதேயாகும். ஏனென்றால் நம்முடைய நாடு ஏழ்மை யான நாடு. அதை அடிப்படையாக வைத்து, இதை ஒரு தேச பக்தி சேவையாக வைத்து வேண்டுகோள் விடுத்தால், அந்த மாணவர்கள் தாங்கள் படித்த புத்தகங்களை மேல் வகுப்புக்குச் செல்கிறபோது பள்ளிகளிலேயே விட்டுவிட்டுச் செல்வார்கள். அதன் மூலம் ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறமுடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை நடுத்தரப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பெரும் அளவில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் தற்போது 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறுகிறார்கள் என்று சொன்னால், வரும் ஆண்டுகளில் பல லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்ற நிலையை அடைய முடியும். ஆகவே, அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதைப்போல, தொடக்கப்பள்ளிகளில் நூலகத்தை ஏற்படுத்துவதற்காக 1983-84–ல் 2 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அது போதாது. தொடக்கப்பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு புத்தங்களில் நல்ல வண்ணங்கள் அமைந்த பாடங்களைப் போட்டு சிறுவர், சிறுமியர்களை ஆகர்சிக்கத் தக்கவகையில், அந்தப் புத்தகம் படிக்கவேண்டும் என்ற வகையில் ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அந்தப் படங்கள்

மூலம் அவர்களுக்குப் பல்வேறு சரித்திர உண்மைகளை, அறிவியல் செய்திகளை அளிக்கலாம். இதற்கு பல லட்சம் செல வானாலும் பரவாயில்லை. அது பயன் உள்ளதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நகராட்சிகள், மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், 1,547 தொடக்கப் பள்ளிகளை அவர்கள் நடத்தி வருகின்றனர். பஞ்சாயத்து ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக இந்த அரசு அறிவித்து இருக்கிறது. அந்த அளவிற்கு அங்குள்ள ஆசிரியர் களின் பிரச்சினையை அரசு குறைத்து இருக்கிறது. அதைப் போலவே, இந்த நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளையும் அரசே ஏற்றுக்கொண்டு, அங்குள்ள ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும். காரணம், நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 சதவீதம் அரசு மானியமாகப் பெறுகின்றன. அதோடு இந்தத் தொடக்கக்கல்வி கணக்கு நிதியில் துண்டு விழும் முழுத் தொகையையும் அரசு ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே. இவ்வளவு தொகையை அரசாங்கம் அவைகளுக்குக் கொடுத்த பின்னாலும், அங்குள்ள ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் வருவது இல்லை. வரி வசூலானால்தான் சம்பளம் என்ற நிலை இருக்கிறது. சம்பளம் சரியாக வராத நிலையில் அங்குள்ள ஆசிரியர்கள் எப்படி சரியாக வேலை செய்ய முடியும்? ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அரசாங்கமே அவற்றை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளி கல்வியைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினர் 17.31 இலட்சம் பேர் களுள், 43 விழுக்காடாகிய 7.38 இலட்சம் பேர்தான் உயர்நிலைப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டு இருக் கிறது. இது எப்படி குறைகிறது? இந்த விகிதாசாரத்தை அதிகரிக்க வேண்டும். அதிக மாணவர்கள் உயர்நிலைப் பள்ளி களில் படிக்க வரவேண்டும் என்று சொன்னால், கீழே இருந்து வீழ்ந்து வருகின்ற மாணவர்களின் விகிதாசாரத்தைக் குறைக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கிருந்தே படிப்பதில் அதிகக் கவனம் மாணவர்கள் செலுத்தவேண்டும் என்ற வகையில் நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் அந்த விகிதாச்சாரத்தை உயர்த்தமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வி இயக்குனர் மூலமாகவே அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்கான பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை அனுப்பிவைப்பது என்பது வரவேற்கத் தக்கதாகும். தனியார் இடத்தில் நேரடியாகவே அந்தத் தளவாடங்களை அனுப்பும் பொறுப்பை ஒப்படைத்தால் அவர்கள் தேவையில்லாத வகையில் கூட தளவாடங்களை அனுப்பி வைத்துவிட வழி இருக்கிறது. கல்வி மாவட்டங்கள்





51-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த ஆய்வுக்கூட வண்டிகள் கிராமப்புறங்களில் போய் எவ்வளவு நேரம் இருக்கும்? அவர்கள் அந்த நேரத்தில் எந்த வகையில் பயன்பெறமுடியு ? இப்படி எத்தனை நாட்களில் அவை எல்லாப் பள்ளிகளும் பயன்பெறும் வகையில் பணியாற்ற முடியும்? இதனால் ஏற்படும் பலன் என்ன? அது அங்குள்ள மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியுமா? என்பதை யெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்கத்தாவில் உள்ள 'ப்ளேனடோரியம்' போல் ஒன்றை தமிழ் நாட்டில் சென்னையில் நிறுவவேண்டும். தமிழகத்தில் அப்படிப்பட்ட 'ப்ளேனடோரியத்தை' நிறுவி, அதன் மூலம் தமிழக மக்களுக்கு எப்படி அந்த வானவெளிக் கிரஹங்கள் செயல்படுகின்றன, எப்படி இந்த பிரபஞ்சம் செயல்படுகிறது என்பதை விஞ்ஞான ரீதியில் மக்களுக்குத் தெரிவிக்க முடியும். அதன் மூலம் மூடப் பழக்க வழக்கங்களை நாம் முறியடிக்க முடியும். இது மாணவர்களுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் பெருத்த அளவில் பயன் உள்ளதாக இருக்கும் என்பதால், அந்தப் 'ப்ளேனடோரியத்தை' சென்னையில் ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே காலம் கடந்து விட்டது. ஆகவே, அதை விரைவில் செய்து முடிக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்,

உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பொறுத்த வரையில், 1983—84 ஆம் ஆண்டுக்கு என்று ரூ. 2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது ஏற்கனவே பல உறுப்பினர்கள் குறிப் பிட்டார்கள் புத்தகப்பசி மாணவர்களிடையே இருக்கிறது. ஆகவே, நூல் நிலையங்களைப் பரவலாக ஆரம்பிக்க வேண்டும். ஆங்காங்குள்ள மாணவர்களுக்கு புத்தகம் படிக்க வசதிகள் ஏற்படுத்த வேண்டும். அதற்காக அரசாங்கம் நல்ல அறிவியல் புத்தகங்களை வாங்கி வழங்கவேண்டும். அப்படி புத்தகம் படிக்கும் வழக்கத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தா விட்டால், 'ஏட்டுச்சுரக்காய்' போல் அவர்கள் படிக்கும் புத்தகத்தில் உள்ள விஷயங்களைத் தவிர, வேறு உலக விஷயங்கள் எதையும் அவர்கள் பெறமுடியாமல், உலக அறிவு பெறமுடியாமல் இருப்பார்கள்.

(இரவு .6—20)

பிற்காலத்தில் அவர்கள் சிரமப்படுகிறார்கள். என்ன படித் தார்களோ அதுதான் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அதிக அளவில் அந்த நூலகங்களில் புத்தகங்கள் வாங்கி வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1983 மார்ச் 15

ஆதி திராவிட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் டியூஷன் ஒரு நாளைக்கு ஒன்றரை மணி நேரம் சொல்லிக்கொடுப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இது சிறந்த திட்டம். இதன் பலன் இன்றைக்கு இல்லாவிட்டாலும் அடுத்த 5 அல்லது 10 ஆண்டு காலத்தில் பலவெளிப்படையாக இருக்கும். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு மாறுவதற்கு தாழ்ந்த மனப்பான்மை மாறுவதற்கு இது மிகுந்த சாதகமாக இருக்கும். ஆகவே, இந்த முறையை மேலும் வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நம்முடைய பாடநூல் நிறுவனத்தின் புத்தகங்கள் பொது மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

அடுத்தபடியாக இருக்கிற ஒரு பெரிய பிரச்சினை மத்திய சர்க்காரின் உத்தரவு. மலிவு விலையில் நோட்டுப் புத்தகம் வழங்க மத்திய சர்க்கார் 4,800 ரூபாய் ஒரு டன் காகிதத்திற்கு என்று கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தனிப்பட்ட முதலாளிகள் மூலம் அதைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த முதலாளிகள் கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு வாங்கிவிட்டார்கள். நமக்கு காகிதம் கொடுக்க இப்போது மத்திய சர்க்கார் மறுத்து விலக்கிக்கொண்டுவிட்டது 1982 ஜூலை முதல் மலிவு விலையில் காகிதம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். 1982-83 ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய்க்கு மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் கிடைக்காது. இதனால் யாருக்கு நஷ்டம்? நமக்குத் தான், நம்முடைய மாணவர்கள்தான் கஷ்டப்படுவார்கள். மத்திய சர்க்காரிடம் மற்ற காரியங்களுக்கு வாதிடுவதைப் போல இதற்கும் வாதிட வேண்டும். மத்திய சர்க்கார் தன்னுடைய சொந்த நிதியிலிருந்தே இதை கொடுக்கட்ட, மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்கள் கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் நோட்டுப் புத்தகங்களின் விலை உயரும், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். ஆகவே, இதை ஒரு முக்கியமான பிரச்சினையாக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போன்று பள்ளிசாரா கல்வியை அஞ்சல் முறையில் கொண்டு வருவது நல்லது. காரணம் பலருக்கு படிக்க முடிய வில்லை. அவர்கள் இப்போது இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார்கள். பல நாடுகளில் பல அறிஞர்கள் இப்படித்தான் வந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் படிக்க வாய்ப்பு இல்லா விட்டாலும் பின்னால் அவர்களுடைய ஆர்வம் மிகுதியால் இந்த முறையில் படித்து முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, நான் இதை வரவேற்கிறேன்.



1983 மார்ச் 15] [திரு. என். சங்கரய்யா]

அடுத்தபடி இருப்பது தனியார் கல்வி நிறுவனங்கள். மாண்புமிகு முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் அந்த பதத்திற்கு எதிரான கருத்து உடையவன் அல்ல. சிறுபான்மையினர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்; மைனாரிட்டி முதாயத்தினரின் உரிமை பாதிக்கப் படக்கூடாது. ஆனால் பிரச்சனை என்னவென்றால் சாதாரண நிலையிலே சிறுபான்மை மக்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய நலனைப் பாதுகாப்பதில் அந்த சிறுபான்மை சமுதாய நிறுவனங்கள் காரியங்கள் செய்கின்றனவா? அந்த முறையிலே அவர்கள் நடவடிக்கை இருக்கிறதா? ஏழைகளுக்காக இருக்கிற நிறுவனம் ஏழை மக்களின் நலனுக்காகப் பாடுபடுகிறதா என்பது தான் என்னுடைய கேள்வி. ஆகவே அவர்களுக்கும் இன்றைக்கு பாதுகாப்பு தேவை. இன்றைக்கு தனியார் பள்ளிகளிலும் மைனாரிட்டி சமுதாயத்தினர் நடத்தும் பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் என்ன நிலைமை ஏற்படும்? அரசாங்கம் இதுபற்றி ஏற்கெனவே தெரிவித்திருக் கிறது. ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அறிக்கை கொடுத்தவுடன், அதைப் பரிசீலனை செய்து, தனியார் கல்வி நிறுவனங்கள் சட்டம் திருத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதை விரைவிலே செய்ய வேண்டும்.

இதுபற்றி எத்தனையோ உதாரணங்களைச் சொல்லியிருக் கிறோம். எவ்வாறு ஆசிரியர்கள் விலக்கப்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறோம். விலக்கப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். சாதாரண சிறிய குற்றத்திற்குக் கூட ஆசிரியர்களை நீக்கிவிடுகிறார்கள். பல இடங்களில் சம்பளம் கூட கொடுக்கமாட்டார்கள். இங்கே சென்னையில் பல்லாவரம் முனிசிபாலிட்டியில், குரோம்பேட்டையில் இருக்கிற ஒரு மானேஜ்மெண்ட் பள்ளியைப் பற்றி பலமுறை இங்கே குறிப்பிட்டிருக்கிறோம், அந்த மானேஜ்மெண்ட் அரியர்ஸ் எல்லாம் வாங்கிவிட்டார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு அது கொடுக்கப்படவில்லை. அவர்கள் அத்தனை பேர்களும் பெண்கள். டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷனுக்கும், சைதாப்பேட்டையில் இருக்கிற கல்வி அதிகாரிக்கும் பல விண்ணப்பங்கள் கொடுக்கப் பட்டுவிட்டன. அந்த கல்வி அதிகாரிகள் ஒருவேளை அந்த மானேஜ்மெண்டை கூப்பிட்டு கேட்க பயப்படுகிறார்களா என்று தெரியவில்லை. அமைச்சரிடமும் அதுபற்றி குறிப்பிட்டு, பல மனுக்கள் நான் கொடுத்திருக்கிறேன். இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது மிகவும் அபாயகரமானது. அந்த தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசு ஊழியர் களுக்கு இருக்கின்ற விதிமுறைப்படி என்ன என்ன சலுகைகள் கிடைக்க வேண்டுமோ அத்தனை சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்; அந்த ஆசிரியர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்; அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1983 மார்ச் 15

அதுமட்டுமல்லாமல், ஆசிரியர்களுக்கும் அவர்கள் பல தொல்லைகள் கொடுக்கிறார்கள். இந்த தன்னாட்சியை அந்தக் கல்லூரிகளுக்கு கொடுத்து சில ஆண்டுகள் ஆகிவிட்டது ஆகவே, அது தொடர்ந்து இருக்க வேண்டுமா, வேண்டாமா என்கிற நிலைமையிலே அதுகுறித்து விவாதம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வழிவகையினை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்று கல்லூரிகளிலே தமிழ் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு ரூ. 150 உதவிச் சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், நீண்டகாலமாகவே ஆரம்பப்பள்ளியிலிருந்து பட்டப்படிப்பு வரையில் தமிழ் மொழி பயிற்று மொழியாக இருந்து வருகிறது. அதற்கு தனி வசதிகளும் அளிக்கப்பட்டு வருகிறது. அந்தந்த மாநிலத்திலே அந்தந்த மொழிக்குமுக்கியத்துவம் தரவேண்டியதுதான். நாங்கள் கூடாது என்று சொல்லவில்லை. ஆந்திராவிலே தெலுங்கு, கேரளாவிலே மலையாளம், இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியும் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

(இரவு 6-30)

தாய்மொழியில் படித்தால்தான் சுலபம். முக்கியமாக நன்றாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதற்காக அவ்வாறு கூறுகிறோம். உலகத்திலேயே வேறு எந்த நாட்டிலேயும் குழந்தை பள்ளிக்குப் போன உடனேயே தனக்குப் புரியாத ஒரு மொழியிலே விஞ்ஞானம் போன்ற கல்விகளை எல்லாம் கற்க வேண்டும் என்ற கொடுமை கிடையாது. ஜப்பானிலே உள்ளவர்களுக்கு வேறு மொழியே தெரியாது. ரஷ்யாவிலே ஸ்பேஸ் சயின்ஸ் என்ற வகையிலே விண்கலம் செலுத்துகிறார்களே அவர்கள் கூட தாய்மொழியிலேதான் அந்தத் தொழில் நுணுக்கத்தைக் கூட கற்கிறார்கள். ஆனால் இங்கே உதவிப் பணம் கொடுத்து தமிழைக் கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டி இருக்கிறது. அப்படி இருந்தாலும் சில ஆயிரம் பேர்தான் படிக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கின்றது. எனவே அரசாங்கம் மேலும் இதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கக் கூடிய முறையிலே தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்களுக்கு இன்னும் விசேஷ வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து பாடத் திட்டங்களைப் பொறுத்தமட்டிலே நூல்களைத் தயாரிப்பதிலே பலவேறு குறைபாடுகள் இருந்திருக்கின்றன. இதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால் பாடத்திட்டங்களை ஏற்படுத்துவதற்கு கூட்டுக் குழுக்களை அமையுங்கள். விஞ்ஞானத்தைப் பற்றி, கணிதம் பற்றி, தமிழ் மொழி பற்றி இப்படிப்பட்ட பாடங்களைப் பற்றி



1983 மார்ச் 15] [திரு. என். சங்கரய்யா]

எல்லாம் நிர்ணயிப்பதற்கு ஒரு ஆசிரியர் போட்டால் அவர் தவறு செய்யக்கூடும், விம்ஸ் அன்ட் ஃபேன்சி என்ற வகையில் சொந்தக் கருத்துக்கள் ஏற்பட்டுவிடக்கூடிய நிலைமை ஏற்படும், எனவே 3 பேர்களைக் கொண்ட கூட்டுக் குழுக்களை நியமித்தால், அந்த வகையில் விவாதித்து எழுதினால் ஓரளவுக்கு குறைபாடுகளை நீக்க முடியும்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு கோவில்பட்டியிலே உள்ள ஒரு கல்லூரி பற்றி இங்கே சொன்னார்கள். நாங்களும் அந்தக் கூட்டுக் குழுவிலே கலந்துகொண்டோம். நான் அதிலே உறுப்பினராக இருக்கிறேன். எனவே சர்வ கட்சிக் கூட்டத்திற்கு நாங்களும் வந்திருந்தோம். காப்பி அடிப்பது, ராகிங் செய்வது போன்றவற்றை எல்லாம் தடுக்க வேண்டும், கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்தியது. பொராலிட்டி என்பது ஒரு பக்கம் இருந்தாலும் காப்பி அடித்து தேறிய ஒரு மாணவன் பிற்காலத்திலேயும் வாழ்க்கையிலே காப்பி அடிப்பான். அப்படிப்பட்ட மாணவர்கள் உருவானால் நாடு என்ன ஆகும்? எனவே நாட்டு நலன் கருதி காப்பி அடிப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து ராகிங்-ஐ ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேல் நாடுகளிலே உள்ள ஒரு இழிந்த கலாசாரம் அது, மிக மோசமான அந்தக் கலாசாரியத்தை பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். கோவில்பட்டியிலே உள்ள கல்லூரியிலே உள்ள முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையிலே அரசு தலையிடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தனியார் கல்லூரிகளை அப்படி அனுமதிக்கக் கூடாது. அரசாங்கத்தின் கல்லூரிகள் என்றால் அவர்கள் அரசுக்கு உட்பட்டு இருக்கிறார்கள். ஆனால் தனியார் கல்லூரிகள் தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மாணவர்களை சரியான முறையில் நடத்தி இருக்கிறார்களா என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாது. கோவில்பட்டியிலே உள்ள கல்லூரியிலே சைக்கிள் சீட்டைத் திருடினான் என்ற ஒரு குற்றச்சாட்டிற்காக ஒரு கல்லூரி முதல்வர் நடவடிக்கை எடுத்திருக்கிறார். எனவே எவற்றிற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் ஒரு முதல்வர் என்பது பற்றி நாம் யோசிக்க வேண்டாமா? எனவே இதிலே அரசாங்கம் தலையிடாது என்று சொல்வது சரியல்ல. தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் இப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். இனி அரசாங்கம் தலையிடாது என்று சொல்லிவிட்டால் இறக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்துவிடுவார்கள். அரசாங்கம் இனி தலையிடாது, எனவே என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமைக்கு வந்துவிடுவார்கள். எனவே அரசாங்கம் தேவையான இடத்திலே தலையிடத்தான்வேண்டும். தவறான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அரசு ஆதரிக்க முடியாது.

அடுத்தபடியாக இந்த பகுதி நேர தொழில் கல்வியைப் பற்றி ஒரு பிரச்சனை இருக்கிறது. அதை இந்தியா பூராவும் பாராட்டுவதாக அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். ஆனால் 4,300 பகுதி நேர ஊழியர்கள் 150 ரூபாய் சம்பளத்தில், அந்த மாலை நேர வகுப்புகளிலே ஒரு ஆண்டுப் பாடங்களை கற்றுக் கொடுப்பது எவ்வளவு சரியாக இருக்கும் என்ற கேள்வி எழுகிறது. 150 ரூபாய்க்காக அந்த தொழில் பாடங்களை கற்றுக் கொடுப்பதற்கு அந்தப் பகுதி நேர ஊழியர்கள் எந்த அடிப்படையில் அதை நிறைவேற்றுவார்கள் என்பது பிரச்னை. இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், இதிலே ஒரு கமிட்டியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணா மலைப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் குழந்தைவேலு அவர்களுடைய தலைமையிலே போடப்பட்ட கமிட்டியைத்தான் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது சமீபத்திலே அரசாங்கத்திடம் தொழில் நுட்ப சம்பந்தமாக ஒரு அறிக்கையைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அவர் பெரிய அனுபவஸ்தர். ஆகவே. அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை அமுல்படுத்த வேண்டும்.

காரணம் என்னவென்றால், இதிலே படிக்கக்கூடிய ஏராளமான டைப்பிஸ்டுகள், சுருக்கெழுத்தாளர்கள், படித்து தேறி வெளியே வந்தால் அவர்கள் அரசாங்கத்தினுடைய பரீட்சையை பாஸ் செய்திருக்கிறார்களா என்று கேட்கிறார்கள். இதிலே பாஸ் செய்தால் கூட, அரசாங்கத்தினுடைய பரீட்சையை பாஸ் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படியென்றால், இதை பாஸ் செய்து என்ன பிரயோஜனம்? மறுபடியும் இன்னொரு முறை பாஸ் செய்ய வேண்டும் என்றால், டியூப்ளிகேஷன் என்பது மட்டுமல்ல, இதைப் பாஸ் செய்து என்ன உபயோகம்? இதிலே படித்து தேறி வந்தால் வேலை கிடைக்கும் என்கிற நம்பிக்கையோடு படிக்க வருகிறபோது, மறுபடியும் பாஸ் செய்ய வேண்டும் என்று கேட்பதால், அத்தகைய தொழில் பயிற்சியோடு, திரும்பவும் அதனை படிக்காதபடிக்கு அந்தத் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தொடக்கப் பள்ளி இறுதி தேர்வு என்பது ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேலானவர்களுக்காக வைக்கப்படுகிற தேர்வு. அதிலே 3,000 பேர்கள்தான் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பள்ளிகளிலே சேர்ந்து படிக்க முடியாதவர்கள்தாம் இத்தகைய தேர்வுகளை அதிகமாக எழுதுகிறார்கள். தொடர்ந்து படிக்க முடியாத காரணத்தால் தான், இதை படித்து பாஸ் செய்தாலாவது மேற்படிப்பு ஏதாவது படிக்கலாமே என்கிற ஆர்வத்தில் அவர்கள் இந்தத் தேர்வு எழுத வருகிறார்கள். ஆகவே 3 ஆயிரம் பேர்கள் என்பது மிகக் குறைந்த எண்ணிக்கையாகத் தெரிகிறது.



அடுத்து தொடக்கப் பள்ளிகளில் என்ன நிலைமை? 1981 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஆண்கள் படித்தவர்கள் 51.28 சதவீதம், பெண்கள் 100-க்கு 34. ஆண்களும் பெண்களும் சேர்ந்து மொத்தம் படித்தவர்களின் எண்ணிக்கை 45.78 சதவீதம் தான் என்றால் அதிக அளவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் தமிழ்நாட்டிலே இல்லை என்பது தான் குறிப்பு. ஆகவேதான் அவர்களுக்கு முறை சாராக் கல்வி மூலமாகவும், வயது வந்தோர்கள் கல்வி மூலமாகவும் கல்வி கற்பித்து பேலன்ஸ் சரியாக ஏற்பாடு செய்தால்தான், மீதமிருக்கக்கூடிய 50 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் கல்வி அறிவு பெறக்கூடிய வாய்ப்பை பெறமுடியும். ஆகவே அதற்கென நாம் ஒதுக்கியிருக்கிற 3 கோடியே 4 லட்சம் ரூபாய் மிகவும் குறைவானது, ஏனென்றால் படித்தவர்கள் என்கிற எண்ணிக்கை எடுக்கும்போது, பெரிய இடைவெளி நடுவில் ஏற்பட்டிருக்கிறதே, அதை எப்படியும் நாம் தவிர்க்க முயற்சி எடுக்க வேண்டும். கிட்டதட்ட 55 சதவீதத்தினர் படிக்காமல் இருக்கிறார்களே, அவர்கள் சீக்கிரத்தில் கல்வியறிவு பெற்று, இந்த விகிதாசாரத்தைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தன்னாட்சி உரிமையை சில கல்லூரிகள் கேட்கிறார்கள். யாரிடமிருந்து தன்னாட்சி கேட்கிறார்கள் என்று புரியவில்லை. நாம் இப்போது மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில சுய ஆட்சி கேட்கிறோம். நாம் ஒரு தனியான சர்க்கார், ஆகவே கேட்கிறோம். ஆனால் கல்லூரிகள் யாரிடமிருந்து தன்னாட்சி கேட்கிறார்கள், மாநில சர்க்காரிடமிருந்தா, மாநில மக்களிடமிருந்தா, அல்லது பல்கலைக் கழகங்களிடமிருந்தா? அப்படித்தான் இருக்க வேண்டும். அவர்களுக்கான பாடத் திட்டங்களை அவர்களே வகுத்துக் கொள்ள வேண்டும், அவர்களே தேர்வு நடத்திக் கொள்ள வேண்டும், ஆனால் பட்டம் வழங்குவது மட்டும் பல்கலைக் கழகம் வழங்க வேண்டும். இது என்ன வேடிக்கை. பழி மட்டும் அவர்களுக்கா? அந்தக் கல்லூரிகளே ஏன் பட்டத்தைக் கொடுக்கக் கூடாது. மதுரையிலே இருக்கக்கூடிய கல்லூரியிலே தன்னாட்சி நடக்கிறது. அதிலே தேறியவர்களுக்கு பட்டம் வழங்குவது மட்டும் யூனிவர்சிட்டி வழங்க வேண்டும். இது என்ன நியாயம்? இது சரியாகவும் வராது, எப்படி என்றால், பல்கலைக் கழகம் சில தரங்களை முறைப்படுத்தி வைத்திருக்கிறது. பல்கலைக் கழகமே பாடத்திட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் தேர்வு வைக்கும்போது, அது எதிர்பார்க்கும் தரம் அதிலே இருக்கும். ஆனால் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளில், அவர்களே பாடத்திட்டங்களை வகுத்துக் கொள்வதால், பல்கலைக் கழக கல்வித் தரம் குறைந்து குறைந்த மதிப்பெண்களை மாணவர்கள் பெற்று தோல்வியுற வேண்டிய நிலை ஏற்படுகிறது.

[திரு. என். சங்கரய்யா] [1983 மார்ச் 15

அந்நது மாணவர்கள் மத்தியிலே பல தீய பழக்கங்கள், தீய குணங்கள் இருந்து வருகின்றன. அப்படி இல்லாமல் ஜாதி, மத நிலைமைகள் இல்லாமல் அவற்றுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலைமை இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமையைக் கொண்டுவருவதற்கு பள்ளிக் கூடங்களிலே நடைபெறுகின்ற விவாதங்களில் இந்தமாதிரியான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவேண்டும். எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. முன்பெல்லாம் அரசியல் தலைவர்கள் தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் கல்லூரிகளிலே வந்து பேசி இருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தோழர் பாலதண்டாயுதம் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி அந்தத் துணைவேந்தராக இருந்தார். அவர்கள் காலத்திலே அவர்கள் பல்கலைக் கழகங்களிலே தேசியவாதிகளும், எல்லாம் தலைவர்களும் வந்து உரையாற்றினார்கள். சோஷலிசத் கழகங்களின் நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டார்கள். பல்கலைக் ... போன்றவர்கள் எல்லாம் அவ்வாறு வந்து பல்கலைக் கழகங்களின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறார்கள். திரு. பேட்லி திரு. ராஜாஜி, திரு. அண்ணாதுரை போன்றவர்கள் எல்லாம் வந்து உரையாற்றி இருக்கிறார்கள். அப்படி அவர்கள் எல்லாம் வந்து பேசியதன் காரணத்தால் அன்றைக்கு ஜாதி உணர்ச்சிகளும், வகுப்பு உணர்ச்சிகளும் இல்லாத நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஜாதி வெறி தாண்டவம் ஆடுகின்றது. அந்தக் காலத்திலே ஜாதி, மத உணர்ச்சிகளை மாற்றக்கூடிய வகையிலே ஒரு ஒட்டுமொத்த உணர்ச்சியினை உண்டாக்கக்கூடிய வகையிலே தலைவர்கள் எல்லாம் வந்து பேசி இருக்கிறார்கள். அதுபோன்று கல்லூரியில் பல்வேறு தலைவர்கள் வந்து பேசுவதற்கு முதல்வர்கள் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். திரு. இராஜாஜி அவர்கள் 1937-ல் முதலமைச்சராக இருந்தபோது மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பேசும்போது அவர் எங்களிடம் கேட்டார், உங்கள் பிரின்சிபால் சம்மதிப்பார்களா என்று. நாங்கள் சொன்னோம் பிரின்சிபால் சம்மதிப்பார், மாணவர்கள் சம்மதிக்கும்போது பிரின்சிபால் சம்மதிக்காமல் என்ன செய்ய முடியும். அவரும் வந்து பேசினார். திரு. சத்தியமூர்த்தி அவர்களும் வந்து பேசினார்கள். மாண்புமிகு அண்ணாதுரை அவர்களும் வந்து பேசியிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ தலைவர்கள் வந்து பேசியிருக்கிறார்கள். கெட்டு போய்விட்டது. ஆகவே பயப்படக்கூடாது. ஒன்று கீழ்த்தரமான முறையில் அவர்களுடைய எண்ணங்கள் தாழ்ந்துவிடக்கூடாது, ஏற்படக்கூடாது என்றால் ஆக்கப்பூர்வமான தேச ரீதியிலே தேச பக்தி, நாட்டு பற்று, மக்கள் பற்று ரீதியில் அந்த விவாதங்களை நடத்துவதற்கு பள்ளி மன்றங்களிலும் கல்லூரி மன்றங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 15] [திரு. என். சங்கரய்யா]

இங்கே ஒன்றை நான் கூறவிரும்புகிறேன். சென்னை தியாகராயர் கல்லூரி. ஏராளமான ஆசிரியர்கள் இங்கே புகார் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய டிரஸ்டு போர்டில் 2 கோஷ்டி. கிரிமினில் வழக்கு இருக்கிறது, சிவில் வழக்கு இருக்கிறது. பல ஆசிரியர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கத்தில் மனு கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், ஏற்கனவே பச்சையப்பன் டிரஸ்டில் இது மாதிரி வந்து அதை அரசாங்கம் தற்காலிகமாக எடுத்திருக்கிறது. இப்போது சென்னை தியாகராயர் கல்லூரி விஷயத்திலும் அந்த ஆசிரியர்கள் பிரச்சனைகளுக்காக அரசாங்கம் தலையிட்டு அந்த கல்லூரி பொறுப்பை ஏற்று அது சீராக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இங்கே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி செய்தால்தான் இன்றைக்கு அந்த கல்லூரியில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மாணவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கமுடியும்.

தொழில் கல்வியிலே வேலைவாய்ப்புக்கு ஏற்ற புதிய பாடப் பிரிவுகள் துவக்கப்படவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இப்போது வந்திருக்கக்கூடிய கட்டத்திலே இந்த மேல்நிலைப் பள்ளிகளில் இந்த தொழில் பாடங்கள் வெற்றி அடைய வேண்டும் என்று சொன்னால் அரசாங்கத்தினுடைய தொழிற்சாலைகள், பணிமனைகள் இவற்றிற்கு இந்த மாணவர்கள் கொண்டு போகப்படவேண்டும். தனி முதலாளிகளிடத்திலும் அரசாங்கம் பேசி இந்த தொழில் வளர்ச்சி என்ற தியரட்டிகல் அதாவது பாடதிட்டம் என்ற அந்த பயிற்சி கருத்து அளவிலே படிக்கக் கூடியதை ஒரு செயல்முறையில் அந்த ஒர்க்ஷாப்புகளிலோ பணி மனைகளிலோ சென்று அவர்கள் பார்த்து அந்த அனுபவங்களை கடைபிடித்தால்தான் முடியும். சோவியத் யூனியனிலே ஆரம்பத்திலேயே அவர்களுடைய தியரட்டிகல் எடுகேஷன் கருத்து வழி படிப்பும் நடைமுறைப்படுத்தி சேர்ந்து வருவதால்தான் அந்த குழந்தைகள் முன்னுக்கு வருவார்கள் என்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். எல்லா சோஷியலிஸ்டு நாடுகளிலும் அதைத்தான் அமுல்படுத்தி வருகிறார்கள். ஏன் என்றால் அந்த தியரி ஆண்டு பிராக்டீஸ் கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டுவிட்டால் பிரயோசனப்படாது. ஆகவே இந்த உயர்நிலைப்பள்ளிகளில் இந்த மேல்நிலைப் பள்ளிகளில் நடைபெறக்கூடிய தொழில் பாடங்களை பொறுத்த வரை இந்த மாதிரியான ஒரு இண்டகிரேஷன் அந்த பாடத்திற்கும் அவர்களுடைய நடைமுறை அறிவுக்கும் அனுபவத்திற்கும் கிடைப்பதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி செய்தால் இந்தியாவிலேயே இந்த மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வி கொடுப்பதிலே நாம் கொடுக்கக்கூடியது சிறப்பாக அமையும்.

கூற விரும்புகிறேன். மலையாள மொழி சொல்லிக் கொடுப்
பதற்காக—அந்த மாவட்டம் லைபலிங்குவல் டிஸ்டிரிக்ட்—இரு
மொழி பேசக்கூடிய மாவட்டம்—அங்கே விளவங்கோடு
தாலுகாவிலே ஈந்திகாளை என்ற இடத்திலே உள்ள தொடக்கப்
பள்ளியிலே 10 வகுப்புகள் இருக்கின்றன; 5 தமிழ் வகுப்புகளும்
5 மலையாள வகுப்புகளும் இருக்கின்றன. ஆனால் அங்கே
மலையாளம் சொல்லிக் கொடுப்பதற்காக ஒரே ஒரு ஆசிரியர்தான்
இருக்கிறார். நடைமுறையில் 25 ஆண்டுகளுக்கு முன்பு
திரு. நம்பூதிரிபாத் முதல்வராக இருந்தபோது தமிழ்நாடு,
ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநில முதல்வர்
களுக்குள்ளே ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதாவது, தென்
மாநிலங்களில் ஒரு மொழி மாநில பிரிவினர் வேறு ஒரு
மாநிலத்திலே மைனாரிட்டியாக இருந்தால், அவர்கள் குறைந்த
பட்ச எண்ணிக்கையில் இருந்தால், மைனாரிட்டி மொழியிலே
பாடங்கள் நடத்தப்படவேண்டுமென்று அந்த நான்கு மாநிலங்
களுக்குள்ளே ஒரு உடன்பாடு 25 ஆண்டுகளுக்கு முன்பே செய்யப்
பட்டது. அது அமல் நடத்தப்படவேண்டும். அப்படி அமல்
நடத்தப்படும்போது மற்ற மாநிலங்களில் உள்ள தமிழ் மக்கள்
இருக்கக்கூடிய இடங்களில் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற
வேண்டுமென்று கேட்டு, நம்முடைய மாநிலத்திலே உள்ள
மொழிவழி சிறுபான்மையோருக்கும் அந்தப் பாதுகாப்பு
கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய
உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: மதிப்பிற்குரிய பேரவையினுடைய
தாற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய
நிதியொதுக்கத்தின் அடிப்படையில் என்னுடைய கல்வி
கூறுகிற நல்ல வாய்ப்பிற்காக நான் நன்றி செலுத்த விரும்பு
கிறேன். கடந்த சில ஆண்டுகளாக கல்வித் துறையைப்பற்றி
கல்வி சார்புடைய பணிகளைப்பற்றி நான் எப்படிப்பட்ட
எண்ணங்களைக் கொண்டு இந்த அவைகளிலே கருத்துக்களை
எடுத்து வைத்து இருக்கிறேனோ அவைகளிலே மாற்றம் காணு
வதற்கான வாய்ப்பு இந்த ஆண்டும் இல்லை என்பதை நான்
எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு அமைச்சர்
அவர்கள் 356 கோடி ரூபாய் அளவுக்கு கல்விக்காக நிதி ஒதுக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, அது
மொத்த வரவு செலவில் 21.5 விழுக்காடு என்பதையும் அவர்கள்
குறிப்பிட்டிருந்தாலும்கூட அதன் மூலமாக கல்வித் துறைக்கு
ஆற்றவேண்டிய கடமைகள் பெருமளவு ஆற்றப்பட்டுவிட்டன
என்று கருதக்கூடிய நிலைமையில் அமைச்சர் அவர்கள் இருக்க
முடியாது என்று நம்புகிறேன். ஆளுங்கட்சியைச் சார்ந்த ஒரு
மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது வரிக்கு வரி மகிழ்ச்சி
அடைகிறேன், களிப்படைகிறேன், இறும்பூதெய்துகிறேன்
குழந்தைகள் உண்பதைப் பார்க்கிற எனக்கு களிப்பு மிக அதிகமாக
ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். அப்படிக் களிப்படை
வதற்கு காரணமான, கருத்துக்கள் அவருக்குத் தோன்றியிருந்
தாலும்கூட என்னைப் பொறுத்தவரையில் அவர் களிப்படைகிற



உரிமையை நான் தடுக்க விரும்பாதவன் என்று சொன்னால்கூட,
நாட்டினுடைய மொத்த நிலைமையை எண்ணிப்பார்க்கிற
பொது கல்வியமைச்சர் ஒருவிதமான வருத்தத்திலேதான் இருப்பார்
என்று நம்புகிறேன். அவர் உள்ளபடியே மகிழ்ச்சியுடன்
இருப்பதாக அவரே சொல்லிவிடுவாரானால் அதற்குப்
பின்னாலே எனக்குப் பேசவேண்டிய பிரச்சினையே இந்த நாட்டில்
இல்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஆண்டிற்
காண்டு அதிகமாகிறது என்பது மாண்புமிகு முதலமைச்சர்
எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்ததற்கு பிறகு
ஏற்பட்டுவிட்ட ஒரு அதிசயமான செயல், நிகழ்ச்சி என்பதைப்
போல மாண்புமிகு சேலம் ஆறுமுகம் அவர்கள்கூட இந்த மூன்று
ஆண்டு காலமாகத்தான் நாட்டிலே கல்விக்காக நிதி அதிகமாக
ஒதுக்கப்படுகிறது என்று பெருமைப்பட எடுத்துச்சொன்னார்கள்.
ஆனால் நான் பள்ளியில் படித்த காலம் முதலாக கல்விக்கு மட்டும்
தொடர்ந்து 50 ஆண்டு காலமாக நீதிக்கட்சி ஆட்சியிலே இருந்த
திலிருந்து ஆண்டிற்காண்டு நிதி அதிகமாகத்தான் ஒதுக்கப்பட்டு
வருகிறது. இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு
முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே
அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் எந்த ஆண்டு இந்தப்
பொறுப்பை ஏற்றுக்கொண்டாரோ அன்றிலிருந்து இன்றைய
வரையில் ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகிறது. அவருக்கு
முன்னாலே கல்வி அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன்
அவர்கள் என்றைக்கு அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டாரோ,
அன்று முதல் அந்த பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி கலைக்கப்பட்டபோது என்றைக்கு அதை விட்டுவிட்டு
வெளியே வந்தாரோ அன்று வரையில் அவர் காலத்திலும் அது
ஏறிக்கொண்டு தான் வந்தது. அதற்கு முன்னாலே காங்கிரஸ்
ஆட்சிக்காலத்தில் அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தத்
துறையினுடைய அமைச்சராக இருந்தபோது தமிழகத்தினுடைய
மொத்த வரவு செலவு 10 கோடி என்று சொல்லப்பட்ட கால
கட்டத்திலேகூட 16 கோடி, 17 கோடி, 21 கோடி என்று
எப்போதும் உயர்ந்து கொண்டுதான் வந்தது. ஒரு நிலைமையை
நாம் எண்ணிப்பார்த்தால் புரிந்துகொள்ளலாம். மக்கள் தொகை
பெருகுகிறது. மொத்த மாநிலத்தினுடைய வரவு செலவுத்
தொகை பெருகுகிறது. நிதியினுடைய மதிப்பு குறைந்து கொண்டே
வருகிறது. மக்களுடைய தேவை உயர்ந்துகொண்டே வருகிறது.
இதை ஈடுசெய்வதற்கான ஒரு பாலமாகத்தான் அந்த நிதி ஒதுக்கீடு
இருக்க முடியும் என்ற காரணத்தாலே இந்த நிலைமை ஏற்படாமல்
இருக்கிறது. என்னுடைய மகன் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு
45 பவுண்டு இருந்தான். அதற்கு அடுத்த ஆண்டு 4? பவுண்டு
இருந்தான். அதற்கு அடுத்த ஆண்டு 52 பவுண்டு இருந்தான்.
என்ன மாபெரும் வளர்ச்சி பார்த்தாயா என்றால் யாராவது
மருத்துவரைக் கேட்டால்தான் அவர் சொல்வார். 67 பவுண்டு
இருக்கவேண்டிய நேரத்தில் இப்போது 52 பவுண்டுதான் இருக்
கிறான். இன்னும் வளர்ச்சி போதுமானதாக இல்லை என்று
தான் அந்த மருத்துவர் சொல்வார். அதேபோல நாம் இன்னும்

[திரு. என். சங்கரய்யா] [1983 மார்ச் 15

மற்றொரு பிரச்சனை, விளையாட்டுத் திடல்கள், நீச்சல்
குளங்கள். நோஞ்சான்களாக இருக்கக்கூடிய ஏராளமான
பிள்ளைகளை தமிழகத்தில் நாம் வைத்து என்ன செய்வது.
இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள் மாநில, மாவட்ட ரீதியில் நீச்சல்
குளங்களில் பயிற்சி என்று. ஆனால் ஒலிம்பிக், ஏசியாட் அல்லது
ஒரு நாடு ரீதியில் நடக்கக்கூடிய போட்டிகளில் இந்த வாலிபர்கள்,
யுவதிகள், வீராங்கனைகள் ஏன் கலந்துகொள்ளமுடியவில்லை
என்றால் ஆரம்பத்திலே பயிற்சி இருக்கவேண்டும். நான் சொல்ல
விரும்புவது அது ஒரு வெகு ஜன இயக்கமாக நடைபெற
வேண்டும். ஏதோ 10 பிள்ளைகளை கண்டுபிடித்து
அவர்களுக்கு பயிற்சி அளிப்பது அல்ல லட்சக்கணக்கான
குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கவேண்டும். அப்படி என்றால்
அதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டால் இன்று பல
பள்ளிகளில் பார்த்தால் விளையாட்டுத் திடல் இருக்காது. பல
பள்ளிகளில் பார்த்தால் அந்த விளையாட்டுத் திடலில் குறுக்கே,
குறுக்கே கட்டிடங்களை கட்டிவிடுகிறார்கள். எங்கே போய்
விளையாடுவது? அரசாங்கத்தை நான் இந்த சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்வது இனிமேலாவது இப்போது பாக்கியாக இருக்கக்
கூடிய காலி இடங்களை நகர்ப்புறங்களில் கையகப்படுத்திக்
கொள்ளுங்கள். இல்லாமல் போனால் இந்தமாதிரியான
விளையாட்டு திடல்களை வைத்துக்கொள்ள நாம் விரும்பினால்கூட
கட்டிடங்களை இடித்து அதன் பிறகு விளையாட்டு திடல்களை
உருவாக்க வேண்டிவரும். ஆகவே விளையாட்டு பயிற்சி என்பது
நடைபெறமுடியாது.

இறுதியாக ஒருசில நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.
பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி இந்த வரலாற்று ஆராய்ச்சிக்
கழகம் இந்தியாவின் விவர சுவடி பற்றி எல்லாம் பல பிரிவுகள்
இருக்கின்றன. அதை இங்கே வைத்திருக்கிறார்கள். நான்
வாஸ்தவத்தில் பெருமைப்படுகிறேன். கல்வி இலாக்கா
பொறுப்பிலே தமிழ் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, இசை வளர்ச்சி,
உலகத் தமிழ்ச் சங்கம் போன்ற பல்வேறு பிரிவுகள் இருப்பது
பெரிதும் மகிழ்ச்சிக்குரியது. இவைகளைப்பற்றி எல்லாம் நான்
சொல்ல விரும்புவது என்ன என்றால் இந்த மானியம்
விவாதத்திற்கு வரும்போது கல்வி அமைச்சர் அவர்களால்
கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலே கடைசியிலே சில பக்கங்களில்
வருடா வருடம் இதைப் படிக்கும் போதுதான் தெரிகிறதே தவிர
இடைக்காலத்தில் அது என்ன செய்கிறது என்று யாருக்கும்
தெரியாது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கே
தெரியாது. என்ன பிரயோசனம்? எப்படி இதை நாங்கள்
மதிப்பிடுவது? இந்த ஒவ்வொரு விவரங்களைப் பற்றியும்
இடைக்கால அறிக்கைகளை அந்தத் துறைகளில் தயாரித்து சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு அது விநியோகிக்கப்பட்டால் தான்
இந்த துறையில் செய்து வரும் ஒவ்வொரு காரியங்களையும் நாம்
புரிந்துகொள்வதற்கும் அதைப்பற்றி யோசனை கூறுவதற்கும்
நம்மால் முடியும். அப்போதுதான் தஞ்சையில்



1983 மார்ச் 15] [திரு. என். சங்கரய்யா]

(இரவு 6-40)

அமைக்கப்பட்டிருக்கக்கூடிய பல்கலைக் கழகம் சிறப்பான
பணிகளைச் செய்யமுடியும். அப்போதுதான் இசைக் கல்லூரிகள்
இவைகள் எல்லாம் சிறப்பான பணிகளைச் செய்யமுடியும்.
இன்றைக்குத்தான் தெரிகிறது, எக்மோரிலே உள்ள ஆவணக்
காப்பகத்திலே ஒரு நூலகம் வைத்திருக்கிறார்கள் என்று, இந்தக்
குறிப்பைப்பார்த்தால்தான் தெரிகிறது. யார் அங்கே போவார்கள்?
அது ஒரு பெரிய கட்டடம், மூடப்பட்ட கட்டடம், ஆனால்
அங்கே நூலகம் இருக்கிறது, அதை மக்கள் பயன்படுத்தலாம்.
எப்படித் தெரியும்? எம்.எல்.ஏ. லைப்ரரியிலே அந்த நூல்கள்
இருக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன். இங்கே
சொல்லப்பட்டிருக்கின்ற பாட நூல் நிறுவன நூல்கள், தமிழ்
வளர்ச்சிக் கழகத்தினுடைய நூல்கள், சுவடிகளை வெளியிட்ட
நூல்கள் முதலிலே எம்.எல்.ஏ. லைப்ரரியிலே இருக்கிறதா? நான்
கேட்டேன் அன்றைக்கு. மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து
பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். நீங்கள் அவைகளை
வைத்து இருக்கிறீர்களா என்றால், இவர்கள் எழுதியதற்கு என்ன
பதில் கிடைக்கிறது என்றால், நான் கேள்விப்படுகிறேன்,
எம்.எல்.ஏ. லைப்ரரிக்கு இந்த ஆராய்ச்சிப் புத்தகங்கள் எதற்கு
என்று மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து கேட்டிருப்பதாகக்
கேள்விப்படுகிறேன். எம்.எல்.ஏ. லைப்ரரிக்கு ஆராய்ச்சிப்
புத்தகங்கள் எதற்கு என்று கேட்டால் இதைவிட ஒரு அபத்தமான
கேள்வி எப்படி இருக்கமுடியும்? அண்ணாமலைப் பல்கலைக்
கழகம் வெளியிடுகிறது, உலக தமிழ்ச் சங்கம் வெளியிடுகிறது,
இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற 14 சுவடிகள் வெளியிடப்
பட்டிருக்கின்றன. அந்தச் சுவடிகளின் வெளியீடுகள் இங்கே
இருக்கிறதா? இங்கேயே இல்லையென்றால் பள்ளிகளிலே
கல்லூரிகளிலே உள்ள நூலகங்களிலே இடம் அவைகளுக்கு எப்படி
இருக்கும்? ஆகவே அந்தச் சுவடிகளை வெளியிட்டு
உள்ளுக்குள்ளேயே வைத்திருப்பதா? பப்ளிசிடி இயக்கம், விளம்பர
இயக்கம், தமிழ்த்துறை, தமிழ் ஆராய்ச்சி, தமிழ் பல்கலைக்
கழகம், தமிழ்ச் சங்கம் இவைகள் வெளியிடக்கூடிய நூல்கள்
மக்களுக்கு பல கிளைகளிலே கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளைச்
செய்தால் தான் பலன் பெறமுடியும் என்பதைக்கூறி பேசுவதற்கு
நேரம் இல்லை. வாஸ்தவத்திலே சொல்லப் போனால் தமிழ்
கலை, தமிழ்மொழி வளர்ச்சிக்கு உள்ள விஷயங்களைப்பற்றி
வேறு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கக்கூடிய முறையிலே, ரயில்வே
பட்ஜெட் என்று கொடுக்கப்படுவதுபோன்று கல்வி என்று இது
வந்தாலும் இதரத் துறைகள் சம்பந்தமாக இன்னொரு
கொள்கை அறிக்கை விரிவாக வழங்கப்பட்டால்தான் அதைப்
பின்பற்றி மேலும் சட்டமன்றத்திலே விவாதித்துப் பயன்
உள்ளதாக நடத்தமுடியும் என்று கூறிக்கொண்டு கடைசியாக
கன்னியாகுமரி மாவட்டத்திலே மைனாரிட்டி பாதுகாப்பு பற்றி

[திரு. க. அன்பழகன்] [1983 மார்ச் 15

ஆழ்ந்து எண்ணிப்பார்த்தால் தமிழகத்திலே உள்ள மிகப் பெரிய பிரச்சினை நாம் எவ்வளவு தொகை ஒதுக்குகிறோம, எவ்வளவு பரவலாக செலவிடுகிறோம் என்பதல்ல. இது பொதுவான வரவு செலவு கணக்கினுடைய அடிப்படை அமைப்பை நமக்கு கூறுவதற்கு பயன்படுமே தவிர இன்றையதினம் இருக்கிற பிரச்சினை மக்களுடைய அவலமான நிலைக்குப்போதுமானதாகாது. வறட்சி குறித்து இங்கே கூற வேண்டிய அவசியமும் இல்லை; தேவையு மில்லை. மக்களுடைய மனதிலே ஒரு அவலம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கல்வித் துறையிலே இருப்பவர்கள் தான் ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்தாக வேண்டும். ஒரு அவலம் என்று கூறுகிற போது வாழ்க்கையிலே ஏற்படுகிற மெத்த அவநம்பிக்கை யினுடைய விளைவு. அப்படிப்பட்ட மனப்பான்மையே கூடாது என்று கருதி பேசிவந்தவன் நான். அந்த வாழ்க்கையையே வெறுக்கிற, வாழ்க்கையையே அவநம்பிக்கைக்கு ஆளாகிற அந்த நிலையாமை மனப்பான்மை இடம் பெறுகிறது. அது ஒரு வேளை தத்துவச் சிந்தனை என்று கூட கருதிவிடக்கூடும். அந்த நோக்கத்தில் நான் சொல்லவில்லை. வாழ விரும்புகிற பெரும்பான்மையான மக்கள் வாழ முடியுமா என்று ஏக்கம் அடைகிறார்கள் என்பதையும், பிள்ளைகள் கல்வி பெற வேண்டுமென்று எண்ணுகிற பெற்றோர்கள், அவர்கள் கற்றதற்கு பின்னால் வாழ்வதற்கு அது வாய்ப்பாக இருக்குமா? ஒரு வருமானம் உள்ள தொழிலை நடத்த முடியுமா என்று வேதனைபடுகிறார்கள் என்பதையும், எம்.ஏ., பி.ஏ., படித்தபின்னும் கூட நிம்மதியான வாழ்விற்கு வழியிருக்காது என்று ஐயுறுகிற அளவிற்கு மக்கள் சஞ்சலப்படுவதை கல்வித்துறையினை நடத்துகிற நிலையிலே உள்ள அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் ஆழ்ந்து எண்ணிப் பார்த்தாக வேண்டு . சமுதாயத்திலே சிறுபான்மை சமுதாயத்தாரோ, பெரும்பான்மை சமுதாயத்தாரோ, முற்போக்கு வகுப்பாரோ, பிற்பட்ட வகுப்பாரோ, தாழ்த்தப்பட்ட வகுப்பாரோ முழு அளவிற்கு அவர்கள் பெறவேண்டிய உரிமைகளை பெறவில்லை என்று வாதாடுவது ஒரு பக்கம் இருந்தாலும்கூட, பெற்றிருக்கிற உரிமைகளைக் கொண்டு வாழ்வதற்கான முயற்சியிலே ஈடுபடுகிற போது எவ்வளவு போட்டிகளுக்கு, நெருக்கடிகளுக்கு ஆளாகிற அளவிற்கு, இனத்திற்கு இனம், இன்னும் சொல்லப்போனால் வகுப்பிற்கு வகுப்பு, முற்போக்கு, பிற்போக்கு நிலைமையில் உள்ள மக்களுக்கு இடையே அதிருப்தி உணர்வுகள், கசப்பு உணர்வுகள் வளர்கின்றன என்பதை ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும். கல்வி என்பது ஒரு காலத்திலே மனிதனுடைய ஒழுக்கத்தை, பண்பாட்டை வளர்ப்பதற்கு ஒரு கருவியாக கருதப்பட்டு வந்தது என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. இன்றையதினம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள் வார்கள் என்று கருதுகிறேன். இப்போது கல்வி ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்கோ, பண்பாட்டை உயர்த்துவதற்கோ அல்லது நடுநிலை உணர்வை வளர்ப்பதற்கோ, தன்னம்பிக்கை பிறக்கல ...ய்வதற்கோ, விடாமுயற்சி மனப்பான்மை வளர்வதற்கேச் ...மாக இருக்கமுடியவில்லை என்பதை கல்வித்துறையிலோ ...வரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.



(திரு. க. அன்பழகன்) [1983 மார்ச் 15

(இரவு 6.50)

கல்வி பரவலாக ஆகியிருக்கிறது என்பதிலே எனக்கு ஐயம் இல்லை. ஆனால் கல்வி மக்களை பக்குவப்படுத்தத் தவறி இருக்கிறது என்பது குறித்து எனக்கு அப்படிப்பட்ட கருத்து உண்டு. கல்வியே மக்களைப் பண்படுத்த முடியுமா என்ற கேள்வி எனக்கு இன்றைக்கு ஏற்படுகிறது. கல்வியைப் பற்றிய கண்ணோட்டத்தில் வள்ளுவர் காலத்திலே கல்வி எப்படி முழு அளவுக்கு மனிதனைப் பண்படுத்துகிற ஒன்றாகக் கருதப்பட்டதோ அப்படிக் கருதப்பட முடியாத அளவுக்கு அண்மைக்கால கல்வி ஆளாகி இருக்கிறது என்பது மட்டுமல்ல, எதிர்காலத்திலே கல்வி என்பது மனுதனுடைய பண்பாடோடு, நாகரீகத்தோடு, அவனுடைய சிந்தனையோடு தொடர்புடையதாய் இருக்குமா என்று ஆழ்ந்து எண்ணிப் பார்க்கும்போது, பெரும்அளவுக்கு மனிதனை ஒரு தொழிலிலே ஈடுபடுத்துகிற ஒரு கருவியாகத் தான் கல்வி ஆகிவிடும் என்று நான் கருதுகிறேன், அந்தக் கருத்து எனக்கு ஏற்படுகிறபொழுது நான் தெரிவிக்க விரும்பு கிறேன், கல்வித் துறையிலே மிகச்சிறந்த பொறுப்பிலே உள்ளவர்கள்கூட அதை ஒரு தொழிலாகத்தான் எண்ணிக் கொண்டிருக்கிற ஒரு மனப்பான்மைக்கு ஆளாகியிருக்கிறார்கள். கல்வித்துறையிலே, அதனுடைய இயக்குநரகத்திலே பணியாற்றி னாலும் சரி, கல்லூரியிலே பணியாற்றினாலும் சரி, ஒரு உயர் நிலைப் பள்ளியிலே பணியாற்றினாலும் சரி, அவர்களுடைய மனதிலே கூட கல்வியைப் பற்றிய அந்தப் பழைய கண்ணோட்டம் மாறி ஒரு தொழிலாக நினைக்கின்ற நிலை அவர்களுக்கு ஏற்பட்டு, பயில்கின்ற மாணவருக்கும், இப்படிப் படித்தால் என்ன தொழில் கிடைக்கும்? என்ன வேலை கிடைக்கும் என்ற கண்ணோட்டம் ஏற்பட்டு, இப்படிப் படித்து ஒரு தொழிலிலே ஈடுபட்டால் எவ்வளவு ஊதியம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம்—படிக்கிறபொழுதே எப்படி எப்படி சம்பாதிக்க லாம் என்ற எண்ணம்—ஏற்பட்டு ஆசிரியர்களிலே சில பேருக்காவது தேர்வு நடத்துகிறபொழுதே அதிலே ஏதாவது வருமானம் கிடைக்குமா என்ற எண்ணம் ஏற்படுகிற அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டு, ஆசிரியர்களைப் பற்றி மாணவர்களும் அவர்களிடத்திலே இருக்கிற குறைபாடுகளை, விமர்சிக்கிற நிலைமை வளர்ந்து கொண்டே வந்து மாணவர்களுக்கு ஆசிரியர் களுக்கும் நம்பிக்கையில்லாத நிலைமை ஏற்பட்டு, ஆசிரியர் களுக்கும் மாணவர்ளிடத்தில் பற்றில்லாத ஒரு நிலைமை ஏற் பட்டு, நான் உள்ளபடியே சொல்கிறேன், சமுதாயத்திலே ஒரு கலகலப்பான, மகிழ்ச்சிகரமான, ஒளி வீசக்கூடிய எதிர்காலத்தைப் பற்றி, நாம் எதிர்பார்க்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் ஒருவேளை, இந்தச் சமுதாயமே ஏதோ ஒரு தவறான பாதையிலே இழுத்துச் செல்லப்படக்கூடிய நிலைமைக்கு ஆளாகிவிடுகிறதோ என்று கவலைப்பட வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறோம் எனவே, அந்த வகையிலே இன்றையதினம் கல்வியைப் பற்றி எண்ணிப்பார்க்கிற பொழுது, ரூ.356 கோடியோ அல்லது எவ்வளவு செலவிட்டாலும், எவ்வளவு ஆசிரியர்களை நியமித்தாலும் அவர்

களிடத்தில் ஒரு குறிக்கோள் உணர்வு ஏற்படுவதற்கு, ஒரு விதமான கூட்டு முயற்சி உணர்வு ஏற்படுவதற்கு, வருங்காலச் சமுதாயத்திற்குக் கல்வித்துறை தான் மிகப்பெரிய ஒரு பணி ஆற்றுகிறது என்ற உணர்வை ஆசிரியர்களிடத்திலேயும், கல்வித் துறையிலே உள்ளவர்களிடத்திலேயும் ஏற்படுத்துவதற்கு கல்வியில் ஆர்வமூட்டும் ஒரு எழுச்சி உணர்வை ஏற்படுத்த ஒரு பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திசை தெரியாமல் கப்பல் நடமாடுவதைப்போல, குறிக்கோள் இல்லாமல் மனிதன் பல நேரத்திலே இலட்சிய உணர்வு இல்லாத காரணத்தாலே, தன்னைத்தானே கெடுத்துக் கொள்வதைப் போல, கல்வித் துறைக்கே ஒரு சிறந்த நோக்கமும் குறிக்கோளும் உருவாகத்தக்க அளவுக்கு ஒரு வழிமுறையைக் கண்டால்தான் ஓரளவுக்காவது தகுந்த பயன் விளையும் இங்கே மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் பேசுகின்றபொழுதும் மற்றவர்கள் பேசுகின்றபொழுதும் ராகிங்கைப் பற்றிகுறிப்பிட்டார்கள். அது நிறுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதே போல், இன்னும் சில மாணவர்களிடையே உள்ள வேறு குறைகளுக்கு சில வாய்ப்பு இருக்கக்கூடாது என்றார்கள். காப்பி அடிக்க இடம் அளிக்கக் கூடாது என்றார்கள். அந்தக் கருத்துக்களே கூட மாணவர்களே மனதார ஒப்புக் கொள்ளக் கூடிய கருத்தாக ஆக வேண்டுமென்றால்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாணவர்கள் காப்பி அடித்தால் தவறில்லையென்று எண்ணிக் கொண்டு அதற்குப் பின்னாலே காப்பி அடிக்கிற பொழுது கண்டு பிடித்தால் அதற்காக அவர்கள் வருத்தப்படுவதும், எதிர்ப்பு தெரிவிப்பதுமாகிய உணர்வுகளுக்கு இடம் தராமல் இருக்க வேண்டுமானால், அவர்களிடத்திலே கல்வியைப் பற்றி, பயில்வதைப்பற்றி, பயிற்சியைப்பற்றி, ஒரு குறிக்கோள் உணர்வு ஏற்படுவதற்கு வழி காண வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அது ஒரு அரசாங்க நிர்வாக இயந்திரத்தினாலே மட்டும் முடியாது என்று கருதினாலும்கூட ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒவ்வொரு உயிருள்ள அமைப்பு என்ற நோக்கத்துடன் கருதியும் ஒவ்வொரு கல்லூரியும்கூட ஒரு சமுதாயக் கூட்டு மையம் என்ற எண்ணத்திலே நாம் அந்த உணர்வை வளர்த்தால்தான் அவைகளெல்லாம் சமுதாயத்தை உருவாக்கும் உயிருள்ள அமைப்புகளாக உயரும் என்று நான் கருதுகிறேன்.

பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசியதிலே எனக்கு மாறுபாடு கிடையாது. திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப் போல மாணவர்களிடையே பல்வேறு சிந்தனைகளும் பரந்த கண்ணோட்டத்திலே இடம் பெறுமானால் தான் அந்த மாணவர்கள் அதற்குப் பின்னாலே ஏதாவது சில வகையில் சில உயர்ந்த குறிக்கோளை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள்.



இந்தக் குறிக்கோள் என்பது, ஒருவர் சொல்வதால் மட்டும் குறிக்கோள் என்று ஆகிவிடாது. அவர்களே சிந்தித்துப் பார்த்து ஏற்க வேண்டுமானால் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வர்கள், பல்வேறு தத்துவ சிந்தனையுடைய பெருமக்கள் மாணவர் களுக்கிடையே பேசுவது பயன்தரும் விரிந்த நோக்கத்திற் கிடையே மாணவர்கள் உலவி வருவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும்; அவர்கள் சுவாசிக்கின்ற காற்று சுதந்திரமான காற்றாக இருக்க வேண்டும். அவர்கள் சிந்திப்பதற்கு ஆர்வம் உண்டாக்குகின்ற வகையில் பலவித கருத்துகளிலும் ஆர்வம் உண்டு பண்ண வேண்டும். அவர்கள் எண்ண ஓட்டத்தில் எத்தனையோ புதுமைகளைச் சிந்தித்தால்தான் அந்த மாணவர்கள் மாணவர்களாக ஆவார்களே தவிர, இல்லையென்றால் ஏதோ ஒரு வகையில், எப்படியோ, கோடிக்கணக்கான மக்களிடையே கட்டாய சூழ்நிலையில், இவர்களும் உலவி வருகின்ற அளவிற்குத் தான் திருவிழாக் கூட்டத்தைப் போலத்தான் அவர்கள் ஆகி விடுகின்ற நிலைமை எற்படும். எனவே, இன்றைய நிலையை மாற்றுவதைப் பற்றி இந்த அரசும், இதற்குரிய துறையிலே உள்ளவர்களும் சிந்திக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்

மற்றொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கல்வித் துறையைப் பற்றி நான் எற்கனவே வலியுறுத்திச் சொன்ன கருத்துதான். இது இந்தத் துறையில் எதைச் செய்தால் அது நிறைவு அளிக்கும் என்பதை இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் ஐந்தாண்டுத்திட்டம், பத்தாண்டுத் திட்டம்என்று வகுத்துக்காண வேண்டும் ஏதோ செய்கிறோம் என்ற முறையில் இருக்கக்கூடாது. துவக்கப்பள்ளி நூல் நிலையங்களுக்காக இரண்டு இலட்சம் ரூபாய் உயர்நிலைப் பள்ளி நூல் நிலையங்களுக்காக இந்த ஆண்டு ஐந்து இலட்சம் ரூபாய், கல்லூரிகளுக்கு ஏழு இலட்சம் ரூபாய், கட்டிடங்களுக்காக 40 இலட்சம் ரூபாய் என்று இப்படி ஒதுக்குவதால் மட்டும் நிறைவைக் கண்டுவிட முடியாது. நிறைவு கண்டுவிட முடியாது என்பது மட்டுமல்லாமல், குறையையும் போக்க முடியாது. குறையைப் போக்க முடியாது என்பதை ஏதோ வெறும் விவாதத்திற்கான முறையில் சொல்லவில்லை. கல்வி என்பது, படிக்கின்ற பிள்ளைகளுக்கு ஒரு தகுந்த சூழலை, அட்மாஸ்ஃபியர்' என்று சொல்லுவார்களே, அதை ஏற்படுத்த வேண்டும். படிப்பவர்களுக்கு கல்வியில் நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். கிண்டர் கார்டன் போன்ற பள்ளிகளில், நர்சரி போன்ற பள்ளிகளில் இப்படிப்பட்ட சற்று வசதியான சூழ்நிலையில் நடக்கின்ற பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகளைப் பார்க்கின்ற பொழுது, அந்தப் பள்ளிக்கூடங்களில் சொல்லித் தருகின்ற பாடத்தைவிட, ஆசிரியர்கள் எந்தப் பாடத்தைச் சொல்லித் தரு கிறார்கள்என்பதைவிட, எந்தப் புத்தகத்தைப் பயிற்றுவிக்கிறார்கள் என்பதைவிட, அவர்கள் பழகுகின்ற சூழ்நிலை இருக்கிறதே, அது அந்தப் பிள்ளைகள் கல்வியில் ஈடுபடுவதற்கான உற்சாகத்தை உண்டாக்குகிறது. 3 வயது, 4 வயது உடைய பிள்ளைகள்.

கிராமத்தில் உயர்நிலைப்பள்ளிக்காக ரூ. 22,500 கொடுத்தும், 10 ஏக்கர் நிலம் கொடுத்தும், உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த ஆணையிடாமல் இருப்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏறத்தாழ ஒரு 20 இடங்களில் கட்டிடம் கட்டாமல் உள்ளன. பல இடங்களில் பணம் கட்ட முடியாத காரணத்தால் கட்டிடம் கட்ட முடியவில்லை. அப்படி எவ்வளவு கட்டிடம் கட்ட வேண்டியிருக்கிறது என்பதை தமிழகத்தில் கணக்கிட்டுப் பார்த் தால்,—குறைந்த அளவு கட்ட ங்களோடு பள்ளிக்கூடங்களை, ஒழுங்காக நடத்தி, பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்திலே அமர்ந்திருக் கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தித் தர ஒவ்வொரு துவக்கப் பள்ளியும் கட்டப்பட வேண்டும். நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டியதற்கு ஏறத்தாழ 150 கோடி ரூபாய் செலவாகும். அதற்கு ஏதாவது ஒரு வழியிலே துவக்கம் நிகழ வேண்டும். அல்லது துவக்கம் நிகழாவிட்டால், என்றைக்குமே கல்வித்துறை என்பது சீர்செய்யப்பட்ட ஒரு துறையாக எதிர்காலத்திலே கூட ஆகாது. இன்றைக்கு ரூ 150 கோடி என்பது இன்னும் ஒரு 5 ஆண்டு கழித்துப் பார்த்தால், அது ரூ.250 கோடியாகும். அப்புறம் ஒரு 5 ஆண்டுகழித்துப் பார்த்தால், அது ரூ.350 கோடியாகும். அதற் கிடையில் தேவைகள் வளர்ந்து கொண்டே வரும். அந்தத் தேவைகளை ஈடுசெய்ய முடியாது. எனவே கல்வி என்பது ஆசிரியர்கள், மட்டுமே அந்தக் கல்விக்காக ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியாது. ஆசிரியர்-மாணவர்கள் விகிதாச்சாரத்தை யொட்டி மட்டும் நின்றுவிடுவதல்ல. அந்தக் கல்விக்காக ஒரு சூழ் நிலையை உருவாக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம் என்ற பெயரால் ஒன்றிரண்டு கிராமங்களை எடுத்துக் கொண்டு அதை மிகப் பெரிய வளர்ச்சியுடைய கிராமங்களாக ஆக்குவதற்கு அதிக நிதிகூட, அந்த கிராமங்களுக்கு ஒதுக் கினார்கள். அது பெருமளவு வெற்றிபெறவில்லை. ஆனால் நம்மைப் பொறுத்த வரையில், ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஆண்டுக்கு குறைந்தது 50 கிராமங்களாவது—துவக்கப் பள்ளி உள்ள கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த முறையில் வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கினால் தவிர, மாணவர்களுக்கு கல்வியிலே ஏற்படுத்த வேண்டிய ஆர்வத்தை வளர்த்திட முடியாது என்ற ஐயத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்கடுத்து, இன்றைய தினம் மேல்நிலைப் பள்ளிக் கல்வி என்பது, வேறு மாநிலங்களை ஒப்பு நோக்க, தமிழகத்தில் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று பாராட்டப்பட்டதை நானும் பத்திரிகையிலே பார்த்து அறிந்திருக்கிறேன். வேறு மாநிலங்களை நோக்க நன்றாக இருக்கிறது—என்று சொன்ன காரணத்தால், நம்முடைய மேல்நிலைக் கல்வி நன்றாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராகயில்லை. வேறு மாநிலங்கள் அவ்வளவு கெட்டுப்போய் இருக்கிற காரணத்தால், தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அந்த மேல் நிலைக்கல்வி அதற்கான அடிப்படையில் தொட்டுக் கொண்டு இருக்கிறது என்ற



பொருளே தவிர 'வொகேஷனல் எஜுகேஷன்' என்று சொல்லக் கூடிய தொழிற் கல்வியுடைய தரம், தொழிற்கல்வியில் ஈடு படுவதற்குத் தேவையான ஊக்கம் காட்டுகிற சூழ்நிலை, மேல் நிலைக் கல்வியில் உருவாகவில்லை. இன்னும் சொல்லப்போனால் அந்தத் தொழிற்கல்வி பயிற்சி அளிப்பவர்களுக்கு மாதம் ரூ. 150 என்கிற சம்பளத்தை, ஒரு பார்ட் டைம் டீச்சர் என்ற வகையில் அவர்கள் பணியாற்றக்கூடிய நிலைமை இருக்குமேயானால், பள்ளி களில் அவர்களுக்கும், மாணவர்களுக்கும், எந்த அளவு தொடர்பு இருக்கும் என்பதும், பரிசோதனைக் கூடங்கள் தொழிற்கூடங்கள் எந்த அளவுக்கு உருவாக்கியிருக்கிறது என்பதும், எத்தனை மேல் நிலைப் பள்ளிகளில் பரிசோதனைக் கூடங்கள் முழு அளவிற்கு உருவாகியிருக்கிறது என்பதும், எத்தனை மேல்நிலைப் பள்ளி களிலே பயில்கிற, இந்தத் தொழிற் பயிற்சியில் ஈடுபட்டு அதில் ஆர்வம் காட்டுகிற மாணவர்கள், மொத்த மாணவர்களில் எத்தனை விகிதாச்சாரம் இருக்கிறார்கள் என்பதும், அவர்கள் அப்படியே தேர்ச்சி பெற்றாலும் அதற்குப் பின்னாலே ஒரு தொழிலுக்குப் போக வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் எண்ணிப் பார்த்தால் இவை ஒரு பெரும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன. இவற்றையெல்லாம் முழுக்க விவரமாகப் பேச இப்பொழுது நேரம் இல்லையென்று கருதுகிறேன். ஆனால் ஏற்கனவே நான் எடுத்துச் சொன்ன அதே கருத்தைத்தான் இப்போதும் சொல்கிறேன்.

மேல்நிலைப் பள்ளி என்பது படிப்பதற்கு ஒரு இடம் என்று எண்ணம் இருக்கிறதே தவிர இங்கே படிப்பதன் காரணமாக நாம் ஒரு தொழிலுக்குப் போகப் போகிறோம் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

கல்லூரியிலே இருக்கிற புகுமுக வகுப்பு கல்லூரியிலே இருப்பதைவிட அதற்கு சமமாக ஒரு பள்ளியிலே இடம் பெற்றுவிட வேண்டும் என்று கருதுவதிலே, அந்தக் கருத்திலே கூட, எனக்கு அவ்வளவு வேறுபாடு இல்லை. ஆனால் இந்தப் படிப்பு ஒருவனுடைய வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படையை அமைத்துத் தருகிறதா என்று பார்த்தால் அம்மாதிரி இது அமைத்துத் தரவில்லை. தேவையான தொழில் கூடங்கள் இல்லை. அதற்குத் தேவையான பரிசோதனைக் கூடங்கள், ஆய்வுச் சாலைகள் இல்லை. அதற்குத் தேவையான சூழலே இல்லை. மேல்நிலைப் பள்ளிகளிலே ஒரு வகுப்பறை கட்டியிருக்கிறோம். ஒரு பரிசோதனைக் கூடம் கட்டியிருக்

5 வயது, 6 வயது உடைய பிள்ளைகள் படிக்கின்ற அந்தப்
பள்ளிகளிலே இருக்கின்ற சூழல், காட்டப்படும் ஆர்வம்
அவர்களோடு பழகுகின்ற முறை, அதில் ஏற்படும் ஊக்கம்
கல்வியைப் பற்றிச் சுசப்புணர்வு இல்லாமல் கற்பதில் ஈடுபடுவதற்
கான தூண்டுதலாக அவைகள் அமைகின்றன. இந்த நிலைமை
கிராமத்துக் பள்ளிக்கூடங்களிலே வர முடியுமா? அல்லது
மாநகராட்சிப் பள்ளகளிலே வர முடியுமா? அல்லது நகரசபைப்
பள்ளிக்கூடங்களிலே வரமுடியுமா என்றால் வர முடியாது.

ஏனென்றால் அங்கேயெல்லாம் பள்ளிக்கூட அமைப்பே
சரியாக இல்லை. கட்டிடம் போன்றவைகள் சரியாக இல்லை.
வசதியாக இல்லை. மினிமம் நீட்ஸ் ப்ரோகிராம் என்று வேறு சில
துறைகளைப் பற்றி எண்ணிப் பார்த்து ஒவ்வொரு கிராமத்
திற்கும் குடிநீர்த் திட்டம் இன்றியமையாதது என்று சொல்
கிறோம்; முதலமைச்சர் கொண்டு வந்த ஒரு திட்டம், ஒவ்வொரு
கிராமத்திலும் ஒரு கழிப்பிடமாவது கட்டப்பட வேண்டும்
என்று சொல்வதைப்போல, அதற்கு எவ்வளவு தொகை செல
வாகிறது என்று பார்த்தால் 22½ கோடி ரூபாய் செலவாகிறது
என்பதைக்கருத்தில்கொண்டு இன்னும் ஒரு 22½ கோடி ரூபாயை
யும் சேர்த்து, ஒவ்வொரு கிராமத்திலேயும் உள்ள ஒவ்வொரு
ஆரம்பப் பள்ளிக்கூடத்திலேயும்குறைந்த அளவு இந்த அளவிற்குக்
கட்டிடமாவது இருக்க வேண்டும். இதைச்சுற்றி ஒருசிறு தோட்டம்
இருக்க வேண்டும். ஒரு ஏக்கர் அளவு இருக்க வேண்டும்; ஒரு சிறு
கிணறாவது இருக்க வேண்டும். ஒரு குடிநீர் குழாயாவது இருக்க
வேண்டும். அந்தப் பள்ளிக் கூடத்தின் ஒரு ஓரத்திலே சிறு
நூலகம் இருக்க வேண்டும். இன்னும் சொல்லவேண்டுமென்றால்,
முடியுமானால் அதை ஒட்டி ஒரு சிறிய அளவில் பொதுமக்கள்
கூடக்கூடிய ஒரு கூடம் இருக்க வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை
அமைப்பை உருவாக்குவதற்காக ஒருஆண்டுக்கு 1,000 கிராமங்கள்
என்ற அளவில் திட்டமிட்டு, பத்தாண்டுக் காலத்திற்குள் 10,000
அல்லது 12,000 கிராமங்களுக்கு நிறைவேற்றும் வகையில்
அப்படியொரு திட்டத்தைப் போட்டு நிறைவேற்றினால்தான்
சிறுவர்களுக்கு ஒரு சூழ்நிலை உணர்வு ஏற்பட்டு, அப்படிப்
பட்ட பிள்ளைகளுக்கும் கல்வியில் ஒரு ஆர்வம் உண்டாகும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். முற்பட்ட
வகுப்பு, பிற்பட்ட வகுப்பு என்றெல்லாம் வாதாடிக்கொண்டிருக்
கின்ற நேரத்தில், ஏற்கனவே சரியான சூழ்நிலையில் உள்ளவர்கள்,
முன்னேறிய சூழ்நிலையில் உள்ளவர்கள் கல்வி கற்றவர்கள்
வீட்டுப் பிள்ளைகள் கல்வி கற்ற மற்றவர்களோடு பழகுகின்ற
வாய்ப்பைப் பெற்று விடுகிறார்கள். ஆனால் பிற்பட்ட நிலையில்
உள்ளவர்கள் கிராமங்களிலே உள்ள உழவர்கள், இன்னும் தாழ்த்
தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய இவர்களுடைய
வளரும் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட சூழல் கிடைப்பதில்லை.



(இரவு 7-00.)

அந்தப் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துகிறபோது, எடுத்துக்
கொள்ள வேண்டிய முயற்சி சற்று அதிகம்தான். ஏனென்றால்,
அந்தப் பிள்ளைகள் மனதில் அந்தக் கருத்துப் பதிய அதிகநாழி
யாகும். ஓரளவுக்கு வளர்ந்து, நகர்ப்புறச் சூழ்நிலையிலே இருக்கிற
பிள்ளை—ஓரளவுக்குப் பொருளாதார வசதியுள்ள குடும்பத்திலே
உள்ள அந்தப் பிள்ளைக்குக் கற்பதற்குள்ள வாய்ப்பு சற்று அதிகம்
தான். அதேபோல கிராமத்திலே இருக்கிற பிள்ளைகள்
படிக்கின்ற பள்ளிக்கூடங்களையும், நகரத்திலே இருக்கிற
பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்களையும், அவைகள்
அமைந்திருக்கின்ற சூழ்நிலையையும், நீங்கள் பார்ப்பீர்களே
யானால், நம்முடைய பிள்ளைகள்கூட, இந்தப் பள்ளிக்கூடத்தில்
படித்தால் பெறக்கூடிய தகுதி, அந்தப் பள்ளிக்கூடத்தில்
படித்தால், பெறமுடியாத அளவுக்கு சூழ்நிலை மாற்றியிருப்பதை
நாம் உணர முடியும். ஆகவே அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு
இந்த அரசாங்கம் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, கிராமப்புறங்
களிலே, உள்ள பள்ளிகளை, தகுந்த சூழ்நிலை உடையதாக்க
வேண்டுமானால் அவைகளுக்கான தகுந்த திட்டத்தை தீட்ட
வேண்டும். ஒரு 5 ஆண்டுத் திட்டம், 10 ஆண்டுத் திட்டம்,
போட்டு இந்தக் கல்வி நிலையங்களுக்காக—பள்ளிக் கூடங்களுக்
காக, கட்டிடம் முதலானவற்றை உருவாக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கல்வி மான்யத்தையொட்டி,
பல்வேறு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மான கருத்துக்
களை—உயர்நிலைப்பள்ளிக்கும், அல்லது மேல்நிலைப் பள்ளிக்கும்,
அதற்குரிய முன் பணமாக கட்டவேண்டிய நிதி கட்டப்பட்டும்
அரசாங்கம் அந்தப் பள்ளிக்கூடத்திற்கான கட்டிடம் கட்டலாம்
என்று ஏற்றுக்கொண்டிருந்தும் ஆனால் அப்படி அரசாங்கம்ஏற்றுக்
கொண்டாலும், அந்த இடத்திலே கட்டிடம் கட்டுவதற்கான
முயற்சியின் தாமதத்தைப் பல பேர்கள் தெரிவித்துள்ளனர்.
அப்படித் தெரிவித்த பல கருத்துக்களை நீங்கள் பார்ப்பீர்களே
யானால், கடந்த ஆண்டு ஜூன் மாதமே இப்படிப்பட்ட ஒரு
ஆணை இடப்பட்டு, பாரதியாருடைய நூற்றாண்டு விழாவை
முன்னிட்டு—ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால் வட ஆர்க்காடு
மாவட்டத்திலுள்ள திமிரியிலே, பொதுமக்கள் சார்பில் கட்டிடம்
கட்டுவதற்காக முன் பணமாக ரூ 10,000 தந்து, அரசாங்கம்
ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய் அளவுக்குக் கட்டிடம் கட்டலாம்
என்று இசைவு கொடுத்து, அதற்கு அவர்கள் ஏறத்தாழ ஒரு 5
ஏக்கர் அல்லது சுமார் 2¼ ஏக்கர் அதிலே அவர்கள் வாங்கி, ஒப்
படைப்பதற்கு முன்வந்து, அரசாங்க அதிகாரிகள் ஏற்றுக் கொள்
வதாகச் சொல்லி, அந்த இடத்தை இன்னும் ஏற்றுக்கொள்ளாமல்,
கட்டிடமும் கட்டாமல், அது நின்றுபோன காரணத்தால் திரும்பத்
திரும்ப அதிகாரிகளைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்
டுள்ளது என்று அந்தப் பள்ளிக் கட்டிடக் குழு, பொதுமக்களுடைய
குழு தெரிவித்திருக்கிறது. அதேபோல், இங்கே திரு. பழனிமுத்து,
சேலம்மாவட்ட, ஆத்தூர் வட்டத்தில், உள்ள அந்தப் பகுதியைப்
பற்றிசட்டமன்ற உறுப்பினர் தெரிவிக்கிறபோது, அரியாப்பாளையம்

கிறோம். இதற்கு 40,000 ரூபாய் அதற்கு 80.000 ரூபாய் என்ற ரீதியில் ஒரு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று ஒரு கணக்கைச் சொல்கிறபோது பல மேல்நிலைப் பள்ளிகள் அதற்குரிய தகுதியை, தரத்தைப் பெறமுடியாது இருக்கிறபடியால் நம்முடைய நோக்கத்திற்கு ஏற்றவையாக அவை உருவாக்கப்பட வில்லை என்பதை கல்வியமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்த்து உரிய மாற்றத்தை எப்படிச் செய்யலாம் என்ற திட்டத்தை அவர் தீர்மானிக்க வேண்டு மென்று நான் விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு திரு சங்கரய்யா அவர்கள் சொல்கிறபோது வேறொரு கருத்தைச் சொன்னார்கள். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது என்றார்கள். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடிய அவசியத்திற்கு நாம் ஆளாகி விடுகிறோம். நம் நாட்டின் பொருளாதார நிலையிலுள்ள வீழ்ச்சி, மக்களுடைய தேவையிலே ஏற்படுகிற மிகுதி, இவைகளை ஈடுகட்டுவதற்கு நாம் எடுத்துக் கொள்கிற முயற்சியிலே இருக்கிற பலவிதமான பலகீனங்கள் காரணமாக கல்வித்துறையிலே எந்த அளவுக்கு பொதுமக்களுக்கு பயன்படக்கூடிய ஒரு அடிப்படையை உருவாக்கித்தர முடியுமோ அதை உருவாக்கித் தர முடியாதவர் களாகத்தான் நாம் ஆகி இருக்கிறோம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அந்த முறையிலே நீங்கள் எண்ணிப்பார்த்தால் மேல்நிலைப் பள்ளிகளிலே கூட ஏறக்குறைய 1,292 பள்ளிகளில் தொழில்நுட்ப மேல்நிலைப் பள்ளிகளாக 14 பள்ளிகள்தான் இருக்கின்றன. மற்ற கல்வியிலே அந்த தொழில் நுட்பப் பயிற்சி என்பது தொழில் நுட்ப அறிவைத் தரக்கூடிய அளவிற்கு தகுதி உடையதாக இருக்க முடியாது.

இந்த 14 பள்ளிகளிலே படிப்பவர்கள் மொத்தம் உள்ள 55,000 மாணவர்களில் வெறும் 1,165 பேர்தான். உள்ளபடியே எதை விரும்புவேன் என்று கேட்டால் நான் பள்ளிக் கூடங்களில் 14 அல்லது குறைந்தது 300 பள்ளிகளிலாவது, மொத்தத்தில் 25 சதவீதம் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களிலாவது தொழில் நுட்பக் கல்வி வழங்கக் கூடியதாக இருந்தால்தான் நம்முடைய சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய ஒரு பெரிய வீழ்ச்சி யில் இருந்து தமிழ்நாட்டை பாதுகாக்க முடியும்.

உள்ளபடியே இந்த கல்வி என்பது தொழிலுக்கு ஒரு அடிப் படை என்ற முறையிலேதான் எதிர்காலத்திலே எண்ணிப்பார்த்து தர வேண்டும். திருக்குறளைப் படிக்கலாம்; வடலூர் வள்ளலார் எழுதிய திருவருட்பாவைப் படிக்கலாம்; பைபிள் படிக்கலாம்; வேறு எதையும் படிக்கலாம். அது வேறு. ஆனால் வாழ்க்கையிலே ஏற்பட்டிருக்கிற போட்டி நிலைமை காரணமாக தொழில் அடிப்படைக் கல்வியைத் தான் நம்முடைய மக்களுக்குத் தர வேண்டுமென்று எண்ணுகிறபோது நான் கல்வித் துறையைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



ஜப்பான் நாட்டிலே தொழில் பயிற்சி எப்படி வழங்கப் படுகிறது என்பதைப் பார்த்து அதனுடைய முன்னோடியாக ஏதாவது ஒரு திட்டத்தை தமிழகத்திலே முயற்சி செய்ய முடியுமா தொழில் அறிவு, தொழில் நுட்ப பயிற்சி போன்ற வற்றை எப்படி அந்த இளைஞர்கள் பெறுகிறார்களோ அந்த சூழ்நிலையிலே முழு அளவிற்கு நம்மாலே செய்ய முடியாது என்று சொன்னாலும், ஏதாவது ஒரு வகையிலே அதை பின்பற்ற முடியுமா என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும் அப்படி எண்ணிப் பார்த்து இந்த தொழில் நுட்ப மேல்நிலைப் பள்ளிகளை அதிகப் படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பொறியியல் கல்லூரிகளிலும் தொழில் கல்வியிலும் பயிலுகிற மொத்த மாணவர்கள் 37,000 மாணவர்கள். இந்த மேல்நிலைப் பள்ளியிலே பயிலுகிற மாணவர்களையும் சேர்த்தால் 4 ,258 பேர் ஆகிறார்கள். ஆனால், கல்லூரிக் கல்வியிலே மொத்தம் பயிலுகிறவர்கள் 1,82,665 பேர். இதில் தொழில் கல்வி என்ற வகையில் ஈடு பட்டிருக்கின்ற மாணவர்கள் 40,000 பேர்கள்தான். இது ஏறக்குறைய 4-ல் 1 பங்குதான். மொத்த மாணவர்களில் மேல்நிலைக்கு மேற்பட்ட நிலையில் இருக்கிற மாணவர்கள் 18% தான். இன்னும் சொல்லப் போனால் இது 9 மாணவர் களுக்கு 2 மாணவர்கள் என்ற விகிதத்திலேதான் இந்த தொழில் கல்வி பெறுகிறார்கள். இது ஏறக்குறைய 30% அல்லது 35% ஆக, அதாவது 9—க்கு 4, 9-க்கு 5 என்ற எண்ணிக்கையில் இநத மாணவர்கள் தொழிற் கல்வியிலே ஈடுபடுத்தப்படவேண்டும்.

(இரவு 7-10)

இன்னும் சொல்லப் போனால். மொத்தக் கல்விக்காக செலவழிக்கிற மொத்தத் தொகையில் 17 கோடியே 18 லட்சம் ரூபாய்தான் தொழில் கல்விக்காக ஒதுக்கப்படுகிறது. இந்தக் கல்லூரிக் கல்விக்காக ஒதுக்கப்படுகிற நிதியை வைத்துப் பார்க்கின்றபோது, இது ஏறத்தாழ கல்லூரிக் கல்விக்காக 37 கோடியே 41 லட்சம் ஒதுக்கப்படுகிறது. மொத்தக் கல்விக்கு 349 கோடியாக இருந்தாலும்கூட, கல்லூரிக் கல்விக்காக, 37 கோடி ஒதுக்கப்படுகிறது. இதிலே தொழிற் கல்விக்காக ஏறத்தாழ 13 கோடிதான் கணக்கிலே காட்டப்படுகிறது. பிறிதொருவகை தொழிற் கல்விக்காக வகை செய்திருப்பதையும் சேர்த்துப் பார்த்தால் 17 கோடி ரூபாய் தான் செலவிடப் படுகிறது. ஆக எப்படி கணக்கிட்டுப் பார்த்தாலும் கல்விக்காக மொத்தமாகிற செலவில், 4 சதவீதம், 5 சதவீதம் தான் தொழிற் கல்விகாக செலவாகிறது. இந்த அளவின் நிலைமை அடுத்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயாவது பெருமளவிற்கு மாற்றப்பட்டாக வேண்டும். அதற்கு வழிவகை

இந்தச் சமுதாயத்திலே எந்த ஒரு கட்சி ஆட்சியில் இருந்தாலும், அவர்கள் சோசலிசம் பேசினாலும், பேசாவிட்டாலும், சோசலிச சிந்தனை அவர்களுடைய மனதிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும், சோசலிச சமுதாய சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையில் ஜனநாயகத்திலே ஆட்சி நடத்த முடியாத காலம் இது. எனவே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குறைந்த ஊதியத்திலே உள்ளவர்கள் 10-15 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள்—அவர்களுடைய ஊதியத்தைக் குறைத்து ரிக்கவரி போடும் அளவிற்கு நிலைமை ஏற்பட்டு இருக்குமானால், அது இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்திலே எவ்வளவு பெரிய தவறு ஏற்பட்டு இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அவர்களுக்கு முன்னர் அளிக்கப்பட்ட—இந்த அரசாங்கமே அளித்த—வேறு அரசாங்கம் அளித்தது அல்ல—அந்த ஊதியத்தை அவர்களுக்கு மறுபடியும் தரவேண்டும் என்று கேட்டு, அப்படி குறைந்த ஊதியத்தால் பிடித்தம் செய்யப்பட்ட தொகையையும் திருப்பிக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு கல்லூரியில் ஒரு பிசிக்கல் டைரக்டருக்குத்தான் ஊதியம் தரப் படுகிறது. அவர்களுக்கு உதவியாக செயல்படும் பலருக்கு மாதம் 60 ரூ. 70 ரூ. 100 என்று அந்தந்தக் கல்லூரி நிர்வாகங்கள் தாங்கள் விரும்பும் அளவு தான் தருவார்கள். யாரையும் உரிய ஊதியம் தராமல் அந்தப் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்த முடியாது. அரசாங்கம் தனியார் கல்லூரியிலே உள்ளவர்களுக்கு ஊதியம் தரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் — அதிலே உள்ள கடைசி பணியாளர்களுக்கும் அரசாங்கம் தான் ஊதியம் தரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களைக் கை விடமுடியாது. அந்த வகையில், மார்க்கர்கள் என்று பணியாற்றும் விளையாட்டு உதவியாளர்களுக்கு எல்லாம் ஒரு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயித்து அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதை, மாற்றி, அவர்களுக்கும் ஊதியம் வழங்குவதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு எல்லாம் இவ்வளவு தான் அவர்கள் ஆற்ற வேண்டிய பணி என்று அலகு நிர்ணயித்து, அந்த அளவிற்குப் பணியாற்ற வேண்டும் என்ற முறை 1948-லே தீர்மானிக்கப்பட்டு, அந்த அலகு இன்றும் வைத்துக்கொள்ளப் பட்டு, அதற்குப் பிறகு எவ்வளவோ பணிகள் மிகுதியாக ஆகியிருக்கின்ற தன்மையில், இதற்காக 29-5-82-ல் கல்லூரிக் கல்வி இயக்குனர் அரசாங்கத்திற்கு ஒரு பரிந்துரை செய்து, ஒரு புதிய அலகு திருத்திய விகிதத்தில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் 29–5–82-ல் தெரிவிக்கப்பட்ட—கல்லூரிக் கல்வி



இயக்குனரே ஏற்றுக்கொண்டு தெரிவித்த அந்தக் கருத்து கூட, இன்னும் அரசாங்கத்தால் முழு அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால் அவர்களில் பலர், திருத்தப்பட்ட புது வகையிலே அலகு கையாளப்படாத காரணத் தால், இன்றைக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள், பணி மாற்றம் செய்யப்படுகிறார்கள். இந்த மாற்றத்திற்கு அவர்கள் ஆளாகின்ற காரணத்தால், குறைந்த ஊதியம் பெறுகின்ற நிலையில், அவர்கள் வேதனைப்படுகிறார்கள். ஆகவே, கல்லூரி களிலும், மற்ற இடங்களிலும் அலுவலர்களாகப் பணியாற்றும் அவர்கள் தேவையில்லாமலேயே பணிமாற்றம் செய்யப்படு கிறார்கள். ஆகவே, உரிய முறையில் அந்த அலகு விகிதத்தை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல் பண்டிகை முன்பணம் தருவது இல்லை என்று தகவல்கள் வந்து இருக்கின்றன. பல்வேறு பகுதிகளில் இருந்து பணியாற்றுகிறவர்களுக்குக் கிடைக்க அந்தச் சலுகை கல்லூரியில் பணியாற்றுகிறவர்களுக்குக் கிடைக்க வில்லை என்று தெரிவிக்கப்படுவதால், அதையும் திருத்தியமைக்க வேண்டும். ஆனால், இவைகளையெல்லாம் சட்டமன்றத்திலே, இவ்வளவு உறுப்பினர்களின் நேரத்தை எடுத்துக்கொண்டு விளக்கிக்கொண்டு இருப்பதை விட, கல்வி அமைச்சர் அவர்களே 'பெண்டிங் கேசஸ் பார் டிஸ்போசல்' என்ற முறையில் ஒரு பைலை வைத்துக்கொண்டு, எவைஎவை ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன What are those cases and representation that were accepted by Govt. but not implemented through Department. என்பதை வாரத்திற்கு ஒரு முறை கண்காணிப்பீர்களானால், ஆசிரியர்களுக்கும் அலுவலர் களுக்கும் அந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் குறைகள் மிகுதியாக இல்லாமல் ஓரளவிற்குக் கல்வித் துறை துரிதமாக, செம்மையாக நடைபெற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 7-20)

அடுத்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு இங்கே தரப்பட்டிருக்கிற இந்த கருத்து ஓரளவுக்கு வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. இருந்தாலும் இன்னும் விரிவான முறையிலே, எந்த எந்த வகையிலே தமிழ் விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற முறையிலே ஒரு அறிக்கையை தமிழ் வளர்ச்சி இயக்குநரகம் தரவேண்டும். அந்த இயக்குநரகம் என்ன செய்கிறது என்று யாரும் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. அவர்கள் சிலவற்றைச் செய்துகொண்டிருக்கலாம்; இல்லை என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் அவர்கள் செய்வது எல்லாம் சரியாக இருக்கும் என்று நான் ஏற்கமாட்டேன். தமிழ் வளர்ச்சி என்பது தமிழ் மக்களோடு மிக நெருக்கமாக ஒட்டி இருக்கிற, வழக்கத்தில் இருக்கிற மொழியைப்பற்றிய பணியாக இருக்கிற காரணத்தால் இந்த மொழியின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை விளக்க வேண்டும்.

செய்தாக வேண்டும். குறைந்தது 20 சதவீதம் தொழிற் கல்விக்காக செலவழிக்கவில்லை என்றால், எதிர்கால தமிழகத்தில் கல்வியினால் ஒரு நல்ல பலனைப் பெறுவதற்குப் பதிலாக மாணவர்கள் ஒரு அதிருப்தியான ஒரு வெறுப்பு அடைந்த வாழ்க்கையைப் பெற்று, பெரும் சோர்வு அடைந்த இளைஞர்களைத்தான் எதிர்காலத்தில் நாம் காண முடியும். அப்படிப்பட்ட நிலைமைதான் ஏற்படும் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, ஆசிரியர்களோ, அல்லது கல்லூரியிலே பணியாற்றுகிற பல்வேறு விதமான பிறவகை அலுவலர்களோ தங்களுடை குறைகளைத் தெரிவிப்பார்களானால், அரசாங்கம் அதை அவ்வப்போது பரிசீலித்து, அந்தக் குறைகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாகத்தான் கல்வித்துறையிலே ஒரு விறுவிறுப்பான, ஒரு ஆர்வமான ஒரு சூழ்நிலையை உண்டாக்க முடியும். அரசாங்கம் நிலைமைகளை உணர்கிறது. ஒத்துக் கொள்கிறது. ஆனால் செயல்படுத்தத் தயங்குகிறது. ஏற்றுக் கொண்ட கடமைகளைக் கூட அரசு நிறைவேற்றவில்லை என்பதற்கு நான் கல்லூரி ஆசிரியர்களும், அலுவலர்களும் சில நேரங்களிலே தெரிவித்த பல செய்திகள் எனக்குத் தெரியும் என்றாலும், அவற்றை யெல்லாம் விரிவாகச் சொல்வதற்கு நேரம் இல்லை. தனியார் கல்லூரிகளிலே உள்ள ஆசிரியர்கள், அதேபோல் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்கள் இவர்களுக்கு எல்லாம் இப்போது ஒரு பெரிய குறை என்ன என்றால், வேறு சில மாநிலங்களிலே அடுத்த பே கமிஷன் நியமிக்கப்பட்டுவிட்டது. இங்கே புதிய ஊதியக் குழு நியமிக்கவில்லை என்ற ஒரு வருத்தம் இருக்கிறது. வேறு பல காரணங்களாலே அவர்கள் தங்களுடைய குறைகளை அரசு கவனிக்கவில்லை என்று எடுத்துச் சொல்கிறார்கள். அந்த ஆசிரியர்களுடைய குறைகளை கவனிக்க வேண்டுமென்று நாம் விரும்பினாலும் கூட அதற்கு தொடக்கக் கல்வி ஆசிரியர் களிலேயிருந்து, பல்கலைக் கழக ஆசிரியர்கள் வரையிலும் அவர்கள் யு. ஜி. சி. மூலமாக பெறவேண்டிய, முறைப் படியான ஊதியத்தினைப் பெற வேண்டும் என்று அவர்கள் கேட்டாலும்கூட, அரசாங்கமே ஒத்துக் கொண்ட காரியங்களிலே, அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்ட கடமைகளில், கடமைகள் காலம் தவறியும், முறை தவறியும் கைவிடப் பட்டிருக்கிறது என்பதற்கு தமிழ்நாடு தனியார் கல்லூரி ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்களுடைய சங்கத்தின் சார்பிலே அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்த கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்டின்ஜெட் ஸ்டாப். கல்லூரியினுடைய சில்லரைச் செலவில் நடத்தப்படுகிற பணியாளர்களாக இருந்தவர்கள், அப்படிப்பட்டவர்களுடைய கடந்த காலப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு ஓய்வு ஊதியமும் பணிக்கொடை ஊதியமும் தருவதாக 17-4-81 அன்று அரசு தரப்பில் ஒப்புக் கொண்டும் அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. 17-4-81-ல் அவர்கள் எல்லாம் கடைநிலை ஊழியர்கள். கன்டின்ஜெண்ட் ஸ்டாப் நிரந்தர ஊழியர்கள் அல்ல. கல்வித் துறையிலே இந்த சாதாரண எடுபிடி வேலை செய்கிறவர்கள், அல்லது தோட்ட வேலை செய்கிறவர்கள், அல்லது தண்ணீர் கொண்டு வருபவர்கள் எல்லாம் அவர்களை எல்லாம் சில்லரைச் செலவினப் பணியாளராக கருதக்கூடிய ஒரு காலம் இருந்தது. அது ஒரு காலம். படித்தவனே மேல் ஜாதி, படிக்காதவன் தாழ்ந்த ஜாதி என்று கருதக்கூடிய காலம் ஒன்று இருந்தது. இது இந்தக் காலம் அல்ல. உழைப்பவர்கள் எல்லாம், எந்த வகையிலே உழைத்தாலும், அந்த உழைப்பை மதித்தாக வேண்டும். கல்லூரியிலே எம்.ஏ. படித்து, அல்லது டாக்டர் பட்டம் பெற்ற ஒரு ஆசிரியருக்கு தரப்படுகிற மதிப்பு மிகுதியாக இருக்கலாமே தவிர, படித்தவர்கள் அங்கே வேலை செய்தாலும்கூட உழைப்பினுடைய அந்த உண்மையான வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய கடமை ஜனநாயக அரசுக்கு, ஒரு பொறுப்புள்ள அரசுக்கு இருக்கிறது. அந்த முறையிலே அவர்களுக்கு எல்லாம் தரக்கூடிய சாதாரண சம்பளம், ஓய்வு ஊதியம், பணிக்கொடை ஊதியம் இவைகளைக்கூட 17-4-81-லிருந்து தருவதாக அரசு தரப்பிலேயிருந்து தரப்பட்ட அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவதாக, 1-1-79– 5 வருடங்கள் பணி பூர்த்தி செய்த அவர்களுக்கு எல்லாம் 250-5-330–10–400 என்ற விகிதத்தில் ஊதியம் நிர்ணயித்து, ஒழுங்குபடுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 79 ஆம் ஆண்டிலே, அதுவும் 1-1-79 ஜனவரியிலே அதற்கு முன்னாலே குறைந்தபட்சம் 5 வருடங்கள் அவர்கள் வேலை செய்து இருப்பார்களானால் அவர்களுக்கு எல்லாம் குறைந்த பட்ச ஊதியம், தேர்ட் பே கமிஷனால் லாஸ்ட் கிரேட் சர்வண்ட்ஸ் என்ற நிலையிலே உள்ளவர்களுக்குத் தரப்பட்ட அந்த ஊதிய விகிதம் 250-5-330-10–400 என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசாங்கம் அந்த ஊதியம் தந்தது.

ஆனால், அதற்குப் பின்னால் 82-வது ஆண்டிலே ஒரு உத்தரவு அரசாங்கத்தில் இருந்து அல்லது அந்தத் துறையில் இருந்து வருகிறது. 250-5-330-10-400 என்ற விகிதத்திலே தரப்பட்ட ஊதியம், ஏற்கனவே இரண்டு மூன்று ஆண்டுகளுக்குத் தரப்பட்டு இருந்தாலும்கூட, அது உங்களுக்குச் செல்லுபடியாகாது. உயர்நிலைப் பள்ளிகளில் இதைப்போன்ற நிலையில் உள்ளவர்களுக்கு நாங்கள் தீர்மானித்து இருக்கிற ரூ.200-5-300 என்ற விகிதத்தில்தான் சம்பளம் செல்லுபடியாகும் என்று சொல்லி, அந்தச் சம்பளத்தைக் குறைத்து, ஏற்கனவே இரண்டு மூன்று ஆண்டுகள் கொடுத்த ஊதியத்தையும் ரிகவரி போடப் பட்டு இன்றைக்கு ஒவ்வொருவரும் ரூ. 2000 முதல் ரூ. 2500 வரையில் தங்களுடையக் குறைந்த சம்பளத்திலிருந்து திருப்பிச் செலுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

சாதாரணமாக ஒரு டூரிஸ்ட் டிபார்ட்மென்டில் எவ்வளவு பெரிய விளம்பர அட்டைகளை எல்லாம் அச்சிட்டுக் கொடுக் கிறார்கள், விளம்பரப்படுத்துகிறார்கள். அதைப்போல் தமிழ் வளர்ச்சியில் என்ன செய்திருக்கிறோம், இன்னும் என்ன செய்யப் போகிறோம் என்பது தனித்தனி விளக்கமாக அமைய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மற்றொன்று. தமிழ் வளருகிறது, வளருகிறது என்று எண்ணிக்கொண்டிருக்கிற அதேநேரத்தில் தமிழ் உணர்வு மங்கு கிறது, மங்குகிறது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒருவேளை வேறு சிலருக்கு நான் தமிழ் உணர்வு மங்குகிறது என்று சொல்வது தமிழ் வெறி மங்குகிறது என்று தோன்றக் கூடும். தமிழ் ஆர்வம் இன்றைக்கு குன்றுகிறது. அரசாங்கம் தமிழை வளர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. சாத்தியமான இடங்களில் எல்லாம் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். பாட நூல்களிலே, மற்ற ஏடுகளிலே எல்லாம் நல்ல தமிழ் இடம் பெறுவது குறைவாக இருக்கிறது. நான் இதை குற்றம் என்று சொல்லவில்லை. மேலும் மேலும் இதிலே திருத்தம் வேண்டும். தமிழ் வளர வேண்டுமென்ற அந்த நோக்கம் இருக்க வேண்டும். தமிழ் மொழிக்கு எது ஆக்கமோ அந்த ஆக்கத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு பாடநூல் நிறுவனத்திலே ஏற்படுமானால் அது வரவேற்கத்தக்கது. அது ஒரு தனி முயற்சி அல்ல; ஒரு கூட்டு முயற்சி. கூட்டு முயற்சியில் செய்ய முடியாவிட்டாலும் யாராவது ஒருவர் பார்த்து, பரிசீலித்து நல்ல தமிழ் ஆக்கத்திற்கு வழி செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். தமிழ் வளர்ச்சி என்பதும், தமிழ்க் கலைகளும் பண்பாடும் என்பதும் இன்னும் சற்று விரிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டும்; அந்த வகையில் விரிவான செயற்பாட்டால் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது சில நண்பர்கள், சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 'இருமொழிக் கொள்கை'யை தமிழக அரசு பின்பற்றுவதில் ஒரு மாற்றம் காணவேண்டுமென்று சிலவற்றைப் பேசியிருக்கிறார்கள். ஏதோ இந்தி மொழி பயிலாத காரணத்தால் நம்முடைய பிள்ளைகளுக்கு அகில இந்திய ரீதியில் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்பு குன்றுகிறது என்று சிலர் பேசுகிறார்கள். இந்தி மொழி படித்தால்தான் அகில இந்திய ரீதியில் வேலை கிடைக்கும் வாய்ப்பு வரும் நிலை உருவானால் அந்த வாய்ப்பு யாருக்குமே கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி மொழி படித்த காரணத்தால் அப்படிப் பட்ட எல்லோரையும் வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை நிச்சயமாக வராது. ஆங்கிலம் அகில இந்தியா விலும் நீடிக்க வேண்டுமென்று விரும்புவதற்குக் காரணம் இந்தி மொழி தெரிந்தவர்கள், இந்தி மொழி பேசுகின்றவர்கள் மட்டுமே அகில இந்தியாவிலும் ஆதிக்கக் கொடியை பறக்கவிடக்



கூடாது; ஒரே ஜாதி மட்டும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது: மற்றவர்களின் உரிமை வாழ்வை அடக்கி ஒடுக்கிவிடக்கூடாது; ஒரு மொழி பேசுகின்ற கூட்டம் மற்றவர்கள் உரிமையை அடக்கி ஒடுக்கிவிடக்கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத் தான் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று சொல்கிறோமே தவிர ஆங்கில மொழியிடம் அளவு கடந்த பற்றோ பாசமோ அல்ல. என்னுடைய தாய்மொழி தமிழைவிட மற்ற மொழி எனக்கு உயர்ந்தது அல்ல. என்னுடைய தாய்மொழியாகிய தமிழ் எனக்கு ஊட்டும் உணர்வை இன்னொரு மொழி நிச்சயமாக ஊட்ட முடியாது.

ரஷிய நாட்டிலே இருக்கிற ஒரு கவிஞன் சொன்னான். ரசூல் கம்சதோவ் என்பது அந்தக் கவிஞன் அவன். அவன் அங்கே ஒரு மலை நாட்டில் வாழ்ந்தவன். அவனுடைய மொழி வளம் இல்லாத மொழி, இலக்கிய வளம் பெற்ற மொழி அல்ல. மலை நாட்டு மொழியில் இலக்கிய வளம் நிறைந்திருக்க வாய்ப்பு இருக்காது. அது பெரும்பாலும் பேச்சு வழக்கில் இருக்கிற மொழியாகத்தான் இருக்கும். அவன் ரஷிய மொழியில்தான் படிக்க வேண்டும். அவன் சொல்கிறான், ''என்னுடைய தாய்மொழி எனக்கு ஊட்டுகிற உணர்வை, என்னுடைய தாய்மொழியில் நான் பாடும்போது எனக்கு கிடைக்கிற மகிழ்ச்சியை வேறு எந்த மொழி யாலும் தரமுடியாது, அந்த தெம்பை, உணர்வை வேறு மொழி யால் பெற முடியாது'' என்று சொல்கிறான்.

அது மட்டுமல்ல. என்னுடைய தாய் மொழி நாளைக்கு அழிந்து விடுமானால், என்னுடைய தாய்மொழி இறந்துவிடுமானால் அதற்கு முதல் நாளே நான் செத்துப்போவேன் என்று சொல் கிறான் அந்த ரஷிய நாட்டு கவிஞன். அந்த உணர்வு உண்மை யான தமிழர்களுக்கு எல்லாம் இருந்து தீரவேண்டும்.

அரசியலில் ஆயிரம் வேறுபாடு இருக்கலாம்; ஆட்சி முறை யிலே வேறுபாடு இருக்கலாம். மனிதன் நிரந்தரம் அல்ல. ஆனால் ஒரு இனம், அந்த இனத்தின் பண்பாடு, நாகரீகம், கலை உணர்வு பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மொழியை போற்றுகின்ற உணர்வு தழைத்தாக வேண்டும். அந்த உணர்வு இன்று தழைக்கவில்லை. தழைக்கச் செய்கிற ஒரு ஆர்வம் இந்த அரசுக்கு கூட அவ்வளவு இல்லை என்பதை நான் நினைவூட்டு கிறேன். ஒன்றிரண்டு செயல்களினாலே தமிழ் ஆர்வம் இருப்ப தாக சொல்லிக் கொண்டால் போதாது. அந்த உணர்வு வேண்டும். அதேநேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழர்களுக்காக மட்டும் அல்ல, இந்தியாவிலே உள்ள சிறுபான்மை மொழி பேசுகிற அத்தனை மக்களுக்கும் பாது காப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக தான், அதற்கு வழி வகுத்துக் கொடுக்கிற முறையில், இந்த இரண்டு மொழிகளைத் தவிர, தாய் மொழி, ஆங்கிலம் தவிர, இன்னொரு மொழியை மாணவர்களுக்கு பயிற்றுவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இதே சட்டமன்றத்தில், காங்கிரஸ் நண்பர்களும் கூட, தேசிய யாக எதிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் அனைவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய கட்டத்தில் அந்தத் தீர்மானத்தை [illegible]

அடுத்து இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.
இந்தி மொழியினாலே வருகிற ஆபத்து மேலும் மேலும் அதிக
மாகி வருகிறதே தவிர, குறையவேயில்லை. மத்திய அரசாங்
கத்தினுடைய ஆதிக்க விளைவு என்று நான் சொல்லி, அவர்களை
குற்றம் சாட்டுவதை விட, மத்திய அரசாங்கமே இந்தி வெறியர்
களுடைய ஆதிக்கத்திற்கு ஆட்பட்டவர்களாக இருக்கிறார்கள்
என்று நான் கருதுகிறேன். அதிலேயிருந்து அவர்கள் விடுபடு
வதற்கு வேண்டிய ஆற்றலும், அதற்கான ஒரு பெரிய நோக்கமும்
அவர்களுடைய மனத்திலே உருவாகவில்லை.

அண்மைக் காலத்திலே கல்வியை மத்திய அரசு ஸ்டேட்
லிஸ்டிலே இருந்து கன்கரண்ட் லிஸ்டிலே கொண்டு போய் வைத்த
தினால், கல்வியிலே மத்திய அரசாங்கம் தலையிட்டு எந்த ஒரு
சட்டத்தின் மூலமாகவும் அதனுடைய போக்கையே மாற்றி
அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை பெற்றதன் மூலமாக, எதிர்
காலத்தில் தமிழகத்திலே மட்டும் அல்ல, எந்த மாநிலத்
திலேயும் அவர்களுடைய நோக்கததை நிறைவேற்றிக் கொள்ளும்
அளவுக்கு, சட்டத்தின் மூலமாகவே இந்தியைப் புகுத்தும் ஒரு
வாய்ப்பு தரக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நான் ஏற்கனவே
அதைக் கண்டித்துப் பேசியிருக்கிறேன்.

மத்திய அரசாங்கத்தினுடைய நோக்கப்படி அந்தத் துறை
யிலே, மத்திய அரசாங்கம் நினைக்கிறபோது சட்டம் இயற்றக்
கூடிய அளவுக்கு, அந்த கன்கரண்ட் லிஸ்ட் பட்டியலிலே
கல்வித் துறையை எடுத்து வைத்துக் கொண்டு இருப்பது
மட்டும் அல்லாமல், அண்மைக் காலத்தில், திட்டக் குழு
மூலமாக இந்தி வளர்ச்சிக்கான பணியை புரிவதற்கு அவர்கள்
வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். Planning Commission has to plan
also for the indirect development of Hindi throughout India என்ற
முறையில் அது இடம் பெற்றிருக்கிறது திட்டக் குழு மூலமாக
பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள், விவசாய வளர்ச்சிக்
கான திட்டங்கள், வேறு பல திட்டங்கள் தீட்டலாமே தவிர,
மொழி வளர்ச்சிக்காக அல்லது மொழியை பரப்புவதற்கான,
அந்தப் பொறுப்பு திட்டக் குழுவிடத்திலே ஒப்படைக்கப்படுகிற
போது, அந்தப் பொறுப்பு மறைமுகமாக இந்தியை இந்த
நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்
கான முயற்சியிலே ஈடுபடவே வழி செய்வதாகும்

அப்படி ஈடுபடுகிறபோது இருவகை ஆதிக்கமும் வளருகிறது.
மத்திய அரசாங்கத்தினுடைய ஆதிக்கம் மட்டும் அல்ல, வட
நாட்டிலே உள்ள மக்களின் ஆதிக்கத்தை மறைமுகமாக இந்தி
ஆதிக்கம் மூலம் திணிக்கிற நிலைமை ஏற்படுகிறபோது, நான்
நிச்சயமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், தமிழ்நாட்டு
மக்கள் அதற்கேற்ற அரசியல் கோணத்தில் அனைத்திந்திய மத்திய
அரசாங்கத்திற்கு அறிவுறுத்த வேண்டிய நிலைமைக்கு
ஆளாவார்கள்.



இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட இருமொழிக்
கொள்கைத் தீர்மானம்தான் தமிழர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு
அளிக்கும் தீர்மானம் ஆகும். இந்தி மொழி பேசாத மக்களுக்
கெல்லாம் அதுவே பாதுகாப்பு. இந்தி மொழி ஆதிக்கத்தைத்
தடுத்து நிறுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரே ஒரு தடுப்பு
அதுதான். இந்தியாவிலே இந்தி ஆதிக்கம் நிலைநாட்டப்
படுவதை, சட்டமன்றத்தின் மூலமாக தடுத்து நிறுத்துவதற்காக
உருவாக்கப்பட்ட ஒரே ஒரு கருவி அதுதான். எனவே இரு
மொழிக் கொள்கையை காத்து, இந்தி மொழி ஆதிக்கத்தை
எதிர்த்து, தமிழக அரசு பயனுள்ள கல்வித் திட்டத்தை நிறை
வேற்றும் வழிவகையைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டு
என்னுடைய உரையை நான் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிற
கல்வித் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதும்.
கடந்த காலத்திலே நடைபெற்று வந்த கல்வித் துறையின்
திட்டங்களின் மீதும், தங்களுடைய சிறப்பான கருத்துக்களைத்
தெரிவித்து, அரசுக்கு உதவிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்
களுக்கும், முதலிலே நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இங்கே உங்களிடத்திலே கோரப்பட்டிருக்கிற தொகையாக
356 கோடி ரூபாய் என்று இருந்தாலும், மாண்புமிகு உறுப்
பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல, சத்துணவிற்
காக வருகிற நுகர்பொருள் வழங்கு துறைக்கு தருகிற 50 கோடி
யும் சேர்த்தால், 1983-84 ஆம் ஆண்டில் 406 கோடி அளவில்
இந்த கல்வித் துறையினுடைய செலவு இருக்கும். இது
ஏறத்தாழ மொத்தச் செலவில் 25 விழுக்காடு ஆக இருக்கும்
என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆண்டுக்கு
ஆண்டு இந்த கல்வித்துறைக்கான மானியம் அதிகரித்து வருகிறது
என்பது உண்மைதான். அதைப்போலவே இந்த ஆண்டைவிட
அடுத்த ஆண்டு இது இன்னும் அதிகரிக்கக் கூடிய சூழ்நிலை இருக்
கிறது என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது.
ஆகவே, வளர்ந்து வருகிற ஒரு பொருளாதார நிலையில் ஒரு
துறையில், அதிலும் குறிப்பாக கல்வித் துறையில், மானியத்
தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது என்பது
ஆச்சரியப்படக் கூடிய ஒன்று அல்ல.

(இரவு 7-30.)

ஒருவேளை சில மாநிலங்களிலே குறைத்திருப்பதைப் போல
இங்கே கல்வித் துறை மானியத்தைக் குறைத்து இருப்போமே
யானால் அது தவறாகவும் அதிர்ச்சியினைத் தரக்கூடியதாகவும்
இருக்கும். ஆனால் 356 கோடி ரூபாய் என்ற வகையில் போன
ஆண்டை விட அதிகமாக ஒதுக்கி இருப்பது ஆச்சரியத்தைத் தரக்

கூடியதல்ல. இப்படித் தரப்படுகின்ற இந்தப் பணம் எந்த அடிப்
படையிலே செலவு செய்யப்படுகின்றது, எந்த நோக்கத்துடன்
செலவு செய்யப்படுகின்றது என்பதைப் பார்க்கவேண்டும்.
பேராசிரியர் அவர்கள் கல்வித்துறைக்கு என்று ஒரு நோக்கம்
இருக்கின்றதா, கல்வித்துறைக்கு என்று ஒரு நோக்கத்தை
வைத்துக்கொண்டு செலவு செய்யப்படுகின்றதா என்ற அடிப்
படையில் அவர்கள் கேட்ட கேள்வி வரவேற்கத்தக்க ஒன்று
என்பதோடு மட்டுமல்லாமல் நாம் அத்தனைபேரும் ஆராய்வதற்கு
வேண்டிய ஒன்றாகும். இன்றைக்குக் கல்வித் துறையினைப்
பொறுத்தவரையிலே, நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த
தற்குப் பிறகு ஒரு மாற்றத்தை நாம் மனம் அறிந்து ஏற்படுத்தி
வருவதாக நம்பிக்கொண்டிருக்கிறோம். இதற்கு முன்பு இருந்த
கல்வித் துறையில் பல்லாயிரக்கணக்கான தொடக்கப் பள்ளிகள்
இருந்து இருக்கலாம், 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட உயர்நிலைப்
பள்ளிகள் இருந்திருக்கலாம் நூற்றுக்கணக்கான கல்லூரிகள்
இருந்திருக்கலாம். ஒரு 7, 8 இன்ஜினியரிங் கல்லூரிகளும்,
நான்கைந்து மருத்துவக் கல்லூரிகளும் இருந்திருக்கலாம். ஆனால்
கீழே இருந்து மேலே வருகின்ற கல்விப் பணியினைப் பார்க்கின்ற
போது ஒரு 1,500 பேர் மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து பயன்
பெறுவதற்காகவும், ஒரு 1,300 பேர் அல்லது 1,500 பேர்
இன்ஜினியரிங் கல்லூரியிலே சேர்ந்து பயன்பெறுவதற்காகவும்
தானா இத்தனை ஆயிரக்கணக்கான பள்ளிகளும் அதிலே பணி
புரிகின்ற ஆசிரியர்களும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள் என்று
ஐயுறுகிறேன். அதாவது குறிப்பிட்ட சிலருடைய நன்மைக்காகத்
தான் இத்தனை ஆண்டுக்காலம் கல்வித்துறை செயல்பட்டு
வந்ததோ என்று ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்ற நிலைமை
இருந்தது.

ஆனால் இன்றையதினம் நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப்
பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப்
பொறுப்பினை ஏற்றதற்குப் பிறகு கல்வித்துறைக்கு ஒரு
நோக்கத்தை நாம் வைத்துக்கொண்டு நாம் பல்வேறு மாறுதல்
களைச் செய்து வருகிறோம். ஆனால் இன்றைக்குக் கல்வித்
துறையிலே குறைபாடுகள் இல்லையா என்று கேட்டால் இருக்
கின்றது; இதற்கு முன்பும் இருந்திருக்கின்றது; இதற்குப் பிறகும்
இருக்கலாம். ஒரு பெர்ஃபெக்ட் எஜுகேஷன் சிஸ்டம் அதாவது
குறையே இல்லாத ஒரு கல்வித் திட்டத்தை யாராலும் தர
முடியாது. ஆனால் குறைகளைக் கண்டறிந்து அந்தக் குறைகளை
நாம் திருத்திக் கொண்டு வரவேண்டும் என்பதில் ஆர்வத்தோடு
செயல்படுவதன் மூலமாக நம்மை நம்பிக் கொண்டிருக்கின்ற
மக்களுக்கு நாம் நன்மைகளை ஏற்படுத்த முடியும். அந்த
வகையிலே பார்க்கின்றபோது நம்முடைய நோக்கம், நம்முடைய
கல்வித்துறையின் நோக்கம் என்னவாக இருக்கவேண்டும் என்று
நாம் கருதிக்கொண்டிருக்கிறோம்? நம்முடைய கல்வித்துறையில்
இத்தனை ஆண்டுக் காலமும் மாணவர்கள் படிக்கிறார்கள்
என்றால் எதற்காகப் படிக்கிறார்கள்? வேலைக்குப் போக



வேண்டும் என்று படிக்கிறார்கள். வேலைக்குப் போக என்ன
செய்யவேண்டும் என்றால் 10-வது பாஸ் செய்யவேண்டும்;
பட்டப்படிப்பில் பாஸ் செய்யவேண்டும். இதுதான் மாணவர்
களின் நோக்கமும், மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்
களின் நோக்கமும், மாணவர்களின் பெற்றோர்களின் நோக்கமு
மாகும். அந்த வகையிலே தேவையான பாடத் திட்டங்களை
வைத்து மாணவர்கள் நன்கு கற்கவேண்டும் என்ற நிலைமையை
ஏற்படுத்தி இருக்கின்றபோது பரிட்சையைப் பாஸ் செய்வதற்குத்
தான் படிக்கவேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது. பலவற்றை
நாம் பாடத்திட்டங்களாக உருவாக்கி நூல்களை எல்லாம்
உருவாக்கியிருந்தாலும் கூட பரிட்சைக்குத் தேவையான அளவுக்கு
மட்டும் படிக்கின்ற நிலைமை இருக்கின்றது. மேலும் பரிட்சைக்கு
என்ன கேள்வி வருகின்றது என்பதைத் தெரிந்துகொண்டு,
அல்லது இப்படித்தான் கேள்வி வரும் என்பதை யூகித்து அந்தக்
கேள்வி அளவுக்கு மட்டும் படிக்கின்ற போக்கு வளர்ந்து வந்திருக்
கின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே நாம் மாணவர்கள் அதிகபட்ச அறிவு பெறவேண்டும்
என்பதை நோக்கமாக வைத்து பணத்தைச் செலவு செய்தால்
மாணவர்கள் குறைந்தபட்ச அளவிலேதான் படித்துக்கொண்டிருக்
கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றபோது
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மன்றத்திலே விவாதிப்பது
மட்டுமல்லாமல் பொதுமக்கள் மத்தியிலேயும் அதுபற்றி எடுத்துக்
கூறி மாணவர்களின் நிலைமையை மேம்பாடு அடையத்தக்க
வகையில் செய்வது நம் அத்தனைபேருடைய எண்ணமாக இருக்க
வேண்டும்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு
தரப்பட்டு வருகின்ற கல்வியில் பரிட்சை அடிப்படையில்
படிக்கின்ற மாணவர்கள் என்ன செய்கிறார்கள்? மனப்பாடம்
செய்கிறார்கள். மனப்பாடம் செய்வது என்றால் இலக்கியப்
பாடங்களை மட்டும் மனப்பாடம் செய்வதில்லை; கணக்கையும்
மனப்பாடம் செய்கிறார்கள், கணக்கை மட்டுமா மனப்பாடம்
செய்கிறார்கள் என்றால் ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை செய்து
பார்க்கின்ற ஃபிசிக்ஸ், கெமிஸ்ட்ரி போன்ற பாடங்களின்
பரிசோதனைகளையும் மனப்பாடம் செய்து வருகின்ற ஒரு
துர்பாக்கியமான நிலைமை உருவாகி இருக்கின்றது. ஆனால்
மூளையைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கான ஆற்றல்
களைப் பெற்றிருக்கின்றது. அந்தப் பல்லாயிரக்கணக்கான
ஆற்றல்களில் ஒன்றுதான் மனப்பாடம் செய்வது என்பது. ஆகவே
இந்தப் பத்தாண்டுக்காலம் படித்தாலும், 12 ஆண்டுக்காலம்
படித்தாலும் அந்த ஆயிரக்கணக்கான ஆற்றல்களில் ஒரு பங்கு
ஆற்றலைத்தான் வளர்த்துக்கொண்டு இருக்கிறோமே தவிர
இயற்கையாக நமக்குக் கிடைத்திருக்கின்ற ஆற்றல்களை முழு
அளவுக்கு நாம் வளர்த்துக்கொள்ளவில்லை, அப்படி வளர்த்துக்
கொள்கின்ற அளவுக்கு நம்முடைய கல்வி பயன் தரவில்லை
என்பதை நான் இங்கே ஒரு குறையாக சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

உள்ளவர்களாக இருக்கவேண்டும். என்னுடைய நாட்டை பாதுகாப்பதற்கு என்னுடைய நாட்டின் மானத்தை பாதுகாப் பதற்கு கௌரவத்தை காப்பதற்கு தேவையானால் என்னுடைய உயிரை தருவேன் என்ற அளவுக்கு தேச பக்தி உணர்வு மிக்கவர் களாக நம்முடைய குழந்தைகள் வளர்க்கப்படவேண்டும் என்பதை யும் நான் இங்கே குறிப்பாக வலியுறுத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7-40)

இப்படிச் சொன்ன கருத்துக்களைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் தேசபக்தி மக்கள் பக்தி என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அத்தகைய கொள்கைகளை நம்முடைய இளைஞர்கள் அறிவை வளர்க்கின்ற நேரத்திலே ஆற்றலை வளர்க்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட உணர்வுகளைச் சேர்த்து வளர்க்கின்ற நேரத்திலே தான் பட்டம் படித்து வெளியே வருகிற நேரத்திலே அல்லது படிப்பை முடித்து விட்டு வெளியே வருகிற நேரத்திலே அந்த இளைஞர்கள் இந்த சமுதாயத்துனுடைய நன்மைக்கு ஓரளவுக்குப் பயன்படுவார்கள் என்ற பொது நோக்கத்தோடு கல்வித்துறை செயல்படவேண்டு மென்ற அந்த நோக்கத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது ஒரு பொது நோக்கமாக இருக்கலாம்.

ஆனால் திராவிட இயக்கத்திலே இருந்து வந்த நாங்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் சார்பில் பணியாற்று கிற நாங்கள் எங்களுக்கு இருக்கிற கவலையெல்லாம் தமிழகத் திலே இருக்கிற பிற்பட்ட தாழ்த்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த மாணவர்கள், குழந்தைகளின் முன்னேற்றத்தை நாம் பெரிதும் விரும்புகிறோம். தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் இங்கே அரசியல் கொள்கைகள், பொருளா தாரக் கொள்கைகள், சமுதாயக் கொள்கைகளைப் பேசிய பல ஆண்டுக்காலத்திலேயும் அவர்கள் குறிப்பிட்டது உயர்ந்த சாதிக் குழந்தைகளைப்போல் அல்லது வசதிபடைத்த வீட்டுக் குழந்தை களைப்போல் சாதாரண வீட்டுக் குழந்தைகளும் கிராமங்களிலே வாழுகின்ற சாதாரணக் குடிமகனுடைய குழந்தைகளும் அறிவு வளர்ச்சி பெற வேண்டும், ஆற்றல் பெறவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள் அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு இன்றைய தினம் செயல்படுகிறோம் என்பதற்கு ஒரு சில ஆதாரங்கள்தான் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிற 4 ஆண்டுகள் மேற்பட்ட சிறார் பள்ளிகளும் சத்துணவுத் திட்டமும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சிறார் பள்ளிகள் என்று பார்க்கிறபோது மேல்தட்டிலே இருக்கிற அந்தக் குழந்தைகள் படிக்கின்றன, இவர்கள் படிக்க வில்லை. அந்தக் குழந்தைகள் படித்து 1 ஆதிலே வந்து சேருகிற போது 2 ஆண்டுக்கால கல்வியோடு வந்து சேருகின்றன. ஆனால் இந்தக் குழந்தைகள் வருகிறபோது எந்தக் கல்வியும் இல்லாமல் வந்து சேர்கின்றன. ஆகவே முதல் வகுப்பிலேயே காணுகின்ற அந்த வித்தியாசம்தான் கடைசி வரைக்கும் இருக்கிறது. 12வது வகுப்பு வரைக்கும் இருக்கும் எஞ்சினியரிங் கல்லூரி அட்மிஷன் வரைக்கும் இருக்கும், வேலைக்குப் போகிற போதும் இருக்கும். ஆகவே இப்போது இது ஒரு விதத்திலே சாதியின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் பொருளாதார அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது என்று சொன் னாலும் அந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு அறிவு ரீதியாக என்ன நடவடிக்கையை நாம் எடுக்க முடியும் என்று பார்த்தால் இந்தக் குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் கல்வி வாய்ப்பை, சிறு குழந்தையாக இருக்கும்பொழுது அந்தக் கல்வி வாய்ப்பைத் தருகிறபோது நாம் அறிவு ரீதியிலே உள்ள வித்தியாசத்தை நம்மால் போக்க முடியும். அப்படிப் பார்க்கிற போது சிறார் பள்ளிகள் தேவை என்பதும் இன்றைக்கு இந்தியாவிலே 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறார் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம், ஆகவே அந்தக் கொள்கையை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம் அல்லது இப்போது ஆரம்பிக்கப்பட்டி ருக்கிற குழந்தைகள் காப்பகங்கள், சத்துணவு மையங்கள் நாளடைவில் இத்தகைய சிறார் பள்ளிகளாக வரும் என்று சொல்கிறபோது இந்தியாவிலேயே தமிழகத்திலே ஒரு மிகப் பெரிய புரட்சியை துவக்கி வைத்திருக்கிறோம் என்ற பொருள் தானே தவிர வேறு அல்ல, இது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. அது மட்டுமல்ல, குழந்தைகளினுடைய வளர்ச்சியே 2 வயதி லிருந்து 8 வயது வரைக்கும்தான். அந்த 2 வயதிலிருந்து 8 வயது வரைக்கும் எந்த அளவுக்கு அறிவு வளர்ச்சி இருக்கிறதோ அதுதான் காலாகாலத்திற்கும் இருக்கப் போகிறது. ஆனால் நாம் கவனிக்காமல் லட்சியமாக இருப்பது இந்த 2 வயதி லிருந்து 8 வயது வரைக்கும்தான். ஆகவே அதை மாற்றி யமைத்து இன்றைக்கு சிறார்களுக்கு கல்வி தருகிறோம் என்பது மட்டும் அல்ல, குறிப்பாக 2 வயதிலிருந்து 10 வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவைத் தருகிறோம். சத்துணவு என்பது பசிக்குப் போடுகிற சாப்பாடு அல்ல. பல்வேறு உறுப்பு களின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் தரவேண்டுமென்ற நோக்கத்தில் தரப்படுகிற சத்துணவு. இன்றைக்கு அகில இந்திய மெடிக்கல் கவுன்சிலின் தலைவர் டாக்டர் கோபால் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மூளை வளர்ச்சித் தேவையான புரதச் சத்துக்கள் அல்லது மற்ற சத்துக்கள் போதாத காரணத் தினால் சரியான மூளை வளர்ச்சி பெறாமல் சப்ஸ்டாண்டர்டு சிடிஸன்ஸ் என்ற அளவுக்கு லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே மூளை வளர்ச்சிக்குத்

சென்னை நகரத்தைச் சேர்ந்த பிரபல டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் இந்த கருத்தை ஒரு இடத்திலே வலியுறுத்தி கூறியிருக்கிறார், என்பதை இந்த கருத்துக்கு ஆதரவாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய பொது நோக்கம் என்னவாக இருக்கவேண்டும் என்றால் கல்வி நிறுவனத்திற்கு வருகின்ற மாணவன் அவன் எந்த வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அவனுடைய முழு அறிவு வளர்ச்சிக்கு உரிய வழியினை கல்வி நிறுவனங்களில் நாம் செய் தாகவேண்டும். அதற்கு ஏற்ப கல்விப் பணிகள் ஏற்பட்டு ஆக வேண்டும். இதனை நாம் ஒரு நோக்கமாக வைத்துக்கொள் வதிலே எந்தவித தவறும் இல்லை. அதற்கு அடுத்தபடியாக ஆற்றலை நாம் வளர்க்கவேண்டும். பல்வேறு வகையான ஆற்றல் களை நம்முடைய இளைஞர்கள் இடத்தில் வளர்க்கவேண்டும். அந்த ஆற்றல்களை வளர்க்காததுதான் இன்றையதினம் நம்முடைய மாணவர்களை பாதித்து கொண்டிருக்கிறது. இந்த பலவகையான ஆற்றல்களை நாம் வளர்க்காததால் சமுதாயம் சீரழிந்து கொண்டிருக்கிறது. இன்றக்கு படித்து விட்டு வெளியே வருகின்ற மாணவன் வேலையின்றி செல்லுறவனைப் பார்க்கிறபோது அவனைப் பார்த்து நாம் கவலைப்படுகிறோமே தவிர அதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்பது இல்லை அவனுக்கு ஏன் வேலை கிடைக்கவில்லை? அவனுக்கு என்ன வேலை கிடைக்கவல்லை என்றால் அவனுக்கு எந்த வேலையும் தெரியவில்லை என்பது தான் முக்கியமான காரணமே தவிர வேறு அல்ல. தேவையான வேலைகள் அல்லது வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனாலும் அதற்கு தகுந்தவர்கள் இல்லை என்ற நிலைமை பல்வேறு துறைகளிலே இன்றைக்கு இருக்கின்றன. இன்றைக்கு பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்றன. ஆக இளைஞர்கள் இருக்கின்றார்கள். வேலை யில்லாமல் இருக்கின்றார்கள், வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் இந்த இளைஞர்களுக்கு அந்த வாய்ப்புகள் கிடைக்க வில்லை என்றால் அதற்கு காரணம் அவர்கள் பெற்று வருகின்ற படிப்பு. அந்தப் படிப்பின் மூலமாக தேவையான ஆற்றல்களை அவன் வளர்த்துக்கொள்ள ல்லை. இது அவனைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. அதைப்போலத்தான் ஒரு சமுதாய வளர்ச்சி என்கின்றபோது, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்கின்றபோது ஏதோ கட்டிடங்களும், தொழிற்சாலைகளும் மட்டும் அல்ல. அதனுடைய பரிபூர்ணமான வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு இயற்கை வசதிகள் கொண்ட இந்த நாட்டிலே என்ன குறைச்சல் என்று பார்த்தால் எந்த குறைச்சலும் இருப்பதாக தெரிய வில்லை. நமக்கு இருக்கிற ஒரே ஒரு குறைச்சல் நம்முடைய மனித சக்தியை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை, பலப்படுத்திக் கொள்ளவில்லை, பண்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே நம்முடைய மாணவர்களுக்கு அறிவு வளர்ச்சிக்கு பல்வேறு வகையான ஆற்றல்களை சொல்லி தந்து அவர்களை நம்முடைய சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கு பயன்படுத்துகின்றபோது தான் சமுதாயம் முன்னேற முடியும் அந்த இளைஞர்களுடைய



பிரச்சனைகளையும் தீர்க்க முடியும். ஆக அந்த வகையிலே பார்க்கின்றபோது ஆற்றல்களை வளர்க்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அது ஒரு முக்கியமான நோக்கமாக நாம் கருதுகிறோம்.

இன்னொரு நோக்கத்தை நாம் சொல்லவேண்டுமானால் அறிவு வளர்ச்சி பெற்ற மாணவன், ஆற்றல் வளர்ச்சி பெற்ற மாணவன் சமுதாயத்திற்கு பயன்படவேண்டும் என்று சொல்கிறபோது பயன்படத்தக்க அளவுக்கு அவன் வளர்க்கப்படவேண்டும். அவன் உருவாக்கப்படவேண்டும்.

நம்முடைய கல்வி முறையில் ஒரு குறைப்பாட்டை பெரியவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒழுக்க கல்வி இல்லை, மாறல் இன்ஸ்ட்ரக்ஷன் சரியான முறையில் சொல்லித் தரப்படுவது இல்லை. ஆக அதற்கான நெறி முறைகளைக் கண்டறியவேண்டும், சொல்லித்தர வேண்டும் என்ற கருத்தை பல பெரியவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு தெரிந்த குறைபாடு அது மட்டும் தான். அது குறைபாடு என்பதை விட மாறல் இன்ஸ்ட்ரக்ஷன் தியரி இருக்கிறது, ஆனால் இருந்தாலும் அதன் மூலமாக சொல்லித்தருகிற அந்த ஒழுக்கக் கல்வி, மாணவர்களுக்கு, சமுதாயத்திற்கு போதாத அளவுக்கு இருக்கலாம். அதை நாங்கள் இங்கே தெளிவுப்படுத்த விரும்புவது, மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வி மட்டும் போதாது. ஒழுக்கம் என்றால் பிறருக்கு தீங்கு செய்யக்கூடாது. ஆக ஒவ்வொருவரும் தீங்கு செய்யக்கூடாது என்பதை மட்டும் படித்த அளவில் இருப்பார்களானால் அது ஒரு படி பரவாயில்லை என்று சொல்ல லாமே தவிர அதுவே நமக்கு திருப்தி தருவது ஆகாது. ஆக படிக்கின்ற மாணவன் ஒழுக்கத்தை தெரிந்து கொண்டால் போதாது அவன் பெற்ற அறிவையும், ஆற்றலையும், ஒழுக்கத் தையும் இந்த சமுதாயத்திற்கு பயன்படுகின்ற சமுதாய உணர்வு படைத்தவனாகவும் நாம் அவனை உருவாக்க வேண்டும். அந்த அளவுக்கு சமுதாய கல்வி அவனுக்குத் தரவேண்டும். இதை நாங்கள் ஏற்று ஒரு குறைந்த அளவுக்கு செயல்படுத்தியிருக் கிறோம். ஆக சமுதாய கல்வி, சமுதாய உணர்வுகளை மாணவர்களுக்கு கண்டிப்பாக சொல்லித்தந்தாக வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி வருகின்றோம். அதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டும் என்று கருதி தான் மத்திய கல்வித் துறையினுடைய ஆலோசகராக இருக்கின்ற கிரிக்ஜோஜி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அறிக்கை கேட்டிருக் கிறோம். அந்த அறிக்கை தருகின்றபோது அது பற்றி இருக்கு மானால் நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு நோக்கம் ஒழுக்கக் கல்வியோடு, சமுதாய கல்வியோடு நாம் திருப்தி அடைந்து விடாமல் இன்னொரு படிக்கு மேலே நம்முடைய இளைஞர்கள் போய் ஆகவேண்டும். தேச பக்தி உணர்வு

தேவையான சத்துக்கள் இந்தச் சத்துணவுத் திட்டம் மூலமாகக் கிடைக்குமானால் இன்றைக்கு மிகப் பெரிய குறைபாட்டை சப்ஸ்டாண்டர்டு சிடிஸனாக மாறக்கூடிய பேராபத்தை போக்கிட அல்லது இவன் நல்ல முழு மனிதனாக முழு அறிவு பெற்றவனாக வளர்ந்து இந்த சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய நல்ல வாய்ப்பை இந்த சத்துணவுத் திட்டம் தரும். இந்த சிறப்பான நோக்கம் நலிந்த பிரிவினருக்காக தாழ்த்தப்பட்ட பிற்பட்ட வகுப்பினருக்காக நாங்கள் யாருக்காக இத்தனை ஆண்டுக்காலம் பேசி வந்தோமோ பாடுபட்டு வந்தோமோ அவர்களுக்காக இந்த நல்ல காரியத்தை இந்த அரசு செய்கிறது என்ற நல்ல நோக்கத்தோடு செய்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகவே நோக்கம் இல்லாமல் கல்வித்துறை செயல்படவில்லை, என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிற நேரத்திலே அதிலே குறைபாடுகள் இருக்கலாம். அதிலே இங்கொன்றும், அங்கொன்றுமாக இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் இருக்கலாம். இரண்டு கோடி ஒதுக்க வேண்டிய இடத்தில் இரண்டு லட்சம் ஒதுக்கியிருக்கலாம் அந்த குறைபாடுகளை நிறைவு செய்ய வேண்டிய முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர, இப்போது தமிழகம் சரியான பாதையில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. கல்வியைப் பொறுத்தவரையில் நிச்சயமாக பல வெற்றிகளை தமிழகம் அடைந்திருக்கிறது என்பதைக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு என்ஜினியரிங் காலேஜ் அட்மிஷன் பற்றி நான் ஒன்றை சொல்ல வேண்டும். நாங்கள் வருவதற்கு முன்னாலே 18 சதவீதம் இடங்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் அவர்கள் பூரணமாக அனுபவிக்க முடியவில்லை. 4 சதவீதம், 5 சதவீதம், 11 சதவீதம் 9 சதவீதம், 13 சதவீதம், என்று இருந்தது. இப்போது கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக 18 சதவீதம் என்று ஆகி இந்த ஆண்டு 19 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி கூறுகிறபோது இன்றைக்கு நாங்கள் எந்த வகையிலே பொறுப்பு? இந்த கல்வித்துறை எந்த வகையிலே பொறுப்பு? என்பதையும் உங்களுக்குத் தெளிவுபடுத்தியாக வேண்டும். இதற்கு நான் [illegible] முக்கியமான காரணம் நாம் புதியதாக இந்த [illegible] மேல்நிலைக் கல்வி திட்டம். இதற்கு [illegible] படிக்கிற மாணவன் அங்கே பாஸ் [illegible] காலம் முன்னாலே கிராமத்திலே [illegible] கல்லூரிக்குச் சென்று ஒரு ஆண்டு [illegible] ஆனால் இன்றைய [illegible] பள்ளிக்கு கொண்டு [illegible] பள்ளியிலேயே [illegible] மேல்நிலைக் கல்வியை [illegible] பெரும்பாலும் [illegible] 12 வயது [illegible] படிக்கிறான். அதை [illegible] அங்கேருந்து [illegible] படிக்க [illegible] தாய்மொழியான [illegible]



நேரடியாக என்ஜினியரிங் கல்லூரிக்கு விண்ணப்பிக்கிற காரணத்தால் இந்த [illegible] ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே 4 சதவீதம் தான் கிடைத்திருக்கும். மீதி இடங்களை மற்ற ஜாதிக்காரர்கள் அனுபவித்திருப்பார்கள். இன்றையதினம் 18 சதவீதம் என்ற நிலை போய் 19 சதவீதம் என்று உயர்ந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல அன்றைய தினம் 4 சதவீதம் தான் அனுமதித்து இருக்க முடியும் என்றால் யாரும் அவர்களை தடுக்கவில்லை. கொடுக்க மறுக்கவில்லை போதுமான ஆட்களே வரவில்லை; போதுமான விண்ணப்பங்களே வரவில்லை. இந்த பி.யூ.சி.யை பாஸ் செய்த மாணவன் அந்த அளவிற்கு விண்ணப்பிக்க முடியவில்லை. ஆனால் இன்றையதினம் அவர்கள் போதுமான அளவிற்கு பாஸ் செய்து விண்ணப்பித்து அந்த இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். எனக்கு கொடுத்திருக்கிற தகவல்களின்படி நம்முடைய அரசு என்ஜினியரிங் கல்லூரியிலே சேர்ந்திருக்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 62 சதவீதம் மார்க்குக்கு மேலே வாங்கியவர்கள் இன்றைக்கு சேர்ந்திருக்கிறார்கள். 62 சதவீதத்திற்கு கீழே வாங்கிய தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடையாது. ஆகவே 35 மார்க் வாங்கி பாஸ் செய்து வெற்றி பெற்று அந்த இடத்தை அடைய முடியாமல் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்த புதிய திட்டம் வந்ததற்கு பிறகு 60, 70 சதவீதம் மார்க் வாங்கி என்ஜினியரிங் கல்லூரியிலே சேர்கிறார்கள். மருத்துவக் கல்லூரியிலே சேர்கிறார்கள் என்றால் இந்த தரத்திலே ஏற்பட்டிருக்கிற ஒரு மாறுதல், தரத்திலே ஏற்பட்டிருக்கிற ஒரு உயர்வு என்பதை நாங்கள் இங்கே சொல்கிறபோது இங்கே கூடியிருக்கிற எல்லாக் கட்சி உறுப்பினர்களும் மனநிறைவு பெறுவார்கள் என்பது மட்டுமல்ல மகிழ்ச்சி அடைவார்கள். இதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. அதுமட்டுமல்ல இந்தியாவிலே இருக்கிற மற்ற மாநிலங்களோடு இன்றைக்கு ஒப்பிட்டுப் பார்த்தாலும் இந்த மாறுதல் தமிழகத்திலே மட்டும் தானே தவிர, இந்த மாறுதல் மற்ற மாநிலங்களிலே எல்லாம் இன்றைக்கும் கிடையாது. அவர்கள் நம்மைப் போல இந்த மேல்நிலைக் கல்வியை நம்பிக்கையோடு பின்பற்றவில்லை. ஆகவே அங்கே இருக்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். ஆகவே தமிழகத்திலே ஒரு மறுமலர்ச்சி, அல்லது ஒரு உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் கூறுகிறபோது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே வந்த எங்களுக்கு இதைவிட மகிழ்ச்சித் தருகிற நிகழ்ச்சி வேறு எதுவும் இருக்க முடியாது. இத்தகைய சாதனை நடைபெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்

தொழில் கல்வியைப் பற்றி கூறுகிறபோது இங்கே 57 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே அவ்வளவு பேர்கள் இல்லை. எல்லா மாநிலங்களையும் சேர்த்துப் பார்த்தாலும் இந்த அளவிற்கு அவர்கள் எண்ணிக்கை வர

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 15

வில்லை. ஆகவே மத்தியிலே இருக்கிறவர்கள் நல்ல முறையிலே
நடைபெறுகிறது என்று அவர்கள் கருதி மத்திய அமைச்சரவை
சாவியிலே எல்லா மாநில கல்வித்துறை செயலாளர்களுடைய
மூன்று நாள் கருத்தரங்கை சென்ற மாதம் கோவையிலே கூட்டி
இன்னும் சில முடிவுகளை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். தமிழ்
நாடு ஒரு முன்மாதிரியான மாநிலமாக அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். அவர்கள் பாராட்டுதல்களை கேட்டு அதிலே மனம்
மயங்கி இருக்கவில்லை. இந்தத் தொழில் கல்வி சரியாக நடை
பெறுகிறதா? இல்லையா? இதிலே என்ன குறைபாடுகள் இருக்
கின்றன? இதை மேலும் எப்படி நல்ல முறையிலே செய்ய
முடியும் என்பதற்காகத்தான் நாங்களே அமைத்துக் கொண்ட
குழு தான் துணை வேந்தர் டாக்டர் குழந்தைசாமி அவர்கள்
தலைமையிலே அமைந்த குழு. அவர்கள் அறிக்கை தந்திருக்
கிறார்கள். அந்த அறிக்கையைத் தமிழிலே மொழி பெயர்க்கச்
சொல்லியிருக்கிறோம். தமிழிலே மொழி பெயர்த்து வந்தவுடன்
மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு அதை நான்
கொண்டு வர இருக்கிறேன். அதிலே, அவர்கள் சொல்லி
யிருக்கிற கருத்துக்களை எல்லாம் பரிசீலனை செய்து இதற்கு
மேலும் சிறப்பாக எப்படி அதை நடத்த முடியும் என்று
ஆலோசிக்க நாம் கருதியிருக்கிறோம். இந்த நேரத்திலே நான்
சொல்லிக் கொள்ள விரும்புகின்ற ஒரு கருத்து, நாம் தொழிற்
கல்வியைப் பெரும் அளவுக்கு ஆதரித்து இதைக் கொண்டு வர
வேண்டுமென்று இந்த அரசு விரும்பியதற்குக் காரணம், நாங்கள்
இந்தச் சமுதாயத்தைப் பார்த்த பார்வைதான். மற்ற மாநில
அமைச்சர்களை நான் சந்திக்கின்ற நேரத்தில், அவர்களிடம்
ஏன் தொழிற் கல்விக்கு இந்த அளவிற்கு ஆதரவு தரவில்லை
என்று கேட்டால், அவர்கள் என்னிடத்திலே சொன்ன ஒரே பதில்,
அவர்களுக்கெல்லாம் பயிற்சி தந்தால், அவர்களுக்கு எப்படி
வேலை தருவது, என்பதுதான். இந்த ஒரு கேள்வியைக் காட்டித்
தான் அவர்கள் அங்கே இத்தகைய தொழிற்கல்வியைப் பயிற்று
விப்பதில் போதுமான ஆர்வத்தைக் காட்டாமல் இருக்கிறார்கள்.
ஆனால், நான் அவர்களை மட்டுமல்ல, அப்படிக் கேள்வி
கேட்கின்ற யாராக இருந்தாலும் அவர்களைப் பார்த்து கேட்க
விரும்புவது, இதைப் படிக்காமல் இருந்தால் வேலை வாய்ப்பு
கிடைத்துவிடுமா என்பதுதான். படித்தால் நாம் வேலை தர
வேண்டுமென்று பொறுப்பு நமக்கு இருப்பதன் காரணமாக நாம்
இந்தப் பதிலைச் சொல்லி அவர்கள் படிக்காமல் இருந்தால்
நமக்கு அந்தக் கவலை இல்லையென்ற நிலைமைக்கு நாம்
போவோமானால், அது அமைச்சர் பொறுப்புக்கே இலாயக்
கில்லை, தகுதியில்லையென்ற கருத்தோடுதான் நாங்கள் இந்தப்
பிரச்னையை, தைரியமாக துணிச்சலோடு எடுத்துக் கொண்டு
செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதிலே நாங்கள் தோல்வி
அடைவோம், வெற்றி பெறுவோம் என்ற நிலை அல்ல. அதிலே
வெற்றி பெற்றாக வேண்டும், என்பதுதான் நாம் விரும்புவது.



1983 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

(இரவு 7-50)

ஆகவே, மாணவர்களுக்குத் தொழிற்கல்வி தர வேண்டுமென்று
சொல்லும்போது, மாணவர்கள் படிக்கின்ற தொழிற்கல்வியினால்
வேலை கிடைக்குமா என்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்
கேட்டார்கள். அவன் தொழிற்கல்வி படிக்க வேண்டாம்,
சரித்திரம், பூகோளம் படித்தால், வேறு ஏதாவது படித்தால்
வேலை கிடைக்குமா என்றால் அப்பொழுதும் வேலை
கிடைக்காது. அதைவிட இது பரவாயில்லையென்ற நிலைமை
யிலேதான் நாம் சிலவற்றைச் செய்து கொண்டிருக்கிறோம்
இதைவிட இன்னும் நல்லபடியாகத் தரவேண்டுமென்ற கருத்தை
நான் வரவேற்கின்றேன். அதற்குத் தேவையான முயற்சிகளை
நாம் எடுத்துக் கொண்டு வருகின்றோம்.

பகுதி நேர ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள். பகுதி
நேர ஆசிரியர்கள் என்று வருகிறபொழுது அதிலே ஒரு முக்கிய
மான அடிப்படையை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். நாம் ஆசிரியர்கள் என்ற முறையில் தொழி
லுக்கும் அல்லது உண்மையான நிலைமைக்கும் சம்பந்தம் இல்லாத
நிலைமையிலே இருக்கின்றவர்களாலே பயிற்சி தரப்படுகின்ற
நிலைமையை மாற்றி, ஒரு தொழிற்சாலையில் இருக்கிற அல்லது
மருத்துவ மனையிலேயிருக்கிற அல்லது ஒரு பாங்கிலே இருக்கின்ற
வர்கள் வந்து, அந்த மாணவர்களுக்குத் தங்களுடைய
அனுபவத்தை அறிவிப்பதோடு, இந்தப் போதனையைச் செய்ய
வேண்டுமென்று விரும்பிய காரணத்தால் தான், அப்படிப்பட்ட
வர்களும் இந்தப் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணிபுரிய வேண்டு
மென்று நாம் கருதுவதனுடைய விளைவுதான், இந்தப் பகுதி
நேர ஆசிரியர்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். அது
தொடர்ந்து இருந்தால்தான் அந்தத் தொழிற்கல்வி சில நேரங்
களிலாவது நல்ல வெற்றியைப் பார்க்க முடியும். கோவையிலே
இருக்கிற ஒரு பள்ளி கூட, ஒரு ஜெர்மனி நாட்டு நிறுவனத்
துடைய உதவியைக் கோரி, அந்நிறுவனமும் தருவதாகச்
சொன்னபோது, இவர்களும் விரும்பி கேட்டு, ஒரு லேத் போன்ற
இயந்திரங்களைத் தர வேண்டுமென்று கேட்ட நேரத்தில்,
அவர்கள் கேட்ட ஒரு கேள்வி, இதை எதற்காகப் பயன்படுத்து
கிறீர்கள் என்பது. அதற்கு, பள்ளியினர், தொழிற்கல்வியைச்
சொல்லித் தருவதற்காக என்று சொல்லி இருக்கிறார்கள்.
அப்படியென்றால், நாங்கள் தரமாட்டோம். அது புரடக்ஷனிலே
ஈடுபட வேண்டும், உற்பத்தியிலே ஈடுபட வேண்டும். உற்பத்தி
யிலே ஈடுபடுகின்ற அளவிற்கு அந்தத் தொழிற்கல்வி ஈடுபட
வேண்டுமென்ற கருத்தைத்தான் அவர்கள் சொல்லியிருக்கி
றார்கள். ஆகவே, மாணவர்கள் பள்ளியிலே தொழிற்கல்வி
பெறுகின்ற நேரத்திலே, அந்தத் தொழிற்பயிற்சி தருவதற்குத்
தொழிற்சாலையை அங்கே கொண்டு போவதா? அல்லது
தொழிற்சாலைகளுக்கு அந்த மாணவர்களைக் கொண்டு வருவதா
என்று சீர்தூக்கிப் பார்க்கும்போது, மாணவர்களைத் தொழிற்
சாலைக்குக் கொண்டு வருவதுதான் சிறந்த கருத்து என்பதை
இன்றைக்கு அனுபவரீதியாக நாம் தெரிந்து கொண்டு வருகி

றோம். அந்த முறையிலே நான் நாம் பல்வேறு தொழிற்சாலை களுடைய—அரசு தொழிற்சாலைகளானாலும், தனியார்களுடைய தொழிற்சாலைகளானாலும், தனியார் நிறுவனங்களானாலும், அரசு நிறுவனங்களானாலும் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று நல்ல, முழுமையான, தொழிற்கல்வியைத் தருவதற்கு நாம் விரும்புகிறோம் என்பதை இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

இங்கே வேறு பல கருத்துக்களையும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, 1 முதல் 3 வகுப்புக்குத் தேர்வுகள் இல்லை. அப்படி இருப்பதால் மாணவர்களுடைய படிப்பு கெடும் என்று பேசியிருந்தார்கள். மத்தியிலே இருந்து வந்த ஒரு சிபாரிசு, 8 ஆம் வகுப்பு வரைக்கும் தேர்வு வேண்டாம் என்பது. நாம் அப்படி வேண்டாம். அதைச் செய்தால் நீங்கள் சொல்கிற அந்தக் குறைபாடுகள் வந்துவிடும் என்று சொல்லி 3-வது வகுப்பு வரைக்கும் அந்நிலைமை போதும். அதற்கு மேலே பரிட்சை இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பரிட்சை இருக்கிறது. ஆனால் பாஸ், ஃபெயில் என்பது இல்லை. மூன்றாவது மட்டும் அந்த நிலைமையை வைத்திருக்கிறோம். நாம் இதை எதற்காக வைத்திருக்கிறோம் என்று கேட்டால், நின்றுவிடும் குழந்தைகள் தொடர்ந்து வர வேண்டும் என்பதற்காகத்தான் வைத்திருக்கி றோம். நின்றுவிடும் குழந்தைகள், படியாத குழந்தைகள் ஆகியவர்களை ஒன்றாவது வகுப்பிலே ஃபெயில் ஆக்கி விட்டோம் என்றால் அதையே சாக்காக வைத்துக்கொண்டு அந்தக் குழந்தை பள்ளிக்கூடத்திற்கு வருவதையே நிறுத்தி விடுகிறார்கள். இன்னொரு காரணம், அந்தக் குழந்தைகளின் பிஞ்சு வயதிலேயே தாங்கள் தோற்று விட்டோம் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டால் அந்தக் குழந்தைகளின் மன வளர்ச்சி பாதிக்கப்பட்டு விடும். அப்படி அந்தக் குழந்தைகளின் மன வளர்ச்சி பாதிக்கப் படாமல், பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் தான் மூன்றாவது வகுப்பு வரையில் வெற்றி தோல்வியைப் பற்றிச் சொல்லாமல், எல்லோரையும் வெற்றி பெறச் செய்து, அதற்கு மேலே தேர்வு முறைகளை வைத்துக் கொள்ளலாம் என்று கருதி, மூன்றாவது வகுப்பு வரைக்கும் அந்த நிலைமையை வைத்திருக் கிறோம். மத்தியிலேகூட அவர்கள் தருகின்ற பரிந்துரை என்ன வென்றால், எட்டாவது வகுப்பு வரைக்குக்கூட இப்படிப்பட்ட நிலைமை இருக்க வேண்டுமென்பதாகும். ஆகவே அதைவிட இது பரவாயில்லை என்பதோடு மட்டுமல்ல, அதைவிட இது சிறந்தது என்பதோடு மட்டும் அல்ல, இருக்கின்ற நிலைமையில் இது எல்லோராலும் ஆதரிக்கப்பட வேண்டிய ஒரு நல்ல முடிவு என்பதை நான் இங்கே குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, இங்கு மைனாரிட்டி பள்ளிகளைப் பற்றிச் சொன்னார்கள். மைனாரிட்டி பள்ளிகளை ஆரம்பிப்ப தற்கு நாங்கள் யாருக்கும் குறுக்கே நிற்கவில்லை. கேட்கின்ற பொழுது கூட அவரவர்களுக்கு நிதி ஆதாரங்களைப் பொறுத்து



அனுமதி கொடுக்கிறோம். ஆனால் பிரச்னை எங்கே வருகிறது என்றால், ஆசிரியர்கள், அலுவலாளர்கள் என்று வருகின்ற பொழுது அவர்களைக் கொஞ்சம் கூட மதியாது, திடீரென்று நடுத்தெருவிலே அந்த நிர்வாகம் நிறுத்துவதற்கு முயற்சிக்கும் பொழுது நாம்தான் அவர்களைக் கேட்க வேண்டும். அப்படி நாம் கேட்கவில்லை என்றால் அவர்கள் அனாதைகளைப் போல ஆகிவிடுவார்கள். அவர்களுக்கு வேறு வழி இல்லை. ஆகவே தான் அந்த அடிப்படையில்தான் மைனாரிட்டி நிறுவனங்களைப் பற்றிக் கவலை கொள்கிறோமே தவிர இன்றைக்கு ஆயிரக் கணக்கான மைனாரிட்டி பள்ளிகள் இருக்கின்றன. இந்தச் சட்ட சபையிலேயே எத்தனையோ பற்றிப் பேசியிருக்கிறோம். பேசி யிருந்தாலும்கூட எஸ்.ஐ.ஈ.டி. போன்ற ஒன்றிரண்டு நிறுவனங் களைப் பற்றிப் பேசியிருப்போமே தவிர எல்லா நிறுவனங்களை யும் பற்றிப் பேசவில்லை. எல்லா நிறுவனங்களையும் கண்டித்துப் பேசவில்லை. ஆகவே, தவறாக நடைபெறுகின்ற நிறுவனம் என்று சொல்லுகின்றபொழுது மைனாரிட்டி உரிமை என்பது மைனாரிட்டி மக்களின் நலன்களுக்காகத் தானே தவிர, தவறான முறையில் நிர்வாகத்தை நடத்துவதற்காக அல்ல; தவறான உரிமைகளுக்காகப் பயன்படுத்துவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மைனாரிட்டி மக்களின் நலன்களுக்காக வாதாடிக் கொண்டிருப்பவர்கள் இதற்கு ஆதரவு காட்ட வேண்டுமே தவிர, இதற்கு எதிர்மாறான கருத்துக்களைச் சொல்வது எவ்வளவு நியாயமானது அல்ல என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

44 பள்ளிகளைப் பற்றிச் சொன்னார்கள். அவைகள் எங்களைக் கேட்டுக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் அல்ல. எங்களைக் கேட்காமலேயே, இப்பொழுது இருக்கின்ற மைனாரிட்டி உரிமை என்ற பெயரால் ஆரம்பித்தார்கள். இப்பொழுது உள்ள நிலைமை அவர்கள் அப்படி ஆரம்பிக்கலாம் என்பதுதான். நீங்கள் 356 கோடி ரூபாய் ஒதுக்குகிறீர்கள் என்றால், என்னுடைய கடமை அதற்குள்ளே செலவு செய்ய வேண்டுமென்பதுதான். பூரா பட்ஜெட் என்றால் அது மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கேட்டது. ஆனால் திடீரென்று 40 பள்ளிகள், 100 பள்ளிகள் என்று ஆரம்பித்து விட்டால் அவைகளுக்கு எங்கேயிருந்து பணம் வரும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்படி மைனாரிட்டி நிறுவனங்கள் தொடங்கலாம் என்ற தீர்ப்பே நடந்து கொண்டிருக்கின்ற ஒரு அரசுக்குப் பாதகம். சாவர்னிட்டி என்று சொல்வார்களே, அதாவது சுயாட்சி உரிமை என்று சொல்வார்களே, அப்படிப் பார்க்கின்ற பொழுது ஒரு அரசின் உரிமைகளைப் பாதிக்கின்ற அளவிற்குத்தான் தீர்ப்பைப் பெற்றிருக்கிறோம். ஒரு அரசாங் கத்தைப் பாதிக்கும் நிலைமையிலேதான் இன்றைக்கு மைனாரிட்டி நிறுவனங்கள் பல நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் 44 பள்ளிகள் இருக்கின்றன. அந்தத் தீர்ப்பே கூட அநீதியாகத்தான் இருக்கிறது. கிராண்ட் வேண்டுமென்று

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 15

அரசை எதிர்பார்ப்பதும், பெரும்பான்மையான மக்களை எதிர்ப்பதும், அல்லது தங்களிடத்திலே பணியாற்றுகிறவர்களை எதிர்ப்பதும் சரியானது அல்ல முறைகேடானது மட்டுமல்ல. பொதுமக்களுடைய எதிர்ப்புக்கு அந்த நிறுவனங்களை ஆளாக்கும். ஆகவே அத்தகைய நிலைமைக்குப் போக விடாமல், தடுப்பதற்கு எங்களைவிட, அந்த மைனாரிட்டி பிரிவுகளுக்காகப் பரிந்து பேசுகின்றவர்களுக்கு நிச்சயம் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தது, தன்னாட்சி உரிமை பற்றி இங்கே கருத்துக்களைச் சொன்னார்கள். தன்னாட்சி உரிமை பற்றி பேசுகிறபோது, அது தேவை என்றிருந்தாலும், வேண்டாம் என்று சொல்லுகின்ற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்து விட்டன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். தன்னாட்சி உரிமையை, இன்றைக்கு தருகிறோம் என்று சொன்னால், ஒரு கல்லூரி, அதில் பணியாற்றுகிற ஆசிரியர்கள், அந்த மாணவர்களுடைய பாடத் திட்டங்களிலே ஈடுபாடு கொண்டு, அவர்களே 4 புத்தகங்களை எழுதி, அவர்களே கேள்வித்தாள்களை தயாரிக்கக் கூடிய உரிமைகளைப் பெற்று, நல்லபடியாக அந்தக் கல்வி முன்னேற்றத்தில், மாணவர்களுடைய அறிவு முன்னேற்றத்தில் ஈடுபடச் செயல்படவேண்டும். அது நல்லது என்று கருதி, நம்பி, ஒரு 'அகாடமிக் அடானமி' —கல்வி சம்பந்தமான தன்னாட்சி உரிமையை நாம் தரவேண்டுமென்று தந்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், நான் பல்கலைக்கழக ஆணைக் குழுவோடு பேசியபோது, அப்போது அவர்கள் விரும்புவது எல்லாம், தன்னாட்சி என்பது கல்லூரிகள் எல்லாம் ஒரு பல்கலைக்கழகமாக வரவேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். ஆக இன்றைக்கு பல கல்லூரிகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், பல புகார்கள் என்னிடத்திலே வந்திருக்கின்றன. ஆக தன்னாட்சி உரிமை நிர்வாகங்கள், தவறாகப் பயன்படுத்துகிறபோது அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், கண்டிப்பாக மட்டுமல்ல, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

ஆகவே தன்னாட்சி உரிமை தவறாக பயன்படுத்துகிறபோது தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டிய பொறுப்பில் இந்த அரசு இருக்கிறது. எனவே தேவையான நடவடிக்கையை இந்த அரசு நிச்சயம் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அதனாலே பாதிக்கப்பட்டிருக்கும் நண்பர்களுக்கும், பொது மக்களுக்கும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தன்னாட்சி உரிமை என்பது யாரும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் தங்களுடைய இஷ்டத்திற்கு ஒரு காரியத்தை செய்வதற்காக தரப்பட்ட உரிமை அல்ல: நல்ல நோக்கத்தோடு தரப்பட்ட உரிமை. அந்த நோக்கத்தோடு அது செயல்படவில்லை என்றால், அவர்கள் இந்த அரசினால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டுப்படுத்தப் படுவார்கள் என்கின்ற உறுதியை நான் இங்கே கூற விரும்புகிறேன்.



1983 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

அரசாங்க கல்லூரியைப் பொறுத்தமட்டில் ஏன் நான் தன்னாட்சி உரிமையைத் தரவில்லை. அது தனியார் கல்லூரி, இது அரசாங்க கல்லூரி என்கிற வித்தியாசம் அல்ல. ஒரு தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரி சரியாக நடைபெறுவதற்கு அங்கு இருக்கிற ஆசிரியர்கள் நிரந்தரமாக 3 அல்லது 5 ஆண்டுகள் இருக்க வேண்டும். ஆனால் அரசாங்க கல்லூரியை பொருத்த மட்டில் பல்வேறு காரணங்களால் ஆசிரியர்களை மாற்றக்கூடிய நிலைமை. பதவி உயர்வு பெறக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான் நாம் தயங்கிக் கொண்டிருந்தோம். ஆக இப்பொழுது சிலகல்லூரிகளிலே கொண்டுவர வேண்டுமென்ற விருப்பம் இன்றைக்கு அரசிற்கு இருக்கிறது.

அதற்கு அடுத்து 'பிளானடோரியம்' பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா சொன்னார்கள். அந்த கருத்தை ஏற்கனவே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதே சென்னை திருநகரத்தில் தந்தை பெரியார் அவர்கள் பெயரால் ஒரு 'சைன்ஸ் சென்டர்'—விஞ்ஞான கேந்திரம் வர இருக்கிறது. நம்முடைய தொழில் நுட்ப ஆராய்ச்சி மையத்திற்கு பின்னாலே இப்பொழுது இடத்தை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த இடத்தில் ஒரு 'சைன்ஸ் சென்டர்' வரும், அதோடு கூட ஒரு 'பிளானடோரியம்' வரும். இந்த நகரத்து மக்கள் மட்டும் அல்ல சென்னை நகரத்துக்கு வருகின்ற மக்கள், போய் பார்க்கக்கூடிய அளவுக்கு அந்த விஞ்ஞான மையம் பயன்பட இருக்கிறது. அது மையஅரசின் உதவியோடு மட்டுமல்ல. திருநெல்வேலியில் ஒரு விஞ்ஞான மையத்திற்கு இடம் மாவட்ட அளவிற்கான விரைவிலேயே வேலைகள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு துவங்கப்பட இருக்கிறது. அதைப்போல வேறு சில இடங்களிலே கொண்டுவர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்; இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் அளவிற்கு ஒரு சிறு மையமாவது இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே ஒரு 'ராக்கெட்டை' பற்றி பத்திரிகையிலே படிக்கின்ற ஒரு சாதாரண குடிமகன் அதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் தெரிந்து கொள்வதற்கு இன்றைக்கு இடமே கிடையாது. அப்படி தெரிந்துகொள்ள ஒரு இடமாகத்தான் இன்றைக்கு இந்த விஞ்ஞான மையங்கள் ஏற்பட இருக்கின்றன. ஆகவே அடிப்படை உரிமைகளை வகுத்திருக்கின்ற நம்முடைய அரசியல் சட்டத்தில், கடமைகளை நாம் இந்த எமர்ஜென்சி பீரியட்லே கொண்டு வந்து சேர்த்து இருக்கிறோம். அதிலே மிக முக்கியமானது விஞ்ஞான மனப்பான்மையை உருவாக்குவது. இதில் கவலை எடுத்துக்கொண்டு இந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொண்டு ஈடுபடுகிற ஒரு மாநில அரசு தமிழ்நாடு அரசு என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த விஞ்ஞான மனப்பான்மையை சமுதாயத்திலே வளர்க்க வேண்டுமென்பது அவர்கள் சொன்னதாலே மட்டும் அல்ல,

கேட்கிறார்கள். அவ்வாறு கேட்பதைத் தவறு என்று சொல்ல
வில்லை. எங்களால் முடிந்த வரையில் தருகிறோம். ஆனால்
தராததை ஒரு அரசின் மீது பழியாகச் சொல்வதற்கு கிஞ்சித்தும்
இடமில்லை என்பதைத்தான் நான் இந்த இடத்தில் குறிப்பிட்டுச்
சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே மைனாரிட்டி இருப்பதைப்போல, தமிழர்கள் வேறு
பல மாநிலங்களில் மைனாரிட்டிகளாக இருக்கிறார்கள். இங்கே
அவர்கள் உரிமைகளைக் கேட்டுக் கொண்டிருப்பதைப்போல
அதே உரிமைகளை நாங்களும் அங்கே கேட்டுக் கொண்டிருக்கி
றோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்,
இன்றைக்குப் பம்பாயிலே எட்டாவது வகுப்பு வரையில் தான்
தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியிலே படிக்க முடியும்;
அதற்கு மேலே படிக்க முடியாது. ஆனால் தமிழ்நாட்டிலே
இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தி
யிலே படிக்க முடியும். பஞ்சாபி மொழியைத் தாய்மொழியாகக்
கொண்டவர்கள் பஞ்சாபியிலே படிக்க முடியும். அவர்கள்
தங்கள் தாய்மொழிகளிலேயே படிக்கின்ற நிலைமை தமிழ்
நாட்டிலே இருக்கிறது. ஆனால் பம்பாயிலே எட்டாவது
வகுப்புக்கு மேலே படிக்க முடியாது. இரண்டு வருடங்களாக
நடந்து நடந்து இப்பொழுது ஒரு உத்தரவை வாங்கியிருக்கிறேன்.
இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால், இப்பொழுது 40
மாணவர்களுக்குப் புத்தகங்களை நீங்களே அச்சடித்துக்
கொள்ளுங்கள் என்று அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.
அவர்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து என்னிடத்திலே
தந்திருக்கிறார்கள். இப்பொழுது மொழி பெயர்த்துக் கொண்டி
ருக்கிறோம். நாம் அச்சடித்துத் தர வேண்டிய நிலையிலே
நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் அங்கே இருந்து கொண்டி
ருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகப்

(இரவு 8-00)

படிக்க முடியாது. தாய் மொழிப் பயிற்சி மொழியாக இருக்க
வேண்டுமென்பது, இந்தச் சாதாரண மக்களுடைய நலனை
அடிப்படையாக வைத்துதான். 8-ஆவது வரைக்கும், தாய்
மொழியிலே படித்துவிட்டு, பிறகு ஆங்கிலத்திலே படித்தால்,
'ஃபெயில்' ஆகிவிடுகிறார்கள். தொடர்ந்து ஒரு 10-ஆவது
12-வது வரை தாய் மொழியிலே படித்தால் தான், கல்வி
அடியிலே ஏறமுடியும். அந்த முறையிலே தாய்மொழிக் கல்வி
தேவை என்று அவர்களே கேட்டு, அதற்காக வாதாடி, பாடு
பட்டதற்குப் பிறகு இப்போது அவர்களுக்கு அந்த நிலைமை
இருக்கிறது. ஆனால், தமிழகத்திலே இந்த நிலைமை இல்லை.
என்னிடத்திலே, இந்த மைனாரிட்டி பிரிவினர் வந்து கேட்டு,
ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று
கேட்டால், ஏன் உங்களுடைய மொழியிலே நீங்கள் படிக்கக்



கூடாது என்று கேட்கின்ற வழக்கத்தைத்தான் வைத்துக் கொண்டி
ருக்கிறேன். காரணம்—அவர்களுடைய தாய் மொழியிலே அது
நடந்தால், அந்த மொழி பேசுகின்றவர்களிலே ஏனைய மக்கள்
பயன் பெறுவார்கள். ஆக அந்த அடிப்படையில் தமிழக அரசு
மைனாரிட்டியைப் பொறுத்த வரையில், நல்ல ஒரு கொள்கையை
இன்றைக்குப் பின்பற்றி வருகிறது. மைனாரிட்டி என்று பேசு
கின்ற நிறுவனங்கள், அந்த உரிமைகளுக்காக, மக்களுக்காக,
உண்மையிலேயே பாடுபடுகிறதா என்று பார்த்தால், 100க்கு 10
பேர்கள் இருப்பார்கள் அந்த மைனாரிட்டி பிரிவைச் சேர்ந்த
வர்கள். இன்றைக்கு முஸ்லீம்கள் நடத்துகிற பல நிறுவனங்களைப்
பார்த்தால், மைனாரிட்டி உரிமைகளைப் பற்றி பேச்சு எடுக்கின்
றார்களே தவிர, அந்த முஸ்லீம்கள் 50 சதவீதமாவது இருக்
கிறதா என்றால் கிடையாது. ஆக அவர்கள் யாருக்காக பள்ளிக்
கூடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், கல்வி நிறுவனங்கள்
நடத்திக் கொண்டிருக்கிறார்கள்? எதற்காக நடத்திக் கொண்டி
ருக்கிறார்கள்? ஆகவே அப்படி பார்க்கும்போது கல்வி
நிறுவனங்கள் மைனாரிட்டியினுடைய உரிமைகளை இன்றைக்குத்
தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. தாறுமாறாகப்
பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. மக்களை மதிக்காமல்
இன்றைக்கு இருக்கின்ற ஒரு சமுதாய உணர்வுகளை மதிக்காமல்
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எஸ்.ஐ.ஈ.டி. நிர்வாகம்,
உங்களுக்குத் தெரியும். அதற்காக ஒரு சட்டத்தைக் கூட
கொண்டுவந்து நிறைவேற்றி வைத்திருக்கிறோம். ஆகவே, 3,
4 மாத காலம், நானே உட்கார்ந்து பேசி, அந்த நிர்வாகமும்
பாதிக்கப்படாமல் அல்லது கோபப்படாமல், இவர்களும்
பாதிக்கப்படாமல், இரண்டு பேரையும் சமரசமாக பேசி, 3
மாதம் வரை, 20, 30 தடவைகள் பேசியிருப்பேன்—இதை
நல்ல நிலைமையை எடுத்துப் பேசி, அவர்கள் கல்லூரி நடை
பெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் பெரியவர் ஊரிலே வந்தி
ருக்கிறார் என்று சொன்னார்கள். வந்ததற்குப் பிறகு, என்னைப்
பற்றிக் கண்டித்து ஒரு புத்தகமும். 'மறுபடியும் ஆசிரியர்களை
பழிவாங்கத் தொடங்கியிருக்கிறீர்கள்.' நான் இன்றைக்கு
அதைப்பற்றிக் குறிப்பிட்டு பேசுவதற்குக் காரணம், மைனாரிட்டி
மக்களுக்காகப் பேசுகின்ற தலைவர்கள் இத்தகைய தவறான
போக்குகளை தடுத்து நிறுத்துவதில், தலைமை தாங்க
வேண்டும். மைனாரிட்டி மக்கள் மீது மாசு கற்பிக்கப்படாமல்,
களங்கம் ஏற்படாமல் இருப்பதற்கு அந்தப் பிரச்சினைகளுக்கு
நீங்களே தலைமை தாங்குங்கள், நாங்கள் ஆதரவு தருகிறோம்.
ஏன் அரசு அதைப் பற்றி பேசவேண்டும்? ஏன் உங்களுக்கு அந்த
அக்கறை இல்லை? ஏன் அதைப்பற்றி நீங்கள் பேசக்கூடாது?
ஆகவே நீங்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நல்ல
படியாக நடத்துங்கள், முழுமையான ஆதரவை இந்த அரசு
தரும். அந்த நிறுவனங்கள் இப்போது இருப்பதை விட இன்னும்,
நல்லபடியாக நடப்பதற்குத் தேவையான உதவிகளை நாங்கள்
செய்கிறோம். ஆக இது தான் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமே
தவிர, மைனாரிட்டி உரிமைகளைப் பயன்படுத்திக்கொண்டு,

நாங்கள் பின்பற்றி வந்த இயக்கத்தின் சார்பிலே, நாங்கள் வளர்த்துக் கொண்டிருக்கிற கொள்கைகள், எண்ணங்கள் சிந்தனைகள், கருத்துக்கள் அடிப்படையிலே, நாங்கள் இதை வரவேற்று இன்றைக்கு அதற்கு உருவம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, 'சைன்ஸ் சென்டர்' அல்லது அது சம்பந்தமான கல்ச்சர், கலாச்சாரம் அல்லது விஞ்ஞான மனப்பான்மையை, தமிழ் சமுதாயத்திலே ஏற்படுத்துவதற்கான அடிப்படை வேலைகள் ஏற்கனவே துவங்கிவிட்டன என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இறுதியாக பல்வேறு பிரச்னைகள் பற்றி சொன்னார்கள் சொல்லியிருக்கிற கருத்துக்கள் அதிகாரிகளாலே குறிப்பு எடுக்கப்பட்டிருக்கின்றன. என்னாலேயும் குறிப்பு எடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, அவைகளைப் பற்றி தக்க முடிவுகளை இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியை நான் சொல்லிக்கொண்டு கடைசியாக இரு மொழிக் கொள்கையைப் பற்றி குறிபபிட விரும்புகிறேன்.

இந்த அரசை பொறுத்த மட்டில் மதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த இதே சட்ட மன்றத்தில் எதிர்ப்பு இல்லாமல் நிறைவேற்றப்பெற்ற அந்த இரு மொழி கொள்கை என்ற அந்த தீர்மானத்தை முழு மனத்தோடு நிறைவேற்றுவது, பின்பற்றுவதுதான் இந்த அரசினுடைய கடமை என்பதை நான் இங்கே தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் (கைதட்டல்). இன்றையதினம் குறிப்பாக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் ஏன் இந்தி படிக்கக் கூடாது? ஏன் இந்தி படிக்கக் கூடாது? என்ற கேள்வியை கேட்பதன் மூலமாக இந்த இருமொழி கொள்கையிலே ஒரு மாற்றம் ஏற்படுத்த அவர்கள் முயற்சி எடுததுக் கொண்டிருக் கிறார்கள். நா அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.— அதிலே மாற்றம் நிச்சயமாக கிடையாது. இந்தி மொழி என்று பார்க்கின்ற பொழுது அந்த தாய் மொழியாகக் கொண்ட பெரிய மாநிலங்கள் 4, 5 இருக்கின்றன.

இந்தி மொழியை மாநில மொழியாக ஏற்றுக் கொள்வோமே யானால், அந்த மாநில மக்கள் முதல்தர குடிமகனாகவும் நாம் இரண்டாந்தர குடிமகனாகவும்—ஆகவே இந்த இரண்டாந் தர குடிமகன் என்ற அந்தஸ்தை நாமே விரும்பு வரவேற்றுக் கொண்டஒரு நிலைமை—ஏற்றுக்கொள்ளக்கூடிய பயித்தியக்கார தனத்தை தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்குமே செய்ய மாட்டார்கள். (கைதட்டல்) ஆனால், இந்த மொழி பிரச்சினையில் கடந்த 30 ஆண்டு காலமாக மத்திய அரசானாலும், வேறு பல அரசுகளானாலும்—எடுத்து வருகிற தவறான போக்கினால் பணம் விரயமாக்கிக்கொண்டிருக் கிறது. இருக்கிற நேரம் விரையமாக்கிக்கொண்டிருக்கிறது' மக்கள் உழைப்பு விரையமாகிக் கொண்டிருக்கிறது. இந்த விரைவிலே ஒரு நல்ல தெளிவான முடிவை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளவிரும்பு





(இரவு 8–10)

கிறேன். விரைவிலே தெளிவான நல்ல முடிவை மத்திய அரசு எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தியாவைப்போல அதிகமான மொழிகள் படிக்கின்ற ஒரு நாடு உலகத்திலே கிடையாது. எல்லோரும் ஒரு மொழியைத்தான் படிக்கிறார்கள். அந்த மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கிறது. அந்த மொழிதான் பயிற்சி மொழியாக இருக்குறது. ஆனால் இந்தியாவில் நாம்தான் அதிகமான மொழியை படிக்கிறோம். மொழி படிப்பதற்கு நாம் தான் அதிக நேரத்தைச் செலவு செய்கிறோம். அன்னிய மொழியிலே படிக்கின்ற அந்தப் பழக்கத்தை நாம் தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே மொழி என்றுபார்க்கின்ற போது, அதனால் பாதிக்கப்பட்ட சமுதாயமாக இன்றைக்கு இந்திய சமுதாயம் இருக்கிறது. ஆகவே பொறுப்பிலே இருக் கின்றவர்கள், ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள்' மொழி சம்பந்தமான முடிவை, அறிவு ரீதியாக சரியானபடி எடுப்பார் களானால் அதுவும் உடனடியாக எடுப்பார்களானால் அவர்கள் ஆங்கில மொழிக்கு மிகப் பெரியதொண்டு செய்தவர்களாவார்கள். இன்றைக்கு நாம் கேட்கிறோம் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்வதிலே உங்களுக்குஎன்ன கஷ்டம்? நாங்கள் இன்றைக்கு அதிகமான அளவிற்கு வற்புறுத்தி வருவதே....

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை இந்திரா காங்கிரசிலே உள்ளவர்கள் எதிர்க்கவில்லை. நாங்கள் சொன்னது எல்லாம், விரும்பிப் படிக்கின்றவர்களுக்கு அரசு முன்வந்து செய்யுமா என்பதே தவிர, இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை நீங்கள் கொண்டு வந்ததே குற்றம் என்று சொல்லி நாங்கள் குறைச் சொல்லவில்லை என்பதையும், விரும்பிப் படிக்கின்ற பிள்ளை களுக்கு அரசு தன்னுடைய கடமையைச் செய்வதற்கு முன் வருமா என்றுதான் நான் கேட்டேன் அது குற்றம் என்று நான் சொல்லவில்லை என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

மண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இஷ்டம் என்று சொல்லி வந்தாலே அது மூன்று மொழிக் கொள்கைகளுக்கு வழி வகுக்கும் என்ற காரணத்தால்தான் இது கூடாது என்று சொல்கிறோம். இத்தகைய உணர்வை நாம் வளர்க்கக் கூடாது என்று சொல்கிறோம். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இங்கே பெரும்பாலானவர்கள் கேட்டுக்கொண்டு இருப்பது ஆங்கிலத்தையும் ஆட்சி மொழியாக, சட்டபூர்வமாக ஒரு உரிமையை தந்து விடுங்கள் என்று கேட்கிறோம். கேட்கின்ற எங்களுடைய கருத்துக்கு நீங்கள் மரியாதை தருவ

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 15

தில்லை. ஆனால் உத்திரப்பிரதேசத்திலே ஆட்சி மொழியாக
இந்தி மட்டுமல்ல, இரண்டாவது ஆட்சி மொழியாக உருதுவையும்
கொண்டு வந்திருக்கிறீர்களே, அங்கே இருக்கின்ற மைனாரிட்டு
மக்களுக்காக தரப்படுகின்ற இந்தச் சலுகையை தமிழ்நாட்டு
மக்களுக்காக அல்லது ஆந்திரா மக்களுக்காக, அல்லது இந்தி
பேசாத மக்களுக்காக ஆங்கிலத்தையும் இரண்டாவது தேசிய
மொழியாக ஏற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு என்ன கஷ்டம்
இருக்கிறது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
ஆகவே எப்படி கேட்க வேண்டுமோ அப்படி கேட்டுக்கொண்டு
இருக்கிறோம். எப்படிச் சொல்லவேண்டுமோ அப்படிச்சொல்லிக்
கொண்டிருக்கிறோம். வேலைக்காக சில நிலைமை வருமானால்,
அப்படி வேலைக்காக நாங்கள் படிக்கவில்லை. இங்கே படிக்
கின்ற இளைஞர்கள் எல்லாம் மத்தியப் பிரதேசத்தில போய்
அங்கே வேலைக்கு சேரவேண்டும் என்றால், அங்கே இருக்கக்
கூடிய இளைஞர்களுடைய கதி என்னாவது? அவர்கள் எங்கே
வேலைக்குப் போவார்கள்? அங்கே ஆள் இல்லாமல் இருக்கிறதா
ஆகவே அந்த அடிப்படையிலே பேசுவது அல்ல. இன்னும்
சொல்லப்போனால் தமிழ்நாட்டு இளைஞர்கள் அறிவு வளர்ச்சிக்
காக வியாபார வளர்ச்சிக்காக, வேறு பல சேவை வளர்ச்சிக்காக
வேறு மாநிலங்களுக்கு வேறு நாடுகளுக்கு செல்ல வேண்டும்
என்று விரும்புகிறோமோ தவிர மற்றபடி அல்ல. தமிழ்
நாட்டிலே உள்ள இளைஞர்கள் இங்கேயிருந்து வேலை செய்து
பிழைக்கக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டு பொருளாதாரம் நல்ல
வளர்வு பெற்றதாக அமையவேண்டுமென்ற நோக்கம் தான்
எங்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை நம்மாலே
அடையமுடியும். இங்கேயிருந்து போனால அங்கே இருக்கின்ற
இளைஞர்களைச் சுரண்டுவதற்கு இங்கே நாம் மாணவர்களைத்
தயாரித்துக்கொண்டிருக்கவில்லை ஆக இரு மொழிக் கொள்கை
என்று நாங்கள் சொல்கிற போது, இன்றைய நிலையிலே
இந்தியாவினுடைய பல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வு காணக்
கூடிய நல்ல கொள்கையைத் தந்த பெருமை தமிழ்நாடு சட்ட
மன்றத்திற்கு இருக்கிறது என்பதை நான் இங்கே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
இன்றைக்கு பீகார் போன்ற அதுமட்டுமல்ல.
போனால் மும்மொழிக் கொள்கை என்று மாநிலத்திற்குப்
கொண்டு இருக்கிறீர்களே, அங்கே போனால் அவர்கள் பேசிக்
மொழிக்கொள்கையைத் தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு
இந்தியைத் தவிர அவர்கள் என்ன படித்துக் கொண்டிருக்
கிறார்கள்? எதையுமே சரியாகப் படிக்கவில்லை, என்பதுதான்
அங்கே இருக்கின்ற எழுத்து அறிவுக் கணக்கு நமக்கு தந்து
கொண்டிருக்கிறது. இந்தி மொழியை அங்கே இந்தி பேசுகின்ற
மாநிலங்களிலேயே ஒழுங்காக, முறையாக இன்னும் படிக்க
வில்லை என்ற புள்ளி விவரம் நமக்கு வந்து கொண்டிருக்கிறது.
ஏதோ அவர்கள் படித்து, தேர்ச்சி பெற்று அந்த மொழி நல்ல
நிலைமைக்கு வந்துவிட்டது, ஆகவே நீங்களும் படித்து அந்தப்



1983 மார்ச் 15] [திரு. செ. அரங்கநாயகம்]

புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்கிற
அளவிற்கு அந்த மொழி இல்லை. ஆகவே இரு மொழிக்
கொள்கை என்பது இன்றைக்கு அரசியல் ரீதியாக, அந்தப்
பிரச்னையைப் பார்க்க வேண்டுமே தவிர, சௌகரித்திற்காக
அல்ல. இந்த மொழிக் கொள்கையைப் பற்றி பேசுகின்றபோது,
கட்சி ரீதியாக நீங்கள் பாதிக்கப்படுவீர்கள் என்பதை நான்
குறிப்பிடவில்லை. ஆனால் தமிழகத்திலே மாண்புமிகு
பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல, ஒரு மிகப்பெரிய
எதிர்ப்பு உணர்வை தேவையில்லாமல், நீங்கள் தூண்டிவிடு
கிறீர்கள், அதை நாங்கள் பார்க்கிறபோது நீங்கள் எங்களுடைய
கண்ணுக்குத் தெரியவில்லை. உங்களைத் தூண்டுபவர்கள்
எங்களுடைய கண்ணுக்குத் தெரிகிறார்கள். (மேசையைத்தட்டும்
ஒலி). நீங்கள் யாருக்கு விசுவாசமாக இருக்கிறீர்களோ அவர்கள்
எங்களுடைய கண்ணுக்குத் தெரிகிறார்கள். ஆகவே அந்த
அடிப்படையிலே பார்க்கின்றபோது, தேவையில்லாத பிரச்னை
களை நீங்கள் உருவாக்க வேண்டாம். இன்றைக்கு நம் கண்
முன்னால் இருப்பது மக்களிடத்திலே காணப்படுகிற
வறுமையைப் போக்குவது எப்படி? ஏழ்மையை போக்குவது
எப்படி? வேலை வாய்ப்புகளை உருவாக்குவது எப்படி அந்த
மக்களை மேலே கொண்டு வருவது எப்படி? இன்றைக்கு
நம்மிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களை
வைத்துப் பார்த்தால், 35 ஆண்டு காலத்தில் வறுமைதான்
வளர்ந்து இருக்கிறதே தவிர, மக்களுடைய வாழ்க்கையிலே
நலன்கள் குவியவில்லை,

வறுமை வளர்கின்ற அளவிற்கு திட்டமிட்ட பொருளாதாரம்
செயல்படுகின்ற நாட்டை நாம் பார்க்கிறோம் என்றால்
யாரைக் குறை சொல்வது? இது எங்கேயுமே காணமுடியாத
ஒரு வேடிக்கை. 5-வது ஐந்தாண்டுத் திட்டம், 6-வது ஐந்
தாண்டுத் திட்டம் என்று திட்டமிட்ட பொருளாதாரத்தை
நாம் ஆரம்பித்து, அதை நிறைவேற்றிய பின்னாலும் நாம்
கணக்கிட்டுப் பார்த்தால், 4 % முன்பு இருந்தது. இப்போது
அது குறைந்து இருக்கிறது என்று சொன்னால், ஐந்தாண்டுத்
திட்டங்களைப் போட்டவர்களைப் பாராட்டலாம். 40%
என்பது 50% ஆகியிருக்கிறது என்று சொன்னால் அதிலே
இருக்கும் குறைபாடு நமக்குத் தெரிகிறது என்று அர்த்தம்.
அப்படி தெரிகின்ற காரணத்தால்தான் அதை ஒப்புக்கொண்டு
போடப்பட்ட திட்டம் தான் 20 அம்சத் திட்டம். 5 ஆண்டுத்
திட்டங்கள் எதிர்பார்த்த அளவிற்கு ஏழைகளுக்குப் போய்ச்
சேரவில்லை என்பதை ஒப்புக்கொண்டு, அவர்களுக்கு நேரடி
யாக பலன் போய்ச் சேர வேண்டும் என்று போடப்பட்ட
திட்டம்தான் 20 அம்சத் திட்டமே தவிர வேறு அல்ல. 20 அம்சத்
திட்டத்தின் அடிப்படையே அதுதான்.

விரோதமானவர்கள் என்று பார்க்கிறார்கள். மற்ற மாநிலங்களில் எப்படி பார்க்கிறார்களோ அது வேறு; அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது வேறு. நம்மைப்பார்த்து நம்மைப்பற்றி 'இவர்கள் தேசியத்திற்கு எதிராக இருக்கிறார்கள்,' என்ற ஒரு பிரச்சாரத்தை செய்து வருகிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்த நாட்டிலே பல்வேறு வகுப்புவாத உணர்வுகள், வட்டார உணர்வுகள் ஏற்பட்டு, அதனாலே இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு ஏற்பட்டுவிடக்கூடாது என்றும், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்க வேண்டுமென்றும் ஒரு கருத்தை அமைச்சர்கள் மாநாடுகளில் வலியுறுத்துகிறார்கள் அல்லது நாங்கள் பேசும்போது வலியுறுத்துகிறார்கள், நாமும் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அதற்கு உரிய மரியாதை செலுத்துகின்ற அடிப்படையிலே சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே தான் இந்த புத்தகத்தை வைத்தால் நல்லது என்று கருதி நாம் வைத்திருக்கிறோம். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிடும் போது, வேறு ஒரு உறுப்பினர் பேசியதைக் கண்டித்துப் பேசுவார்கள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன். காரணம் அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆனால் அவர்கள் அதை எதிர்த்துப் பேசினார்கள். ஏன் வைத்தீர்கள் என்று கேட்பதைப்போல பேசினார்கள் அவர்களுக்கு நான் தெரிவிக்கிற கருத்து இதுதான்.

இந்த கருத்து மாணவர்கள் மத்தியில் பரவ வேண்டும் என்பதற்காக வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல. மத்திய கல்வி அமைச்சர் மாண்புமிகு ஷீலா கவுல் அவர்கள் சென்னைக்கு வந்தபோது ஒரு கூட்டத்திலே கலந்துகொண்டுவிட்டு, பத்திரிகையாளர்களை சந்தித்து பேசும்போது குறிப்பிட்டதாக ஒரு கருத்து பத்திரிகையில் வந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே தேசிய ஒருமைப்பாட்டு கருத்துக்கு முக்கியத்துவம் தரப்படுவதாக பாடநூல் இல்லை என்ற ஒரு கருத்தை வெளியிட்டதாக பத்திரிகையில் செய்தி வந்தது. அப்போது நான் உடனடியாக நம்முடைய கல்வித் துறைக்குத் தொடர்புடையவர்களிடம் சொல்லி, நம்முடைய புத்தகங்களில் எத்தனை வரி, எத்தனை பாரா, எத்தனை பக்கம் இருக்கிறது என்று கணக்கிட்டு, என்.சி.இ.ஆர்.டி என்ற மத்திய அரசு சார்பிலே புத்தகம் வெளியிடுகிற நிறுவனத்திலிருந்து வெளியான வித்தகத்தோடு ஒப்பிட்டு கன்சாலிடேட் பண்ணி மாண்புமிகு ஷீலா கவுல் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் அதுபற்றி எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லவில்லை, நீங்கள் எடுத்திருக்கிற முயற்சியைப் பாராட்டுகிறேன் என்று அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருந்தார்கள். தேசிய உணர்வை வளர்க்க [illegible]



அந்த சந்தேகத்தைப் போக்குவதற்காக என்பது மட்டுமல்ல, நம்முடைய குழந்தைகளுக்கு அந்த உணர்வு வரவேண்டும் என்று விரும்புகிறோம். அது மட்டுமல்ல. தேசியத்திற்கும் தேசபக்திக்கும் இடையே இருந்து வந்த அந்த வேறுபாட்டை, தவறான அர்த்தத்தை உடைத்து எறிய வேண்டுமென்று சொல்கிறோம். வெள்ளைக்காரனை எதிர்ப்பதுதான் தேசபக்தி என்ற தவறான அர்த்தத்தைப் போக்கி' இந்த நாட்டுக்காகப் பாடுபட வேண்டும்; இந்த நாட்டு மக்களுக்காகப் பாடுபட வேண்டும்; இந்த நாட்டுக்காகத் தியாகம் செய்ய வேண்டும். இந்த நேரத்தில்கூட தியாகம் செய்ய முடியும்; இந்த நேரத்தில்கூட உயிரைத்தர முடியும்; இந்த நேரத்தில்கூட தன்னுடைய வாழ்வை இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படுத்த முடியும். அப்படி ஏற்படுகின்ற அந்த உணர்வு தான் தேசபக்தி. அத்தகைய உணர்வை நாம் வெளியிடும்போதுதான் இந்த நாட்டிலே சாதனைகள் தோன்ற முடியும். சாதனைகள் தோன்றும்போதுதான் ஒரு சமுதாயம் மேலுக்கு, மேலுக்குப் போக முடியும்.

ரஷியாவிலே இருக்கிற ஒரு விஞ்ஞானி விண்வெளியில் ராக்கெட்டிலே பயணம் செய்கிறான் என்று பார்க்கும்போது, அந்த உணர்வு இல்லை என்றால், நாட்டுப்பற்று இல்லை என்றால் அவன் ஏன் விண்ணில் பயணம் செய்ய வேண்டும்? எதற்காக அவன் போக வேண்டும்? அல்லது நம்முடைய நாட்டிலே ராக்கெட்டிலே போக இரண்டுபேர் வருகிறார்கள் என்றால் அவர்கள் சம்பளத்திற்காக வரவில்லை; விளம்பரத்திற்காக வரவில்லை; இந்த நாட்டின் கௌரவத்தை உயர்த்துவதற்காக வருகிறார்கள். அந்த உணர்வு பள்ளியிலேயே வர வேண்டும்.

நான் சைனாவுக்குப் போயிருந்தபோது, அங்கே நர்சரி பள்ளியில் படிக்கிற குழந்தைக்கு ஒரு பாடலை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதன் அர்த்தம் என்ன என்று கேட்டேன். 2½ அல்லது 3 வயது குழந்தை அந்தப் பாட்டைப் பாடுகிறது. அதன் பொருள் "நான் வளர்ந்து பெரியவன் ஆனால் துப்பாக்கி ஏந்தி என்னுடைய நாட்டைக் காப்பேன்" என்கிற அளவுக்கு அந்த இளம் உள்ளத்திலேயே தேசிய உணர்வை, தேசியப்பற்றை அவர்கள் வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த நாடு வளர்கிறது ஆகவே அந்த நாடு வளர்கிறது. என்று சொல்லிக் கொண்டு நாம் அதைப்பற்றி கவனிக்க மறுத்தால், பக்கத்திலேயே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை பார்க்காமல் நாம் நம் வழியே போய்க்கொண்டேயிருந்தால், பக்கத்து நாடுகளிலே ஏற்படுகிற அனுபவங்களை எல்லாம் நாம் பார்த்து பயன்படுத்தும் வாய்ப்பை இழந்துவிடுவோம். இங்கே வறுமை மட்டும்தான் வளரும், ஏழ்மை மட்டும்தான் வளரும். ஏழைகள்தான் பெருகுவார்கள். போன வருடம் 2 வேளை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த வருடம் ஒரு நேரம்தான் சாப்பிடுகிறார்கள் என்று அந்த சாதனையைத்தான் நம்மால் ஏற்படுத்த முடியும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 15

இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்தை நாம் போடுகிறோம் என்று சொன்னால், திட்டத்தின் வாயிலாக நாம் வேலை வாய்ப்பை உருவாக்கி, அதன் மூலம் அவர்கள் சம்பளம் வாங்கி அவர்கள் குழந்தைகளுக்குச் சாப்பாடு போடுவதற்கு இப்போது ஆகாது என்ற நிலைமையை ஏற்றுக்கொண்ட பின்னர் தான் நாம் நேரடியாக சாப்பாடு போடும் நிலையை ஏற்றுக்கொண்டு, வந்து இருக்கிறோம். ஆகவே, மக்களுக்கு இருக்கும் கஷ்டங்களைப் போக்குவதற்கு நாம் முயற்சி எடுத்து அதிலே தோற்றுக்கொண்டு இருக்கிற நிலைமையை நாம் ஏற்றுக்கொண்ட பிறகு, அந்தக் குறையை களைந்து கொண்டு இருக்கிற நிலையில், மக்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு நாம் அத்தனை பேரும் ஒருங்கிணைந்து முயற்சி செய்ய வேண்டும் என்று பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் நாம் கவனத்தைச் செலுத்திக்கொண்டு வருகின்ற நேரத்தில்' தேவையற்ற இதுபோன்ற பிரச்னைகளை நம் கிளப்பாமல் இருப்பது நல்லது. அவர்கள் கிளப்பமாட்டோம் என்று உறுதி மொழி கொடுத்து இருக்கிறார்கள், ஆகவே, தயவு செய்து இங்கே இருப்பவர்கள் அதைக் கிளப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிற போது பொறியியல் கல்லூரியில் சேர்ந்துள்ள மாணவர்கள் சென்ற ஆண்டு 19% எஸ்.சி/எஸ்.டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்ந்துள்ளார்கள் என்ற அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஷெட்யூல்காஸ்ட்ஸ்—அரிசன மாணவர்கள் எவ்வளவு பேர், எஸ்.டி. மலைவாழ் மக்கள் எவ்வளவு பேர், அந்தக் கணக்கைத் தனித்தனியாக அமைச்சர் அவர்கள் தருவார்களா? இதிலே மற்ற பிரிவினர் மலை வாழ் மக்கள் அல்லது பிற கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் தவறான சான்றிதழ் பெற்று சேர்ந்து இருக்கிறார்களா? எங்களுக்கு இருக்கும் ஐயப்பாடு எல்லாம் ஒரே ஆண்டில் இவ்வளவு பர்சன்டேஜ் கொடுத்து இருக்கிறீர்களே, இதிலே ஏதாவது தவறு நடந்து இருக்குமோ என்பதால், என்னுடைய ஐயப்பாட்டை இந்தக் கேள்வி மூலம் அரசுக்குத் தெரிவித்து, விளக்கம் பெற விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: எனக்குத் தெரிந்த வரையில் எஸ்.சி/எஸ்.டி என்ற குறிப்புகளையெல்லாம் தருவது மத்திய அரசுதான். மாநில அரசைப் பொறுத்தது அல்ல.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, போலிச் சான்றிதழ்கள் வாங்கிச் சேர்ந்து இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அதுபற்றிய புகார்கள் ஒன்றிரண்டு வந்து, அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கும் இதற்கும் போட்டு குழப்பிக்கொள்ளத் தேவையில்லை.



1983 மார்ச் 15]

திருமதி தா. இராசாம்பாள்: திடீரென்று எப்படி இந்த விகிதாச்சாரம் உயர்ந்தது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: திடீரென்று உயர்ந்தது என்று சொன்னால், அதற்குக் காரணம் தாய்மொழியில் நாம் இப்போது கல்வி கற்றுக் கொடுக்கிறோம். அதைத்தான் நான் அடிக்கடி வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். அது சரியா தவறா என்பதை மாணவர்களைச் சந்தித்து நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமே தவிர எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்துகொண்டு வருகிறோம்.

முன்பு பி.யூ.சி.க்கு வந்து ஆங்கிலத்தில் படித்தார்கள். அதனால் அதிலே 35 மார்க்குகள் கூட வாங்கித் தேற முடியாமல் எத்தனையோ மாணவர்கள் ஊருக்கு ஊர் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தாய்மொழியில் கல்வி என்று வருகிறபோது அந்தமாணவர்கள் நல்ல முறையில் படிக்கிறார்கள். என்னுடைய வாதம் எல்லாம் நாம் ஆரம்பத்தில் இருந்தே தாய் மொழியில் சொல்லித்தருகிறோம், அதனால் அவனுடைய கல்வி வளர்ச்சி நல்ல முறையில் இருக்கிறது. அறிவிலே தரம்கெட்டவர் களாக யாரும் இல்லை. அறிவு இல்லாதவர்களாக யாரும் இல்லை. அறிவு இருக்கிறது. அந்த வளர்ச்சியைத்தான் நாம் இப்போது பார்க்கிறோம். வேறு மொழியில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்த தவறு அவர்களை இதுநாள் வரையில் பாதித்துக்கொண்டு வந்து இருக்கிறது. அது சரியா தவறா என்ற அடிப்படையில் பார்க்கின்ற போதுதான் நாம் கொண்டு வந்து இருக்கும் மாறுதல் சமுதாயத்திற்கு ஒரு நல்ல பயன் தந்து இருக்கிறது.

(இரவு 8–20)

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து கல்லூரி உடற் பயிற்சி இயக்குநர்களுக்கும், உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், கல்லூரி நூலகர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கு இணையாக ரூ. 70–40–110–50–1300–இ.பி.50–1600 என்ற ஊதிய விகிதத்தை அளிப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இது பல்லாண்டு காலமாக அவர்கள் கேட்டு வந்த ஒரு கோரிக்கை. பல்கலைக்கழக மானியக் குழுவுக்கும் நமக்கும் கடிதப் போக்கு வரத்து ஏற்பட்டு, இன்றைய தினம் நல்ல முடிவு ஏற்பட்டிருக் கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இங்கே இன்னொரு கருத்தையும் நான் குறிப்பிட வேண்டும் "தேசியம் வளர்த்த தமிழ்" என்ற ஒரு புத்தகத்தை வைத்திருப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள்குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் டெல்லியில் எப்படிப்பார்க்கிறார்கள் என்றால் நாம் தேசியத்திற்கு

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 15

(இரவு 8–30)

நான் இப்போது சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு முழுமனதுடன் இந்த மானியக்கோரிக்கையினை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், திரு. க. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் இல. பலராமன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 17— கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,55,76,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16-3-1983 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-31 மணி ஒத்திவைக்கப்பெற்றது

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் எதுவுவுமில்லை

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

72. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்க குறிப்பு—1983-84 (தமிழ், ஆங்கிலம்

73. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத் திட்டம் 1983–84 (ஆங்கிலம்).



1983 மார்ச் 15]

## இணைப்பு .

(....ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 240க்கான விடையைக் காண்க.)

மத்திய கூட்டுறவு வங்கிகள், விவசாய சங்கங்கள மூலமாக நலிந்த மற்றும் சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவீதம் வட்டியிலும், இதர விவசாயிகளுக்கு 12 சதவீத வட்டியிலும குறுகிய கால கடன் வழங்குகிறது.

2. விவசாய சேவை சங்கங்கள் நலிந்த பிரிவினைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகளை அளித்துள்ளது:—

(1) மத்தியக்கால மாற்றுக் கடன்கள்/தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்கள் மீதான சாதாரண வட்டி தள்ளுபடி.

(2) விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களில் குறுகிய கால் விவசாயக் கடன்கள் மீதான அபராத வட்டி தள்ளுபடி.

(3) நிலவள வங்கிகளின் நீண்டகால விவசாயக் கடன்கள் மீதான அபராத வட்டி தள்ளுபடி.

(4) சிறு விவசாயிகளின் 31-3-80-ல் நிலுவையில் உள்ள மத்தியகால மாற்றுக் கடன்கள், மற்றும் தவணை நீட்டிதத மததியகால மாற்றுக் கடன்கள் வட்டியுடன் தள்ளுபடி.

(5) 1–7–75 முதல் 31–3–80 வரை சிறு விவசாயிகள் மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டிதத மதநியகால மாற்றுக் கடன்கள் செலுத்தியதை வட்டியுடன் அவர்களுக்கு திருப்பி அளித்தது.

(6) 30-6–81-க்குள் குறுகிய கால கடன் நிலுவைகளை திருப்பி செலுத்திய சிறு விவசாயிகளுக்கு அளித்த வட்டி மற்றும் அபராத வட்டி சலுகைகள் மற்றும் இதர விவசாயிகளுக்கு அளிதத அபராத வட்டி சலுகைகள், 1-4-80 முதல் 31–12–80 வரை குறுகிய கால கடன்களுக்கு சிறு விவசாயிகள் செலுத்திய வட்டி மற்றும அபராத வட்டியும் இதர விவசாயிகள் செலுத்திய அபராத வட்டியும் அவர்களுக்கே திருப்பி தருதல்.

(7) 30-6-78-ல் நிலுவை நின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மத்தியகால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்தியகால மாற்றுக் கடன்கள் 1978–80ம் ஆண்டிலிருந்து மூன்று முதல் ஆறு ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் வகையில ஒரே கடனாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

ஆக பக்கத்து நாட்டிலே ஏற்படுகிற வேறுபல நாடுகளிலே ஏற்படுகிற அனுபவங்களை வைத்து பார்க்கிறபோது, அந்த உணர்வுகளை வளர்க்கிற திடமான நம்பிக்கையை நாம் கொள்கிறோம். ஆகவே தேச பக்தி உணர்வு என்று சொல்கிறபோது, ஒரு கட்சிக்கு மட்டும் உரிய ஏகபோக உணர்வு அல்ல. அல்லது ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் இருக்கும் ஏகபோக உணர்வுமல்ல. இன்றைய நிலையிலேயும் அது இருக்க வேண்டும் என்கிற நம்பிக்கையிலே சொல்லப்படுகிற கருத்து என்பதை குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துகிற அந்தக் கருத்துக்கள் தேவைப்படுகிறது.

நேற்றையதினம் காந்தி படத்தை பார்க்கிறபோது, அவர் நம்முடைய சமுதாயத்திற்காக பாடுபட்டதை, யார் பார்த்தாலும், மக்களுக்காக தியாகம் செய்யவேண்டும் என்ற உணர்வு ஏற்படுமானால் அது நல்லதுதான். அப்படிப்பட்ட கருத்துக்கள் பரவவேண்டும். ஆகவே அந்தக் கருத்துக்களை பரப்ப வேண்டும், அதை மாணவர்கள் மனதிலே பரப்ப வேண்டும், என்கிற நோக்கத்தோடு செய்கிறபோது, இப்படிப்பட்ட கருத்தை நல்ல பெற்றால், இதன் பின்னணியிலேதான் அதைப் பார்க்க வேண்டுமே தவிர யார் எழுதினாலும் புத்தகம் போட்டுவிடுகிறார்கள் என்று சொல்லக்கூடாது. புத்தகம் என்பது அப்படி யாரும் எழுதக் கூடியது அல்ல. பலபேர் கூடிதமே எழுத முடியாத நிலையில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அது நமக்குத் தெரியும். 10 நாட்களாக யோசித்துக் கொண்டிருக்கிறேன் எழுத முடியவில்லை என்று சொன்னால், எழுத்தாற்றல் இல்லை என்பதுதான் குறையே தவிர, நேரம் இல்லை என்பது அல்ல. ஆகவே யார் வேண்டுமானாலும் புத்தகம் எழுதிவிட முடியாது. அந்த ஆற்றல் இருக்க வேண்டும், அந்த ஆற்றல் இருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அதிகாரிகளாக இருந்தாலும், அரசியல் வாதிகளாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் அவர்கள் எழுதுகிற புத்தகம் மாணவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும் என்றால் அதை நிச்சயம் அரசு பாடப் புத்தகமாக வைக்கும் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ... (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு ஒரு கோணத்தில் பதில் சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தால், அதைப்பற்றி எந்த ஒரு பிரச்சனையையும் நான் எழுப்புவதற்கு விரும்பவில்லை. இதிலே இன்னொரு பிரச்சனை மறைந்து போய் விடுகிறது. தலைமைச் செயலாளராக பணிபுரியும் திரு. திரவியம் அவர்கள் நூல் எழுதலாமா அதற்கு தகுதி உள்ளதா என்று கேட்டால், அவர் எழுதிய நூல் நல்ல கருத்துக்களை உடையதா என்று கேட்டால், அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் அந்த அளவில் பொருத்தமானதுதான், அதில் எனக்கு கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் அதுபற்றி ஏற்கெனவே இந்த அரசாங்கத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டு வெளியே வந்த ஒரு





கருத்து, அந்த புத்தகம் அரசாங்கத்தினுடைய பாடநூல் நிலையத்தினால் வெளியிடப்படாமல், குறைந்த விலையில் மாணவர்களுக்கு கிடைக்கும்படி வெளியிடப்படாமல், தனியார்களால் வெளியிடப்பட்டு, அதிக விலையிலே விற்கப்பட்டது என்று ஒரு கருத்தும், அதிலே வந்திருக்கக்கூடிய சில கருத்துக்கள் தவறான கருத்துக்கள், தவறான முறையில் செய்யப்பட்ட கிரிட்டிஸிஸம் என்ற முறையில் சில கருத்துக்கள் வெளிவந்து அதற்கு அரசாங்கத்தின் சார்பில், அது இந்த ஆண்டோடு சரி, அடுத்த ஆண்டு அந்த புத்தகம் பாட புத்தகமாக இருக்காது என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே எது உண்மை என் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது ஏன் வைத்தோம் என்ற காரணத்தைத்தான் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். அது மட்டும் அல்ல, இன்னும் நல்லவர்கள் எழுதியிருந்து, உங்களுக்குத் தெரிந்த வேறு யாராவது எழுதியிருந்து, அதுவும் நல்ல புத்தகமாக இருக்குமே யானால், அதையும் பாட புத்தகமாக வைப்போம். எங்களுடைய நோக்கம் குழந்தைகளிடத்திலே நல்ல கருத்துக்கள் பரவவேண்டும் என்பதுதான். நம்முடைய மாணவர்கள் நல்லபடியாக நல்ல உணர்வுடன் வளர வேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர, எங்களை ஏமாற்றி வேறு யாரும் புத்தக வியாபாரம் செய்துவிட முடியும் என்று தயவுசெய்து யாரும் நம்பவேண்டாம்.

நல்லதாக இருந்தால் யாருடையதாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்ற அடிப்படையிலேதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையின் சார்பில் வைக்கப் பட்ட இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பலவிதமான கருத்துக்களை எண்ணங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப்பற்றி எல்லாம் நாங்கள் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுப்போம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், ஆசிரியர் களும், ஆசிரியர்கள் அல்லாதோர்களும் சம்பந்தப்பட்ட மட்டில் நாங்கள் தொடர்ந்து அவர்களுடைய பிரச்சனைகளைப் பரிசீலித்துக் கொண்டு வருகிறோம். அப்போது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறேன். அதிலே கூட அவர்கள் கடிதத்திலிருந்து நாம் பரிசீலனை செய்து, டெல்லிக்கு கடித போக்குவரத்து செய்து அது அண்மையிலேதான் முடிவு பெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு உதாரணமாகத்தான் நான் சொல்லிய இந்த ஒரு அறிவிப்பும் ஆகும். அதேபோல நியாயமான நல்ல கருத்துக்களை இந்த அரசு நிச்சயமாக ஏற்று பரிசீலித்து அவர்களுக்கு உதவும் என்பதை எடுத்துச் சொல்லி, கல்வி துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்களை வழங்கியவர்களுக்கு நான் மீண்டும் நன்றி கூறி தொடர்ந்து ஒவ்வொரு கட்டத்திலும் உங்களுடைய ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1933 மார்ச் 15

மக்கள் விளைவிக்கும் விவசாயப் பொருட்களில் அவர்களின் தேவைக்கும் போக மீதமுள்ள பொருட்களை மேற்படி சங்கங்கள் நியாயமான விலை கொடுத்து வாங்கி வருகின்றன. பழங்குடி மக்களின் வனப் பொருட்களை நியாய விலையில் மேற்படி சங்கங்கள் வாங்குவதன் மூலம் வனத் துறையிடமிருந்து வனப் பொருட்களை சேகரம் செய்ய உரிமம் பெற்று பழங்குடியினர்களுக்கு நல்ல கூலி கொடுத்து அவர்களைக் கொண்டு வனப் பொருட்களை சேகரம் செய்கின்றன.

(ஆ) (1) குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களின் கடன்தாரர்களை ஊக்குவிக்கும் வகையில் 1981–82 ஆம் ஆண்டில் தமது குறுகிய கால கடன்களையும் மத்திய கால தவணைகளையும் கெடு தேதிக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியில் இரண்டு சதவீதம் தள்ளுபடி செய்யப்படுகிறது. இதற்கு அரசு 32 லட்சம் ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

(2) பின்தங்கிய வகுப்பினரைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கடன் வசதி பெற வாய்ப்பளிக்கும் வகையில் நபர் ஒன்றுக்கு 100 ரூபாய் பங்கு தொகை செலுத்த அரசு நிதியுதவியளிக்கத் திட்டமிட்டு நடப்பாண்டில் 40,000 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களாக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ப்பதற்கு 40 லட்சம் ரூபாய் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.

(3) தமிழ்நாட்டில் நிலவள வங்கிகள் மூலம் சுமார் ரூ. 4 கோடி வரை நலிந்த பிரிவினர்களுக்கு பல்வேறு பணிகளுக்காக கடன் வழ்ங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(4) புதுக்கிணறு மானிய திட்டத்தின்படி ரூ. 3·00 லட்சம் செலவு செய்ய அரசு அங்கீகாரம் செய்துள்ளது.

(5) மலைவாழ் மக்கள் நல மானிய திட்டத்தின் கீழ் அடையாள ஒதுக்கமாக ரூ. 1,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(6) நலிவுற்ற மக்களுக்கு உதவி செய்ய, வட்டி சலுகை வழங்க, அதாவது 4 வட்டிக்கு கடன் வழங்க ரூ. 3.00 லட்சம் அரசின் மானியமாக வழங்கியுள்ளது.

(7) இரு உப்பு உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 10,000 வீதம் பங்கு மூலதனம் மற்றும் இரு உப்பு உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய லாரிகள் வாங்க ரூ. 3.08 லட்சம் நிதியுதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

(8) நவீன உலர் சலவைக் கூடம் அமைப்பதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 22,000 கடனாகவும் வழங்கப் பட்டுள்ளது.



1983 மார்ச் 15

(9) கூட்டுறவு முடிதிருத்துவோர் சங்கத்தின் நவீன முடி திருத்தகம் அமைக்க ரூ. 15,000 கடனாகவும் ரூ. 6,000 மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**(10) தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கங்கள்.—**

காணிக் குடியிருப்பு மலைவாழ் மக்கள் வனத் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 55,000 வட்டியில்லாக் கடனாகவும் மற்றும் மூன்று ஆதி திராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 1,65,000 கடன் மற்றும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**(11) மலைவாழ்மக்கள் கூட்டுறவு சங்கங்கள்**

பழங்குடி மக்களுக்கு பங்கு தொகை மானியம் ரூ. 6.45 லட்சம் அளவுக்கு வழங்கவும், சங்க ஊழியர்களுக்கு ரூ. 14.40 லட்சம் மதிப்பீட்டில் தங்குமனை கட்டவும் 20 கிராம கடைகளுக்கு கட்டிடம் கட்டவும் மசினாகுடி மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கமாக மாற்றவும், சேலம் மாவட்டம் பச்சை மலையிலும் வடாற்காடு மாவட்டம் ஜவ்வாதுமலை நம்மியாம்பட்டியிலும் இரு பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கவும் ஏற்கனவே வழக்கத்திலுள்ள சலுகைகள் தொடரவும் திட்டமிடப் பட்டுள்ளது.

**(2) கூட்டுறவு சில்லறை விற்பனை கடைகள்.—**

நுகர்வோர் கூட்டுறவுகால் 10 நவீன சில்லறை விற்பனைக் கடைகள் திறக்க அரசு உதவி அளிக்கப்பட உள்ளது.

இணைப்பு II

..49..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

கோரிக்கை எண் 17—கல்வி

தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி

## I. தோற்றுவாய்.

### கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

கல்விக்காக 1983-84 ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி"-ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 356 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,654 கோடியில் 21.5 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1983-84 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

| | 1983-84 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 259. அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு. | 63 | — | 63 |
| 265. பிற நிருவாகப் பணிகள் — மாவட்ட விவரச் சுவடிகள். | .. | 3 | 3 |
| 277. கல்வி — | | | |
| 1. தொடக்கக் கல்வி .. | 1,63,63 | 3,79 | 1,67,42 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 87,87 | 4,81 | 92,68 |
| 3. மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 16,73 | 11,69 | 28,42 |

(8) 31-12-78ல் நிலுவை நின்ற சிறு விவசாயிகளின் மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக்கடன்கள் மீதான சாதாரண வட்டி 1-1-79 முதல் அரசு நிதி உதவியுடன் 12 முதல் 13.8 சதவீதம் வரை இருந்ததை 10.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடங்கு கட்ட அடிமனை வாங்கும்போது ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அல்லது அதன் அருகாமையிலேயே வாங்க இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வட்டார இணைப் பதிவாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3. நீண்டகால கடன்கள்—

(1) கிணறுகள் வெட்டுவது, பம்பு செட்டு நிறுவுவது, தோட்டப் பயிர்கள் போன்ற காரியங்களுக்கு, ஆதி திராவிடர்கள், மலை சாதியினர் மற்றும் இதர நலிந்த பிரிவினர்களின் நிலங்கள் அடமானத்தின் பேரில் கடன் வழங்குதல்.

(2) நிலமற்ற விவசாயிகளுக்கு கோழிப்பண்ணை ஆட்டுப் பண்ணை மற்றும் கறவை மாடுகள் வாங்க அரசின் உத்தர வாதத்தின் பேரில் மத்தியகால கடன்கள் நிலவள வங்கிகள் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

(3) மலை சாதியினருக்கு கிணற்றின் மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதிக பட்சமாக ரூ. 3,500 வரை மானியமாக அரசு அளிக்கிறது.

(4) நலிந்த பிரிவு சிறிய விவசாயிகளுக்கு கிணறு தோண்டுவதற்கு மதிப்பீட்டில் 25 சதவீதம் அல்லது அதிக பட்சமாக ரூ. 1,000, மானியமாக வழங்கப்படுகிறது.

(5) கிணறு தோண்டுதல் போன்ற காரியங்களுக்கு திட்ட மதிப்பீடு முழுவதும் கடனாக வழங்கப்படுகிறது.

(6) சிறு விவசாயிகள் கட்ட வேண்டிய 5 சதவீத பங்கு தொகையினை நான்கு தவணைகளில் செலுத்த அனுமதித்துள்ளது (அதாவது முதல் வருடத்தில் 2½ சதவீதமும் பாக்கியை 1 சதவீதம் வரும் 3 வருடங்களில் செலுத்தலாம்).

(7) சிறு விவசாயிகளுக்கு கடனை செலுத்தும் காலம் 15 வருடம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(8) சிறு விவசாயிகளுக்கு எல்லா காரியங்களுக்கும் 10.25 சதவீதமே வசூலிக்கப்படுகிறது.



(9) ஆதி திராவிடர்களுக்கும் மலை சாதியினர்களுக்கும் நிலவள வங்கிகள் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளுக்கு வில்லங்க சான்றிதழ் கட்டண சலுகை வழங்கப்பட்டுள்ளது.

4. புதுக் கிணறு மானியத் திட்டம்—

(1) சிறு விவசாயிகள் நிலவள வங்கிகள் மூலம் புதிய கிணறு வெட்ட கடன் பெறும் மெம்பர்களுக்கு மொத்த செலவில் நான்கில் ஒரு பாகம் அல்லது ரூ. 1000 இதில் எது குறைவோ அந்தத் தொகையை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(2) மலைவாழ் மக்களுக்கு மலைப் பகுதியில் கிணறு வெட்ட நிலவள வங்கி மூலம் கடன் பெறும் மெம்பர்களுக்கு கிணறுவெட்ட ஆகும் செலவில் பாதி பாகம் அல்லது ரூ. 3,500 இதில் எது குறைவோ அந்தத் தொகை மானியமாக வழங்கப்படும்.

5. உப்பு உற்பத்தி கூட்டுறவுகள்.

ஆதி திராவிடர்களுக்கும், மற்றும் இதர நலிந்த மக்களுக்காகவும், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும் வகையில் 12 உப்பு உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் வியாபார நோக்கை விரிவு செய்யும் வகையில் இவைகளுக்கு புதிய லாரிகள் வழங்கவும் நடைமுறை மூலதனத்தை விரிவுபடுத்தவும் அரசே முறையே கடன் மூலதனம் மற்றும் பங்கு மூலதனம் வழங்கப் பட்டு வருகிறது.

6. சலவைத் தொழிலாளர்களுக்கு 15 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. முடிதிருத்துவோர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் 16 கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

8. மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கங்கள் :

(அ) பழங்குடியினர் மேம்பாட்டுக்காக தமிழ்நாட்டில் 12 மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்களில் மூன்று மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் பணிபுரிந்து வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடி மக்களுக்குப் பயிர் செலவுக்காக குறுகியகால கடன், உழவுமாடுகள், கறவை மாடுகள், ஆடுகள் முதலியன வாங்குதல் போன்ற அபிவிருத்தி காரியங்களுக்காக மத்திய கால கடன்கள் 4 சதவீத வட்டிக்கு வழங்குகின்றன. மேற்கண்ட குறைந்த வட்டி வீதத்திற்கும், கூட்டுறவு மத்திய வங்கிகளில் சாதாரண வட்டி வீதத்திற்கும் இடையே துண்டுவிழும் தொகையை அரசு மானியமாக மத்திய வங்கிக்குக் கொடுத்து வருகிறது. பழங்குடி

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 677. கடன்கள்— | | | |
| தேசியகடன் படிப்புதவித் தொகைகள்.. | .. | 40 | 40 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன். | .. | 3 | 3 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன். | 7 | .. | 7 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள். | 4,43 | .. | 4,43 |
| மொத்தம்.. | 17,93 | 8,73 | 26,66 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1983-84ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 382 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது, ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு; சீர்திருத்த பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

5. எல்லாத் த்லைப்புகளின் கீழும் (277. கல்வி; 477. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு; 677. கடன் முதலியன) கல்விக்காக 1983-84 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு: ('' + '' குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.)



| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1983-84ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| பொதுக்கல்வி— | | | |
| 1. பள்ளிக் கல்வி (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட). | 19,62 +2 | 2,38 | 22,00 +2 |
| 2. முதியோர் கல்வி .. .. | 1,14 + 79 | 1,08 | 2,22 +79 |
| 3. கல்லூரிக் கல்வி .. .. | 6.09 +43 | 1,47 | 7,56 +43 |
| 4. விளையாட்டு, இளைஞர் நலன் | 81 +72 | 43 | 1,24 +72 |
| 5. தமிழ் வளர்ச்சி—கல்வித் துறை | 1,08 | .. | 1,08 |
| தமிழ்க் கலைத் துறை. | 6 | 9 | 15 |
| 6. கட்டட வகையில் பொதுப் பணித்துறைச் செலவு. | 39 | .. | 39 |
| | 29,19 +1,96 | 5,45 | 34,64 +1,96 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 5,56 +10 | 61 | 6,17 +10 |
| கலைப் பணிகள்— | | | |
| கல்வித் துறை.. .. .. | 76 | 50 | 1,26 |
| தமிழ்க் கலைத்துறை .. .. | 42 | 14 | 56 |
| | 35,93 +2,06 | 6,70 | 42,63 +2,06 |

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலுக்கு முதன்மை—

6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கு அனைத்து மட்டங்களிலும் இடையறாத நாட்டம் செலுத்தப் படவேண்டுமென்பதை வலியுறுத்தும் நோக்குடன் தலைமைச் செயலகக் கல்வித்துறையின் பெயர் '' கல்வி, அறிவியல், தொழில் நுட்பவியல் துறை '' என்று மாற்றப்பட்டுள்ளது. '' தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம்'' அமைத்தல்; அறிவியல், தொழில் நுட்பவியல் மையங்களை நிறுவுதல், மற்றும் தொழில் நுட்பவியலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளின் விவரங்கள் ஏழாம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன.

| (1) | 1983-84 வரவு-செலவு மதிப்பீடு திட்டமல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 4. கல்லூரிக் கல்வி .. | 30,49 | 6,92 | 37,41 |
| 5. சிறப்புக் கல்வி-முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 112 | 4,29 | 5,41 |
| 6. விளையாட்டும் இளைஞர் நலனும் மற்றும் தேசிய மாணவர் படை. | 2,64 | 1,39 | 4,03 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. | 10,39 | 3,31 | 13,70 |
| | 3,12,87 | 36,20 | 3,49,07 |
| 278. கலை, பண்பாடு | | | |
| நுண் கலைக் கல்வி .. | 34 | 7 | 41 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு | 7 | 54 | 61 |
| தொல்பொருள் ஆராய்ச்சி .. | 17 | 56 | 73 |
| ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும் | 50 | 17 | 67 |
| பொது நூலகங்கள் .. | 2,85 | 29 | 3,14 |
| | 3,93 | 1,63 | 5,56 |
| 279. ஏனைய அறிவியல் பணிகள்—எரிசக்தி ஆய்வு. | .. | 31 | 31 |
| 288. சமூகப்பாதுகாப்பும் நலனும் | 16 | .. | 16 |
| மொத்தம்-மானியக் கோரிக்கை 17—கல்வி | 3,17,59 | 38,17 | 3,55,76 |



1983 மார்ச் 15]

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1983-84ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| (1) | 1983-84-வரவு செலவு மதிப்பீடு. திட்டமல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 28. சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள். | .. | 2,00 | 2,00 |
| சமூகக் கல்வி .. .. | .. | 9 | 9 |
| கோரிக்கை—37. பொதுப்பணி—அரசுப்பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள். | 1,79 | 4 | 1,83 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம். .. | 11,57 | .. | 11,57 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு— | | | |
| 459. அலுவலகக் கட்டடங்கள் .. | .. | 1 | 1 |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு: அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டடங்கள். | 7 | 6,16 | 6,23 |

## II. பள்ளிக் கல்வி.

### (i) பொது

1983-84-ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 356 கோடியில். பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உள்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 293 கோடியாகும். 30-9-82 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் மொத்தம் 37531 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல்நிலைப் பள்ளிகள் 28,290, நடுநிலைப் பள்ளிகள் 5,565, உயர்நிலைப் பள்ளிகள் 3,676 (1416 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட). மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக்கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 149 பள்ளிகளும்-93 உயர்நிலைப் பள்ளிகளும், 56 மேல்நிலைப் பள்ளிகளும்-மொத்தம் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 37531-ல் அடங்கும். அனைத்துப் பள்ளிகளும் பணி செய்துவந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.76 இலட்சம், பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 97.17 இலட்சம். பள்ளிகளின் நிருவாக வாரியான விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. 1983-84 ஆம் ஆண்டில் 1250 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 100 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் ; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 150 தமிழாசிரியர் பதவிகள். வரும் ஆண்டில் புதிதாக 30 உயர்நிலைப் பளளிகள் தொடங்கத் தேவையான 30 தலைமை ஆசிரியர் பதவிகளும் பிற பதவிகளும்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.எட்., தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100 முழு நேரப்பதவிகளாக உயர்த்தப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

3. இவ்வாண்டில் (1982-83 டிசம்பர் 1982 வரை) நடத்தப் பெற்ற 45 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் ரூ. 7 இலட்சம் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு அதே காலகட்டத்தில் 14,345 மாணவர்களுக்குச் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.



### (ii) தொடக்கக் கல்வி.

வகுப்புகள் 1—5-க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 96.2 விழுக்காட்டினரும் வகுப்புக்கள் 6—8-க்குரிய 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 66.03 விழுக்காட்டினரும் இதுவரை (1982—83) பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984—85-க்குள்) இந்தியா அனைத்திலும் 6—11 வயது தொகுதியினரில் 95 சதவீதத்தினரும் 11—14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகம் இப்பொழுதே இந்த இலக்குகளை விஞ்சியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. 1982—83-ம் ஆண்டில் இருந்த 33,855 தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலைப் பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 28,290; நடுநிலைப்பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புக்கள்) 5,56 ஆகும். படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 72.73 இலட்சமாகும். பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,81,012 ஆகும். ஒரு ஆசிரியருக்கு சராசரி மாணவர் விகிதம் 1:41 ஆக இருந்தது.

2. இவ்வாண்டில் (1982—83) முதல்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 6—11 வயதுத் தொகுதியினர் 2·26 இலட்சம் பேர்களும், 11—14 வயதுத் தொகுதியினர் 0·37 இலட்சம் பேர்களும் ஆக மொத்தம் 2.63 இலட்சம் பேர்கள் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். கூடுதல் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை இந்த அளவு அதிகமாக இருப்பதற்கு ''முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்'' முக்கிய காரணமாகும். 11—14 வயதுத் தொகுதிக் குழந்தைகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் (6—8 வகுப்புகளில்) படிக்கின்றனராகையால் இப்பள்ளிகளில் இவ்வாண்டு கூடுதலாகச் சேர்ந்த 1—14 வயதுச் சிறுவர் சிறுமியர் எண்ணிக்கை 0·48 இலட்சமாகும்.

3. பள்ளிகளில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5 ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு (வியர்த்த விழுக்காடு) 1977—78 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது. 1981—82-ல் 30 சதவீதமாகக் குறைந்து உள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இப்பொழுது செயல்படுவதன் காரணமாக வருங்காலத்தில் இந்நிலை மேலும் சீர்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் 4,343-ல் ஒவ்வொன்றிலும் ஒரு இளஞ்சிறார் பள்ளி வகுப்பைத் தொடங்க அரசு (சமுதாய நலத்துறையில்) அண்மையில் ஏற்பளித்துள்ளது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்ப்பதாலும், சிறுமியர்

தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக்கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்ப்பதாலும் இவ்விளைஞ்சிறார் பள்ளிகளும் ''வியர்ந்த விழுக்காட்டைக்'' குறைக்க வருங்காலத்தில் உதவும்,

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

4. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், தமிழகத்தில் 1—7—1982/15—9—1982 முதல் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 5+ முதல் 9+ முடிய உள்ள வயதுத் தொகுதியைச் சார்ந்தவர்களும் பெரும்பாலும் 1—5 வகுப்புகளில் படிப்பவர்களுமான 12 இலட்சம் குழந்தைகள் 33,131 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் நாள்தோறும் சத்துணவு பெற்று வருகின்றனர். இம்மையங்களில் 30,983 மையங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. மற்றவை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குநர்கள்; மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகின்றன.

5. குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலமும் முதல் நாளன்றே தரப்படுகிறது ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தரப்படும் உணவின் அளவு வருமாறு:

அரிசி—100 கிராம்.

பருப்பு—15 கிராம்.

எண்ணெய்—7 கிராம்.

காய்கறிகளும் மசாலா பொருள்களும்—50 கிராம்.

6. அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்தந்த சத்துணவு மையத்தில் வழங்குகிறது. 1982—83 ஆம் ஆண்டில் அமெரிக்க கேர் நிறுவனம் இலவசமாகத் தந்த 11,600 மெட்ரிக் டன் கோதுமையும் 1,450 மெட்ரிக் டன் எண்ணெயும் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பள்ளிக் குழந்தைகளுக்கு 30 நாளுக்கு தானியமாகவும், 54 நாளுக்கு எண்ணெயாகவும் பயன்பட்டது. 1983—84 ஆம் ஆண்டுக்கு கேர் நிறுவனம் அரிசி 9,800 டன்னும், எண்ணெய் 1,200 டன்னும் இலவசமாகத் தர முன்வந்துள்ளது.



7. விறகு, காய்கறி, மசாலா பொருள்கள் முதலிய செலவினங்களுக்காக ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 11 காசு வீதம் கணக்கிட்டு தொடரும் மானியம் தரப்படுகிறது. 500—க்குக் குறைந்த மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்துக்கு மாதம் ரூ. 20-ம், 500-ம் அதற்கு மேலும் மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்துக்கு மாதம் ரூ. 30-ம் சில்லறைச் செலவினமாக அனுமதிக்கப்படுகிறது.

8. இத்திட்டம் தொடங்கியபொழுது பள்ளி சத்துணவு மையம் ஒவ்வொன்றிலும் (நாளைக்கு ரூ. 2 சம்பளத்தில்) ஒரு பகுதிநேர சமையலரும், (நாளைக்கு ரூ 1 சம்பளத்தில்) ஒரு பகுதி நேர உதவியாளரும் நியமிக்கப்பட்டனர். உணவு பெறும் மாணவர் எண்ணிக்கை 505-க்குமேல் இருந்தால் கூடுதலாக ஒரு சமையலாளரும் ஒரு உதவியாளரும் நியமித்துக் கொள்ளலாம். பள்ளித் தலைமையாசிரியர்களையும், ஆசிரியர்களையும் சத்துணவுப் பணியிலிருந்து விடுவிப்பதற்காக பள்ளி சத்துணவு மையம் ஒவ்வொன்றிலும் மாதம் ரூ. 150 மதிப்பூதியத்தில் சத்துணவு அமைப்பாளர் ஒருவரை 1983 பிப்ரவரி முதல் நியமித்துக்கொள்ள அரசு ஏற்பளித்துள்ளது. சத்துணவுப் பணியைக் கவனிப்பதுடன் அவர்கள் பள்ளிகளில் திருக்குறளும் கற்றுத் தருவார்கள்.

9. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்த நிதி ஒதுக்கமாக கல்வி மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ. 24 கோடியாகும். சமையலாளர் மற்றும் உதவியாளர் சம்பளம்; சத்துணவு அமைப்பாளர்கள் மதிப்பூதியம்; தொடரும் மானியச் செலவு முதலிய செலவினங்களுக்கு மட்டுமே இந்த ரூ. 24 கோடியாகும். பள்ளி சத்துணவு மையங்களுக்கு வழங்கும் உணவுப் பொருள்களின் விலையாக நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கான நிதி ஒதுக்கம் மானியக் கோரிக்கை 35. ''நுகர்பொருள் வழங்கலில்'' சேர்க்கப்பட்டுள்ளது.

இலவசப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்குதல்:

10. 1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்கள் 13 லட்சம் பேர்களில் முதல் வகுப்பில் பயில்வோருக்குப் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், 2—3 வகுப்புகளில் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1972—73 ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவினைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக இந்நிறுவனம் இப்பொழுது ஆண்டுதோறும் ரூ. 90 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டு இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சுமார் ரூ. 7 இலட்சம் செலவிடுகிறது. 4—10 வகுப்புகளில் பயிலும்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் சுமார் 8 லட்சம் பேர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக இலவசப்பாட புத்தகங்களைப் பெற்று வருகின்றனர்.

புத்தக வங்கிகள்?

11. ஏழை மாணவர்களுக்குப் பாடபுத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1-10-1982 நிலவரப்படி 36,550 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறிவியல் கல்வியும் தொடக்கப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங் களும்:

12. 1981-82 மற்றும் 1982-83 ஆண்டுகளில் அறிவியல் கருவிகளை வாங்குவதற்காக பள்ளிக்கு ரூ. 3,750 வீதம் மொத்தம் 400 நடுநிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்கப் பட்டது. அப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பள்ளி நிர்வாக நிதி அல்லது பெற்றோர் ஆசிரியர் நிதியிலிருந்து மற்றொரு ரூ. 3,750 இவ் வகையில் செலவிட வேண்டும். தொடக்கப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்க 1983-84-ல் ரூ. 2 லட்சம் ஏற்பளிக் கப்படும்.

தொடககப்பள்ளிக் கட்டிடங்கள்:

13. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1982-83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டித்தருவதற்கான ஒரு பெரும் திட்டம் செயல் படுத்தப்பட்டது. 198"-83-ல் தொடக்கப் பள்ளி கட்டிடங் களுக்காக ரூ. 2.10 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங் களுக்காக "சமுதாய வளர்ச்சி" மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியம் தர ரூ. 2 லட்சமும், அரசு தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டிடங்களுக்காக ரூ. 8 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.



ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் :

14. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1-6-81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் பள்ளிக் கல்வித் துறை கவனித்து வருகிறது.

நகராட்சி மாநகராட்சித் தொடக்கப் பள்ளிகள் :

15. 1982-83-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை, கோயம் புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,547 ஆகும். (1,152 முதல்நிலை மற்றும் 395 நடுநிலைப் பள்ளிகள்) நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டு விழும் முழுத் தொகையினை அரசே ஈடு செய்து வருகின்றது.

(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி:

1982-83-ல் தமிழ்நாட்டில் 14-16 வயதுத் தொகுதியினர் 17.34 இலட்சம் பேர்களுள், 43 விழுக்காடாகிய 7.38 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9-10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1982-83-ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடை பெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிக் குலேசன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள். | 2,167 | 93 | 2,260 |
| மேல்நிலைப் பள்ளிகள். | 1,360 | 56 | 1,416 |
| மொத்தம் .. | 3,527 | 149 | 3,676 |

[1983 மார்ச் 15

மேலும் 1983-84-ல் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காகத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ரூ. 25 இலட்சம் வழங்க இருக்கிறது. (அந்நிறுவனம் இதற்காக 1981–82-லும் 1982–83 லும் மொத்தம் ரூ. 53 இலட்சம் வழங்கியது).

8. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்கான ஒரு திட்டம் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதில் ரூ. 1.50 கோடிக்கு 1982–83-ல் ஏற்பளிக்கப்பட்டது. 1983–84-ல் ரூ. 1.75 கோடி இவ்வகையில் ஏற்பளிக்கப்படும் (மேற்குறித்த சிறு பணிகளுக்கான நிதி ஒதுக்கமாகிய ரூ. 1.79 கோடியில் இந்த ரூ. 1.75 கோடியும் அடங்கி உள்ளது.)

கல்விச் சலுகைகள் படிப்பு உதவித் தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள்:

9. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும் இதர சதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளி கல்வித்துறை நிர்வகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாகப் படிப்பு உதவி தொகைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. ஒரு முறை உதவித் தொகையினை பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர்.

10. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியினைக் குறிக்கோளாகக் கொண்டு 1981–82 ஆம் ஆண்டில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் இம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள் தோறும் மொத்தம் 1½ மணி நேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் 40,000 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்த சிறப்புப் பயிற்சித் திட்டம் 1982–83 முதல் 300 மேல்நிலைப்பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கும் விரிவாக்கப்பட்டு ஆண்டுதோறும் 11,000 மாணவர்களுக்குப் பயனளித்து வருகிறது.



1983 மார்ச் 15]

(iv) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள்

பள்ளிப் பாடப்புத்தகங்களின் புதிய வடிவங்களைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டு வருகிறது :—

பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வரும் வகுப்புகள்.

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980–81 .. | 1-3 | .. | .. | .. |
| 1981–82 .. | 4,7,9 | 4,6 | 3,4,6 | 34,9 |
| 1982–83 .. | 5,8,10 | 5,7,9 | 5,7,9 | 5,7,9 |
| 1983–84 | .. | 8,10 | 8,10 | 8,10 |
| 1984–85 .. | .. | .. | .. | — |

| ஆண்டு. | ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலத் துணைப் பாடம். | தமிழ்த் துணைப் பாடம் | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1980–81 .. | .. | .. | .. | .. | .. |
| 1981–82 .. | 3 | 1-3 | .. | 9 | — |
| 1982–83 .. | 4,6 | 4,6 | 6 | 6 | 9 |
| 1983–84 .. | 5,7,9 | 5,7,9 | 7,9 | 7 | |
| 1984–85 .. | 8,10 | 8,10 | 8 | 8 | 8,10 |

2. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் மாவட்ட மற்றும் வட்டக் கூட்டுறவு சங்கங்கள் 52-ன் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன.

இக்கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளை தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்கிறது. இந்நிறுவனம் 1983–84-ல் ரூ. 5.5 கோடி மதிப்புள்ள பாடநூல்களை வெளியிடும்.

நோட்டுப் புத்தகங்கள் :

3. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு, நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்து வருகிறது. 1982–83ல் இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவுவிலை நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 5 கோடியாகும். நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதற்கான தாளை மலிவு விலையில் டன் ஒன்றுக்கு ரூ, 4,200 வீதம், வழங்க இசையாமல் அவற்றைத் தயாரிக்கும் காகித ஆலைகள் உயர்நீதி மன்றங்களில் தடையுத்தரவுகள் வாங்கியுள்ளதைத் தொடர்ந்து, 1982 ஜூலை முதல் மைய அரசு மலிவு விலைத் தாள் ஒதுக்கீடு செய்வதை நிறுத்திவிட்டது. எனவே நோட்டுப் புத்தகங்களை மலிவு விலைத் தாளில் தயாரிக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் :

4. பள்ளிகளுக்குத் தரமிக்க பாடநூல்களை வெளியிடுதல், நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகித்தல் ஆகிய பொறுப்பு மிக்க பணிகளை ஆற்றிவருவதுடன் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக வேறு பல வகைகளிலும் பணியாற்றி வருகிறது. அப்பணிகளில் சில : 1–3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பாட நூல்களை வழங்குதல் ; அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல் ; பள்ளி சாராக் கல்விக்கான புத்தகங்களை வெளியிடுதல்; கல்லூரிப் பாட நூல்களைத் தமிழில் வெளியிடுதல் ; தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்களை வெளியிடுதல் முதலியவையாகும். இவை பற்றிய விரிவான விவரங்கள் அந்தந்த அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம், தனது நிதி வளத்திலிருந்து ரூ. 1.84 கோடி மதிப்பீட்டில் நுங்கம்பாக்கம், கல்லூரி சாலையிலுள்ள கல்வித் துறை இயக்ககங்கள் வளாகத்தில் அலுவலகக் கட்டடம் ஒன்றைக் கட்டிவருகிறது. இக்கட்டிடத்தின் ஒருபகுதி ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டுவிட்டது. அடுத்த பகுதி விரைவில் கட்டி முடிக்கப்படும். இரண்டாவது பகுதி கட்டி முடிந்தவுடன் அது பல்வேறு அரசுத் துறைகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடப்படும்.

(v) ஆசிரியர் பயிற்சி :

பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பெருமளவில் நிலவி வருவதால், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஓர் ஆண்டு விட்டு மறு ஆண்டுதான் மாணவர்கள், அதுவும் குறைந்த எண்ணிக்கையில் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்



பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 1981–82-ல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1983–84-ல் மாணவர்கள் சேர்ப்பதை அனுமதிப்பது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

2. இளநிலை ஆசிரியர்கள் (லோயர் கிரேடு), இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் நடத்திவரும் 5 மாத அஞ்சல்—வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சியில் இதுவரை 15,000 ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர். இத் திட்டத்தின் கீழ் 1982–83-லிருந்து ஆண்டுதோறும் 10,000 பேர் பயன் பெறுகின்றனர்.

3. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் ஆண்டுதோறும் 6—8 மற்றும் 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 1,350 பேருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் 3 அல்லது 4 வாரப் பயிற்சிகள் நடத்தி வருகின்றன.

(vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

பள்ளிக் கல்வி இயக்கத்தில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி–பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக நடத்தி வரும் பயிற்சிகளில் இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி ; 1—3 வகுப்பு ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் போன்றவர்களுக்கான சிறப்பு மறுபயிற்சி வகுப்புக்கள் முதலியவை அடங்கும். இந்நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல பயிற்சித் திட்டங்களை நடத்த 1983–84-ல் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது :—

| திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| (i) தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள். |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி—35 வயது முடிய அனைவருக்கும் அவரவருக்கு இயைபான கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள் |

1982–83 ல் மேற்கண்ட 3,676 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| (1) | மாணவர்களின் எண்ணிக்கை. (2) (இலட்சத்தில்) |
|---|---|
| 8 ஆம் வகுப்பும் கீழும் .. .. | 14.09 |
| 9–10 வகுப்புகள் .. .. .. | 7.38 |
| 11–12 வகுப்புகள் .. .. .. | 2.97 |
| மொத்தம் .. | 24.44 |

2. 1982–83 ல் அரசுப் பள்ளிகள் 43, நகராட்சிப் பள்ளிகள் 3, தனியார் பள்ளிகள் 4 ஆக மொத்தம் 50 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. சிறுபான்மையினரால் புதிதாகத் திறக்கப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை இதில் சேரவில்லை. 1983–84 ல் புதிதாக 30 உயர்நிலைப் பள்ளிகள் திறக்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

அறிவியற் கல்வி:

3. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின்கீழ் 1982–83 முடிய 1,093 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1983–84-ல் மேலும் 13 பள்ளிகள் பயன்பெறும். இத்திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை மொத்தமாகப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி, அனுப்பி வைக்கிறார். அறிவியல் தளவாடங்கள் வழங்குவதற்கு பள்ளிக்கு ரூ. 20,000 அனுமதிக்கப்படுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, இத்திட்டத்தின்கீழ் ஆய்வுக்கூடக் கட்டட வகையில் ஒரு பள்ளிக்கு இப்பொழுது ரூ. 80,000 செலவிடப்படுகிறது. இத்தொகை 1983–84-ல் ரூ. 1,20,000 ஆக உயர்த்தப்படும். உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 72,000 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக்கூட கட்டிட மானியம் 1983–84-ல் வழங்கப்படும்.



4. இது வரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 51 ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

5. மாநில அளவில் ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சி 1978-ல் மதுரையிலும், 1979-ல் கோவையிலும், 1980-ல் திருநெல்வேலியிலும், 1981-ல் திருச்சிராப்பள்ளியிலும், 1982-ல் ராசபாளையத்திலும் நடத்தப்பட்டது. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும் அறிவியல் பயிற்றுந் தரத்தினை மேம்படுத்துவதும் இக் கண்காட்சிகளின் குறிக்கோளாகும்.

நூலக வசதி:

6. உயர்நிலைப் பள்ளிகளின் நூலக வசதிகளைப் பெருக்குவதற்காக 1983–84 ல் ரூ. 2 இலட்சம் செலவிடப்பட இருக்கிறது.

உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள்:

7. 1983–84 வரவு—செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம். | 3 |
| நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம். | 2 |
| அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் | |
| சிறு பணிகள் .. .. .. | 179 |
| புதிய பணிகள் .. .. .. | 50 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டிட வேலைகளுக்கு 1983–84-ல் நிதி ஒதுக்கம். (அரசு மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் உள்பட) வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிக்காக. | 123 |
| மொத்தம் .. | 362 |

| திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
| --- | --- |
| (1) | (2) |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயதுத் தொகுதியினருக்குப் பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்). | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (iv) இளஞ்சிறார் கல்வி. .. .. | இராமநாதபுரம் மாவட்டம், காரியாபட்டி வட்டத்தில் தொடங்கவிருக்கும் 65 இளஞ்சிறார் பள்ளிகள். |

**மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி :**

3. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 நவம்பர் முதல் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல் படுத்தி வருகிறது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத் திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 இலட்சம் அளவில் செலவிடும்.

4. மேலும் தேர்வு முறைச் சீர்திருத்த ஆராய்ச்சி; சென்னையிலும், வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன்பெறுவதற்கான தொடர் கல்வி மையங்கள் நடத்துதல் ஆகிய பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

**அனைவருக்குமான (அஞ்சல் முறைப் ) பள்ளி :**

5. உயர்நிலைப் பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி (open school) ஒன்றை உருவாக்குவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.



**(vi) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன் :**

1. கடந்த சில ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு :—

(i) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப் பட்டது ;

(ii) இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்த, அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி தொடங்கப்பட்டது ;

(iii) இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் 1—6—1981 முதல் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது ;

(iv) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத் தொழில் ஆசிரியர் பதவிகளைப் படிப்படியாக முழு நேரப் பதவிகளாக உயர்த்துதல் ;

(v) தத்தம் நிலையில் 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1—6—1981 முதல், இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1982-83 முதல் பி.எட். தர ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டது;

(vi) அனைத்து ஆசிரியர்களுக்கும், 1982-83 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது;

(vii) உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியரும், ஓர் இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியைச் சார்ந்தவராக அறிவிக்கப்பட்டது.

**ஆசிரியர்கள் நலக் குழு.**

2. ஆசிரியர்களது குறைகளை அவ்வப்போது உடனுக்குடன் உரிய மட்டத்தில் தீர்த்து வைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் '' ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்களை '' அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில் அதிகாரிகளும் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும் உள்ளனர்.

வகுப்புகள் நடத்த ''உட்படுத்தியும்'' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 200ம், ஆய்வுக் கூட உதவியாளர் பணியிடங்கள் 900ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1983–84 ல் மேல்நிலைப்பள்ளிகளுக்கு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 50 ஏற்படுத்தப்படும்.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்காக பணி விதிகள் ஏப்ரல் 1981ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு, 1–7–1978-லிருந்து ஐந்தாண்டுகளுக்குள் பட்ட மேற்படிப்புத் தகுதி அடைய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் பெற்று வந்த சிறப்பூதியம் 1–9–1981 முதல் ரூ. 25-லிருந்து ரூ. 40ஆக உயர்த்தப்பட்டது. இவ்வாசிரியர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்று முழுமையான தகுதி பெற உதவும் வகையில் அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. அறிவியல், கணிதம், பொருளாதாரம் ஆகிய பாடங்களைக் கற்றுத்தரும் ''உட்படுத்தப்பட்ட''ஆசிரியர்களுக்கு 10 நாள் பணியிடைப் பயிற்சி நடத்த 1983–84ல் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. மேல்நிலைப்பள்ளி தொழிற்பாட செயல்முறை வகுப்புகளை நடத்த ஏற்கெனவே ''மானிட்டர்கள்'' முறை செயல்படுகிறது. ஆய்வுக்கூட உதவியாளர் போதுமான அளவில் இல்லாத மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் பாடங்களின் செயல்முறை வகுப்புகளை நடத்தவும் இந்த 'மானிட்டர்' முறையைப் பின்பற்றலாமெனக் கருதப்பட்டு 1983–84ல் ''அறிவியல் மானிட்டர்கள்'' முறை புகுத்தப்படும். அவர்களுக்கு மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் மதிப்பூதியம் தரப்படும்.

மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற் பாடங்கள்.

5. 1982–83ல் மொத்தம் 940 மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,432 ஆகும். 1982–83ல் மேல்நிலைப் பள்ளி





களில் பயின்று வந்த 2.91 இலட்சம் மாணவர்களில் 57,258 பேர் (அதாவது சுமார் 20 சத விகிதத்தினர்) பின்வரும விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர் :

| தொழிற்பாட வகை | | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1. | வேளாண்மை .. | 3,976 | 156 | 4,132 |
| 2. | மனையியல் .. | 558 | 2,353 | 2,911 |
| 3. | வாணிகத்துறை .. | 17,893 | 13,373 | 31,266 |
| 4. | பொறியியலும் தொழில் நுட்பவியலும். | 13,825 | 97 | 13,922 |
| 5. | உடல் நலம் .. | 2,170 | 2,308 | 4,478 |
| 6. | பல்வகை .. .. | 127 | 422 | 549 |
| | மொத்தம் .. | 38,549 | 18,709 | 57,258 |

6. முன்னர் உயர்நிலைப்பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களும், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும் பிற இடங்களில் வெளி நபர்களும் ஆக சுமார் 4,300 பகுதி நேர ஆசிரியர்களும் (மாதம் ரூ. 150 ஊதியத்தில்) தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

7. மேல்நிலைப்பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன், மேல்நிலைக் கல்வித் தொழிற் பாட வகுப்புகளின் பாடங்கள், பாடத்திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக 1982 சனவரியில் உயர்மட்டக்குழு ஒன்றை அரசு அமைத்து, அக்குழுவின் அறிக்கை வரப் பெற்று அரசின் ஆய்வில் உள்ளது.

8. மேல்நிலைப்பள்ளி வகுப்பு நிலையில் கல்வியைத் தொழில் சார்ந்ததாக்குவது பற்றிய தேசிய கருத்தரங்கு ஒன்று 1983 பிப்ரவரி 12–15 நாட்களில் புது டெல்லியிலுள்ள கல்வித் திட்டம் மற்றும் நிருவாகம் பற்றிய தேசிய நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் +2 நிலையில் தொழில் கல்வி பற்றி இக்கருத்தரங்கு விரிவாக விவாதித்தது. கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு பள்ளிகளுக்கு நேரில்

**தனியார் பள்ளிகள் :**

3. தனியார் நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பிற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேல் முறையீட்டின் பேரில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள வகை செய்தல்; தனியார் பள்ளிகளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர் இன்னலுக்குட்படுத்தப் படாமல் தடுத்தல், முதலிய நடவடிக்கைகளும் இதில் அடங்கும். அரசு ஏற்கெனவே அமைத்துள்ள வல்லுநர்க் குழுவின் அறிக்கையைப் பெற்றபின், தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1973 மற்றும் அச் சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள் 1974 இரண்டிலும் விரிவான திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி :**

4. ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்பொழுது நிதி உதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைகளுக்குட்பட்டு அளிப்பதற்கும் இந் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**மாநில விருதுகள் :**

5. பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83-ல் 207 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.





## III. மேல்நிலைப்பள்ளிக் கல்வி.

1982—83இல் செயல்பட்டு வந்த 1,360 மேல்நிலைப் பள்ளிகளின் விபரங்கள் பின்வருமாறு (1982—83ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 11 பள்ளிகளும், 1981—82-ல் 30—9—1981க்குப் பின் உயர்த்தப்பட்ட 2 பள்ளிகளும் சேர்த்து):—

| பள்ளியின் வகை. (1) | எண்ணிக்கை. (2) |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. .. .. .. | 1,278 |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. .. .. | 26 |
| மெட்ரிகுலேசன்.. .. .. .. .. | 42 |
| தொழில் நுட்பப்பள்ளிகள் .. .. .. | 14 |
| மொத்தம் .. | 1,360 |

(மைய அரசின் பள்ளிக்கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 56 மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மேற்கண்ட 1,360 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை) 1982—83-ல் இந்த 1,360 பள்ளிகளில் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் பயின்று வந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| பொதுப்பாடங்கள் .. | 1,40,141 | 93,268 | 2,33,409 |
| தொழிற்பாடங்கள் .. | 38,549 | 18,709 | 57,258 |
| | 1,78,690 | 1,11,977 | 2,90,667 |

**கூடுதல் பணியாளர்கள்.**

2. 1978—79-ல் மேல்நிலைப்பள்ளிகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி, மேல்நிலைப்பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத் தகுதி பெற்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப் பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளி

சென்று தொழிற் பாடங்கள் நடைபெறும் முறையைக் கண்டறிந்தனர். இத் திட்டத்தைக் கருத்தரங்கு பொதுவாக பாராட்டியுள்ளது. கருத்தரங்கின் பரிந்துரைகள் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**கட்டிடங்களும் தளவாடங்களும்.**

9. 1978–79 முதல் 1981–82 முடிய நான்கு ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 631 அரசு மேல்நிலைப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட பெருந்தொகையான ரூ. 12 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 475 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சியவையும் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

10. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 5.77 கோடி செலவிடப்படுகிறது. சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு, பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச் சாமான்கள் வாங்க ரூ. 24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

11. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப்பள்ளி கட்டடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கென 1983–84-ல் ரூ. 68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் '' கல்லூரி இணையங்களும் '' பாலிடெக்னிக் இணையங்களும் '' இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

13. மேல்நிலைப்பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 43 இலட்சம் அளவில் செலவிட்டுள்ளது.

14. '' மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்பாடு ஆய்வு '' இயக்குநர் அண்மையில் மேல்நிலைப்பள்ளிக் கல்வியை விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்பியுள்ளார். அவ்வறிக்கையில் மேல்நிலைப்பள்ளிக் கல்விக்கு அரசு செய்யும் செலவினம் மிகுபயன் விளைவிப்பதாக அமைவதற்கான பரிந்துரைகளும் அக்கல்வியை மேலும் விரிவாக்குவது குறித்து நிர்ணயிக்கத்தக்க வரன் முறைகளும் தரப்பட்டுள்ளன.



## IV. அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுக் கென்று ஒரு தனி இயக்ககம் 1975 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது. சென்னையில் அமைந்துள்ள இத் துறையின் இயக்ககத்தோடு, மதுரையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு வட்டார அலுவலகங்களும் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. 1982–83-ல் இத்துறைக்கு மூன்றாவதாக ஒரு வட்டார அலுவலகம் திருச்சிராப்பள்ளியில் ஒரு சில பணியிடங்களுடன் அமைக்கப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டில் அவ்வலுவலகம் முழுமையாகச் செயல்படத் தொடங்கும். மாநிலமனைத்துக்கும் ஆண்டுக்கு இரு முறை நடைபெறும் முக்கியமான இரண்டு தேர்வுகளான உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.), மேல்நிலைப் பள்ளித் தேர்வு ஆகிய இரண்டு தேர்வுகளை நடத்தும் பெரும் பணியில் வட்டார அலுவலகங்களும் பங்கு பெறுகின்றன. அவ்விரு தேர்வுகளுடன் தொழிற் கல்வி, ஆசிரியர் பயிற்சி முதலியவற்றைச் சார்ந்த வேறு 38 தேர்வுகளையும் இத்துறை நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் இந்தத் தேர்வுகள் அனைத்தையும் எழுதுபவர்கள் மொத்த எண்ணிக்கை 7 இலட்சம் ஆகும்.

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| தேர்வுகள். | 1982 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுதியோர் | 1982 மார்ச்/ஏப்ரல் தேறியோர் விழுக்காடு | 1982 அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1983 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுத இருப்போர் (தோராயமாக). |
|---|---|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி.: | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) | 3,36,891 | * | 1,06,644 | 3,00,000 |
| பள்ளியில் பயின்று முடித்து விட்டு எழுதுபவர்கள் | 2,70.521 | 53% | .. | .. |
| ஆங்கிலோ-இந்தியன் | 2,832 | 79% | 635 | 3,200 |
| மெட்ரிக்குலேஷன் | 2,829 | 90% | 291 | 3,600 |

*பகுதிமுறைத் தேர்வு காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களில் தேறியோர் விழுக்காடு கணக்கிட்டுத்தர இயலவில்லை.

[1983 மார்ச் 15

| தேர்வுகள். | 1983 மார்ச்/ஏப்ரல்: தேர்வு எழுதுவோர் | 1983 மார்ச்/ஏப்ரல்: தேறியோர் விழுக்காடு. | 1982 அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1983 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுத இருப்போர் (தோராயமாக). |
|---|---|---|---|---|
| மேல் நிலைப் பள்ளித் தேர்வு :— | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) | 1,57,599* | | 48,550 | 1,82,000 |
| பள்ளியில் பயின்று முடித்து விட்டு எழுதுபவர் | 1,30,389 | (2% | .. | .. |

மேல்நிலைப் பள்ளித் தேர்வு :

3. மேல்நிலைப் பள்ளித் தேர்வை பொதுக் கல்விப் பாடங்கள் 27-க்கும் தொழிற் கல்விப் பாடங்கள் 66-க்கும் நடத்த வேண்டியிருக்கிறது. பல்வேறு பாடங்களின் தொகுப்புகள் 261 ஆகும். இவையனைத்துக்கும் தேர்வுகளை நன்முறையில் நடத்த சீரான ஒழுங்கு முறை வகுக்கப்பட்டுள்ளது.

4. தேர்வு மையங்களின் எண்ணிக்கை 1983 மார்ச் ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு 1250 மையங்களும், மேல் நிலைத் தேர்வுக்கு 717 மையங்களும் ஆக இருக்கும். 1982 அக்டோபர் தேர்வில் இம்மையங்கள் எண்ணிக்கை முறையே 285-ம், 165-ம் ஆக இருந்தன.

5. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை வகுப்புத் தேர்வுகளை தனிப்பட்ட முறையில் எழுதுவோருக்கு நுழைவுச் சீட்டு வழங்க 1982 செப்டம்பர்/அக்டோபர் முதல் புகுத்தப்பட்ட புதிய முறை நன்கு செயல்பட்டது. அம்முறை தொடரும்.

*பகுதி முறைத்தேர்வு காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களில் தேறியோர் விழுக்காடு கணக்கிட்டுத்தர இயலவில்லை.



1983 மார்ச் 15]

கேள்வி வங்கி முறை :

6. தேர்வு முறைச் சீர்திருத்தமாக எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கேள்வி வங்கி முறை 1982-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. பல்வேறு பாடங்களுக்கும் வல்லுநர்கள் யோசனையுடன் அந்தந்த பாட ஆசிரியர்களைக் கொண்டு மாதிரிக் கேள்வித்தாள்கள் வகுக்கப்பட்டன. கேள்வி வங்கிகளைத் தொடர்ந்து புதுப்பித்து வருவதற்காக இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படும்.

பிற தேர்வுகள் :

7. இத்துறை நடத்திவரும் பிற தேர்வுகளுள் முக்கியமானவை ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பு (டிப்ளமா), மரவேலை, நெசவு, தையல் வேலைபோன்ற தொழில் தேர்வுகள் ஆகியவையாகும். 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப்பெறும் தொடக்கப் பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) 1981லிருந்து ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் நடத்தப் பெறுகிறது. இத்தேர்வில் ஆண்டு தோறும் சுமார் 3,000 பேர் கலந்து கொள்கின்றனர்.

1983 மார்ச் 15]

## V. வயதுவந்தோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்

வயதுவந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1983-84 நிதி நிலை அறிக்கையில் ரூ. 3.04 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வயது வந்தோர் கல்வி:**

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ் நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகின்றது:—

| சென்சஸ் ஆண்டு. | தமிழ்நாடு. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| 1971 .. .. .. | 51.78 | 26.36 | 39.46 |
| 1981 .. .. .. | 57.19 | 34.12 | 45.78 |

| சென்சஸ் ஆண்டு. | இந்தியா. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| 1971 .. .. .. | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 .. .. .. | 46.74 | 24.88 | 36.17 |

3. வயது வந்தோர் கல்வி மையங்களுள் பெரும்பாலானவை கிராமப்புற (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணியின் கீழோ அல்லது மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழோ செயல்படுவனவாகும்.

**ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி;**

4. மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,900 மையங்கள் செயல்படுகின்றன. பெரியார் மாவட்டத்தில் இத்திட்டம் 1983 பிப்ரவரி முதல் 300 மையங்களில் புதிதாகத் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார்.



அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் வயது வந்தோருக்கு கல்வி புகட்டுபவர்கள், பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள், சிவில்/இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு வயதுவந்தோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இவ்வயது வந்தோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. பெரியார் மாவட்டத்தில் 1983 பிப்ரவரியில் புதிதாகத் தொடங்கிய 300 மையங்கள் தவிர மற்ற 3,600 மையங்களும் இத்தகைய 10 மாத வகுப்புகளை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் மூன்று தொகுதியினருக்கு நடத்தி முடித்துவிட்டு இப்பொழுது நான்காவது தொகுதியினருக்கு எழுத்தறிவித்து வருகின்றன. இந்நான்காவது தொகுதி வகுப்புகள் முன்னர் மூன்று தொகுதி வகுப்புக்கள் நடந்த ஊராட்சி ஒன்றியங்களில் அல்லாமல் வேறு ஒன்றியங்களில் தொடங்கி நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தொகுதி (10 மாத) வகுப்புகளையும் நடத்த சுமார் ரூ. 70 இலட்சம் செலவாகிறது.

**மாநில அரசின் வயதுவந்தோர் கல்வித் திட்டம்:**

5. இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்கள் 61-ல் 1980 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 வயதுவந்தோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்கி ஒரு பெரும் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை தொடங்கி வைத்தது. ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப்பணித்திட்டமையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. இம்மையங்கள் அந்த 61 ஒன்றியங்களிலும் மூன்று தொகுதியினருக்கு வகுப்புகள் நடத்தி மொத்தம் 6,14,000 பேருக்கு எழுத்தறிவித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதி 10 மாத வகுப்புகளையும் நடத்த சுமார் ரூ. 1.23 கோடி செலவு ஆகிறது. 1983 மார்ச் மாதம் நான்காவது தொகுதியினருக்கான வகுப்புகள் தொடங்க இருக்கின்றன. அவை வேறு 61 ஒன்றியங்களில் தொடங்கப்படும்.

6. 1983–84-ல் மேலும் 54 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் மொத்தம் 5,400 வயதுவந்தோர் கல்வி மையங்கள் தொடங்கப்படும். இவற்றிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 கோடி செலவு ஆகும். ஆக 1983–84-ல் மாநில அரசின் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படும் வயதுவந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை 11,500 ஆக உயரும்.

[1983 மார்ச் 15

பிற அமைப்புக்களின் எழுத்தறிவிப்புப் பணிகள்.

7. தமிழ் நாட்டில் தனியார் அமைப்புகள் 34 மைய அரசு பண உதவியுடன் நடத்திய 1,710 வயதுவந்தோர் கல்வி மையங்களின் முதல் தொகுதி வகுப்புகளில் 63,000 பேர் எழுத்தறிவு பெற்றனர். அவ் வகுப்புகள் 1980-ல் முடிவு பெற்றன.

8. 1982-83-ல் மைய அரசு பண உதவி நீட்டிக்கப்பட்டு இரண்டாவதுதொகுதி வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1982–83-ல் 13 தனியார் அமைப்புகளால் நடத்தப்பட்ட 775 மையங்களினால் ஏறத்தாழ 25,000 வயதுவந்தோர் பயன் பெற்றனர். இவ்வமைப்புகள் 448 ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களையும் நடத்தி வருகின்றன.

எழுத்தறிவு பெற்றோர் மொத்த எண்ணிக்கை:

9. வயதுவந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் அண்மை ஆண்டுகளில் எழுத்தறிவு பெற்றவர்கள் விவரம் வருமாறு:—

| (1) | ஆடவர். (2) | மகளிர். (3) | மொத்தம். (4) | மொத்த எண்ணிக்கையில் சேர்ந்துள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|
| 1. அரசு தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம்—4 தொகுதி வகுப்புகள் (1979 ஜூலை—1983 செப்டம்பர்). | 2,40,000 | 2,48,000 | 4,88,000 | 2,28,000 |
| மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம்—3 தொகுதி | 2,58,000 | 3,56,000 | 6,14,000 | 3,08,000 |
| 3. தொண்டு நிறுவனங்கள் (1979–1981). | 26,000 | 37,000 | 63,000 | 34,000 |
| 4. கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் (1979–1982). | 3,000 | 3,000 | 6,000 | 3,000 |
| 5. நேரு இளைஞர் மையங்கள் (1979—1982). | 2,000 | 3,000 | 5,000 | 2,000 |
| மொத்தம் .. | 5,29,000 | 6,47,000 | 11,76,000 | 5,75,000 |



[1983 மார்ச் 15

பயன் பெற்றவர்களுள் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள் என்பதும் மொத்தம் பயன் பெற்றவர்களுள் 49 சதவீதம் ஆதி திராவிடர்களும், பழங்குடியினரும் என்பதும் மன நிறைவு அளிப்பதாகும்.

ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள்.

10. வயது வந்தோர் கல்வி மையங்களின் மூலம் தன்னிறைவு ஒன்றியங்களில் எழுத்தறிவு பெற்றவர்களின் நன்மைக்காக எழுத்தறிவுக்கு மேலான தொடர் கல்வி அளிப்பதற்கான ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களும் நடத்தப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை 1981–82-ல் 100 ஆக இருந்து 1982–83-ல் 222 ஆக உயர்ந்தது. 1983–84-ல் மேலும் 426 ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். அவற்றுள் 61 மையங்கள் பொது நூலகத் துறையின்கீழ் நடத்தப்படும் அந்தந்த ஊர் நூலகங்களோடு இணைந்து செயல்படும். இம் மையங்களில் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களின் நன்மைக்காக தகுந்த புத்தகங்களும், செய்தித் தாள்களும் வழங்கப்படும்.

வயது வந்தோர் கல்விக்கான வலம் வரும் ஊர்தி.

11. வயது வந்தோருக்கான கல்வி பயிலுபவர்களுக்கு உதவக்கூடிய கல்வித் திரைப்படங்களை காட்டக் கூடிய வலம் வரும் உந்து வண்டி ஒன்று (ஒலி, ஒளி சாதனங்களுடன்) மதுரை மாவட்டத்திற்கு 1981–82-ல் வழங்கப்பட்டுள்ளது.

நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான தொழில் சார்ந்த கல்வி.

12. 1980–81-ல் நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கு தொழில் சார்ந்த பள்ளிசாராக் கல்வி அளிப்பதற்கான திட்டம் ஒன்று, 150 மையங்களில் சோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. 1983–84-ல் அத்தகைய 80 மையங்களை ரூ. 2 இலட்சம் செலவில் நகரப் பகுதிகளில் தொடங்க திட்டமிடப்

பட்டுள்ளது. இம்மையங்கள் 10 மாதங்கள் இயங்கும். ஒவ்வொரு மையத்திலும் யாதானும் ஒரு பொருத்தமான தொழிலில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர் ஒருவர் (மாதம் ரூ. 100 ஊதியத்தில்) பணி செய்வார். மையத்திற்கு ரூபாய் 1,000 செலவில் கருவிகள் மற்ற உபகரணங்கள் வாங்கித் தரப்படும். சில்லரைச் செலவினங்களுக்காக மாதம் ரூ. 50 அனுமதிக்கப்படும்.

தொழிலாளர் கல்வி நிலையம்.

13. மைய அரசு பண உதவியுடன் தொழிலாளர்களுக்கான வயது வந்தோர் கல்வி நிலையம் ஒன்று 1982 ஜூலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் நகர்ப் புறங்களிலும் பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கல்வி பயிற்சிகளையும் பிற நடவடிக்கைகளையும் திட்டமிட்டு மேற்கொள்ளும். சென்னை நகரிலுள்ள தொழிலாளர் பற்றிய விவரங்கள் சேகரித்து வெளியிடப்பட்டுள்ளன. கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்த ஆளுகைக் குழு ஒன்று இந்நிலையத்தின் பணிகளை நிருவகித்து வருகிறது. 1982 செப்டம்பர் முதல் 1983 ஜனவரி முடிய உள்ள காலத்தில் பனை ஓலை பொருட்கள் செய்வது, தட்டச்சுப் பொறி, படி பெருக்கி, ஆகியவற்றை இயக்குதலும் பழுது பார்த்தலும் ஆகியவற்றில் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டு மொத்தம் 296 பேர் பயன் பெற்றுள்ளனர். 1983–84-ல் இது போன்ற மேலும் பல தொழில்கள் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட இருக்கின்றன.

யுனெஸ்கோ விருது.

14. வயது வந்தோர் கல்வியில் அண்மை ஆண்டுகளில் மாநில அரசின் சீரிய முயற்சிகள் அனைத்துலக மட்டத்தில் பாராட்டுப் பெற்றுள்ளன. எழுத்தறிவுப் பணிக்கு யுனெஸ்கோ நிறுவனம் தரும் பெருமைக்குரிய விருதான நடேஜ்டா குருப்ஸ்காயா விருது 1982-ம் ஆண்டுக்கு இம்மாநிலத்தின் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிசாராக் கல்வி.

15. பள்ளிக்கே செல்லாதவர்களும், சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6–14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளிசாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1982–83-ல் செயல்பட்ட இம்மையங்களின் எண்ணிக்கை 1,038 ஆகும். அவற்றில் 748 மையங்கள் 1980–81-லும், 240 மையங்கள் 1981–82-லும், 50 மையங்கள் 1982–83-லும் தொடங்கப்



பட்டன. 1983–84-ல் மேலும் 100 மையங்கள் தொடங்கப்படும். இம்மையம் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டு வேலைசெய்யும். பத்து மாத வகுப்புகள் மூன்றை நடத்தும்—ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக. ஊராட்சி ஒன்றியப் பள்ளி கட்டிடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளிசாராக் கல்வி வகுப்புக்களை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் சுமார் 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

16. மேற்கூறிய 1,038 மையங்களுக்கும் மேலாக, இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் ஏழைச் சிறுவர்களுக்கு கல்வி அளிப்பதற்காக 30 பள்ளிசாராக் கல்வி மையங்கள் 1981–82-ல் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இம்மையங்களில் இடைநிலை ஆசிரியர்கள் 30 பேர் கல்வி பயிற்றுவித்து வருகின்றனர். இம்மையங்களில் பயின்று வரும் 969 மாணவர்கள் 1983 டிசம்பரில் 8-ம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதவிருக்கிறார்கள்.

தந்துள்ளது. புதிய பல்கலைக்கழகம் அமைக்க தன்கீழுள்ள கல்வி நிறுவனங்களைத் தருவதற்கு அவ்வறக்கட்டளை விதிக்கும் நிபந்தனைகளையும் கருத்திற்கொண்டு அவ்வறிக்கையை அரசு ஆய்வு செய்து வருகிறது. அப்பல்கலைக் கழகம் மாணவர் தங்கிப்படிக்கும் ஒற்றை வகைப் பல்கலைக்கழகமாக இருக்கலாமா அல்லது கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கும் வகையைச் சார்ந்ததாக இருக்கலாமா என்பதும் ஆய்வு செய்யப்படுகிறது.

7. தற்பொழுது, இம்மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக்கல்லூரிகள் தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்குகின்றன. தன்னுரிமை பெற்றதிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிய ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் வீதம் இக்கல்லூரிகள் ஒவ்வொன்றுக்கும் பல்கலைக் கழக மானியக்குழு நிதி உதவி தருகிறது. அக்கல்லூரிகளில் கூடுதலாக ஆசிரியர்களை நியமித்துக் கொள்வதற்காக இந்நிதியுதவி தரப்படுகிறது. அந்த ஐந்தாண்டுக்காலம் முடிந்த பின் தொடர்ந்து ஆண்டுதோறும் ரூபாய் 2 இலட்சம் மானியம் வழங்கிவர இவ்வரசு இசைந்துள்ளது.

தொடர் கல்வி.

8. மாலை நேர வகுப்புகளை நடத்தி வரும் கல்லூரிகளில் தற்பொழுது சுமார் 6,000 பேர் பயில்கின்றனர். 1982–83-ல் மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி, தஞ்சாவூர், அரசு கலைக் கல்லூரி, திருவாரூர் ஆகியவற்றில் பி.காம். மாலை நேர வகுப்பு தொடங்கப்பட்டது. 1983–84-ல் அரசுக் கல்லூரிகள் கூடுதல் மற்றும் புதிய மாலை நேர வகுப்புகளைத் துவங்குவதற்காக ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. மதுரை காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறை வகுப்புகளில் தற்பொழுது சுமார் 1 லட்சம் பேர் பயில்கின்றனர். மேலும் முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்தி வரும் "அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக்கழக" வகுப்புகளில் ஏறத்தாழ 14,000 பேர் பயின்று வருகின்றனர்.

கல்வித் தர மேம்பாடு.

10. கடந்த 5 ஆண்டுகளில், அரசுக் கல்லூரிகளில் புதிதாக 115 பட்ட வகுப்புகளும், 34 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. 1982–83-ல் சிதம்பரத்தில் புதிதாகத் தொடங்கிய அரசுக் கல்லூரியில் முதற்கண் பி.ஏ. (பொருளாதாரம்), பி.ஏ. (ஆங்கில இலக்கியம்), பி.காம், பி.எஸ்.சி. (கணிதம்) ஆகிய பாடங்களில் பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1983–84 ஆம் ஆண்டில் புதிதாகப் பட்ட வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சமும், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.



11. அண்மை ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் ஆய்வுக் கூட வசதிகளைப் பெருக்க ரூ. 25 இலட்சத்துக்கு மேல் செலவிடப் பட்டுள்ளது. 1982–83-ல் அரசுக் கல்லூரிகளுக்குக் கூடுதலாக பெஞ்சு முதலிய மரச்சாமான்கள் வாங்க ரூ. 5 லட்சம் ஏற்பளிக்கப்பட்டது. மாணவர்களுக்கான பாடப்புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும், விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

12. அண்மை ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் கூடுதலாகவும் புதியதாகவும் பல வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளதால் கூடுதலாக வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றுக்கான கட்டடங்கள், மாணவர் வசதிக்கான சிற்றுண்டிச் சாலைகள் போன்றவை மற்றும் கழிவறை வசதிகள் போன்றவற்றிற்கு மிகத் தேவை ஏற்பட்டுள்ளது. இத்தேவை படிப்படியாகப் பூர்த்தி செய்யப்பட்டுவருகிறது. 1980–81 முதல் 1982–83 முடிய அரசுக் கல்லூரிகளுக்கான கட்டடப் பணிகளுக்காக "பெரும்பணி"களின் கீழ் ரூ. 95 லட்சமும் "சிறிய பணி"களின் கீழ் ரூ. 7 லட்சமும் செலவிடப்பட்டுள்ளது. 1983–84-ல் அரசுக் கல்லூரிக் கட்டடங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 47 லட்சமாகும். இதில் ரூ. 10 லட்சம் சிதம்பரம் அரசு கலைக் கல்லூரிக் கட்டடத்திற்கும், ரூ. 16 லட்சம் பிற "பெரும் பணி"களுக்கும், ரூ. 3 லட்சம் 'சிறிய பணி'களுக்கும் ஆகும். ரூ. 18 லட்சம் முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு இது வரை கட்டி முடிக்கப் பெறாத அரசுக் கல்லூரிக் கட்டட வேலைகளை முடிக்க 1983–84-ல் செலவிடப்படும்.

13. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந்தர உயர்வுக்காக, அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்காக, பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டத்தின் கீழும் மாநில அரசே செயல்படுத்தும் திட்டத்தின் கீழும், ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்பப்படுகிறார்கள். மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 1979–80-ல் 494 ஆசிரியர்களும், 1980–81 ஆம் ஆண்டில் 132 ஆசிரியர்களும் எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர்களும், விளக்குநர்களும் ஆண்டுதோறும் சிலர் வீதம் எம்.ஏ., எம்.எஸ்.சி. படிப்பிற்கு அரசின் செலவில் முகாமையில் அனுப்பப் படுகின்றனர். அவ்வாறு 1980–81-ல் 30 பேரும், 1981–82-ல் 30 பேரும் அனுப்பப்பட்டனர். 1983–84-ல் 60 பேர் அனுப்பப் படுவர், மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து

## VI. கல்லூரிக் கல்வி

சிதம்பரத்தில் 1982—83-ல் புதிதாகத் தொடங்கிய அரசு கலைக் கல்லூரியையும் சேர்த்து தற்பொழுது தமிழ்நாட்டில், கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள் 188 உள்ளன. அவற்றில் அரசுக் கல்லூரிகள் 53; தனியார் கல்லூரிகள் 135. அவற்றில் பயில்வோர் எண்ணிக்கை 1981—82-ல் 1,71,200 பேர் ஆக இருந்தது, 1982—83-ல் 1,82,700 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 1982—83-ல் சேலத்தில் தனியார் நிருவாகத்தின்கீழ் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கல்லூரி ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டது. கல்லூரிக் கல்வி இயக்குநரின்கீழ் செயல்பட்டு வரும் இந்த 188 கல்லூரிகள் மற்றும் பிற கல்லூரிகளைப் பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. பல்கலைக்கழக வாரியாக மேற்கண்ட 188 கல்லூரிகளின் விவரம் வருமாறு:—

| பல்கலைக்கழகம். | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள். | கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னைப் பல்கலைக் கழகம். | சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி. | 45 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | பெரியார், நீலகிரி. | 33 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப் பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. | 33 |
| மதுரை காமராசர் பல் கலைக் கழகம். | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. | 77 |
| | | 188 |





**பல்கலைக் கழகங்கள்.**

3. அண்ணா பல்கலைக் கழகம், சென்னை; மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் உரிய அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. 1981—82-லிருந்து சென்னை, மதுரை காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுக்கு அரசு ஆண்டுதோறும் தரும் ஒட்டுமொத்த மானியத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

4. கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழக வளாகம் சோமயாம்பாளையம், வடவள்ளி கிராமங்களில் சுமார் 1,000 ஏக்கர் நிலப் பகுதியில் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகம் சூரியூர் கிராமத்தில் சுமார் 1,000 ஏக்கர் நிலப்பகுதியில் அமைந்துள்ளது. இவ்விரு பல்கலைக் கழகங்களுக்குமான கட்டடங்களையும், தொழிற் கல்வி இயக்ககத்தின் கட்டுமானப் பிரிவே கட்டி வருகிறது. கல்வி நடைமுறைக்குகந்ததாகவும், வேலை வாய்ப்புக்கு வழி செய்வதாகவும், இருக்க வேண்டும் என்ற நோக்குடன் பாரதியார் பல்கலைக் கழகம் பட்ட வகுப்புகள், பட்டமேற்படிப்பு வகுப்புகள் ஆகியவற்றின் பாடத் திட்டங்களை மாற்றியமைத்து நவீனப்படுத்தத் தொடங்கியுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் பல்வேறு பாடங்களில் சிறப்புத்துறைகள் தொடங்கக் கருதியுள்ளது. அவை உயர் கல்வியின் சிறப்புக் கூறுகளாக அமைவதோடு நாட்டின் சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும். முதலில் இவ்வாண்டு பாரத் ஹெவி எலெக்டிரிக்கல்ஸ் முதலிய நிறுவனங்களின் உதவியுடன் நிருவாகப் பயிற்சி பற்றிய சிறப்புத் துறை அமைக்கப்பட்டுள்ளது.

5. மகளிர் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று 1981 டிசம்பரில் பாரதியார் நூற்றாண்டு விழாத் தொடக்க நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1982 ஏப்ரலில் வல்லுநர் குழு ஒன்று டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேசய்யா தலைமையில் அமைக்கப்பட்டது. குழுவின் அறிக்கை 1982 செப்டம்பரில் அரசுக்குத் தரப்பட்டது. இப்பொழுது பல்கலைக் கழக மானியக்குழு, மைய அரசு ஆகியவற்றுடன் கலந்து அவ்வறிக்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மகளிர் பல்கலைக்கழகம் வரும் ஆண்டில் கொடைக்கானலில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. காரைக்குடியில் டாக்டர் அழகப்பச் செட்டியார் கல்வி அறக்கட்டளை தற்பொழுது நடத்திவரும் கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைந்து அங்கு ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவது பற்றிய அரசின் முடிவு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்களை வல்லுநர் குழு ஒன்று ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை

1983 மார்ச் 15]

டாக்டர் (பி·எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 29 பேர் இதுவரை முகாமையில் அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் கல்லூரி ஆசிரியர்களை மேற் படிப்புக்காக முகாமையில் அனுப்புவதற்காக 1983—84-ல் ரூ. 1.25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

படிப்புதவித் தொகையும் பயிற்சி முன்பணமும்.

14. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமானவற்றின் கீழ் பயன்பெறுவோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1981—82-ல் புதிதாகத் தந்த படிப் புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல்நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1982—83-ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) எண்ணிக்கை. | 1983—84-ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ளபணம். (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (ஓரளவு மைய அரசு நிதி உதவி பெறுவது). | 1,700 | 4,948 | 55 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,405 | 6,360 | 40 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை. | 120 | 120 | 3 |

15. மாநில அரசு 1980—81-லிருந்து எஸ். எஸ். எல். சி., ஆங்கிலோ-இந்தியப் பள்ளி இறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் முதல் மதிப்பெண் பெறுவோர்களுக்கும் உயர் நிலைப்பள்ளிக் கல்விக்கான இந்தியக் குழு, மைய அரசு உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் ஆகியவற்றின் தேர்வுகளில் தமிழகத்திற்குள் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கும்,



1983 மார்ச் 15]

அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 6,000க்கு அதிகமாக இருந்தாலும் கூட வழங்கத்தக்க படிப்புதவித் தொகைத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளது. இப் படிப்புதவித் தொகைகள் ஆண்டுக்கு 10 மாதம் தரப்படுகின்றன.) பட்ட மேற்படிப்பு முடியும் வரை இவர்களுக்கு இப் படிப்பதவித் தொகைகள் வழங்கப்படும்.

16. பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் பயிலும் ஆதிதிராவிடரும் பழங்குடிகளும் பின்வரும் சலுகைகளை பெற்று வருகின்றனர்.

(1) அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் துறை வழங்கும் படிப்புதவித் தொகைகள்.

(3) மேல்நிலைப் பள்ளித்தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற் படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 800 உதவிப் பணம் (ஒரு தடவை மட்டும்)

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை பிற்பட்டோர் நலத்துறை வழங்கி வருகிறது.

கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி.

17. தமிழ்ப் பயிற்றுமொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது, இம்மாணவர் எண்ணிக்கை 1980—81ல் 18,040. 1981-82-ல் 20,695. 1982-83—ல் 22,840 என்றவாறு அதிகரித்து வருகிறது. இத் திட்டத்திற்காக 1983-84—ல் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழை பாடமொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 900-க்கு அதிகமான பாட புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இவற்றில் மாணவர்கள் கோரும் சில புத்தகங்களுக்கு மறுபதிப்பு வெளியிட பாடநூல் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கல்லூரிகள் சுமுகமாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகள்.

18. கல்லூரிகளில் ஆசிரியர்கள், பிற பணியாளர், மாணவர்கள் ஆகியோரின் குறைகளை உடனுக்குடன் களைய நலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1981-லும், 1982-லும் அனைத்துக் கட்சிகளின் கூட்டங்களை கூட்டி விவாதித்த பின் மாணவர் அமைதியின்மையைக் குறைக்கும் நோக்குடன்

கல்லூரிப் பேரவைத் தேர்தல்களை அமைதியாகவும், குறுகிய காலத்திலும் நடத்திட வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தேர்வுகளில் மாணவர்கள் ஒட்டுமொத்தமாக பார்த்து எழுதுவதை தடுப்பதற்கு வழி வகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

19. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை.—பல்கலைக் கழக மானியக் குழு சம்பள வீதங்களை அளித்தது; உரிய தகுதி பெற்ற பயிற்றுநர்களையும், விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது; 10 ஆண்டு பணி முடித்த உதவிப்பேராசிரியர்களை பேராசியர்களாக உயர்த்தியது; உதவி பெறும் கல்லூரியில் பணியாற்றும் பணியாளருக்கு நேரடியாக ஊதியம் வழங்கியது. மற்றும் ஓய்வூதியம், விடுப்பு குழு ஈட்டுறுதித் திட்டம் ஆகிய விஷயங்களில் அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கியது ஆகியவையாகும். தனியார் கல்லூரிகளில் பணி செய்வோர் பணியிலிருக்கும் பொழுதே இறந்துவிட்டால் சில நிடந்தனைக்குட்பட்டு அவர்களுடைய மகன்/மணமாகாத மகள்/மனைவி/பிற நெருங்கிய உறவினர் ஆகியோருக்கு தனியார் கல்லூரிகளில் வேலை தருவதில் முன்னுரிமை தரவேண்டும் இந் நியமனங்களுக்கும் வேலை வாய்ப்பகங்களைக் கலக்கத் தேவையில்லையென்று அண்மையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கல்லூரி ஆசிரியர்களுள் சிறப்பாக பணியாற்றுபவர்க்கு அரசு விருதுகளும் வழங்கப்படுகின்றன.

சட்டக் கல்வி.

1[illegible]. சட்டக் கல்லூரிகளில் 1982-83-ல் பயின்று வந்தோர் எண்ணிக்கை வருமாறு.—

| சட்டக் கல்லூரியின் பெயர் | முறையான பட்ட வகுப்புகள். மொத்த மாணவர். | முறையான பட்ட வகுப்புகள். அவர்களுள் தமிழில் பயின்றவர். | பட்ட மேற் படிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை .. .. | 960 | 94 | 105 |
| மதுரை .. .. | 685 | 94 | 15 |
| கோயம்புத்தூர் .. | 348 | .. | .. |
| திருச்சிராப்பள்ளி .. | 348 | .. | .. |



21. அண்மை ஆண்டுகளில் மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் உள்ள சட்டக் கல்லூரிகளுக்கு கட்டிடம் மற்றும் மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

22. இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் யோசனைக்கேற்ப இம் மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரிகளில் 1983–84 முதல் ஐந்தாண்டு மேல்நிலைப் பள்ளி படிப்பில் தேறிய பின் 5 ஆண்டு சட்டப்படிப்பு முறை புகுத்தப்பட இருக்கிறது. 1983–84–ல் சட்டக் கல்லூரி ஒவ்வொன்றிலும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப் படும் மாணவர்களில் சுமார் பாதிபேர் இந்த புதிய 5 ஆண்டு சட்டப்படிப்பு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர். 1983-84–ல் இதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## VII தொழில் நுட்பக் கல்வி

தொழில்நுட்பக் கல்விக்காக 1983–84-ல் சுமார் ரூ. 17 கோடி (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம், அறிவியல் மற்றும்தொழில் நுட்பவியல்மையங்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட, ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும் (திருநெல்வேலியில் 1981-82.ல் திறந்த அரசு பொறியியற் கல்லூரி உட்பட:) 59 பல்தொழில் நுட்ப பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் ஏழும், தனித் தொழில் பட்டய–டிப்ளமா–கல்வியகங்கள் எட்டும் உட்பட); 14 (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

2. இவற்றில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை பொறியியல் கல்லூரிகளில் (திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேர பட்ட வகுப்புகளில் 1657 பேர்கள் பல்தொழில் நுட்ப பயிலகங்களில் பட்டயபடிப்புகளில் 8,350 பேர்கள் மற்றும் தொழிற்பாட மேல் நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள் ஆகும். பல்தொழில் நுட்ப பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. சிலவற்றில் ஷிப்டு முறையைத் தொடங்கியது. பின்வருமாறு புதிய பயிலகங்களை திறந்தது ஆகிய காரணங்களால் பல்தொழில் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது:—

| ஆண்டு | | புதிதாகத் திறந்த பல்தொழில் பயிலகங்கள் |
|---|---|---|
| 1979–80 | | 1 |
| 1980–81 | .. | 5 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |
| 1981–82 | .. | 6 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |
| 1982–83 | .. | 9 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |

அண்ணாமலை பல்தொழில் பயிலகம், செட்டிநாடு மற்றும் முத்தையா பல்தொழில் பயிலகம், அண்ணாமலை நகர் ஆகிய இரண்டிலும் 1981-82இல் புகுத்திய ஷிப்டு முறை நன்கு செயல்படுவதால் 1983-84லிருந்து மேலும் ஐந்து பயிலகங்களுக்கு அதாவது நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி செங்கவராயன் பல்தொழில் பயிலகம், சென்னை சி. ஐ. டி. சாண்ட்விச் பல்தொழில் பயிலகம், கோயம்புத்தூர் வி. எஸ். வி. நாடார் பல்தொழில் பயிலகம் விருதுநகர் ராமகிருஷ்ணாமிஷன் வித்யாலயா பல்தொழில் பயிலகம், கோயம்புத்தூர் ஆகியவற்றுக்கும் விரிவாக்கப்படும் இதனால் அவ்வைந்து பயிலகங்களிலும் சேரும் மாணவர் எண்ணிக்கை மொத்தம் மேலும் 400 அதிகரிக்கும்.



**பல்வகைப்பாடப் பிரிவுகளைத் தொடங்குதல்**

3. எந்தெந்தப் பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் தற்பொழுது தொழில் துறையில் தேவையோ அதை பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆண்டுதோறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் வேலை வாய்ப்புக்கு இசைந்த புதிய பாடபிரிவுகள் தொடங்கப்படுகின்றன. அவ்வாறு கடந்த சில ஆண்டுகளில் பின்வரும் புதிய பாட முறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

பட்டய மேற்படிப்புகள்

வார்படப் பொறியியல்
கட்டட அமைப்புத் தொழில் நுட்பவியல்
தொழில் முறை மின்னணுவியல்
இயந்திரப் பராமரிப்பு
உற்பத்திப் பொறியியல்
தொழில் முறைப் பொறியியல்
கருவி நுட்பவியல்

பட்டயப் படிப்புகள்

குளிர்பதன முறை மற்றும் குளிர் வசதி முறை
உற்பத்திப் பொறியியல்
மின்னணுவியல்
இயந்திர வடிவமைப்பு மற்றும் இயந்திரப் பட வரைவு.

விருப்பப் பாடங்கள்

நவீன வேளாண்மைக் கருவித் தொழில் நுட்பவியல்;

தொழில் முறை மின்னணுவியல்; கருவியல்பவர் சிஸ்டம்ஸ் தொலைக்காட்சி பற்றிய அடிப்படைத் தொழில் நுட்பமும் பராமரிப்பு முறைகளும்;

4. 1983–84-ல் பல்தொழில் பயிலகங்களில் பின்வரும் புதிய பாட முறைகள் தொடங்கப்படும்:—

பட்டய படிப்புகள் :

| | |
|---|---|
| சேஷசாயி பல்தொழில் பயிலகம், திருச்சிராப்பள்ளி. | தாள் மற்றும் தாள் தயாரிப்புத் தொழில் நுட்பவியல். |

| | |
|---|---|
| தியாகராசர் பல்தொழில் பயிலகம். சேலம். | செயற்கை நூலிழை தொழில் நுட்பவியல். |
| சங்கர் பல்தொழில் பயிலகம், தாழையூத்து. | மின்னணுவியல். |

விருப்பப் பாடம் :

| | |
|---|---|
| பக்தவச்சலம் பல்தொழில் பயிலகம், காஞ்சிபுரம். | தொலைக்காட்சித் தொழில் நுட்பமும் பராமரிப்பு முறைகளும், |

பல்தொழில் பயிலகங்களுக்கு கூடுதல் வசதிகள் :

அவற்றின் தரத்தை உயர்த்துதல் :

5. சென்னை, மையப் பல்தொழில் பயிலகத்தில் 1982-83ல் மைக்ரோ பிராஸசர் அடிப்படையில் அமைந்த மின் கணக்கீட்டுப் பொறி ஒன்று அமைக்கப்பட்டது. 1983-84-ல் மதுரையில் உள்ள தமிழ்நாடு பாலிடெக்னிக்கில் உள்ள ஆய்வுக்கூடங்களுக்கு நவீன தளவாடங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தப்படும். அவ்வாண்டு அந்த பாலிடெக்னிக்கில் கேள்வி-காட்சி கல்விப் பிரிவு ஒன்றும் நிறுவப்படும். அண்மை ஆண்டுகளில் கிருஷ்ணகிரி அறந்தாங்கி, உதகமண்டலம், எட்டையபுரம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள அரசு தொழில் பயிலகங்கள் நான்கில் ஒவ்வொன்றுக்கும் 1983-84-ஆம் ஆண்டு வேன் ஒன்று வழங்கப்படும். மாணவர்களும் ஆசிரியர்களும் செயல்முறை பயிற்சிக்காக தொழிலகங்களுக்குச் செல்லுதல் நில அளவைப் பயிற்சி முகாம்களுக்குச் செல்லுதல் முதலிய காரியங்களுக்கு அவை பயன்படும். பல்தொழில் பயிலக பாடத் திட்டங்களை வகுக்கும் மையம் ஒன்று 1982-83-ல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் தனியாக அமைக்கப்பட்டது.

கலை' கைத் தொழில் மற்றும் சிற்பக் கல்லூரிகள்:

6. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கலை—கைத்தொழில் கல்லூரிகளையும் மாமல்லபுரத்திலுள்ள அரசு கலை-சிற்பக் கல்லூரியையும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே நிருவகித்து வருகிறார். சென்னையிலுள்ள கலை கைத்தொழில் கல்லூரியில் 1982-83-ல் ஓவியம் மற்றும் சிற்பத்தில் பட்ட வகுப்பு ஒன்று தொடங்கப்பட்டது' கும்பகோணம் கலை கைத்தொழில் கல்லூரியில் 1983—84-ல் ஓவியம் மற்றும் விளம்பர ஓவியம் குறித்து பட்டய மேற்படிப்பு வகுப்பு ஒன்று துவங்கப்படும். 1983—84—ல் அக்கல்லூரிக்கு கும்பகோணத்தில் ரூ.10 இலட்சம்செலவில்60 மாணவர்கள்தங்கக் கூடிய மாணவர்விடுதி ஒன்று கட்டும் பணி தொடங்கப்படும்,



வணிகவியல் பாடங்களில் தேர்வுகள்.

7. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு வணிகப் புவியியல். வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வு நடத்தும் பணியையும் செய்து வருகிறார். ஆண்டு தோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத் தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு 1,80,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வுகள் அனைத்தும் 1982 மே மாதம் எழுதிய 91,160 பேர்களுள் தேறியவர்கள் எண்ணிக்கை 44,376 அதாவது 49 விழுக்காடு ஆக இருந்தது.

தொழில் நுட்பக்கல்வி இயக்கத்தின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகள்

8. 1982-83—ல் பொறியியல் கல்லூரிகளில் பின்வரும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டன.

| | |
|---|---|
| (1) அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி. | நுண் அலை மற்றும் ஒளி அலை பொறியியல். |
| (2) அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர். | செயல்முறை வேதியியல் |
| (3) கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம் | கணக்கீட்டுப் பொறி சார்ந்த வரைவு வடிவமைப்பு |

சேலத்திலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 1983-84-ல் ''பயோ மெடிக்கல்'' பொறியியல் ஒரு விருப்பப் பாடமாக தொடங்கப்படும்.

9. கணக்கீட்டுப்பொறிகளை பயன்படுத்தும் பொருட்டு மாணவர்களுக்கு செயல்முறைப் பயிற்சியளிப்பதற்காக 1982-83-ல் சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ 4.50 இலட்சத்தில் ஒரு சிறிய கணக்கீட்டுப்பொறி அமைக்கப் பட்டது. 1983-84-ல் காரைக்குடியில் உள்ள அழகப்பா பொறியியற் கல்லூரியில் ஒரு கணக்கீட்டு பொறி மையம் அமைக்கப்படும். அக்கல்லூரியில் மாணவியர் விடுதி ஒன்றும் 1983—84—ல் கட்டத் தொடங்கப்படும்.

**அண்ணா பல்கலைக் கழகம்:**

10. பொறியியல் கல்லூரி கிண்டி, அழகப்பச் செட்டியார் தொழில் நுட்ப கல்லூரி வளாகத்தில் அமைந்திருந்த சென்னைப் பல்கலைக்கழக தொழில் நுட்பத் துறைகள்; அப்பல்கலைக் கழகக் கட்டிடக் கலை-நகர்ப்புறத் திட்டப்பள்ளி சென்னை தொழில் நுட்ப நிறுவனம் குரோம்பேட்டை ஆகிய நான்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்து 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4 ஆம், நாள் அன்று அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் 21 பட்ட வகுப்பு பாட முறைகள், 31 பட்ட மேற்படிப்பு பாடமுறைகள், 7 பட்ட மேற்படிப்புக்கு உயர்ந்த நிலையில் பட்டய படிப்பு பாடமுறைகளும் உள்ளன. கணக்கீட்டுப் பொறி அறிவியலில் பி. ஈ பட்ட வகுப்பு ஒன்று 1982-83—ல் தொடங்கப்பட்டது. கணிதம், இயல்பியல். வேதியியல் ஆகியவற்றில் எம்பில் படிப்பதற்கான வசதிகளும் பொறியிய , தொழில், நுட்பம், அறிவியல் ஆகிய துறைகளில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளன நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் எத்தனால் ஐக்கொண்டு தானியங்கி உந்து வண்டிகளை இயக்குதல் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் பயன் தரு நிலையில் உள்ளன படிகவியல், மருத்துவ தொழி நுட்பவியல், சக்தி வள ஆதாரங்கள் கட்டிடத் தொழிலியல் ஆகிய துறைகளில் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மானியக்குழு நிதிஉதவி பெற்று இப்பல்கலைக்கழகம் செயல்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசின் இணை மானியமாக ரூ 62 இலட்சம் (திட்டப்பணி மானியமாக) தர இவ்வரசு 1982—83-ல் ஏற்பளித்துள்ளது இப்பல்கலைக் கழகத்துக்கு மானியமாக ரூ. 194 இலட்சம் வழங்க 1983-84-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

11. அண்ணா பல்கலைக் கழகம் தொலைவிலுணரும் ஆராய்ச்சி நிலையம் (Remote sensing centre) ஒன்றை அமைத்து வருகிறது. இதன் மூலம் பூமியிலுள்ள பலவகையான கனிமம் போன்ற மூலப் பொருட்களை ஆய்வு செய்து கண்டறிந்து கணக்கெடுத்து வகைப்படுத்தி வேளாண்மை, கனிமம் பொருட்களைக் கண்டுபிடித்துக் கணக்கெடுத்தல் போன்ற பல்வேறு துறைகளிலும் இம்மாநிலத்திலுள்ள மூலப்பொருள் ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்த இயலும்

**இதர நிறுவனங்கள்.**

12. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரிக்கு மானியமாக ரூ 32 இலட்சமும் சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1983—84-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் மைய அரசு உதவியுடன் அமைத்துள்ள உணவுத்தொழில் பயிற்றகம் 1981—82லிருந்து செயல்பட்டு வருகிறது.



**அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :**

13. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்படுகிறது.

14. இம் மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறிவியல். தொழில் நுட்பவியல் குழு ''—வை அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது. அது ஒரு தனி நிறுவனமாகப் பதிவு செய்யப்படும்.

[1983 மார்ச் 15

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

### (i) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1983—84-ல் மொத்தம் ரூ. 165 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.**

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து (8—10 வகுப்புகளைக் கொண்ட) விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன:—

| | ஆண்டுதோறும் சேரும் மாணவரின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை .. .. .. | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாயக்கன்பாளையம் .. .. | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணாமலைநகர் .. .. | 50 |
| (4) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் .. .. .. | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களில் விளையாட்டுக்களில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 3? பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. வரும் 1983—84-ம் ஆண்டில் விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதி வசதிகளை மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலைக்கும் விரிவாக்க கருதப்பட்டுள்ளது. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை மற்றும் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் இவ்வசதி அளிக்கப்படும்.



1983 மார்ச் 15]

5. மாநில விளையாட்டு நிலையம் ஒன்றையும் அதனுடன் இணைந்த முழு வளர்ச்சியுற்ற விளையாட்டு உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் அமைப்பதற்கான அடையாள நிதி ஒதுக்கீடு 1983—84-ல் செய்யப்பட்டுள்ளது.

6. தற்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத் தலைமை இடத்தில் மட்டும் ஒரு மாவட்ட விளையாட்டு மன்றம் உள்ளது. பெரிய மாவட்டங்களில் விளையாட்டுப் பயிற்சியாளர்கள் பணி மாவட்டம் முழுவதற்கும் எளிதில் நன்கு கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் பெரிய மாவட்டங்களில் இரண்டாவதாக மாவட்ட விளையாட்டு மன்றம் தொடங்கலாம் என்று கருதப்பட்டுள்ளது. முதற்கண் 1983—84-ல் அத்தகைய இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படும்.

**விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் :**

7. தற்பொழுது நீலகிரி தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்த வெளி விளையாட்டரங்கங்கள் ஏற்கெனவே உள்ளன ; அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

8. விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தீவிரமான பயிற்சியளித்து அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை, '' இளமையில் தெரிந்தெடு '' என்ற திட்டத்துடன் இளஞ்சிறாருக்கான '' மிக இளமையில் தெரிந்தெடு '' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

9. 1983—84-ல் இத்துறை செயல்படுத்தவிருக்கும் புதிய திட்டங்களில் சென்னையில் நேரு விளையாட்டு அரங்குக்கு ரூ. 25 இலட்சம் செலவில் ஒளி விளக்கு அமைத்தல்; விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கல்வியில் ஆராய்ச்சி செய்வதற்கு ஆராய்ச்சிப் பணியிடங்கள் ஏற்படுத்துதல் ; உடற்பயிற்சிக் கல்வி தொடர்பான புத்தகங்களை வெளியிட நிதியுதவி அளித்தல் முதலியவையும் அடங்கும்.

(ii) சாரண சாரணியர்:

10. தமிழ்நாட்டில் தற்போது 1.42 இலட்சம் சாரண சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும்.

11. தமிழ்நாடு சாரண சாரணியர் இயக்கத்திற்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் அரசு மானியம், 1981–82-ம் ஆண்டு முதல் ரூ. 30,000-லிருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாநில மட்டத்தில் சாரண சாரணியர் அவ்வப்போது முகாம் நடத்திக்கொள்வதற்காக 21 ஏக்கர் நிலப்பகுதி ஒன்றை செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆலத்தூர் என்னுமிடத்தில் மாநில அரசு வழங்கியுள்ளது.

(iii) தேசிய மாணவர் படை :

12. தமிழ்நாடு தேசியமாணவர் படை இயக்கக தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் 5 அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| | பிரிவுகள்/ படைகள். | அலுவலர் கள். | மாணவர் கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப் பிரிவு (மாணவர்) .. .. | 45 | 215 | 17,370 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்) .. .. | 5 | 38 | 3,680 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்) .. .. | 623 | 621 | 61,650 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்) .. .. | 51 | 48 | 5,200 |
| | 724 | 922 | 87,900 |



1983–84-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து 188 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப்பணியாளர்கள், அமைச்சுப்பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

(iv) தேசியப் பணித் திட்டம் :

13. 1982–83 நிலவரப்படி, தமிழ்நாட்டிலுள்ள தேசியப் பணித்திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு :—

| | பங்குபெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம்மொத்த மாணவர்களில் சிறப்புப் பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| கல்லூரிகள் .. .. .. | 50,000 | 25,000 |
| மேல்நிலைப் பள்ளிகள் (மேல்நிலைப் பள்ளி வகுப்புகள்) .. .. | 20,000 | 10,000 |
| | 70,000 | 35,000 |

தேசியப் பணித் திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டு தோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ. 60-ம் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ரூ. 100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும், 5 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. இதற்காக 1983–84 மாநில அரசு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 72 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது. அத்தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும்.

14. 1983–84-ல் மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்கள் மேலும் 5,000 பேர் இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

15. சாரண சாரணியரும், தேசிய பணித் திட்ட மாணவர்களும் வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருவது பாராட்டுதற்குரியது.

[1983 மார்ச் 15

# IX. நூலகங்கள், ஆவணக் காப்பகம், அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை.

## (i) பொது நூலகங்கள்.

சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3·43 இலட்சம் புத்தகங்கள் உள்ளன· இதன் உறுப்பினர்கள் சுமார் 18,300 பேராவர். மாணவர்களின் வசதிக்காகத் தனியாக பாட புத்தகப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கு அண்மைக்காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களை வாங்குவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் 1982–83 முதல் மூன்று ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு ரூ.15 லட்சம் செலவுக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

2. தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 16 நூலக ஆணைக் குழுக்கள் உள்ளன. புதுக்கோட்டை மாவட்ட நூலக ஆணைக் குழு 1981 செப்டம்பரிலும் கன்னியாகுமரி மாவட்ட நூலக ஆணைக்குழு 1982 ஜூனிலும் அமைக்கப்பட்டன. மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 16 மாவட்ட மைய நூலகங்களும் 1477 கிளை நூலகங்களும் உள்ளன. நாகர் கோவிலுள்ள கவிமணி நிலைய நூலகம் கன்னியாகுமரி மாவட்ட மைய நூலகமாகச் செயல்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிய கிளை நூலகங்கள் 40 திறக்கப்பட்டன.; 1983–84 ல் மேலும் 20 திறக்கப்படும்.

3. வரும் ஆண்டில் (1983–84) சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் 25 படிப்பகங்கள் தொடங்கப்படும். இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 4·62 இலட்சமாகும். அதில் பாதியாகிய ரூ· 2·31 இலட்சத்தை அரசு மானியமாகத் தரும். மற்றப் பாதி செலவை சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு ஏற்கும்.

4. நூலக ஆணைக் குழுக்களின் கீழ் இயங்கும் அனைத்து நூலகங்களிலும் உள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 90 இலட்சமாகும். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 9·50 இலட்சம். உறுப்பினர்களாக இல்லாதவர்களும் இந்நூலகங்களிலுள்ள நூல்களைப் பயன்படுத்தலாம்.

5· 1981–82-ல் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல் வரியாக ரூ. 148 லட்சம் பெற்றன. (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 52 லட்சம் உட்பட)·



1983 மார்ச் 15]

நூலகக் கட்டடப்பணிகள்.

6· சேலத்தில் மாவட்ட மைய நூலகத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் மாவட்ட மைய நூலகங்கள் கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது. தருமபுரி மாவட்ட மைய நூலகத்துக்குக் கட்டிடம் கட்ட 1982–83ல் ரூ. 5 லட்சம் அரசு மானியம் தரப்பட்டது. 1983–84-ல் பெரியார் மாவட்டத்தில் மைய நூலகத்துக்கு கட்டடம் கட்ட ரூ. 5 லட்சத்தை அரசு மானியமாகத் தரும்.

7. கிளை நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டித்தரும்பணியை பெரும் அளவில் மாவட்ட மைய நூலகங்கள் மேற் கொண்டுள்ளன. அவை தங்கள் நிதி வசதியிலிருந்தே பல கிளை நூலகங்களுக்கு கட்டட வசதி செய்து வருகின்றன· அத்துடன் 1980–81 மற்றும் 1981–82 ஆண்டுகளில் அரசு மொத்தம் கொடுத்த ரூ· 10 லட்சம் கட்டட மானியத்தைப் பயன்படுத்தியும் கிளை நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

8. சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு சென்னையில் வட்டார நூலகங்களுக்கும் கிளை நூலகங்கள் அனைத்துக்கும் படிப்படியாகக் கட்டடங்கள் கட்டித்தரும் திட்டத்தை மேற் கொண்டு செயல்படுத்தி வருகிறது. காந்திநகர், ஷெனாய் நகர், அயனாவரம் ஆகிய வட்டார நூலகங்கள் கட்டி முடிந்து நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கிளை நூலகங்களைப் பொறுத்தவரை 7 நூலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன . 11 நூலகங்களுக்கு கட்டிட வேலை நடந்து வருகிறது.

9. மாவட்ட நூலக ஆணைக்குழுப்பணியாளர்கள் அனைவரும் 1–4–82 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர், இதனால் 3,214 பேர்கள் பயன் பெற்றுள்ளனர்.

## (ii) ஆவணக் காப்பகம்,

தென் ஆசியாவில் தலை சிறந்த ஆவணத் தொகுப்புகளைக் கொண்ட நிலையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிருவாகத்திற்கும் பயன்படுகிறது. நுண் நிழற்படக் கருவி ஒன்று நிறுவப்பட்டு ஆவணப் பணிக்குப் பயன்படுத்தப்படுவதுடன் ஆராய்ச்சியாளர்கள் போன்றோருக்கு நுண் நிழற்படப் படிகள் விலைக்குத் தரவும் பயன்படுகிறது. ஆவணக் காப்பகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில், ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சிறந்த புத்தகத்

தொகுப்பைக் கொண்ட நூலகம் ஒன்றும் ஆவணக் காப்பகத்தில் அமைந்துள்ளது. ஆவண வெளியீடுகளை வெளியிடும் பணியின் கீழ் முக்கியமான பொருள்கள் பற்றித் தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிடும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.

**வட்டார ஆவண மையங்கள் :**

2. மாவட்டங்களில் அரசு அலுவலக ஆவணங்களைச் சேகரித்து பாதுகாத்து வரும் நோக்குடன் மதுரை, சிதம்பரம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 1982 மார்ச் திங்களில் வட்டார ஆவண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் தென்னிந்திய வரலாறு, மாவட்டங்களில் மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்து எழுத பெரிதும் உதவும்.

**தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு;**

3. 1973–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று, சமுதாய விஷயங்கள் குறித்த ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் இரண்டாண்டுகால ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் நான்கினை வழங்கி வருகிறது. 1983–85 ஆம் ஆண்டுகளுக்கான இப்பணியிடங்கள் விரைவில் வழங்கப்படும்.

**விவரச் சுவடிப் பிரிவு :**

4. மாவட்ட விவரச் சுவடிகளைத் திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான விவரச் சுவடிகள் பிரிவு இத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் ஆங்கிலப்படிவம் அச்சகத்திலிருந்து விரைவில் வெளிவர இருக்கிறது. புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடிகளின் தமிழ் படிவங்களும் அச்சில் உள்ளன. தருமபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான விவரச் சுவடி வரைவுகள் குறித்த பணி தொடருகிறது.

5. மைய அரசு வெளியிட்டுள்ள "இந்திய விவரச்சுவடி" (கெசட்டியர் ஆப் இந்தியா) ஆய்வாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் மிகப் பயன்படுவதாகும். அப்புத்தகத்தில் நான்கு தொகுதிகளையும் தமிழாக்கி வெளியிடும்படி தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தை அரசு கேட்டுள்ளது.



**பயிற்சி:**

6. அரசு அலுவலகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவண பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 20 நடந்து (50 அலுவலகங்களைச் சார்ந்த) 345 பேர் பயன் பெற்றுள்ளனர். இப்பயிற்சி 1983–84லும் தொடர்ந்து நடைபெறும்.

**(iii) அருங்காட்சியகங்கள்**

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்படுகின்றன. வேலூரில் ஒன்றும் ஈரோட்டில் ஒன்றுமாக 1982–83இல் ஏற்பளிக்கப்பட்ட மாவட்ட அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1983–84இல் கோயம்புத்தூர் மாவட்ட அருங்காட்சியகம் அமைக்கப்படும், சென்னை அருங்காட்சியகத்தில் பல்வேறு காட்சிக்கூடங்களைத் திருத்தியமைக்க 1983–84இல் ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும். புதுக்கோட்டையிலும், சேலத்திலும் உள்ள மாவட்ட அருங்காட்சியகங்கள் பொதுமக்களுக்கு அறிவு புகட்டும் பணியை நன்முறையில் செய்ய உதவியாக 16 மில்லி மீட்டர் திரைப்படம் காட்டும் கருவி, துண்டுப்படம் காட்டும் கருவி ஆகியவை 1983-84இல் வழங்கி அளிக்கப்படும்.

2. சென்னையில் ரூபாய் 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் கட்டும் பணியும், சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக்கூடத்துக்கு ரூபாய் 25 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன.

**(iv) தொல் பொருள் அய்வுத்துறை**

தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை தமிழ்நாட்டிலுள்ள பண்டைய வரலாற்றுச் சின்னங்களை அகழ்வாய்வு செய்து கண்டு பிடித்தல், பேணி பாதுகாத்தல் ஆகிய முதன்மையான பணிகளை நன்முறையில் ஆற்றி வருகிறது. சங்க காலத்தில் சோழர் தலை நகரமாகவும், துறைமுகப்பட்டினமாகவும் விளங்கிய "பூம்புகார்" கடல் கோளால் அழிந்திருக்கலாம் என கருதப்படுகிறது. அந்நகரின் அழிந்துபோன பகுதிகளைக் கண்டுபிடிக்கும் மகத்தான ஆழ்கடல் அகழ்வாய்வுப் பணியினை கோவாவிலுள்ள "தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு" இணைந்து இத்துறை மேற்கொண்டுள்ளது.

இவ்வாராய்ச்சியின் தொடக்க நிலைப்பணி நடைபெற்ற பூம்பு காரையொட்டிய கடலுக்கடியில் சிதைந்துபோன சில கட்டடங்கள், கப்பல் ஆகியவை இருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது. இப்பணி தொடர்ந்து அடுத்த ஆண்டு விரிவாக நடைபெற இருக்கிறது.

2. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள, கரூர் சங்க காலத்தில் ஓங்கு புகழ் எய்திய சேரர்களது தலைநகர மாகும். கரூரில் இத்துறை மேற்கொண்ட அகழ்வாராயச்சியில் ரோமானியக் காசுகள், பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள், ஆகியவற்றுடன் தமிழகம் ரோமானியப் பேரரசுடன் சிறந்த வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததற்கான பிற சான்றுகளும் கிடைத்துள்ளன. அப்பொருட்களையும் மற்றும் கரூருக்கு அருகிலுள்ள இடங்களில் காணப்பெறும் சிற்பங்கள் கல் வட்டுக்கள் போன்றவற்றையும் கொண்டு கரூரில் வரலாற்றுக் காட்சியகம் ஒன்று அமைக்க 1983–84இல் ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே தஞ்சாவூர். இராமேஸ்வரம், கோயம்புத்தூர், கங்கைகொண்ட சோழபுரம் (மதுரையில்) கோவலன் பொட்டல் ஆகிய இடங்களில் இத் துறை இத்தகைய வரலாற்றுக் காட்சியகங்களை அமைத்து நடத்தி வருகிறது.

3. கல்வெட்டுக்கள் மாவட்ட வாரியாகப் படியெடுக்கப்பட்டு, படிக்கப்பட்ட பின்னர் துறையின் அச்சுப் பிரிவின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இதுவரை சென்னை, தருமபுரி, தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் கல்வெட்டுக்கள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

4. தமிழ்நாட்டிலுள்ள விலை மதிப்பில்லாத செப்புப்படி மங்கள் முதலியவை திருடு போவதைத் தவிர்க்கும் பொருட்டு இத்துறையின் சார்நிலை அலுவலகங்கள் ஏழு அமைக்கப்பட்டு அவற்றில் தமிழ்நாட்டிலுள்ள தொல் பொருட்கள் அனைத் தையும் பற்றிய முழு விவரங்கள் பதிவு செய்து வைக்கப்படு கின்றன.

5. பண்டைய ஓலைச் சுவடிகளைச் சேகரித்து பாதுகாப்ப துடன் இதுவரை வெளியிடப்படாத சுவடிகளை நூல் வடி வத்தில் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் வெளியிடும் பணியையும் இத்துறை செய்து வருகிறது. இதுவரை அத் தகைய 16 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

6. இந்திய நாட்டிலேயே மிகச் சிறந்த அரசர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவன் இராசராச சோழன். இம்மாமன்னன் உலகம் வியக்கும் உன்னதக் கலைப்படைப்பான இராசராசேச்சு



வரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலை கட்டியவன், அவன் அரியணை ஏறி 1984-85 ஆம் ஆண்டுடன் ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அனைத்துலகின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில், அவனுடைய ஆயிரம் ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்த தமிழக அசுர திட்டமிட்டுள்ளது. அதையொட்டி அனைத்துலக தொல் பொருள் இயல் கருத்தரங்கு ஒன்று நடத்தவும், இராசராசன் விட்டுச் சென்றுள்ள கட்டிடச் செல்வங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவை பற்றி விரிவான நூல் வெளியிடவும், அவன் வரலாற்றை சித்தரிக்கும் காட்சியகம் ஒன்றை அமைக்கவும் தமிழக அரசு கருதியுள்ளது.

7. இத்துறையின் பணிகளை விரிவுபடுத்துவதற்காக 1983-84ம் ஆண்டில் சிறப்பு நிதி ஒதுக்கமாக ரூ. 29 லட்சம் செய்யப்பட்டுள்ளது. இத்துறைக்கு 1983-84ம் ஆண்டில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 73 லட்சமாகும்.

# X. தமிழ் வளர்ச்சி

[1983 மார்ச் 15

### தமிழ் வளர்ச்சி இயக்ககம்

மாநில அரசின் அனைத்துத் துறைகளிலும் தமிழை முழுமையாகவும் செம்மையாகவும் பயன்படுத்தச் செய்வதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாவது ஆண்டின் நடவடிக்கைகள் 1982–83 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில் 17 துறைகளுக்கும், 1982–83 ஆம் ஆண்டில் பிற துறைகளுக்கும் விரிவாக்கப்பட்டது. 1983-84ல் தலைமைச் சயலகத்திற்கும் அரசு நிறுவனங்களுக்கும் இது விரிவாக்கப்படும் தமிழ் ஆட்சிச் சொல்லகராதியின் நான்காவது பதிப்பு 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15 ஆம் தேதியில் வெளியிடப்பெற்றது. அலுவலக நடைமுறை மற்றும் விதித் தொகுப்பு நூல்களின் தமிழாக்கப் பணியும் தொடர்ந்து நடைபெறுகிறது. தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியின் திருத்திய மறுபதிப்பை தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் வெளியிட இருக்கிறது.

2. 1867 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்டு வரும் தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையை தொகுத்து வெளியிடும் திட்டத்தின் கீழ் இதுவரை 20 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளை வெளிக் கொணரும் பணி தொடர்கிறது.

3. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும், தமிழ் வளர்ச்சித்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1981–82 இல் நூலாசிரியர் 7 பேருக்கும் 1982–83 இல் நூலாசிரியர் 4 பேருக்கும் நிதி உதவி தரப்பட்டது.

4. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை வெளியிடவும், அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

5. பல்வேறு துறைகளில் சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின் கீழ் 1975 80 ஆம் ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றிற்கு ரூ. 1·17 இலட்சம் செலவில் 1—1—1982 அன்று விருதுகள் அளிக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டில் வெளியான சிறந்த நூல்களுக்கான விருதுகள் வழங்குவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.



1983 மார்ச் 15]

### தமிழ்நாட்டு வரலாறு

6. தமிழ்நாட்டு வரலாற்றை ஆறு பிரிவுகளாக வெளியிடும் திட்டத்தின்கீழ் தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதியை 15—1—1983 அன்று முதல் அமைச்சர் வெளியிட்டார். பல்லவர்-பாண்டியர் காலம் பற்றிய மூன்றாவது தொகுதியை வேளியிடும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### மொழிபெயர்ப்பு பணி

7. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3 ஆங்கில நூல்களின் தமிழாக்கமும், 3 தமிழ் நூல்களின் ஆங்கில ஆக்கமும், வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 2 நூல்களை வெளியிட தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஆவன செய்து வருகிறது. 4 நூல்களின் மொழி பெயர்ப்புகள் அச்சிற்கு ஆயத்தமாக உள்ளன. 33 நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

### தமிழ் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு

8. 1982 ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது ரூ. 10,000 கவிஞர் புத்தனேரி ஆர். சுப்பிரமணியன் அவர்களுக்கும், தமிழ் எழுத்தாளர்களுக்கான 1982 ஆம் ஆண்டிற்கான திரு. வி. க. விருது ரூ. 10,000 திருக்குறளார் வி. முனுசாமி அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்

9. 1978 ஆம் ஆண்டில் தொடங்கிய இத்திட்டத்தின் கீழ் மாத வருமானம் ரூ. 400:க்கு மேற்படாத, தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 152 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

### பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழ் ஆராய்சியையும் ஊக்குவித்தல்

10. பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அம்மாநிலங்களில் தமிழில் பகுதி நேர பட்டய வகுப்பு தொடங்குவதற்காக, வழங்கி வரும் நிதியுதவியினை இவ்வரசு தொடர்ந்து, அளித்து வருகிறது. திருவனந்தபுரத்தில் உள்ள "திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி" யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் மானியம் தரப்பட்டுள்ளது.

### செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம்

11. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதல் மடலத்தின் முதற் பகுதி—மொழியியல் அறிஞர் மறைந்த திரு. தேவநேயப்பாவாணர் அவர்கள் தொகுத்தது—தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் மூலம் அச்சிடுவதற்காக 19–1–82 அன்று தரப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு சூன் மாதம் அச்சுப் பணி நிறைவேறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. சொற்பிறப்பியல் அகர முதலியின் பிற தொகுதிகளைத் தொகுக்கும் பணியினைத் தொடர்ந்து செய்வதற்காக இத் துறைக்கு மேலும் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

### உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

12. தமிழியலின் பல்வேறு புலங்களிலும் ஆராய்ச்சி செய்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அளித்து வருகிறது. டாக்டர் பட்டம் மற்றும் டாக்டர் பட்டத்திற்கு மேலான நிலை ஆராய்ச்சிகள் இங்கு நடக்கின்றன, தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றினை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இலக்கியம். பண்பாடு, வரலாறு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய பெருங்கருத்தரங்குகளையும் இந்நிறுவனம் நடத்தியுள்ளது. தமிழ் இலக்கியம் மொழியியல் வரலாறு பற்றிய சிறந்த நூல்களும், இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 50 தரமான நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் 'சுவடியியல்' 'மொழிப் பெயர்ப்பியல்' எனும் பட்ட மேற்படிப்புப், பட்டய வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

### தமிழ் பல்கலைக் கழகம்

13. தமிழ்ப் பல்கலைக்கழகம் 15—9—1981 அன்று தொடங்கப்பட்டது. தமிழியலின் பல்வேறு புலங்களில், அந்தந்தப் புலத்தில் மட்டுமின்றி ஒன்றுக்கு மேற்பட்ட புலங்களைச் சார்ந்த விரிவான ஆராய்ச்சித் திட்டங்களையும் இப்பல்கலைக் கழகம் நடத்துகிறது. இலக்கியம், இலக்கணம், மொழியியல், கல்வெட்டுகள், சமூகவியல், இசை ஓவியம் நாட்டியம் நாடகம், கட்டிட வேலைப்பாடு, சித்த மருத்துவம், மொழி, பெயர்ப்புகள் தொழில் நுட்பம் சார்ந்த பண்டையத் தமிழ் திறம்பாடுகள் (எடுத்துக்காட்டாக கப்பல் கட்டும் திறன் மாளை வேலைப்பாடு முதலியன) முதலிய பலதரப்பட்ட புலங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன ... படிப்பு



மற்றும் ஆராய்ச்சிக்குப் பின் வழங்கும் டி. லிட். பட்டங்களை இப்பல்கலைக் கழகம் வழங்கும். இந்தியாவில், அல்லது வெளி நாட்டில் பி. எச். டி. பட்டம் பெற்றவர்களிம், ஆராய்ச்சி திறனை நிறுவியவர்களும் மட்டுமே இப்பல்கலைக் கழகத்தில் டி. லிட். தகுதி பெறச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

14. தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு கட்டிடம் கட்ட (நிலம் கையகப்படுத்த செய்யும் செலவு உட்பட) 1682-83ல் மானியமாக ரூ. 1·14 கோடியை அரசு அளித்துள்ளது. மேலும் பல்கலைக் கழகத்தின் செயற்பாட்டிற்காக ரூ. 57 லட்சம் மானியம் அளிக்கப்பட்டது. 1983 பிப்ரவரி முதல் வாரத்தில் இப்பல்கலைக் கழகத்தை ஆய்வு செய்த பல்கலைக் கழக மானியக் குழுவின் ஆய்வுக்குழு அப்பல்கலைக் கழகம் செயல்படுவதைக் கண்டு மனநிறைவு கொண்டுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு விரைவில் தமிழ்ப பல்கலைக் கழகத்திற்கு நிதி உதவி அளிக்க முன்வருமென அரசு எதிர்பார்க்கிறது.

### உலகத் தமிழ் சங்கம்

15. 1983–84-க்கான வரவு–செலவு திட்டத்தில் மதுரையில் உலகத் தமிழ் சங்கம் அமைப்பதற்காக ரூ 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## XI. தமிழ் கலைகளும் பண்பாடும்

தமிழகத்தில் தொன்மை வாய்ந்த பண்பாட்டையும் புகழ் மிக்க பழங்கலையையும் இனந்தெரிந்து வளர்க்கவும் அவற்றிற்குப் புத்துயுரும் புதுப் பொலிவும் நல்கவும் தமிழக அரசாங்கம் தொடர்ந்து பல அரிய திட்டங்களை நிறைவேற்று வருகிறது. செய்தி சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறையின் கீழ், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ் பழங்கலை இயக்குநர் அகம், தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு, தமிழ்நாடு இசைக் கல்லூரிகள் முதலிய கலைப் பெரும் அமைப்புகள் இந்த முக்கியப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

2. கடந்த 27 ஆண்டுகளாக, இசை, நாட்டியம், நாடகம் ஆகியவைகளின் வளர்ச்சிக்கு பல முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் 1983-84 ஆம் ஆண்டிலும் பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இவ்வருடம் தலை சிறந்த கலைஞர்கள் 20 பேருக்கு கலைமாமணி விருது அளித்து கௌரவித்தது. திறமை மிக்க இளங்கலைஞர்கள் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 33 கலைஞர்களுக்கு 14 சபாக்களின் மூலமாக 68 நிகழ்ச்சிகள் நடத்த உதவியளித்துள்ளது. 12 கலைப் பயிற்சி நிறுவனங்களுக்கு மானியத் தொகை அளித்துள்ளது.

(ஈ) மாவட்டத் தலை நகர்களிலும், பேரூர்களிலும், வலம் வரும் ஓவியக் கண்காட்சி நடத்தும் திட்டத்தின் கீழ் தக்க வசதிகள் கொண்ட 'வலம் வரும் ஓவியக் கலைக் கண் காட்சிப் பேருந்து' ஒன்று வாங்குவதற்கு அரசு ரூ. 3.90 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. விரைவில் இக்கண்காட்சிப் பேருந்து செயல்படத் தொடங்கும்.

5. மேலும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு கீழ்க்காணும் புதிய திட்டங்களையும் வரும் ஆண்டில் செயற்படுத்த இருக்கிறது.

(அ) லலித கலா அகாடமி, சங்கீத நாடக அகாடமி மற்றும் சாகித்ய அகாடமி ஆகியவைகளுடன் தொடர்புடைய தலை சிறந்த கலைஞர்களின் சிறப்புமிகுகருத்துக்களைப் பெற "கலையில் சமுதாய நிலை" பற்றி கருத்தரங்கினை நடத்தி நாட்டின் தலை சிறந்த கலை வல்லுநர்கள், சமூகவியல் அறிஞர்களை அழைத்து கருத்தரங்கில் பங்கு பெறச் செய்து அதன் வாயிலாக கிடைக்கும் கருத்துக்களை நூல்வடிவில் வெளியிடுதல்.

(ஆ) ஓவியக் கலையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும், வளர்ச்சி பெறும் ஓவியர்களுக்கும் உதவும் வண்ணம், நாடு முழுவதும் உள்ள தலை சிறந்த ஓவிய சிற்பக் கலை வல்லுநர்களை அழைத்து செயல் விளக்கக் கூட்டங்களை அவ்வப்பொழுது நடத்துதல்.

(இ) தமிழகத்திலுள்ள சிறந்த ஓவியக் கலைஞர்களின் திறமை மிக்க ஓவியங்களை சுற்றுலாத் துறையின் உதவியுடன் அஞ்சலட்டைகளாகத் தயாரித்து விற்பனை செய்தல்.

### அரசு இசைக் கல்லூரிகள்.

6. சென்னையிலும், மதுரையிலும் உள்ள அரசு இசைக்கல்லூரிகளும், திருவையாற்றில் உள்ள கீழ்த் திசைக் கல்லூரியின் இசைப் பிரிவும், இசையையும் பரத நாட்டியத்தையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. இசைப்பாடல்களைக் கற்கும் மாணவர்கள் பாடல்களின் பொருளை முதலில் உணர்ந்து பின் முறையாக இசையமைப்பைக் கற்றுக்கொள்ள 1983-84 ஆம் ஆண்டில் அரசு இசைக் கல்லூரிகளில் மொழி விரிவுரையாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும் கடம், கஞ்சிரா, நுகர்சங்கம் மற்றும் நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் இக்கல்லூரிகளில் ஆரம்பிக்கப்படும். இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படும். இந்தப் பாரம்பரியமிக்க நுண்கலை வடிவங்களை நன்முறையில் பாதுகாத்து வளர்க்க தனிக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமென்கருதப்படுகிறது.



### தமிழ்ப் பழங்கலை இயக்குநரகம்.

7. 1983-84 ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்களை தமிழ்ப் பழங்கலை இயக்ககம் நிறைவேற்ற இருக்கிறது :

(அ) தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் தொன்மை வாய்ந்த சிற்பம், ஓவியம், நாட்டியம் போன்ற எண்ணற்ற கலைக் கருவூலங்களைத் தமிழ் மக்களும், பிறரும் அறியும் வண்ணம் ஒரு பண்பாட்டுக் கலை வளாகத்தை சென்னையில் அமைக்க ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட இருக்கின்றன. இத்திட்டத்திற்காக முன்னேற்பாடுகள் செய்ய ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள பல கோவில்களில் பூட்டி வைக்கப் பட்டுள்ள நிலவறைகளில் உள்ள பழம் சுவடிகள் மற்றும் படிமங்களை தேடித் திரட்டும் பணியினை இவ்வியக்ககம் மேற் கொள்ள ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) காவிரிப்பூம்பட்டினம், மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி போன்ற இடங்களில் ஆழ் கடலில் பழங்கால நாகரீகச் சின்னங்கள் கிடைக்கப் பெறும் என்று நம்பப்படுவதால், கடலுக்கடியில் நகரங்களின் சிதைவு இருக்கின்றதா என்பதை கண்டறியவும் சின்னங்களின் புகைப்படம் எடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைக்காக ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) பண்டைத் தமிழ் மன்னர்கள் வள்ளன்மை பற்றி இரண்டு சிறு திரைப்படங்கள் எடுக்கக் கருதப்பட்டுள்ளது. சோழர் தலைநகரில் பிற கட்டடங்களையெல்லாம் அழித்த போதிலும் பட்டினப்பாலை அரங்கேற்றம் செய்த இடமான சோழ மண்டலத்தில் உள்ள திருவெள்ளறை என்ற இடத்தில் உள்ள மண்டபத்தை மட்டும் சுந்தர பாண்டிய மன்னன் அழிக்காமல் பாதுகாத்ததாகக் கூறப்படுவதை விளக்கும் சிறு திரைப் படம் ஒன்றும் தயாரிக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 3·75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ) தமிழ்ப் பழங் கலைகளோடு ஒப்புடைய கம்போடியா லாவோஸ், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, மற்றும் வெளி நாடுகளிலுள்ள கலைகளை ஒப்பு நோக்கி, ஆராய்ச்சி செய்யும் திட்டத்தை ரூ. 2 இலட்சம் செலவில் இவ்வியக்ககம் தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல் படுத்தும்.

(ஊ) சங்க கால இலக்கியங்களில் குறிப்பிடப்படும் [illegible] செடி கொடிகளை வளர்த்து ஒரு பூங்கா அமைத்து [illegible] வாயிலாக தமிழர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்[illegible]

3. வரும் 1983-84 ஆம் ஆண்டில், மன்றம் தனது வழக்க
மான செயற் திட்டங்களுடன், கீழ்க்காணும் பல புதிய திட்டங்
களையும் நிறைவேற்ற எண்ணியுள்ளது.

(அ) தமிழகத்தின் கிராமியக் கலைகளை பதிவு செய்து
பாதுகாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக கரகம், காவடி, புரவி
யாட்டம், தெருக்கூத்து போன்ற கிராமியக் கலைகளில்
இரண்டை தேர்ந்தெடுத்து 10 நிமிட கால அளவிலான வண்ணத்
திரைப்பட உருவில் சுமார் ஆயிரம் அடி நீளத்திற்கு தமிழ்
நாடு திரைப்பட பிரிவின் உதவியுடன் தயாரிக்கப்படும்.
தமிழ்நாட்டின் கிராமிய கலைகளின் பெரும் பாரம்பரியத்
தையும் புகழையும் இளந்தலை முறையினருக்கு உணர்த்தும்
முகத்தான், கல்வி நிறுவனங்களிலும் மற்றும் மாநிலமெங்கும்
இவை திரையிட்டுக் காண்பிக்கப்படும்.

(ஆ) தமிழக மக்கள் தங்களின் பழம்பெரும் பண்பாட்டின்
அடிப்படைக் கருத்தினைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளப் பயன்
படும் வகையில், பழம்பெரும் தமிழ் இலக்கியங்களில் இருந்து



தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டினை விளக்கும் நிகழ்ச்சிகளைக்
கூத்து, நாட்டிய நாடகம், நடனம் ஆகிய புதிய படைப்புக்களாகத்
தயாரித்து அரங்கேற்றப்படும்.

(இ) தமிழ்ப் பழங்கலைகளில் பிரசித்தி பெற்ற கலைஞர்
கள் ஆற்றியுள்ள கலைப் பணிகளை விளக்கும் நூல்கள் தமிழ்ப்
பழங்கலை இயக்ககத்தின் ஒத்துழைப்புடன் தயாரித்து வெளியிடப்
படும்.

## தமிழ் நாடு ஓவியம் நுண்கலைக் குழு.

4. தமிழ் நாடு ஓவியம் நுண்கலைக் குழு தனது வழக்கமான
செயற் திட்டங்களுடன் பின்வரும் சிறப்புத் திட்டங்களையும்
கடந்த ஆண்டில் செயற்படுத்தியுள்ளது:—

(அ) தமிழ் நாட்டின் உயர் நிலை மற்றும் மேல் நிலைப்
பள்ளிமாணவர்களிடையே நுண்கலையறிவைப் பேணி வளர்க்கவும்,
புதிய அணுகு முறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் உதவும்
வகையில் தமிழ் நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன்
இணைந்து தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு ''ஓவிய ஆசிரியர்
சிறப்புப் பயிற்சித் திட்டம்'' ஒன்றினைச் செயற்படுத்தி வரு
கின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 200-க்கும் மேற்
பட்ட ஓவிய ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுப் பலனடைந்துள்ளார்
கள். மாநிலந் தழுவிய வரவேற்பையும் ஒத்துழைப்பையும்
பெற்றுள்ள இத்திட்டம் வரும் 1983–84 ஆம் ஆண்டிலும்
தொடர்ந்து செயற்படுத்தப்படும். மேலும் ஓவியக் கலை வல்லு
நர்கள் கையாளும் நவீன முறைகள் பற்றியும், நவீன ஓவியத்தின்
ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும் விளக்கும் வரைமுறைப் படங்
களை, விளக்கவுரையுடன் திரைப்படமாகவும் ''வீடியோ''
பதிவாகவும் எடுத்து பயிற்சி வகுப்புகளில் பங்கு பெறும் ஆசிரியர்
களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படுத்தவும் திட்டமிடப்
பட்டுள்ளது.

(ஆ) மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சி நடத்தும்
திட்டத்தின் கீழ் தமிழ் நாடு ஓவியம் நுண்கலைக் குழு இவ்வாண்டு
ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த ஓவியக் காட்சியொன்றை தமிழகத்
தலைநகரான சென்னையில் வெகுசிறப்பாக நடத்தியுள்ளது.

(இ) 'நுண்கலை' என்ற பெயரில் ஒரு புத்தகம் காலாண்டுக்
கொரு முறை குழுவினால் வெளியிடப்பட்டு வருகிறது. சிறந்த
ஓவியர்கள், சிற்பிகள் ஆகியோரைப்பற்றி புத்தகங்கள் வெளி
யிடும் பணி வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

எவ்வாறு நடத்தி வந்தனர் என்பதைத் தமிழ் மக்களும் பிற நாட்டினரும் உணரும் வண்ணம் செய்யும் திட்டத்திற்கு ரூ. 0·50 இட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) தமிழ்ப் பழங்கலை இயக்ககம், நாட்டுப்புறக் கலை விழாவும், பண்பாடு கலைகள் பற்றிய கருத்தரங்கும் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

(ஏ) தமிழகக் கோயில்களில் உள்ள சிறந்த சிற்பங்கள் ஓவியங்களைப் புகைப்படம் எடுத்து அவைகளை வெளியிடுவதற்கும், பண்டைத் தமிழ் இலக்கியங்களில் உள்ள காட்சிகளை வண்ண ஓவியமாகத் தீட்டவும் திட்டங்கள் உள்ளன.

(ஐ) அகத்தியர் பற்றிய ஆராய்ச்சித் திட்டம் ஒன்றும், மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**வாழ்வில் நலிந்த வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு மான்ய உதவி**

8. வறுமையில் வாடும் 1,416 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின்கீழ் ரூ. 150 ஓய்வூதியம் அரசிடமிருந்து பெற்று வருகின்றனர். இந்த ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு அளிக்கப்பட்டு மீண்டும் மூன்று ஆண்டிற்கு ஒரு முறை ஓய்வூதியம் பெறுபவர்களின் பொருளாதார நிலைமையின் அடிப்படையில் புதுப்பிக்கப்படுகின்றது. 1983–84-ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதிய திட்டத்திற்கு மொத்தம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 200 கலைஞர்களுக்குப் புதிதாக நிதியுதவி அளிக்கப்படும்.

9. புகழ் பெற்ற நலிந்த கலைஞர்கள் இறந்து விட்டால், இறுதிச் சடங்கிற்காக அவர்களின் குடும்பங்களுக்கு உதவும் நோக்கத்துடன் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ரூ. 2 இலட்சம் வழங்கவும், அத்தொகையை நிரந்தர வைப்புத் தொகையாக ஒரு வங்கியில் முதலீடு செய்து, அதனால் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இறந்த கலைஞர் குடும்பத்தினரின் நிலையை கருத்தில் கொண்டு ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ. 2,000 வீதம் பண உதவி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.





## இணைப்பு 1·

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| | 1973–74 | 1976–77 | 1981–82 | 1982–83 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (மாணவர்கள் இலட்சத்தில்.) | | |
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. .. | 30·45 | 31·93 | 34·19 | 34·88 |
| சிறுமியர் .. .. .. | 29·79 | 31·23 | 33·43 | 34·07 |
| மொத்தம் .. | 60·24 | 63·16 | 67·62 | 68·95 |
| வயதுத் தொகுதி 11–14— | | | | |
| சிறுவர் .. .. .. | 13·71 | 14·37 | 15·39 | 15·70 |
| சிறுமியர் .. .. .. | 13·40 | 14·05 | 15·04 | 15·33 |
| மொத்தம் .. | 27·11 | 28·42 | 30·43 | 31·03 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1981–82 லிருந்து) | | | | |
| சிறுவர் — — — — | 11·31 | 11·86 | 8·74 | 8·77 |
| சிறுமியர் .. .. .. | 11·07 | 11·60 | 8·1 | ·57 |
| மொத்தம் .. | 22·38 | 23·46 | 17·25 | 17·34 |

## இணைப்பு 1—தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1981–82. (4) | 1982–83. (5) |
|---|---|---|---|---|
| ள்ளிகளின் எண்ணிக்கை— | மாணவர்கள் | இலட்சத்தில் | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. .. | 26,726 | 27,306 | 27,767 | 28,290 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 5,773 | 5,730 | 5,556 | 5,565 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,020 | 2,168 | 2,260 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | .. | .. .. | 1,405 | 1,416 |
| மொத்தம் .. | 35,322 | 36,056 | 36,896 | 37,531 |

* மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவ ண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள பள்ளி விவரங்கள் பர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10-ஆம் வகுப்பும்கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் ற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| ரியர்களின் எண்ணிக்கை | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. .. | 1,06,332 | 1,11,033 | 1,13,036 | 1,14,713 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 66,843 | 67,846 | 66,221 | 63,299 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 65,959 | 72,838 | 53,280 | 34,841 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | .. | .. | 38,750 | 60,517 |
| மொத்தம் | 2,39,134 | 2,51,717 | 2,71,287 | 2,73,370 |
| சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை | | | | |
| பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 35 | 36 | 39 | 41 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 33 | 33 | 38 | 39 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 24 | 24 | 24 | 24 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 27 | 27 |

1981–82லும் 1982–83லும் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது—அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981-இலும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—

| | | | | |
|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | |
| சிறுவர் .. .. .. | 30.64 | 32.02 | 34·97 | 36.11 |
| சிறுமியர் .. .. .. | 23.74 | 25.50 | 29·10 | 30.22 |
| மொத்தம் .. | 54.38 | 57.52 | 64.07 | 66.33 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | |
| சிறுவர் .. .. .. | 9.10 | 9.74 | 12.03 | 12.56 |
| சிறுமியர் .. .. .. | 5.09 | 5.76 | 7.61 | 7.93 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 19.64 | 20.49 |
| **வயதுத் தொகுதி 14—17/14—16 (1981–82லிருந்து)** | | | | |
| சிறுவர் .. .. .. | 4.97 | 5•34 | 4.56 | 4.79 |
| சிறுமியர் .. .. .. | 2.42 | 2·68 | 2.57 | 2.59 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 7.13 | 7.38 |



பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—

| | | | | |
|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | |
| சிறுவர் .. .. .. | 100.6 | 100.3 | 102.29 | 103.52 |
| சிறுமியர் .. .. .. | 79.6 | 81.7 | 87.65 | 88.71 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90.2 | 91.7 | 94.76 | 96.20 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | |
| சிறுவர் .. .. .. | 66.3 | 67.7 | 78.18 | 80.04 |
| சிறுமியர் .. .. .. | 37.9 | 41.0 | 50.60 | 51.69 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52.3 | 54.4 | 64.55 | 66.03 |
| **வயதுத் தொகுதி 14— 17/14—16 (1981–82-லிருந்து)** | | | | |
| சிறுவர் .. .. .. | 43.0 | 44.9 | 52.26 | 54.60 |
| சிறுமியர் .. .. .. | 21.8 | 23.1 | 30.17 | .3026 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 33.0 | 34.1 | 41.36 | 42.57 |

(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

| | | | | |
|---|---|---|---|---|
| முதல்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 38 | 39 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 32 | 33 |
| உயர்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 24 | 24 |
| மேல்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 20 | 20 |

1982—83 இல் (1982 அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். | | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் (இலட்சத்தில்.) | ஆசிரியர்கள். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| தொடக்க நிலைப்பள்ளிகள்— | | | | |
| அரசு .. .. .. .. | 1,467 | 28,290 | 46.73 | 1,14,713 |
| நகராட்சி .. .. .. | 1,152 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 20,732 | | | |
| தனியார் .. .. .. .. | 4,939 | | | |
| நடுநிலைப்பள்ளிகள்— | | | | |
| அரசு .. .. .. | 235 | 5,565 | 26.00 | 66,299 |
| நகராட்சி .. .. .. | 395 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,006 | | | |
| தனியார் .. .. .. .. | 1,929 | | | |
| மொத்தத் தொடக்கப்பள்ளிகள் | | 33,855 | 72.73 | 1,81,012 |
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணம்— | | | | |
| அரசு .. .. .. .. | 1,590 | 2,071 | 7.63 | 30,877 |
| நகராட்சி .. .. .. | 71 | | | |
| தனியார் .. .. .. | 410 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | 18 | 0.12 | 412 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 78 | 0.24 | 1,422 |
| சி.பி.எஸ்.ஈ. முதலியன .. .. | | 93 | 0.39 | 2,130 |
| மொத்த உயர்நிலைப்பள்ளிகள் | | 2,260 | 8.38 | 34,841 |

## இணைப்பு II.

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1973–74. | 1976–77. | 1981–82. | 1982–83. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1· மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. .. .. | 72,646 | 84,257 | .. | .. |
| (2) பி.ஏ. .. ... .. .. | 51,698 | 44,697 | 58,902 | 61,896 |
| (3) பி.எஸ்சி. .. .. .. .. | 49,057 | 48,110 | 72,934 | 78,356 |
| (4) பி.காம். .. .. .. .. | 14,859 | 19,195 | 26,400 | 29,206 |
| (5) பட்ட மேற்படிப்பு .. .. .. | 6,993 | 7,043 | 12,904 | 13,207 |
| மொத்தம் .. | 1,95,253 | 2,03,302 | 1,71,140 | 1,82,665 |
| 2· ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் ... ... .. | 2,969 | 3,733 | 4,031 | 4,285 |
| (2) தனியார் கல்லூரி, சென்னை .. | 7,090 | 7,883 | 8,775 | 9,123 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 12,806 | 13,408 |



| | | | | |
|---|---|---|---|---|
| லூரிகளின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. .. | 51 | 51 | 52 | 53 |
| (2) தனியார் .. .. .. .. | 127 | 138 | 135 | 135 |
| மொத்தம் .. | 178 | 189 | 187 | 188 |

### பிற கல்லூரிகளுக்கான 1982–83-ம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | அரசு. | தனியார். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ) கல்வியியற் கல்லூரிகள் .. .. .. | 7 | 16 | 2,886 | 283 |
| ) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. .. | .. | 4 | 401 | 36 |
| ) புலவர் கல்லூரிகள் .. .. .. | .. | 15 | 1,615 | 153 |
| ) சமுதாயப் பணிப்பள்ளி .. .. .. | .. | 2 | 243 | 25 |
| ) கிராமப்புற உயர் கல்வி நிலையம் .. | .. | 1 | 623 | 78 |
| ) இசைக் கல்லூரிகள் .. .. .. | 2 | .. | 563 | 45 |
| மொத்தம் .. .. | 9 | 38 | 6,331 | 568 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளிகள்— சாதாரணம்— | | | | |
| அரசு .. .. .. .. | 643 | | | |
| அரசு (தொழில் நுட்பம்) .. | 14 | 1.292 | 14.75 | 55,11 |
| நகராட்சி .. .. .. | 60 | | | |
| தனியார்.. .. .. .. | 575 | | | |
| ஆங்கிலோ—இந்தியன் .. .. | | 26 | 0·28 | 993 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 42 | 0·38 | 1,799 |
| சி.பி.எஸ்.ஈ. போன்ற பள்ளிகள் | | 56 | 0·65 | 2,713 |
| மொத்தம் மேல்நிலைப்பள்ளிகள்.. | | 1,416 | 16·06 | 60,517 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள். | | 3,676 | 24·44 | 95,358 |
| மொத்தம் (அனைத்து பள்ளிகளும் சேர்த்து) | | 37,531 | 97·17 | 2,76,370 |
| | | மாணவர் .. | 55.29 | இலட்சம் |
| | | மாணவியர் | 41.86 | இலட்சம். |



நிருவாக வாரியாக 1982—83 ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்.

| (1) | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். அரசுப் பள்ளிகள். (2) | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். (3) | நகராட்சி (4) | தனியார். (5) | மொத்தம். (6) | ஆசிரியர் விவரங்கள். ஆண். (7) | ஆசிரியர் விவரங்கள். பெண். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 6,702 | 68,968 | 9,700 | 29,343 | 1,14,713 | 70,787 | 43,926 |
| நடுநிலைப்பள்ளிகள் | 2,933 | 27,393 | 7,033 | 28,940 | 66,299 | 34,358 | 31,941 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 22,602 | .. | 1,477 | 10,762 | 34,841 | 21,972 | 12,869 |
| ல்நிலைப்பள்ளிகள் | 26,741 | .. | 3,242 | 30,534 | 60,517 | 37,764 | 22,753 |
| மொத்தம் .. | 58,978 | 96,361 | 21,452 | 99,579 | 2,76,370 | 1,64,881 | 1,11,489 |

V211, 31 N83
N83: 45-1
135997
சென்னை 600 009

## இணைப்பு III.

### 1982-83-ல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. (2) | மொத்த மாணவர் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| பொறியியற் கல்லூரிகள்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. .. | 4 | 8,287 |
| (2) தனியார் .. .. .. .. .. .. .. | 3 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. .. .. | 7 | 7,375 |
| பாலிடெக் னிக்குகளும், சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. .. | 23 | 22,916 |
| (2) தனியார் .. .. .. .. .. .. .. | 35 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. .. .. | 1 | |
| தொழிற் பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. .. | 11 | 1,680 |
| (2) தனியார் .. .. .. .. .. .. .. | 3 | |
| மொத்தம் .. .. | 87 | 40,258 |